சிறந்தவைகளில் சிறந்தவை

ஜீவ நீரோடை

தினமும் உம் கிருபையால்

தினசரி தியான நூல்

சாம்சன் பால்

தினமும் உம் கிருபையால்

சாம்சன் பால்

ஜீவ நீரோடை

ஜீவ நீரோடை

தினமும் உம் கிருபையால்
DAILY BY YOUR GRACE

ஜீவ நீரோடை தியான நூல் வரிசை - 25
முதல் பதிப்பு : 2022
Cover Design By : Wilson Paul (Wings)

SAMSON PAUL
126, Muthaiya Muthaliar Street,
Pondicherry - 605 003. INDIA
Phone : 0413-2236042
e-mail : jeevaneerodai@gmail.com
Website : www.jeevaneerodai.com
Youtube : "Jeevaneerodai"

Typesetting by : Platinum Graphics, Pondicherry -1. Ph : 2220 378
Printed by : United Bind Graphics, Chennai-99. Ph : 9282102533

₹ 170/-

LIVING STREAM

Daily Devotional Book

Gift

Presented to ______________________

By ______________________

Date ______________________

Occasion ______________________

ஆசிரியரிடமிருந்து...

தினமும் ஒரு மிக நல்ல ஆவிக்குரிய சிந்தனையைத் தருகின்றீர்களே எப்படி இது கிடைக்கின்றது என்று சிலர் கேட்பார்கள். இது எனக்கு சிந்தனை ஆற்றல் இருப்பதின் விளைவு என்று கூறினால் அது சரியாயிராது. ஒவ்வொரு நாளுக்கும் கர்த்தரை மையப்படுத்தியும், மனித வாழ்க்கையின் யதார்த்தமான சூழல்களைத் தொடர்புபடுத்தியும் ஒரு சிந்தனையைப் பெறுவது கடினமான ஒன்றுதான். இது ஒரு கடினமான வேலையின் பலன்தான். ஆனால் அந்த கடினமான வேலையைச் செய்வதற்குக் காரணம் தேவ கிருபைதான். தேவன் தருகின்ற ஒரு கிருபை என்பதை உணர்ந்து உறுதிப்படுத்திதான் தியானக் கட்டுரைகளை எழுதுகின்றேன்.

இதனைப் படிக்கின்ற பலர், இது என்னுடைய இன்றைய நிலைமையைத் தெரிந்து வைத்திருக்கும் ஒருவர் எழுதினது போல உள்ளது என்பார்கள். தியான நூல் எழுத துவங்கிய காலத்திலிருந்து இன்றைய நாள் வரை இவ்விதமாகக் கூறும் சாட்சிகளை அதிகமாக கேட்கின்றேன். நம் ஒவ்வொருவருடைய சூழ்நிலை களை அறிந்து வைத்திருக்கின்ற தேவன் இந்த தியான நூல் ஊழியத்தின் பின்னால் இருப்பதுதான் அதன் காரணம்.

ஒவ்வொரு வருடமும் கணிசமான காலங்கள் இந்த தியானநூல் படைப்பிற் காக செலவிடப்படுகின்றது. இந்த வருடத்தைப் போல இனி வரும் வருடத்திலும் நான் இன்னொரு தியானநூலை எழுத இயலுமா என எனக்குள் ஒவ்வொரு வருடமும் கேட்பேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால், அநேக ஆண்டுகள் இவ்விதம் தொடர்ந்து தியான நூல்கள் வெளியிட, தேவன் கிருபை செய்கின்றார். ஒரு உணவகத்தின் வெளியே ஒரு பலகையில் இப்படி எழுதி வைத்திருந்தார்கள். குறைவு இருந்தால் எங்களிடம் சொல்லுங்கள், நிறைவு இருந்தால் பிறரிடம் சொல்லுங்கள். நீங்களும் இந்த தியான நூலில் பயனுள்ளவை இருக்கக் காணும் போது, அதனை வேறு சிலருக்குச் சொல்லி அவர்களும் இந்த தியான நூலினால் பயனடைய வழிகாட்டுங்கள்.

புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் பலரை விட்டு நீங்கிப் போகும் இந்த நாட்களிலும், அநேகர் ஜீவநீரோடை தியான நூலை விரும்பிப் படிப்பதற்காக, கர்த்தருக்குள் சந்தோஷப்படுகின்றேன். இதனை வாசிப்பதை ஒரு பக்திப் பழக்கமாக மட்டும் தொடராமல், வாழ்ந்து காட்டுவதற்கு தேவன் தருகின்ற ஒரு தூண்டுதலாக எடுத்துக் கொள்ள அன்புடன் வேண்டுகிறேன். இந்த புதிய தினசரி தியானநூல் வாயிலாக மிகுந்த பயனடைய கர்த்தர்தாமே உதவி செய்வாராக.

சாம்சன்பால்

பயனுள்ள பரிசு



இந்த தியான நூலுக்காக நீங்கள் செலவுச் செய்திருந்தாலும் கூட, இந்த நூலில் இடம் பெற்றுள்ள ஆவிக்குரிய நல்வார்த்தைகள் யாவும், கர்த்தரால் உங்களுக்கு தரப்படுகின்ற ஒரு சிறந்த பரிசே. இந்தத் தியானநூல் வாயிலாக நீங்கள் பெறுகின்ற சத்திய முத்துக்கள் உங்களுக்கு மிகுந்தப் பயனுள்ள பரிசுகளே. தாங்கள் பெறுகின்ற சிறந்தச் சிந்தனைகளுக்காக அநேகர் மிகுந்த சந்தோஷத்தோடு கர்த்தரைத் துதிக்கின்றனர்.

இவ்விதமான ஒரு நல்ல ஆவிக்குரிய நூலை நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்தால் உங்கள் மூலம் கர்த்தரால் தரப்பட்ட ஒரு நல்ல பரிசாக அது விளங்கும். இப்படிப்பட்டப் பயனுள்ள பரிசால் சிலருக்கு பயன் ஏற்படுத்த நீங்கள் முன்வரலாமே! உங்கள் செலவில் யாருக்காவது இதனை பரிசாக கொடுக்க விரும்பினால் உங்கள் பெயரை குறிப்பிட்டு அவர்களுக்கு அனுப்பி வைப்போம்.

முன்பு போல இரண்டு வேதப்பகுதிகள் தரப்படவில்லை. ஏன்?

ஜீவநீரோடை தினசரி தியான நூலின் நோக்கம், ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய சமுகத்திலிருந்து உங்களுக்காக ஒரு நல்ல சிந்தனையை பெற்றுக் கொடுப்பது மட்டுமே. அந்தந்த நாளுக்கென்றுத் தரப்பட்டுள்ள சிந்தனைக்கு ஏற்றவிதமான ஒரு வேதப் பகுதியும் தரப்படுகிறது. முன்பெல்லாம் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியும், புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியும் கொடுக்கப்பட்டுவந்தன. பலர் அதனை சரியாகப் பயன்படுத்தி வந்தனர் என்பது உண்மை. ஆனால், சிலர் அந்த இரண்டு வேதபகுதிகளையும் படித்துத் தியானத்தையும் படித்து தங்கள் வேத தியான வேளையை முடித்துக் கொள்கின்றனர். அது சிலருக்குச் சடங்காச்சார செயல் போலவும் மாறிவிடுகிறது.

நீங்கள் தேவ சமுகத்தில் போதுமான அளவு வேதபகுதிகளை வாசித்து கர்த்தரை அறிகின்ற அறிவில் வளர வேண்டும். அனுதினமும் தேவ ஆவியால் நடத்தப்படுகின்ற ஒரு வேத தியான வேளையில் பழகி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

இந்த தியான நூல் ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

BY YOUR GRACE DAILY

இன்றைய கிறிஸ்தவ உலகின் தலைசிறந்த ஆவிக்குரிய மாத இதழ்



வருட சந்தா ரூ.150

இது வழக்கமான ஒரு கிறிஸ்தவ மாத இதழ்களில் ஒன்று அல்ல ! எல்லா விதத்திலும் விசேஷமானது ! வித்தியாசமானது !

உங்கள் வாலிபப் பிள்ளைகள் சீர்பெற்று சிறந்து விளங்கிட சிறப்பாக வழிநடத்தும் வார்த்தைகள்



₹120



₹120



₹120

வாலிப போராட்டங்களை வல்லமையாய் எதிர்கொண்டு வெற்றிபெற உதவும் நூல்

சிறுவயதின் நாட்களிலேயே சீர்மிகுந்த பாதைகளில் பிள்ளைகளை நடக்கப் பழக்கும் தியான நூல்

₹100



₹100

- ❖ எளிய நடை
- ❖ சிறு சிறு எடுத்துக்காட்டுகள்
- ❖ குட்டிக் கதைகள்
- ❖ சிறந்த போதனைகள்



பாவி என்று பார்க்கப்படுவது ஏன்?

கிறிஸ்தவம் உலகில் பிறந்த எல்லோாரையும் பாவிகள் என்று சொல்லுகிறது. பாவிகளை இரட்சிக்க இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பாவிகள் என்ற வார்த்தை மனிதர்கள் மிக மிக மோசமானவர்கள் என்ற அர்த்தத்தில் சொல்லப்படுவது அல்ல. ஒருவர் பல தவறுகளைச் செய்கின்ற மிக மிக மோசமானவராகவும் இருக்கலாம். இல்லையேல், தவறுகளைச் செய்யாத நல்லவராகவும் இருக்கலாம். இவர்கள் இருவருமே தேவனுடைய பார்வையில் பாவிகளே. பாவிகள் என்பது, ஒரு மனிதன் இன்னொருவனுடைய பார்வையில் எப்படித் தோன்றுகின்றான் என்பது அல்ல. அவன் தேவனுடைய பார்வையில் எப்படித் தோன்றுகின்றான் என்பதே அது.

கிறிஸ்தவ மதத்தவர் உட்பட எந்த மதத்தவராயினும் இயற்கையில் அவர்கள் தேவனுடைய பார்வையில் பாவிகளே. ஒரு சாதாரணக் கண்ணாடி ஒருவரை அழகானவராகக் காண்பிக்கும். அதே நபரை ஒரு ஸ்கேன் கருவி பல சரீரப்பிரச்சினையுடையவராகக் காண்பிக்கும். அது போல, ஒருவர் உலகத்தின் பார்வையில் நல்லவராகத் தோன்ற இயலும். தன்னை அவர் நல்லவராக எண்ண முடியும். ஆனால், பரிசுத்தமான தேவனுடைய பார்வையில், குறைகள் மிகுந்தவராகத் தோன்றுவார். ஒருவர், தேவனுடைய பார்வையில், பாவி என்ற நிலைமையில் தோன்றுவது இப்படித்தான்.

தேவ உறவு இல்லாதவர் பாவியே

ஒருவர் எந்த மதம், எந்த நம்பிக்கை, எந்த விதமான வழிபாடுகளைச் செய்கிறவர், எவ்வளவு பக்தியானவர் என்பதெல்லாம் முக்கியமல்ல. தேவனுடைய பார்வையில் அவர் தேவ உறவுடன் வாழ்கின்றவரா இல்லையா என்பதே முக்கியம். மனிதன் ஆதியில் தேவ உறவுடன் வாழ்வதற்கேற்றபடி தேவ சாயலில் படைக்கப்பட்டவன். (ஆதியாகமம் 1:27) எனவே, அந்த தேவ சாயல் ஒருவரிடம் இல்லாவிட்டால், அவர் தேவ உறவை இழந்தவராகவு, தேவனுடைய பார்வையில் பாவி என்ற நிலையிலும் இருக்கின்றார். எனவே, நாம் எந்த மதம், என்ன பக்தி என்பதைவிட, நாம் தேவ உறவை உடையவர்களா, இல்லையா என்பதே முக்கியம். தேவ உறவை ஒருவர் தன்னிடம் காணவும், உணரவும், அனுபவிக்கவும் இயலாத நிலையில் இருந்தால், அவர் எவ்வளவு பக்தியாக வாழ்ந்தாலும், அவர் தேவனுடைய பார்வையில் பாவியே. ஒருவர் நல்லவரா கெட்டவரா என்பது அல்ல. அவர் தேவ உறவுடன் வாழ்கின்ற ஒருவரா இல்லையா என்பதே முக்கியம்

பாவத்தைச் ஜெயிக்க இயலாதவர் பாவியே

ஒருவனைப் பாவி என்று வேதம் சொல்லும் போது, அதனுடைய முக்கியமானதோர் அர்த்தம், அவர் பாவத்தைச் ஜெயிக்க இயலாதவர் என்பதாகும். அவர் பலவித ஆற்றல்களையும், பலவிதத் திறமைகளையும், பலவித அறிவையும் உடையவராக இருக்கலாம். அவர் ஒரு கடவுள் பக்தராகவோ, இறை வழிபாட்டாளராகவோ இருக்கலாம். ஆயினும், அவருக்கு பாவத்தை எதிர்த்து நின்று ஜெயிக்கும் ஆற்றல் உண்டா என்பதே முக்கியம். (எபிரெயர் 12:4)

பாவம் என்றால் தேவனுடைய பார்வையில் தவறாகத் தோன்றுகின்றவை. பரிசுத்த தரமற்றவை. தேவனுக்கு உகந்ததாக இல்லாத விஷயங்கள். தவறானச் சிந்தனைகள் பாவமே. தவறான சுபாவங்கள் பாவமே. தவறான வழிகள் பாவமே. தவறான நோக்கங்கள் பாவமே. தவறான உறவுகள் பாவமே. தவறான பழக்கங்கள் பாவமே. தவறான ஆசைகள் பாவமே. தவறான தேடல்கள் பாவமே. இவ்விதமான பாவங்களை அல்லது தேவனுக்குப் பொருந்தாதவைகளை ஒருவர் எதிர்த்து வெற்றிகாண இயலாவிட்டால், அவர் தேவனுடைய பார்வையில் பாவியே.

தெய்வீக அழகில்லாதவர் பாவியே

எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகிப் போனார்கள் என்று வேதாகமம் கூறுகின்றது. (ரோமர் 3:23) அதாவது, மனிதன் தேவ சயாலுடன் வாழ வேண்டியவன். அதாவது, தேவனுடைய பார்வையில் மேன்மையாகத் தோன்றத்தக்க உயர்ந்த தெய்வீகக் குணங்களோடு வாழ வேண்டியவன். ஒரு மனிதன் பிறர் வெறுக்கத்தக்க விதமான தவறான குணங்கள் இல்லாதவராக இருக்க இயலும். ஆனால், அநேகர் மேன்மையாக எண்ணும் விதமான சிறந்த பண்புகள் உடையவரா என்பதே முக்கியம்.

ஒருவரிடத்தில் சில நல்ல குணங்கள் உள்ளன. ஆனால், சில மோசமான குணங்களும் உள்ளன. அப்படியென்றால் இவர் பாவியே. ஏனென்றால், அவர் செய்ய இயன்றதைச் செய்கிறார். ஆனால், சில பண்புகளை அவரால் கொண்டிருக்க முடியவில்லை. அன்பு இருக்கிறது. ஆனால், தாழ்மை

இல்லை. பெருமை இல்லை. ஆனால் பொறுமையும் இல்லை. சாந்தம் இருக்கிறது. ஆனால் கபடமற்ற மனம் இல்லை. உண்மையை விரும்புகிறார். ஆனால் பொய்யையும் விடவில்லை. யாருடைய பொருளையும் அபகரித்துக் கொள்ளமாட்டார். ஆனால், யாருக்கும் ஒரு உதவி செய்யமாட்டார். இப்படி ஒன்றிருக்க வேறொன்று இல்லாமல் போகும் போது, அவர் கடவுளுடைய பார்வையில் தேவ சாயல் உடையவராகப் பார்க்கப்படமாட்டார். எனவே, இவரும் தேவனுடைய பார்வையில் பாவியே

நம்பிக்கை இல்லாதவர் பாவியே

நான்காவதாக, உலகச் சூழ்நிலையில் ஒருவர் பலவிதங்களில் நம்பிக்கை உடையவராகக் காணப்படலாம். ஆனாலும், நித்திய வாழ்வு தொடர்பான ஒரு நம்பிக்கையை தன்னுடைய இருதயத்தில் கொண்டிராதவர் பாவியே. தேவன் ஆதியில் மனிதனைப் படைத்தபோது தம்மிடம் நம்பிக்கை வைத்து, தம்முடைய எல்லா ஆசீர்வாதங்களையும் அவன் அடைய வேண்டும் என்றே விரும்பினார். ஆனால், மனிதன் தேவ உறவை இழந்தவனாக மாறினதால், அந்த ஆசீர்வாதங்களைப் பெறுவோம் என்ற நம்பிக்கையும் அவனை விட்டுப் போய்விட்டது. எனவே, மனிதன் நம்பிக்கையோடு வாழ்வதில் பலவீனமாகிப் போனான்.

தேவ நம்பிக்கை இழந்து போன ஒரு மனிதன், தேவனுடைய ஆசீர் வாதங்களைப் பெற்றுக்கொள்ள இயலாமல் தூரமாகிப் போவதால், அவன் தேவனால் பாவி என்ற நிலையில் பார்க்கப்பட நேர்ந்தது. பாவி என்றால், தேவ னால் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய ஆசீர்வாதங்களைக் குறித்த நம்பிக்கை இல்லாதவன் என்று அர்த்தம்.

ஆம், ஒரு மனிதன் எவ்வளவு பக்தி சம்பந்தமான விஷயங்களோடு தன்னை இணைத்துக் கொண்டிருந்தாலும், பாவம் என்னும் தீய விசையை வென்று வெற்றி பெற இயலாத நிலையில் இருந்தால் ,அவன் பாவியே. ஒரு மனிதன் கடவுளை கௌரவிக்கும் விதமாக பல பல விஷயங்களைச் செய்தாலும், தேவனோடு உறவு உடைய ஒரு மனிதனாக தன்னை பார்க்க இயலாமலிருந்தால், தேவனுடைய பார்வையில் அவன் பாவியே. ஒரு மனிதன் பலவிதமான தீய சுபாவங்களையும் தீய செயல்களையும் தவிர்த்தாலும், அதற்கு அப்பால் மெச்சத்தக்க பல தெய்வீக சுபாவங்கள் இல்லாமலிருந்தால், தேவனுடைய பார்வையில் அவன் பாவியே. தேவன் மேலும் தேவன் மனி தனுக்காக ஆயத்தம் பண்ணின நன்மைகள் மேலும் மனிதன் நம்பிக்கை யற்று இருந்தால், அவன் தேவனுடைய பார்வையில் பாவியே.

ஆம், மனிதர்கள் நடுவில் ஒருவர் எவ்விதம் இருக்கின்றார், அவர் எவ்விதம் பிறரால் பார்க்கப்படுகின்றார் என்பது அல்ல. தேவன் முக்கியமாக எண்ணும் சில விஷயங்கள் அவரிடம் இல்லாத ஒரு நிலமையை அடிப்படையாக வைத்துதான், அந்த நபரை பாவி என்று பார்க்கிறார்.

மனிதனிடம் இல்லாமல் போன இந்த விஷயங்களை அவனுக்குக் கொடுத்து அவனை பரிசுத்தவான் என்ற நிலைமையில் பார்ப்பதற்காகவே, கர்த்தராகிய இயேசு இந்த பூமிக்கு வந்தார். 1 கொரி 1:1, 2 கொரி 6:11

காலையில் கர்த்தரை நோக்கி தேவனே !

- நீர் படைத்த இந்த பூமியில் இன்னும் ஒரு நாள் நான் வாழ்வதற்காக நீர் தந்த வாய்ப்பிற்காக நன்றி செலுத்துகிறேன்.
- உமக்காகவே நான் படைக்கப்பட்டதால் இந்த நாள் முழுவதும் நான் உமக்காக வாழ்வதற்கே இங்கே இருக்கிறேன் என்ற விழிப்புணர்வோடு வாழ உதவி செய்யும்
- என்னுடைய ஆசைகளையும் விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காக இந்த நாளை உபயோகிக்காமல் என் வாழ்வின் மேல் உள்ள உம்முடைய ஆசைகளையும், விருப்பங்களையும் எதிர் பார்ப்புகளையும் நிறைவேற்றும் விதமாக இந்த நாளை உபயோகிக்க கிருபை தாரும்.
- இன்று என்னை எந்த சூழ்நிலையிலும் காண நேரிடுகின்றவர்கள் என்னிடம் உமக்கு உகந்ததல்லாத எதையும் பார்க்க வாய்ப்பில்லாத விதமாக நான் வாழ உதவி செய்யும்.
- இன்று நான் செய்வதற்காக நீர் நியமித்திருக்கின்ற வேலை இன்னதென்று அடையாளங் கண்டு செயல்பட எனக்கு ஞானத்தைத் தாரும்.
- நேற்று செய்யத் தவறியதை இன்றாகிலும் நான் செய்து முடித்திட என்னை நடத்தும். நாளைக்கு செய்ய வேண்டியதை இன்றே நான் செய்ய முந்தி விடா திருக்கச் செய்யும்.
- பிறரை மன்னிக்கவும். பிறரை நேசிக்கவும். பிறரோடு ஒப்புரவாகவும். எனக்கு கொடுத்த கடைசி வாய்ப்பாக இந்த நாளை எடுத்துக் கொண்டு செயல்படும் உணர்வைத் தாரும்
- இன்று என் கணங்களிலும், பண்புகளிலும், வார்த்தைகளிலும், செயல்களிலும், நடத்தைகளிலும் நான் கிறிஸ்துவை பிரதிபலிக்க கவனமா யிக்கச் செய்யும்.
- நீர் இன்றைய இரவை நான் காணச் செய்தால் இன்று முழுவதும் உமக்காக வாழ்வதில் நான் கவனமாயிருந்திருக்கிறேன் என்று திருப்தியோடு நித்திரை செய்யத்தக்கதாக, இந்த நாளில் வாழச் செய்யும்.

SAMSON PAUL'S
PUBLICATIONS IN ENGLISH

TO COME CLOSER TO GOD











பக்தர்கள் அல்ல தேவனுடைய பிள்ளைகள்

இதற்கு முந்தின கட்டுரையில் ஏன் மனிதன் பாவி என்ற நிலைமையில் தேவனால் பார்க்கப்படுகிறான் என்று பார்த்தோம். இவ்விதம் இயற்கையாகப் பாவி என்று பார்க்கப்படுகின்ற மனிதன் எப்பொழுது தேவனுடைய பார்வையில் பக்திமானாகப் பார்க்கப்படுவான் என்ற கேள்வி எழுகின்றது. கிறிஸ்தவ திருமறை ஒரு பாவிப் பக்திமான் என்ற நிலைக்கு மாறுவதை அல்ல. பாவி என்ற நிலைமை யில் உள்ள மனிதன் தேவனுடைய பிள்ளை என்ற நிலைமைக்கு மாறுவதைக் குறித்துதான் கிறிஸ்தவ திருமறை கூறுகின்றது.

பாவி என்ற நிலைமையில் உள்ள ஒரு மனிதன் பல பக்தியான காரியங்களோடு தன்னை இணைத்துக்கொள்ள முடியும். ஆலய ஆராதனை, வழிபாடு, பிரார்த்தனை, பக்தி ஒழுங்குகள், நற்செயல்கள், தானதர்மங்கள் என பக்தி சார்ந்த பல காரியங்களை அவன் செய்யலாம். ஆனாலும், இவை யாவும் பாவி என்ற இயற்கை நிலைமையை மாற்றிவிடாது. அநேகர் அவ்விதம்தான் பக்தியாக வாழ விரும்பும்போது பல பக்தியானச் செயல்களைச் செய்து தங்களை பக்திமான் களாகக் காண்பிக்கப் பிரயாசப்படுகின்றனர். ஆயினும், இவை எதுவும் அவர்களின் அடிப்படை பாவ நிலைமையை மாற்றாது.

மறுபடியும் பிறத்தல்:– நாம் மீண்டும் மீண்டும் நம்முடைய மாம்ச விருப்பத்தாலும், பலத்தாலும், முயற்சிகளாலும் பக்தியான பல காரியங்களைச்

செய்து தேவனை பிரியப்படுத்த விரும்புவது அல்ல. நாம் நம்முடைய சொந்த ஆர்வத்தாலும் முயற்சியாலும் எத்தனை நல்ல விஷயங்கள் செய்தாலும், அவை தேவனுக்கு உகந்தவைகள் ஆகாது. நாம் எத்தனை நல்ல கிரியைகள் செய்தாலும் அவற்றால் நம்முடைய பாவி என்ற நிலைமை மாறாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாற வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் (யோவான் 1:12) தேவனுடைய பிள்ளை என்ற நிலமையை நாம் எட்டுவது என்பது பல பக்தியான செயல்களைச் செய்வதால் ஏற்படுவது அல்ல.

பக்தியாக வாழ்கின்றவர்கள் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகள் என்ற ஆவிக்குரிய அந்தஸ்தைப் பெற முடியாது. தேவனுடைய பிள்ளைகள் என் பவர்கள் தேவனால் பிறப்பிக்கப்படுகின்றவர்கள். நிக்கொதேமு என்ற மிக சிறந்த பக்திமான் ஒருவன் இயேசுவிடம் வந்தபோது, இயேசு கிறிஸ்து அவனிடம் மறுபடியும் பிறக்க வேண்டிய தேவையைக் கூறினார். (யோவான் 3:5,7) ஆம். உண்மையான தேவ பக்தி என்பது பலவிதமான பக்தியான காரியங்களைச் செய்வதிலிருந்து ஆரம்பிப்பது அல்ல. அது நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலையில் பிறப்பதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். (1 பேதுரு 1:4)

மறுபடியும் பிறத்தல் எப்படி நடக்கும்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம், பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப் பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகின்றோம். அதாவது தேவ னுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறக்கின்றோம். (யோவான் 1:12) நாம் தேவனுடைய பார்வையில் பாவிகள் என்பதை உணர்ந்து கர்த்தரை இரட்சக ராகப் பெற்றுக் கொள்கின்ற ஒரு அனுபவத்திலிருந்து தான் கிறிஸ்தவ வாழ்க் கையை ஆரம்பிக்க வேண்டும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அல்லது ஒருவன் கிறிஸ்து வோடிருந்தால் அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான் என்று வேதம் சொல்கின்றது. (11 கொரி 5:17) கர்த்தரை நமக்குள் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது பெற்றுக் கொள்ளுதல் என்ற நிச்சயமான அனுபவம் பெறாவிட்டால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை வெறும் சன்மார்க்க வாழ்க்கையாக இருக்கு மேயன்றி, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையாக இராது.

நாம் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று வேதம் சொல் கிறது. (எபேசியர் 1:3) அந்த ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்வில் வரும்போது அல்லது நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்படும்போது அந்த ஆசீர்வாதங்களுக்குப் பங்காளிகளாகின்றோம். அந்த ஆசீர்வாதங்களில் முதன்மையானதுதான் மறுபிறப்பின் ஆசீர்வாதம். அதாவது பாவிகளாக இதுவரை பார்க்கப்பட்ட நாம் இப்போது தேவனால் அவருடைய பிள்ளைகளாகப் பார்க்கப்படுகின்ற மேன்மை பெற்றிருக்கின்றோம். இதுதான் தேவன் நம்மேல் வைத்த அன்பிற்கு மிகப்பெரிய அடையாள மாயிருக்கின்றது. (1 யோவான் 3:1)

தேவ ஆவியைப் பெறுதல்:- நாம் தேவனுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறந்ததை உறுதிப்படுத்தவும், அதனைச் செயல்படுத்தவும் தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியை அளிக்கின்றார். இதனை நாம் விசுவாசத்தின் மூலம் நமக்குள் உண்மையாக்க வேண்டும். நாம் பாவி என்ற பழைய நிலமையை விட்டு திரும்பும் போது பரிசுத்த ஆவியைப் பெறுகின்றோம் என்று வேதம் சொல்கின்றது. (அப்போஸ்தலர் 2:38, எபேசியர் 1:13, 14) பரிசுத்த ஆவியினுடைய செயல் பாட்டின் வாயிலாகத்தான் நாம் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்வதற்கான வலிமைப் பெறுகின்றோம். பரிசுத்த ஆவியின் வாயிலாகத்தான் நாம் தேவ னுடைய பிள்ளைக்குரிய உரிமையோடு தேவனிடத்தில் நெருங்குகின்றோம். (ரோமர் 8:15)

வாழ்க்கை மாற்றம் பெறுதல்:- கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை சத்தியங்களுள் ஒன்று நாம் மனமாற்றம், வாழ்க்கை மாற்றம், சுபாவ மாற்றம் போன்றவற்றைப் பெறுவது. எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கின்ற மெய்யான ஒளிதான் இயேசு கிறிஸ்து (யோவான் 1:9) பாவி என்ற பழைய நிலமையை நம்மைவிட்டு நீக்கிவிட்டு, தேவனுடைய பிள்ளை என்ற புதிய நிலமைக்குள் நம்மை திடப் படுத்துகின்றவர் இயேசு கிறிஸ்து. எனவே, நாம் உண்மையான கிறிஸ்தவர் களாயிருந்தால், முதலாவது நம்மிடம் தெரிய வேண்டியது, அநேகம் பக்தியான செயல்கள் அல்ல. உண்மையான வாழ்க்கை மாற்றம் தெரிய வேண்டும். இயேசு கிறிஸ்துவினால் நாம் முதலாவது பெற வேண்டிய நன்மை, வாழ்க்கை மாற்றமே. நாம் ஆராதனை, ஜெபம், உபவாசம் என பக்தியான பல காரியங்களோடு இணைத்து கொண்டதை வாழ்க்கை மாற்றம் என கூற இயலாது.

சிலர் முன்பு போல தவறுகள் செய்யாமல் வாழ்வதையே வாழ்க்கை மாற்றம் என எண்ணுகின்றனர். அப்படி அல்ல. தவறான பழக்கங்களையும், தவறான செயல்களையும், தவறான உறவுகளையும், தவறான சந்தோஷங்களையும், தவறான பொழுதுபோக்குகளையும் விட்டுவிடும் போது பாவி என்ற அடை யாளத்தை நாம் இழக்கலாம். ஆனால், மனிதர்கள் நம்மை பாவிகளைப்போல பார்க்காமல் இருப்பது மட்டும் அல்ல. நம்மை அவர்கள் தேவனுடைய பிள்ளை களுக்குரிய சிறந்த அடையாளங்களோடும் பார்க்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளுக்குரிய அடையாளம், நாம் தெய்வீக நற் சுபா வங்களோடு வாழ்வது ஆகும். நம்மிடம் ஒரு பாவியிடம் பார்க்க இயலாத சிறந்த பண்புகளையும், உயர்ந்த வாழ்க்கை முறைகளையும் மற்றவர்கள் பார்க்க வேண்டும். மனிதர்கள் நம்முடைய நற்கிரியைகளைப் பார்க்க வேண்டும் என்று இயேசு சொன்னார். (மத்தேயு 5:16) நாம் தவறுகளை செய்யாமல் தவிர்ப்பது மட்டுமின்றி, தேவனுடைய பிள்ளைக்குரிய ஆவிக்குரிய நல்ல அடையாளங் களைக் கொண்டிருக்கவும் வேண்டும்.

ஆராதனை:- கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆராதனை அனுபவம் என்பது முக்கியமானது. ஆனால், ஆராதனை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று

வழிபாட்டு ரீதியாக அல்லது தொழுகை ரீதியாகத் தேவனை ஆராதிப்பது. இந்த ஆராதனையில் பாடல்கள், துதிகள், ஸ்தோத்திரங்கள், ஜெபங்கள், உற்சாகமான பக்திச் செயல்பாடுகள் போன்றவை இருக்கும். ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த தொழுகை ரீதியான ஆராதனை என்பது ஒரு சிறு பக்கமே. ஆராதனை அனுபவத்திற்கு இது சிறிய அளவில் மட்டுமே சான்று பகரும். அதாவது தேவனை நாம் கனப்படுத்துவதை ஒரு ஐந்து சதவிகிதம்தான் அது உறுதிப்படுத்தும்.

ஆராதனை என்பதின் 95 சதவிகிதமும் வாழ்க்கைமுறைதான். நாம் உண்மையாகவே தேவனை ஆராதிக்கின்றோம் என்பதற்கு வலிமையான சான்று பகருவது நாம் வாழ்கின்ற விதமே. (ரோமர் 12:1) கர்த்தராகிய இயேசு நாம் எப்படி எப்படித் தேவனுக்கு ஆராதனை அல்லது தொழுகை நடத்த வேண்டும் என்று போதித்துக் கொண்டிருக்கவில்லை. அவர் நாம் எப்படி வாழ வேண்டும் என்பது தொடர்பாகவே அதிகமாகப் போதித்தார். நம்முடைய சுபாவங்கள், நடத்தைகள், செயல்கள், பழக்கங்கள், விருப்பங்கள் ஆகியவைதான் நம்முடைய வாழ்க்கை. அந்த வாழ்க்கை எந்த அளவிற்குத் தேவனைப் பிரியப்படுத்தும் நோக்கம் கொண்டு செயல்படுகிறதோ, அதுதான் தேவனை நாம் கனப்படுத்துகின்றோமா இல்லையா என்பதை உறுதிப்படுத்துகிறது.

நாம் ஏதோ ஒரு நேரத்தில் அல்லது ஏதோ ஒரு இடத்தில் தேவனை ஆராதித்து நம்முடைய கடமை முடிந்தது என்று போவது அல்ல. நாம் எங்கிருந்தாலும், எந்த நேரத்திலும், தேவனுக்கு முன்பாக வாழ்கின்றோம் என்ற உணர்வோடு, தேவன் பிரியப்படும் விதமாக வாழ்வதே உண்மையான ஆராதனை.

ஆசீர்வாத நியமம்:- நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவது தொடர்பான தேவனுடைய நியமத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேவ ஆசீர்வாதம் என்பது நாம் பக்தியாய் பல காரியங்கள் செய்கின்றோம். அதனால் தேவன் நம்மை ஆசீர்வதிக்கின்றார் என்பது அல்ல. நாம் மிகுதியாய்ச் ஜெபித்து உபவாசித்து தேவனுடைய உதவியை நாடுகின்றோம். அதனால் தேவன் நம்மை ஆசீர்வதிக்கின்றார் என்பது அல்ல. நாம் நிறையக் காணிக்கை கொடுப்பதாலோ, ஜெபக்கூட்டங்களுக்குப் போவதாலோ, தேவ ஊழியர்கள் நமக்காகச் ஜெபிக்கின்றார்கள் என்பதாலோ தேவன் நம்மை ஆசீர்வதிக்கின்றார் என்பது அல்ல.

புதிய ஏற்பாட்டில் இவை யாவும் அவசியம். ஆனால், இவற்றையே ஆசீர்வாத அடிப்படைகளாக எண்ணிவிடக்கூடாது. புதிய ஏற்பாட்டில் நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவதின் அடிப்படை, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றோம் என்பதே. நாம் பிள்ளைகளானால் தேவனுடைய சுதந்திர வாளிகளாகவும் இருக்கின்றோம். (ரோமர் 8:17) அப்படியானால் புத்திர சுவிகார அடிப்படைதான் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கான அடிப்படை.

எனவே, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற நிச்சயத்தோடு இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் என்ற உரிமையைக் குறித்த விழிப் புணர்வோடு செயல்பட வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் தேவ ஐக்கியத்தோடு வாழப் பழக வேண்டும். தேவனுடைய பிள்ளைகளுக்கேற்ற விதமான உயர்ந்த பண்புகள் சார்ந்த வாழ்க்கைக்கு முதலிடம் தர வேண்டும். நான் தேவனுடைய பிள்ளை என்ற அடிப்படைதான், என்னை ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாக்குகிறது என்ற நிச்சயத்தோடு வாழவேண்டும். அப்படியானால் தேவ ஊழியர்களின் ஜெபத்தையோ, ஜெபக் கூட்டங்களையோ சார்ந்திராமல் தனிப்பட்ட முறையில் தேவனைச் சார்ந்து வாழ வேண்டும். அதுதான் தேவனால் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அவசியமான அணுகுமுறை.

☆ ☆ ☆

SAMSON PAUL'S DAILY DEVOTIONAL BOOKS IN ENGLISH

- ★ DAILY BY YOUR GRACE
- ★ FOR MY LIFE TODAY
- ★ TOWARDS THE GOAL DAILY
- ★ MEET THIS DAY WITH GOD
- ★ IN YOUR WAYS
- ★ THIS DAY TO LIVE
- ★ WORD OF TRUTH FOR TODAY
- ★ DAILY A NEW CHAPTER
- ★ FOR THE HEARTS OF BLOOMING BUDS
- ★ BE RENEWED IN MIND DAILY
- ★ GOD'S WORD'S FOR YOUNG HEARTS
- ★ IN THE HEARTS OF BUDS
- ★ O LORD IN THY PRESENCE
- ★ BLESSED WORD FOR TODAY
- ★ EVERY DAY IN HIS PRESENCE
- ★ WALKING CLOSER WITH GOD
- ★ EVERYDAY WITH THE EVERLASTING GOD
- ★ A JOURNEY WITH GOD
- ★ WALKING WITH GOD
- ★ GOD'S GUIDANCE TODAY
- ★ STREAM OF LIFE



சரியான மனிதன் நல்ல மனிதன்

- ✤ கோபமே இல்லாதவன் சரியான மனிதன் அல்ல.
  கோபத்தை கட்டுப்படுத்த அறியாதவன் நல்ல மனிதன் அல்ல.
- ✤ தவறுகளை கண்டு கொள்ளாதவன் சரியான மனிதன் அல்ல.
  தவறுகளைத் தேடித் திரிகிறவங்ன நல்ல மனிதன் அல்ல.
- ✤ வாய் திறவாமல் இருப்பவன் சரியான மனிதன் அல்ல.
  வாயை மூடத் தெரியாதவன் நல்ல மனிதன் அல்ல.
- ✤ உணர்ச்சியற்று வாழ்கிறவன் சரியான மனிதன் அல்ல.
  உணர்ச்சிவசப்படுகிறவன் நல்ல மனிதன் அல்ல.
- ✤ யாரோடும் பழகாதவன் சரியான மனிதன் அல்ல.
  எல்லோடும் பழகுகின்றவன் நல்ல மனிதன் அல்ல.
- ✤ எதையும் சேமிக்காதவன் சரியான மனிதன் அல்ல.
  அனைத்தையும் சேமிக்க விரும்புகிறவன் நல்ல மனிதன் அல்ல.
- ✤ எல்லாவற்றிற்கும் ஆமாம் சொல்கிறவன் சரியான மனிதன் அல்ல.
  எல்லாவற்றையும் எதிர்க்கிறவன் நல்ல மனிதன் அல்ல.
- ✤ எதையும் செய்யத் தெரியாதவன் சரியான மனிதன் அல்ல.
  எதையும் செய்ய விரும்புகிறவன் நல்ல மனிதன் அல்ல.

ஓராண்டிற்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் திட்டம்

ஜனவரி

	காலை	மாலை
	மத்தேயு	ஆதி
1	1	1-3
2	2	4-6
3	3	7-9
4	4	10-12
5	5:1-26	13-15
6	5:27-48	16, 17
7	6:1-18	18, 19
8	6:19-34	20-22
9	7	23, 24
10	8:1-17	25, 26
11	8:18-17	27, 28
12	9:1-17	29, 30
13	9:18-38	31, 32
14	10:1-20	33-35
15	10:21-42	36-38
16	11	39, 40
17	12:1-23	41, 42
18	12:24-50	43-45
19	13:1-30	46-48
20	13:31-58	49, 50
		யாத்
21	14:1-21	1, 2, 3
22	14:22-36	4, 5, 6
23	15:1-20	6, 8
24	15:21-39	9-11
25	16	12, 13
26	17	14, 15
27	18:1-20	16-18
28	18:21-35	19, 20
29	19	21, 22
30	20:1-16	23, 24
31	20:17-34	25, 26

பிப்ரவரி

	காலை	மாலை
	மத்தேயு	யாத்
1	21:1-22	27, 28
2	21:23-46	29, 30
3	22:1-22	31-33
4	22:23-46	34, 35
5	23:1-22	36-38
6	23:23-39	39, 40
		லேவி
7	24:1-28	1-3
8	24:29-51	4, 5
9	25:1-30	6, 7
10	25:31-46	8-10
11	26:1-25	11, 12
12	26:26-50	
13	26:51-75	14
14	27:1-26	15, 16
15	27:27-50	17, 18
16	27:51-66	19, 20
17	28	21, 22
	மாற்கு	
18	1:1-22	23, 24
19	1:23-45	25
20	2	26, 27
		எண்
21	3:1-19	1, 2
22	3:20-335	3, 4
23	4:1-20	5, 6
24	4:21-41	7, 8
25	5:1-20	9-11
26	5:21-43	12-14
27	6:1-29	15, 16
28	6:30-56	17-19

மார்ச்

	காலை	மாலை
	மாற்கு	எண்
1	7:14-37	23-25
2	8:1-21	26, 27
3	8:22-38	28-30
4	9:1-29	31-33
5	9:30-50	34-36
		உபா
6	10:1-31	1, 2
7	10:31-52	3, 4
8	11:1-18	5-7
9	11:19-33	8-10
10	12:1-27	11-13
11	12:28-44	14-16
12	13:1-20	17-19
13	13:21-37	20-22
14	14:1-26	23-25
15	14:27-53	26, 27
16	14:54-72	28, 29
17	15:1-25	30, 31
18	15:26-47	32-34
		யோசுவா
19	16	1-3
	லூக்கா	
20	1:1-20	4-6
21	1:21-38	7-9
22	1:39-56	10-12
23	1:57-80	13-15
24	2:1-2	16-18
25	2:25-52	19-21
26	3	22-24
		நியா
27	4:1-30	1-3
28	4:31-44	4-6
29	5:1-16	7, 8
30	5:17-39	9, 10
31	6:1-26	11, 12

ஏப்ரல்

	காலை	மாலை
	லூக்கா	நியா
1	6:27-49	13-15
2	7:1-30	16-18
3	7:31-50	19-21
4	8:1-25	ரூத்
		1 சாமு
5	8:26-56	1-3
6	9:1-17	4-6
7	9:18-36	7-9
8	9:37-62	10-12
9	10:1-24	13, 14
10	10:25-42	15, 16
11	11:1-28	17, 18
12	11:29-54	19-21
13	12:1-31	22-24
14	12:32-59	25, 26
15	13:1-22	27-29
16	13:23-35	30, 31
		2 சாமு
17	14:1-24	1, 2
18	14:25-35	3-5
19	15:1-10	6-8
20	15:11-32	9-11

21	16	12, 13
22	17:1-19	14, 15
23	17:20-37	16-18
24	18:1-23	19, 20
25	18:24-43	21, 22
26	19:1-27	23, 24
		1 இரா
27	19:28-48	1, 2
28	20:1-26	3-5
29	20:27-47	6, 7
30	21:1-19	8, 9

மே

	காலை	மாலை
	லூக்கா	1 இரா
1	21:20-38	10, 11
2	22:1-20	12, 13
3	22:21-46	14, 15
4	22:47-71	16-18
5	23:1-25	19, 20
6	23:26-56	21, 22
		2 இரா
7	24:1-35	1-3
8	24:36-53	4-6
	யோவாபீ	
9	1:1-28	7, 8, 9
10	1:29-51	10-12
11	2	13, 14
12	3:1-18	15, 16
13	3:19-38	17, 18
14	4:1-30	19-21
15	4:31-54	22, 23
16	5:1-24	24, 25
		1 நாளா
17	5:25-47	1-3
18	6:1-21	4-6
19	6:22-44	7-9
20	6:45-71	13-15
21	7:1-27	13-15
22	7:28-53	16-18
23	8:1-27	19-21
24	8:28-59	22-24
25	9:1-23	25-27
26	9:24-41	28, 29
		2 நாளா
27	10:1-23	1-3
28	10:24-42	4-6
29	11:1-29	7-9
30	11:30-57	10-12
31	12:1-26	13, 14

ஜூன்

	காலை	மாலை
	யோவாபீ	2 நாளா
1	12:27-50	15, 16
2	13:1-20	17, 18
3	13:21-38	19, 20
4	14	21, 22
5	15	23, 24
6	16	25-27
7	17	28, 29
8	18:1-18	30, 31
9	18:19-40	32, 33
10	19:1-22	34-36
		எஸ்தர்
11	19:23-42	1, 2
12	20	3-5
13	21	6-8
	அப்	
14	1	9, 10
		நெகே
15	2:1-21	1-3
16	2:22-47	4-6
17	3	7-9
18	4:1-22	10, 11
19	4:23-37	12, 13
		எஸ்தர்
20	5:1-21	1, 2
21	5:22-42	3-5
22	6	6-8
23	7:1-21	9, 10
		யோபு
24	7:22-43	1, 2
25	7:44-60	3, 4
26	8:1-25	5-7
27	8:26-40	8-10
28	9:1-21	11-13
29	9:22-43	14-16
30	10:1-23	17-19

ஜூலை

	காலை	மாலை
	அப்	யோபு
1	10:24-48	20, 21
2	11	22-24
3	12	25-27
4	13:1-25	28, 29
5	13:26-52	30, 31
6	14	32, 33
7	15:1-21	34, 35 8
8	15:22-41	36, 37
9	16:1-21	38-40
10	16:22-40	41, 42
		சங்கீதம்
11	17:1-15	1-3
12	17:16-34	4-6
13	18	7-9
14	19:1-20	10-12
15	19:21-41	13-15
16	20:1-16	16, 17
17	20:17-38	18, 19
18	21:1-17	20-22
19	21:18-40	23-25
20	22	26-28
21	23:1-15	29, 30
22	23:16-35	31, 32
23	24	33, 34
24	25	35, 36
25	26	37-39
26	27:1-26	40-42
27	27:27-44	43-45
28	28	46-48
		ரோமர்
29	1	49, 50
30	2	51-53

ஆகஸ்டு

	காலை	மாலை
	ரோமர்	சங்கீதம்
1	4	57-59
2	5	60-62
3	6	63-65
4	7	66-67
5	8:1-21	68, 69
6	8:22-39	70, 71
7	9:1-15	72, 73
8	9:16-33	74-76
9	10	77, 78
10	11:1-18	79, 80
11	11:19-36	81-83
12	12	84-86
13	13	87, 88
14	14	89, 90
15	15:1-13	91-93
16	15:14-33	94-96
17	16	97-99
	1 கொரி	
18	1	100-102
19	2	103, 104
20	3	105, 106
21	4	107-109

22	5	110-112
23	6	113-115
24	7:1-19	116-118
25	7:20-40	119:1-88
26	8	119:89-176
27	9	120-122
28	10:1-18	123-125
29	10:19-33	126-128
30	11:1-16	129-131
31	11:17-34	132-134

செப்டம்பர்

	காலை	மாலை
	1 கொரி	சங்கீதம்
1	12	135, 136
2	13	137-139
3	14:1-20	140-142
4	14:21-40	143-145
5	15:1-28	146, 147
6	15:29-58	148-150
		நீதி
7	16	1, 2
	2 கொரி	
8	1	3-5
9	2	6, 7
10	3	8, 9
11	4	10-12
12	5	13-15
13	6	16-18
14	7	19-21
15	8	22-24
16	9	25, 26
17	10	27-29
18	11:1-15	30, 31
		பிரசங்கி
19	11:16-33	1-3
20	12	4-6
21	13	7-9
	கலாத்தியர்	
22	1	10-12
		உ பீ
23	2	1-3
24	3	4, 5
2 ய ண 5		4
6-8		
		ஏசாயா
26	5	1, 2
27	6	3, 4
	எபேசியர்	
28	1	5, 6
29	2	7, 8
30	3	9, 10

அக்டோபர்

	காலை	மாலை
	எபேசியர்	ஏசாயா
1	4	11-13
2	5:1-16	14-16
3	5:17-33	17-19
4	6	20-22
	பிலிப்பியர்	
5	1	23-25
6	2	26, 27
7	3	28, 29
8	4	30, 31
	கொலோ	
9	1	32, 33
10	2	34-36
11	3	37, 38
12	4	39, 40
	1 தெச	
13	1	41, 42
14	2	43, 44
15	3	45, 46
16	4	47-49
17	5	50-52
	2 தெச	
18	1	53-55
19	2	56-58
20	3	59-61
	1 தீமோ	
21	1	62-64
22	2	65, 66
		எரே
23	3	1, 2
24	4	3-5
25	5	6-8
26	6	9-11
	2 தீமோ	
27	1	12-14
28	2	15-17
29	3	18, 19
30	4	20, 21
	தீத்து	
31	1	22, 23

நவம்பர்

	காலை	மாலை
	தீத்து	எரேமியா
1	2	24-26
2	3	27-29
3	பிலேமோன்	30, 31
	எபிரெயர்	
4	1	32, 33
5	2	34-36
6	3	37-39
7	4	40-42
8	5	43-45
9	6	46, 47
10	7	48, 49
11	8	50
12	9	51, 52
		புலம்பல்
13	10:1-18	1, 2
14	10:19-39	3-5
		எசேக்
15	11:1-19	1, 2
16	11:20-40	3, 4
17	12	5-7
18	13	8-10
	யாக்கோபு	
19	1	11-13
20	2	14, 15
21	3	16, 17
22	4	18, 19
23	5	20, 21
	1 பேதுரு	
24	1	22, 23
25	2	24-26
26	3	27-29
27	4	30-32
28	5	33, 34
	2 பேதுரு	
29	1	335, 36
30	2	37-39

டிசம்பர்

	காலை	மாலை
	2 பேதுரு	எசேக்
1	3	40, 41
	1 யோவான்	
2	1	42-44
3	2	45, 46
4	3	47, 48
		தானியேல்
5	4	1, 2
6	5	3, 4
7	2யோவான்	5-7
8	3யோவான்	8-10
9	யூதா	11, 12
	வெளி	ஓசியா
10	1	1-4
11	2	5-8
12	3	9-11
13	4	12-14
14	5	யோவேல்
		ஆமோஸ்
15	6	1-3
16	7	4-6
17	8	7-9
18	9	ஒபதியா
19	10	யோனா
		மீகா
20	11	1, 2, 3
21	12	4, 5
22	13	6, 7
23	14	நாகூம்
24	15	ஆபகூக்
25	16	செப்பனியா
26	17	ஆகாய்
		சகரியா
27	18	1-4
28	19	5-8
29	20	9-12
30	21	13, 14
31	22	மல்கியா

தலைப்பு அட்டவணை

நாள்	தலைப்பு	பக்கம்	நாள்	தலைப்பு	பக்கம்
1.	ஆண்டின் முதல்நாளில்	30	29.	பயன்படுத்தாமல் நன்றி	58
2.	வேகமும் வேண்டும்	31	30.	கவலையும் தேவ ஆளுகையும்	59
3.	இதுவும் தவறே	32	31.	அவர்கள் ஏமாற்றவில்லை	60
4.	எது இலக்கு?	33	32.	கவலையை அகற்றுவது எப்படி?	61
5.	அவரைப் பெற வேண்டும்	34	33.	ஒரு நிறைவு, ஒரு குறைவு	62
6.	பணமா, குணமா?	35	34.	ஏன் பிடிக்கவில்லை?	63
7.	நமக்கு அது நல்லதல்ல	36	35.	அறிவும், அனுபவமும்	64
8.	நல்ல உபதேசம், கெட்ட வாழ்க்கை	37	36.	அன்பில் சாதனை	65
			37.	நல்ல போதனை, ஆனால்	66
9.	பேசாத தேவனா?	38	38.	மயக்கும் ஆராதனை	67
10.	கிறிஸ்தவர்களா இவர்கள்?	39	39.	ஐக்கியம் அவசியம்	68
11.	பெரிய இழப்பு	40	40.	நல்லவைகள் பல இருந்தும்	69
12.	உண்மையினால் உயர்வு	41	41.	இல்லாததை எதிர்பார்த்தால்	70
13.	பெரிய மனம்	42	42.	தேவ உறவு எப்படி?	71
14.	விரும்பி கனப்படுத்துதல்	43	43.	ஏன் மன்னிப்பு?	72
15.	வெறுப்பை மறைப்பது அல்ல	44	44.	விலகக் கூடாத பண்புகள்	73
16.	பிரயோஜனமில்லாத புத்தகம்	45	45.	ஏன் முடியவில்லை?	74
17.	தோற்றத்தால் பொய்	46	46.	மிஞ்சி வராதே	75
18.	திருப்தி	47	47.	சமநிலை அவசியம்	76
19.	நல்ல வார்த்தை, ஆனால்	48	48.	சபை எதற்காக?	77
20.	தாழ்வு மனப்பான்மை	49	49.	கடினமான நேரங்கள்	78
21.	யார் காரணம்?	50	50.	தண்டனை அல்ல விளைபலன்	79
22.	ஆள முடியாது	51	51.	தேவ சமுகம்	80
23.	ஆசீர்வாத வழி	52	52.	பயமும் அன்பும்	81
24.	தாழ்ந்து போகவில்லை ஏன்?	53	53.	யாருடைய ஜெபம்?	82
25.	நல்ல போதனை	54	54.	சுதந்தரியுங்கள்	83
26.	மாற வேண்டாம்	55	55.	பலவீனம்	84
27.	தாலந்துகளும் தேவ வார்த்தையும்	56	56.	தெய்வீக ஆரோக்கியம்	85
			57.	ஆயத்தமாக்கப்பட்ட நன்மை	86
28.	வாழ்க்கை அழகு	57	58.	அன்பு வலிமையானது	87

நாள் தலைப்பு	பக்கம்	நாள் தலைப்பு	பக்கம்
59. சாத்தான் தரும் ஐசுவரியம்	88	90. நன்றாகத் தூங்குவோம்	119
60. சகிக்கப் பழகணும்	89	91. எல்லோருக்கும் நண்பர்	120
61. யார் மோசம்?	90	92. தாங்குதல்	121
62. பாவத்தை உணரலாம்	91	93. பகை தவிர்ப்போம்	122
63. எல்லாம் தரும் உறவு	92	94. தேவையை மறைக்காமல்	123
64. இது அவருடைய விருப்பம்	93	95. கோபம் அடங்கணும்	124
65. பக்தி வழி இதுவே	94	96. பயந்த காரியம்	125
66. ஐக்கியம் இல்லாவிட்டால்	95	97. மனிதனிடம் அன்பு	126
67. ஆவிக்கேற்ற விசுவாசம்	96	98. ஒழுங்கா, அன்பா?	127
68. மிகப்பெரிய நன்மை	97	99. ஆவியின் அடையாளம்	128
69. போதக ஊழியம்	98	100. பண்டிகை பக்தி	129
70. அன்பான தந்தை	99	101. சிலுவையைப் பயன்படுத்தணும்	130
71. உறவைத் தேடுதல்	100	102. உங்களுக்கு என்ன நடந்தது?	131
72. நல்லதை விரும்பாமல்	101	103. மறுதலித்தது ஏன்?	132
73. வாக்குத்தத்தம்	102	104. துக்கம் எதற்காக?	133
74. வளமையா? வலிமையா?	103	105. இந்த துக்கம் வேண்டாம்	134
75. நல்லவர்களாவது எப்படி?	104	106. அவரின் ஐக்கியம்	135
76. கர்த்தரின் ஆசீர்வாதம்	105	107. அவர் எங்கே?	136
77. தேவன் தள்ளமாட்டார்?	106	108. நம்பிக்கையும் ஆயத்தமும்	137
78. தேவாலய அமைதி	107	109. வாழ்க்கை எப்படி?	138
79. பகிர முடிந்த அன்பு	108	110. மனந்திரும்பாத போதகர்	139
80. எதிர்பார்ப்பு	109	111. காரணம் என்ன?	140
81. ஆரோக்கியமில்லை ஏன்?	110	112. நற்குண ஆசை	141
82. பயன்படுத்தும் தேவன்	111	113. நகராமல் நின்றால்	142
83. வலிகள்	112	114. கடினமானதல்ல	143
84. கிருபை தேவை	113	115. முன்பு போல இல்லையே	144
85. மாறுகின்ற அன்பு	114	116. பொறாமை பொறுமை	145
86. வாய்ப்பும் பிரச்சினையும்	115	117. அன்பு போதனை	146
87. தேவனுக்குத் தெரியும்	116	118. உறவுகள் தேவைப்படும்	147
88. நம்மிடம் பாவம் இல்லையா?	117	119. சமுகம் தேவை	148
89. எதற்காகப் போதனைகள்?	118	120. தேவன் தேவையில்லையா?	149

நாள் தலைப்பு	பக்கம்	நாள் தலைப்பு	பக்கம்
121. கடைப்பிடிக்க முடிகிறதா?	150	151. இந்தப் பாதையில் நடக்க	180
122. துன்பம் தவிர்த்தல்	151	152. மாற்றம் இல்லையே ஏன்?	181
123. ஆறப்போடுங்கள்	152	153. மரண பயம் ஏன்?	182
124. பயப்படாமலிருக்க	153	154. மேடை ஆராதனை அல்ல	183
125. தேவ பிரசன்னம் எப்படி?	154	155. போலி ஊழியம்	184
126. பிரயோஜனமற்ற புத்தகம்	155	156. மதிப்புத் தெரியாதவர்கள்	185
127. வாழ்க்கை அழகு	156	157. பாடங்கள்	186
128. தாயின் அன்பு	157	158. அன்பு என்றால்	187
129. வாழ்ந்து காட்டு	158	159. அன்பு நம் விருப்பம்	188
130. அவர்களுக்கு அது பிரச்சினை இல்லை	159	160. பாரம் அல்ல	189
		161. பணம் எச்சரிக்கை	190
131. எளிய இருதயம்	160	162. கடக்க இயலுமா?	191
132. எது சரி?	161	163. மறைக்கப்பட்ட நியாயம்	192
133. எங்கும் நல்லவர்	162	164. ஆசீர்வதிக்கப்பட்டவன்	193
134. எளிய விசுவாசம்	163	165. நாமும் இப்படியிருந்தோம்	194
135. தியான நேர அமைதி	164	166. இந்த நன்மை வேண்டாம்	195
136. போலி மன உறுத்தல்	165	167. யார் துணை?	196
137. அன்பை ருசித்தல்	166	168. அழுகை ஜெபம்	197
138. பயன்தராத பிரசங்கங்கள்	167	169. வாழ்க்கை முழுவதும்	198
139. கேட்டவை கிடைக்கவில்லை	168	170. நமக்கொரு தந்தை	199
140. வாழ முடியும்	169	171. அதிகமாகத் தேடப்படுவது	200
141. இதுவும் முக்கியமான வேலை	170	172. குடும்பமும் ஐக்கியமும்	201
142. ஆசீர்வாதத்திற்கு உகந்தவர்களாய்	171	173. நன்றியுணர்வு	202
143. பக்தி அடிமைத்தனம்	172	174. தவறான பார்வை	203
144. பரிசுத்தக் குறைவு	173	175. பரிதாப ஜெபம்	204
145. நல்ல நிலம்	174	176. பாவ விடுதலை	205
146. தேவனுக்குப் பயன்படுதல்	175	177.சந்தோஷம்	206
147. எப்படி இயேசுவைப் பார்க்கின்றோம்	176	178. மறப்பது எப்படி?	207
		179.கர்த்தரை அறியணும்	208
148. மாற்றம் இல்லை ஏன்?	177	180. அன்பு கூருவது கடினம்	209
149. இதுவும் தேவ அன்பே	178	181. கோடீஸ்வரப் பிச்சைக்காரி	210
150. எளிய விசுவாசம்	179	182.திறமைகளும் சுபாவங்களும்	211

நாள் தலைப்பு	பக்கம்	நாள் தலைப்பு	பக்கம்
183. தள்ளி கொண்டு முன்னேறு	212	215. சுவையா, ஆரோக்கியமா?	244
184. அறிவைப் பயன்படுத்து	213	216. பக்தியும் பாவமும்	245
185. இப்பொழுது எப்படி?	214	217. கருத்து வேறுபாடு	246
186. குற்றச்சாட்டு	215	218. நீதி கிடைக்காது	247
187. தீமையின் நினைவுகள்	216	219. சுபாவமே முக்கியம்	248
188. ஒரே ஒரு காரணம்	217	220. பாராட்டும் விமர்சனமும்	249
189. சகிக்க முடியுமா?	218	221. பில்லி சூனியமா?	250
190. மன்னிக்க முடியுமா?	219	222. கர்த்தர் தேவையில்லையா?	251
191. ஆராதனைச் சந்தோஷம்	220	223. திருப்தி தராத வாழ்க்கை	252
192. வாழ்க்கை முறை எப்படி?	221	224. தனி ஜெபம்	253
193. யாரிடம் கற்ற பக்தி	222	225. ஏதாவது செய்வார்?	254
194. பிள்ளையாக நில்	223	226. பாவ அறிக்கை	255
195. நியாயமா நல்லதா?	224	227. சுதந்திரம் பிறப்புரிமை	256
196. பிரிவது கடினம்	225	228. நீர்க்குமிழிப் பக்தி	257
197. ஆதி அன்பு	226	229. ஜன்னலைத் திற	258
198. உணர்ச்சிவசப்படுத்துதல்	227	230. இப்படிச் ஜெபியுங்கள்	259
199. விசுவாச சிறகுகள்	228	231. உறவுகளை மகிழ்விக்க	260
200. தரிசனம் வேண்டும்	229	232. கவலை	261
201. எல்லாம் சடங்கு	230	233. இது பெரிய தவறு	262
202. சந்தேகப் பார்வை	231	234. பண ஆசை சரியா?	263
203. தேவையா ஆசையா?	232	235. சற்று நேர மனநிலை	264
204. மன்னிப்பது கடினம்	233	236. பக்தியோடு பாவம்	265
205. விவேகமான காத்திருப்பு	234	237. பிரிவதை தவிர்ப்போம்	266
206. கோபக்காரன்	235	238. சுத்தமான கோப்பை	267
207. நல்லவரா கெட்டவரா?	236	239. தேவன் விரும்புவது என்ன?	268
208. பயனற்றவையா?	237	240. யார் பயன்படுவார்?	269
209. மனநலன்	238	241. வெறுப்புணர்வு	270
210. கொஞ்சம் தீயது	239	242. கடமை சுவிசேஷம்	271
211. தேவ உறவின் சான்று	240	243. காட்சியும் வீழ்ச்சியும்	272
212. திறமைகளும் பண்புகளும்	241	244. நிச்சயமற்ற அறிவு	273
213. கிறிஸ்துவே தரிசனம்	242	245. அவர் துவங்கினால்	274
214. போதனையா ஐக்கியமா?	243	246. நன்றி	275

நாள்	தலைப்பு	பக்கம்	நாள்	தலைப்பு	பக்கம்
247.	ஒரு சிறு செயல்	276	276.	என்றும் இளமை	305
248.	ஆசிரியர்	277	277.	நல்லதும் கெட்டதும்	306
249.	எதற்காகச் ஜெபம்	278	278.	தேவையான தோற்றம்	307
250.	செயல் தேவை	279	279.	உண்மை நிலை உணர்வோம்	308
251.	ஏன் பாராட்டவில்லை?	280	280.	சிங்கங்களின் நடுவில்	309
252.	போலி அனுபவம்	281	281.	மாய்மாலம்	310
253.	தனிமைப்படுதல்	282	282.	தோல்விகள் நிரந்தரமல்ல	311
254.	பிள்ளையா பரிசுத்தவானா?	283	283.	யாருக்காக உண்மை	312
255.	பணத்தின் ஆற்றல்	284	284.	தீமை நன்மையாகும்	313
256.	கடைசி அத்தியாயமா?	285	285.	தேவசித்தத்தின் மையத்தில்	314
257.	இயேசு எதற்காக?	286	286.	குறை கூறும் ஆவி	315
258.	ஆசீர்வாதம் இவர்களுக்கே	287	287.	நல்ல வாழ்க்கையும் சந்தோஷமும்	316
259.	பணமும், சந்தோஷமும்	288	288.	வேகமான ஓட்டம்	317
260.	பண்பைப் பயன்படுத்துவோம்	289	289.	கண்களை மூடாதீர்	318
261.	அவர் தவறாதவர்	290	290.	பண்புகளைப் பாராமல்	319
262.	ஜெபம் பண்ணினாலும்	291	291.	நித்திய வாழ்வு	320
263.	தாழ்மை எப்படி?	292	292.	தேவனுக்கு ஆலோசனை	321
264.	செயலில் அன்பு	293	293.	துன்பங்கள் ஏன்?	322
265.	தேவ அன்பை புரிந்து கொள்தல்	294	294.	தேவனுக்கு நீ வேண்டும்	323
266.	இது தெரியுமா?	295	295.	சந்தோஷம் தேவை	324
267.	பாவத்தின் நெருக்கம்	296	296.	மனிதனுக்கு ஆறுதலாக	325
268.	பதவி தேவையா?	297	297.	உணர்வுகளை அடக்காமல்	326
269.	கர்த்தருக்கு வாய்ப்பில்லை	298	298.	வளமையா, வாழ்க்கையா?	327
270.	சூழ்நிலைகளைப் பாராதே	299	299.	கேள்விகள்	328
271.	பரிசுத்த வல்லமை	300	300.	சூழ்நிலையும் தேவையும்	329
272.	சகிப்பவன் வீட்டில் சண்டையில்லை	301	301.	எப்போதும் அவர் நினைவில்	330
273.	குற்றங்கூறல் எதற்காக?	302	302.	வேதமும் மனிதனும்	331
274.	பூரணத்தின் அடையாளம்	303	303.	எப்போது பலன் கிடைக்கும்?	332
275.	காற்று வீச வேண்டும்	304	304.	சுயத்தை நேசித்தால்	333
			305.	பழிக்குப் பழி	334

நாள்	தலைப்பு	பக்கம்
306.	கடினமாகிவிட்டால்	335
307.	உணர்ச்சி வசப்படுதலும் உற்று நோக்குதலும்	336
308.	ஐக்கியமும் மாற்றங்களும்	337
309.	தோற்றமும் செயலும்	338
310.	வருவதும் பின் தொடர்வதும்	339
311.	கணவனின் அந்தஸ்து	340
312.	யார் நல்லவன்?	341
313.	அற்புதமா, வார்த்தையா?	342
314.	தீர்மானம்	343
315.	குற்றமற்றவர் ஆனால்	344
316.	விசுவாச அறிக்கையா? அனுபவமா?	345
317.	தோற்றங்கள்	346
318.	அன்பைப் பெற்றிட	347
319.	வேதம் அறிந்தாலும்	348
320.	ஓடி விடாதீர்	349
321.	பாவ அறிக்கை	350
322.	காரணங்கள் அல்ல	351
323.	உண்மையான மாற்றம் ?	352
324.	குணத்தை விரும்பினால்	353
325.	பிறரின் கருத்து	354
326.	மாற்றத்திற்கு மாதிரி	355
327.	ஜெபம் எதற்காக?	356
328.	நோக்கம் என்ன?	357
329.	வேத அறிவின் விளைவு	358
330.	விலகுவது மட்டுமல்ல	359
331.	காணிக்கையும் ஆசீர்வாதமும்	360
332.	குணநிலை சோதனை	361
333.	நல்ல செயலும், குணமும்	362
334.	நல்ல இருதயம் வேண்டும்	363
335.	தேவையும் ஆசையும்	364
336.	பலப்படுத்தும் துன்பங்கள்	365
337.	ஏன் உணர்வில்லை?	366
338.	தவறான மனநிலை	367
339.	அவரோடு நிற்போம்	368
340.	சிறிய கல்	369
341.	உயர்ந்து நிற்போம்	370
342.	மூடி மறைத்தல்	371
343.	தேவ மகிமையைத் தேடாமல்	372
344.	அன்பும், மரியாதையும்	373
345.	ஸ்தோத்திரம்	374
346.	எல்லாம் பாவமே	375
347.	பிறர் பார்க்கணும்	376
348.	பணம் பாவமா?	377
349.	நாமே செய்யலாம்	378
350.	இதோ உங்களோடிருக்கிறார்	379
351.	தாழ்மையா? பெருமையா?	380
352.	திரும்பும் வழி தெரியாவிடில்	381
353.	ஆசீர்வாதம் எது?	382
354.	விசுவாசத்தின் அடையாளம்	383
355.	பிறருக்கு உதவி	384
356.	வாக்குத்தத்தங்கள்	385
357.	முதலில் எது?	386
358.	கனமும் கனவீனமும்	387
359.	கொண்டாட்டம்	388
360.	முதலாவது யார்?	389
361.	பக்தி அடிமைத்தனம்	390
362.	இழந்தது யாருடையது	391
363.	பரலோக நிச்சயம்	392
364.	அவர்கள் மாறாவிட்டால்	393
365.	வருடத்தின் கடைசிநாள்	394
366.	நினைவில் நின்றவை	395

இந்த தியான நூலை எப்படி பயன்படுத்தலாம்?

- தினமும் அந்தந்த நாளுக்குரிய தியானப் பகுதியை மட்டுமே படித்து பய னடையுங்கள். ஒரே நேரத்தில் பல பக்கங்களை படிப்பது அவ்வளவு பிரயோஜனமாயிராது.

- இந்ந தியான நூலைப் படிக்கும் போதுப் பக்தி கடமையாகப் படிக்காமல் பரி சுத்தத்தில் வளர்வதற்கு ஏதுவாகக் கற்றுக்கொண்டிடப் படியுங்கள்.

- எப்பொழுதாவது நேரம் கிடைக்கும் போதுப் படிக்காமல் இதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்கிப் படியுங்கள்.

- நீங்கள் தனியாகவும் இந்த தியானநூலை வாசியுங்கள். உங்கள் குடும்ப ஜெபத்திலும் வாசியுங்கள்.

- நீங்கள் விசேஷமாக அறிந்துகொண்ட உண்மைகளைப் பிறரோடுப் பகிர்ந்துக் கொள்வதை பழக்கமாக்குங்கள்.

- இந்த தியான நூலில் தரப்பட்டுள்ள வேதப் பகுதியை மட்டுமே வாசித்து உங்களின் வேததியான வேளையை முடித்துக் கொள்ளாதிருங்கள். இன்னும் பல்வேறு வேதப் பகுதிகளை வாசிக்கவும் தியானிக்கவும் கவனமாயிருங்கள். அந்தந்த நாளுக்குரிய பக்கத்தில் தரப்பட்டுள்ள வேத பகுதி இன்றைய உங்க ளின் வேத வாசிப்பிற்கான வேத பகுதி அல்ல. அது இந்த நூலில் தரப்பட்டுள்ள இன்றைய சிந்தனைக்கான வேதபகுதி மட்டுமே.

- நீங்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துகிறவர்களாயிருந்தால் இந்த தியான நூலைப் பற்றியும் படித்த சிந்தனைகளைப் பற்றியும் பிறரோடு தவறாமல் பகிர்ந்துகொள்ளுங்கள்.

- இந்த தியானநூலைத் திரும்ப திரும்ப ஒவ்வொரு வருடமும் பயன்படுத்தாமல் இதற்கு அடுத்தபடியாக வெளியிடப்படும் தியானநூலைக்குறித்து விசாரித்து அதனை வாங்கிப் பயன்படுத்துங்கள்.

- நீங்கள் யார் மூலம் இந்த தியான நூலைப் பெற்றிருந்தாலும் அடுத்த முறை அவர்களிடமே எதிர்பாராமல் நீங்களே புதிய தியான நூலை வாங்கி பயன்படுத்த முன்வாருங்கள். இந்த முறை நீங்கள் பரிசாகப் பெற்றிருந்தால் அடுத்த தியான நூலை நீங்கள் யாருக்காவது பரிசாக வாங்கிக் கொடுங்கள்.

தினமும் உம் கிருபையால்

தினசரி தியான நூல்

A DAILY DEVOTIONAL FOR YOUR SPIRITUAL GROWTH

ஜனவரி

1

ஜீவ நீரோடை

ஆண்டின் முதல்நாளில்

அதற்கு அவர் நான் உன்னோடே இருப்பேன்...
யாத்திராகமம் 3:12

யாத்திராகமம் 3:1-15

ஒரு பெண் ஆண்டின் முதல் நாளில் சற்று கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தாராம். அந்த குடும்பத்தாருக்கு வருடப்பிறப்பன்று வாழ்த்துக் கூற வந்த பாஸ்டர், ஏன் சோர்வாக இருக்கின்றீர்கள் என்று கேட்டாராம். அதற்கு அந்தப் பெண்மணி காலையிலே நான் இந்த ஆண்டிற்கான வாக்குத்தத்தத்திற்காக நீண்ட நேரம் ஜெபித்து வேதத்தை வாசித்தேன். ஆனால், எனக்கு கர்த்தர் வாக்குத் தத்தம் எதையும் தரவில்லை என்றாராம். அது இருக்கட்டும் இன்று உங்கள் வீட்டில் புதிய ஆண்டு விசேஷ சாப்பாடு உண்டா? என்று கேட்டாராம் அந்த பாஸ்டர். அதற்கு அந்தப் பெண்மணி ஆம், பாஸ்டர், மதியம் எங்கள் வீட்டில் விசேஷ சாப்பாட்டிற்கு எல்லாம் ஆயத்தம் பண்ணியிருக்கின்றோம் என்றாராம்.

அது சரி, உங்கள் பிள்ளைகளுக்கெல்லாம் மதியம், விசேஷ சாப்பாடு தரப் போவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டீர்களா என்று பாஸ்டர் கேட்டாராம். அதற்கு அந்த பெண்மணி என் பிள்ளைகளுக்கு நான் ஏன் வாக்குறுதி கொடுத்து சாப்பாட்டிற்கு அழைக்க வேண்டும் என்று கேட்டாராம். ஆண்டவருக்கு நீங்கள் பிள்ளைதானே. அப்புறம் அவரிடம் ஏன் வாக்குத்தத்தம் கேட்கின்றீர்கள் என்று கேட்டாராம் அந்த பாஸ்டர். அந்த பெண்மணிக்கு பதில் சொல்ல எதுவும் வரவில்லை.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றால், பிள்ளைகளுக்கேற்ற சிந்தை வேண்டும். பிள்ளைகளுக்கு தகப்பன் தம்முடைய சித்தப்படி நலமானவற்றை செய்வான். புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கின்றோம். இந்த ஆண்டு எப்படியிருக்கப் போகின்றது? இந்த ஆண்டு நான் எப்படி வாழப் போகின்றேன்? இந்த ஆண்டு கர்த்தர் எனக்கு என்ன செய்யப் போகிறார்? என்ற கேள்விகள் அல்ல. இந்த ஆண்டு கர்த்தர் என்னோடிருப்பார். இந்த ஆண்டு கர்த்தர் என்னை நடத்துவார். இந்த ஆண்டு நான் கர்த்தருடைய ஐக்கியத்தோடு வாழ்வேன். இந்த ஆண்டு கர்த்தர் என்னுடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் எனக்குப் போதுமானவராயிருப்பார்.

இது போன்ற விசுவாச சிந்தைதான் வேண்டும். கர்த்தர் எனக்கு முன்கூட்டியே ஒன்றை வாக்குறுதியாகத் தந்துதான் ஆசீர்வதிப்பார் என்று எணணக்கூடாது. தேவ ஐக்கியத்தோடு வாழ்வதுதான் தேவ வாக்குத்தத்தம். அவர் நம்மோடிருப்பதை உறுதிப்படுத்தும் விதமாக வாழும்போது, அவரால் நமக்கு நன்மையும் கிருபையும் வரும் என்பதுதான் விசுவாசம். ஒரு புதிய சூழ்நிலைக்குள் தேவ மனிதர்கள் சென்ற போதெல்லாம், தேவன் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம், நான் உன்னோ டிருப்பேன் என்பதுதான். அதுதான் நமக்கும் தேவை. அதுவே போதுமானது.

சிந்தனைக்கு...

பாதைகளைக் குறித்த பதட்டமின்றி பயணத்தைத் துவங்கிட
நடத்திச் செல்லும் கர்த்தர் நல்லவர் என்ற நம்பிக்கை போதும்,

ஜனவரி

2

ஜீவ நீரோடை

வேகமும் வேண்டும்

நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை.
ஏசாயா 52:12

ஏசாயா 52:1-15

சென்னையிலிருந்து பாரிஸ் போவதற்கான விமானத்தைப் பிடிக்க ஒருவர், புதுச்சேரியிலிருந்து வாடகைக் காரில் புறப்பட்டார். அந்த வாகனத்தை ஓட்டுவதற்கு வந்திருந்த காரோட்டி மிக மிகக் கவனமாகவும், பாதுகாப்பாகவும் வாகனம் ஓட்டுகின்ற பழக்கமுடையவர். அந்தப் பயணி தன்னைப் பத்திரமாகக் கொண்டு செல்ல பாதுகாப்பான ஒரு காரோட்டி கிடைத்ததற்காகச் சந்தோஷப்பட்டார். அந்தக் காரோட்டி மிக மிகப் பாதுகாப்புச் சிந்தனையோடு மிகக் குறைந்த வேகத்தில் காரை ஓட்டினார். ஆனால், போக்குவரத்து நெரிசலைக் கடந்து சென்னை விமானதளம் செல்லும் முன்பு காலதாமதமாகிவிட்டது. பிரயாணம் பாதுகாப்பாக அமைந்தது. ஆனால், வேகக்குறைவு காரணமாக விமானத்தைப் பிடிக்க முடியாமல் போய் விட்டது.

சிலர், மிக மிக விவேகமாகச் செயல்படுகின்றவர்கள் என்பது உண்மை. விவேகத்தின் விளைவான நன்மைகள் உண்டு. ஆனால், அவர்களின் வேகக்குறைவினால் பல நன்மைகள் இழக்கப்பட்டு விடுகின்றன. விவேகமான செயல்பாடு என்பதற்காக, அளவுக்கு மிஞ்சி வேகக்குறைவுடன் செயல்பட்டால் இலக்குகளை எட்ட முடியாது. ஆவிக்குரிய வாழ்க்கையில் அவசரப்படக்கூடாது. அதிக வேகம் ஆகாது என்பது உண்மைதான். அதே வேளையில் அவசியமான வேகங்களுக்குக் கீழேப் போகக்கூடாது. சிலர் சின்னச் சின்ன ஆவிக்குரிய அனுபவங்களைப் பெறுவதற்கு நீண்டகாலங்களை எடுத்துக் கொள்கின்றனர்.

சிலர், பல ஆண்டுகள் கிறிஸ்தவப் பிரயாணத்திலிருந்தாலும் ,கானானுக்குச் சென்ற இஸ்ரவேலர்களைப் போல ஆமை வேகத்தில்தான் நகருகின்றார்கள். சிலர், தங்களின் கிறிஸ்தவ அனுபவக் காலங்களைக் குறித்து பெருமையாகப் பேசுவார்கள். ஆனால், அவ்வளவு காலங்கள் கிறிஸ்தவப் பக்தி சூழ்நிலைகளோடு ஈடுபாடுகள் வைத்திருந்தாலும், எந்தவிதமான ஆவிக்குரிய முதிர்ச்சியும் இல்லை. ஆராதனை, ஜெபம், வேத வாசிப்பு என்பது போன்ற காரியங்களோடு இணைந்திருந்தாலும், கனிகொடுக்கும் அனுபவங்களிலோ மிகவும் பிந்தியிருப்பார்கள்.

எபிரெயர்களுக்கு நிருபம் எழுதிய தேவ மனிதன் அவர்களைப் பார்த்து காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது என்று எழுதினான். (எபிரெயெர் 5:12) ஆம், அவரசப்படாமல் நிதானத்தோடு செயல்பட வேண்டும். அதே வேளையில் போதுமான அளவு முன்னோக்கி ஓடும் வேகமும் வேண்டும்.

சிந்தனைக்கு...

உண்மைகளை அறிந்து கொள்ளத் தீவிரமாயிரு
அறிந்த உண்மையைக் கடைப்பிடிக்க தாமதமாயிராதே.

ஜனவரி
3
ஜீவ நீரோடை

இதுவும் தவறே

தீமைக்குத் தீமையையும் உதாசனத்துக்கு உதாசனத்தையும்... 1 பேதுரு 3:9

ஆதியாகமம் 34:1-31

வாலிபன் ஒருவன் ஒரு பொருளைத் திருட முயன்றான். அதைப் பார்த்து விட்ட சிலர், அந்த வாலிபனைச் சுற்றி வளைத்து அடித்தனர். மிகுதியாக அவனை அடித்துவிட்டு போலிசில் ஒப்படைத்தனர். போலிசார் அவன்மேல் வழக்குப் பதிவு செய்தனர். அது மட்டுமின்றி, அவனைக் கையும் களவுமாகப் பிடித்து அவனை அடித்த சிலரையும் போலிஸ் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர். திருடனைப் பிடித்துக் கொடுத்த எங்களை ஏன் கைது செய்கிறீர்கள் என்று அவர்கள் முறை யிட்டனர். அதற்குப் போலிசார் அவன் செய்தது தவறுதான். ஆனால், அந்த தவறைத் தடுத்த நீங்கள். அவனைக் கடுமையாக அடித்து உதைத்ததும் தவறுதான் என்றனர்.

ஆம், சில நேரங்களில் சிலர் செய்வது தவறுதான். ஆனால், அந்த தவறைக் குறித்து ஆத்திரமடைந்து நாம் அதைவிட பெரிய தவறைச் செய்துவிடுகிறோம். தவறைச் சற்று பொறுத்துக் கொள்ளாமல் நாம் கோபமாகவும், ஆத்திரமாகவும், அவசரமாகவும் எதிர்வினை ஆற்றுகின்றோம். அது பெரிய தவறாகிவிடுகிறது. நாம் அவ்விதம் தவறாக நடந்து கொண்டதைக் குறித்து மனம் வருந்தாமல், அதற்குக் காரணமாயிருந்த மற்றவர்களின் தவறையே சுட்டிக்காட்டுகின்றோம்.

யாக்கோபின் மகளாகிய தீனாளிடம் சீகேம் என்பவன் தவறாக நடந்து கொண டான். ஆதி (34:2) அது பெரிய தவறுதான். அந்தத் தவறுக்குப் பழிக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக. யாக்கோபின் மகன்களாகிய லேவியும், சிமியோனும் மிக மிகப் பாதகமான காரியங்களைச் செய்தார்கள். அதனுடைய விளைவாக யாக்கோபின் குடும்பத்தார் யாவரும் மிகப்பெரிய நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்தது. பல குடும் பங்களிலே மிகப்பெரிய கொந்தளிப்புகள் ஏற்பட்டு சரி செய்ய இயலாத அளவிற்குச் செல்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால், ஒரு சிறு தவறைக் குறித்து ஏற்பட்ட மித மிஞ்சிய ஆத்திரமும் வெறுப்புணர்வுமே, பொறுமைக்குப் பதில் பழிக்குப் பழி என்ற உணர்வுக்கு அடிமைப்பட்டதே அதன் காரணம்.

தீமைக்குத் தீமையைச் சரிக்கட்ட வேண்டாம் என்று வேதம் சொல்கிறது. (1 பேதுரு 3:9) கூடுமானவரைக்கும் எல்லோரோடும் சமாதானமாயிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுலின் ஆலோசனையை வேதாகமத்தில் பார்க்கின்றோம். (ரோமர் 12:18) ஒருவர் அநீதியாகவும், அக்கிரமமாகவும், நியாயமின்றியும் நடந்து கொள்வது தவறுதான். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் பொறுமை யாலும், சாந்த குணத்தாலும், தேவனைப் பிரியப்படுத்தும் மனநிலையாலும் அவற்றை சகித்து கொள்ளாமல் போனால், அவை தேவனுடைய பார்வையில் குற்றமே.

சிந்தனைக்கு...

தீமை செய்தவரால் நமக்கு வந்த தீங்கைவிட, தீமைக்குத் தீமை செய்வதால் வரும் தீங்கு அதிகம்.

ஜனவரி
4
ஜீவ நீரோடை

எது இலக்கு?

என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது... எண்ணாகமம். 22:18

எண்ணாகமம் 22:15-41

பக்தியுள்ள வாலிபன் தனக்காகப் பெற்றோர் பெண் தேடின போது,தேவ பக்தியுள்ள ஒரு பெண்தான் தனக்கு வேண்டும் என்றான். ஆனால், பக்தியுள்ள பெண்களை ஒன்றன்பின் ஒன்றாய் அவன் பார்த்தும் அவன் எதிலும் பிரியப்பட வில்லை. மிக அழகான ஒரு பெண்ணை தகப்பனார் தேடிக் கண்டுபிடித்ததும் ஒத்துக் கொண்டான். ஆம், அவன் தேவ பக்தியுள்ள ஒரு பெண்ணை மணப்பதையே இலக் காகக் கொண்டிருந்தான். ஆயினும், அவனுடைய ஆசையெல்லாம் மிக அழகான ஒரு பெண்ணை திருமணம் செய்வதே. உண்மையில் அழகான பெண்தான் அவனுடைய இலக்கே அன்றிப் பக்தியான பெண் அல்ல.

சிலர் நல்ல பக்தியுள்ளவர்கள்தான். அவர்களின் இலக்கு எல்லாம் தேவ பக்தி தொடர்பானதே. அவர்கள் தேவ பக்தியோடு தொடர்புடைய விஷயங்களைத்தான் வாழ்க்கையின் இலக்காக அறிக்கை செய்கின்றனர். ஆனால், அவர்களின் ஆர்வம், ஆசை, எண்ணம், நோக்கம், முயற்சி, கற்பனை யாவும் அதிகமாக பணம் பொருள் தொடர்பான காரியங்களோடேயே பிணைந்திருக்கிறது. எனவே, அவர்கள் மேன்மையான விஷயங்களை இலக்காக வைத்திருந்தாலும், அவர்களின் உண்மையான இலக்கு அவை அல்ல.

நாம் எவை இலக்கு என்று எண்ணவும் சொல்லவும் செய்கிறோமோ அவை அல்ல நம்முடைய உண்மையான இலக்குகள். பிலேயாம் உயர்ந்த இலக்கைத்தான் அறிக்கை செய்தான். அவனுடைய மனதின் தீர்மானம் தேவன் சொல்வதற்குக் கீழ்ப்படிவதே என்பதாயிருந்தது. (எண் 22:18) ஆயினும். அவனுடைய இலக்கைச் சார்ந்து அவன் செயல்படவில்லை. அவனிடமிருந்த பண ஆசை, பொருளாசை போன்றவையே அதி தீவிரமாகச்செயல்பட்டது. அந்த ஆசைகளின் இழுவைக்கு தன்னை விட்டுக் கொடுத்தே அவன் செயல்பட்டான். ஆம், நம்முடைய உண்மை யான இலக்கு எது என்பதை நமது அறிக்கை அல்ல. நம்முடைய ஆசை, ஆர்வங்கள் எங்கே நம்மை இழுத்துக் கொண்டு போகிறதோ, அவைதான் நிர்ணயிக்கிறன.

ஒருவர் எப்பொழுதும் கர்த்தாவே உமக்காக வாழ்வதே என் இலக்கு. அந்த இலக்கை நோக்கி ஓட கிருபை தாரும் என்று ஜெப வேளையில் ஜெபிப்பாராம். ஆனால். ஜெபம் முடிந்ததும் எப்படி எப்படிப் பணம் சம்பாதிக்கலாம், எங்கெங்கே நிலம் வீடு வாங்கலாம் என்று யோசித்து ஓடிக்கொண்டிருப்பாராம். ஆம், அவருடைய வாய் சொல்லும் இலக்கு தேவனுக்காக வாழ்வதே. ஆனால், அவருடைய வாழ்க்கையின் உண்மையான இலக்கு இன்னும் இன்னும் பணமே.

சிந்தனைக்கு...

மனம் பரலோகத்தை நோக்கிச் சென்றாலும்,
வாழ்க்கை நரகத்தை நோக்கிச் செல்லாதிருக்க எச்சரிக்கை தேவை.

ஜனவரி

5

ஜீவ நீரோடை

அவரைப் பெற வேண்டும்

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்...
யோவான் 3:3

யோவான் 3:1-16

அவர் வேதாகமத்தைக் கரைத்துக் குடித்தவர் எனலாம். வேதாகம சம்பவங்களையும். வேதாகமப் போதனைகளையும் மிகச் சிறப்பாக விளக்கம் கொடுத்துப் போதிப்பவர். ஏதாவது ஒரு வேதாகம சம்பந்தமான கேள்வி கேட்டால் மிக சிறப்பாக பதில் தருவார். ஆனால், இவருடைய தனிப்பட்டவாழ்க்கையில் பாவம் மேலோங்கியிருக்கிறது. பரிசுத்தத்தின் சாயல் அவருடையவாழ்க்கையில் இல்லை. அவருடைய சுபாவங்கள் மேன்மையானவை அல்ல. ஏனென்றால், அவர் வேத அறிவு பெற்றவர். ஆனால், இயேசுவை தனக்குள் பெற்றுக் கொண்டவர் அல்ல.

வேத அறிவு பெறுவது என்பது வேறு. தேவ உறவைப் பெறுவது என்பது வேறு. அறிவியல், பொருளாதாரம் வரலாறு, அரசியல் கற்பதுபோல கிறிஸ்தவத்தைக் கற்றறிய முடியும். அவற்றைக் கொண்டு சிறப்பாகப் போதிக்கவும் முடியும். ஆனால், அவற்றின்படி வாழ இயலாது. வெறும் போதனைத்திறனைக் கொண்டு பரிசுத்தமாக வாழ்கின்ற திறனைப் பெற முடியாது. நாம் கிறிஸ்தவப் போதனைகளையும் சித்தாந்தங்களையும் கற்றுக் கொள்ள அழைக்கப்படவில்லை. நாம் கிறிஸ்தவ வழிபாட்டு முறைகளைப் பெற்றுக் கொள்ள அழைக்கப்படவில்லை. நாம் கர்த்தராகிய இயேசு என்னும் இரட்சகரை நமக்குள் பெற்றுக் கொள்ளவே அழைக்கப்படுகிறோம்.

நாம் இறையியல் அறிவைக் கொண்டு தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கையை வாழ இயலாது. நாம் தேவ ஐக்கியத்தைக் கொண்டுதான் பரிசுத்த வாழ்க்கையை வாழ இயலும். சில கிறிஸ்தவர்கள் பல ஆண்டுகளாக வேதாகமம் வாசிக்கின்றார்கள். பல ஆண்டுகளாக பைபிள் ஸ்டடி கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். வேதாகமச் சம்பவங்களோடும், வேதாகமப் போதனைகளோடும் அவர்களுக்கு நல்ல பழக்கங்கள் உண்டு. பல ஆவிக்குரிய புத்தகங்களைப் படித்து வேத அறிவை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும், அவர்களால் பரிசுத்தமாக வாழ்வதில் வெற்றி காண இயலவில்லை.

ஏனென்றால், அவர்கள் இன்னும் தங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்து, கிறிஸ்துவை தங்களுக்குள் பெறுகின்ற உண்மையான ஆவிக்குரிய அறிவைப் பெறவில்லை. கர்த்தருடைய போதனைகளை எவ்வளவுதான் விரும்பிக் கற்றாலும், அவற் றின்படி வாழ நம்மால் இயலாது. ஏனென்றால், மறுபிறப்பின் அனுபவம் பெறாத மனிதன் எவ்வளவு பக்தியாளனாக இருந்தாலும், அவன் இன்னும் பாவியே. கர்த்தர் அவனுக்குள் வராவிட்டால், அவன் பரிசுத்தமாக வாழ முடியாது.

சிந்தனைக்கு...

பரிசுத்தமாய் வாழ்ந்திட ஆசைப்படுவது அல்ல,
பரிசுத்த தேவனோடு வாழ்ந்திட ஆசைப்படு, பரிசுத்தம் வரும்.

பணமா, குணமா?

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்...
யோவான் 15:8

யோவான் 15:1-17

ஆத்ம நாத ராஜாவுக்கு நல்ல பக்தி உண்டு. ஆனால், பணம் இருந்தால் தான் நன்றாக வாழ இயலும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டவர். தன்னுடைய மகளுக்கு வரன் தேடினபோது பக்திக்கு இரண்டாம் இடத்தையும், பணத்திற்கு முதல் இடத்தையும் கொடுத்தார். பையனுக்குச் சொந்த வீடு இருக்க வேண்டும். நல்ல ஆடம்பரக் கார் இருக்க வேண்டும். லட்சக்கணக்கில் சம்பாதிக்கும் திறன் இருக்க வேண்டும் என்பது போன்ற நிபந்தனைகளை முன்வைத்தே வரன் தேடினார்.நல்ல பக்தியான பையன் என பல தொடர்புகள் வந்தும் அவற்றை ஒதுக்கிவிட்டு, நல்ல துட்டுக்காரனைக் கண்டுபிடித்து, மகளைக் கல்யாணம் செய்து வைத்தார்.

தான் விரும்பியபடியே பணக்கார மாப்பிள்ளை கிடைத்தது கர்த்தருடைய பெரிதான கிருபைதான் என்று எண்ணினார். ஆனால், தன் பெண்ணுக்குப் பணக்கார மாப்பிள்ளை அமைந்த போதும், பண்புள்ள மாப்பிள்ளை அமையவில்லை என்பதை சில மாதங்களிலேயே அறிய நேர்ந்தது. மகளால் அவனோடு இனி வாழ இயலாது என்ற நிலைமைக்கு வர நேர்ந்தது. வாழ்க்கைக்குப் பக்தி மட்டும் போதாது. பணமும் அவசியம் என்பது உண்மைதான். ஆனால், வாழ்க்கையில் பணம் கொஞ்சமிருந்தாலும் வாழ முடியும். ஆனால், பண்புகள் இல்லாவிட்டால் வாழ்வதற்கு பெரிய நெருக்கடிகள் ஏற்படும்.

இன்றைய சமுதாயத்தில் வாலிபர்கள் பலர் வேலைக்குச் சென்றதும், கட்டுக் கட்டாய்ச் சம்பாதிக்கும் ஆற்றல் பெற்றுவிடுகின்றனர். ஆனால், கட்டுக்கோப்பான ஒரு வாழ்க்கை வாழும் மனநிலைமை அவர்களுக்கு இல்லை. ஆண்களும் பெண்களும் பண அளவுதான் தங்களின் வாழ்க்கையின் மகிழ்ச்சியை நிர்ணயிக்கும் என்ற மூட நம்பிக்கையில் மூழ்கி சரியாக ஏமாறுகின்றார்கள். பணம் குறைவாக உள்ள பலர் எப்படியாவது வாழ்க்கையைக் கட்டிக்காக்கின்றனர். ஆனால், ஏராளமான பணத்தை வைத்துக் கொண்டு குடும்ப வாழ்வின்ஒரு சிறு பிரச்சினையை கூடஎதிர்கொள்ள இயலாமல், அனேகர் பரிதாபத்திற்குரிய வராகின்றனர்.

நல்ல படிப்பு, நல்ல தொழில், நல்ல திறமை யாவும் நிறையப் பணம் சம்பாதிக்க உதவும். ஆயினும், நல்ல குணங்கள்தான் வாழ்விற்கு உதவும். தேவ உறவுடன் வாழ்கின்றவன் மட்டுமே பண்புகளில் வளருவான். அந்த பண்புகள்தான் அவனுடைய வாழ்க்கையை எல்லா எதிர் காற்றுகளின் நடுவிலும் விழாமல் நிற்க வைக்கும். எனவேதான் திராட்சைச் செடியாகிய அவருடன் இணைந்திருந்து நற்குணங்களாகிய கனிகளைத் தந்திட கர்த்தர் அழைக்கின்றார்.

சிந்தனைக்கு...

பணமில்லாதவர்களின் பண்புகள் அவர்களை விழ விடாது
பண்பில்லாதவர்களின் பணம் அவர்களை வாழவிடாது.

ஜனவரி
7
ஜீவ நீரோடை

நமக்கு அது நல்லதல்ல

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல்... எபேசியர் 5:18

எபேசியர் 5:1-21

மதுபானப் பழக்கமிருந்தும் தன்னுடைய நண்பர் எந்த விதப் பிரச்சினையும் இல்லாமல் சரியாக இருந்ததைப் பார்த்த ஒருவர், தன்னையும் அந்தப் பழக்கத்தில் ஈடுபடுத்தினார். அவரிடம் ஆரம்பித்த குடிப்பழக்கத்தை பார்த்து அவருடைய குடும்பத்தார் அவரை எச்சரித்தனர். அதற்கு அவர். மதுபானப் பழக்கம் தவறல்ல என்றும், மதுபானப் பழக்கமுடைய தன்னுடைய நண்பர் எந்தப் பிரச்சினையும் இன்றி மிகச் சரியாக இருப்பதைச் சுட்டிக்காட்டினார். ஆனால், நாளடைவில் இவர் மது பான பழக்கத்திற்கு அடிமையாகி, பலவிதமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்தார். ஆனால், அவருடைய நண்பரோ மதுபானப் பழக்கத்தால் எந்தப் பிரச்சினையும் இன்றி இருந்தார்.

சில விஷயங்கள் சிலருக்கு எந்தப் பாதகத்தையும் ஏற்படுத்தாது. அதே வேளையில், அவர்களுக்கு கேடு விளைவிக்காத அந்த விஷயங்கள் வேறு சிலருக்கு அதிகமான கேட்டை விளைவிக்கும். எனவே, ஒரு விஷயம் யாரோ ஒரு சிலருக்கு எந்தக் கேட்டையும் தரவில்லை என்பதைக் காரணம் காட்டி, நாமும் அந்த விதமாகப் போகக்கூடாது. சில உணவு வகைகள் சிலருக்கு எந்தச் சரீரப்பிரச்சினையையும் தராது. அதே வேளையில், அந்த உணவு வேறு சிலருக்கு பலவிதமான ஆரோக்கியக் கேடுகளை உருவாக்கும்.

கொரோனா வைரஸ் தொற்றினால் ஒரு சிலருக்கு சரீரப் பாதிப்பு வராது. ஆனால், அதே கொரோனா வைரஸினால் பல லட்சங்கள் மடிந்ததை நாம் அறிந்தோம். தவறான ஒன்று ஒரு சிலருக்குக் கேட்டை விளைவிக்காவிட்டாலும் அதனை முன்னுதாரணமாகக் கொண்டு செயல்படுவது நலமானதல்ல. ஒரு விஷயம் சரியா தவறா என்று வேதம் என்ன சொல்கின்றதோ, அதற்குத்தான் முக்கியத்துவம் தர வேண்டும். அந்த விஷயத்தில் சிலருடைய சாட்சி வித்தியாசமான தாயிருக்கலாம். ஆயினும், அந்தச் சாட்சியை அடிப்படையாகக் கொள்ளாமல், தேவ சத்தியம் என்ன சொல்கிறதோ அதனை மதிக்க வேண்டும்.

சிலர் உலக மனிதர்கள் கூறும் சாட்சிகளையும், தங்களின் மனம் நிதானிக்கும் நியாயங்களையும் முதலிடத்தில் வைக்கின்றனர். ஆனால், வேதாகமம் சில விஷயங்களைக் குறித்து எச்சரிக்கின்றதென்றால், தேவனுடைய பார்வையில் அவை சரியாக இல்லாமலிருப்பதுதான். மனித நியாயங்களைவிட தேவ நியாயங்களுக்கு அதிக முக்கியத்துவம் நாம் தர வேண்டும். எல்லா விதிகளுக்கும் சில விதி விலக்குகள் இருக்கும். ஆயினும், விதி விலக்குகளை நாம் பொதுவான சட்டமாக எடுத்துக் கொள்ள முடியாது.

சிந்தனைக்கு...

சரியான பாதையில் யார் நடவாவிட்டாலும் நீ நட,
சரியற்ற பாதையில் எல்லோரும் நடந்தாலும் நீ நடவாதே.

ஜனவரி

8

ஜீவ நீரோடை

நல்ல உபதேசம், கெட்ட வாழ்க்கை

கெட்ட மரமானது நல்ல கனிகொடாது...
லூக்கா 6:43

லூக்கா 6:36-49

மிக நல்ல உபதேசமும், மிக நல்ல ஒழுங்குகளும் உள்ள சபை என்று அறியப் பட்ட ஒரு சபையில், ஒருவர் அங்கத்தினராக இருக்கிறார். அந்த சபையைத் தவிர சத்தியம் சார்ந்த சபை வேறெங்கும் தான் கண்டதில்லை என்று பலரிடம் சொல்லுவார். சரியான சத்திய போதனைகளை விரும்பும் எவரும் இந்த சபைக்கு வரவேண்டும் என்று கூறுவார். தான் மிக மிகச் சரியான உபதேசங்கள் உடைய சபையில் இருப் பதற்காக மிகவும் பெருமைப்படுவார். அதே வேளையில், அவ ருடைய மனைவியோ, இவரால் குடும்பத்தில் ஓயாத பிரச்சினை என்று குற்றம் சாட்டுவார். அவர் வேலை செய்யும் அலுவலகத்திலும் அதே விதமான புகார்கள் சொல்லப்படுகின்றன.

மிக மிகச் சரியான சத்திய அடிப்படையிலான போதனைகள் உடைய சபையில் உறுப்பினராகவுள்ள இவருக்கு, ஏன் வீட்டிலும் அலுவலகத்திலும் சாட்சியில்லை என்பது சிலருடைய கேள்வி. ஒரு நிலம் நல்லதாக இல்லாத பட்சத்தில், அந்த நிலத்தில் எவ்வளவுதான் உரத்தைக் கொட்டினாலும், தண்ணீரைப் பாய்ச்சினாலும் அதனால் நல்ல செடிகளை முளைப்பித்து வளர்க்க முடியாது. அது எவ்வளவுதான் தண்ணீரைக் குடித்தாலும், எவ்வளவுதான் உரத்தைப் பெற்றாலும், எவ்வளவு தான் பராமரிப்பைப் பெற்றாலும் அதனால் முட்செடிகளையும், ஆகாத களை களையும்தான் முளைப்பிக்க முடியும்.

நல்ல போதனைகளைக் கேட்டாலும், நல்ல ஒழுங்குகளைக் குறித்த அறிவுரை கேட்டாலும், இருதயம் எப்படிப்பட்டது என்பதே முக்கியம். இன்னும் மனந்திரும்பாத இருதயத்தில் எவ்வளவுதான் சத்திய விதைகளை விதைத்தாலும், நல்ல விளைவு ஏற்படாது. நாம் எப்படிப்பட்ட தரமான உபதேசங்களைக் கேட் கின்றோம் என்பது முக்கியமான விஷயம்தான். ஆனால், அதைவிட முக்கிய மானது, நாம் எப்படிப்பட்ட இருதயத்தை உடையவர்கள் என்பதே. வியாதியால் பாதிக்கப்பட்ட மனிதன், எவ்வளவுதான் தரம் வாய்ந்த உணவை உண்டாலும், நல்ல ஆரோக்கியமுடையவனாக மாற முடியாது.

எனவேதான், ஆழமான தேவ ராஜ்ய இரகசியங்களைக் கேட்டறியும்படி வந்த நிக்கொதேமுவிடம், இயேசு முதலாவது அவன் மறுபடியும் பிறக்க வேண் டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டினார். (யோவான் 3:3) மூன்றரை வருடம் ஆழ மானதும் ஆரோக்கியமானதுமான தேவ சத்தியங்களை இயேசுவிடமிருந்து பெற்று கொண்டவன்தான் யூதாசு. ஆயினும், அவன் கேட்டின் மகனாகத் தொடர்ந் தானேயன்றித் தேவனுடைய பிள்ளையாக வெளிப்படவில்லை.

சிந்தனைக்கு...

நீ கேட்கும் வார்த்தைகள் எவ்வளவு தரமானது என்பதல்ல,
கேட்கின்ற உன்னுடைய இருதயம் எவ்வளவு தரமானது என்பதே முக்கியம்.

ஜனவரி

9

ஜீவ நீரோடை

பேசாத தேவனா?

கர்த்தர் மோசேயோடே முகமுகமாகப் பேசினார்...
யாத்திராகமம் 33:11

யாத்திராகமம் 33:1-17

கணவன் மனைவி இருவரும் சந்தோஷமாக இருக்கின்றனர். அவர்களுக் கிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், மனைவியிடம் கணவன் தன்னுடைய அலுவலகத்தில் நடந்த எதையும் சொல்லமாட்டான். தான் பார்த்த, உணர்ந்த, சிந்தித்த, ரசித்த எதையும் மனைவியிடம் பகிர்ந்து கொள்ளமாட்டான். என் கணவர் என்னிடம் தேவைக்கு மட்டும் பேசுவார். வேறு எதையும் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் பழக்கம் அவருக்கு இல்லை என்பது மனைவி அவரைக் குறித்து கொடுக்கும் தகவல். ஆம், சில கணவர்கள் நல்லவர்கள்தான். அன்பானவர்கள்தான். ஆனால், மனைவியிடம் பேசிக் கொண்டிருக்கும் பழக்கம் இல்லாதவர்கள்.

அநேகர் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இப்படியே இருக்கின்றனர். அவர்கள் தேவனை ஆராதிக்கிறார்கள். தேவனை நேசிக்கின்றார்கள். தேவனுக்காகப் பல காரியங்களைச் செய்கின்றார்கள். ஆனால், தேவன் தங்களிடம் எதையாவது தனிப் பட்ட முறையில் சொல்லி அறிந்ததில்லை. அவர்கள் கர்த்தர் தங்களோடிருப்பதாகச் சொல்கின்றனர். ஆனால், தங்களிடம் கர்த்தர் பேசின, பகிர்ந்துகொண்ட அனுபவம் எதுவும் இல்லை. அவர்கள் கர்த்தரைக் குறித்து, அறிந்தவை யாவும் பாஸ்டர்களும், சுவிசேஷகர்களும், போதகர்களும் பேசினவையே. தங்களின் தனிப்பட்ட வாழ்க் கையில் தேவ சத்தம் கேட்கும் அனுபவம் இல்லை.

ஆனால், ஆவிக்குரிய வாழ்க்கை அப்படி இராது. சில கணவர்களுக்கு பேசிப் பழகும் பழக்கம் இல்லாமலிருக்கலாம். சில மனைவிகளும் அப்படியிருக்கலாம். ஆனால் கர்த்தர் யாருடன் ஐக்கியமாயிருக்கிறாரோ அவர்களோடு பேசுகிறவர். அவர் பேசும் தெய்வம். நான் உனக்குப் போதித்து நீ நடக்கும் வழியைக் காண் பிப்பேன் என்று கூறும் தெய்வம். அவரோடு ஐக்கியமாயிருக்கிற எவரும் தங்க ளோடு தேவன் தனிப்பட்ட முறையில் பேசுவதைக் கேட்காமல் இருக்க முடியாது. கர்த்தர் பேசுகிறார் என்றால் காது கேட்கப் பேசுகிறார், சொப்பனத்தில் பேசுகிறார், தரிசனத்தில் பேசுகிறார் என்பதாகத்தான் இருக்கும் என கூற இயலாது.

கர்த்தர் நம்முடைய ஆத்துமாவில் பேசுகின்றார். நம்முடைய ஆவியில் பேசு கின்றார். சில விஷயங்களை நமக்குள் நாம் அறியச் செய்கின்றார். சில விஷ யங்களை நமக்கு உணர்த்துகின்றார். சில விஷயங்களை நாம் புரிந்துகொள்ளச் செய்கின்றார். சில விஷயங்களை நாம் சரியாக யோசித்து அறியச் செய்கின்றார். பிறருடைய பிரசங்கங்கள் மூலமாக மட்டும் அல்ல, நம்மோடு தனிப்பட்ட முறையில் இவ்விதம் செயல்படுகின்றார்.

சிந்தனைக்கு...

ஆயிரம் போதகர்கள் பேசிக் கேட்டாலும்
ஆண்டவரின் சத்தம் இருதயத்தில் கேட்டால்தான் வாழ்க்கை மாறும்.

ஜனவரி 10

ஜீவ நீரோடை

கிறிஸ்தவர்களா இவர்கள்?

கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல் ...
பிலிப்பியர் 2:21

பிலிப்பியர் 2:12-30

பரிசுத்த வேதாகமம் கூறுகின்ற சத்தியத்தின்படி கிறிஸ்தவத்தைப் புரிந்து கொண்டு வாழ்கின்ற கிறிஸ்தவர்களை இன்று காண்பது அரிதாகிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவ நம்பிக்கை என்பதும், கிறிஸ்தவ பக்தி என்பதும் கர்த்தரிடத்திலிருந்து சில நன்மைகள் பெறுவது தொடர்பானதாகவே பார்க்கப்படுகிறது. ஏதாவது ஒரு விதத்தில் கடவுளின் ஆசீர்வாதத்தைப்பெறுவது மட்டுமே பலருடைய பக்தி ஆர்வமாக உள்ளது. ஜெபம், வழிபாடு, ஜெபக் கூடுகை, காணிக்கை, விசுவாசம் என எந்த ஒன்றும், ஒரு தேவ நன்மையைப் பெறுவதற்கான வழிகளாகவே சிந்திக்கப்படுகின்றன.

பரிசுத்தம், அர்ப்பணிப்பு, நற்குணங்கள், சுத்த மனசாட்சி, சாட்சியாக வாழ்தல் என்பது தொடர்பான விஷயங்கள் தாமரை இலைமேல் தண்ணீர் போலவே பலருடைய இருதயங்களோடு எந்தப் பிணைப்பும் இன்றி இருக்கிறது. கடவுளிடமிருந்து ஒரு நன்மை பெற எப்படி ஜெபிக்கலாம். எப்படி விசுவாசிக்கலாம், எப்படிக் கொடுக்கலாம், எந்த ஜெபக்கூட்டம் போகலாம், எந்த தேவ ஊழியரைப் பார்க்கலாம் என்ற விதமாகவே பலர் யோசிக்கின்றனர். மனந்திரும்பி வாழ வேண்டும், தேவ உறவோடு வாழ வேண்டும், நற்சுபாவங்களோடு வாழ வேண்டும், என்பது போன்ற சத்தியம் சார்ந்த சிந்தை பலரிடம் இல்லவே இல்லை.

கிறிஸ்தவ விசுவாசிகளாக தங்களை எண்ணுகின்ற பலருக்குப் பரிசுத்தமான வாழ்க்கை என்பது பேசும் பொருளாகவும், கேட்கும் பொருளாகவும் மட்டுமே உள்ளது. அது வாழ்விற்குத் தேவையான பொருளாகப் பார்க்கப்படவில்லை. தேவனுடைய வழிகளை அறிதல் என்பதும், தேவ சத்தியத்தைப் புரிதல் என்பதும், தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வது என்பதும் பலருக்குத் தேவையற்ற மதபோதனைகளாகவே உள்ளது. தேவனுடைய திட்டங்களை அறியவோ, தேவ வார்த்தைகளின் மேன்மையை உணரவோ அநேகருக்கு சற்றும் வாஞ்சை இல்லை.

வல்லமை, அற்புதம், அபிஷேகம், பரவசம், தீர்க்கதரிசனம், வாக்குத்தத்தம், ரகசியங்கள் அறிதல் என்பது போன்ற விஷயங்களை நோக்கி விசுவாசிகள் அதிக ஆவலோடு செல்கின்றனர். ஆனால், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ள, வேதம் கூறும் பரிசுத்த தகுதிகள் என்ன என்பதை அறிந்து நாடும் நுண்ணுணர்வே இல்லாமல் போய்விட்டது. இரட்சிப்பு, பரிசுத்தம், நித்திய வாழ்வு ஆகியவற்றிற்காக இயேசுவை ஜனங்கள் தேடவில்லை. அற்புதம், அதிசயம், வல்லமை ஆகியவையே தேடப்படுகின்றன.

சிந்தனைக்கு...

தேவன் விரும்புகிறவைகளை நீ முதலாவது தேடு.
நீ விரும்புவது நீ தேடாமலே உன்னைத் தேடி வரும்.

ஜனவரி
11
ஜீவ
நீரோடை

பெரிய இழப்பு

யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்... 2 சாமுவேல் 1:26

1 சாமுவேல் 1:17-27

கடந்த ஆண்டு (2021) சென்னை தாம்பரம் பகுதியைச் சேர்ந்த எசேக்கியேல் பீட்ஸ் என்ற ஓர் அருமையான மனிதர் மரித்துப் போனார். அவர் கடைசி வரை என்னையும் என்னுடைய ஊழியங்களையும் அதிகமாக நேசித்தவர். அவருடைய இறுதி அடக்க நிகழ்வுகளில் கலந்துகொண்டு திரும்பும் வேளையில் என்னிடமிருந்த மணிபர்ஸ் தொலைந்திருந்ததை அறிந்தேன். சில ஆயரம் ரூபாய், ஓட்டுனர் உரிமம் மற்றும் வங்கி டெபிட் கார்டு போன்றவை தொலைந்து போய்விட்டது. சற்று நேரம் அது கொஞ்சம் வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால், இழக்கப்பட்ட அவற்றைக் குறித்த வருத்தம் விரைவாக மறைந்து போனது. ஆனால், ஒரு அன்பான மனிதரை இழந்த அந்த வருத்தம் இப்பொழுதும் மனதில் அப்படியே இருக்கிறது.

பணம், பொருள் என எது இழக்கப்பட்டாலும் அவை திரும்பிப் பெறத்தக்கவையே. ஆனால், நல்ல உறவுகள் இழக்கப்பட்டால், அதனுடைய நஷ்டம் ஈடு செய்ய இயலாதது. ஆம், எல்லாச் சொத்துக்களைவிட அதிக முக்கியத்துவம் பெற வேண்டியவை நல்ல உறவுகளே. யோனத்தான் யுத்தத்தில் மரித்தபோது தாவீது மிகவும் துக்கமடைந்தான். யோனத்தானே உனக்காக நான் வியாகுலப்படுகிறேன் என்றான். (1 சாமுவேல் 1:26) ஆம், ஒரு நல்ல உறவின் இழப்பு மிகப்பெரிய நஷ்டமாக அவனால் பார்க்கப்பட்டது.

சிலர் தங்களின் நல்ல உறவுகளை இழந்தபின்பு அதற்காக மிகவும் வியாகுலப்படுகின்றனர். தங்களோடிருந்த ஒரு உறவு இழக்கப்பட்டதின் விளைவான நஷ்டங்களை நினைத்துப் பார்த்து மிகவும் வருத்தப்படுகின்றனர். அதேவேளையில், தங்களோடிருக்கும் உறவுகளின் மதிப்பையும் அவசியத்தையும் அநேகர் அவர்கள் வாழ்கின்ற நாட்களில் உணருவதில்லை. சில விஷயங்களினால் ஏற்பட்ட ஒரு கருத்து வேறுபாடோ, வெறுப்புணர்வோ அந்த உறவுகளை முக்கியமற்றதைப் போல பார்க்கச் செய்து விடுகிறது. இல்லையென்றால், அந்த உறவுகளின் அவசியத்தைச் சரியாக உணரவிடாமல் செய்து விடுகிறது.

ஒருவர் தன்னிடமிருந்த மொபைல் போன் சில விஷயங்களில் சரியாகச் செயல்படாததால், சே! இதெல்லாம் ஒரு ஃபோனா, சே, இதை எங்கேயாவது தூக்கி வீசி விடலாம் போலிருக்கிறது என்று எரிச்சலோடு புலம்புவார். ஒருநாள் அது எங்கேயோ தெலைந்து போனது. ஆனால், அதற்குப் பின்பு அந்த ஃபோனையே நினைத்து நினைத்து புலம்ப ஆரம்பித்தார். ஏனென்றால், அந்த ஃபோனில் நிறைய விஷயங்களை அவர் பதிவு செய்து வைத்திருந்தார். ஆம், நல்ல உறவுகளோடு வாழ்கின்ற காலத்தில் அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாழ்வோம்.

சிந்தனைக்கு...

வாழ்கின்றபோது வாழ்த்துக் கூறாதவர்கள்,
அவர்கள் மரித்தபின் அஞ்சலி செலுத்துவது ஒரு மாய்மாலமே.

ஜனவரி

12

ஜீவ நீரோடை

உண்மையினால் உயர்வு

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்... சங்கீதம் 126:5

சங்கீதம் 105:1-24

சிலருடைய உண்மையும் நேர்மையும் இல்லாத செயல்பாடுகள், அவர்கள் விரும்பிய பல உயர்வுகளையும் நல்ல பல வசதிகளையும் பெற்றுக் கொடுக்கின்றன. ஆனால், அந்த உயர்வுகளுக்குப் பின்னாலும், வசதிகளுக்குப் பின்னாலும் ஒரு நிச்சயமற்ற நிலைமை பின்தொடர்ந்து கொண்டேயிருக்கும். அது தலைக்கு மேல் தொங்குகின்ற கத்தி போன்றது. சிலவேளை அது நீண்ட காலம் எந்த ஒரு பிரச்சினையும் தராமல் போகலாம். ஆனாலும், ஒரு எதிர்பாராத ஆபத்திற்கான வாய்ப்பு பின்னால் வந்து கொண்டேயிருக்கும். முழு நம்பிக்கையோடும் நிச்சயத் தோடும் தவறான வழிகளில் வந்த உயர்வுகளை அனுபவிக்க இயலாது.

அதே வேளையில், உண்மையை முக்கியப்படுத்தி வாழ்கின்ற சிலருக்கும், தேவனுக்குப் பிரியமாக வாழ விரும்புகின்ற சிலருக்கும், சில நஷ்டங்களும் கஷ்டங் களும் ஏற்பட வாய்ப்புண்டு. தேவனுக்கேற்ற நேர்மையின் விளைவாக, அவர் களுக்கு நியாயமாக வரவேண்டிய உயர்வுகள் தடுக்கப்பட்டிருக்கலாம். உண்மை யின் விஷயத்தில் சமரசம் செய்யாமல் சரியாக நின்றதால், செல்லப் பிள்ளையாக வாழ்ந்த யோசேப்பு அடிமையாக மாற நேர்ந்தது.

ஆயினும், அந்தப் பாதகமான விளைவுகள் ஒருநாள், மிகப்பெரிய சாதகமான ஒரு சூழ்நிலைக்கு அவர்களைக் கொண்டு சென்றது. அவர்கள் பட்டபாடுகளும் கஷ்டங்களும் ஒரு நாள் அவர்களுக்கு மிகப்பெரிய லாபங்களாக மாறின. தலை கவிழ நேரிட்டது போல ஒரு காலம் இருந்தது. ஆனாலும், ஒரு நாள் அவர்களை தேவன் தலைநிமிர்ந்து நிற்க வைத்தார். கர்த்தருக்காக ஒரு கடினமான பாதையில் நாம் நடக்க நேரிட்டாலும், அது ஒரு ஆசீர்வாதமான உயர்நிலைக்கு நம்மை நிச்சயம் கொண்டு செல்லும். இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசித்துச் செல்லும் பாதை சிரமமானதுதான். ஆனால், அந்தச் சிரமப் பாதையில் கர்த்தர் உடன் வருவார். அது நம்மை ஒருநாள் நாம் நினைத்து தேவனைத் துதிக்கும்படியான ஒரு சூழலுக்கே கொண்டு செல்லும்.

கண்ணீரோடு விதைக்கிறவன் ஒருநாள் கம்பீரமாய் அதனுடைய பலனை அனுபவிப்பான். அதே வேளையில், சத்தியத்தை அவமதித்து, நேர்மையற்ற வழிகள் கொடுத்த உயர்வுகளில் மகிழ்ந்திருப்பவர்களின் சந்தோஷம், எப்போது துக்கமாக மாறும் என்று கூற இயலாது. வாழ்க்கையில் திருப்தியான ஒரு மனநிலையோடு அவற்றை அனுபவிப்பது கடினம். ஒரு சிறு நெருக்கடி வரும் போதும், அவர்களின் மனம் கடந்த காலத்தை நினைக்கும்படியாக அவர்களைக் குற்றப்படுத்தும்.

சிந்தனைக்கு...

உண்மையை இழந்து உயர்ந்தவனைவிட,
உண்மையின் நிமித்தம் உயர்வை இழந்தவன், அதிக திருப்தியுடையவன்.

ஜனவரி

13

ஜீவ நீரோடை

பெரிய மனம்

மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.
2 கொரிந்தியர் 8:2

2 கொரிந்தியர் 8:1-16

சிலர் தங்களிடம் ஏராளமான பொருட்களை வைத்திருப்பார்கள். அவற்றில் சில பொருட்கள் அவர்களுக்குத் தேவையில்லாதவை. ஆயினும், ஒரு சிறு தேவையற்ற பொருளைக்கூட யாருக்கும் தரமாட்டார்கள். ஒரு முறை ஒரு வசதியான நபரின் வீட்டிற்குச் சென்ற போது, அங்கு ஏராளமான பழைய பொருட்கள் குவிந்திருந்தன. அது ஏதாவது ஒரு விதத்தில் தங்களுக்குத் தேவைப்படும் என்ற எண்ணத்தில் யாருக்கும் தராமல் குவித்து வைத்திருந்தார்கள். அந்தப் பழைய பொருட்களின் குவியலைப் பார்த்த போது, அவர்கள் எவ்வளவு கஞ்சத்தனமான சின்ன மனதுக்காரர்கள் என்பதை உணர முடிந்தது.

அதே வேளையில் எனக்கு ஒரு எளிய குடும்பத்தினரைத் தெரியும். அவர்களின் வீட்டில் மிகவும் குறைவான பொருட்களே இருக்கும். அதற்கு முக்கியமான காரணம், அவர்களுக்கு அவசியமானதாயிருக்கும் பொருட்களைக்கூட யாருக்காவது தேவையென்றால் தாராளமனதோடு கொடுத்துவிடுவார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் இருந்தாலும் பெரிய மனம் இருந்தது. மக்கெதோனியா திருச்சபையார் மிகுந்த வறுமை நிலமையின் நடுவிலும், தங்களின் பரிபூரண சந்தோஷத்தினாலே எருசலேம் சபையாருக்கு மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.

சிலர் தசமபாகம் கொடுப்பதில் மிகவும் கவனமாயிருப்பார்கள். கர்த்தருக்காகக் கொடுக்க அவர்களுக்கு நல்ல மனத்தாராளம் உண்டு. ஆனால், தேவையிலுள்ள ஒருவருக்கு ஒரு சிறு உதவி செய்ய அவர்களின் மனம் இடம் தராது. இது ஒரு பரிசேயத்தனமான பக்தி. அநேகர் சபைகளுக்குக் காணிக்கை கொடுத்தால் ஆசீர்வாதம் வரும் என்று நம்புகின்றார்கள். ஆனால், காணிக்கை உபதேசத்தைவிட வேதாகமத்தில் எளியோரைத் தாங்குவது தொடர்பான உபதேசமே அதிகமாக உள்ளது. ஆனால், இவர்களுக்கு அந்த விஷயத்தில் நம்பிக்கை இல்லை. நன்மை செய்யத் திராணியிருந்தும் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் போனால், அது பாவமாக மாறும். என்று வேதம் சொல்கிறது.

கர்த்தர் நமக்குக் காண்பிக்கும் அன்பும், கிருபையும், அளவில்லா தவை. அவற்றை நாம் முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் நாம் பிறருக்கு நம்முடைய மனதை தாராளமாகத் திறக்க வேண்டும். தாவீதின் நெருக்கடியான ஒருவேளையில் பர்சிலா என்பவன் ஏராளம் பொருட்களை தாவீதுக்காகக் கொண்டு வந்து, தன்னுடைய தாராள மனதை வெளிப்படுத்தினான். ஒரு நாள் அவனுடைய மகன் ராஜாவாகிய தாவீதோடு ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் அளவிற்கு அதிக கனம் பெற்றான்.

சிந்தனைக்கு...

செல்வம் பெருகப் பெருக ,சிலருடைய மனமோ இன்னும் இன்னும் சின்னதாகிறது.

ஜனவரி
14
ஜீவ நீரோடை

விரும்பி கனப்படுத்துதல்

உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி... எபேசியர் 5:19

எபேசியர் 5:1-21

தேவன்மேல் நமக்கிருக்கும் பக்தியையும், அன்பையும், கனத்தையும் தேவனுக்கு நாம் தெரியப்படுத்துகின்ற ஒரு செயல்தான் வழிபாடு. வழிபாடு, ஆராதனை, தொழுகை என எந்த ஒரு செயலும் தேவன்மேல் நமக்கிருக்கும் பக்தியையும் அன்பையும் அவருக்கு நேரடியாகத் தெரிவிக்கின்றவையே. நாம் பாடல், துதி, ஜெபம், விசுவாச அறிக்கை என பல விதங்களில் அதனை தேவனுக்குக் காண்பிக்கலாம். ஆனால், அவை வெறும் சடங்குகளாகவும், மார்க்க சம்பந்தமான கடமை களாகவும் இருப்பதை தேவன் விரும்புவதில்லை.

ஒரு பெரிய அதிகாரிக்கோ அல்லது சமுதாயத்தில் உயர்நிலையில் இருக்கின்ற ஒருவருக்கோ நாம் பெரிய ஒரு மரியாதையைக் கொடுக்கலாம். ஆனால், அந்த மரியாதை நாம் விரும்பிக் கொடுக்கின்ற ஒன்றாயிராமல், சம்பந்தப்பட்ட நபர் அதை விரும்புகிறார் என்பதற்காக நாம் கொடுக்கலாம். அது போல தேவனிடத்தில் நாம் பக்தி காட்டுகிறோம். அவரை நாம் மிகுதியாகக் கனப்படுத்துகிறோம். ஆனால், அவை நமது உண்மையான விருப்பமாக இராமல், தேவனுக்கு அவை விருப்பமாயிருக் கிறது என்று எண்ணியச் செய்ய முடியும். அநேகர் தேவனைக் கனப்படுத்துவது அவர்களின் உண்மை விருப்பமல்ல. அப்படிச் செய்வதை தேவன் விரும்புகிறார் என்று எண்ணி ஒரு பயத்தின் விளைவாகவே செய்கின்றனர்.

குறிப்பிட்ட திருச்சபையின் குருவானவர், தன்னுடைய சபையில் நடந்த விசேஷ நிகழ்விற்கு அழைக்கப்பட்டிருந்தப் பேராயருக்குப் பெரிய வரவேற்பும் கனமும் கொடுத்தார். ஆனால், அந்தக் கனமும் வரவேற்பும் மரபு சார்ந்தது. அது அவருடைய விருப்பம் அல்ல. ஏனென்றால், இந்தக் குருவானவர் அந்தப் பேராயர் தேர்தலில் ஜெயிக்கக்கூடாது என மிகத் தீவிரமாக வேலை செய்தவர். ஆம், தேவனையும் நம்முடைய வாழ்க்கை முறைகளினால் எதிர்த்துக்கொண்டு, பக்திக் கடமைக்காக பெரிய வழிபாட்டுக் கனத்தைத் தர முடியும்.

கர்த்தருக்கு நாம் விரும்பி வழிபாடு செலுத்துவதை எப்படி உறுதிப்படுத்துவது? அவர் கனப்பட வேண்டும் என்பது நம்முடைய உண்மையான விருப்ப மாயிருந்தால், அவர் விரும்புகின்ற விதமாக முதலாவது அவரை நமக்குள் இரட்சகராக விசுவாசத்தினால் பெற வேண்டும். அவருடைய ஐக்கியத்தை அனுதினமும் தேட வேண்டும். அவர் விரும்புகின்ற விதமான சுபாவங்களோடு வாழ்ந்திட கிருபை கேட்க வேண்டும். கர்த்தருக்கு நாம் நல்ல சாட்சிகளாக வாழ்ந்து காட்டுவதுதான் அவரைக் கனப்படுத்துவதின் பெரிய அடையாளம்.

சிந்தனைக்கு...

ஆரவாரமான உன்னுடைய ஆராதனையை விட,
அமைதியான உன்னுடைய வாழ்க்கைமுறையே தேவனைக் கனப்படுத்தும்.

ஜனவரி 15

ஜீவ நீரோடை

வெறுப்பை மறைப்பது அல்ல

சகலவிதமான கசப்பும், கோபமும்... நீங்கக்கடவது
எபேசியர் 4:31

எபேசியர் 4:17-32

உறவினர் ஒருவர்மேல் கிறிஸ்தவ நண்பர் ஒருவருக்கு பெரிய அளவில் வெறுப்பு இருந்தது. ஏனென்றால், அந்த உறவினர் இவருக்கு அநீதியான ஒரு காரியத்தைச் செய்திருந்தார். ஆயினும், யாரையும் வெறுக்கக்கூடாது. பகைக்கக் கூடாது என்று இவர் சபையில் கேட்ட பிரசங்கங்களினால் வெறுப்பை விட்டுவிட விரும்பினார். அதன் பிறகு, அந்த உறவினரைக் குறித்த வெறுப்புடனோ கோபத் துடனோ இவர் எதையும் சொல்வதில்லை. அதே வேளையில், அந்த உறவினரை அவர் இயன்ற மட்டும் சந்திக்காமல் தவிர்த்துவிடுவார்.

ஆம், அவர் வெறுப்பு என்பதை வெளிப்படுத்தாமல் மனதிற்குள் மறைத்தாரே யன்றி, அதனை தன்னிடமிருந்துவிலக்கவில்லை. சில நேரங்களில், நாம் எல் லோரைப் போல பிறரைக் குறித்த கசப்பையோ, கோபத்தையோ, வெறுப்பையோ எந்த விதத்திலும் பிரதிபலித்துக் காட்டுவதில்லை. ஆனால், அந்தக் கோபமும், வெறுப்பும் மனதிற்குள் அடக்கப்பட்டு மறைக்கப்படும். இதனால், மனரீதியான வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. வெறுப்பையும் கோபத்தையும் மறைப்பதல்ல. அவற்றை நம்மிடமிருந்து விரட்ட வேண்டும்.

யோசேப்பு தன்னுடைய பொல்லாத சகோதரர்களைக் குறித்த விஷயத்தில் வெறுப்பையும் கசப்பையும் காட்டவில்லை. அதே வேளையில், தன்னுடைய மனதில் அவர்களைக் குறித்த கோபமும் வெறுப்பும் இல்லையென்பதை அவர்கள் அறிந்து கொள்ளும் விதமாகச் செயல்பட்டான். வெறுப்பைக் காண்பிக்காமல் நிறுத்தியதோடு, அவர்களுக்கு அன்பையும் காண்பித்தான். அவர்களுக்குத் தேவை யான நன்மைகளைச் செய்தான். அவற்றின்மூலம் அவர்கள்மேல் அவனுக்கு எந்த மனக்கசப்பும் இல்லை என்பதை அறியச் செய்தான். சவுல் ராஜாமேல் வெறுப்பாயிருப்பதற்கு தாவீதுக்கு நிறைய நியாயங்கள் உண்டு. ஆயினும், அவன் சவுலை வெறுக்கவில்லை. வெறுக்காததோடு அவன்மேல் தனக்கிருந்த அன்பை சவுல் மரித்தபோது மிகுதியாக வெளிப்படுத்தினான்.

சிலர் விஷயத்தில் நாம் மனதளவில் வெறுப்பும் கசப்பும் இல்லாமலிருப்பது கடினமான காரியமாயிருக்கும். அவர்கள் செய்ததையும் சொன்னதையும் எப்படி மறக்க முடியும் என்ற கேள்வி இருக்கும். ஆனால் கசப்பும், வெறுப்பும், கோபமும் மனதில் இருக்கக் கூடாது என்பது அவர்களுக்காக அல்ல. நமக்கு அவை நல்லவை அல்ல. அவை நமது சமாதானத்தின் எதிரிகள். எனவே, தேவ கிருபையைத் தேடி அவற்றை நம்மை விட்டு அகற்றுவது நமக்கு நல்லது.

சிந்தனைக்கு...

தேவ அன்பை இருதயத்தில் உணர்ந்தவர்கள்,
மனிதர்களைக் குறித்த கசப்பைக் களையாமல் காப்பது கடினம்.

ஜனவரி

16

ஜீவ நீரோடை

பிரயோஜனமில்லாத புத்தகம்

இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது... உபாகமம் 6:6

உபாகமம் 6:1-14

ஒரு தகப்பன் தன் மகனிடம் வீட்டில் அதிகப் பிரயோஜனமில்லாமல் குவிந்து கிடக்கின்ற புத்தகங்களை அகற்றும்படி கூறினான். மகன் தேவையில்லாத புத்தகங்களை வீட்டைவிட்டு அகற்றும்போது, பரிசுத்த வேதாகமத்தையும் மற்றவை களோடு அகற்றிவிட்டான். அவனுடைய தகப்பன் அதை அறிய வந்தபோது மிகவும் ஆத்திரப்பட்டான். பரிசுத்த வேதாகமம் எவ்வளவு பிரயோஜனமானது. அதை தேவையற்ற புத்தகங்களோடு சேர்த்து அகற்ற உனக்கு எப்படி துணிச்சல் வந்தது என்று கேட்டார். அதற்கு மகன் அப்பா இத்தனை வருடமாக நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படித்து, என்ன பிரயோஜனத்தைக் கண்டீர்கள்? இதனைப் படிக்காத வர்களை போலவே நீங்களும் இருக்கிறீர்கள் என்றான்.

ஆம், அந்தக் குடும்பத்தில் பரிசுத்த வேதாகமத்தை நீண்டகாலமாக மிகவும் மரியாதையுடன் வைத்திருக்கின்றனர். ஆனால், அந்த வேதாகம வார்த்தைகளால் எந்தப் பலனையும் விசேஷமாக அவர்கள் பெறவில்லை. ஒரு மத நம்பிக்கை சார்ந்த நூலாக அது அங்கு இருந்தாலும், அதனால் யாரும் வாழ்க்கை மாற்றம் காணவில்லை. உலகப்பிரகாரமான புத்தகங்களைப் படிக்கின்ற பலர், உலகத்துக்கு ஏற்ற பல மாறுதல்களை காண்கின்றனர். கல்வி சம்பந்தமான புத்தகங்களைப் படிக்கின்றவர்கள் பட்டதாரிகள் ஆகின்றனர். அதனால் நல்ல வேலை பெறுகின்றனர். ஆனால், பரிசுத்தமான வேதாகமமோ அனேகரால் படிக்கப்பட்டும் அவற்றின் பலனை எல்லோரும் பெறவில்லை.

பரிசுத்த வேதாகமம் கூறுகின்ற கர்த்தரை நாம் பெற்றுக் கொண்டோமா? பரிசுத்த தேவ வார்த்தைகளால் நாம் சுபாவங்களில் மாற்றம் பெற்றோமா? பரி சுத்தமான வேதாகம வார்த்தைகளால் வாழ்க்கை பரிசுத்தமாக வேண்டும். பரிசுத்த வேதாகம வார்த்தைகளால் நாம் சீர்பெற்ற மக்களாக மாறவேண்டும். பரிசுத்த வேதாகம வார்த்தைகளால் நாம் நித்திய நம்பிக்கை பெற வேண்டும்.

அநேகர் பரிசுத்த வேதாகமத்தை மதிப்பிற்குரிய ஒரு பொருளாக தங்கள் இல்லத்தில் வைத்திருக்கின்றனர். ஆனால், அதில் எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு உரிய மரியாதையைத் தருவதில்லை. அநேகர் பைபிளை வீட்டில் வைத்திருப்பதை ஆசீர்வாதமாக எண்ணுகின்றனர். ஆனால், அந்த பைபிளில் உள்ள தேவ வார்த்தைகளை தங்களின் இருதயத்தில் வைத்திருப்பதுதான் ஆசீர்வாதம் என்பதை அறிவதில்லை. ஆம், வேதாகமத்தை மதிப்பிற்குரிய ஒரு பொருளாக அல்ல. மிகவும் பிரயோஜனமான ஒன்றாக எண்ணிப் பயன்படுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

பக்தியுடையோர் வேதாகமத்தை மதிக்கின்றனர்,
தேவனை உடையோர் வேதாகமத்தால் மதிக்கத்தக்கவர்களாய் மாறுகின்றனர்.

ஜனவரி 17 ஜீவ நீரோடை

தோற்றத்தால் பொய்

தங்களின் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி... மத்தேயு 23:5

மத்தேயு 23:1-15

கிறிஸ்தவர் ஒருவர் கிறிஸ்தவ பக்திக்காக வெள்ளை நிற உடை களையே அணிவார். எப்பொழுதும் கையில் பைபிள் வைத்திருப்பார். சட்டை யில் வேத வசன பாட்ஜ் பொருத்தியிருப்பார். சபை, ஆராதனை, ஜெபக் கூடுகை என தவறாமல் செல்வார். ஆனால், இவருக்கு புகைப் பழக்கம் உண்டு. ஒரு சினிமா விடாமல் பார்ப்பார். வாலிப வயதினரைப்போல ஸ்மார்ட் போனில் கேம்ஸ் விளையாடிக் கொண்டேயிருப்பார். எல்லாவித உலகப்பிரகார பொழுது போக்குக் கேளிக்கை களிலும் ஈடுபடுவார். அவருடைய மனைவி, இப்படி பரிசுத்தவானைப் போல வெள்ளை வெள்ளையாய் உடுத்திக் கொண்டு கறுப்பு கறுப்பாக பாவம் செய்யலாமா என்று கேட்பாராம். அதற்கு அவர், உன்னிடம் எப்பொழுதாவது நான் என்னை பரிசுத்தவான் என்று சொன்னேனா என்று கேட்பாராம்.

இவருடைய தோற்றமும், சபை ஈடுபாடுகளும் இவரைப் பரிசுத்தவான் என்று தான் பிறரைப் பார்க்க வைக்கும். இவர் வாயினால் தன்னைப் பரிசுத்தவான் என்ற பொய் சொல்லவில்லை. ஆனால், தனக்கு அவர் ஏற்படுத்திக் கொள்ளும் தோற்றத்தால் இவர் மௌனமாக பொய் சொல்லுகின்றார். வாயினால் சொல்வது மட்டுமே பொய் அல்ல. நாம் நமக்கு ஒரு விதமான தோற்றத்தைக் கொடுக்கும் போது, அது நாம் மேன்மையானவர்கள் என்று சொல்லாமல் சொல்லும். அவ்விதம் நாம் இராமல் போகும்போது, அதுவும் ஒரு பொய் அனுபவமே.

ஒருவர் தன்னை பூரண சுவிசேஷ விசுவாசி என்றாராம். அவரை அறிந்திருந்த ஒருவர் பூரண சுவிசேஷம் மாய்மாலத்தை நம்புகிறதா என்று கேட்டாராம். ஆம், அவர் எல்லாவிஷயத்திலும் பூரணம் என்ற வார்த்தையை உபயோகிப்பார். ஆனால், அவருடைய பல செயல்களில் பாதி பரிசுத்தத்தைக் காண இயலாது. அக்கால வேத பாரகர்களும், பரிசேயர்களும் எல்லா விதத்திலும் தங்களுக்கு விசேஷமான பக்தித் தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் வாழ்க்கை முறையோ வித்தியாசமானது.

எனவே, இயேசு அவர்களை மாயக்காரர்கள் என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும் கூறினார். நாம் ஜெபிக்கும் விதங்களும் ஆராதிக்கும் விதங் களும், இயேசுவைப் பிரச்சாரம் பண்ணும் விதங்களும் நம்மைக் குறித்த உயர்ந்த எண்ணத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கும். நாம் நம்மை அங்கே பரிசுத்த வான்கள் என்று அறிமுகம் செய்யாவிட்டாலும், காண்போரின் கண்களுக்கு அப்படித் தோன்றும். நாம் அவ்விதம் இராமல் போனால் தேவ நாமம் தூஷிக்கப்படும்.

சிந்தனைக்கு...

பக்தியாய்த் தோன்றும் போதெல்லாம், உன்னிடம் பிறர் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பது இயல்பானதே.

ஜனவரி

18

ஜீவ நீரோடை

திருப்தி

போதுமென்கிற மனதுடனே கூடிய...
1 தீமோத்தேயு 6:6

1 தீமோத்தேயு 6:1-12

ஓவியக் கல்லூரியில் பயின்று வெளியே வந்தனர் இருவர். ஒருவர் கவர்ச்சியான படங்களை வரைந்து விரைவில் பெரிய பணக்காரன் ஆகிவிட்டார். இன்னொருவர் சிறந்த கருத்துக்களைச் சொல்லும் படங்களை மட்டுமே வரைவார். ஆனால், அவருக்கோ சம்பாத்தியம் மிகவும் குறைவு. அவரிடம் சிலர், உங்கள் நண்பர் உங்களைப் போல ஓவியக்கலை கற்றுவிட்டு நல்ல வசதியாகிவிட்டாரே. நீங்கள் மட்டும் சாதாரண நிலையில் இருக்கின்றீர்களே என்று கேட்பார்கள். அதற்கு அவர், என் நண்பனுக்கு நிறைய சம்பாதிப்பதில் திருப்தி. எனக்கோ சிறந்த கருத்துக்களை ஓவியம் மூலம் வெளிப்படுத்துவதிலே திருப்தி. நான் என்னுடைய நிலையில் திருப்தியாயிருக்கிறேன் என்றார்.

வாழ்க்கையில் திருப்தி என்பது நாம் எதை விரும்புகின்றோமோ அதனுடைய அடிப்படையில்தான். நிறைய சம்பாதிப்பதால்தான் திருப்தி என்பது உண்மை அல்ல. சாலொமோன் ராஜா நிறைய நிறைய சுகபோகங்களில் திருப்தியடையும் விதமாக தன்னுடைய மனதை வைத்திருந்தான். ஆனால், அந்த திருப்தியை அவனால் எட்டவே முடியவில்லை. அவன் எல்லாம் மாயை என்றான். அப்போஸ்தலனாகிய பவுலுக்கோக் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுவதிலே திருப்தி. எனவே மிகுந்த பணம் பொருள் இல்லாத சாதாரண நிலையிலும் அவன் திருப்தியாயிருந்தான்.

பணம், பொருள், அந்தஸ்தின் அடிப்படையில் நாம் நம்முடைய திருப்தியை உணர விரும்பினால், சரியான வழிகளில் தொடர முடியாது. கர்த்தரை விசுவாசிக் கின்றவர்கள் சரியான விஷயங்களில் திருப்திகாணும் மனநிலை உடையவர் களாயிருக்க வேண்டும். நான் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்கின்றேன். நான் சரியான ஒரு நோக்கத்தை நோக்கிச் செல்கின்றேன் என்பது போன்ற விஷயங் களில் நாம் அடையும் திருப்திதான் மேன்மையானது. பணம் பொருள் சார்ந்து திருப்தியடைதல் நம்மை சரியற்ற வழிகளில் போகத்தூண்டும்.

போதும் என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்றான் அப்போஸ்தலனாகிய பவுல் (1தீமோத்தேயு 6:6) தேவ ஐக்கியத்தோடும், தேவனுக்கு உகந்த வாழ்க்கையோடும் வாழ்வதில் ஒரு பெரிய சந்தோஷம் உண்டு. அந்த சந்தோஷத்தை உணர்ந்து பழகிவிட்டால் திருப்தியான வாழ்க்கைக்கு நிறைய பணமும், நிறைய சௌகரியமும் தேவைப்படாது. தேவன் அனுமதித்த சூழ்நிலை சிறிதானாலும் பெரிதானாலும், மனம் தேவ உறவு தரும் சந்தோஷத்தினால் நிறைவாகயிருக்கும்.

சிந்தனைக்கு...

சரியற்ற வழிகளில் இன்று நாம் காணும் சந்தோஷம்,
சரி செய்ய இயலாத அளவிற்கு நாளை நமக்குச் சஞ்சலம் தரும்.

ஜனவரி

19

ஜீவ நீரோடை

நல்ல வார்த்தை, ஆனால்

கேட்கும் போது சந்தோஷத்துடனே வசனத்தை...
லூக்கா 8:13

லூக்கா 8:1-15

ஒருவர் நல்ல குணாதிசயங்கள் சம்பந்தமான பிரசங்கங்களை மிகுந்த ஆர்வத்தோடு கேட்பார். பொறுமை, தாழ்மை, சாந்தம், விட்டுக் கொடுத்தல் போன்ற நல்ல குணங்களின் தேவையை பாஸ்டர் விளக்கும் போது கவனச் சிதறலின்றிக் கேட்பார். பிரசங்கம் முடிந்ததும் பாஸ்டரிடம் போய் பாஸ்டர் இன்று செய்தி மிகவும் பிரயோஜனமாயிருந்தது என்று கூறி பாஸ்டரைப் பாராட்டுவார். ஆனால், அவருடைய மனைவியோ அடிக்கடி பாஸ்டரிடம் வந்து இவருடைய கோபத்தால், ஆத்திரத்தால், எரிச்சலால் குடும்பத்தில் தினமும் பிரச்சினை ஏற்படுகிறது என்பார்.

அநேகர் நல்ல விஷயங்களைக் கேட்கும் போது ஆசீர்வாதமாயிருந்தது, பிரயோ ஜனமாயிருந்தது என்று கருத்துச் சொல்வார்கள். ஆனால், அந்த ஆசீர்வாதமும் பிரயோஜனமும் பிரசங்கம் கேட்ட எல்லைக்குள்ளேயே முடிந்து போகிறது. வாழ்க்கை தொடர்பான நல்ல விஷயங்களை அநேகர் கேட்கின்ற நிலையில் மட்டுமே வைத்துக் கொள்கின்றனர். அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதில்லை. சிலர் நல்ல பொருட் களைப் பார்த்து விருப்பப்பட்டு வாங்கிவிடுவார்கள். ஆனால், அவற்றை உபயோகப் படுத்தாமல் வீட்டில் பத்திரமாய் வைத்துக் கொள்வார்கள். இதனால் என்ன பயன்?

சிலர், தங்களுடைய இருதயத்தில் விழுகின்ற நல்ல விதைகளாகிய நல்ல சத்தியங்களை, அவசியமானது என்று உணருவது உண்மைதான். ஆனால், நல்லது என்று உணர முடிந்தாலும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள இயல வில்லை. ஏனென்றால், அவர்களின் இருதயம் நல்ல நிலம் அல்ல. நல்ல நிலம் தான் விதைகளை முளைப்பிக்கும் ஆற்றல் உள்ளதாயிருக்கும். அநேகர் சுய முயற்சிகளைச் சார்ந்து கர்த்தருடைய நல்ல வார்த்தைகளைப் பின்பற்ற விரும்பு கின்றனர். ஆயினும், தங்களின் இருதயம் நல்லவைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான ஆவிக்குரிய நிலமையைப் பெறவில்லை என்பதைச் சிந்திக்கவில்லை.

கர்த்தருடைய நல்ல ஆலோசனைகளையும் நல்லதென்று கண்டு பின்பற்ற விரும்புவது நல்ல விஷயம்தான். ஆயினும், முதலாவது நல்ல நிலமாக நம்முடைய இருதயம் இருக்கிறதா என்ற சோதனையே மிகவும் அவசியம். முதலாவது, நாம் மனந்திரும்பினவர்களா? கர்த்தரை நாம் நமக்குள் ஏற்றுக் கொண்டவர்களா? இரட்சிப்பின் அனுபவத்தை விரும்பிப் பெற்றவர்களா? மறுபிறப்பின் நிச்சயம் அடைந்தவர்களா? என்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டும். ஏனென்றால் மறுபிறப்பின் அனுபவம் பெற்றவர்களின் இருதயம்தான் கர்த்தருடைய வார்த்தை களின்படி வாழ உதவும்.

சிந்தனைக்கு...

எத்தனை அருமையான பிரசங்கம் என்பதல்ல,
அதனைக் கேட்டவர்கள் எத்தனை அருமையாய் மாறினார்கள் என்பதே முக்கியம்.

ஜனவரி
20
ஜீவ நீரோடை

தாழ்வு மனப்பான்மை

அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்...
1 பேதுரு 2:9

1 பேதுரு 2:1-12

சிலர், சபைகூடுகைகளில் கலந்து கொள்வார்கள். ஆனாலும், பின் வரிசையில் யாருக்கும் தெரியாத அளவிற்கு அமர்ந்து விட்டு, யாருடனும் கலக்காமல் போய்விடுவார்கள். சிலர் எந்தப் பொது நிகழ்ச்சிக்குச் சென்றாலும் எங்காவது பலருடைய பார்வையில் விழாத விதமாக மறைந்து மறைந்து நிற்பார்கள். ஏனென்றால், ஒரு தாழ்வு மனப்பான்மை. நாம் எல்லோரைப்போல அந்தஸ்தில் இல்லை. நாம் பலரைப் போல நற்தோற்றத்தில் இல்லை. நாம் எல்லோரோடும் பழகுகின்ற அளவுக்கு தகுதியாக இல்லை. இது போன்றவைகளே அதன் காரணங்கள்.

சிலர் கல்வி, அந்தஸ்து, அழகு, வசதி என்ற அடிப்படை சார்ந்துதான் மற்றவர்களோடு பேசவும் பழகவும் செய்வார்கள். வசதியானவர்கள் வாழ்த்தினால் அவர்களை விழுந்து விழுந்து விசாரிப்பார்கள். ஆனால், எளிய நிலையில் உள்ளோர் வாழ்த்தினாலோ ஒரு பார்வை மட்டும் பார்த்துவிட்டு நகர்ந்துவிடுவார்கள். அதே வேளையில், மற்றவர்கள் மதித்தாலும் மதிக்காவிட்டாலும் நம்மை நாமே அற்பமாக எண்ணி தாழ்ந்து போகக்கூடாது. தாழ்மை என்பது நல்ல பண்பு. தாழ்வு மனப்பான்மை என்பது பண்பு அல்ல. அது ஒரு ஊனமான சிந்தனை.

மற்றவர்கள் நம்மை மதிக்கத் தவறலாம். அதே வேளையில், நாம் நம்மை நாமே மதிப்பற்றவர்களாகக் காண்பிக்கக்கூடாது. நாம் நம்மை நாமே பின் வரிசைக்குக் கொண்டுபோய், மற்றவர்களுக்கு முன்பு நம்மை தகுதியற்றவர்களாக அடையாளம் காட்டக்கூடாது. நாமே நம்மை அற்பமானவர்கள் என்றும், தகுதியற்றவர்கள் என்றும் அடையாளப்படுத்திக் காண்பித்தால், பிறர் நம்மை ஒரு பொருட்டாக எண்ண முடியாது. கர்த்தர் நம்மை பிள்ளைகள் என்கிறார். நாமோ நம்மை அற்ப தூசி என்கிறோம். தேவன் நம்மை பரிசுத்தவான்கள் என்று அழைக்க விரும்புகின்றார். நாமோ நம்மை பாவி என்று சொல்வதை பக்தி என எண்ணுகின்றோம். நம்மை தேவன் தம்முடைய சுதந்திரவாளிகளாக அழைக்கிறார். நாமோ நம்மை ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று சொல்லிக் காட்டுகிறோம்.

நாம் கர்த்தராகிய இயேசுவை இரட்சகராகப் பெற்றுக் கொண்டால், தேவனுடைய பிள்ளைகள் என்ற தெய்வீக அந்தஸ்தைப் பெறுகின்றோம். (யோவான் 1:12) அது வெறும் பட்டப் பெயர் அல்ல. அது தேவன் கிருபையினால் நமக்கு அளிக்கும் உயர்ந்த மரியாதை. நாம் தேவனுடைய பிள்ளைகளானால் தேவன் அவருடைய பக்கத்திலிருந்து நம்மை எப்படி உயர்வாகப் பார்க்கின்றாரோ, அப்படித்தான் நம்மை பார்க்கவேண்டும்.

சிந்தனைக்கு...

நான் பாவி என்று கூறி பரிசுத்தத்திற்குத் தூரமாகாதே.
பரிசுத்தவான் என்று கூறினபின் பாவத்தோடு சேர்ந்து நில்லாதே.

ஜனவரி
21
ஜீவ நீரோடை

யார் காரணம்?

உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து... யோவான் 16:22

யோவான் 16:13-33

ஒருவர், யாரைப்பார்த்தாலும் என் மனைவியால் என்னுடைய சமாதானம் போய்விட்டது, என்னுடைய சந்தோஷம் போய்விட்டது, என் நிம்மதி போய்விட்டது என்று புலம்புவாராம். ஒருமுறை தன்னுடைய சபை பாஸ்டரிடம் இவ்விதமே புலம்பினாராம். அதற்கு அந்த பாஸ்டர் யாராலும் எதுவும் போகாது. முதலாவது கர்த்தர் உங்களோடில்லை. அவர் இல்லாததால்தான் உங்களிடம் எதுவும் தங்காமல் ஓடி விடுகிறது. நீங்கள் சந்தோஷத்தையும், நிம்மதியையும், நம்பிக்கையையும் தக்க வைக்க இயலாத பலவீனமாக இருப்பதை முதலாவது உணருங்கள் என்றாராம்.

அநேகர் பிறரால் தங்களின் சந்தோஷம், சமாதானம், நற்சுபாவம் போன்றவை காணாமல் போய்விட்டதாகக் கூறுவதையே பழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் மனிதன் தன்னுடைய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் எளிதில் இழக்கும் விதமான ஒரு பலவீன நிலையில் உள்ளான். எனவே, மற்றவர்கள் தன்னுடைய மனதைப் பாதிக்கும்விதமாக எதையாவது செய்துவிட்டால், உடனேயே எல்லாவற்றையும் இழந்துவிடுகிறான்.

சில மரங்களை காற்று லேசாகத் தாக்கினாலும் உடனேயே வீழ்ந்து விடும். காற்று மிக வலிமையாக வீசினது அல்ல அதனுடைய காரணம். மரம் மிகவும் எளிதாக விழத்தக்க பலவீன நிலையில் இருப்பதே காரணமாகும். நம்முடைய இருதயத்தில் கர்த்தர் வந்துவிட்டால் எளிதாகப் பிறர் நம்முடைய சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நம்மை விட்டு விலக்க முடியாது. எளிதாகக் காற்று ஒரு வீட்டை அசைத்துத் தள்ளிவிடுகிறதென்றால் காற்றைக் குறை சொல்வதல்ல. அந்த வீட்டை வலிமையாகக் கட்டவில்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

ஆம், கர்த்தருடைய ஐக்கியம் நம்முடைய இருதயத்தைப் பலப்படுத்தும். கர்த்தருடைய ஆவி நம்முடைய சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அரணாக நின்று காக்கும். மனிதர்களால் நமக்குத் துக்கம் ஏற்படலாம். ஆனால், கர்த்தர் துக்கத்தை சந்தோஷமாக மாற்ற வல்லவர் (யோவான் 16:20) மனிதர்களால் நமக்கு நிம்மதி இழக்கும் சூழ்நிலை ஏற்படலாம். ஆனால், கர்த்தர் நமக்கு இளைப்பாறுதல் தருகிறாரே. (மத்தேயு 11:28) ஆம். நம்மை வீழத்துகின்ற விஷயங்களையே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. நம்மை விழ விடாமல் நிற்க வைக்கும் கர்த்தரோடு ஐக்கியம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கர்த்தரை உடையவர்களாக நாம் மாறினால், யாராலும் எதனாலும் நம்முடைய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இழக்க வைக்க முடியாது.

சிந்தனைக்கு...

நம்முடைய சந்தோஷ இழப்பிற்கு,
நம்மைவிட அதிகக் காரணமானவர்கள் யாருமில்லை.

ஜனவரி

22

ஜீவ நீரோடை

ஆள முடியாது

ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்... யோவான் 3:5

யோவான் 3:1-16

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று இயேசு சொன்னார். (யோவான் 3:5) தேவனுடைய இராஜ்யம் என்றால் தேவனுடைய ஆளுகை என்று அர்த்தம். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவ ஆளுகைக்குள் வரமாட்டான். அதாவது, மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய அனுபவம் பெறாதவனை, தேவன் ஆளுகை செய்ய முடியாது. ஏனென்றால், மறுபடியும் பிறந்த அனுபவம் இல்லாதவன் இன்னும் பாவத்தின் ஆளுகைக்குள் இருக்கிறான். அந்த மனிதனை தேவன் ஆளுகை செய்ய முடியாது. தேவனால் ஆளப்படாத மனிதன் தேவ ஆசீர்வாதங்களைப் பெற முடியாது.

தேவன் நம்மை அவருடைய வார்த்தைகளால் நடத்தி ஆசீர்வதிக்கின்றார். தேவன் நம்மை அவருடைய வசனங்கள் மூலம் ஆலோசனை சொல்லி ஆசீர்வதிக்கின்றார். ஆனால், எல்லோரும் தேவ வார்த்தைகளின்படி நடக்க இயலவில்லை. இதனுடைய அர்த்தம் என்ன? தேவன் தம்முடைய வார்த்தைகளின்படி எல்லோரையும் நடத்த முடியவில்லை. அதாவது தேவன் அவர்களை ஆளமுடியவில்லை. ஏனென்றால், அவர்கள் இன்னும் பாவத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றார்கள்.

மத்தேயு 5-ம் அதிகாரம் 1 முதல் 16 வசனங்களை வாசியுங்கள். அந்த வசனங்கள் உங்களுக்கு எப்படிப்பட்ட சுபாவங்கள் வேண்டும் என்று சொல்லுகிறது. ஆனால், அந்த வசனங்களின்படி உங்களால் வாழ முடிகிறதா? அந்த வசனங்களை உங்களால் பின்பற்ற முடிகிறதா? அவற்றை உங்களால் பின்பற்றி வாழ இயலாவிட்டால் அதனுடைய அர்த்தம் என்ன? தேவன் உங்களை ஆள முடியவில்லை. தேவன் உங்களை நடத்த முடியவில்லை. ஏனென்றால், உங்களை இன்னும் பாவம் ஆளுகை செய்கின்றது. எனவேதான் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டான் என்று இயேசு கூறினார்.

அப்படியானால், நீங்கள் எவ்வளவு பக்தியாக வாழ்ந்தாலும் இன்னும் தேவ வார்த்தையின்படி வாழும்படி உங்களை தேவன் நடத்த முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? பக்தியுடையவனையும் பாவம் ஆளுகை செய்யும். எனவே, பக்தியை இன்னும் இன்னும் தேடுவது அல்ல. முதலாவது பாவத்தின் ஆளுகையை விட்டு வெளியே வரும்படி, மறுபடியும் பிறத்தல் என்ற ஆவிக்குரிய அனுபவத்தைத் தேட வேண்டும். இயேசுவை வழிபடுகிறவர்களாக அல்ல. அவர் நமக்குள் வரத்தக்கதாக அவரை நமக்குள் அழைக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனுடன் வாழப் பழகிவிட்டவனுடன் பாவம் விலகாமல் தங்க முடியாது.

ஜனவரி
23
ஜீவ நீரோடை

ஆசீர்வாத வழி

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும்... மத்தேயு 6:33

மத்தேயு 6:25-33

தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றிட என்ன செய்ய வேண்டும். ஜெபம் செய்ய வேண்டும். உபவாசம் இருக்க வேண்டும். காணிக்கை கொடுக்க வேண்டும். ஜெபக் கூட்டங்களுக்குச் செல்லவேண்டும். தேவ ஊழியர்களிடம் போய் ஜெபித்துக் கொள்ள வேண்டும். இவைகள் வழியாகத்தான் நமக்கு தேவ நன்மைகள் வருகிறது என்று நாம் நம்புகின்றோம். ஆனால், மேற்கண்ட நல்ல பக்திச் செயல்களின் விளைவுதான் ஆசீர்வாதம் என்று வேதம் சொல்லவில்லை. ஆனால், பெரும்பாலும் கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் தேவனிடமிருந்து ஏதாவது உதவி பெற்றிட இவற்றையே வழிகள் என எண்ணுகின்றனர்.

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்று இயேசு சொன்னார். (மத்தேயு 6:33) இதுதான் ஆசீர்வாதம் பெற்றிட தேவன் காட்டும் வழி. தேவனுடைய இராஜ்யம் என்றால் தேவனுடைய ஆளுகை என்று அர்த்தம். நாம் ஜெபிப்பதற்கு முன்பும், உபவாசிப்பதற்கு முன்பும், தேவனுடைய ஆளுகைக்கு நம்மை ஒப்புவித்த நிச்சயம் வேண்டும். தேவன் நம்மை தம்முடைய விருப்பத்தின்படி ஆளவும், நடத்தவும், இயக்கவும், கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தால்தான், நம்மை ஆசீர்வாதங்களுக்கு நேராகக் கொண்டு செல்ல முடியும்.

என்னிடம் வாருங்கள், இளைப்பாறுதல் தருகின்றேன் என்று கூறின இயேசு தம்முடைய நுகத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் கூறினார். (மத்தேயு 11:29) அதாவது அவருடைய ஆளுகையை ஏற்று நடக்கின்ற அனுபவத்தின் விளைவே இளைப்பாறுதல் என்பதை தெளிவுபடுத்தினார். அநேகர், நாங்கள் எவ்வளவோ கண்ணீரோடு ஜெபிக்கின்றோம், எவ்வளவோ உபவாசித்து ஜெபிக்கின்றோம், எத்தனையோ ஜெபக் கூட்டங்களுக்குப் போகிறோம். ஆயினும், கர்த்தர் இரங்கவில்லையே என்று கூறுவார்கள். ஆனால், இவர்கள் ஜெபத்தையும், உபவாசத்தையும் முன்வைக்கின்றார்களேயன்றி, தாங்கள் தேவ ஆளுகைக்குள் வாழ்வதை உறுதிப்படுத்தவில்லை.

கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்து, கர்த்தர் நம்மை வழிநடத்துகின்ற ஒரு ஆவிக்குரிய அனுபவத்திற்கு முதலாவது நாம் வந்திருக்க வேண்டும். மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு, தேவ ஆவியினால் நடத்தப்படும் ஒரு அடிப்படை அனுபவம் முதலாவது நமக்கு வேண்டும். அந்த அனுபவத்தின் பின்னணியில்தான் ஜெபம், உபவாசம் போன்றவை தேவ நன்மைகளைப் பெற்றிட உதவி செய்யும்.

சிந்தனைக்கு...

தேவ வழியில் நடக்க நீ தீவிரமாயிருந்தால்,
தேவ நன்மைகள் உன்னுடைய வழியில் வருவது தாமதிக்காது.

தாழ்ந்து போகவில்லை ஏன்?

தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்... எபேசியர் 5:21

எபேசியர் 5:17-33

ஒருவர் சபையில் நல்ல ஒரு விசுவாசியாக அறியப்பட்டிருக்கின்றார். தான் வேலை பார்க்கும் இடத்தில் நல்ல ஒரு சகப் பணியாளராக அறியப்பட்டிருக்கின்றார். தான் அங்கத்தினராக உள்ள சமூக சேவை நிறுவனம் ஒன்றில் நல்ல ஒரு சேவையாளராக அறியப்பட்டிருக்கின்றார். தன்னுடைய நண்பர்களின் வட்டத்தில் நல்ல ஒரு நண்பராக அறியப்பட்டிருக்கின்றார். ஆனால், தன்னுடைய குடும்பத்தில் தன்னுடைய மனைவிக்கோ மோசமான கணவராக அறியப்பட்டிருக்கின்றார். எல்லோராலும் நல்லவராகப் பார்க்கப்படும் ஒருவர், தன்னுடைய மனைவியால் சரியற்றவராகப் பார்க்கப்படுவது ஏன் என்பது பலருடைய கேள்வி.

அதற்கு முக்கியமானதோர் காரணம் உண்டு. இவர் வீட்டிற்கு வெளியே யார் நடுவில் சென்றாலும், அவர்களுக்குப் பிரியமாக நடந்துகொள்ளும் விதமாக தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றார். ஆனால், வீட்டில் வந்தால் மட்டும் தன்னுடைய பிரியத்திற்கேற்ப மனைவி தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார். எல்லோருக்கு முன்பும் தன்னை வளைத்துக் கொள்ளும் இவர், மனைவியின் விஷயத்தில் மட்டும் வளைந்து போக மறுப்பதால் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, இவர் கோபக்காரராகவும், அதிகாரம் செலுத்துகிறவராகவும், அனுசரிக்கத் தெரியாதவராகவும், எதற்கெடுத்தாலும் பிரச்சினை ஏற்படுத்து கின்றவராகவும் தோன்றுகின்றார்.

குடும்ப உறவுகளுக்கு நடுவில் உரிமை உணர்வு அதிகம். குடும்ப உறவு களுக்கு நடுவில் எதிர்பார்ப்புகள் அதிகம். குடும்ப உறவுகளுக்கு நடுவில் அனு சரிக்கும் தன்மை கொஞ்சம் குறைவு. சிலர் குடும்ப உறவுகளின் நடுவில் மிக மிக அனுசரித்துப் போகும்படி பழகியிருப்பார்கள். வெளியில் உள்ளவர்கள் விஷயத் திலோ சற்றும் வளைந்து கொடுக்கமாட்டார்கள். ஆயினும், குடும்பத்திற்குள் தங்கள் தங்கள் உணர்வுகளை உடனிருப்பவர்கள் புரிந்துகொண்டு நடக்க வேண்டும் என்ற ஆதங்கங்கள் அதிகமாயிருப்பதுண்டு. எனவே, குடும்ப உறவுகளின் நடுவில்தான் ஒருவர் நல்ல பேர் வாங்க அதிகமதிகமாகப் பிரயாசப்படவேண்டும்.

நம்முடைய உணர்வுகளுக்கு முதலிடம் தராமல், தேவனுடைய உணர்வுகளுக்கு முதலிடம் கொடுக்க ஆரம்பித்துவிட்டால், குடும்பத்திற்குள்ளும் தாழ்ந்து போகவும் விட்டுக் கொடுக்கவும் பழகிவிடும். நீயா நானா என்ற விதமான பார்வையை விட்டு விட்டு, என்னுடைய மனதைப் பிரியப்படுத்துவதா, தேவனுடைய மனதைப் பிரியப்படுத்துவதா என்ற விதமாகப் பார்த்தால் நிலைமைகள் மாறிவிடும்.

சிந்தனைக்கு...

பிறர் உன்னைக் கசந்து கொண்டால், சகிக்கப் பழகு
பிறரைக் குறித்து உனக்குக் கசப்பிருந்தால், கரைக்கப் பழகு.

ஜனவரி

25

ஜீவ நீரோடை

நல்ல போதனை

அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு... மத்தேயு 23:3

மத்தேயு 23:1-15

தினமும் காலையில் 5 மணிக்கெல்லாம் கடற்கரைக்கு அருகாக நடைப்பயிற்சி செய்தால், உடல் ஆரோக்கியத்திற்கு மிக மிக நல்லது என்று உடற்பயிற்சி ஆசிரியர் ஆலோசனை கொடுத்தார். அதைக் கேட்ட மாணவன் ஒருவன், தினமும் தாமதமாக எழும்பும் பழக்கத்தை விட்டுவிட்டு, சீக்கிரமாய் எழுந்து 5 மணிக்கெல்லாம் நடை பயிற்சிக்குப் போய் விடுவான். ஆனால், அந்த உடற்பயிற்சி ஆசிரியரை அவன் ஒருநாள்கூட கடற்கரைக்கு அருகில் காலையில் பார்த்தது இல்லை. ஒரு நாள் அவன் அந்த ஆசிரியரிடம் போய், அவர் கொடுத்த நல்ல ஆலோசனையைக் கேட்டு அதிகாலையில் தான் நடைப் பயிற்சி செய்வதைக் குறித்துச் சொன்னான். மேலும், உங்களை ஒருநாளும் கடற்கரை அருகில் பார்த்ததில்லை என்றான். அதற்கு அவர், நான் காலையில் எட்டு மணிக்கு எழும்புவதால் நேரம் கிடைக்கவில்லை என்றார். மாணவனுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது.

சிலர் சிறந்த போதனையாளர்கள். ஆனால், அவர்களுக்குப் போதித்தபடி வாழத் தெரியாது. அவர்கள் ஆட்டுக் குட்டியைப் போல வாழ்வதற்குக் கற்றுக் கொடுத்து விட்டு, நரியைப் போல செயல்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஆயினும், போதகர்கள் தாங்கள் போதித்ததைப் பின்பற்றாமல் போவதைப் பார்த்து, நாம் பின் வாங்கிப் போய்விடக்கூடாது.

சில நல்ல போதனைகள் மோசமான நபர்கள் வழியாகவும் கிடைக்கும். அங்கே அவர்களின் மோசமான வாழ்க்கையைப் பார்த்து நாம் இடறாமல், அவர்கள் போதித்தவை நல்லவை என்றால் அவற்றைப் பின்பற்ற வேண்டும். சிலர், போதகர்களின் முரண்பாடான வாழ்க்கையைப் பார்த்து தாங்களும் பின்வாங்கிப் போகிறார்கள். அது தவறான அணுகுமுறை. சர்க்கரை நோய்க்காக மருந்து விற்பவர், சர்க்கரை நோயாளியாக இருக்கலாம். ஆயினும், அவர் விற்கும் மருந்து நல்லதென்றால், அதனை நாம் பயன்படுத்தத் தயங்கக் கூடாது.

இயேசுவின் நாட்களில் வேதபாரகர்களும். பரிசேயர்களும் மோசேயின் ஸ்தானத்தில் உட்கார்ந்து. ஜனங்களுக்கு. பல வேத கற்பனைகளைப் போதித் தார்கள். ஆனால், அவர்களின் வாழ்க்கையோ கற்பனைகளுக்கு முரணாக இருந்தது. ஆயினும், இயேசு ஜனங்களிடம் பேசும் போது அவர்கள் சொல்லுகிறபடி செய்யுங்கள். ஆனால், அவர்களின் செய்கைகளின்படி செய்யாதிருங்கள் என்றார். நல்லவைகளைச் சொல்லிவிட்டு முரண்பாடாக வாழ்ந்தால் அவர்களைப் போல வாழாமல், அவர்களின் நல்ல போதனைகளை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

வேண்டியவர் சொன்ன கருத்தை அவசரப்பட்டு ஏற்காதே,
வேண்டாதவர் சொன்ன கருத்தை ஆராய்ந்து பாராமல் தள்ளாதே.

ஜனவரி
26
ஜீவ நீரோடை

மாற வேண்டாம்

நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை....
லூக்கா 9:55

லூக்கா 9:51-62

மற்றவர்கள் தவறாக நடந்துகொண்டால் நாம் நம்முடைய நல்ல நிலைகளை விட்டு இறங்கி வரத்தூண்டப்படுவது இயற்கையே. ஆனால், மற்றவர்களின் தவறான விதமான மனநிலைகளின் விளைவான செயல்கள் நம்முடைய மனதை மாற்றிவிடாதிருக்க எச்சரிக்கையாயிருக்க வேண்டும். மற்றவர்களின் கோணலான மனநிலைகளின் விளைவான செயல்கள் நம்மை அவர்களைப் போலச் செயல்பட நம்மைத் தூண்டும். ஆனால், நாம் அவர்களைப் போல மாறினால், அது நமக்கு ஒரு நஷ்டம். ஒருவருடைய தவறான செயலினால் நமக்கு சில நஷ்டங்கள் ஏற்படலாம். ஆனால், அவை சரிசெய்யப்படத்தக்கவையே. ஆனால், நாம் மனநிலைகளில் மாறினால், அது சரிசெய்வதற்குக் கடினமான நஷ்டமாக மாறிவிடும்.

தேவ உறவை இழந்த சவுல் அகத்தில் சமாதானத்தை இழந்தான். அதன் விளைவாகத் தாவீதுக்கு எதிராக பல விதங்களில் அவன் மோசமாகச் செயல்பட்டான். தேவ ஆளுகையில் இல்லாத ஒருவன் அப்படித்தான் செயல்பட இயலும். ஆனால், தாவீது சவுல் செய்தது போல திருப்பிச் செய்யவில்லை. தேவ ஆளுகைக்குள் இருக்கிறவனுக்கு தேவையான நல்ல அடையாளங்களை இழக்கவுமில்லை. ஆம் சவுலின் எந்தச் செயலும் தாவீதை சவுலைப் போல மாற்றிவிடவில்லை. சமாரியர்கள், இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல், தங்களின் பொல்லாத மனதை வெளிப்படுத்தினார்கள். அதற்கு எதிர்வினையாற்ற அவருடைய சீடர்கள் விரும்பினர்.

ஆனால், இயேசுவோ அவர்களைப் பார்த்து நீங்கள் இன்ன ஆவியை உடையவர்கள் என்று அறியீர்களா என்று கேட்டார். (லூக்கா-9:55) ஆம், அவர்கள் தங்களின் பொல்லாத மனதிற்கு இசைந்துபோகும்போது நாம் நம்முடைய நல்ல மனதிற்கு இசைந்துதான் போக வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார். சமாரியர்கள் அப்படித்தான். ஆனால், இயேசுவின் சீடர்கள் அப்படியல்ல என்பதைக் காண்பிக்க வேண்டும்.

மற்றவர்கள் தங்களின் பொல்லாத செயல்களாலும், தவறான வார்த்தைகளாலும் தங்களிடம் பொல்லாத இருதயம் இருப்பதைப் பிரதிபலிக்கின்றார்கள். அது போன்ற நேரங்களில், அப்படி ஒரு இருதயம் நம்மில் இல்லை என்பதையும், கர்த்தர் கொடுத்த நல்ல இருதயம்தான் நம்மிடம் இருக்கிறது என்பதையும் நாம் காண்பிக்க வேண்டும். கெட்ட மரம் கெட்ட கனியால் தன்னைக் கெட்ட மரம் என்று காட்டுகிறது. அதுபோல, நல்ல மரம் தன்னுடைய நல்ல கனியால் நல்லமரம் என்று காண்பிப்பதுதான் சரியான அனுபவம்.

சிந்தனைக்கு...

மற்றவர்களின் மனம் தீயது என்று கண்டால் கவலைப்படாதே,
உன்னுடைய மனம் நல்லது என்பதை அவர்கள் காணச் செய்.

ஜனவரி
27
ஜீவ நீரோடை

தாலந்துகளும் தேவ வார்த்தையும்

நான் உம்முடைய வசனத்திற்குக் காத்திருக்கிறபடியால்... சங்கீதம் 119:74

சங்கீதம் 119:65-88

கிறிஸ்தவர்கள் சிலர் இணைந்து நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார்கள். அந்த நிகழ்ச்சியில் கூடி வந்தவர்களின் தாலந்துகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு தரப் பட்டது. சிலர், சிறப்பாகப் பாடல்களைப் பாடி பலரை மகிழ்வித்தனர். சிலர், இசைக் கருவிகளை வாசித்து பலரை ரசிக்க வைத்தனர். சிலர், நகைச்சுவையாகப் பேசி எல் லோரையும் சிரிக்க வைத்தனர். சிலர், வேத வசனங்களை மனப்பாடமாகச் சொல்லி பலரை ஆச்சரியப்படுத்தினர். ஆனால், ஒருவர் மட்டும் எந்தப் பங்களிப்பையும் தராமல் அமைதியாக உட்கார்ந்திருந்தார். நிகழ்ச்சித் தொகுப்பாளர் அவரைப் பார்த்து, இந்த நிகழ்ச்சியில் உங்களுடைய பங்களிப்பு எதுவும் இல்லையா என்று கேட்டார்.

அதற்கு அவர் எனக்கு பாடவோ இசைக்கருவி வாசிக்கவோ தெரியாது என்றதோடு, எனக்குப் பிரசங்கம் செய்ய மட்டுமே தெரியும் என்றார். அதற்கு நிகழ்ச்சித் தொகுப்பாளர் அந்த நல்ல பங்களிப்பை நீங்கள் வழங்காமல் சும்மா இருப்பது நியாயமா என்று கேட்டார். ஆம், உண்மையிலேயே அங்கு கூடி வந்தவர்களிடம் இருந்த எல்லா தாலந்துகளைவிட, கர்த்தருடைய வார்த்தைகள் மிக முக்கியத் தேவை என்பதை அந்த தொகுப்பாளர் அறிந்திருந்தார்.

நம்முடைய திறமைகளும், தாலந்துகளும் அநேகருக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்பது உண்மை. அதே வேளையில் தேவ வார்த்தைதான் எந்த ஒரு மனிதருக்கும் மிகப்பெரிய தேவை. தேவனை அறியாதவர்களிடமும், தேவனை நம்பாதவர்களிடமும்கூட தாலந்துகள் மிகுதியாக இருக்க முடியும். ஆனால், தேவ ஆவியை உடைய மனிதனிடமே உண்மையான தேவ வார்த்தைகள் இருக்க இயலும். இயற்கைத் தாலந்துகளும் திறமைகளும் மனித மனங்களுக்கு சற்று நேர மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்க இயலும். தேவ வார்த்தைகளோ உள்ளங் களுக்குள் ஊடுருவி மாற்றங்களை ஏற்படுத்த இயன்றது. மனித மனதின் தேவைகளை உண்மையாகச் சந்திக்க இயன்றவை தேவனுடைய வார்த்தைகளே.

அநேகர் திறமைகளையும், மனதைப் பரவசப்படுத்தும் திறமைகளையும், தாலந்துகளையும் வெகுவாக விரும்பவும் புகழவும் செய்வார்கள். ஆனால், தேவ வார்த்தைகளையோ உண்மையான மன வாஞ்சையின்றி கடமைக்காகக் கேட் பார்கள். ஏனென்றால், அவர்களின் இருதயம் தேவ வார்த்தைகளால் மகிழ்வதற்கும், உத்வேகம் அடைவதற்கும் தகுதியான ஆவிக்குரிய இருதயம் அல்ல. உண்மையான மறுபிறப்பின் அனுபவம் பெற்றவர்கள்தான் தேவ வார்த்தைகளைத் தாகத்தோடும் பசியோடும் விரும்பித் தேட இயலும்.

சிந்தனைக்கு...

தாலந்துகளைக் கொண்டு விசுவாசிகளை ஈர்க்கின்றவன் அல்ல, தேவ வார்த்தைகளால் அவர்களை விசுவாசத்தில் கட்டுகிறவனே ஊழியன்.

ஜனவரி 28 ஜீவ நீரோடை

வாழ்க்கை அழகு

மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து... மாற்கு 7:21

மாற்கு 7:14-23

ஒரு சிறந்த ஓவியன் தன்னுடைய அழகான ஓவியங்களுக்காக மிகவும் பாராட்டப்பட்டவன். அவன் எதனை ஓவியமாக வரைந்தாலும் அது மிக அழகாகத் தோன்றும். அநேகர் அதனை ரசித்து அவனை வெகுவாகப் புகழ்வார்கள். ஆனால், அவன் தன்னுடைய வாழ்க்கையை ஓரளவாகிலும் ரசிக்கும்படியாக அமைக்க முடியவில்லையே என்று வருத்தப்படுவானாம். ஆம், மனிதன் தன்னுடைய கலைத்திறமையாலும் அறிவாற்றலாலும் பல விஷயங்களை பலர் ரசிக்கும்படியாக அழகாக உருவாக்க முடியும். ஆயினும், அவனுடைய மனம் அவனுடைய கட்டுப்பாட்டிற்கு இசைந்து போகாத ஒன்றாயிருப்பதால், அது அவனுடைய அழகாக்கும் முயற்சிகளை தோல்வியடையச் செய்கிறது.

சாலொமோன் இராஜா தனக்கிருந்த அதிக அறிவாலும், ஞானத்தாலும் புத்தியாலும் பல விஷயங்களை பலர் புகழும்படியாகச் செய்ய முடிந்தது. ஆயினும், அவனுடைய வாழ்க்கை அழகானதல்ல. அவனுடைய வாழ்க்கையை அவனால் புகழத்தக்கதாக உருவாக்கி கொள்ள இயலவில்லை. அவனுடைய வாழ்க்கை முறை எவரும் பின்பற்றுவதற்கேற்ற அழகான ஒரு நல்ல வாழ்க்கையாக இருக்கவில்லை. அவன் ஒரு சுகபோகப் பிரியனாக வாழ்ந்து மனக்கட்டுப்பாடற்ற வாழ்க்கைக்கு ஒரு மோசமான மாதிரியாகத் திகழ்ந்தான்.

ஏனென்றால், அவன் தன்னுடைய வாழ்க்கையை அழகாக அமைக்கும் தேவனுடைய ஆளுகைக்குள் இருக்கவில்லை. எனவே, அவன் ஞானத்திற்காக புகழப்பட்ட ஒரு மனிதனாயிருந்தும், ஒரு நல்ல வாழ்க்கைக்காகப் பாராட்டப்படும் மனிதனாக விளங்கவில்லை. வாழ்க்கை அழகற்று இருக்கும்போது, ஒரு மனிதன் எவ்வளவுதான் பிறரால் ரசிக்கப்படும் விதமான சாதனைகளைக் கொண்டிருந்தாலும், அது அர்த்தமற்றதே. அழகான தோற்றங்களோடும், அழகான சாதனைகளோடும் வாழுகின்ற பலருக்குள் அமைதியுமில்லை, சந்தோமுஷமில்லை. ஏனென்றால், அவர்களின் இருதயமும் சுபாவங்களும் அழகாயில்லை.

தேவன் ஒரு மனிதனோடிருந்து ஆளுகை செய்து அவனுடைய மனதையும், சுபாவங்களையும் அழகுபடுத்த வேண்டும். மனிதனுடைய இருதயம் நற்சிந்தனைகளினாலும், நல்வார்த்தைகளினாலும், நல்நோக்கங்களினாலும் சிறந்ததாக்கப்பட வேண்டும். கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்து, கர்த்தரால் நடத்தப்படும் ஒரு வாழ்க்கையை நாம் விரும்பும் போதுதான், வாழ்க்கை அழகுள்ளதாக மாறும்.

சிந்தனைக்கு...

அழகான தோற்றங்கள் பலரை வசீகரிக்கும்,
அழகான குணங்கள் பலரை வாழ வைக்கும்.

ஜனவரி

29

ஜீவ நீரோடை

பயன்படுத்தாமல் நன்றி

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து....
எபிரெயர் 2:4

எபிரெயர் 2:1-18

ஒருவர் தன்னுடைய பிள்ளைகளுக்காக ஒரு பெரிய வீட்டைக் கட்டினார். தன்னுடைய பிள்ளைகள் யாவரும் தன்னுடன் ஒன்றாய் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்பது அவருடைய ஆசை. ஆனால், அவருடைய பிள்ளைகளோ தங்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில், வேறு வேறு இடங்களில் தனித் தனியாக வீடு கட்டி வாழ்கின்றனர். அதே வேளையில், தங்களின் தகப்பன் தங்களுக்காகக் கட்டிய நல்ல வீட்டைக் குறித்து, யாரைச் சந்தித்தாலும் விசேஷமாகச் சொல்லு வார்கள். ஆனால், அந்த தகப்பனோ தான் வீடு கட்டிய நோக்கம் நிறைவேறாத தற்காக துக்கத் தோடு வாழ்கின்றார்.

கிறிஸ்தவர்கள் பலர், இயேசு கிறிஸ்துவினால் ஆயத்தமாக்கப்பட்ட இரட்சிப் பிற்காக, அவரை வெகுவாகத் துதித்துப் பாடுவார்கள். அவருடைய கல்வாரிப் பாடுகளை எண்ணி மிகச் சிறப்பாக உள்ளம் உருகப் பேசுவார்கள். ஆனால், அவர் களோ அந்த இரட்சிப்பைப் பயன்படுத்தமாட்டார்கள். இயேசு கிறிஸ்து இரத்தம் சிந்தி உருவாக்கிய இரட்சிப்பைக் குறித்து எவ்வளவோ பாடல்கள் உள்ளன. ஆனால், அது போன்று பாடுகின்ற எத்தனை பேர் அந்த இரட்சிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு வாழ்கின்றார்கள். மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக மண்ணுலகில் பிறந்தவரைக் குறித்த சந்தோஷத்துடன், எவ்வளவு விசேஷமாக கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுகின்றோம். ஆனால், அந்த மாபெரும் இரட்சகரால் வந்த இரட் சிப்பைத் தேடாமல் அவமதிக்கின்றவர்கள் எத்தனையோ பேர்.

40 நாட்கள் லெந்து காலம் ஆசரித்து, இயேசு கிறிஸ்துவின் பாடு, மரண நிகழ்வுகளை நினைவு கூருகின்றோம். ஆனால், எத்தனையோ லெந்து காலங்கள் கடந்தும், இயேசு உருவாக்கிய இரட்சிப்பினைப் பயன்படுத்தாமல் அப்படியே தொடருகின்றோம். அப்படியானால் இது போன்ற ஆசரிப்புகள் தேவனைத் துக்கப் படுத்துமேயன்றி, அவரை மகிமைப்படுத்தாது என்பது உண்மை.

கர்த்தராகிய இயேசு நமக்காக உருவாக்கிய ஆசீர்வாதங்களை எண்ணி எண்ணி நாம் நன்றி சொல்வதும், பாடுவதும் நலமானதே. ஆனால், அவற்றை நாம் பெற்று அனுபவியாமல் போனால், அது ஒரு இறை அவமதிப்புச் செயல் என்பதே உண்மை. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போ மானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்? என்று வேதத்தில் வாசிக்கின்றோம்.(எபிரெயர் 2:4)

சிந்தனைக்கு...

கர்த்தர் என்ன செய்தார் என்று சொல்வது அல்ல,
அவற்றால் உனக்கு என்ன நடந்தது என்று சொல்லு.

கவலையும் தேவ ஆளுகையும்

அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்...
1 பேதுரு 5:6

1 பேதுரு 5:1-14

கோயிலுக்குப் போவதால் கவலை நீங்காது. ஆராதனை செய்வதால் கவலை ஓடாது. பைபிள் படிப்பதால் கவலை அகலாது. ஜெபக் கூட்டம் போவதால் கவலை விடைபெறாது. இறைப்பணியாளர்கள் ஜெபித்தால் கவலை கரையாது. இவைகளால் கவலையை சற்றுநேரம் உணராமல் இருக்கலாம். இவைகள் கவலைகளிமேல் இருந்த நம்முடைய பார்வையை சற்று நேரம் மாற்றும். மற்றபடி அவைகளால் கவலைகள் ஓடிப்போவதில்லை.

தேவ உதவியால் கவலைகள் நீங்க வேண்டும் என்று விரும்பினால், அதற்குரிய தேவ விதிகளைப் பின்பற்ற வேண்டும். கவலைகளிலிருந்து நம்மை விடுவிப்பவர் கர்த்தர். எனவே, அந்தக் கர்த்தர் நம்முடைய வாழ்வில் நம்மால் அழைக்கப்பட்டு, நம்மோடு அவர் இருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். முதலாவது, கவலைகளை நீக்கும் ஆண்டவரே என்ற ஜெபம் அல்ல. முதலாவது, கர்த்தாவே என் வாழ்வில் வந்து என்னோடிரும் என்ற விண்ணப்பமே அவசியம். முதலாவது, கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்து கர்த்தரோடு வாழ்கின்ற ஒரு அனுபவத்திற்கு வரவேண்டும்.

கர்த்தர் நம்மோடிருந்தால் அவர் வெறும் ஆராதனைக் கடவுளாக மட்டும் இருக்கமாட்டார். அவர் நம்மை ஆளுகின்ற ஆண்டவராகவே இருப்பார். தேவன் நம்மை ஆளாவிட்டால் கவலைகள் நம்மை ஆளுவதைத் தடுக்க முடியாது. நம்முடைய சிந்தனைகள் ஆளப்பட வேண்டும். நம்முடைய சுபாவங்கள் ஆளப்பட வேண்டும். நம்முடைய ஆசைகள் ஆளப்பட வேண்டும். ஏனென்றால், நமக்குள் நலமான சிந்தனைகள் இல்லாவிட்டால் கவலைகள் அங்கே நிரம்பிவிடும். நம்மை ஆசைகள் ஆளுகை செய்தால், கவலைகள் அங்கே குடிகொண்டுவிடும். நம்மை தவறான சுபாவங்கள் ஆண்டு கொண்டிருந்தால், கவலைகளை நாம் கட்டுப்படுத்த இயலாது.

வெறும் பிரார்த்தனைகளைக் கொண்டு கவலைகளிலிருந்து நம்மை விடுவிக்க முடியாது. கர்த்தர் நம்மை தமது ஆளுகைக்கு உட்படுத்தி நடத்தும்போதுதான், கவலைகள் நம்மை விட்டு நீங்கும். முதலாவது கர்த்தருடைய நடத்துதலுக்கு உட்பட்டு வாழ்கின்ற ஒரு ஆவிக்குரிய வாழ்க்கை முறையை நாம் தேட வேண்டும். அநேகர் ஜெபிப்பதாலும், ஆராதிப்பதாலும், கவலைகள் ஓடவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், கர்த்தருடைய வழிகளுக்கு உட்பட்டு வாழ்கின்ற அனுபவத்திற்கு நாம் வந்தால்தான், கவலைகளிலிருந்து கர்த்தர் நம்மை விடுவிக்க முடியும்.

சிந்தனைக்கு...

நற்குணங்களை தங்க வைப்பது கடினம்,
தீயகுணங்களைத் துரத்தி விடுவது கடினம்.

அவர்கள் ஏமாற்றவில்லை

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து. ....
1 தெசலோனிக்கேயர் 5:21

1 தெசலோனிக்கேயர் 5:12-28

சில நேரங்களில் யாரோ நம்மை ஏமாற்றிவிட்டதாக எண்ணுகின்றோம். ஆனால், யாரும் நம்மை ஏமாற்றவில்லை. நாம் நாமாக ஏமாந்துவிட்டோம் என்பதே உண்மை. நாம் நம்முடைய எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் செயல்பட்டோம். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாததால் நாம் ஏமாற்றப்பட்டதாக எண்ணுகின்றோம். ஒருமுறை ஒரு சிறு கூட்டத்தினருக்காக உணவகம் ஒன்றில் காலை உணவிற்கு ஆர்டர் கொடுத்தேன். அவற்றின் விலை அதிகமாயிருந்தது. அதிக விலையிருப்பதால், அதிக தரமும் சுவையும் இருக்கும் என்று எண்ணி நான் ஆர்டர் செய்தேன். ஆனால், அதைச் சாப்பிட்டவர்கள் சாதாரணமாயிருப்பதாகச் சொன்னார்கள்.

நான் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தேன். ஆனால், அது உண்மை அல்ல. அவர்கள் என்னை ஏமாற்றவில்லை அவர்கள் அந்த உணவு அயிட்டங்கள் மிக மிகச் சுவையானவை என்று எந்த வாக்குறுதியும் தரவில்லை. நானாக அப்படி எண்ணிக் கொண்டு ஏமாந்துவிட்டேன். ஆம், சில நேரங்களில் மற்றவர்கள் தங்களின் வழக்கப்படி செயல்படுகிறார்கள். ஆனால், நாமோ அவர்களிடம் விசேஷமாக எதிர்பார்த்து ஏமாறுகின்றோம். அது அவர்களின் தவறு அல்ல. நம்முடைய தவறு.

பக்தியான பெண்ணை திருமணம் செய்ய விரும்பின ஒருவன், தனக்குச் சொல்லப்பட்ட பெண்ணைப் பார்க்க, சபை ஆராதனை நடக்கும் போது சென்றான். அங்கே அந்தப் பெண் பலவித சபை நடவடிக்கைகளில் மிகவும் தீவிரமாகவும் பக்தியாகவும் செயல்படுவதைக் கண்டு, அவளைத் திருமணம் செய்தான். ஆனால், திருமணம் செய்தபின் அவன் எதிர்பார்த்த ஆவிக்குரிய குணாதிசயங்கள் எதுவும் அவளிடம் இல்லை. அவன் தான் ஏமாற்றப்பட்டதாக பலரிடம் சொல்லி வருத்தப்பட்டான். ஆனால், அவள் அவனை ஏமாற்றவில்லை. அவள் தன்னை நற்குண சாலி என்று எதுவும் சொல்லவில்லை. அவன் அவளுடைய பக்தியான சபைச் செயல்களைப் பார்த்து அப்படி எண்ணிவிட்டான். அது அவனுடைய தவறு.

எல்லாவற்றையும் முகத்தோற்றத்தைப் பார்த்து முடிவு செய்யக்கூடாது. ஒரு சில செயல்களைப் பார்த்து விட்டு, அவர்களைக் குறித்த மிக உயர்ந்த சித்திரத்தை ஏற்படுத்திவிடக்கூடாது. நாம் இன்னும் உற்றுப் பார்க்க வேண்டிய விஷயங்கள் இருக்கும். சில நேரங்களில் சிலர் நம்மை திட்டமிட்டு ஏமாற்றவில்லை. நாம்தான் போதுமான சிந்தனை, யோசனை, சோதனை எதுவுமில்லாமல், மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொள்கின்றோம். எனவே, மற்றவர்கள் நம்மை ஏமாற்ற விரும்பாத வேளையிலும் நாமாகப் போய் ஏமாந்து விடுகிறோம்.

சிந்தனைக்கு...

நல்லவர்களைக் கண்டால் சேர்ந்து நடக்கப் பழகு,
தீயவர்களைக் கண்டால் விலகி ஓடப் பழகு.

பிப்ரவரி
1
ஜீவ நீரோடை

கவலையை அகற்றுவது எப்படி?

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும்... மத்தேயு 6:33

மத்தேயு 6:25-34

கவலையை மறக்க சிலர் கோயிலுக்குச் செல்லுகின்றார்கள். கவலையை மறக்க சிலர் தேவ ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். கவலையை மறக்க சிலர் துதி ஸ்தோத்திரம் ஏறெடுக்கின்றனர். கவலையை மறக்க சிலர் ஜெபக்கூட்டங்களுக்குச் செல்லுகின்றனர். ஆனால், இவ்விதமான வழிகளில் கொஞ்ச நேரம் கவலைகளை உணராதிருக்க முடியுமேயன்றி, அவைகளை நம்மை விட்டு விலக்க முடியாது. சற்று நேர மன அமைதிக்காக நாம் செய்கின்ற காரியங்கள் பலன் தரலாம். ஆயினும், அவற்றால் கவலைகளிலிருந்து விடுதலை அடைய வாய்ப்பில்லை.

கவலைகளை மேற்கொள்வதற்கு கர்த்தர் காண்பித்த வழி தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுதலே. அதாவது, தேவனுடைய ஆளுகையை நமக்குள் கொண்டு வருவதால்தான் கவலைகளின் ஆளுகையை விட்டு வெளியே வர இயலும். கவலைகளை நமக்குள் கொண்டு வருவதில் மூன்று விஷயங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிந்தனைகள், சுபாவங்கள், ஆசைகள் ஆகியவையே அந்த மூன்று விஷயங்கள். பெரும்பாலான கவலைகள் மனதைப் பாதிக்கும் சிந்தனைகளின் விளைவானவை. பெரும்பாலான கவலைகள் மனதுக்குப் பாதகமான சுபாவங்களின் விளைவானவை. பெரும்பலான கவலைகள் மனதைப் பாரமாக்கும் ஆசைகளின் விளைவானவை.

பலருடைய இருதயங்கள் நற்சிந்தனைகளால் அல்ல. உலகப் பிரகாரமான சிந்தனைகளினாலே நிறைந்துள்ளது. பலருடைய இருதயங்கள் தவறான சுபாவங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றன. பலருடைய இருதயங்கள் நிறைவேற்ற இயலாத பல ஆசைகளினால் அதிகமாக அழுத்தப்படுகின்றன. இந்த மூன்று விஷயங்கள் தேவனுடைய ஆளுகைக்குள் வரவேண்டும். தேவனை நம்முடைய வாழ்க்கையின் மையத்தில் எதிர்பார்க்க வேண்டும். கர்த்தருக்கேற்ற சிந்தனைகளையும், சுபாவங்களையும், ஆசைகளையும் நமக்குள் கொண்டுவர கர்த்தரோடு நாம் ஒத்துழைக்க வேண்டும்.

தேவ ஐக்கியத்துடன் வாழ்வதற்கு அதிகமதிகமான ஆர்வம் கொண்டு செயல்படும்போது, நம்முடைய சிந்தனை மண்டலமும், சுபாவ மண்டலமும், ஆசைகளின் மண்டலமும் தேவ ஆளுகைக்குள் வரும். அப்போது கவலைகளின் ஆளுகை பலமிழந்து போகும். ஆம், சிந்தனைகளிலும், சுபாவங்களிலும், ஆசைகளிலும் நாம் போதுமான அளவு மாற்றங்களைக் காண்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். அது தொடர்பாக கர்த்தருடைய கிருபையை அதிகமாகத் தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்கு உன் வாழ்க்கை திறந்திருந்தால்,
கவலைக்கு உன் வாழ்க்கை மூடியே இருக்கும்.

பிப்ரவரி
2
ஜீவ நீரோடை

ஒரு நிறைவு, ஒரு குறைவு

துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானை...
நீதிமொழிகள் 17:15

நீதிமொழிகள் 17:1-15

சிலர் எந்த ஒன்றிலும் இருக்கின்ற ஒரு நல்ல விஷயத்தை மட்டும் பார்த்து திருப்தியடையும் மனநிலை உடையவர்கள். சிலர் எந்த ஒன்றிலும் இருக்கின்ற ஒரு தவறான விஷயத்தைப் பார்த்து அதிருப்தி அடையும் மனநிலை உடையவர்கள். இந்த இரண்டு விதமான மனநிலைகளும் தவறு. ஒரு விஷயம் நல்லது என்று கூறப்பட அதில் ஒரு சில நல்ல அம்சங்கள் இருந்தால் போதாது. கணிசமான அளவிற்கு நல்ல அம்சங்கள் இருந்தால்தான் அது நல்ல விஷயமாகும். அது போல, ஒரு விஷயத்தை தவறு என்று கூற, ஒன்றிரண்டு குறைவுகளை மட்டும் பார்க்கக்கூடாது. அந்த குறைவுகள் அந்த விஷயத்தை தீயதாக்கும் அளவிற்கு வலிமையானதா என்று பார்க்க வேண்டும்.

துணி துவைக்கும் பொருளின் தோற்றம் மிக அழகாயிருப்பதால் அது நல்லது என்று பாராட்டப்படத்தக்கதாக மாறாது. அதனுடைய இயந்திரம் சரியாக வேலை செய்யாவிட்டால், அந்த நல்ல தோற்றத்தை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. அது போல அந்த இயந்திரம் மிக சிறப்பாகச் செயல்படும் போது எங்கோ ஒரு இடத்தில் கொஞ்சம் நிறம் கரைந்து போயிருப்பதால் அது பயனற்றதாகிவிடாது.

அது போலவே, சிலருடைய வாழ்க்கையில் சில நல்ல செயல்களும், சில நல்ல சுபாவங்களும் இருக்கலாம். அதே வேளையில், வேறு பகுதிகளில் பல மோசமான செயல்களும் சுபாவங்களும் இருந்தால் அந்த மனிதர் நல்லவர் அல்ல. ஏனென்றால், அவருடைய வாழ்க்கையில் தவறானவைகளின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால், அந்த சில நல்ல விஷயங்களால் நமக்கு நன்மை இல்லை. அதுபோல, சிலருடைய வாழ்க்கையின் பெரும்பகுதி மிகவும் நலமாயிருக்கும். ஆயினும், ஒரு சில விஷயங்கள் மெச்சத்தக்கதாகயிராது. ஆயினும், அவற்றால் பெரிய தீங்கோ கேடோ இல்லையென்றால், அவர்களைத் தவறானவர்களின் பட்டியலில் சேர்ப்பது நல்லதல்ல.

ஒருவரிடமுள்ள நல்ல விஷயத்தையே பார்க்க வேண்டும் என்ற கொள்கை நல்லதல்ல. ஏனென்றால், எப்பொழுது அவரிடமுள்ள தீங்கான பழக்கத்தால் நமக்குப் பாதிப்பு வரும் என்று கூற இயலாது. அவ்விதமே, ஒருவரிடமுள்ள குறையை மட்டும் பார்த்து, அவரிடமுள்ள பல நன்மையான விஷயங்களின் பலனை அடையாமல் போகக்கூடாது. நாம் ஆவிக்கேற்ற பார்வையுடையவர்களாக விளங்க வேண்டும். ஒருவரிடமுள்ள குறைவை அல்லது நிறைவை அல்ல. அவரிடமும் மேலோங்கி நிற்பது குறைவா, நிறைவா என்பதையே கவனிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்லவர்களிடமுள்ள ஒரு தவறைப் பார்த்து வெறுத்து விடாதே,
தீயவர்களிடமுள்ள ஒரு நல்லதைப் பார்த்து விரும்பிவிடாதே.

பிப்ரவரி

3

ஜீவ நீரோடை

ஏன் பிடிக்கவில்லை?

மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்...
கலாத்தியர் 1:10

கலாத்தியர் 1:1-24

என்னுடைய நண்பர் ஒருவருக்கு இனிப்பு சுவையில்லாத பிஸ்கட்கள் பிடிக்காது. அநேகர் மிக நல்ல சுவையானது என்று சாப்பிடும் பிஸ்கட்களை அவரிடம் கொடுத்தால், கொஞ்சம்கூட அதை தொடமாட்டார். அந்த பிஸ்கட்டை அவர் வெறுப்பதற்கு அவற்றில் என்ன குறைபாடு உள்ளது? ஒன்றுமேயில்லை. அவருடைய சுவை யுணர்வுக்கு அந்த பிஸ்கட்கள் உதவவில்லை. அவர் விரும்பும் சுவை அவற்றில் இல்லாததே அதனுடைய காரணம்.

சிலருக்கு நம்மைப் பிடிக்காது. சிலர் நம்மைக் குறித்த வெறுப்புணர்வோடே இருப்பார்கள். ஆனால், அவர்கள் நம்மை வெறுப்பதற்கு நம்மிடம் ஒரு பிரச்சினையும் இல்லை. அவர்கள் நம்மை விரும்புவதற்கு ஏதுவான ஒன்று நம்மிடம் இல்லை. அவர்களின் மனப்பிரியத்துக்கு ஏற்ற ஏதோ ஒன்று நம்மிடம் இல்லை. எனவே அவர்கள் நம்மை விரும்ப முடியவில்லை. அக்கால பரிசேயர்களும்,சதுசேயர்களும், வேதபாரகர்களும் இயேசுவை வெறுத்தார்கள். அந்த வெறுப்பு நியாயமற்றது. அவரை அவர்கள் வெறுப்பதற்கு அவரிடம் அவர்கள் தவறெதையும் பார்க்கவில்லை. அவர்களின் மனதின் சுவைகளுக்கேற்றபடி அவர் இல்லை. எனவே, அவரை அவர்கள் விருப்பத்தோடு பார்ப்பதற்குப் பதிலாக வெறுப்போடு பார்த்தார்கள்.

சிலருக்கு சத்திய சுவை பிடிக்காது. அவர்கள் தாங்கள் கேட்பது சுவையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்களேயன்றி, சரியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கமாட்டார்கள். அவர்களுக்குப் பக்தி பிடிக்கும். நீதி பிடிக்காது. அவர்களுக்குப் பரவசம் பிடிக்கும். பரிசுத்தம் பிடிக்காது, அவர்களுக்குக் கொண்டாட்டம் பிடிக்கும். சத்திய நெறிகள் பிடிக்காது. உணர்ச்சிவசப்படுதல் பிடிக்கும், உணர்வடைதல் பிடிக்காது. அவர்களுக்கு ஆராதனை பிடிக்கும். ஆனால், ஆவிக்குரிய வழிகள் பிடிக்காது.

கர்த்தருக்குப் பிரியமாக வாழ்கின்றவன் எல்லோருக்கும் பிரயோஜனமானவன் என்பது உண்மை. ஆனால், அவன் எல்லோருக்கும் பிரியமானவனாயிருப்பது கடினம். அவர்கள் பிரியப்படும் விதமாக தன்னை அவன் மாற்றிக் கொண்டால் ஜனங்களை பெற்றுக்கொள்வான். ஆனால், தேவனை இழந்து விடுவான். தேவனை இழந்துவிடாதபடி வாழ விரும்புகிறவன் தேவனைப் பிரியப்படுத்துவதற்குப் குறியாயிருப்பானேயன்றி, மனிதர்களின் பிரியத்தைப் பெற்றிட குறியாயிருக்கமாட்டான். எனவே, அவன் பலருக்குப் பிடித்தமான ஒருவனாக இருப்பது கடினமான விஷயமே.

சிந்தனைக்கு...

மனிதர்களைப் பிரியப்படுத்துவதால் வரும் லாபங்களை விட, தேவனைப் பிரியப்படுத்துவதால் வரும் நஷ்டங்களே ஆசீர்வாதமானவை.

அறிவும், அனுபவமும்

கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும். ..
எபேசியர் 3:18

எபேசியர் 3:9-21

சிலருக்கு தேவ அன்பைக் குறித்த நல்ல அறிவு உள்ளது. தேவன் எவ்வளவாய் நேசிக்கின்றார் என்பதைக் குறித்து அவர்களுக்கு மிக நன்றாக விளக்கிப் பேசவும் தெரியும். ஆனால், அந்த அன்பை ருசிக்கவோ அனுபவிக்கவோ தெரியவில்லை. ஏனென்றால், அறிவு மண்டலத்தைக் கொண்டு தேவ அன்பைப் புரிந்து கொள்ள இயலும். ஆனால், ஆவிக்குரிய மண்டலத்தால்தான் அது இன்னது என்று அனுபவித்தறிய முடியும். பலரிடம் பக்தி இருக்கிறது. ஆனால், பரிசுத்த ஆவி இல்லை. எனவே, தேவ அன்பை அவர்கள் அனுபவித்தறிய இயலவில்லை.

சிலுவைப் பாடுகளை விவரித்துக் கூறினால் நாம் மனதில் பரவசப்பட முடியும். ஆனால், அது போதாது. அறிவு சார்ந்த ஒரு புரிந்து கொள்ளுதல் அல்ல. தேவ ஐக்கியம் சார்ந்த ஒரு அனுபவித்தல் அவசியம். தேவ ஐக்கியத்தைத் தேடி, அந்த ஐக்கியத்தின் வாயிலாக நாம் நமக்குள் தேவ அன்பை ருசித்தால்தான், அதனுடைய விளைவுகளைக் காண முடியும். நாம் மனிதர்களின் வெறுப்பு சார்ந்த வார்த்தைகளாலும், செயல்களாலும், சுபாவங்களாலும் எளிதாகக் காயமடைய முடிகிறது. ஆனால், காயங்களைக் குணமாக்கும் கர்த்தருடைய அன்பால் மனதில் சுகமடைய முடிகிறதா?

கல்வாரி அன்பை எண்ணிடும்போது கண்கள் கலங்கிடுதே என்று பாடுகின்றோம். ஆனால், மனிதர்களின் வெறுப்பைக் காண நேரிட்டதும் ஏன் மனதில் காயமடைந்து, பதிலாக எதையாவது செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றோம்? நாம் தேவ அன்பை அறிவு மண்டலத்தில் உணர்ந்து உணர்ச்சி வசப்படுகிறோம். ஆனாலும், ஆவியில் தேவ அன்பை அனுபவிக்காததால் வெறுப்பைக் கரைக்கவும், கசப்பை மறக்கவும் இயலாமல் போகிறோம். கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்று சொல்ல இயலாமல் போகின்றோம். (11 கொரி 5:14) நாம் கர்த்தரோடு அதிகமாக விசுவாசத்தோடு பேசவும், மனப்பகிர்வு செய்யவும் வேண்டும். அப்போது நம்முடைய மனம் தேவ ஆவியின் ஆளுகையை உணரும்.

அவ்விதம் உணரும் போது, பிறரால் ஏற்பட்ட வெறுப்பையும், கசப்பையும், வருத்தத்தையும் நாம் மறக்கவும், அவற்றால் ஏற்பட்ட காயத்தை ஆற்றிக் கொள்ளவும் முடியும். தேவ அன்பு, தேவ இரக்கம், தேவ ஆறுதல், தேவ பிரசன்னம் என எந்த ஒரு ஆவிக்குரிய அனுக்கிரகங்களும் நம்முடைய இருதயத்தில் உணரப்பட வேண்டும். அதாவது, ஒரு சுவையான சாக்லெட்டை சுவையானது என்று அறிந்திருந்தாலும், நாவு அதனை ருசித்தால்தான் அதனுடைய பயன்பாட்டைப் பெற முடியும்.

சிந்தனைக்கு...

தேவனுடைய அன்பை ருசித்தவனுக்கு,
மனிதர்களுடைய வெறுப்பு அதிகக் கசப்பாயிராது.

பிப்ரவரி
5
ஜீவ நீரோடை

அன்பில் சாதனை

(அன்பு) சகலத்தையும் தாங்கும்...
1 கொரிந்தியர் 13:7

1 கொரிந்தியர் 13:1-13

திருமணமான ஒரு தேவ பக்தியுடைய ஆண், தன்னுடைய மனைவியை அதிகமாக நேசித்து வாழ்ந்து வந்தான். ஆனால், ஒரு காலகட்டத்தில் தன்னுடைய மனைவி முகநூல் மூலம், தன்னுடைய பழைய கல்லூரித் தோழனோடு முறையற்ற ஒரு தொடர்பை ஏற்படுத்தியதை அறிந்து மனம் உடைந்து போனான். ஆயினும், அவள் தனது தவறை உணர்ந்து மனந்திரும்பி வாழ முன்வந்ததால், திருமண உறவு உடையவில்லை. அதே வேளையில், அவனால் முன்பு போல அவளை நேசிப்பது எளிதாக இருக்கவில்லை. அது சற்று கடினமாயிருந்ததை உணர்ந்தான். ஆனால், எளிதாக அன்பு கூர்ந்த நாட்களைவிட சற்று சிரமத்தோடு அன்புகூரும் நாட்களை அவன் ஒரு சாதனையின் அனுபவமாக எண்ணினான். ஏனென்றால், அவன் தன்னுடைய மனைவியிடம் அன்பு காட்டி வாழ்வதற்காக அதிகமதிகமாக, தேவ கிருபையைத் தேடிப் பெற வேண்டிய தேவையை உணர்ந்தான்.

ஆம், சிலரை நேசிப்பது நமக்கு மிகவும் எளிதானது. அதனை நம்முடைய இயற்கையான அன்பின் அளவைக் கொண்டே செய்ய முடியும். சிலரை நேசிப்பது சற்று கடினமான பாதையில் நடப்பது போன்றது. அது சமவெளியில் நடப்பது போல இராமல், மலை ஏறுவது போல் இருக்கும். அதற்கு தேவனுடைய அன்பை அதிகமாக ருசிக்க வேண்டிய தேவை உண்டு. தேவ ஆவியினால் மனதை அதிகமாகப் பக்குவப்படுத்த வேண்டிய தேவை உண்டு. தேவ உறவை அதிகமாகத் தேடி மனதை அதிகமாக மகிழ்ச்சியாக்கினால்தான், அந்த மகிழ்ச்சியின் பலத்தால் மற்றவரை நேசிக்க முடியும்.

அன்பு சகலவற்றையும் தாங்கும். அன்பு சகலவற்றையும் சகிக்கும். அப்படி யானால், தாங்கவும் சகிக்கவும் அதிமான ஆற்றல் வேண்டும். தாங்கவும் சகிக்கவும் கடினமானவற்றை நாம் செய்யவும் பிரயாசப்படும் போது, அது கிறிஸ்துவுக்குள் ஒரு பெரிய காரியத்தைச் செய்கின்ற நிறைவினைத் தரும்.

ஆம், அன்பு என்பது சில நேரங்களில் சற்று புன்னகையோடு பார்ப்பதும், தேன் சுவை ரகமாகப் பேசுவதும், பரவச உணர்வோடு சில நல்ல செயல்களைச் செய்வதும் அல்ல. சில நேரங்களில், இன்னொருவரை வெறுக்காமல் நேசிக்க அதிகமான தாங்கும் திறனும், சகிப்புத் திறனும் வேண்டும். தேவ ஐக்கியத்தினைத் தேடி அந்த ஆற்றலைத் தேவ அன்பினால் பெறும் போது, அங்கே கோலியாத்தை வென்று சாதனை படைத்த தாவீதைப் போல, நாமும் கடினமான காரியத்தைக் கர்த்தருடைய கிருபையால் செய்த சாதனை உணர்வைப் பெறுவோம்.

சிந்தனைக்கு...

நண்பனை நேசிக்க இயற்கை அன்பு போதும்,
விரோதியை வெறுக்காதிருக்க தேவ அன்பு வேண்டும்.

பிப்ரவரி
6
ஜீவ நீரோடை

நல்ல போதனை, ஆனால்

நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு...
2 தீமோத்தேயு 3:14

2 தீமோத்தேயு 3:1-17

ஒருவர் மிக மிகச் சரியாகவும், வேதப் பிரகாரமாகவும் போதிக்கின்ற போதகரின் சபையில் உறுப்பினர். போதகரின் அனைத்து பிரசங்கங்களையும் தவறாமல் குறிப்பெடுத்து பலருக்குக் கொடுப்பார். இந்தப் போதகரைப் போல மிகச் சரியாக சத்தியத்தைப் போதிக்கும் போதகரை காண்பது அரிது என்று பலரிடம் கூறுவார். இந்தப் போதகரின் போதனை வேதத்தின் அடிப்படையில் பிறழாமல் இருப்பதால், யாராவது தவறாகப் போதிப்பதைக் கண்டால், மிகுந்த வைராக்கியத்தோடு வாதம் செய்வார். அதே வேளையில், இவர் அறிந்த சரியான சத்தியத்தின் பிரதிபலிப்புகளை இவருடைய சுபாவங்களிலோ, செயல்களிலோ பிறரோடுள்ள ஐக்கியங்களிலோ பார்க்க இயலாது.

சரியான போதனை, சரியான உபதேசம், சரியான விளக்கம் என சரியான சத்திய விஷயங்களில் வைராக்கியமாயுள்ள இவர், சரியான ஒரு சத்தியம் சார்ந்த வாழக்கைக்கோ முக்கியத்துவம் தரவில்லை. ஏனென்றால், இவர் பேசுவதிலும் கேட்பதிலும் சத்தியத்தைப் பார்க்க விரும்புகின்றாரேயன்றி, வாழ்க்கை முறையில் அதனைப் பார்க்கக் கவனம் செலுத்தவில்லை.

சத்தியம் என்பது சரியானதைப் போதிக்கின்றோம், சரியானதைக் கேட்கின்றோம் என்ற நிலைகளோடு நின்றுவிடக்கூடாது. சத்தியம் என்பதும், சரியான உபதேசங்கள் என்பதும் சரியான ஒரு வாழ்க்கை முறைக்காகவே. சத்தியத்தை மிக மிகச் சரியாகப் போதிப்பதாக எண்ணுகின்ற போதகர் ஒருவர் சபையாரைப் பார்த்து, இது போன்ற நல்ல போதனைகளை எங்கும் கேட்கமாட்டீர்கள் என்றாராம். அதனைக் கேட்ட ஒருவர் உண்மைதான், இதைவிட நல்ல உபதேச சபையைக் கண்டுபிடிப்பது கடினம்தான். ஆனால், மிகச் சரியான போதனைகளின்படி நடக்கின்றவர்கள் சிலர் இருக்கின்றனர் என்றாராம்.

ஆம். சிலர் உபதேசங்களிலும் போதனைகளிலும் விசேஷமாயிருந்த போதிலும், அவர்களின் வாழ்க்கையில் அதனைப் பார்க்க முடியவில்லை. அவர்கள் தாங்கள் மிகவும் சரியாகப் பிரசங்கிக்கின்றவர்கள் என்று நம்பியபோதிலும் இவர்களைப் பார்க்கின்றவர்கள், இவர்கள் நன்றாகச் சத்தியத்தின்படி வாழ்கின்றார்கள் என்று நம்ப இயலவில்லை. எவ்வளவு ஆரோக்கியமான உபதேச விஷயங்களைப் பேசினாலும் கேட்டாலும், அடிப்படையில் ஆவியினால் பிறந்த அனுபவமும், ஆவியினால் நடத்தப்படும் அனுபவமும் இல்லாவிட்டால், ஒரு ஆரோக்கியமான பரிசுத்த வாழ்க்கையைப் பார்க்க முடியாது.

சிந்தனைக்கு...

பிரசங்கிப்பது நல்ல சத்தியம் என்றாலும்,
கேட்கிறவனிடம் நல்ல இருதயம் இல்லாவிடில் பலனில்லை.

பிப்ரவரி
7
ஜீவ நீரோடை

மயக்கும் ஆராதனை

சுய இஷ்டமான ஆராதனையையும்...
கொலொசெயர் 2:23

கொலொசெயர் 2:11-23

இன்றைய பல நவீன கிறிஸ்தவ சபைகளில், எவரையும் ஈர்க்கின்ற வித மான உற்சாகமான ஆராதனைகள் உண்டு. ஆனால், இந்த திருச்சபைகள் வழங்கும் உற்சாக ஆராதனைகள், பங்கேற்போரின் உணர்வுகளை மழுக்கி விடுகிறது. இந்த சபைகள் நடத்தும் ஆராதனைகள் பரவச உணர்வுகளைக் கொடுத்து பரி சுத்தத்துக்கு ஏதுவான உணர்வுகளை அழித்து விடுகிறது. எனவே, இதுபோன்ற ஆராதனைகளில் இணைகின்றவர்கள் பாவத்தைக் குறித்தும், தவறான சுபாவங்களைக் குறித்தும், கர்த்தருக்கு உகந்ததல்லாத வாழ்க்கை முறைகளைக் குறித்தும் சீரியஸாகப் பார்க்கும் பார்வையை இழந்து விடுகின்றார்கள்.

கிறிஸ்தவ பக்தி என்றாலே இவர்களுக்கு உற்சாகம், உத்வேகம், வல்லமை, பரவசம், பெரிய பெரிய நம்பிக்கைகள் போன்றவைதான். இவர்கள் ஏறக்குறைய உண்மைநிலைகளை உணர முடியாதபடி மயக்க நிலைக்குச் சென்று விட்டவர்கள் போல மாறிவிடுகின்றனர். இவர்கள் கொண்டாட்ட உணர்வுகளையும், குதூகல உணர்வு களையும் பரவச மனநிலைகளையும் குறி வைத்துச் செயல்படுகின்றனர். ஆனால் தேவ ஆவியினால் உணர்த்தப்பட்டு உண்மைநிலைகளைக் கண்டறியும் வாய்ப்பு களை இழந்து போகின்றனர். எனவே, பரவச உணர்வுகளால் மேற்கொள்ளப்பட்டு பரிசுத்த உணர்வுகளை மழுங்கச் செய்து விடுகின்றனர்.

நாம் மகிழ்ந்து ஆராதிக்கலாம். நாம் களிகூர்ந்து கொண்டாடலாம். நாம் பரவசத்தோடு கர்த்தரைப் பாடித்துதித்து தொழுது கொள்ளலாம். அதே வேளையில், மனக்களிப்பை மட்டும் இலக்காக வைத்து சத்தியத்தைக் குறித்த விழிப்புணர்வை இழந்துவிடக்கூடாது. எருசலேமுக்கு உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வந்த விஷயத்தில், கொண்டாட்டமும் குதூகலமும் முன்னிலைப்படுத்தப்பட்டன. கர்த்தர் நாமத்தில் அதிக மகிழ்ச்சியை அடைய விரும்பிய அதே வேளையில், கர்த்தருடைய சில நியமங்கள் மறக்கப்பட்டன.

எனவே, உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருவது தொடர்பான உற்சாகத்தில் மூழ்கி, அதனை கொண்டு வருவது தொடர்பான வேத விதிகளை நினை யாமல் போனார்கள். எனவே, கர்த்தர் அவர்களின் கொண்டாட்ட மனநிலையைப் பாராட்டாமல், நியமங்களை மறந்த அவர்களின் உணர்வற்ற நிலையைக் கண்டித்தார். அது ஒரு விசனமான நிகழ்வாக மாறிப்போனது. தேவனை மகிமைப்படுத்தும் விஷயத்தில் ஆராதனையைவிட நம்மைச் சரியாய் ஆராய்ந்து பார்த்தலும், நம்மை கர்த்தருக்கேற்றபடி சரி செய்தலுமே மிக முக்கியம் என்பதை மறக்கக் கூடாது.

சிந்தனைக்கு...

ஆராதனைகள் உனக்கு சந்தோஷம் தரட்டும்,
ஆனால், உன் வாழ்க்கை தேவனை துக்கப்படுத்தாதிருக்கட்டும்.

ஐக்கியம் அவசியம்

பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏகயோசனையும்...
1 கொரிந்தியர் 1:10

1 கொரிந்தியர் 1:1-18

மளிகைக் கடையில் வேலைபார்க்கும் ஒருவர் நல்ல திறமையானவர். ஆனால், எந்தக் கடையில் வேலை பார்த்தாலும் சில மாதங்களுக்குள் அங்கிருந்து அவர் போக நேரிடும். ஒவ்வொரு கடையாகப் போய் வேலை பார்த்து இறுதியில் எந்தக் கடை முதலாளியும் அவரைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. ஏனென்றால் அவர் திறமையானவர் என்றாலும் உடன் பணிபுரிகின்றவர்களோடு சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் கருத்துவேறுபட்டு சண்டை போடுவார். எனவே, அவரால் எங்கும் நிலைவரமாய் வேலை செய்து, தன்னுடைய திறமையைப் பயன்படுத்த முடியவில்லை.

சில கிறிஸ்தவ விசுவாசிகளின் நிலைமையும் இப்படித்தான். அவர்கள் நல்ல பக்தியாளர்கள்தான். அவர்களுக்கு நல்ல ஆவிக்குரிய ஆர்வமும் ஊழிய வாஞ்சையும் உண்டு. ஆனால், அவர்களால் எங்கு போனாலும் பிற விசுவாசிகளோடு நல்ல ஐக்கியமாகத் தொடர முடிவதில்லை. அவர்களால் பாஸ்டர்களோடு நல்ல அந்நியோன்னியத்துடன் தொடர முடிவதில்லை. எனவே, சபைவிட்டு சபை போய் இறுதியில் போவதற்கு இன்னொரு சபை இல்லாத நிலைமைக்கு வந்து விடுவார்கள்.

கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம் நமக்குப் பிறரோடும் நல்ல ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்துகின்றது. தேவ ஐக்கியத்தை அனுபவிக்க அழைக்கப்பட்ட நாம், அந்த ஐக்கியம் அளிக்கும் ஆற்றலினால் மற்றவர்களோடும் நல்ல ஐக்கியம் கொள்ள வேண்டும். எல்லோரும் நாம் எதிர்பார்க்கின்ற விதமாக இருக்க வாய்ப்பில்லை. சிலருடைய சுபாவங்கள் வித்தியாசமாயிருக்கும். சிலருடைய கருத்துக்கள் வித்தியாசமாயிருக்கும். சிலருடைய பார்வைகள் வித்தியாசமாயிருக்கும். ஆயினும், நாம் தேவ ஐக்கியத்தினால் வருகின்ற அன்பைக் கொண்டு, மற்றவர்களிடம் காண நேரிடும் குறைவுகளை ஏற்றுக் கொண்டு, நட்பு பாராட்டப் பழக வேண்டும்.

மற்றவர்களிடம் காணப்படும் சில விஷயங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை அல்லாமலிருக்கலாம். ஆயினும், அவர்களின் ஐக்கியத்தை ஏற்றுக் கொள்ளாமல் போவது நல்லது அல்ல. கர்த்தருடைய வழியில் நடப்பதற்கு ஒருவருடைய நடவடிக்கைகள் இடையூறாக வராத நிலையில், மற்றவர்களை நாம் அற்ப காரணங்களுக்காக விலக்கக்கூடாது. சில நேரங்களில் நாம் நல்ல ஐக்கியத்தைக் கொடுத்துதான் அவர்களிடம் நல்ல விஷயங்களைக் கொண்டு செல்ல வேண்டும். எதற்கெடுத்தாலும் விலகிப் போகும் மனநிலை இறுதியில் நம்மை தனிமரமாக நிற்க வைத்துவிடும்.

சிந்தனைக்கு...

தவறற்றவர்களாயினும் அதிகமாய் நெருங்கிவிடாதே,
தவறுள்ளவர்களாயினும் வெறுத்து விலக்கி விடாதே.

பிப்ரவரி

9

ஜீவ நீரோடை

நல்லவைகள் பல இருந்தும்

கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல்....
1 இராஜாக்கள் 11:6

1 இராஜாக்கள் 11:1-13

ஆசிரியர் ஒருவர் மிக மிகச் சிறப்பாகப் பாடம் சொல்லிக் கொடுப்பவர். அவர் பல பிள்ளைகளுக்கு மிக அருமையாக டியூசன் சொல்லிக் கொடுத்து வந்தார். ஆனால், நாளடைவில் டியூசன் சொல்லி கொடுத்து, பிள்ளைகளைப் பரிட்சைக்கு சிறப்பாக ஆயத்தப்படுத்தும் திறமையை யாரும் பயன்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. ஏனென்றால், அவர் மிக சிறந்த ஆசிரியர் என்ற போதிலும், ஒழுக்கரீதியான விஷயங்களில் தன்னைச் சரியாக வைத்துக் கொள்ள இயலாதவராயிருந்தார். எனவே, அவரை நம்பி பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் தயங்கினார்கள்.

சிலரிடத்தில் மிக மிகச் சிறந்த விஷயங்கள் இருந்தாலும், அவர்களுடைய அந்த நல்ல விஷயங்களைப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால், பல நல்ல விஷயங்களின் நடுவில், ஒரு சில தவறான விஷயங்கள் பல தீங்குகளை ஏற்படுத்தும். சாலொமோன் ராஜாவிடத்தில் ஏராளம் ஏராளம் நல்ல விஷயங்கள் இருந்தன. ஆயினும், ஒழுக்க ரீதியான வாழ்க்கையில் சாலொமோனின் பலவீன நிலை அவனுக்குப் பிரச்சினைகளைக் கொண்டு வந்தது. சிலருடைய சில நல்ல விஷயங்கள் அதற்குரிய நற்பெயரைப் பெற இயலாதபடி, ஒரு சில தவறான விஷயங்கள் தடுத்துவிடும்.

சிலரிடத்தில் நல்ல பண்புகள் உண்டு. அவர்களிடம் நல்ல பல ஆற்றல்கள் உண்டு. அவர்களிடம் சிறந்த திறமைகள் உண்டு. ஆயினும், அவர்களைக் குறித்து சிலர் சொல்லும் போது எல்லாம் சரிதான். ஆனால், இந்த விஷயத்தில் அவர் வழி சரியில்லை என்பார்கள். எனவே, எத்தனை நல்ல விஷயங்கள் இருந்தாலும், ஒரு சில விஷயங்கள் அவற்றால் வரவேண்டிய நற்பலனை அழிக்கும் கரையான்களாக மாறிவிடும். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் அப்படியிருக்க முடியாது. அவர்கள் சில இடங்களில் வெளிச்சமாகவும், சில இடங்களில் இருளாகவும் இருக்க முடியாது. அவர்கள் தேவ ஆவியினால் நல்ல பல விஷயங்களைப் பெற்றுக் கொண்டே, சுய ஆவியினால் வேறு சில தீய விஷயங்களோடும் இருக்க முடியாது.

தேவ ஆவியும் தேவ ஐக்கியமும் ஒரு மனிதனை எல்லாப் பக்கங்களிலும் சரியாக இருக்கும்படியாகவே நடத்தும். சில பலவீனங்கள் ஏற்படலாம். சில குறை பாடுகள் ஏற்படலாம். ஆனால், அவை அவனிடம் தொடர்ந்து தங்க இயலாது. பூச்சிகள் வீட்டுக்குள் வந்தால் உடனுக்குடன் துரத்தப்படுவது போல , அவனும் தேவ ஆவியினால் உணர்வடைந்து, எந்தத் தவறும் எந்தக் குறைவும் தன்னை ஆளுகை செய்துவிடாதிருக்க எச்சரிக்கையாயிருப்பான்.

சிந்தனைக்கு...

நல்லவனாக அறியப்பட ஏராளம் நற்செயல்கள் வேண்டும்,
தீயவனாக அறியப்பட ஒரு தவறான செயல் போதும்.

பிப்ரவரி
10
ஜீவ நீரோடை

இல்லாததை எதிர்பார்த்தால்...

பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்... மத்தேயு 12:34

மத்தேயு 12:31-45

சிலரிடம் நிறைய நல்ல விஷயங்கள் உள்ளன. ஆனால், அவற்றில் எதையும் நாம் பயன்படுத்துவதில்லை. ஏனென்றால், அவர்களிடம் இல்லாத சில நல்ல விஷயங்களை நாம் எதிர்பார்க்கின்றோம். அவற்றை நாம் எதிர்பார்த்துப் பெற முடியாமல் போனதும், அவர்களுடைய உறவை நாம் வெட்டி விடுகின்றோம். ஒருவரிடம் நல்லது செய்யும் பண்பு உண்டு. அவரால் இயன்ற உதவியை அவர் யாருக்கும் செய்யாமலிருக்கமாட்டார். ஆனால், அவரிடம் பிறரை மதிக்கும் பண்பு கிடையாது. அவரிடம் யாராவது ஒரு நல்ல மரியாதையை எதிர்பார்த்தால் ஏமாந்து விடுவார்கள். அவரிடம் இல்லாத மரியாதை பண்பை எதிர்பார்த்து ஏமாற்றம் கண்டவர்கள், அவரிடம் உள்ள நல்லது செய்யும் நற்பண்பால் பயன்பெறுவதில்லை.

நண்பர் ஒருவர் எவரிடமும் நீண்டகாலம் நல்ல ஒரு தொடர்பை வைக்க இயன்றவர். ஏனென்றால், எந்த ஒருவரிடம் எந்தெந்த நற்குணங்கள் இல்லையோ அதை அவரிடம் அவர் எதிர்பார்க்கமாட்டார். எனவே, அவர் யார் விஷயத்திலும் ஏமாற்றம் அடையாமல் தேவையான அளவு தொடர்பை வைத்திருப்பார். சிலரிடம் சில நற்பண்புகள் இல்லை. அவற்றை நீங்கள் அவரிடம் எதிர்பார்த்தால் அதை அவர் தர முடியாது. அது அவரிடம் இல்லை. அதே வேளையில், ஒருவரிடமும் இல்லாத ஒரு நற்பண்பை நீங்கள் எதிர்பார்த்து கிடைக்காமல் போனதும், அந்த நட்பை வெட்டி விட்டால் அவரிடம் உள்ளவேறு பல நல்ல விஷயங்களால் நீங்கள் பயன் பெற முடியாது.

பல குடும்பங்களில் ஓயாத பிரச்சினைக்கு முக்கியமான காரணம் என்ன? தாங்கள் மிக முக்கியப் பண்பாக எண்ணும் ஒன்றை மற்றவரிடம் எதிர்பார்த்து காண முடியாமல் போன ஏமாற்றத்தை ஏற்க முடியாமையே. சிலரிடம் பொறுமை இல்லை. சிலரிடம் தாழ்மை இல்லை. சிலரிடம் பெருந்தன்மை இல்லை. சிலரிடம் உண்மை இல்லை. இல்லாத அவற்றிற்காக அவர் தேவனை நோக்கிப் பாராத வரைக்கும், நீங்கள் அதைப் பெற முடியாது.

எனவே, அவர்களுக்காக ஜெபிப்பதோடு அவரிடம் இல்லாத ஒன்றை குறி வைத்து நாம் எதிர்பாராமல், அதனை சகிக்கும் கிருபையை கர்த்தரிடம் கேட்க வேண்டும். எல்லோரிடம் நல்ல பண்புகள் இருக்க வேண்டும் என ஆசைப்படுவது நியாயமே. ஆனால், அதனை தங்களிடம் கொண்டிராதவர்கள் எப்படி அதனை காண்பிக்க முடியும்? தங்களிடம் இல்லாததை தேவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் உணர்வை கர்த்தர் அவர்களுக்கு அளித்திட ஜெபிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

எத்தனை நற்குணங்கள் உன்னிடத்தில் இருந்தாலும்,
பிறர் கண்களுக்கு உன்னுடைய கெட்ட குணம்தான் முதலாவது தோன்றும்.

பிப்ரவரி

11

ஜீவ நீரோடை

தேவ உறவு எப்படி?

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்... எபேசியர் 3:17

எபேசியர் 3:9-21

ஆபிரகாம் தேவன் பேசிக் கேட்டதைப் போல நான் ஒரு போதும் கேட்ட தில்லை. மோசேயைப் போல ஒது போதும் தேவனிடம் நான் முகமுகமாய்ப் பேசின தில்லை. சாமுவேலைப் போல தேவனோடு பேசுகிறதும் தேவ சத்தம் கேட்கிறது மான ஒரு அனுபவம் நான் பெற்றதில்லை. ஏசாயாவைப் போல நான் ஒரு போதும் தேவனைத் தரிசனத்தில் கண்டதில்லை. அப்பபோஸ்தலனாகிய பவுலைப் போல நான் கர்த்தரை தரிசிக்கவில்லை? நேரடியாகவோ, தரிசனம் மூலமாகவோ, சொப்பனம் மூலமாகவோ, ஒருபோதும் தேவனை நான் கண்டதில்லை.

ஆனால், ஓயாமல் தேவ உறவு, தேவ ஐக்கியம், தேவ நடத்துதல், தேவ தொடர்பு என்று பேசியும் எழுதியும் வருகின்றேன். கர்த்தர் அன்போடு பேசுகின்றார். கர்த்தர் என்னை நடத்துகின்றார். கர்த்தர் தம்மை எனக்குள் வெளிப்படுத்துகின்றார். கர்த்த ரோடு நான் பேசுகின்றேன் என்றெல்லாம் நான் உறுதியாக நம்புகின்றேன். தேவ உறவை எப்படி அனுபவிக்கின்றேன். தேவ ஐக்கியத்தை எப்படி உறுதிப்படுத்து கின்றேன். தேவ நடத்துதலை எப்படி உணருகின்றேன் என்பதெல்லாம் நியாயமான கேள்விகளே.

நான் ஆவியில் நிரம்பி வாழ்வதாக உணருகின்றேன். ஆனால், அதனை உணர்ச்சிவசப்பட முடிந்த அனுபவங்கள் வழியாக அல்ல. கர்த்தருக்கேற்ற உண்மை களின்படி வாழ்ந்திட உள்ளத்தில் எழுகின்ற தூண்டுதல்களையும், அதனை நிறைவேற்ற எனக்குள் கிடைக்கின்ற ஆற்றல்களையும் வைத்து அதனை உறுதிப்படுத்துகின்றேன். தேவ சமாதானத்தை எனக்குள் தனித்து அடையாளம் காண முடிகிறது. தேவ சந்தோஷத்தை என் ஆத்துமாவில் விசேமாக அடையாளம் காண முடிகிறது. தேவன் பேசுவதை பல்வேறு வழிகளில் என்னுடைய ஆவியில் நான் உணரமுடிகின்றது. தேவனால் நடத்தப்படுவது ஒரு தெளிவற்ற ஒன்றாக இருக்கவில்லை. ஒவ்வொரு சூழ்நிலையையும் கடந்து செல்லும் போது அவர் என்னை நடத்தியிருப்பதை நன்கு அறியமுடிகிறது.

கர்த்தரை நான் காணாவிட்டாலும் அவர் என் மனதையும், ஆவியையும், சிந்தையையும் உற்றுக் கவனிப்பதை என்னால் நிஜமாக அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, மனம் போல வாழ்ந்து விட முடியாது என்பதை அறிந்திருக்கிறேன். காதுகளில் கர்த்தர் பேசி கேட்டதில்லை. ஆனால், என் ஆத்துமாவுக்குள் அவர் ஏராளமாகப் பேசுவதையும் அவற்றால் என் மனம் ஆளுகை செய்யப்படுவதையும் உணர முடிகிறது. இவைகளால் நான் தேவ உறவுடன் வாழ்வதை உறுதிப்படுத்துகிறேன்.

சிந்தனைக்கு...

தேவனை நாம் காண்பதைவிட,

அவர் நம்மைக் காண்கிறார் என்ற விசுவாசம் அதிக விளைவுகளைத் தரும்.

பிப்ரவரி

12

ஜீவ நீரோடை

ஏன் மன்னிப்பு?

ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்...
எபேசியர் 4:32

எபேசியர் 4:17-32

ஒருவர் மற்றவர்களால் தனக்கு ஏற்படும் மனக்காயங்களுக்குத் தீர்வு, அவர்களை உடனுக்குடன் மன்னித்து விடுவதுதான் என்றாராம். தவறு செய்தவர்கள் நம்மிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பது நமது நோக்கமல்ல. ஏனென்றால், அது வரையிலும் அவர்களை மன்னிப்பதற்காக நாம் காத்திருக்க முடியாது. அவர்களை மன்னியாமலிருப்பது நாம் ஒரு பாரத்தை சுமந்து கொண்டேயிருப்பது போன்றது. அவர்கள் தவறுகளை உணர வெகுகாலம் ஆகலாம். அவர்கள் மன்னிப்புக் கேட்க விரும்பாமலே இறுதிவரை வாழலாம். எனவே, அதுவரை அவர் களைக் குறித்த ஒரு வருத்த உணர்வை நாம் பாரங்களாகச் சுமப்பது நல்லதல்ல.

மற்றவர்கள் செய்த தவறை நாம் செய்ய நேர்ந்திருந்தால் என்ன செய்வோம்? கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்போம். அவர் நம்மை உடனேயே மன்னித்துவிடுவார். எனவே, நமக்குத் தவறு செய்தவர்களை உடனேயே நாமும் மன்னித்து விடுவதுதான் நல்லது. மன்னிப்பதினால் மன்னிக்கப்பட்டவருக்கு நன்மை கிடைக்கின்றதோ இல்லையோ, நமக்குப் பெரிய நன்மை உண்டு. நம்மை விட்டு ஒரு பாரம் போய் விடும். நாம் தேவ விருப்பத்தைச் செய்து விட்ட திருப்தி ஏற்படும். நாம் ஒரு தவறை இன்று செய்ய நேர்ந்தால், பிறரை நாம் மன்னித்துவிட்ட நிச்சயத்தின் பின்னணி யோடுதான் கர்த்தரிடம் போய் அதற்காக மன்னிப்புக் கேட்க முடியும். மன்னியாத மனநிலை உடையவர்களை தேவன் மன்னித்தாலும் மனமகிழ்ச்சி காணமாட்டார்கள்.

பிறரை மன்னிக்காமல் இருப்பது ஒருவேளை நியாயமாகத் தோன்றலாம். ஏனென்றால், அவர்கள் தவறைச் செய்தது மட்டுமல்ல. அதனை இதுவரை தவறு என உணரவுமில்லை. அப்படிப்பட்ட கடினமனக்காரர்களை ஏன் மன்னிக்க வேண்டும் என்பது நியாயமான கேள்வியே. சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவிடம் யாரும் தாங்கள் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்கவில்லை. ஆனால், இயேசு அவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் ஜெபித்தார்.

தவறான மனநிலையின் விளைவாகத்தான் பலர் தவறு செய்கின்றனர். அவ்வித மனநிலையாளர்களிடம் தவறுகளை உணருகின்ற நற்பண்பை பல வேளைகளில் எதிர்பார்க்க முடியாது. எனவே, அவர்களைக் குறித்து கோபப்படுவதும் வருத்தப்படுவதும் நியாயமாகத் தோன்றினாலும், அவர்களை மன்னியாமல் மனச்சுமையோடு நாம் தொடருவது நமக்கு நல்லதல்ல. ஆனால், மன்னிப்பது சுய ஆற்றலால் இயலாது. தேவ கிருபை பெற்றவர்களுக்குத்தான் அது முடியும். இயேசுவைப் பெற்றவர்கள் கிருபையையும் பெற்றவர்களே.

சிந்தனைக்கு...

நாம் மன்னித்தால் பிறருக்கு பயன் இல்லாமல் போகலாம்.
ஆனால், நமக்கு அதனால் பயன் இராமல் போகாது.

பிப்ரவரி

13

ஜீவ நீரோடை

விலகக் கூடாத பண்புகள்

புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே? கொலோசெயர் 3:10

கொலோசெயர் 3:1-17

அரசு அலுவலகம் ஒன்றில் பணிபுரிகின்ற ஒருவர் மிகவும் நேர்மையான பணியாளர். எந்த ஒரு விஷயத்திலும் நேர்மைக்கும், சரியாகக் கடமையைச் செய்வதற்கும் முதலிடம் தருகின்றவர். ஆனால், அந்த அலுவலகத்தில் அவருடைய நேர்மையைக் கண்டுகொள்வதும் இல்லை, பாராட்டுவதும் இல்லை. இதைக் கவனித்த இன்னொரு பணியாளர் அவரிடம், நீங்கள் இவ்வளவு நேர்மையாக இருக்கின்றீர்கள். ஆனால், யாருமே அதனைப் பாராட்டுவது இல்லை. அதனால் உங்களுக்கு விரக்தி ஏற்படவில்லையா என்று கேட்டார். அதற்கு அவர் எவ்வளவு வருடங்களாக நீங்கள் வெள்ளை உடைகளை மட்டுமே அணிகின்றீர்கள். ஆனால், யாரும் உங்களைப் பாராட்டுவதில்லை. அதனால் உங்களுக்கு விரக்தி ஏற்பட்டு நீங்கள் வெள்ளை நிற உடைகளை விட்டுவிட்டீர்களா? என்று கேட்டார்.

சில நல்ல பண்புகள் என்பது நாம் விரும்பி ஏற்றுக்கொண்டவையாக இருக்க வேண்டும். அவற்றைப் பிறர் மதிக்கவில்லையே என்று நாம் கவலைப்படக்கூடாது. ஏனென்றால், அது நமக்குப் பிரியமானது என்பதற்காக அந்த பண்பைச் சார்ந்திருக்கின்றோம். சில நேரம் அவற்றால் நமக்கு நன்மை கிடைக்காமல் நஷ்டம்கூட நேரிடலாம். சில நேரம் அவற்றை விட்டு விடுவதற்கான அழுத்தங்கள்கூட நேரிடலாம். இந்தப் பண்புகளில் நாம் பிரியமாயிருக்கின்றோம். இந்தப் பண்புகளில் கர்த்தர் பிரியமாயிருக்கின்றார். எனவே, பிறர் அதனை அலட்சியம் செய்தாலும் நாம் அவற்றை விடக்கூடாது.

சில நேரங்களில் மற்றவர்கள் எதிர்மறையான சுபாவங்களோடு நடந்து கொள்ளும்போது, நாம் மட்டும் ஏன் சரியான சுபாவங்களோடு செயல்படவேண்டும் என்ற கேள்வி எழும்பும். அவர்களிடமிருப்பது கோபம். நம்மிடமிருப்பது பொறுமை. அவர்களிடமிருப்பது வெறுப்பு. நம்மிடமிருப்பது அன்பு. அவர்களிடமிருப்பது பெருமை. நம்மிடமிருப்பது தாழ்மை. அவர்கள் நல்லவர்களாக இராததால் தவறான சுபாவங்களை விடவில்லை. அங்கே நாம் நல்லவர்களென்றால் நம்முடைய நல்ல சுபாவங்களை விடக்கூடாது.

சிலர் நல்ல சுபாவங்களோடு வாழ்வதை விரும்புவார்கள். ஆனால், கெட்ட சுபாவக்காரர்களின் சுபாவங்களால் வெறுப்புற்று தங்களை மாற்றிக் கொள்வார்கள். ஆனால், அது உண்மையான ஆவிக்குரிய அனுபவம் அல்ல. நாம் தேவனுடைய பிள்ளைகளானால், நம்முடைய ஆவிக்குரிய அடையாளங்களாகிய நற்பண்பினை, எந்தச் சூழ்நிலையிலும் விட்டு விடாமல் பற்றிக் கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

பிறரை நல்லவர்களாகப் பார்க்க முடியாவிட்டால் வருந்தாதே, உன்னை அவர்கள் கெட்டவர்களாகப் பார்க்க இடம் தராதே.

பிப்ரவரி
14
ஜீவ நீரோடை

ஏன் முடியவில்லை?

அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். எபேசியர் 6:10

எபேசியர் 6:10-24

புத்தகப் பண்டல்களை ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்கு நகர்த்துவதற்காக ஒரு வேலையாள் அழைத்து வரப்பட்டார். அந்த வேலையாள், புத்தகப் பண்டல்களைத் தூக்கிப் பார்த்து விட்டு அடேயப்பா ! இது ரொம்பப் பார மாயிருக்கிறது. இதனை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்த்துவது முடியாத காரியம். இரண்டு பேர் சேர்ந்துதான் நகர்த்த முடியும் என்றார். ஆனால், அந்தப் புத்தக பண்டல்கள் தூக்கி நகர்த்த முடியாத அளவிற்கு பாரமானவை அல்ல. இந்த வேலையாளுக்கு உடல் வலிமை மிகவும் குறைவு. சற்று பாரமான சுமைகளை சுமந்து அவருக்குப் பழக்கமும் இல்லை.

சில நேரங்களில் சில விஷயங்களை முடியவே முடியாது என்கிறோம். ஆனால், உண்மையில் அவை முடியாதவை அல்ல. நாம் சற்று கடினமானவை களைச் செய்ய முடியாத அளவிற்கு மிகவும் பலவீனமாய் இருக்கின்றோம். சில குணங்களை வெளிப்படுத்துவது கடினமாயிருக்கிறது. சில பழக்கங்களை விடுவது கடினமா யிருக்கிறது. சிலரோடு நல்லுறவுடன் வாழ்வது கடினமாயிருக்கிறது. இப்படியெல்லாம் மனிதன் வாழ்வது கடினமான காரியம் என்கிறோம்.

கானானை வேவு பார்க்கச் சென்றவர்களில் பத்துப்பேர் அங்கு கண்ட வலிமையான ஆட்களையும், கோட்டைகளையும் பார்த்துவிட்டு, கானானைச் சுதந்தரிப்பது முடியாத காரியம் என்றனர். ஆனால், உண்மை என்ன? அந்த தேசம் பிரவேசிக்க முடியாதபடி மிகவும் வலிமையானது என்பது அல்ல. இவர்களின் விசுவாசம் பலவீனமானது. இவர்கள் தங்களின் பலவீனத்தின் விளைவாகவே கானானின் வலிமையை அளவுக்கதிகமாகக் கணக்கிட்டுச் சொன்னார்கள். பாவம் மிகவும் வலிமையானது. மனிதன் எப்படி அதை மேற்கொள்ள முடியும். பொறுமை, தாழ்மை, சகிப்புத்தன்மை, சத்துருக்களை நேசித்தல், பதிலுக்குப் பதில் செய்யாமை போன்றவை நிறைவேற்ற மிகவும் கடினமானவை என்றுதான் நாம் சிந்திக்கின்றோம்.

உண்மைதான். ஆனால், அவை இயலாதவை அல்ல. ஏன் நம்மில் பலர் அவற்றில் தோற்கின்றோம்? அவை ஜெயிக்க முடியாதவை என்பதால் அல்ல. நாம் போதிய அளவு ஆவிக்குரிய பலமுடையவர்கள் அல்ல. நாம் நம்முடைய பலவீனத்தை உணர்ந்து கொள்ளாமல், மற்றவைகளைக் கடினம் கடினம் என்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுலைப் போல என்னைப் பலப்படுத்துகின்ற கிறிஸ்துவினாலே என்று கூறும் நிலைக்கு நாம் வர வேண்டும். கர்த்தருக்குள் நம்மை இன்னும் இன்னும் பலப்படுத்தும் அனுபவங்களில் நாம் வரவேண்டும்.

சிந்தனைக்கு...

**கிறிஸ்துவுடன் வாழும் நிச்சயம் இல்லாவிட்டால்,
கிறிஸ்து சொன்னபடி வாழ்வது நிச்சயம் முடியாது.**

பிப்ரவரி

15

ஜீவ நீரோடை

மிஞ்சி வராதே

அப்பொழுது யோசபாத் பயந்து...

11 நாளாகமம் 20:3

11 நாளாகமம் 20:1-17

கடலில் அலைகள் பெரிய அளவில் எழுந்து வர ஆரம்பிக்கும் போது, விரைவில் அது எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு போய் விடும் என்பதுபோலவே தோன்றும். ஆனால், வேகமாக எழுந்துவரும் அலைகள் சற்று தூரம் வந்ததும், வேகமிழந்து அதிக தூரம் வராமல் திரும்பி விடும். வாழ்க்கையிலும் சில நேரங்களில் நமக்கெதிராக ஏதோ ஒன்று மிகப்பெரிய அளவில் எழுந்துவருவது போலத் தோன்றும். ஆயினும், அவை குறிப்பிட்ட ஒரு எல்லையுடன் நின்று போய்விடும். நாம் பயந்த அளவிற்கு எதுவும் நிகழாமல் போய்விடும். ஆனால், அங்கே பயம், பதட்டம், கவலை, போன்றவை வந்து சற்று நேரம் நம்மை அலசடிப்படுத்திவிடும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யோசபாத் என்ற இராஜாவின் நாட்களில், ஒரு மாபெரும் யுத்தத்திற்கான சூழல் எழுந்தது. யோசபாத் இராஜாவால் எதிர்கொள்ள இயலாத அளவிற்கு அது மிகப்பெரிய அளவிலான ஒரு யுத்தச் சூழலாக இருந்தது. ஆயினும், யோசபாத் ராஜா தன்னுடைய முழுக்கவனத்தையும் தேவனை நோக்கித் திருப்பி தேவ உதவியைத் தேடியபோது, அந்த யுத்தச் சூழல் அப்படியே கரைந்து போய்விட்டது.

நெகேமியா எருசலேமின் மதில்சுவர்களைக் கட்டி எழுப்ப ஆரம்பித்தபோது எதிராளிகள் ஒரு பெரிய புயல்போல எழுந்து வருவது போல் இருந்தது. ஆயினும், நெகேமியா அதற்காகப் பயந்து போய் பின்வாங்கவில்லை. எதிராளிகளோடு போராட வேண்டி வரும் என்பது போல சூழல் உருவானது. ஆயினும், அப்படி எதுவும் வராமல் மேகம் கலைந்து போவதுபோல நீங்கிப் போய்விட்டது. ஆம், தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமாயிருக்கிறார். வாழ்க்கையில் சில அச்சுறுத்தும் சூழ்நிலைகள் வரும். சில எதிர்பாராத போராட்டங்கள் வரும். சில நிகழ்வுகள் நம்மை நிர்மூலமாக்கிவிடுவது போல தோன்றும். ஆயினும், அவ்விதம் இருப்பதில்லை. நாம் நினைத்த விதமாக எதிராக ஒன்றும் நடந்துவிடுவதில்லை.

எதுவும் கர்த்தர் விதித்த எல்லைகளைக் கடந்து வருவதில்லை. இம்மட்டும் வா – மிஞ்சிவராதே என்பது போன்று கர்த்தர் சில கட்டுப்பாடு எல்லைகளைக் குறித் திருப்பார். அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது போல, ஒன்றையும் குறித்துக் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்த நமது விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்போது எந்தவிதமான பதட்டமான சூழ்நிலைகளின் நடுவிலும், தேவ சமாதானம் நமக்குள் கிரியை செய்து நம்மை கிறிஸ்துவுக்குள் காத்துக் கொள்ளும்.

சிந்தனைக்கு...

தேவனோடுள்ள ஐக்கியம் பெரிதாயிருந்தால்,
துன்பங்கள் நமக்குச் சிறிதாகவே தோன்றும்

சமநிலை அவசியம்

அலைகளைப்போல... அலைகிறவர்களாயிராமல்....
எபேசியர் 4:14

எபேசியர் 4:11-24

இந்நாட்களில் யூடியூப் சானல் வழியாக பல்வேறு தகவல்கள் வாரி வழங்கப் படுகின்றன. பழங்கள், காய்கள், தானியங்கள் என ஒவ்வொரு பொருட்களிலும் என்னென்ன ஆரோக்கிய அம்சங்கள் இருக்கின்றன என்பதைப் பலர் பல கோணங்களில் பதிவிடுகின்றனர். அவற்றை பார்க்கின்ற பலர், ஆஹா, இந்தப் பழத்தில் இவ்வளவு நல்ல விஷயங்கள் இருக்கின்றதே. இந்தக் காயில் இவ்வளவு மருத்துவ குணங்கள் இருக்கின்றதே, இந்தத் தானியத்தில் இவ்வளவு சத்துக்கள் இருக்கின்றதே என்று ஆச்சரியப்பட்டு அவற்றைச் சாப்பிட ஆரம்பிப்பார்கள்.

அதே வேளையில் யார் யார் உடலுக்கு அது பொருந்தும், யார் யார் உடலுக்கு அது நல்லது என்று பார்ப்பதில்லை. எல்லாப் பொருளிலும் சில நல்ல தன்மைகள் உண்டு. அதே வேளையில் பொருந்தாத சில அம்சங்களும் உண்டு. எனவே போதிய சோதனையும் புரிந்து கொள்ளுதலும் இல்லாமல், எல்லாவற்றையும் பயன்படுத்த ஆரம்பித்தால் உடலுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படும்.

இன்று பலருடைய கிறிஸ்தவப் போதனைகளில் ஏதாவது ஒரு அனுபவத்தை அதிக முக்கியப்படுத்தும் நிலை உள்ளது. அது போல, வேறு பல அனுபவங்களைக் கண்டுகொள்ளாத நிலையும் உள்ளது. சிலர் ஜெபத்தை மட்டுமே எல்லாவற்றிற்கு எல்லாமாகப் போதிப்பார்கள். சிலர் ஆராதனையை மட்டுமே ஆவிக்குரிய அனுபவ மாகக் காட்டுவார்கள். சிலர் காணிக்கையை மட்டுமே ஆசீர்வாத வழியாகக் காட்டு வார்கள். சிலர் துதி செய்வதையே அனைத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வாகக் காட்டுவார்கள். இவற்றைக் கேட்கும் பலர் அந்தந்த உபதேசத்தைக் கேட்கும்போது, அதனை முக்கியமாக எண்ணிச் செயல்படுவார்கள். ஆனால், சமநிலையோடு எந்தெந்த அனுபவங்களுக்கு எந்தெந்த முக்கியத்துவம் தர வேண்டும் என்று அறியாத தால், ஒரு போதும் உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சியைக் காணமாட்டார்கள்.

சிலரிடத்தில் ஆராதிக்கும் பழக்கம் அதிகம். ஆனால், ஜெபிக்கும் பழக்கம் குறைவு. சிலரிடம் ஜெபிக்கும் பழக்கம் அதிகம். ஆனால், தேவ வார்த்தை கேட்கும் பழக்கம் குறைவு. சிலரிடம் துதிக்கும் பழக்கம் அதிகம். ஆனால், பரிசுத்த விழிப் புணர்வு குறைவு. இவ்விதம், ஏதாவது ஒரு அனுபவத்தை முக்கியப்படுத்தி யாராவது பேசும் போது, அதனை அப்படியே பின்பற்றி விடுகிறார்கள். எனவே, ஒரு முழுமை யான ஆவிக்குரிய ஆரோக்கிய நிலைக்கு எவை எவை வேண்டும் என்பதை அறியாமல் போகிறார்கள். ஆம், உண்மையான தேவ உறவின் அனுபவம் இல்லாத வர்களுக்கு இப்படி நிகழ்கிறது.

சிந்தனைக்கு...

மற்றவர்களின் அனுபவங்களை அசட்டை செய்யாதே,
ஆயினும், அவற்றைப் பின்பற்ற அவசரப்படாதே.

பிப்ரவரி

17

ஜீவ நீரோடை

சபை எதற்காக?

நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்... எபேசியர் 2:19

எபேசியர் 2:11-22

திருச்சபை கூடுகையில் தவறாமல் கலந்து கொள்வார் ஒருவர். ஆனால், போதகரின் பிரசங்க வேளையில்தான் சபைக்கு வருவார். பிரசங்கம் முடிந்ததும் போய் விடுவார். பிரசங்கம் கேட்பதற்காக மட்டும் சபைக்கு வருகிறீர்களே என்று சிலர் கேட்பார்கள். அதற்கு அவர் எனக்குப் பயன் தருகின்ற ஒன்றிற்காக மட்டும்தான் நான் நேரத்தைச் செலவிட முடியும் என்பார். அப்படியானால் விசுவாசிகளோடு ஐக்கியம், ஐக்கிய ஆராதனை, ஆகியவை தேவையில்லையா என்று சிலர் கேட்பார்கள். தேவைதான் ஆனால், இந்த சபையில் கிறிஸ்தவர்கள் கூடி வருகின்றார்கள். ஆனால், அவர்கள் நடுவில் நான் ஐக்கியத்தைக் காணவில்லை என்பார்.

இவர் சொல்வது சரிதான். சில சபைகளில் ஜனங்கள் கூடி வருகின்றார்கள். ஆனால், அவர்கள் ஆவியில் இணைக்கப்பட்டு கூடி வரவில்லை. சில சபைகளில் இவரைப் போலவே எல்லாரும் இருப்பதால் ஆவிக்குரிய ஐக்கியம் அங்கே இல்லை. சிலருக்கு சபை கூடுகை என்றால் ஒரு ஆராதனை வேளை மட்டுமே. சிலருக்கு அது ஒரு பிரசங்கம் கேட்கும் வேளை மட்டுமே. ஆனால், சபை கூடுதல் என்பதின் பிரதான நோக்கம், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் ஒன்றிணைந்து ஆவிக்குரிய ஐக்கியத்தை வளர்ப்பதும், அதனை அனுபவிப்பதுமே.

பெரும்பாலான சபைகளில் ஐக்கியத்தைத் தேடி வருகின்றவர்களும் இல்லை. ஐக்கியத்தைக் கொடுப்பவர்களும் இல்லை. ஒவ்வொருவரும் ஒரு ஆன்மிக நிகழ்ச்சியில் பங்கேற்கும் உணர்வோடு வருகின்றார்களேயன்றி, ஒருவருக் கொருவர் ஐக்கியப்படுவதை முக்கியமாக எண்ணவில்லை. அப்படியே ஐக்கியப் பட்டாலும், தங்களுக்குப் பிரியமானவர்களோடும் தங்களுடைய அந்தஸ்திற்கேற்ற வர்களோடும் மட்டுமே ஐக்கியம் கொள்ளுகின்றார்கள். பல சபைகள் நவீன ஆராதனை முறைகளாலும், கவர்ச்சிமிகு போதனை முறைகளினாலும், உலகத்துக்கு ஏற்ற நிகழ்ச்சிகளினாலும் மிகமிக அழகாக்கப்பட்டுவிட்டன.

அதே வேளையில் சபையின் மிக முக்கியமான ஐக்கிய அனுபவம் முக்கிய இடம் பெறாததால், அவை வெறும் ஆன்மிக சபாக்களாகிவிட்டன. சபை என்பது பெரும்பாலும் கிறிஸ்துவால் மீட்கப்பட்டவர்களின் ஐக்கியம் என்ற அர்த்தத்தை இழந்து விட்டது. பெரும்பாலும் சபை என்பது பழைய ஏற்பாட்டு ரகமான வழிபாட்டு ஸ்தலமாகவே செயல்படுகிறது. எனவே, ஐக்கியத்தைத் தேடி சபைக்கு வருகிற வர்களும் குறைவு. ஐக்கியம் கொடுப்பதற்கான ஆவிக்குரிய இருதயம் உடைய வர்களும் குறைவு. சபையின் நோக்கம் அறிந்து செயல்பட கிருபை கேட்போம்.

சிந்தனைக்கு...

தேவ ஐக்கியத்தை வாழ்க்கையில் கண்டவர்கள்,
வெறும் ஆராதனைப் பங்கேற்பால் திருப்தி காணமாட்டார்கள்.

பிப்ரவரி

18

ஜீவ நீரோடை

கடினமான நேரங்கள்

நீ தண்ணீர்களைக் கடக்கும்போது....
ஏசாயா 43:2

ஏசாயா 43:1-12

என்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் கடினமாயிருப்பதை உணருகின்றேன். ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு மணிவேளையையும் கடந்து செல்ல, எனக்கு மிக மிகப் பக்குவமான இருதயமும், விசேஷமான ஒரு ஆற்றலும் தேவைப்படுவதை உணருகின்றேன். சில விஷயங்கள் என்னை அழுத்துகின்றன. சில விஷயங்கள் என்னைக் குத்துகின்றன. சில விஷயங்கள் எனக்குள் நெருடலை ஏற்படுத்துகின்றது. ஆனால், அவற்றால் ஏற்படும் மனநிலையைச் சார்ந்து செயல் பட்டால், எனக்கு இன்னும் இன்னும் துன்பம் வந்துவிடும். நான் சந்திக்க நேரிடும் சில விஷயங்கள் என்னைக் கோபமடையச் சொல்கின்றன. என்னை அவை நியாயம் கேட்கச் சொல்கின்றன. என்னை அவை கொந்தளிக்கச் சொல்லுகின்றன.

ஆனால், என்னுடைய மனதின் குரலுக்கு நான் செவிகொடுத்து அப்படியே செயல்பட்டால், எனக்குக் கெட்டது நேரிடுமேயன்றி நல்லது நடக்காது என்று தெரியும். என் உணர்வுகளையெல்லாம் அப்படி வெளிப்படுத்தி நியாயத்திற்காக போராடினால், இறுதியில் எனக்கு அமைதிக் குறைவும் சோர்வும்தான் வரும் என்பது எனக்குத் தெரியும். எனவே, பொறுமையின் ஆற்றலையும், மன ஏவுதலின்படி செயல்படாமல் தேவனுக்காக தாழ்ந்து போகும் கிருபையும் கேட்டு ஜெபிக்கின்றேன்.

ஆனால் சாத்தான், நீ ஒரு கோழை, நீ உன்னுடைய நீதிக்காகப் போராடத் தெரியாதவன், மற்றவர்களை மேற்கொள்ளும் துடிப்பும்சொரணைத் தன்மையும் உனக்கு இல்லை என்கிறான். ஆனால், அதற்காக உணர்ச்சிவசப்பட்டு நான் எல்லோரைப் போல செயல்பட்டால், எனக்குத்திருப்தியும் சந்தோஷமும் வராது என்பது எனக்கு தெரியும். ஏனென்றால், நான்ஆவிக்குரியவன். நான் ஆவிக் கேற்றபடி செயல்பட்டால்தான் எனக்குள் நான் குற்றமற்ற மனசாட்சியோடும், கர்த்தருடைய ஐக்கியத்தின் நிச்சயத்தோடும் வாழ முடியும்.

ஆனால், நான் கடினமான பாதைகளில் நடக்க நேரிட்டாலும் கர்த்தர் என்னை அற்புதமாக நடத்துகிறார். ஒவ்வொரு கடினப் பகுதியையும் விசேஷ பலத்தோடு சந்தித்துக் கடந்து செல்ல வைக்கிறார். ஏன் எனக்கு இப்படி எதிர்மறையான மனச் சோர்வு சூழ்நிலைகளைக் கர்த்தர் வரவிடுகிறார் என்று சிந்திக்கத் தோன்றுவது உண்மைதான். ஆனால், எத்தனை அருமையாக ஒவ்வொரு சூழலையும் தேவ கிருபையால் மன மகிழ்ச்சியோடும் குற்றமற்ற மனசாட்சியோடும் கடந்து போக வைக்கிறார் என்று ஆச்சரியப்படுகிறேன். எனவே, ஏன் இப்படி நிகழ்கிறது என்பதை விட, எத்தனை அருமையாய்க் கர்த்தர் நடத்துகிறார் என்ற எண்ணமே மேலோங்குகிறது.

சிந்தனைக்கு...

கடினமான பாதைகளையே பார்த்துக் கொண்டிராதே,
உன்னை நடத்திச் செல்ல இயன்ற தேவனைப் பார்.

பிப்ரவரி
19
ஜீவ நீரோடை

தண்டனை அல்ல விளைபலன்

எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்...
கலாத்தியர் 6:7

கலாத்தியர் 6:1-18

வாழ்க்கையின் ஏதாவது ஒரு பகுதியில் நாம் எடுத்த தவறான முடிவிற்காகவும், நாம் செய்த தவறுக்காகவும் கர்த்தர் தண்டித்து விட்டார் என்று சொல்லுகின்றோம். ஆனால், உண்மையில் தேவன் நம்மை தண்டிக்கவில்லை. சில தவறான முடிவுகளுக்குப் பின்னாலும், சில தவறுகளுக்குப் பின்னாலும் நாம் காண நேரிடும் கஷ்டங்களும் சோர்வுகளும் கர்த்தர் தந்த தண்டனைகள் அல்ல. அவை நாம் விதைத்த விதைகளின் விளைபலன்கள். எதை விதைத்தோமோ அதனுடைய அடிப்படையில் விளைவு ஏற்படுகிறது. அது தேவன் கொடுத்த தண்டனை அல்ல.

இரட்சிப்பின் அனுபவமுடைய ஒரு பெண். திருமணத்திற்காக வரன் தேடிய போது அவளுடைய ஆவிக்குரிய அனுபவத்திற்கு ஏற்ற ஒரு வரன் வந்தது. அவளும் 90 சதவிகிதம் ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டாள். ஆயினும், இன்னும் கொஞ்சம் நல்ல சம்பளம் வாங்குகின்ற, வரன் கிடைத்தால் நல்லது என்று யோசிக்க ஆரம்பித்தாள். அவ்விதமே வரன் கிடைத்தது. ஆனால், ஆவிக்குரிய அனுபவப் பின்னணி அவனுக்கு வலிமையாக இல்லை. குடும்ப வாழ்விற்குள் சென்ற பின்பு அவன் சந்தேகம் என்னும் மனநிலையால் பாதிக்கப்பட்டவன் என்பது தெரியவந்தது. எந்த ஒரு சிறு ஆதாரமும் இல்லாமலே திரும்பத் திரும்ப அவளை சந்தேகத்தோடு பார்க்கும் ஒரு இயற்கை மனப்பிரச்சினை அவனுக்கு இருந்தது.

அதனுடைய விளைவாக அவள் மிகுதியாக மனநிலையில் திரும்பத் திரும்ப துன்புற நேர்ந்தது. அவள் அதனை தேவ தண்டனையாக இருக்குமோ என்று எண்ணினாள். ஆனால், அவள் சுயமனநிலை சார்ந்து தவறாக எடுத்துக் கொண்ட ஒரு தீர்மானத்தின் விளைவு அது என்பதை தேவன் அவளுக்கு உணர்த்தினார். ஒரு பொருளைச் சரியாக ஆராய்ந்து பார்க்காமல் தேர்வு செய்துவிட்டால், அதில் எந்தவிதமான ஒரு பழுது இருக்கிறதோ அது வெளிப்படவே செய்யும். அது தண்டனை அல்ல. விதைத்த விதையின் இயற்கையான பலன்.

சில தேவ பிள்ளைகள் ஏதோ ஒரு சூழ்நிலையில் அதிகச் சிந்தனையின்றி நலமான முடிவுகளை எடுக்கத் தவறிவிடுகிறார்கள். அதனுடைய இயற்கையான பலனை சில வேளை காலம் முழுவதும் அனுபவிக்க நேரிடுகிறது. ஆயினும், கர்த்தர் அவர்களுக்குக் கிருபை அளிக்கின்றார். முள் போன்ற ஒன்று அவர்களின் வாழ்க்கையை அவ்வப்பொழுது குத்தினாலும், கர்த்தர் அதனைத் தாங்கவும் சகிக்கவும் கிருபை தருகிறார். அதனால் அவர்கள் சிலவற்றைத் தாங்கிக்கொண்டும் பொறுத்துக் கொண்டும், தங்களுக்கு நியமித்த ஓட்டத்தை வெற்றியாக ஓடுகிறார்கள்.

சிந்தனைக்கு...

நாம் தவறாக விதைத்ததை அறியாமல்,
தேவன் சரியானதை விளைவிக்கவில்லை என்று வருந்துவது தவறு.

பிப்ரவரி

20

ஜீவ நீரோடை

தேவ சமுகம்

நான் உன்னோடே கூட இருப்பேன்...
நியாயாதிபதிகள் 6:16

நியாயாதிபதிகள் 6:11-23

மோசேயிடம் தேவன் என் சமுகம் உனக்கு முன்னே செல்லும் என்றார். மிக மிக ஆறுதலும் நம்பிக்கையும் நிறைந்த வாக்குத்தத்தமான வார்த்தை இது. ஆனால் கர்த்தர் சமுகம் முன்னே செல்லுவதால் அங்கே கஷ்டம் இல்லை, துன்பம் இல்லை, போராட்டம் இல்லை என்று அர்த்தம் அல்ல. மோசேக்கு முன்பாகத் தேவ சமுகம் செல்வது பிரச்சினையற்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க அல்ல. எந்தப்பிரச்சினை வந்தாலும் அதனை தைரியமாக எதிர்கொள்வதற்கே அந்த தேவ சமுகம்.

கர்த்தர் நம்மோடிருந்தால் இப்படி நடக்குமா, அப்படி நடக்குமா என்று நாம் கேட்கின்றோம். சில நேரங்களில் பிறரும் கர்த்தர் உங்களோடிருந்தால், ஏன் உங்களுக்கு இப்படியெல்லாம் நடக்கின்றது என்று கேட்பார்கள். பிரச்சினைகள் நமக்கு வந்தால் கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்று நாம் சொல்வதற்குத் தயங்கும் வேளைகளுண்டு. தேவ சமுகம் நம்மோடிருந்தால் ஏராளமான பிரச்சினைகள் வராமலே போய்விடும் என்பது உண்மையே. ஆயினும், தேவ சமுகம் நம்மோடிருப்பதால் நாம் இந்த பூமிக்குரிய பலவிதமான பிரச்சினைகளுக்கு முற்றிலும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

மனுஷருக்கு நேரிடுகின்ற சோதனைகள் நமக்கும் நேரிடும். ஆனால், அவற்றை நாம் தேவ பலத்தாலும் கிருபையாலும் எதிர்கொள்வோம். தேவ சமுகம் நமக்கு சோதனைகளைச் சந்திக்கும் ஆற்றலைத் தரும். தேவ சமுகம் சோதனைகளைக் கடந்து போகத் தேவையான கிருபையைத் தரும். எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல், நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டாலும் ஒடுங்கிப் போவதில்லை என்றான், ஆம், தேவ சமுகம் நம்மோடிருந்தால் நாம் பிரச்சினைகளை மேற்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றோம். அதனை நாம் பயன்படுத்த வேண்டும்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பயப்படேன் என்றான் தாவீது. கர்த்தர் தாவீதோடு இருந்தால் மரண இருள் எப்படி வரும் என்ற கேள்வி அல்ல. கர்த்தரின் சமுகத்தில் இருப்பவன், எந்த இருள் நிறை சூழ்நிலையிலிருந்தாலும், பயப்படாமல் அதனை எதிர்கொள்வான் என்பதே புரிந்துகொள்ள வேண்டிய விஷயம். கிதியோன் கர்த்தர் எங்களோடிருந்தால் இவை எல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன் என்று கேட்டான். (நியா 6:13) ஆனால், அதே கிதியோன் தேவ சமுகத்தைக் குறித்த வாக்குறுதியைப் பெற்ற போது, அதனுடைய பலத்தில் பெரிய சவால்களைச் சந்தித்து பெரிய வெற்றி பெற்றான்.

சிந்தனைக்கு...

சில விஷயங்கள் பாவிக்கும் நீதிமானுக்கும் ஒரே விதமாய் நடக்கலாம், ஆனால், முடிவுகள் ஒரே விதமாய் இராது.

பிப்ரவரி

21

ஜீவ நீரோடை

பயமும் அன்பும்

நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?
யோவான் 21:16

யோவான் 21:14-25

தேவ பயம் என்பது நல்ல ஒரு ஆவிக்குரிய பண்பு. அதைவிடச் சிறந்தது தேவ அன்பு என்ற ஆவிக்குரிய பண்பு. தேவ பயம் என்பது தேவனைக் குறித்த ஒரு அச்ச உணர்வின் விளைவாக தவறுகளைத் தவிர்க்கின்ற அனுபவம். தேவ அன்பு என்பது தேவன்மேல் நமக்கிருக்கும் ஒரு உயர்ந்த விருப்பத்தின் விளைவானது. பயம் என்பது எப்பொழுதுமே ஒரு தவறைச் செய்யாமல் நம்மை தடுத்துக் கொள்ள உதவுகின்ற ஒன்று. அன்பு என்பது இன்னொருவருக்காக நாம் அவரைப் பிரியப்படுத்தும் விதமாக அதிகமாகச் செய்வது.

சிலர் கர்த்தருக்கு அஞ்சுகின்றார்கள். ஏதாவது தவறு செய்தால் தேவ தண்டனை வரும் என்று பயப்படுகின்றார்கள். ஏதாவது ஒரு கட்டளையை மீறினால் தேவன் கோபமடைந்துவிடுவார் என்று பயப்படுகின்றனர். எனவே, தேவ கோபத்தை சம்பாதிக்காமலிருக்க தேவன் விரும்பாதவைகளைச் செய்யாம லிருக்கப் பிரயாசப்படுகின்றனர். ஆனால், சில நேரம் பாவம் என்பது பயத்தையும் கடந்து போய் வேலை செய்துவிடும். அப்பா திட்டவோ, தண்டிக்கவோ செய்யக்கூடும் என்ற பயம் மகனுக்கு உண்டு. ஆனால், சில இச்சைக்குரிய விஷயங்கள் அதிக பலத்தோடு செயல்பட்டுப் பயத்தையும் தாண்டிப்போய்ச் செயல்பட்டுவிடுகிறது.

ஆனால், அன்பு வலிமைமிக்கது. பயத்தைத் தாண்டிப் போய் பாவம் செயல்படக் கூடும். ஆனால், அன்பை கடந்து போய் பாவம் செயல்படுவது கடினம். ஏனென்றால், ஒருவர்மேல் நமக்கிருக்கும் அன்பு அவர் வருந்திவிடக்கூடாதே அவருடைய ஐக்கியத்தை நாம் இழந்துவிடக்கூடாதே என்ற அதிக எச்சரிக்கையைத் தரும். பயம் என்பது நம்முடைய சுய மனதிலிருந்து தோன்றுவது. அன்பு என்பது தேவ ஆவியினால் நமக்குள் உருவாக்கப்படுவது (ரோமர் 5:5) மாம்சத்திலிருந்து உரு வாகும் பலம் வலிமை மிகுந்தது அல்ல. ஆவியினால் தோன்றும் அன்பு மிகவும் வலிமை வாய்ந்தது. தேவ அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்றான் பவுல்.

தேவ பயம் என்பது எப்பொழுதுமே ஏதாவது தேவனுக்கு விரோதமாகச் செய்து விடக்கூடாதே என்ற எச்சரிப்பின் உணர்வோடு இருக்கும். எனவே, சின்னச் சின்ன விஷயங்களில்கூட தவறி விடுவோமோ, பாவம் செய்து விடுவோமோ என்ற பதட்ட மனநிலை இருந்து கொண்டேயிருக்கும். இதனுடைய விளைவாக அதிகமான குற்ற உணர்வின் மனநிலை ஏற்படும். தேவ அன்பு என்பதோ, எப்போதும் தேவனுக்குப் பிரியமானதைச் செய்வதற்கு விரும்பும் ஒரு மனநிலையோடிருப்பதால், அதனால் உற்சாகமும் சந்தோஷமும் அதிகமாயிருக்கும்.

சிந்தனைக்கு...

தேவ பயம் பாவத்தைக் குறித்த எச்சரிப்பைத் தரும்,
தேவ அன்புதான் பாவத்தின்மேல் வெற்றியைத் தரும்.

பிப்ரவரி

22

ஜீவ நீரோடை

யாருடைய ஜெபம்?

அப்பா பிதாவே என்று கூப்பிட பண்ணுகிற....
ரோமர் 8:15

ரோமர் 8:1-17

ஜெபமே ஜெயம் என்பது கிறிஸ்தவர்களின் பொதுவான நம்பிக்கை. ஆனால், யாருடைய ஜெபம் ஜெயம் என்பது கேட்கப்பட வேண்டிய கேள்வி. பக்தி மான்களின் ஜெபம் ஜெயம் தருமா? நீதிமான்களின் ஜெபம் ஜெயம் தருமா? நாம் பக்தியானவர்கள் என்ற பின்னணியோடு ஜெபிப்பதால் ஜெயம் வராது. நாம் நீதி நேர்மையாக வாழுகின்றவர்கள் என்ற பின்னணியோடு ஜெபிப்பதால் ஜெயம் வராது. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற ஆவிக்குரிய பின்னணியோடு ஜெபிப் பதால்தான் ஜெயம் வரும். தேவன் நமக்கு "ஐயா சாமி" என்று கூப்பிடுகின்ற ஆவியைத் தராமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடுகின்ற ஆவியையே தந்துள்ளார். (ரோமர் 8:15)

அப்பா பிதாவே, என்று தேவனை நோக்கிக் கூப்பிடவேண்டுமானால். நாம் தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கின்ற நிலைமை வேண்டும். நாம் தேவன்மேல் பக்தியானவர்கள் என்பது வேறு. நாம் தேவனுக்குப் பயந்து நீதியாக வாழ்கின்றவர்கள் என்பது வேறு. நாம் தேவனுக்குப் பிள்ளைகளாக இருப்பது என்பதுவேறு. தேவன், நாம் அவருக்குப் பிள்ளைகளாயிருக்கின்றோம் என்பதற்காகச் ஜெபங்களைக் கேட்கின்றார். ஆம், நாம் பக்தியாகச் செய்கின்ற பின்னணியைக் கொண்டு தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற முடியாது. நாம் நீதி நேர்மையாய் வாழ்கின்றவர்கள் என்ற பின்னணியைக் கொண்டு தேவ நன்மைகளை எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால், தேவனுடைய நன்மைகள் நம்முடைய கிரியைகளின் விளை வாக வராமல், அவருடைய கிருபையினாலேயே வருகிறது. எனவே, முதலாவது நாம் தேவன் வாக்களித்த புத்திர சுவிகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பாவிகளாயிருந்த நாம் பக்தியானவர்களாக மாறினோம் என்பது அல்ல. நீதி நேர்மையற்று வாழ்ந்த நாம் நீதியின் கிரியைகளைச் செய்கிறவர்களாக மாறினோம் என்பது அல்ல. பாவிகளாயிருந்த நாம் கர்த்தருடைய கிருபையினாலே அவருடைய பிள்ளைகளாக மாறினோம் என்பதே முக்கியமானது.

எனவே, முதலாவது பக்தியாக எதையாவது செய்து தேவ கிருபையைத் தேடாமல், தேவன் ஆசீர்வாதங்கள் பெறுவதற்காகக் குறித்த தகுதியாகிய புத்திர சுவிகாரத்திற்கு முதல் கவனம் செலுத்த வேண்டும். கர்த்தராகிய இயேசுவை நம க்குள் ஏற்றுக் கொள்வதால் நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆகின்றோம். (யோவான் 1:12) பிள்ளைகள் என்ற நிலைமையைப் பெற்று தேவ ஆவியின் பலத்தால் தேவ னுடைய பிள்ளைகளுக்கேற்ற வாழ்க்கையை வாழவேண்டும். அப்போது ஜெபமே ஜெயம் என்பது உண்மையாகும்.

சிந்தனைக்கு...

அழுது ஜெபிப்பதைவிட தேவனுடைய பிள்ளை என்ற உரிமையைப் பயன்படுத்தி ஜெபிக்க அதிகக் கவனமாயிரு.

பிப்ரவரி
23
ஜீவ நீரோடை

சுதந்தரியுங்கள்

நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்...
கலாத்தியர் 4:7

கலாத்தியர் 4:1-19

தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்பது சம்பாதிக்க வேண்டியவைகள் அல்ல. அவை சுதந்தரிக்கப்பட வேண்டியவைகள். சம்பாதிப்பது என்பது நாம் ஏதோ ஒன்றை நம்முடைய பக்கத்திலிருந்து செய்வதினால் நாம் அடைகின்ற ஒரு அனுபவம். ஒருவன் இன்னொருவருக்காக சில வேலைகளைச் செய்கின்றான். அதனுடைய விளைவாக நற்பெயரையோ, நல்ல சன்மானத்தையோ சம்பாதிக் கின்றான். ஆனால், ஒரு பையன் தன்னுடைய தந்தைக்காக எதையும் செய்யாமலே தந்தையின் செல்வங் களைச் சுதந்தரிக்கின்றான். சுதந்தரித்தல் என்றால் தனக்கு உரிமையாக இருப் பவைகளை அனுபவித்தல் ஆகும்.

சம்பாதிப்பதற்கு கிரியைகள் அல்லது செயல்பாடுகள் முதலிடத்தில் வர வேண்டும். சுதந்தரிப்பதற்கோ ஒரு குறிப்பிட்ட உறவின் நிலை முதலிடத்தில் வர வேண்டும். தேவன் அவருடைய நன்மையைப் பெற எவ்வளவு நாம் செயல்பட வேண்டும் என்று சொல்லவில்லை. அவருக்கு நாம் யாராக இருக்க வேண்டும் என்பதையே சொல்கின்றார். அவருடைய பிள்ளைகள் என்ற உறவை முன்வைத்து தான், நாம் அவருடைய நன்மைகளைப் பெறுகிறோம்.

ஆம், புதிய ஏற்பாட்டில் தேவன் நாம் அவருக்காக என்ன செய்கிறோம் என்பதை அல்ல. நாம் அவருக்கு யாராக இருக்கின்றோம் என்பதையே பார்க்கின்றார். எனவே, நாம் ஏதாவது ஒரு பக்தி செயலை செய்தோ அல்லது ஒரு நற்கிரியையைச் செய்தோ தேவ நன்மையை அடையும் பழைய ஏற்பாட்டு முறையைப் பின்பற்றக் கூடாது. அப்படியென்றால், நாம் பிள்ளைகள் என்று சொல்ல முடிவதால் மட்டும் தேவ நன்மை கிடைத்துவிடுமா? அப்படியல்ல. தேவனுடைய பிள்ளைகள் என்பது நமது உறவுநிலை. நாம் அவருடைய பிள்ளைகளாகப் பார்க்கப்பட தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமை அங்கே இருக்க வேண்டும். தேவ ஆவியால் நடத்தப் பட்டால் தேவனுக்கேற்ற சாயல் நம்மில் பிரதிபலிக்கும்.

என்றைக்கோ ஒரு நாள் நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கெண்டதால், இனி என்றும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகவே கர்த்தரால் பார்க்கப்படுவோம் என்று பலர் எண்ணுகின்றனர். அது சரியாயிருக்கக்கூடும். அதே வேளையில், கிறிஸ்து வுடன் இணைக்கப்பட்டதால்தான் நாம் பிள்ளைகளானோம். அந்த இணைப்பில் இருந்தால் நாம் தேவனுக்கேற்ற கனிகொடுக்கும் இயல்புடையவர்களாயிருப்போம். இல்லையேல், மகன் என்பது உண்மையாயினும், கெட்ட குமாரனைப் போல தூரமாய்ப் போய், தேவ நன்மைகளுக்கு நாம் தகுதியற்றுப் போய்விடுவோம்.

சிந்தனைக்கு...
நம்முடைய பல நல்ல செயல்கள் அல்ல,
நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு கர்த்தர் செய்த செயல்தான் ஆசீர்வாதத்தின் அடிப்படை.

பிப்ரவரி

24

ஜீவ நீரோடை

பலவீனம்

பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்...
யாக்கோபு 4:6

யாக்கோபு 4:1-17

கணவன் மனைவி இருவருக்கிடையில் யார் பெரியவர் என்ற பிரச்சினை இருந்து கொண்டிருந்தது. கணவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் அந்தப் பிரச்சினை அதிகமாகியது. கணவர் மனைவியிடம் கோபித்துக் கொண்டு உன்னுடைய உதவியில்லாமல், நான் தனித்து வாழ முடியும் என்று சாவால் விட்டுக் கொண்டு போய் விட்டார். யார் யாரோ அவருக்கு ஆலோசனை சொல்லியும் கேட்காமல் தனிமையில் வாழ்ந்தார். சில ஆண்டுகளுக்குள் அவர் உடல் பலவீனப்பட்டு மரித்துப் போனார். அதற்கு முக்கியமான காரணம் மனைவி உடன் இல்லாததால், அவரால் உடல் நலனை உரிய விதமாகப் பேணமுடியவில்லை.

இவருடைய பலவீனம் அல்ல அந்தப் பலவீனத்தை உணர்ந்து உரிய ஆதரவுடன் வாழாமல் போனதே காரணம். தன்னைக் குறித்த அதிக கணக்கீடு அவருடைய விரைவான மரணத்திற்கு முக்கியமான காரணம். அநேகர் தங்களுடைய பலவீனங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவது உண்மை. ஆனால், பலவீனங்களை உணராமையும், உணர்ந்து உரிய உதவிகளைத் தேடாமையுமே மிக முக்கியமான காரணம். அநேகர் தங்களிடம் இல்லாமை இயலாமை, என பல பலவீனங்கள் உள்ளதை அறிவார்கள். ஆயினும், அவர்கள் தங்களை எந்தப் பலவீனமும் இல்லாத பலசாலிகள் போல காட்டிக் கொள்வதிலேயே குறியாயிருக்கின்றனர்.

சுய பலவீனங்களை மறைத்துக் கொண்டு அவர்கள் சுயகௌரவத்தை தூக்கிப் பிடிக்கின்றனர். இதனுடைய பெயர்தான் பெருமை. தங்களைத் தாழ்த்த வேண்டிய இடத்தில் உயர்த்திக் காட்டுவதே பெருமை. சத்துவமில்லாதவனுடைய சத்துவத்தைப் பெருகச் செய்கின்றவர் தேவன். பலவீனரைப் பலசாலியாக்குகின்றவர் தேவன். ஆனால், பெருமை உள்ளவர்கள் அவரால் பலப்படும் வாய்ப்பை இழப்பதோடு தங்களிடத்திலுள்ள கொஞ்ச பலத்தையும் பயன்படுத்த இயலாமல் போகின்றனர். ஏனென்றால் , பெருமை உள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார்.

யாக்கோபு தனக்கெதிராக 400 பேரோடு வந்த ஏசாவைக் குறித்த செய்தியினால் மனபலமிழந்து நின்றான். ஆயினும், கர்த்தரை விடாப் பிடியாகப் பற்றிக் கொண்டான். தன்னுடைய பலவீனத்தை உணர்ந்து தேவனை அதிகமதிகமாகச் சார்ந்து கொண்டான். தேவன் அவனுடைய மிகுந்த பலவீனத்தின் நடுவில் செயல்பட்டு அந்த பலவீனத்தினால், எந்த நஷ்டமும் கஷ்டமும் வராமல் காரியங்களைச் செய்தார். பவுலைப் போல பலவீனத்தை உணர்ந்து கர்த்தரைப் பற்றிக் கொள்ளும் போது, பலவீனத்தில் அவருடைய வலிமை அதிகமாக விளங்கும்.

சிந்தனைக்கு...

பலவீனமாயிருப்பது பிரச்சினை அல்ல ,
பலவீனத்தை உணர்ந்து தேவனைப் பற்றிக் கொள்ளாததே பிரச்சினை.

பிப்ரவரி
25
ஜீவ நீரோடை

தெய்வீக ஆரோக்கியம்

அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்... பிலிப்பியர் 4:8

பிலிப்பியர் 4:1-13

தெய்வீக சுகத்தை அநேகர் நம்புகின்றனர். வியாதியால் பாதிக்கப்பட்ட அநேகர் அதனை தங்களுக்குப் பெற விரும்புகின்றனர். ஆனால், தெய்வீக ஆரோக்கியம் என்பதை அநேகர் நன்கு சிந்திப்பதில்லை. ஆரோக்கியம் இழந்தபின்பு சுகத்தை தேடிச் செல்கின்றோம். ஆனால், ஆரோக்கியத்தை இழக்காமல் காக்கும் தெய்வீக ஆரோக்கியத்தை கருத்துடன் தேடுவதில்லை. தெய்வீக ஆரோக்கியம் என்ற உடன், இது ஏதோ ஒரு ஆவிக்குரிய வரம் என்று எண்ணிவிடக்கூடாது. இது ஆவிக்குரிய வரம் அல்ல. இது ஒரு ஆவிக்குரிய செயல்பாடு.

சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், அல்சர், வாயுக் கோளாறு என பல பல வியாதிகளால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு டாக்டர் விதவிதமாக மருத்துவம் செய்தார். ஆயினும், பெரிய பலன் இல்லை. ஒரு முறை அந்த வியாதியாளர் டாக்டரிடம் சென்ற போது அவர் பைபிள் படியுங்கள், வேத உபதேசம் கேளுங்கள். சபைக்குச் செல்லுங்கள் நன்மை செய்யுங்கள், பிரார்த்தனை பண்ணுங்கள், இறைப் போதனைகளைக் குறித்து சிந்தியுங்கள் என்றெல்லாம் ஆலோசனை கூறினார். அதற்கு அந்த வியாதியஸ்தன் என்ன டாக்டர் மருத்துவம் தேடி ஆஸ்பத்திரி வந்தால், சர்ச்சுக்கு வந்தவனிடம் பாதிரியார் பிரசங்கம் செய்வதுபோல செய்கிறீர்களே என்று கேட்டான். அதற்கு அவர், உங்கள் வியாதிக்கு இப்போது மருந்தைவிட போதனைதான் அதிகத் தேவை என்றார்.

ஆம், மனதை ஆரோக்கியமாக வைக்காவிட்டால், உடலை ஆரோக்கியமாக வைக்க முடியாது. ஏராளமான வியாதிகள் மனதை ஆரோக்கியமாக வைக்கத் தவறுவதாலேயே வருகின்றன. மனதை ஆரோக்கியமாக வைப்பது சுய முயற்சிகளால் முடியாது. மனதில் தேவ ஆளுகை வேண்டும். மனதில் தேவ பிரசன்னம் வேண்டும். மனதில் தேவ வார்த்தைகள் வேண்டும். மனதில் தேவ சிந்தனைகள் வேண்டும். மனம் தேவ ஆவியால் நடத்தப்பட்டால், அதுவே தெய்வீக ஆரோக்கியத்தை ஏற்படுத்தும்.

மனதில் தேவ சமாதானமும், தேவ சந்தோஷமும், தேவ நம்பிக்கையும், தேவ சிந்தனைகளும் தங்கியிருப்பதுதான் தெய்வீக ஆரோக்கிய ஆசீர்வாதம். ஜெபங்கள் வாயிலாகவும், வேத தியானங்கள் வாயிலாகவும், தேவனுடைய காரியங்களைக் குறித்த சிந்தனைகளாலும் மனதில் தேவ ஐக்கியத்தை உணர்ந்து கொண்டிருக்கப் பழக வேண்டும். அப்போது பெரும்பாலான வியாதிகள் தோன்றுவதற்கே வாய்ப்புக் கிடைக்காது.

சிந்தனைக்கு...

உடலை ஆராக்கியமாக வைக்க பயிற்சிகளை நம்பு,
மனதை ஆரோக்கியமாக வைக்க கர்த்தரை நம்பு.

பிப்ரவரி

26

ஜீவ நீரோடை

ஆயத்தமாக்கப்பட்ட நன்மை

எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை... ஏசாயா 49:23

ஏசாயா 49:14-26

நாம் தேடுகின்ற நன்மைகள், தேவன் தர விரும்புகின்ற நன்மைகள் என இரண்டு வித நன்மைகள் உள்ளன. தாய் மகனுக்கு வீட்டிற்குச் சென்றதும் மிக நல்ல உணவை கொடுக்க ஆயத்தமாக்கியிருக்கிறாள். ஆனால், மகனோ பசி வந்த காரணத்தினால் தெருவோரக் கடையிலிருந்தும் மட்டமான உணவை வாங்கிக் கேட்கிறான். தாய் மறுக்கின்றாள். ஆனால், மகனுக்கோ அதனுடைய நோக்கம் புரியவில்லை. நாம் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்தால் சில நேரம் நாம் நியாயமாகத் தேடுகின்ற சில நன்மைகள் வராமல் போகலாம். அது தேவன் நமக்குக் காரியத்தை வாய்க்கச் செய்யவில்லை என்று அர்த்தம் அல்ல. இதைவிட மேலான ஒரு நன்மையை அவர் ஆயத்தமாக்கி வைத்திருக்கின்றார் என்று அர்த்தம்.

சவுலின் அரசாங்கத்தில் முக்கியமான பதவியில் அமர்த்தப்பட்ட தாவீது, அந்தப் பொறுப்பை இழந்தான். அந்த நல்ல பதவி தொடர தேவன் எதையும் செய்ய வில்லை. தேவ பக்தியுடையவனாயிருந்தும் ஒரு நன்மையத் தக்க வைக்க இயலாதவனாக அவன் மாறினான். ஆனால், தேவனுடைய திட்டம் வேறு விதமா யிருந்தது. அவன் சவுல் இராஜா கொடுத்த பதவியில் அல்ல. தேவன் ஆயத்தமாக்கிய இராஜ பதவிக்கு வரவேண்டும். எனவே, தாவீது தற்காலிகமாக நஷ்டமடைந்தது போல வாழ நேர்ந்தது.

யோசேப்பின் வாழ்க்கையிலும் அப்படியே நிகழ்ந்தது. சிறையிலிருந்த அவன் பானபாத்திரக்காரனின் தயவினாலே விடுதலை பெற்றிட விரும்பினான். ஆனால், தேவன் அந்த விருப்பத்தை வாய்க்கச் செய்யவில்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனது போல அவன் உணர்ந்தான். ஆனால், அந்த தற்காலிக ஏமாற்றத்தின் காலத்திற்குப் பின்னால், தேவன் அவனுக்காக அதைவிடப் பெரியதோர் ஆசீர்வாதத்தை ஆயத்தமாக்கியிருந்தார். அவன் சிறையிலிருந்து விடுதலை பெற்ற ஒருவனாக அல்ல. எகிப்து அரண்மனையில் இராஜாவுக்கு அடுத்த நிலையில் வரவேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருந்தது.

ஆம், தேவனுக்குப் பிரியமாக நாம் வாழ்வது உண்மையாயின், தேவன் நமக்காக ஒரு நன்மையை ஆயத்தமாக்கிவிட்டார் என்பதே உண்மை. சில நேரம் நாம் சில சோதனைகள் வழியாகப் புடமிடப்பட்ட பின்பே, அந்தப் பகுதிக்கு வந்து சேர இயலும். ஏனென்றால், தேவன் அவருக்கேற்ற ஒரு காலத்திலேயே நமக்கு நன்மைகளைத் தருகின்றார். அதே நேரம், அந்த நன்மைக்கு ஏற்றவிதமாக நம்மை அவர் மாற்றவும் விரும்புகின்றார். அந்த மாறுதல் நிறைவாகும் போது, அவர் ஆயத்த மாக்கின நன்மையை நாம் கண்டடைவோம்.

சிந்தனைக்கு...

தேவ நன்மை வருவதற்கு சிறிது காலம் போதும், அதற்கு உன்னைத் தகுதியாக்க சற்று நீண்ட காலம் தேவை.

பிப்ரவரி
27
ஜீவ நீரோடை

அன்பு வலிமையானது

பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே... 2தீமோத்தேயு 1:7

2 தீமோத்தேயு 1:1-18

குறிப்பிட்ட ஒரு போதகரின் பிரசங்கங்கள் யாவும் தேவ பயத்தை விசுவாசிகளின் இருதயத்தில் அதிகமாக ஏற்படுத்தும். அவருடைய பிரசங்கங்களைக் கேட்கின்ற எவருக்கும் பாவம் செய்வது எளிதாகயிராது. தேவனுக்கு அஞ்சி வாழ்வதற்கு அவருடைய பிரசங்கங்கள் அதிக கட்டாயத்தைக் கொடுக்கும். பாவம் செய்தால், ஏதாவது ஒன்று எதிராக வந்து நிகழும் என்றதோர் அச்ச உணர்வை, அவருடைய போதனைகளைக் கேட்கின்றவர்கள் பெறுவார்கள். ஆயினும், அந்த திருச்சபையில் சிலர் துணிகரமான பாவங்களைச் செய்தார்கள். தேவனுக்கு அஞ்சி வாழ்வதற்கான போதனைகளை திரும்பத் திரும்பக் கேட்டவர்கள், அவ்வளவு துணிகரமாக எப்படிப் பாவம் செய்ய முடிந்தது என்பதே பலருடைய கேள்வியாயிருந்தது.

அது தேவ பயம் அவர்களுக்கு இல்லாததால் அல்ல. அந்த தேவ பயத்தைக் கொண்டு சில இச்சைக்குரிய பாவத்தை அவர்களால் எதிர்த்து நிற்க இயலவில்லை. சில பாவங்களைச் செய்வதற்காக ஏற்படும் தூண்டுதல், தேவனுக்குப் பயப்படுவதற்குத் தூண்டுகின்ற தூண்டுதல்களைவிட அதிக பலம் வாய்ந்தது. ஆம், சிலர் சில பாலியல் இச்சை பாவங்களை துணிந்து செய்துவிடுகின்றார்கள். சிலர், பண ஆசையினால் சில பாவங்களைத் துணிந்து செய்து விடுகின்றார்கள். சிலர், வெறுப்பினாலும் கசப்பினாலும் சில பாவங்களைத் துணிந்து செய்துவிடுகின்றனர். தேவனுக்குப் பயப்படும் பயம் இருந்தது. ஆனால், பாவத்தின் வலிமை அதனை மேற்கொண்டது.

பாவத்தை அல்லது தவறை எதிர்த்து நின்று ஜெயிக்க தேவ பயம் உதவி செய்யும். ஆயினும், அது வலிமை மிக்கது அல்ல. பாவத்தை மேற்கொள்ள சக்தி வாய்ந்தது தேவ பயம் அல்ல. தேவ அன்பு. தேவ அன்பிற்கு பாவத்தை வீழ்த்தும் அதிகாரம் உண்டு. தேவ அன்பிற்கு பாவத்தைக் கீழ்ப்படுத்தும் வலிமை உண்டு. பயத்தைவிட அன்பிற்குதான் தீமையால் மேற்கொள்ளப்படாதிருக்கும் வல்லமை அதிகம். எனவே கர்த்தர் நமக்குள் தேவ அன்பை மேலும் மேலும் பெருகச் செய்ய விரும்புகின்றார்.

தேவ பயத்தை ஊட்டும் போதனைகள் அவசியமே. ஆயினும், தேவ அன்பை ஊட்டும் போதனைகளே மிக அவசியம். கர்த்தரைக் குறித்த பயத்தைவிட கர்த்தரைக் குறித்த அன்புதான் பாவங்களைத் தவிர்க்கவும், இச்சைகளை எதிர்க்கவும், உணர்வுகளை மேற்கொள்ளவும் நம்மை அதிகமாகப் பலப்படுத்தும். புதிய ஏற்பாட்டில் தேவ பயம் அல்ல. தேவ அன்புதான் அடிப்படை. தேவ உறவில் வளர வளர தேவ அன்பு நம்மிடத்தில் அதிகமாகப் பெருகும். அந்த அன்பு பாவத்திற்கு இசைந்து போகாதிருக்க நம்மை அதிகமாகப் பலப்படுத்தும்.

சிந்தனைக்கு...

தேவ பயம் உள்ளவனிடம் அன்பு இல்லாதிருக்க முடியும், அன்புள்ளவனிடம் தேவ பயம் இல்லாதிருக்க முடியாது.

பிப்ரவரி
28
ஜீவ
நீரோடை

சாத்தான் தரும் ஐசுவரியம்

எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். லூக்கா 4:6

லூக்கா 4:1-15

சிலர் தேவ ஊழியர்கள் என்று தங்களைக் காண்பித்தாலும் அவர்களின் ஊழியங்கள் தேவனுடைய பரிசுத்த தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், அவர்கள் நிறைய செல்வங்களோடும், செல்வாக்குகளோடும் வாழ்வதைக் காணமுடிகிறது. அவர்கள் தேவனுக்குப் பிரியமாக ஊழியம் செய்யாதவர்கள் என்றால், எப்படி அவர்கள் இவ்வளவு வளமையோடு வாழ முடிகின்றது என்ற கேள்வி எழுகிறது. அவர்களை எப்படி இவ்வளவு பேர் பின்பற்றுகின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

வளமை, செழிப்பு, சாதனை, செல்வாக்கு, அந்தஸ்து என யாவும் தேவனாலேயே வருகின்றது என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால், அவை சாத்தானாலும் வரமுடியும் என்பதை பலர் அறிவதில்லை. கர்த்தராகிய இயேசுவைச் சாத்தான் சோதித்தான். என்னைப் பணிந்து கொண்டால் ஆஸ்தி, அந்தஸ்து, அதிகாரம் யாவையும் தருவேன் என்றான். எனக்கு இஷ்டமானவனுக்கு இவற்றைக் கொடுக்கின்றேன் என்றான். சாத்தானைப் பணிந்து கொள்ளுதல் என்பது, அவனுக்குக் கோயில் கட்டி தொழுகை நடத்துதல் அல்ல. சாத்தானின் விருப்பத்திற்கு இசைந்து செயல்பட முன்வருவது அவனைப் பணிந்து கொள்ளுதல்.

பிசாசானவன் யாரிடத்தில் இஷ்டமாயிருப்பான்? தேவனின் பெயரைச் சொல்லி ஜனங்களை வஞ்சிக்கின்றவர்கள்மேல் இஷ்டமாயிருப்பான். பொய்யான போதனைகளையும், போலியான உபதேசங்களையும் கொடுப்பவர்கள்மேல் சாத்தான் பிரியமாயிருப்பான். கர்த்தருடைய ஊழியர்கள் என்று தங்களைக் காண்பித்துக்கொண்டு, கர்த்தருக்கு எதிரான காரியங்களை தந்திரமாகச் செய்கின்றவர்கள்மேல் பிசாசானவன் இஷ்டமாயிருப்பான். இப்படிப்பட்டவர்களுக்கு ஆஸ்தி, அந்தஸ்து, அதிகாரம், செல்வாக்கு பெருகிட சாத்தான் உதவி செய்வான். இப்படிப் பட்டவர்களை ஆதரிக்கவும் தாங்கவும், சாத்தான் ஏராளமான போலி விசுவாசிகளை எழும்பித்தருவான்.

ஆனால், ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். சாத்தான் ஏராளம் வளமையைத் தர முடியும். ஆனால், யாரையும் அவனால் திருப்தியாக்க முடியாது. சாத்தான் யாருக்கும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தரமுடியாது. சாத்தான் ஒருவனை ஐசுவரியவானாக்கலாம். ஆனால், அவனை நல்லவனாக்க முடியாது. சாத்தான் ஒரு தவறான ஊழியரையோ, விசுவாசியையோ செல்வந்தர்களாக்க முடியும். ஆனால், அவன் யாரையும் திடீர் என்று நிகழப்போகும் தேவ ஆக்கினையிலிருந்து காப்பாற்ற முடியாது.

சிந்தனைக்கு...

திறமைகள் ஏராளம் செல்வங்களைக் கொடுத்திருக்கலாம். ஆனால், அந்தச் செல்வம் எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது என்பதைப் பார்.

மார்ச் 1
ஜீவ நீரோடை

சகிக்கப் பழகனும்

ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால்... கொலோசெயர் 3:13

கொலோசெயர் 3:12-25

வீட்டிற்குள் வந்த கணவர், வீட்டில் பல பொருட்கள் அதனதனுடைய இடத்தில் இல்லாததைக் காண்கின்றார். சாப்பாட்டு நேரம் கடந்த பிறகும் மனைவி சாப்பாடு செய்வதில் தாமதமாவதைக் காண்கின்றார். அளவுக்கதிகமாகச் சமைத்து, கணிசமான உணவு மீதமாகி வீணாவதைக் காண்கின்றார். மனைவி நெடுநேரம் தன்னுடைய உறவினர்களோடு பேசிக்கொண்டேயிருப்பதைக் காண்கின்றார். இப்படி ஏதாவது சில பல காரியங்கள் கோபத்தைத் தூண்டுவதற்கேற்றபடி இருப்பதைக் காண கின்றார். இவற்றை உடனுக்குடன் சுட்டிக்காட்டி கோபமாகக் கண்டிப்பதால், தினமும் வீட்டில் பிரச்சினைதான்.

இவர் தன்னை ஆராய்ந்து பார்க்கின்றார். பொய்யான குற்றச்சாட்டு எதையும் தான் கூறாததை அறிகின்றார். தவறானவைகளை மட்டுமேதான் சுட்டிக்காட்டு வதைக் காண்கின்றார். எனவே, தான் குற்றம் செய்யவில்லை என்று உணருகின்றார். ஆனால், உண்மையாக குறைகளைச் சுட்டிக்காட்டுவதால், நிம்மதியின்மையும் வாதப்பிரதிவாதங்களும் எழும்புகின்றதைக் கண்டு வ+ருத்தமடைகின்றார். ஆனால் உண்மை என்ன? தவறை தவறு என்றும், குறைவைக் குறைவு என்றும் சுட்டிக்காட்டும் நீதி மான்தனத்தை மட்டுமே அவர் பார்க்கின்றார். ஆனால், சில விஷயங்களைச் சகிக்கவும் தாங்கவும், பொறுக்கவும் இயலாத ஒரு மனநிலை பின்னால் இருந்து செயல்படுவதை அவர் உணரவில்லை.

சில நேரங்களில் தவறுகளைத் தவறுகள் என்று சுட்டிக்காட்டும் மனநிலை சமநிலையாகவும் ஞானத்தோடும் செயல்படுவதில்லை. தாழ்மையின்மையும் பொறுமையின்மையும், சகிப்புத் தன்மையின்மையும், கோபமும், ஆத்திரமும் வாய்ப்புத் தேடிக்கொண்டேயிருக்கின்றன. அவை சில தவறுகளை அல்லது குறை களைக் கண்டதும் தீவிரத்தோடு செயல்பட ஆரம்பிக்கின்றது. அதனுடைய விளை வாக அமைதிச் சூழல்கள் அகன்று போராட்டச் சூழல்களும் வெறுப்பு விரோதச் சூழல்களும் உருவாகின்றன. எனவே, நாம் தவறு செய்யாவிட்டாலும் தவறானஒரு அமைதியற்ற சூழலுக்கு காரணமாகி விடுகின்றோம்.

சில குறைவுகளும் தவறுகளும் பெரியகேடுகளை ஏற்படுத்துகின்றவை அல்ல. ஆனால், அவற்றைச் சகிக்க இயலாத ஒரு மனநிலை, பெரிய கேடுகளை வரவழைக்கும். வாழ்க்கையில் ஒரு அமைதியும் சந்தோமுமான சூழ்நிலை மிக முக்கியமானவை. அவற்றை நம்முடைய ஆத்திர உணர்வுகளும், அவசர உணர்வுகளும், கோப உணர்வுகளும் அழிக்க அனுமதிக்கக் கூடாது.

சிந்தனைக்கு...

மனிதனுக்கு வருகின்ற பிரச்சினை சிறியதே,
அதனைக் கையாளும் விதமே பிரச்சினையைப் பெரிதாக்குகிறது.

யார் மோசம்?

மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும்...
எபேசியர் 4:2

எபேசியர் 4:1-15

கணவன் மனைவிக்கிடையில் ஓயாத பிரச்சினை. அவர்களுக்கு நடுவில் சமாதானம் ஏற்படுத்தச் சென்ற ஒருவர் அவர்களுடைய பிள்ளைகளிடம், பெற்றோரைக் குறித்து விசாரித்தார். பிள்ளைகள் பெற்றோரைக் குறித்துச் சொன்னபோது, அம்மாவைவிட அப்பா மோசம், என்றும் அப்பாவைவிட அம்மா மோசம் என்றும் கூறினர். அது எப்படி என்று அவர் திருப்பிக் கேட்டார். பிள்ளைகள் விளக்கம் தந்தனர். அப்பா கோபம் வந்தால் திட்டிக் கொண்டேயிருப்பார். அம்மா கோபம் வந்தால் பல நாள் பேசவேமாட்டார். அப்பா கோயிலுக்குப் போகவே மாட்டார். அம்மா வீட்டில் சாப்பாடு செய்யாமல், கோயில் கோயில் என்று போய்க்கொண் டிருப்பார். அப்பா பாஸ்டர் சொல்வதைக் கேட்கவே மாட்டார். அம்மா பாஸ்டர் சொல்வதை மட்டுமே கேட்பார்.

பல குடும்பங்களில் கணவன், மனைவியை மோசம் என்று நினைப்பதும், மனைவி, கணவனை மோசம் என்று நினைப்பதும் வழக்கமாக உள்ளது. ஆனால், நடைமுறையில் ஒருவரைவிட ஒருவர் மோசமாக உள்ளனர். ஒவ்வொரு வருக்கும் மற்றவர் செய்வது மட்டும் தவறாகத் தெரிகின்றது. தாங்கள் செய்கின்ற தவறை நினைப்பதில்லை. மற்றவர் செய்யும் தவறை நாம் செய்யாமாலிருக்கலாம். ஆனால், மற்றவர் செய்யாத தவறை நாம் செய்யவில்லையா என்றும் யோசிக்க வேண்டும். நம்மிடத்தில் உள்ள தவறுகளையும், நாம் உள்ள படியே பார்க்க வேண்டும்.

பல குடும்பங்களில் யார் நல்லவர், யார் மோசமானவர் என்ற விஷயமே இல்லை. யார் மோசமானவர், யார் மிகவும் மோசமானவர் என்ற விஷயமே உள்ளது. சில நேரங்களில் மற்றவரின் சில தவறுகளினால்தான் பிரச்சினை ஏற்படுகிறது என்று நாம் எண்ணுவது சரியாயிருக்கலாம். ஆனால், நாம் பிரச்சினை களைத் தவிர்க்க விரும்பினால், நம்மிடம் பிரச்சினைகளைத் தடை செய்யும் தன்மையுள்ள நற்குணங்கள் உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

இன்னொருவரின் பெருமையும், கோபமும், வெறுப்புணர்வும் பிரச்சினை களுக்கு வழிவகுக்கும்போது, நாம் தாழ்மையாலும், பொறுமையாலும், தேவ அன்பினாலும் அதனை தடுக்க இயலும். நாம் அதைச் செய்யாமல் மற்றவர் செய்வதற்கு பதிலுக்குப் பதிலாகச் செயல்படும்போது பிரச்சினை பெரிதாகிறது. எனவே, மற்றவர்களிடமிருந்து புறப்படும் தவறான விஷயங்களினால், கேடானவை நிகழாதபடி தடுக்கும் நற்குணங் களுக்காக, நாம் தேவனை நெருங்க வேண்டும். தேவ கிருபையால் நற்குணங்களை வளர்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

பிறரின் தவறான சுபாவங்கள், நம்மிடம் நற்சுபாவங்கள் இல்லாவிட்டால்தான், அதிகமான காயங்களை ஏற்படுத்தும்.

மார்ச்
3
ஜீவ நீரோடை

பாவத்தை உணரலாம்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்...
1 யோவான் 1:9

1 யோவான் 1:1-10

வியாதியாளன் ஒருவன் டாக்டரிடம் சென்றான். மருத்துவர் அவனுடைய வியாதியின் காரணத்தைச்சொன்னார். அவனோ அதற்குச் சம்மதிக்கவில்லை. நீங்கள் சொன்ன விஷயங்களை வியாதியின் காரணங்களாக என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது என்றான். அவர் எவ்வளவு விளக்கினாலும், டாக்டர் சொன்ன காரணங்களை ஏற்றுக்கொள்ளாமல், அவன் எதிர் கேள்விகள் கேட்டுக் கொண் டிருந்தான். எனவே, அந்த டாக்டர் கோபமடைந்து உனக்கு மருத்துவம் பார்க்க என்னால் முடியாது என்று கூறி அனுப்பிவிட்டார்.

சிலர் தங்களின் நோய் குணமடைய வேண்டும் என்பதைவிட, நோய்க்கான காரணங்களைக் குறித்த விஷயங்களில், ஒத்த கருத்தின்றி எதிர் பேசிக் கொண்டிருப்பார்கள். நோயின் காரணங்களை அறிவது நல்லது. ஆனால், நோயின் காரணங்கள் குறித்து வாதம் செய்து கொண்டு நோய்க்கு நிவாரணம் தேடாமல் போகக்கூடாது. சிலர் பாவம் ஆதாமின் கீழ்படியாமையால் வந்தது என்றோ, பிசாசானவனால் வந்தது என்றோ சொன்னால், அறிவுப்பூர்வமான பல கேள்விகளை எழுப்பி, வாதம் செய்து கொண்டேயிருப்பார்கள். பாவம் தொடர்பான விளக்கத்தை நாம் ஏற்பதற்கு அறிவு தடை செய்யலாம். ஆனால், நம்மிடம் பாவம் இருப்பதை நாம் மறுக்க முடியாது. நம்முடைய சிந்தனைகளின் தரத்தையும், சுபாவங்களின் தரத்தையும், ஆசைகளின் தரத்தையும் நாம் ஆராய்ந்து பார்த்தால், நம்மிடம் பாவம் மேலோங்கியிருப்பதை நாம் அறிய முடியும்.

எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகிப் போனோம் என்று வேதம் சொல்கிறது. இதனை நாம் மறுக்க முடியாது. பாவத்தின் பின்னணிக் காரணத்தை நாம் மறுக்கலாம். ஆனால், பாவத்தின் ஆளுகையை நாம் மறுக்க முடியாது. எனவே, பாவத்தை உணர்ந்து பாவத்திலிருந்து மீட்க வந்த கர்த்தரை நாம் தேட வேண்டும். ஒருவர் பலவீனத்தின் காரணத்தை ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். ஆனால், தனக்குள் உணரும் பலவீனம் நீங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறிவுள்ள எவனும், பாவம் தொடர்பான ஏதேன் தோட்டக் கதையை நம்ப மாட்டான் என்றாராம் ஒருவர். அதனைக் கேட்ட மற்றவர், உணர்வுள்ள எவனும் தன்னிடமுள்ள பாவம் என்னும் பிரச்சினையை உணராமலிருக்க முடியாது என் றாராம். ஒவ்வொரு மனிதனிடமும் பாவம் என்பது பல விதங்களில் தன்னை காண்பித்துக் கொண்டேயிருக்கும். நாம் அதனை உணர்ந்து பாவத்திலிருந்து மீட்கவந்த கர்த்தரால் ஒரு புது வாழ்க்கையைப் பெற்றிட முன்வரவேண்டும்.

சிந்தனைக்கு...

வேதாகம உண்மைகளை மனிதன் மறுக்கலாம். ஆனால், வேதாகமம் மனிதனைப் பாவி என்று சொல்வதை மறுக்க இயலாது.

மார்ச்
4
ஜீவ நீரோடை

எல்லாம் தரும் உறவு

நாம் அனுபவிக்கிறதற்கு சகலவித நன்மைகளையும்...
1 தீமோத்தேயு. 6:17

1 தீமோத்தேயு 6:6-21

சில உறவுகள் நமக்குப் பயனுள்ள நல்ல உறவுகள்தான். ஆனால், அந்த உறவினால் நாம் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் பெற முடியாது. சிலர் நம்மை நேசிப்பது உண்மை. சிலர் நம்மை விரும்புவது உண்மை. ஆயினும், அதற்காக தங்களிடமிருப்பதையெல்லாம் நமக்கு தந்துவிட மாட்டார்கள். நம்மை நேசிக்கின்ற காரணத்திற்காக நம்முடைய தேவைகளை அவர்கள் தந்துவிடமாட்டார்கள். நம் மிடம் நல்ல நட்பையும், தொடர்பையும், உறவையும் வைத்திருக்கின்றவர்கள் நாம் கேட்பதையெல்லாம் தரவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில்லை.

ஆனால், தேவ உறவு அப்படி அல்ல. தேவனிடம் நாம் நம்முடைய எந்தத் தேவையையும் கேட்கலாம். தேவ உறவு என்பது ஒரு ஆராதனை உறவு மட்டுமல்ல. அது ஒரு பக்தி உறவு மட்டும் அல்ல. அநேகர் தேவனைக் குறித்த விஷயத்தில் ஒரு வழிபாட்டு தொடர்பைக் கொண்டிருக்கின்றார்களேயன்றி, அவரிடமுள்ள ஏராளம் நன்மைகளை எதிர்பார்ப்பதில்லை. சிலர், தங்களுடைய சரீர ரீதியான சில தேவைகளுக்காக தேவனை எதிர்பார்க்கின்றார்களேயன்றி, ஆவிக்குரிய தேவைகளுக்காக எதிர்பார்ப்பதில்லை.

ஒரு உறவினரிடமோ நண்பரிடமோ இருப்பதையெல்லாம் பார்த்து, அவற்றை நாம் எதிர்பார்த்தால் அது ஒரு தவறான பண்பாகப் பார்க்கப்படும். ஏனென்றால், எந்த உறவுகளிடமும் அந்தந்த உறவின் தன்மைக்கேற்றபடி மட்டும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், தேவ உறவு மட்டும் வித்தியாசமானது. அவரிடமிருக்கும் எதையும் நாம் எதிர்பார்த்துக் கேட்க முடியும். தேவ உறவு மட்டுமே நம்முடைய எதிர்பார்ப்புகளைச் சந்திக்கும் ஆற்றல் உடையது. தேவன் மட்டுமே நம்முடைய எதிர்பார்ப்புகளைச் சந்திக்கும் விருப்பம் கொண்டவர். ஆகையால், உலகத்தில் எத்தனை உறவுகள் நமக்கிருந்தாலும், தேவ உறவு மட்டுமே நம் தேவைகளைச் சந்திக்கும் என்ற உணர்வோடு, அவரை நாம் தேட வேண்டும்.

அன்பை அவர்தான் நமக்கு நிறைவாய்த் தர முடியும். சமாதானத்தை அவர்தான் முழுமையாகத் தர முடியும். ஆதரவையும் ஆறுதலையும் அவர்தான் தர முடியும். தைரியத்தையும் நம்பிக்கையையும் அவர்தான் தர முடியும். பரிசுத்தத்தை அவர்தான் தர முடியும். வல்லமையை அவர்தான் தர முடியும். எப்போதும் நம்மை விட்டு விலகாத ஒரு ஐக்கியத்தை அவர்தான் தர முடியும். எனவே, தேவ உறவை நமக்குள் உறுதிப்படுத்தவே நாம் முதல் கவனம் செலுத்தவேண்டும்.

சிந்தனைக்கு...

அறிவாலும் ஆற்றலாலும் ஒருவர் செல்வந்தராகலாம்.
தேவ உறவினால் மட்டுமே ஒருவர் பரிசுத்தமாக முடியும்.

மார்ச்
5
ஜீவ
நீரோடை

இது அவருடைய விருப்பம்

சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை... மத்தேயு 20:13

மத்தேயு 20:1-16

ஒருவர் தன்னுடைய நண்பரின் நட்பை அதிகமாக விரும்புவார். எனவே, அவரைச் சந்தித்து, அவருடைய இல்லத்தில் தங்கி அவருடன் செலவிடும் நேரங்களை விரும்புவார். ஆனால், அந்த நண்பரோ இவருடைய நட்பை விரும்புவார். ஆனால் அவர் இவரிடம் வருவதற்கு விரும்பும் போதெல்லாம் ஏதாவது காரணத்தைச் சொல்லி அவரை வரவிடாமல் நிறுத்தி விடுவார். இவரைப் பொறுத்தவரை அந்த நண்பரின் ஐக்கியத்தைவிட தான் சுதந்திரமாகத் தனித்து இருப்பதையே அதிகமாக விரும்புவார்.

நாம் ஒருவரை விரும்புகின்ற அளவிற்கு அவர் நம்மை விரும்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. நாம் மற்றவரின் ஐக்கியத்தை விரும்பும் அளவிற்கு நம்முடைய ஐக்கியத்தை மற்றவர் விரும்புவார் என்று கூற இயலாது. இது மற்றவர்கள் நம்மை வெறுக்கின்றார்கள் என்றோ, நம்மை அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றோ அர்த்தம் ஆகிவிடாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விஷயங்களில் பிரியமும் விருப்பமும் உள்ளது. அவற்றிற்கே அவர்கள் அதிக முக்கியத்துவம் தருவார்கள்.

சிலர் வேறு சிலரிடம் அதிகமாகப் பழகுவார்கள். நம்மிடமோ ஒரு குறிப்பிட்ட வரம்பில் மட்டுமே பழகுவார்கள். அதற்காக அவர்களுக்கு நம்மைப் பிடிக்கவில்லை என்று அர்த்தம் பண்ணிவிடக்கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு 12 சீடர்கள் இருந்தனர். ஆயினும் யோவான், யாக்கோபு, பேதுரு ஆகியோரை மட்டுமே சில முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்றார். அதற்காக மற்ற சீடர்களிடம் அவர் அதிக அன்பாயிருக்கவில்லை என்று அர்த்தம் அல்ல. சில நேரங்களில் மற்ற எல்லோரைவிட நம்மை அதிகமாக ஒருவர் நேசித்தால்தான் நாம் திருப்தியடைகின்றோம். சில நேரங்களில் எல்லோரைவிட அதிகமாக நம்மைக் கனப்படுத்தினால்தான், நாம் கனப்பட்டதாக உணர்கின்றோம். ஆனால், இந்த மனநிலை தவறானது. நம்மை வெறுத்துவிட்டு அவர்கள் பிறரை நேசிக்கவில்லை. நம்மைப் புறக்கணித்து விட்டு மற்றவர்களை அவர்கள் கனப்படுத்தவில்லை.

தேவன் சிலரை அதிகமாகப் பயன்படுத்துகிறார். சிலருக்கு அவரை அறிகின்ற அறிவை அதிகமாகக் கொடுக்கின்றார். சிலர், அவரால் அதிகமான நன்மைகளைக் காணச் செய்கின்றார். ஆயினும், அவர் நம்மை அற்பமாக எண்ணவில்லை. நம்மை அவர் நேசிக்காமல் இல்லை. நம்முடைய தேவைகளை அவர் தராமல் இருப்பதில்லை. சிலருக்கு 5 தாலந்து, சிலருக்கு இரண்டு தாலந்து, சிலருக்கு ஒரு தாலந்து தான். ஆயினும் அவர் பட்சமாதமற்றவரே. நம்மை அவர் நேசிக்கின்றார் என்பதே நமக்கு ஆறுதலான விஷயம்.

சிந்தனைக்கு...

உன்னுடைய வழியில் வந்து தேவன் அன்பைக் காண்பிக்க மாட்டார் தேவனுடைய வழியில் சென்றுதான் அதனை நீ உணர முடியும்.

மார்ச்
6
ஜீவ
நீரோடை

பக்தி வழி இதுவே

அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ... யோவான் 1:12

யோவான் 1:1-18

நாம் தேவன் மேல் பக்தியாயிருப்பதைக் காண்பிக்க ஆராதனை,ஜெபம், உபவாசம், காணிக்கை என்பது போன்ற பல வழிகளைப் பின்பற்றலாம். நாம் தேவனைப் பிரியப்படுத்த சில நல்ல ஒழுங்குமுறைகளையும், சில நல்ல மனக்கட்டுப்பாடுகளையும் வழிகளாகத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், தேவன் நாம் பக்தியானவர்கள் என்பதையும், நாம் அவரைப் பிரியப்படுத்த விரும்புகின் றவர்கள் என்பதையும் உறுதிபடுத்த வேறு சில வழிகளையே வைத்துள்ளார். அந்த வழியில் வராதவரை நாம் எவ்வளவு பக்தியாய்ச் செயல்பட்டாலும் கர்த்தர் அவற்றை அங்கீகரிப்பதில்லை.

சிலர் நல்ல ஜெபவீரர்கள். சிலர் நல்ல ஆராதனையாளர்கள். சிலர் தாரா ளமாக தேவனுக்காகக் கொடுக்கின்றவர்கள். சிலர் கர்த்தருக்கு நேரம் காலம் பாராமல் ஊழியம் செய்ய விரும்புகின்றவர்கள். இவர்கள் இவற்றை எல்லாம் செய்வது, தேவன் மேல் வைத்த பக்தியை வெளிப்படுத்தத்தான். ஆயினும், தேவன் இவற்றின் அடிப்படையில் பக்தியை அங்கீகரிப்பதில்லை. கர்த்தர் நாம் அவருடைய ஐக்கியத்துக்குள் வந்துவிட்டதையும், அவரால் இரட்சிக்கப்பட்டதையுமே உண்மையான தேவ பக்தியாக பார்க்கின்றார்.

ஏனென்றால், கர்த்தருடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக் கொள்வது பக்தியின் முதல் வாசலாக உள்ளது. கர்த்தரை நமக்குள் பெற்றுக் கொண்டு, கர்த்தரின் இரத்தத்தால் கழுவப்பட்ட அனுபவம் பெறுவது, தேவனுடைய பார்வையில் பக்தியின் உண்மையான அடையாளமாக உள்ளது. இவ்விதமான பாதையில் நாம் வராதவரை எந்தப் பக்திப்பாதையில் நாம் நடந்தாலும், அது சுய பக்தியாகவும் சுயநீதியாகவுமே எடுத்துக் கொள்ளப்படும். அநேகர் இரட்சிப்பின் அனுபவம் என்ற பாதைக்கு வராமலே, வேறு பல பக்தி விஷயங்களோடு அதிக மாகப் பிணைந்து விடுகின்றனர்.

ஆனாலும், அவற்றால் உண்மையான தேவ நன்மைகள் இல்லை. ஏனென்றால், நாம் பக்தியுடையோராக மாறுவதோ, அல்லது ஒழுங்குகளை யுடையவராகவோ மாறுவதோ அல்ல, தேவனுடைய முக்கியமான நோக்கம். நாம் தேவ உறவுடையோராக முதலாவது மாற வேண்டும். தேவ உறவில்லாத மனிதன்தான் தேவனுடைய பார்வையில் பாவி. அந்த உறவற்ற நிலையை எவ்வளவு பக்தியான செயல்களாலும் நாம் மாற்ற முடியாது. எனவே, நாம் முதலாவது கர்த்தராகிய இயேசுவை நமக்குள் பெறுகின்ற அனுபவத்திற்கு முதலிடம் தரவேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ உறவில்லாதவனின் நற்செயலை தேவன் ஏற்பதில்லை,
தேவ உறவுள்ளவனின் தவறுக்காக அவர் அவனைத் தள்ளுவதில்லை.

மார்ச் 7

ஜீவ நீரோடை

ஐக்கியம் இல்லாவிட்டால்

நீங்கள் ஏகசிந்தையும் ஏக அன்புள்ளவர் களாயிருந்து... பிலிப்பியர் 2:2

பிலிப்பியர் 2:1-13

குடும்பம் ஒன்றில் கணவன் தன்னுடைய எல்லா குடும்பக் கடமைகளையும் குறைவின்றி நிறைவாகச் செய்கின்றான். அதனைக் கவனிக்க நேரிடுகின்ற சிலர், நல்ல குடும்பஸ்தன் என்று பாராட்டுகின்றார்கள். ஆனால், அவருடைய மனைவிக்கோ கணவன் செய்கின்ற எதிலும் அதிருப்தியையே உணர முடிகின்றது. அவ்விதமே அந்தக் குடும்பத்தில் மனைவி குடும்பக் கடமைகளையெல்லாம் சிறப்பாகச் செய்கிறாள். அங்கே வருகின்ற எவரும் அவள் ஒரு குடும்பப் பாங்கான பெண் என்றும், சுவையாகச் சமைக்கின்றவள் என்றும் பாராட்டுகின்றனர். ஆனால், அவளுடைய கணவனோ அவளை நாவுக்கு ருசியாகச் சமைக்கத் தெரியாதவள் என்றும், குடும்பம் நடத்தத் தெரியாதவள் என்றும் குறை சொல்லிக் கொண்டிருக்கின்றான்.

உண்மை என்ன? இரண்டு பேரும் சிறப்பாக குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுகின்றவர்களே. ஆனால், இருவருக்கிடையில் ஒரு நல்ல ஐக்கியம் இல்லை. அவர்களுக்கிடையே மகிழத்தக்க நல்ல உறவில்லாததின் விளைவாகவே, எல்லாச் செயல்களும் அவர்களுக்கு அதிருப்தியைக் கொடுக்கின்றது. ஆம், எங்கே அன்பு இல்லையோ அங்கே அதிருப்திகள் மேலோங்கியிருக்கும். எங்கே நல்ல மன ஐக்கியம் இல்லையோ, அங்கே எந்த நல்ல செயலும் அதற்குரிய பாராட்டைப் பெறாது. அன்பற்ற மனம் எப்பொழுதுமே அதிருப்தியாக உணருவதிலேயே குறியாயிருக்கும்.

இருவரிடையே ஐக்கியத்தில் திருப்தியற்ற நிலைமை தொடரும் போது, ஒருவருடைய நல்ல பண்புகளாலும் செயல்களாலும் மற்றவரைத் திருப்தியாக்குவது கடினம். மற்றவர்கள்மேல் நல்லெண்ணம் இல்லாமல் போகும்போது, அவர்களின் நல்ல செயல்களும், குணங்களும், மதிப்பிற்குரியதாக தோன்றுவதில்லை. இயேசு கிறிஸ்துவின் நற்குணங்களையும், நற்போதனைகளையும், நற்செயல்களையும் அக்காலப் பரிசேயர்களும், சதுசேயர்களும், என்றுமே பாராட்டியதில்லை.

அதனுடைய காரணம் என்ன? அவர்கள் அவரோடு நல்லுறவில் இருக்கவில்லை. அவர்மேல் அவர்களுக்கு ஒரு அன்பற்ற மனநிலையே இருந்தது. எனவே, அவருடைய செயல்கள் அவர்களுக்கு எப்போதும் தவறாகவே தெரிந்தது. அவர் எல்லோார் பார்வையிலும் நலமானவைகளைச் செய்தாலும், அவர்களின் பார்வைக்கு அவர் தவறாகச் செயல்படுவது போலவே தோன்றினது. ஆம், நல்ல உறவு, நல்ல ஐக்கியம் ஆகியவற்றிற்கு நாம் முதலிடம் தர வேண்டும். ஒருவருடைய உறவிலும் ஐக்கியத்திலும் நாம் நிறைவடைந்தால்தான், அவருடைய பிற நல்ல விஷயங்கள் நம்மை திருப்திப்படுத்தும்.

சிந்தனைக்கு...

இன்னொருவரைக் குறித்த அன்பு சுருங்கும் போதெல்லாம், அவருடைய தவறுகள் மிகப் பெரியதாகத் தோன்றும்.

மார்ச்
8
ஜீவ நீரோடை

ஆவிக்கேற்ற விசுவாசம்

நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே...
யோவான் 6:26

யோவான் 6:14-33

விசுவாசம் என்பது வெறும் நம்பிக்கை அல்ல. அது ஆவிக்குரியதாக இருக்க வேண்டும். தேவன் சர்வ வல்லவர். எனவே, அவர் நமக்கு அற்புதமான காரியத்தைச் செய்ய முடியும் என்று நாம் நம்பலாம். நமக்கு ஒரு நன்மை ஏற்படுவதை நோக்கமாக வைத்து தேவனை அதிகமாக நம்புவது ஆவிக்குரிய விசுவாசம் அல்ல. ஆவிக்குரிய விசுவாசம் என்றால் தேவனைப் பிரியப்படுத்தும் விசுவாசம். ஒரு நல்ல மருத்துவரை அவருடைய மருத்துவத் திறனுக்காக நம்ப வேண்டும். ஒரு நல்ல ஆசிரியரை கற்பிக்கும் திறமைக்காக நம்ப வேண்டும். ஒரு நல்ல போதகரை அவருடைய நல்ல போதனைக்காக நம்ப வேண்டும்.

இப்படியெல்லாம் நம்பாமல் ஒரு பொருளாதார உதவிக்காக நம்பினால், அது அவர்களுக்குப் பிரியமான நம்பிக்கையாக இராது. அது போல கர்த்தரை பாவ விடுதலைக்காக நம்ப வேண்டும். பரிசுத்தமான ஒரு வாழ்க்கைக்காக அவரை நம்ப வேண்டும். நித்திய வாழ்க்கைக்காக நம்ப வேண்டும். இப்படிப்பட்ட ஆவிக்கேற்ற விஷயங்களுக்காக நம்பாமல் அற்புதத்திற்காகவும், வல்லமைக்காகவும் நம்பினால், கர்த்தர் அதனை அங்கீகரிக்கமாட்டார்.

அன்று ஒரு கூட்டம் மக்கள் இயேசுவின்மேல் அதிக விசுவாசம் வைத்து அவரைத் தேடிவந்தார்கள். ஆனால், அவர்களுக்கு அவர் காணப்படாமல் விலகிப் போனார். ஏனென்றால், அழிந்து போகும் அப்பத்திற்காக அவரை அவர்கள் விசுவாசித்தார்களேயன்றி, அழியாத நித்திய ஜீவனுக்காக விசுவாசிக்கவில்லை. எனவே அவர்களிடம் விசுவாசம் இருந்தும் அந்த விசுவாசத்தை அவர் அங்கீகரிக்க வில்லை. சிலர் அற்புதம் செய்கின்ற இயேசுவை அதிகமாக நம்புவார்கள். சரீர சுக மளிக்கும் இயேசுவை அதிகமாக நம்புவார்கள். பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கும் இயேசுவை அதிகமாக நம்புவார்கள். தங்களுக்குப் பெரிய காரியம் தேவன் செய்வார் என்று நம்புவார்கள்.

அதே வேளையில், பரிசுத்தமாகுதலுக்காக கவனம் செலுத்தமாட்டார்கள். நற்குணங்களுக்காக கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். பாவத்தை ஜெயித்தல், ஆடம்பரங்களை மேற்கொள்ளுதல், பணம் பொருளாசைகளை ஜெயித்தல் போன்ற விஷயங்களுக்காக விசுவாசிக்கமாட்டார்கள். இயேசுவின் அற்புத வல்லமையை மலையளவாக நம்பும் சிலரிடம் பரிசுத்தம், உண்மை, தாழ்மை, பொறுமை போன்றவை இருப்பதில்லை. ஏனென்றால், அவர்கள் மேலான விஷயங்களுக்காக ஆசைப்பட்டு அதற்காக கர்த்தரை விசுவாசிக்கவில்லை.

சிந்தனைக்கு...

பரிசுத்தத்தை தேடிப் பெறுகின்ற மனிதன்,
தேடாமலே தேவ நன்மைகளைப் பெறுவான்.

மிகப்பெரிய நன்மை

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே.... 1 யோவான் 3:1

1 யோவான் 3:1-12

கர்த்தர் என்னை இரட்சித்தார். கர்த்தர் என்னை மாற்றினார். கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார். இவ்விதமான சாட்சிகளை நாம் அதிகமாகக் கேட்கின்றோம். இவை சந்தோஷமான விஷயங்கள். ஆனால், இவை யாவற்றையும் எதற்காகக் கர்த்தர் செய்தார்? பழைய பாவ வாழ்க்கையை விட்டு நம்மைப் பிரித்து புதிய பரிசுத்த வாழ்க்கைக்குள் கொண்டு செல்வதற்காக என்று நாம் சொல்லலாம், உண்மைதான். ஆனால், நமக்குத் தேவன் செய்த மிகப்பெரிய நன்மை என்ன தெரியுமா? அவர் நமக்குப் பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தைக் கொடுத்தார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக்கப்பட்டோம் என்பதே மிகப்பெரிய சாட்சி ஆகும்.

தேவன் நமக்கு அளித்த சகல நன்மைகளிலும் மேன்மையானது, நாம் அவருடைய பிள்ளைகளாகும்படியாக அவர் தந்த கிருபைதான். ஒரு பெரிய செல் வந்தன் ஒருவனை தன்னுடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்வதைவிட அவனுக்கு பெரியதோர் நன்மையைச் செய்ய முடியாது. ஒருவர் நம்மை மன்னித்ததும், நம்மை சீர்திருத்தியதும், நம்மை செவ்வையாக்கியதும் பெரிய விஷயங்கள்தான். ஆனால், ஒருவர் நம்மை பிள்ளையாக ஏற்றுக் கொள்வது என்பது விவரிக்க இயலாத அளவிற்கு மிக மிகப் பெரிய விஷயம்.

நான் இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லுகின்ற சிலரிடம், நாம் விசேஷமான எதையும் பார்க்க முடிவதில்லை. நான் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டேன் என்று சொல்லுகின்ற சிலரிடம் நாம் எந்தப் பரிசுத்தத்தையும் பார்க்க முடிவதில்லை. கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று சொல்லுகின்ற சிலரிடம் எந்த மேன்மையையும் பார்க்க முடிவதில்லை. அவை யாவும் கடந்த கால நிகழ்வாகச் சொல்லப்படுகிறதே யன்றி, பலரிடம் அவற்றை நிகழ்கால அனுபவங்களாகப் பார்க்க முடிவதில்லை. ஏனென்றால், இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லுகின்ற அநேகர், தாங்கள் தேவ னுடைய பிள்ளைகளாக மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்ட உண்மையை உணரவில்லை.

தேவனுடைய பிள்ளையானோம் என்பது கடந்த கால நிகழ்வாக மட்டும் இராது. அது என்றும் உயிருடன் விளங்கும் உன்னதமான உறவின் அனுபவம். தேவ னுடைய பிள்ளைகள் தேவ உறவில் வாழ்கின்றவர்கள். தேவனுடைய பிள்ளைகள் தேவ ஐக்கியத்தால் வாழ்கின்றவர்கள். தேவனுடைய பிள்ளைகள் தேவ சாயலைப் பிரதிபலிக்கின்றவர்கள். தேவனுடைய பிள்ளைகள் தங்களின் பிறப்புரிமை சார்ந்த ஆசீர்வாதங்களாகிய சமாதானம், சந்தோஷம், பரிசுத்தம், நம்பிக்கை ஆகியவற்றை அனுபவித்து வாழ்கின்றவர்கள்.

சிந்தனைக்கு...

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற நிச்சயம் பெறும்வரை தேவன் நம்மை ஆசீர்வதித்த நிச்சயத்தைப் பெற முடியாது.

மார்ச் 10 ஜீவ நீரோடை

போதக ஊழியம்

ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு... தீத்து 2:1

தீத்து 2:1-15

ஒருவர் ரொம்ப நல்லவர். ஆயினும், அவருக்கு மருத்துவம் தெரியா விட்டால் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய வரக்கூடாது. ஒருவர் மிகவும் நேர்மையானவர். ஆனால் கட்டிடக்கலை நன்கு தெரியாமல் ஒரு கட்டிடத்தை கட்ட அவர் வரக்கூடாது. ஒருவர் சிறந்த பண்பாளர். ஆயினும், மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கத் தெரியாமல் ஆசிரியராக வரக்கூடாது. நல்லவர்கள் மெச்சத் தக்கவர்களாயினும், அவர்கள் சில திறமைகளைப் பெற்றிராதபோது, அது தொடர்பான செயல்களைச் செய்வது நல்லதல்ல.

சிலர் மிகவும் பக்தியானவர்கள். அவர்கள் நல்ல ஜெப வீரர்கள். அவர்கள் சாட்சியோடு வாழ்கின்றவர்கள். அவர்கள் ஆத்தும பாரம் மிகுதியாக உள்ளவர்கள். ஆயினும், அவர்கள் முழுநேர தேவ பணிக்காக வந்து பிரகாசிக்கவில்லை. ஏனென்றால், அவர்களிடம் போதகத்திறன் இல்லை. கர்த்தருக்குள் ஒருவரைப் போதித்து வழிநடத்தும் ஆற்றல் அவர்களிடம் இல்லை. சிலர் நல்ல நோக்கத்தோடும், நல்ல ஆத்தும பாரத்தோடும் சபைகளைத் துவங்கி விடுகின்றனர். ஆனால், ஆவிக் கேற்றவிதமாக விசுவாசிகளை ஆரோக்கியமான சத்திய உபதேசங்களால் போதித்து வளர்க்க இயலவில்லை.

சிலரால் ஆத்தும ஆதாயம் செய்ய இயலும். ஆனால், அவர்களைப் போதித்து வழிநடத்தி, கர்த்தருக்குள் வளர்ப்பது என்பது வித்தியாசமான ஒரு வேலை. சிலரால் சபையில் ஜனங்களை ஆராதனையில் வழிநடத்த இயலும். ஆயினும், அவர்களை நல்ல மேய்ப்பனாக சத்திய போதனைப் புல்வெளிகளில் மேய்த்து நடத்துவது வித்தியாசமான ஒரு வேலை. சிலரால் சபைக் கட்டிடங்களை கட்டித் தர இயலும். ஆயினும், நற்போதனை செய்து கிறிஸ்துவிற்குள் அவர்களை கட்டி எழுப்பும் வேலையை அவர்களால் செய்ய இயலாது. எனவே, இயன்றதை நாம் செய்வது தான் தேவ ஊழியமேயன்றி, நமக்குத் தரப்படாத அனுக்கிரகத்தை குறித்துக் கவலைப்படாமல் துணிந்து செயல்படுவது ஊழியம் அல்ல.

நாம் இறையியல் கல்லூரிகளுக்குப் போய் நிறையப் படித்து பட்டம் பெற்று விட்டால்கூட அதனால் போதகருக்குரிய தகுதியைப் பெற்றுவிட்டதாக எண்ண முடியாது. போதகர் என்பவர் புத்தகங்கள் வாயிலாகப் படித்தறிந்தவைகளை மட்டும் சார்ந்து ஆவிக்கேற்ற போதகராக முடியாது. அவர் தேவ ஐக்கியத்தோடு வாழ்ந்து தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றுக் கொள்ள இயன்றவராயிருத்தல் வேண்டும்.

சிந்தனைக்கு...

வேதாகமத்தைக் கற்றுக் கொண்டவன் அல்ல,
தேவ வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டவனே போதகன்.

மார்ச்
11
ஜீவ நீரோடை

அன்பான தந்தை

தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்...
1 யோவான் 4:7

1 யோவான் 4:6-21

ஒருவர் மிக மிக ஒழுக்கமானவர். வல்லமை உள்ளவர். எதையும் சரியாகச் செய்கிறவர். நீதி நியாயம் மிகுந்தவர். நேர்மைமிக்க மனிதர். ஆயினும், இவருடைய மகன் இவர் விஷயத்தில் சந்தோஷமாயில்லை. அவன் தன்னுடைய நண்பன் ஒருவனின் தந்தையைப் போல தன்னுடைய தந்தை இல்லையே என்று வருத்தப்படுகின்றான். ஆனால், அவனுடைய நண்பனின் தந்தை பாராட்டதக்க நல்ல விஷயங்கள் எதுவும் இல்லாதவர். ஆனால், மகனுக்கு நல்ல ஐக்கியம் கொடுப்பார். மகனுடைய விருப்பங்களைக் கேட்டறிந்து செய்வார். மகனுடன் கணிசமான நேரங்களைச் செலவழித்து மகனை உற்சாகப்படுத்துவார்.

ஒருவர் மிகவும் நல்லவராயிருப்பதோ, மிகுந்த நேர்மையாளராயிருப்பதோ, மட்டுமே இன்னொருவரை சந்தோஷப்படுத்திவிடாது. அவர் அன்பானவராகவும், நல்ல ஐக்கியம் தருகின்றவராகவும், இராவிட்டால், அவருடைய நல்ல நேர்மை யான நிலைமை நம்மை மகிழ்விக்காது. தேவன் பரிசுத்தர். தேவன் நீதிபரர். தேவன் உண்மை மிகுந்தவர். ஆனால், இவ்விதமாக தேவனை நாம் அறிந்திருப் பதால் மட்டும் நாம் சந்தோஷமாகிவிட மாட்டோம்.

தேவன் நம்முடைய அன்புள்ள தகப்பன். அவர் நம்மோடு பேசுகின்ற தகப்பன். அவர் நாம் பேசுவதை விரும்பிக் கேட்கும் தகப்பன். அவர் நமக்கு நல்ல ஐக்கியம் தருகின்ற தகப்பன். இவ்விதமாகத் தேவனை நாம் அறிந்திருக்க வேண்டும். இது வேதாகமத்தில் வாசித்து அறிவது அல்ல. நாம் தேவ ஆவியினால் தேவ உறவை நமக்குள் உணர்ந்து அறிந்து கொள்வதாகும். நாம் தேவனைப் பரிசுத்தராக மட்டும் அறிந்திருந்தால் அது அவருக்கு நாம் பயந்து வாழ உதவும். நாம் தேவனை அன்புள்ள தேவனாக ஆவியில் அறிந்திருந்தால் நாம் நம்பிக்கையோடும், சந்தோஷத்தோடும், குதூ கலத்தோடும் வாழ உதவும்.

அநேகர் கர்த்தரை பரிசுத்தராகவும், நீதிபரராகவும், கனத்திற்குரியவராகவும் அறிந்து கொள்வதோடு நிறுத்திக் கொள்கின்றார்கள். அவ்விதமான அறிவைச் சார்ந்து தேவனுக்கு பயப்படவும் அவரைக் கனப்படுத்தவும் செய்கின்றனர். ஆயினும், அவர்கள் தேவ உறவினால் மகிழ்வதில்லை. தேவ ஐக்கியத்தால் விசே-ஷமான குதூகலம் பெறுவதில்லை. எனவே, அவர்களுக்கு பக்தி அனுபவம் இருந்தபோதிலும் மனப்பரவசம் மிக்க ஒரு நிறைவான ஆவிக்குரிய அனுபவம் இல்லை. சீரியஸான கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. சிந்தையில் மகிழும் கிறிஸ்தவ வாழ்க்கை வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனைப் பரிசுத்தராக மட்டும் பார்த்தால், விலகி ஓட வைக்கும், அன்புள்ளவராகப் பார்த்தால், நெருங்கிப் போகவைக்கும்.

மார்ச்
12
ஜீவ நீரோடை

உறவைத் தேடுதல்

நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல....
எபேசியர் 5:1

எபேசியர் 5:1-17

நீண்டகாலமாக மற்றவர்களுக்கு வேலை செய்து வாழ்ந்து கொண்டிருந்த ஒரு இளவயது வாலிபனை, ஒரு பணக்கார முதலாளி மகனாகத் தத்து எடுத்துக் கொண்டால் எப்படியிருக்கும்? தன்னை மகனாக ஏற்றுக்கொண்ட முதலாளியிடம் அவன் எப்படி நடந்து கொள்வான்? அவரை முதலாளியாகப் பார்த்து அவருக்குத் தேவையான வேலைகளைச் செய்வதற்கு அவனுக்கு பிரச்சினை இராது. ஆனால், ஒரு மகனைப் போல இயல்பாக நடந்து கொள்வது அவனுக்குக் கடினமாக இருக்கும். ஒரு மகனுக்குரிய உரிமையோடும், சுதந்திரத்தோடும் இயல்பாக நடந்து கொள்வது அவனுக்கு எளிதாயிராது.

தேவன் நம்மை வேலையாட்களாக அல்ல. அவர் நம்மை சுவிகாரப் புத்திரர் களாக அழைத்துள்ளார். ஆனால், கர்த்தரை ஏற்றுக் கொள்ளும் பலர் வேலையாட் களைப் போல பயத்தோடும், பக்தியோடும், கடும் சிரமத்தோடும், கீழ்ப்படிவோடும் நடந்து கொள்கின்றனர். ஆயினும், தேவ உறவோடும், பிள்ளைகளுக்குரிய குதூகலத் தோடும், விடுதலையுணர்வோடும், நம்பிக்கையோடும் வாழ்வதில்லை. ஏனென்றால், அவர்கள் கிறிஸ்தவப் பக்தி வாழ்க்கை என்பதை, இதை இதைச் செய்யாதே, இதை இதைச் செய் என்ற அடிப்படையிலேயே புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, தேவனுடைய பார்வையில் தவறாக இருப்பதைத் தவிர்த்து வாழ்வதும், சரியாயிருப்பதை நிறைவேற்றி வாழ்வதையுமே ஆவிக்குரிய வாழ்க்கை என்று எண்ணுகின்றனர். ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இந்தவிதமான ஒரு உணர்வோடு செயல்படுவது அல்ல. தேவன் நமக்கு முதலாளியாக அல்ல, அவர் நமக்குத் தந்தை. அவருக்கு நாம் வேலையாட்களைப்போல அல்ல. பிள்ளை களாக இருக்க விரும்புகின்றார். எனவே, ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்தல் என்பது நாம் பிள்ளைகளைப் போல நடந்து கொள்ளப் பழகுவதாகும்.

அதை எப்படி அனுபவத்தில் காண்பது? தேவனை அறிகின்ற அறிவில் நாம் வளரவேண்டும். தேவனை அறிய அறிய, அவர் நாம் பிள்ளைகளைப் போல உரிமையோடும், சுதந்திரத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழ விரும்புவதை அறிந்து கொள்ள முடியும். தேவ ஐக்கியத்தைத் தேடுவதற்கும் அதனை உணருவதற்கும் நாம் முதலிடம் கொடுக்கும் போது, இவ்விதமான அறிவைப் பெற்றுக் கொள்வோம். எனவே, நல்ல வேலையாட்களைப் போல கீழ்ப்படிவது நல்ல விஷயமாயினும், பிள்ளைகளைப் போல தேவ உறவையும், அன்பையும், ஐக்கியத்தையும் அனுபவிப் பதற்கே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ பயம், தகாததைத் தவிர்க்க உதவும்,
தேவ அன்புத் தகுதியானதை அடைந்திட உதவும்.

மார்ச்
13
ஜீவ நீரோடை

நல்லதை விரும்பாமல்

எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும்...
தீத்து 1:9

தீத்து 1:5-16

திருச்சபை ஒன்றில் இரண்டு பாஸ்டர்கள். ஒருவர் மிக மிகச் சரியாக சத்தியத்தைப் பேசுவார். இன்னொருவர் பெரும்பாலும் பிழையான உபதேசங்களையே பேசுவார். அந்த சபையைச் சேர்ந்த ஒருவர் பிழையான உபதேசங்களை எப்பொழுதும் எதிர்ப்பவர். இவர் பிழையான உபதேசம் பண்ணும் பாஸ்டர் பேசும் போது தான் சபைக்கு வருவார். அவர் தப்பிதமாகப் பிரசங்கம் செய்வதை உன்னிப்பாகக் கவனித்து, சபை முடிந்ததும் காரசாரமாய் வாக்கு வாதம் செய்வார். ஆனால், சரியாகப் பிரசங்கிக்கும் பாஸ்டரின் பிரசங்கத்தைக் கேட்கவும் மாட்டார். கேட்க நேரிட்டாலும் ஒரு வார்த்தை பாராட்டவும் மாட்டார்.

தவறான விஷயங்களை ஏற்றுக் கொண்டு சும்மாயிராமல், சுட்டிக்காட்டிக் கண்டிப்பது நல்ல பழக்கமே. அதே வேளையில், அது நல்ல விஷயங்கள்மேல் கொண்ட விருப்பத்தின் விளைவாக இருக்க வேண்டும். சத்தியத்தின்மேல் அதிக விருப்பம் கொண்ட ஒருவர் பிழையான உபதேசங்களை எதிர்ப்பது நியாயம். அதே வேளையில், சத்தியத்தின்மேல் விசேஷ விருப்பம் எதுவுமில்லாத நிலையில், சரியற்றவைகளைக் கண்டிப்பது மாய்மாலம்.

சிலருக்கு எங்கே குற்றம்? எங்கே குறை? எங்கே தவறு என்று தேடிப்பார்த்து விமர்சிக்கும் பழக்கம் உள்ளது. அது சரியானவைகள்மேல் கொண்ட விருப்பத்தால் அல்ல. குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும், தவறுகளை விமர்சிப்பதிலும் அவர்களுக்கு ஒரு பெரிய குஷி உள்ளது. தங்களின் தவறான ஒரு மனநிலையின் விளைவாகவே அவர்கள் தேடித் தேடி விமர்சனம் செய்கின்றனர். கிறிஸ்தவர்களில் சிலருக்கு எந்த சத்திய ஆர்வமும் கிடையாது. பக்தி விருத்தியடைவதற்கான சத்தியத்தைக் கேட்க மாட்டார்கள். நல்ல தேவ ஊழியர்களைப் பயன்படுத்தமாட்டார்கள். நல்ல உபதேசங்களைச் செவிகொடுத்துக் கேட்கமாட்டார்கள். ஆனால், குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் போலிசாரைப்போல, இவர்கள் யார் தவறாக ஊழியம் செய்கின்றார்கள் என்பதை மட்டும் உன்னிப்பாகக் கவனிப்பார்கள்.

யோசேப்பு தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் உண்மையும் உத்தமமுமாக வாழ்ந்தான். நேர்மையான வாழ்க்கையை அவன் விரும்பினான். அதே வேளையில், தன்னுடைய சகோதரர்களின் துன்மார்க்கத்தை, அவன் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் தகப்பனிடம் அறிவித்தான். தரமான அசல் பொருட்களை வேண்டாம் என்று விலகிப் போகிறவர்கள். தரமற்ற போலியான பொருட்களைக் குறித்து கண்டனம் செய்வது சரியல்ல.

சிந்தனைக்கு...

நல்லவனை பார்த்து பாராட்ட விரும்பாதவன்
கெட்டவனைப் பார்த்துக் கண்டிப்பது மாய்மாலமே.

மார்ச்
14
ஜீவ நீரோடை

வாக்குத்தத்தம்

உம்முடைய வாக்கின்மேல் நோக்கமாய்...
சங்கீதம் 119:82

சங்கீதம் 119:81-104

கிறிஸ்தவர் ஒருவர் தினமும் காலையில் எழுந்ததும் டி.வி வாயிலாகவோ, யூ-டியூப் வாயிலாகவோ யாராவது தருகின்ற வாக்குத்தத்த வசனத்தைப் பார்த்து குறித்துக் கொள்வார். வேதாகமத்தை வாசிக்கும் போது ஏதாவது வாக்குத்தத்தம் போல வசனங்கள் கிடைக்கிறதா என்ற எதிர்பார்ப்போடேயே வாசிப்பார். எதிலும் கிடைக்காவிட்டால் அவருக்குத் தெரிந்த தேவ ஊழியரைத் தொடர்பு கொண்டு ஒரு வாக்குதத்த வசனம் கேட்பார். அதாவது, தினமும் இவருக்கு கர்த்தர் நல்லது செய்யப் போவது போன்ற ஒரு வாக்குத்தத்த வசனம் வேண்டும். வாக்குத்தத்த வசனம் நிறைவேறுகிறதா இல்லையா என்பதெல்லாம் அவருக்கு முக்கியமல்ல.

இன்று அநேகர் தேவனுடைய வழிநடத்தும் வார்த்தைகளை எதிர்பார்ப்ப தில்லை. தேவ ஆலோசனைகளை எதிர்பார்ப்பதில்லை. தேவனுடைய கண்டிப்பான போதனைகளை விரும்புவதில்லை. சத்தியத்தை அறிவதற்குத் தேவையான வார்த்தைகளைக் கேட்பதில்லை. தங்களின் காரியங்கள் வாய்க்கும் என்ற நம் பிக்கையைத் தருகின்ற வார்த்தைகளையே கேட்கின்றனர். தங்களுக்கு ஆதரவான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் வார்த்தைகளைப் பெற்றுக் கொள்வதையே, ஒரு ஆசீர்வாதம் என எண்ணுகின்றனர்.

நாம் ஒரு குறிப்பிட்ட விதமான உணர்வைத் தரும் வார்த்தைகளைப் பெறு வதையே ஆசீர்வாதம் என எண்ணக்கூடாது. தேவன் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கு எந்த வார்த்தைகளைத் தர விரும்புகின்றரோ, அதனைப் பெற நாட வேண்டும். ஆறுதலான வார்த்தைகள்தான் ஆறுதலைத் தரும் என எண்ணக்கூடாது. தேவன் எந்த வார்த்தை பேசினாலும், அதனால் நமக்கு ஆறுதல் உண்டாகும். தேவனுடைய வார்த்தை போதனை வார்த்தையாகவோ, சீர்திருத்தும் வார்த்தையாகவோ, கண் டிக்கும் வார்த்தையாகவோ, இருக்கலாம். ஆனால், அவை தேவ வார்த்தையாக இருப்பதால் அதனால் விசேஷமான நல்ல விளைவுகள் ஏற்படும். தேவன் நமக்குள் பேசுவாராயின் அது அவர் நம்மேல் கொண்ட அக்கறையின் விளைவானதே.

எனவே, அனுதின வாழ்க்கையில் தேவனே எனக்கு எந்தவிதமான வார்த்தைகள் தேவையோ, அதனைத் தாரும் என்று கேட்க வேண்டும். நாம் சீர் திருந்துவதற்கும், உணருவதற்கும், திருத்திக் கொள்வதற்கும் ஒரு தேவை இருக்கும் போது, நாம் ஆறுதலான வார்த்தையைத் தேடினால் அது பயனற்றது. மருந்து சாப்பிட வேண்டிய தேவையான வேளையில், நல்ல சுவையான உணவை உண்பதால் சற்று நேர திருப்தி கிடைக்குமேயன்றி, நல்ல ஆரோக்கியம் கிடைக்காது.

சிந்தனைக்கு...

தினமும் ஆறுதலின் வார்த்தையை அல்ல.
வாழ்க்கைக்கு அவசியமான வார்த்தையைக் கேள்.

மார்ச்
15
ஜீவ நீரோடை

வளமையா? வலிமையா?

என் கண்கள் இச்சித்தவைகளில்.....
பிரசங்கி 2:10

பிரசங்கி 2:1-17

வளமையான வாழ்க்கையையே பலர் வலிமையான வாழ்க்கை என நினைக்கின்றனர். எல்லாம் ஏராளமாய் இருந்தால், அதனை திருப்தியான வாழ்க்கை என எண்ணுகின்றனர். வலிமை அதிகமாயிருப்பது என்பது வேறு. எல்லாம் பெற்றுக் கொண்டிருப்பது என்பது வேறு. திருப்தியாய் வாழ்வது என்பது வேறு. வலிமை என்பது மாம்சத்தோடு சம்பந்தப்பட்டது. திருப்தி என்பது மனதோடு சம்பந்தப்பட்டது.

சாலொமோன் இராஜா ஆஸ்தி, அந்தஸ்து, அதிகாரம், ஞானம், புத்தி ஆகிய பகுதிகளில் வலிமையாகத்தான் இருந்தான். ஆயினும், அவன் ஒரு வலிமையான சாம்ராஜ்யம் வலிமையிழந்து போவதற்கு வழிவகுத்தான். ஏனென் றால், அவன் தன்னைச் சரியாக ஒழுங்குகளுக்குள் நிறுத்தி வைக்கும்வலிமை யற்றவனாயிருந்தான். ஆசைகளுக்கு வரம்பு வைக்கும் வலிமை அவனுக்கு இல்லை. மனம் விரும்பியபடி செல்லாமல், கட்டுப்பாடுகளை விதிக்கும் வலிமை அவனுக்கு இல்லை. ஆசைகளையும் உணர்ச்சிகளையும் முறைப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அவனிடம் இல்லை. எனவே, கண்கள் இச்சித்தவைகளுக்கு தடையெதுவும் விதிக்காமலும், மனம் விரும்பியவைகளுக்கு எந்த மறுப்புக் கூறாமலும், அவற்றின் இழுவைகளின் பாதையில் சென்றான்.

அவ்விதம் அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் பெருகிய போதிலும் திருப்தி பெருகவில்லை. நினைத்தபடியெல்லாம் பெற்றுக் கொண்டாலும், போதும் என்ற மனநிலை ஒருபோதும் வரவில்லை. இவை யாவும் பலவீனமானதும், திருப்திநிலை எட்ட இயலாததுமான மனநிலை, பலவீனத்தின் விளைவுகளே. ஆசைகள் யாவற்றையும் அலட்சியம் செய்யத் தேவையில்லை. விருப்பங்கள் யாவற்றையும் விட்டு விலகி ஓட தேவையில்லை. ஆசைகளை அளவுகளுக்குள் உட்படுத்தும் மனவலிமை வேண்டும். அடைந்தவைகளால் திருப்தியடைகின்ற மனநிலைகள் வேண்டும். தேவனோடும் தேவனுடைய சத்திய வார்த்தைகளோடும் நம்முடைய மனம் முழுமையாகப் பிணைக்கப்படும் போது, இயற்கையான மனநிலைகள் இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று கேட்கும் போது திருப்திநிலை அடைய இவை போதும் என மனம் சொல்லும்.

எனவேதான், அப்போஸ்தலனாகிய பவுல், போதும் என்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்றான். தேவன் தம்முடைய ஐக்கியத்தினால் நம்முடைய மனதிற்குள் திருப்தியை அருளும் போது பணம், பொருள், வலிமை.

சிந்தனைக்கு...

போதும் என்ற மனநிலையைப் பெறவிடாமல் தடுக்கும் செல்வம் ஆசீர்வாதமல்ல. அது ஒரு சாபம்.

மார்ச்
16
ஜீவ நீரோடை

நல்லவர்களாவது எப்படி?

தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்...
1 யோவான் 3:9

1 யோவான் 3:1-11

ஒருவர் நல்லவராக இருந்தாலும் அவருடைய பிள்ளைகள் அவரைப் போல நல்லவர்களாக இராமல் போவதுண்டு. ஒருவர் நீதியும் நேர்மையுமாய் வாழ்ந்து பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தும், அவருடைய பிள்ளைகள் அவ்விதம் இராமல் போவதுண்டு. அவ்விதமே, தேவனுக்குப் பிள்ளைகளா கிறவர்கள் பரிசுத்தராகிய தேவனைப் போலிராமல் பாவிகளாயிருக்க முடியாதா? என்ற கேள்வி முக்கியமானது. நல்ல தகப்பனுக்குப் பிறந்து, நல்ல போதனைகளைக் கேட்டு வாழ்ந்த பிள்ளைகள், பின்னர் சரியற்றுப் போகிறார்களே. அப்படியானால் தேவனுடைய பிள்ளைகள் என்று தங்களை நம்புகின்றவர்கள், தேவ வழியில் நடவாமல் விலகிப் போக முடியாதா?

நாம் நல்லவர்களாக இருக்கலாம். பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதரிகளாக வாழலாம். பிள்ளைகளுக்கு நல்ல நெறிமுறைகளைக் கற்றுக் கொடுக்கலாம். ஆயினும், நாம் விரும்புகின்றபடி பிள்ளைகள் வாழ விரும்பினால், அதனை அவர்களுடைய பலத்தினால்தான் அவர்கள் செய்ய முடியும். நாம் பிள்ளைகளை நல்லவர்களாகப் பார்க்க விரும்பினாலும், அந்த விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் நம்மிடம் இல்லை. நல்லவர்களாய் வாழ்வதற்கான ஆற்றலை நாம் தர முடியாது. சில நேரங்களில் பிள்ளைகள் நாம் விரும்பியபடி வாழ விரும்பினாலும், அவர்களிடம் அவ்விதம் வாழும் வல்லமை இல்லாததால், அவர்களுக்கு முடியாமல் போகிறது.

ஆனால், தேவனுக்கு நாம் பிள்ளைகளானால் அப்படியல்ல. அவர் நாம் நல்லவர்களாகவும், பரிசுத்தர்களாகவும் வாழ விரும்புகின்றவர் மட்டுமல்ல. அவ் விதம் வாழ்வதற்குத் தேவையான பரிசுத்த ஆற்றலையும் தருகிறவர். நம்முடைய நல்ல ஆவியைப் பிள்ளைகளுக்கோ, பிறருக்கோ நாம் அளிக்க முடியாது. ஆனால், தேவன் தம்முடைய ஆவியை தம்முடைய பிள்ளைகளுக்கு அளித்து, தாம் விரும்புகிற விதமாக அவர்கள் வாழ்வதற்கு உதவுகின்றார். (அப் 2:38, அப் 1:8)

ஆம், நல்ல பெற்றோர் நம்மை நல்லவர்களாக மாற்றிவிட முடியாது. நல்ல போதகர்கள் நம்மை நல்லவர்களாக மாற்ற முடியாது. தேவன் மட்டுமே நம்மை மாற்ற முடியும். எனவே, சிலருடைய நல்ல போதனைகளால் நாம் மாறிவிட முடியாது என்பதை உணர்ந்து, தேவனுக்கு நாம் பிள்ளைகளாக மாற வேண்டும். கர்த்தருக்குள் மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளை என்ற நிலைமையைப் பெற்றால்தான், நாம் நல்லவர்களாகவும், தேவனுக்கு உகந்த பரிசுத்தர்களாகவும் மாற முடியும்.

சிந்தனைக்கு...

நல்ல போதனைகள் நல்ல முத்துக்கள்,
அதனை தேவன் நமக்குத் தந்த இருதயத்தில்தான் காக்க வேண்டும்.

மார்ச் 17 ஜீவ நீரோடை

கர்த்தரின் ஆசீர்வாதம்

தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்...
நீதிமொழிகள் 28:27

நீதிமொழிகள் 28:11-28

ஒருவர் மிகவும் சாதாரணமான நிலையிலிருந்து நல்ல பொருளாதார வலிமை நிலைக்கு வந்தார். அவர் யார் தன்னுடைய இல்லத்திற்கு வந்தாலும், தான் அற்பநிலையிலிருந்து தேவனால் உயர்ந்த நிலைக்கு வந்ததை, கதைகதையாய்ச் சொல்லுவார். திருச்சபைகளில் சாட்சி சொல்ல வாய்ப்புக் கிடைத்தால் வரிவரியாய் விளக்கி சாட்சி சொல்லுவார். யாராவது பொருளாதார நிலையில் குன்றிப் போயிருந்தால் தன்னுடைய சாட்சியைக் கூறி அவர்களை உற்சாகப்படுத்துவார். ஆனால், யாருக்கும் பத்து ரூபாய் உதவி செய்யமாட்டார். தனக்கிருக்கும் சொத்துக்களையெல்லாம் பட்டியல் போட்டு தேவனைப் புகழ்வார். ஆனால், ஒரு அவசரத் தேவைக்கு யாரும் 50 ரூபாய் அவரிடம் வாங்க முடியாது.

ஆனால், இது தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதற்கான அடையாளம் அல்ல. தேவனிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்ட சாட்சியை உடையவர். தேவனுடைய அன்பில் பிறருக்குக் கொடுக்கும் செயல்பாட்டையும் உடைவராயிருப்பார். நல்ல கனி தராத மரம் எல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியிருக்க யாருக்கும் கனிதராத மனநிலை உடைய ஒருவரை, தேவன் ஆசீர்வதித்திருக்க வாய்ப்பில்லை.

பணம், பொருள், அந்தஸ்து ஆகியவற்றைக் காண்பித்து, கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று சொல்வது உண்மையல்ல. கர்த்தர் ஒரு மனிதனை ஆசீர்வதிக்கும் போது முதலாவது அவனுடைய இருதயத்தைத்தான் ஆசீர்வதிப்பார். ஒரு மனிதனுக்குள் தேவ அன்பு வருவதுதான் தேவ ஆசீர்வாதத்தின் முக்கியமான அடையாளம். தேவ அன்பு வந்துவிட்டால் பிறரை நேசிக்கின்ற பண்பும், பிறருக்கு உதவுகின்ற பண்பும் வந்துவிடும். தேவன் ஒரு மனிதனுக்கு தம்முடைய உறவில் வாழும் வாய்ப்பைக் கொடுப்பதுதான் பிரதான ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டவன் பிறர்மேல் தயவும், அன்பும், உடையவனாகவே இருப்பான்.

இந்நிலையில் அந்த மனிதன் பணம், பொருள், வசதி என எந்த நிலையில் உயர்வு பெற்றாலும், அவற்றிலிருந்து பிறருக்கு உதவும் பண்பும் சேர்ந்தே செயல்படும். பிறருக்கு உதவுகின்ற இரக்க மனநிலை ஒருவரிடம் இல்லையா? அப்படியானால், அந்த மனிதன் இன்னும் தேவ உறவினால் ஆசீர்வதிக்கப்படவில்லையென்று பொருள். எனவே, அந்த மனிதனிடத்திலிருக்கும் பணமும் செல்வமும், அந்த மனிதன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதால் வந்தது என்ற கூற இயலாது.

சிந்தனைக்கு...

தேவனிடத்திலிருந்து பெற்றதை நீ பலருக்குச் சொல்லு,
உன்னிடத்திலிருந்து பெற்றதை பிறரும் சொல்லட்டும்.

மார்ச்
18
ஜீவ நீரோடை

தேவன் தள்ளமாட்டார்?

தேவனை விட்டுவிலகுவதற்கேதுவான...
எபிரெயர் 3:12

எபிரெயர் 3:1-19

இன்று மனம் போன விதமாக வாழ்வதற்கு விரும்பி, பெற்றோரை விட்டு ஓடிப்போகும் பிள்ளைகள் பலர். அவர்கள் தவறாக வாழ்ந்தபோதும், பெற்றோர் அவர்களை ஓடிப்போய்விடக் கூறுவதில்லை. பிள்ளைகளின் தவறான வாழ்க்கை முறை, பெற்றோரை மிகுதியாகக் காயப்படுத்துவது உண்மை. ஆயினும், தங்களின் பிள்ளைகளை அவர்கள் பெரும்பாலும் விலக்கி வைக்க விரும்புவதில்லை.ஆனால், பிள்ளைகளோ தங்களின் கட்டுப்படுத்தப்படாத தவறுகளின் விளைவாகப் பெற்றோரை விட்டு விலகிப்போகத் தூண்டப்படுகின்றார்கள்.

நாம் தவறு செய்து விட்டால் தேவன் நம்மை தள்ளிவிடுவாரா? நாம் அவருக்குப் பிரியமற்றவைகளைச் செய்யும் போது அவர் நம்மை துரத்திவிடுவாரா? என்று சிலர் கேட்பார்கள். கிருபையினால் நம்மை அழைத்த தேவன் நம்முடைய குறைவுகளையும், தவறுகளையும் கண்டு நம்மை துரத்துவதில்லை. ஆனால், நம்மிடமுள்ள தவறும் குறைவும் நம்மை தேவனை விட்டு விலகத்தூண்டும். பாவத்தின் அழுத்தம் பெருகும் போது அது நம்மை தேவனை விட்டு விலகிப்போக வைக்கும். பாவம் செய்து கொண்டே தேவ சமுகத்தில் வாழ்வது கடினம்.

ஒளியில் இருக்கின்ற மனிதனிடம் அழுக்குகள் இருந்தால், வெளிச்சம் அவனைத் துரத்தாது. ஆனால், அழுக்குகளை உடைய மனிதன்தான் வெளிச்சத்தில் இருப்பதை அசௌகரியமாக உணர்ந்து இருளை நோக்கிப் போகத் தூண்டப்படுவான். அவ்விதமே நம்மிடம் தவறான சுபாவங்களும், தவறான ஆசைகளும், தவறான செயல்களும், சேரும்போது தேவன் நம்மை துரத்தி விடுவார் என்று கூற இயலாது. ஆனால் பாவங்களோடும், குறைகளோடும் நாம் தேவனோடு வாழ்வது கடினமாகிவிடும். எனவேதான், தேவ உறவில் வாழ்கின்ற மனிதன், தேவனை விட்டு தன்னை தூரப்படுத்தும் தன்மையுள்ள பாவங்களுக்கும், குறைவுகளுக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடி எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதம் கூறுகிறது. (எபிரெயர் 3:12) சிலர், அன்புள்ள தேவன் நாம் எவ்வளவு பாவம் செய்தாலும், அவர் நம்மை தள்ளவே மாட்டார் என்று கூறுவார்கள். உண்மைதான். ஆனால், நம்மிடம் தவறுகள் அதிகமாகும்போது, தேவ உறவில் தொடரவிடாதபடி நாம் தேவனை விட்டு விலக நேரிடும் என்பதே வேதம் தரும் எச்சரிக்கை.

சிந்தனைக்கு...

தவறுகளைப் பார்த்து அன்புள்ள தேவன் விலகமாட்டார்.
ஆனால், தவறுகள் தேவ அன்பை விட்டு நம்மை விலக்கும்.

மார்ச்
19
ஜீவ நீரோடை

தேவாலய அமைதி

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்...
மத்தேயு 11:28

மத்தேயு 11:25-30

பலவிதமான பிரச்சினைகளினால் மன அமைதியை இழந்த ஒருவர், திறந்திருந்த தேவாலயம் ஒன்றில் போய் சற்று நேரம் அமர்ந்தார். அங்கே மிகச் சிறந்த அமைதி நிலவியது. பலவிதமாக இரைச்சல்களைவிட்டு அமைதியான ஒரு சூழ்நிலையைக் கண்ட அவருக்கு, அது மிகவும் ஆறுதலாயிருந்தது. அந்த தேவாலயச் சூழ்நிலை அவருக்கு ரொம்பப் பிடித்தது. எனவே, அடிக்கடி அந்த தேவாலயத்திற்கு வந்து மனதைச் சற்று இலகுவாக்குவது, அவருடைய பழக்கமாக மாறியது. ஆயினும், தேவாலயத்தை விட்டு வெளியே வந்ததும், மறுபடியும் பழைய அமைதியற்ற நிலை அவரைப் பாதித்து விடும்.

சத்தங்கள் இல்லாத அமைதி நிறைந்த ஒரு சூழ்நிலை, அமைதியற்ற ஒரு மனிதனுக்கு ஒரு ஆறுதலாகயிருப்பது இயற்கையானது. ஆனால், அந்த ஆறுதல் போதுமானதல்ல. சற்று நேரம் மனதை இரைச்சல்களுக்குத் தூரமாக்கி, அமைதியை உணர்வதால் பிரச்சினைகள் ஓடிவிடாது. நம்முடைய இருதயம் தேவனுக்கு ஆலயம் ஆக வேண்டும். அந்த ஆலயத்தில் தேவனுடைய சமுகம் தங்க வேண்டும். அப்போது எல்லாச் சூழ்நிலைகளுக்கு நடுவிலும், மனம் உண்மை யானதோர் அமைதியைக் காண முடியும். நாம் அமைதியைப் பெற்றுக் கொள்ள, எப்பொழுதும் அமைதி மிகுந்த தேவாலயங்களுக்குள் போய் தங்கியிருக்க முடியாது. நம்முடைய இருதயம் தேவ ஆலயம் ஆகிவிட்டால் நாம் எங்கிருந்தாலும் தேவ அமைதியை அனுபவிக்க முடியும்.

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கின்றவர்களை தம்மிடம் வந்து இளைப்பாறு தலைப் பெற்றுக் கொள்ள இயேசு அழைத்தார். (மத்தேயு 11:28) அது சற்று நேர இளைப்பாறுதல் அல்ல. அது தொடர்ந்து நம்மிடம் செயல்படும் இளைப்பாறுதல். அநேகர், ஆயலத்திற்குப் போனால் அமைதி கிடைக்கும். ஆராதனைக்குப் போனால் அமைதி கிடைக்கும். ஜெபக் கூட்டம் போனால் அமைதி கிடைக்கும். என்று எண்ணு கின்றனர். ஆனால், இவை தற்காலிக இளைப்பாறுதல்களே.

மரங்களின் கீழே நிழல் கிடைப்பது உண்மை. ஆனால் நிழலுக்காக மரங்களை தேடிச் சென்று கொண்டிருக்க முடியாது. நமக்குள் நமக்கொரு நல்ல இளைப்பாறுதலும் வேண்டும். கர்த்தர் நமக்குள் வந்து விட்டால் நாம் நமக்குள் தேவாலயம் ஆகிவிடுவோம். அந்த தேவாலயத்தால் நாம் எல்லாச் சூழ்நிலை களிலும் அமைதியைக் கண்டடைய முடியும். நம்முடைய பக்தி ஆலயங்கள்மேல் இராமல், நாம் தேவனுக்கு ஆலயமாக மாறுவதில் வரவேண்டும்.

சிந்தனைக்கு...

கடற்கரையில் உணர்ந்த காற்றை வீட்டிற்குக் கொண்டு செல்ல இயலாது.
அமைதியான இடங்கள் தருகின்ற அமைதியும் அப்படியே.

பகிர முடிந்த அன்பு

நான் உங்களில் அன்பாயிருந்தது போல...
யோவான் 13:34

யோவான் 13:33-38

பணம், பொருள், கேளிக்கை, பொழுதுபோக்கு, களியாட்டம் என ஒரு மனிதன் தன்னைப் பலவிதங்களில் சந்தோஷமாக்கிக் கொள்ளலாம். ஆனால், இந்த சந்தோஷத்தால் அவன் பிறரைச் சந்தோஷப்படுத்த முடியாது. அதாவது இவன் உணர்ந்த சந்தோஷத்தின் விளைவாக இன்னொருவர் சந்தோஷப்பட முடியாது. ஒரு மனிதன் இன்னொருவரால் மிக நிறைவாக நேசிக்கப்பட முடியும். ஆனால், இவன் அனுபவித்த அன்பின் பலத்தால் இன்னொருவரை இவனால் நேசிக்க முடியாது. ஒருமனிதன் இன்னொருவருடன் மிக மிக வலிமையான ஒரு ஐக்கியத்தை அல்லது நட்பைப் பெற முடியும். ஆயினும், அந்த ஐக்கியத்தின் பின்பலத்தோடு, அவன் இன்னொருவரோடு நல்ல ஐக்கியம் கொண்டிருக்க முடியாது.

நாம் பெற்ற சந்தோஷத்தைக் கொண்டு இன்னொருவரைச் சந்தோஷப் படுத்துவது எப்படி? நாம் உணர்ந்த அன்பைக் கொண்டு இன்னொருவரை நேசிப்பது எப்படி? நாம் அனுபவித்த ஐக்கியத்தால் இன்னொருவரோடு ஐக்கியம் வைப்பது எப்படி? கர்த்தர் ஒரு ஆத்துமாவை சந்தோஷப்படுத்தினால் அந்த ஆத்து மாவிற்கு மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தும் ஆற்றல் வந்து விடும். கர்த்தர் தம்முடைய அன்பை ஒரு மனிதனுக்குக் கொடுக்கும் போது, அந்த அன்பால் அந்த மனிதன் பிறரை நேசிக்க முடியும். கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கின்ற மனிதன் பிறரோடும் நல்ல ஐக்கியம் வைத்துக் கொள்ள முடியும்.

பிறரைச் சந்தோஷப்படுத்தும் நம்முடைய ஆற்றல் மிகவும் பலவீனமானது. பிறரை நேசிக்கும் நம்முடைய வலிமை மிகவும் குறைவுள்ளது. பிறருடன் நல்ல ஐக்கியத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் திறன் நமக்கு மிகவும் குறைவு. ஆனால், கர்த்தரோடு நாம் நல்ல ஐக்கியத்தோடு வாழ்வதற்குக் கவனம் செலுத்தும் போது, நாம் விசேஷ ஆற்றல் பெறுவோம். கர்த்தருக்குள் நம்முடைய சந்தோஷம் பெருகும். கர்த்தருடைய அன்பு நமக்குள் ருசிக்கப்படும். கர்த்தருக்குள் நாம் ஐக்கியத்தை அனுபவிப்போம்.

கர்த்தரால் சந்தோஷம் கண்ட இருதயம் பிறரைச் சந்தோஷப்படுத்தும் விதமாக வலிமை பெறும். அந்த இருதயம் பிறருக்குச் சஞ்சலம் கொடுக்காது. கர்த்தருடைய அன்பை ருசித்த இருதயம், பிறரை நேசிக்கும் உத்வேகம் பெறும். கர்த்தருடைய ஐக்கியத்தினால் உற்சாகம் கண்ட இருதயம், பிறரோடுள்ள உறவிலும் ஐக்கியத்திலும் வலிமையாயிருக்கும்.

சிந்தனைக்கு...

சந்தோஷமற்றவர்கள் அருகில் இருந்தால் உன்னுடைய சந்தோஷமும் பறிபோகும். எனவே, அவர்களைச் சந்தோஷப்படுத்து.

மார்ச்
21
ஜீவ நீரோடை

எதிர்பார்ப்பு

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள்...
மத்தேயு 5:6

மத்தேயு 5:1-16

ஒருவர் தினமும் காலையில் ஒரு தினசரி தியான நூலை தவறாமல் படிக்கும் பழக்கம் உடையவர். ஒருநாள் அவருடைய இல்லத்திற்கு விருந்தாளியாக வந்த நபர், அந்தப் புத்தகத்தை படிக்க நேரிட்டது. அவர் அந்தப் புத்தகத்தில் பக்திவிருத்தி தரும் எந்த ஒரு கருத்தும் இல்லாததைக் கண்டார். இந்த தியான நூலில் எந்த நல்ல கருத்தையும் பார்க்க முடியவில்லையே. இதனை தினமும் படிப்பதால் உனக்கு என்ன பயன் என்று கேட்டார். அதற்கு அந்த நபர், நான் பயன் எதையும் எதிர் பார்த்துப் படிப்பதில்லை. காலை தியான நேரத்தில் ஏதாவது ஒரு தினசரி தியான நூலைப் படிக்க வேண்டுமே என்பதற்காக படிப்பதாகச் சொன்னார்.

சிலரிடம் நீங்கள் சபைக்குப் போவதால் என்ன பயன் என்று கேட்டால், இப்படித்தான் அவர்கள் பதில் தர இயலும். சிலரிடம் நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் என்ன பயன் என்று கேட்டால், இப்படித்தான் பதில் தர இயலும். ஆம், இவர்கள் எந்தப் பயனையும் எதிலும் எதிர்பார்த்துச் செயல்படுவதில்லை. ஏதோ பழகிக் கொண்ட ஒருமுறை என்ற அடிப்படையிலேயே, அவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்கின்றார்கள். ஜெபம், வேத வாசிப்பு, சபைகூடுதல், தேவ வார்த்தை கேட்டல் என பல விஷயங்கள் அவர்களிடம் உண்டு. ஆனால், அவற்றின் மூலம் அவர்கள் எதையும் எதிர்பார்க்கவுமில்லை, அடையவுமில்லை.

இது நாத்திகர்களாக வாழ்வதைவிட மோசமானது. எதிர்பார்ப்பில்லாமல் எதையாவது செய்வது அர்த்தமற்றது. எதிர்பார்த்துதான் ஜெபிக்க வேண்டும். எதிர்பார்த்துதான் வேதம் வாசிக்க வேண்டும். எதிர்பார்த்துதான் சபைக்குப் போகவேண்டும். எதிர்பார்த்துதான் எந்த ஒரு பக்திச் செயலையும் செய்ய வேண்டும். எதிர்பார்ப்பில்லாதவன் எதையும் அடைய மாட்டான். சபைக்கு ஒழுங்காகப் போய் வருகின்ற ஒருவரிடம், நீங்கள் சபைக்குப் போகும் நோக்கம் என்ன என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், சின்ன வயசிலேயே எங்க அப்பா என்னை சபைக்குக் கட்டாயப்படுத்தி அழைத்து வருவார். அவர் ஆரம்பித்த அந்தப் பழக்கத்தை, என்னால் விட்டுவிட முடியவில்லை என்றாராம்.

சத்திய ஆவி ஒருவருக்குள் வராவிட்டால் சத்தியம் தொடர்பாக அவருக்கு எந்த எதிர்பார்ப்பும் இராது. ஏனென்றால், அவருக்கு சத்தியம் தொடர்பான பசியோ தாகமோ இல்லை. சத்திய ஆவி வந்து விட்டால் தேவ உறவு, தேவ அன்பு, தேவ ஐக்கியம் ஆகியவற்றின்மேல் வாஞ்சையும் தாகமும் வந்துவிடும். அந்தப் பசி வந்து விட்டால், கடமைக்காக எதையும் எதிர்பார்ப்பின்றிச் செய்ய முடியாது.

சிந்தனைக்கு...

மனிதர்களிடம் எதையாவது எதிர்பார்த்து ஏமாந்து போகாதே.
தேவனிடம் எதையும் எதிர்பாராமல் சோர்ந்து போகாதே.

மார்ச்
22
ஜீவ நீரோடை

ஆரோக்கியமில்லை ஏன்?

அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து...
ஓசியா 5:15

ஓசியா 5:1-15

அவர் சரீர நலன்மேல் விசேஷ அக்கறை உடையவர். மிக மிகத் தரமான உணவு வகைகளை உண்ணுவார். மிக மிகச் சரியான நேர ஒழுங்குகளோடு சாப்பிடுவார். தவறாமல் உடற்பயிற்சி செய்வார். ஆயினும், அவருடைய உடல் ஆரோக்கியமாக இல்லை. அவருடைய தரமான உணவுப் பழக்கத்திற்கும், அவருடைய உடல் நிலைமைக்கும் சம்பந்தமே இல்லை. காரணம் என்ன? இவர் மிக மிகக் கவனமாக சரீர நலனைப் பேணுவார். ஆனால், மருத்துவப் பரிசோதனை செய்து, சரீர நிலைமையைக் கண்டறியமாட்டார். அவருடைய சரீரத்தில் சில வியாதிகள் இருந்தபடியால் இவருடைய ஒழுங்குமிக்க உணவுப் பழக்கங்களுக்கு நல்ல பலன் கிடைக்கவில்லை.

சிலர் ஒழுங்கும் கிரமுமான கிறிஸ்தவர்கள். ஜெபம், ஆராதனை, வேத வாசிப்பு, உபவாசம், காணிக்கை, ஊழியம் என பல ஆவிக்குரிய விஷயங்களில் மிக மிகச் சரியான ஒழுங்குகளைப் பின்பற்றுகின்றவர்கள். காலை ஜெபம், மாலை ஜெபம், குடும்ப ஜெபம், சங்கிலி ஜெபம், இரவு ஜெபம் என ஏராளமான ஜெப பங்கேற்புகள் இருக்கும். இவை யாவும் செய்வதினால், அவர்கள் விசேஷமான சமாதானத்தையோ சந்தோஷத்தையோ பெறுவதில்லை.

ஏனென்றால், அவர்கள் இரட்சிப்பின் அனுபவம் என்ற அடித்தளம் இல்லாமலே, இவை யாவற்றையும் செய்வார்கள். அவர்கள் இரட்சிப்பின் அனுபவம் என்றால் என்ன? என்று புரிந்துகொள்ளுதல் இல்லாமலேயே இவை யாவற்றையும் செய்வார்கள். அவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை தொடர்பான விசேஷ தரிசனமோ, இலக்கோ இல்லாமல் பக்தியாய் பல காரியங்கள் செய்வதையே அர்ப்பணிப்பு என எண்ணுவார்கள். அவர்கள் சிலரைக் குறித்த கோபம், வெறுப்பு, வைராக்கியம் ஆகியவற்றோடு இருப்பதை பாவமாக எண்ணுவதில்லை. அவர்கள் பணத்தின்மேல், பொருளின் மேல், ஆடம்பரத்தின் மேல், எல்லோரைப் போன்ற ஒரு ஆசையோடு இருப்பதை தவறு என்று எண்ணுவதில்லை.

இதுபோன்ற பலவீன நிலைகளை உணராமல், மிக மிக ஒழுங்கும் கிரமமுமாய் அவர்கள் பல ஆவிக்குரிய செயல்களைச் செய்வதால், அவர்கள் பலனடையவில்லை. நம்முடைய இருதயம் பாவ சாயலான வியாதியின்றி ஆவிக்குரியதாக இருக்கின்றதா என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டும். பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு இருதயத்தைப் பெற்றுக் கொள்ளாமல், நல்ல பல ஆவிக்குரிய செயல்களைச் செய்வதால் பயனில்லை.

சிந்தனைக்கு...

நல்ல இருதயமுடையவர்களை நல்ல போதனைகள் மகிழ்விக்கும், மற்றவர்களை அவை துக்கப்படுத்தும்.

மார்ச்
23
ஜீவ நீரோடை

பயன்படுத்தும் தேவன்

வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவர் ஒருவரே... 1 கொரிந்தியர். 12:4

1 கொரிந்தியர் 12:1-20

ஓவியம் வரைவதற்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர், ஏழு வயதுப் பையன் வரைந்த ஒரு ஓவியத்தைப் பார்த்து மிக மிக அருமை என்று பாராட்டினார். பின்னர் 16 வயது பையன் வரைந்த ஓவியம் ஒன்றைப்பார்த்து அதையும் மிக மிக அருமை என்றார். சிலருக்கு அது விளங்கவில்லை. ஏனென்றால், 16 வயது மாணவன் வரைந்த ஓவியம்தான் மிக மிக அருமையாக இருந்தது. ஆனால், அந்த ஓவிய ஆசிரியரின் பார்வை வேறு. 7 வயதுப் பையனுடைய ஆற்றலை அவனுடைய வயதுகளின் அடிப்படையிலேயே பார்த்தார். 16 வயது மாணவனுடைய திறமையை, அவனுடைய வயதுகளின் அடிப்படையிலேயே பார்த்தார்.

சில நேரங்களில் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பிப்பதினால்தான், சிலருடைய நல்ல விஷயங்களை அதற்கேற்ற விதமாகப் பார்த்து பாராட்ட இயலவில்லை. அவருடைய பின்னணியின் அடிப்படையில் பார்த்தால் அவர்களிடமிருந்து வெளிப்பட்டதை விசேஷமாகப் பார்க்க முடியும். குறிப்பிட்ட ஒருவர் எந்த ஒரு போதகரை சற்று பாராட்டி னாலும், அவரைவிட சிறந்த ஒரு போதகர் என்று இன்னொருவரைக் காண்பிப்பார். ஏதாவது ஒரு புத்தகத்தை நல்ல புத்தகம் என்றால், இதைவிட இன்னொரு வருடைய புத்தகம் மிகச் சிறப்பு என்பார். நன்றாகப் பாடுகிற ஒருவரைக் குறித்துச் சொன்னால் இன்னொரு பாடகரை, இவரைவிட சிறந்த பாடகர் என்பார். ஒப்பிட்டுப் பார்க்கும் மனநிலையினால் சிலரை அவரால் பாராட்ட முடிவதில்லை.

தேவன் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு விதங்களிலும், வேறு வேறு அளவுகளிலும் கிருபை அளிக்கின்றார். எனவே, எல்லோரிடமும் ஒரே விதமாக எதிர்பார்க்க முடியாது. அவரவர் பெற்ற கிருபையின் அடிப்படையில் அவர்கள் செயல்படும் போது, அவர்களுக்கு அமைந்த வட்டத்திற்குள் எந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

சிலநேரங்களில், மிகவும் பிரபலமடைந்து மிகப் பெரிய அளவுகளில் தேவ ஊழியம் செய்கின்றவர்களையே பலர் வல்லமையாகத் தேவனால் பயன் படுத்தப்படுகிறவர்கள் என்பார்கள். அதே வேளையில், சிலர் சிறிய அளவில் ஊழியம் செய்திருந்தாலும், அவர்களின் சூழ்நிலையிலிருந்து பார்க்கும் போது, அதுவும் தேவனால் வல்லமையாக உபயோகிக்கப்பட்ட ஒன்றே. அவரவர்களுக்கு அளிக்கப்பட்ட அனுக்கிரகத்தின் அடிப்படையில் அவர்களின் செயல்களைக் கவ னித்தால், தேவன் அவர்களையும் மிக வல்லமையாய்ப் பயன்படுத்தியிருக்கின்றார் என்பது புரியும்.

சிந்தனைக்கு...

தேவன் வல்லமையாக ஒருவரைப் பயன்படுத்தினாலும், எல்லோரும் அவரை விரும்பிப் பயன்படுத்துவதில்லை.

மார்ச்
24
ஜீவ நீரோடை

வலிகள்

**நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை...
2 கொரிந்தியர் 4:8**

2 கொரிந்தியர் 4:1-18

நாம் நெருக்கப்பட்டாலும் ஒடுங்கிப் போவதில்லை என்ற வேத வார்த்தை ஆறுதலைத் தருவதுதான். ஆயினும், நெருக்கப்படுதலின் வலியைத் தாங்கிக் கொண்டுதான் அதனைக் காண வேண்டும். நீதிமான்களுக்கு வரும் துன்பங்கள் அநேகம். கர்த்தர் எல்லாவற்றிலிருந்தும் விடுவிப்பார் என்பது ஊக்குவிக்கின்ற வார்த்தையே. ஆயினும், அநேகம் துன்பங்களால் வருகின்ற வலியைச் சகிப்பது எளிதானதல்ல. உடல்வலிதாங்க இயலாமல் மருத்துவமனை சென்ற வியாதி யாளனிடம், மருத்துவர் ஐந்து நாட்களில் சரியாகிவிடும் என்கிறார். ஆனால், ஐந்து நாட்கள் வலியைத் தாங்க வேண்டுமே.

ஆம், கர்த்தர் நம்மோடிருந்தாலும் நாம் சில சூழ்நிலைகளில் சில கடுமையான விஷயங்கள் தருகின்ற வலியைச் சகித்தாக வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் சந்திக்க நேரிட்ட எல்லாப் போராட்டங்களிலும் கர்த்தர் அவனை விடுவித்தார் என்பது உண்மை. ஆனால், ஒவ்வொரு போராட்டமும் சில வலிகளை அவனுக்குக் கொடுக்கவே செய்தது.

வலிகள் இல்லாத வாழ்க்கை அல்ல. வலிகளைச் சகித்து கொண்டு முன் னோக்கிச் செல்லும் ஒரு வாழ்க்கையே கிறிஸ்தவ வாழ்க்கை. இந்த வலிகளை அனுமதிக்கும் தேவன், அவற்றைத் தாங்குவதற்குத் தேவையான கிருபையை அருளாமல் இருப்பதில்லை. எனவேதான், என்னைப் பலப்படுத்தும் இயேசு கிறிஸ்து வினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்று அப்போஸ் தலனாகிய பவுல் கூறினான். யோசேப்பு சந்தித்த வலிகள் கொஞ்சமல்ல. தாவீது உணர்ந்த வலிகள் கொஞ்சமல்ல. ஆனால், கர்த்தர் அவர்களோடிருந்த ஒரு நிச்சயத் தினால் அதனைச் சகிக் கவும், தாங்கவும் தக்கதான ஒரு விசேஷ கிருபை அவர்களிடம் செயல்பட்டது.

என் வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட வலிகளைவிட அந்த வலிகளை ஏற்று, உணர்ந்து, சகித்து, கடந்து வருவதற்கு கர்த்தர் தந்த கிருபையை நினைத்துப் பார்க்கும் போது, இன்றும் ஆச்சரியமாக உள்ளது. சில நேரங்களில் எவ்வளவு வலிக்கிறது என்பதை விட, எவ்வளவாய் அதனைத் தாங்கிட கர்த்தர் ஆற்றல் தருகின்றார் என்ற சிந்தனை மேலோங்கியிருந்திருக்கிறது. சில நேரங்களில் வரப்போகிற வலிகளைக் கற்பனை செய்தபோது, ஐயோ! தொலைந்தோம் என்றே எண்ண முடிந்தது. ஆனால், அவை வந்தபோது இவற்றையும் கடந்து செல்ல முடிகிறதே என்றுதான் சிந்திக்க முடிந்தது.

சிந்தனைக்கு...

வலிகளை அறியாத வாழ்க்கை பழுதடைகிறது.
வலிகளைச் சகிக்கும் வாழ்க்கை பலமடைகிறது.

மார்ச் 25

ஜீவ நீரோடை

கிருபை தேவை

நீர் திரும்பவும் உயிர்ப்பித்து....
சங்கீதம் 71:20

சங்கீதம் 71:1-24

தீங்கு வராமல் காக்க வல்ல தேவன், தீங்கு வந்தபோது தடுக்காமல் நிகழ்ந்துவிட அனுமதித்து விடுகின்றார். அது நிகழ்ந்தபோது அது புரிந்து கொள்வதற்குக் கடினமாகிவிடுகிறது. என்ன நடந்தது என்பதைவிட, ஏன் இப்படி நடந்தது என்ற கேள்வி திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கும். எத்தனையோ தீங்குகள் வருவதற்கான சூழல் இருந்த காலங்களில், கர்த்தர் அவை வராதபடி காத்தது உண்மை தான். ஆயினும், தீங்குகள் அனைத்திற்கும் நாம் விதிவிலக்கானவர்கள் அல்ல. சில தீங்குகள் நம்முடைய விசுவாசம் சார்ந்த எதிர்பார்ப்புகளையும் மீறி வந்து நிகழ்கின்றது.

ஆனால், தீங்கு வராமல் காக்கின்ற தேவன் தீங்குகள் வரும்போது கைவிடாமல் நமக்குத் துணை நிற்கிறார். ஏன் தீங்கு வந்தது என்ற கேள்விக்கு அவர் விடை தருவது கடினம். ஆனால், தீங்கு வந்த சூழ்நிலையில் உடனிருந்து உதவி செய்து, அதனைக் கடந்து போக உதவுவது நிச்சயம். சில வேளைகளில் நடந்துவிட்ட காரியங்கள் கர்த்தர் மேல் ஒருவிதமான வருத்தத்தையோ, அதிருப்தியையோ ஏற்படுத்தி விடுகிறது. அதனால் வந்துவிட்ட துன்பத்தின் நடுவில் கர்த்தருடைய கிருபையைப் பெற்று, அதனை எதிர்கொள்ளும் வாய்ப்பினைப் பயன்படுத்தாமல் போகிறோம்.

சில வருத்தமான நிகழ்வுகள் நிகழ்ந்துவிட்ட பிறகு, கர்த்தர்மேல் வருத்தமாயிருப்பதால் சூழ்நிலை மாறுவதில்லை. எவ்வளவோ நம்பிக்கை வைத்து வாழ்ந்தேன், எனக்கு இப்படி நிகழ்ந்துவிட்டதே என்று நொந்து கொண்டிருப்பதால் பலன் இல்லை. காயம் ஏற்பட்டுவிட்டால் அது ஏன்? என்ற கேள்வி தீர்வைத் தராது. என்ன செய்யலாம் என்ற கேள்விதான் தீர்வுக்கு வழிவகுக்கும். சிலர் துன்ப நேரங்களில் ஜெபம், வேத வாசிப்பு, சபைக்கூடுதல், ஆராதனை என எல்லாவற்றையும் போதும் என்று நிறுத்திவிடுகின்றனர். எந்த நேரத்தில் கர்த்தரின் கிருபை அதிகமாகத் தேவைப்படுகிறதோ, அந்த நேரத்தில் அதனை அலட்சியம் செய்வது போல அது ஆகிவிடுகிறது.

வேதனை தருகின்ற நிகழ்வைத் தேவன் தடுக்காமல் போனாரே என்ற அதிருப்தியில், அவருடைய கிருபைகளைத் தேடாமல் போகக் கூடாது. அப்படிச் செயல்பட்டால், நடந்த நிகழ்வின் வேதனையோடு அதனை ஆற்றிக் கொள்ளும் வழியைத் தேடாமல் போவதின் விளைவாக வேதனையும் சேர்ந்துவிடும். இந்தச் சூழ்நிலையைக் கடந்து செல்ல ஒரு விசேஷ வலிமை தேவை. தேவனருளும் ஆறுதலைக் கொண்டும், ஆதரவைக் கொண்டும் ான் இந்தக் கசப்பான காலத்தைக் கடக்க இயலும். எனவே, இப்போதும் அவரைப் பற்றிக்கொண்டு வாழ்வதே நலமான விளைவைத் தரும்.

சிந்தனைக்கு...

ஏன் இந்தச் சோதனை என்ற கேள்விகள்
சோதனைகளைக் கடக்கும் வாய்ப்புகளை அழிக்கிறது.

மார்ச்
26
ஜீவ நீரோடை

மாறுகின்ற அன்பு

தேவன் அன்பாகவே இருக்கிறார்...
1 யோவான் 4:16

1 யோவான் 4:10-21

ஒரு முறை சபை ஐக்கியத்தின் வழியாக அறிமுகமான ஒருவருடைய இல்லத்திற்கு சென்றிருந்தேன். அப்போது என்மேல் அவர் காண்பித்த அன்பும், எனக்கு அவர் கொடுத்த உபசரிப்பும் என்றும் நினைவில் நிற்பதாக இருந்தது. அவர் என்மேல் ரொம்ப அன்பாக இருக்கின்றார் என்று புரிந்துகொண்டேன். அந்தப் புரிந்துக் கொள்ளுதலின் அடிப்படையில் இன்னொரு முறை அவருடைய இல்லத்திற்குச் சென்றேன். அன்று அவர் என் விஷயத்தில் சற்றும் விருப்பம் அற்றவராகவும், என்னை ஒரு விரும்பப்பட இயலாத விருந்தாளியாக எண்ணியதையும் உணர்ந்தேன். அது ஒரு விஷயத்தை எனக்கு கற்றுத் தந்தது. நேற்று ஒருவர் என்னை நேசித்ததை வைத்து, இன்றும் அவர் என்மேல் அன்பாயிருக்கிறார் என்று எண்ணிவிடக்கூடாது.

ஆம், அவ்வப்போது இரத்த அழுத்த அளவையும் சர்க்கரை அளவையும் சோதித்து அறிவது போல, பிறர் நம்மேல் எப்படிப்பட்ட மனநிலையோடு இருக்கிறார்கள் என்பதையும் சோதித்து அறிய வேண்டியுள்ளது. ஆம். மனிதர்களின் அன்பு மாறும் தன்மை உடையது. மனிதர்களின் கரிசனை மாறும் தன்மையுடையது. மனிதர்கள் நம்மேல் வைக்கும் நல்லெண்ணங்கள் மாறும் தன்மையுடையது. மனிதர்கள் நம்மேல் வைக்கும் அக்கறை மாறும் தன்மையுள்ளது. ஆனால், தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதம் சொல்கின்றது. இதனை அவ்வப்போது சோதிக்கத் தேவை யில்லை. அவர் அன்பாயிருக்கிறார் என்ற உண்மையை நாம் எப்போதுமே நம்பிச் செயல்படலாம்.

தேவன் ஒருவர்தான் அன்பில் மாறாமல் இருக்க இயன்றவர். எனவே, நாம் அந்த அன்பைச் சார்ந்து எப்பொழுதும் வாழலாம். முன்பு போல கணவன் நேசிக்கவில்லை, முன்புபோல மனைவி நேசிக்கவில்லை, முன்பு போல பிள்ளைகள் நேசிக்கவில்லை, முன்பு போல நண்பன் நேசிக்கவில்லை என்று மனதில் சோர்வடைவோர் பலர். உண்மைதான். அவர்கள் அன்பில் நிலைத்திருக்கவும், நிறைவாயிருக்கவும் இயலாதவர்கள். அவர்கள் மாறாதிருக்க இயலாதவர்கள்.

எனவே, அவர்களின் அன்பை எல்லா வேளைகளிலும் எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக்கூடாது. கர்த்தரின் அன்பை ருசித்துப் பழக வேண்டும். கர்த்தரின் அன்பை ருசித்துப் பழகினால் என்ன நடக்கும்? மனிதர்களின் அன்பை தேடித் தேடி சோர்ந்து போகும் மனநிலையிலிருந்து விடுதலை அடைவோம். முன்பு போல யாராவது ஒருவர் அன்பாயில்லை என்று நாம் எண்ணும்போது, கர்த்தர் அன்பாகவே யிருக்கிறார் என்று வேதம் சொல்கிறது. விசுவாசத்தோடு அந்த அன்பைத் தேடுவோம்.

சிந்தனைக்கு...

மனிதர்களின் அன்பை மனதார விரும்பு,
தேவனுடைய அன்பை மட்டும் எப்போதும் நம்பு.

மார்ச்
27
ஜீவ நீரோடை

வாய்ப்பும் பிரச்சினையும்

என் ஆபத்து நாளில் ஆண்டவரைத் தேடினேன்...
சங்கீதம் 77:2

சங்கீதம் 77:1-20

நம்பிக்கை உடையவன் ஒவ்வொரு பிரச்சினையிலும் ஒரு வாய்ப்பைப் பார்க்கின்றான். நம்பிக்கை இல்லாதவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் ஒரு பிரச்சினையை பார்க்கின்றான். இது முன்னாள் இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலின் கூற்று. ஆம், நமக்குள் நம்பிக்கை இல்லாவிட்டால் ஒவ்வொரு நல்ல வாய்ப்பிலும் இருக்கின்ற ஒரு பிரச்சனை மட்டும்தான் நமக்குத் தெரியும். நம்பிக்கை நமக்குள் இருந்தால், ஒவ்வொரு பிரச்சினையிலும் நல்லதற்கேதுவான ஒரு வாய்ப்பு இருப்பதை நாம் அறிவோம்.

கோலியாத்தைக் கண்ட சவுல், அதனை ஒரு பிரச்சினையாக மட்டும் பார்த்தான். ஆனால், தாவீதோ, தேவனுடைய மகிமையைக் காணவும் வெளிப்படுத்தவும், அதனை நல்ல ஒரு வாய்ப்பாக எண்ணினான். நல்ல வாய்ப்புகள் என்பது முழுக்க முழுக்கச் சாதக அம்சங்களோடு மட்டுமே வருவதில்லை. அங்கே சில பிரச்சினைகள் இருக்கும். அதனைச் சந்திக்க மனதை ஆயத்தப்படுத்தும் போதுதான் நல்ல பல சாதகமான நன்மைகளைப் பெறும் வாய்ப்பு ஏற்படும். ஒரு பிரச்சினையையும் சந்திக்காமல் கடலுக்குள் இருக்கும் முத்தை எடுத்து வரமுடியாது.

கானானை வேவு பார்க்கச் சென்றவர்களில் 10 பேர் கானானுக்குள் பிரவேசிப்பதை ஒரு பிரச்சினையாகப் பார்த்தார்கள். உயர்ந்த மதில்கள், பயங்கரமான ஏனாக்கியர்கள் ஆகியவையே அவர்களுடைய கண்களில் தெரிந்தன. ஆனால், தேவனுடைய சமுகம், தேவனுடைய வாக்குத்தத்தம், தேவனுடைய வழிநடத்துதல் போன்றவை அவர்களுக்குச் சாதகமாயிருந்ததை அவர்கள் பார்க்கவில்லை. ஆனால், காலேபும், யோசுவாவும் வித்தியாசமாகப் பார்த்தார்கள். தேவன் தங்களோடிருக்கும் சாதகமான வாய்ப்பை அவர்கள் விசேஷமாகப் பார்த்தனர். எனவே, அவர்கள் நம்பிக்கையோடு பேச ஆரம்பித்தனர்.

ஒரு எதிர்மறையான சூழ்நிலை வருகிறதென்றால், விசுவாசத்தைச் செயல்படுத்த அது ஒரு வாய்ப்பு. கோபமூட்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை வந்தால், அது கர்த்தருடைய கிருபையைச் சார்ந்து பொறுமையாயிருக்க ஒரு வாய்ப்பு, தனித்துவிடப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், தேவனை முற்றிலும் சார்ந்து நின்று வாழ்வதற்கான ஒரு வாய்ப்பு. பாவ சோதனைகள் அழுத்துகின்றதென்றால், தேவ வல்லமையை அதிகமாகத் தேடி செயல்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு. ஒவ்வொரு எதிர்மறையான சூழ்நிலையும்உண்மையானதேவனுடைய பிள்ளைகளுக்கு, கர்த்தரைச் சார்ந்து நின்று ஜெயம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு.

சிந்தனைக்கு...

எதிராக வருகின்ற ஒவ்வொரு சோதனையும்,
தேவனுடைய ஆதரவைப் பெறுவதற்கு இன்னொரு வாய்ப்பே.

மார்ச்
28
ஜீவ நீரோடை

தேவனுக்குத் தெரியும்

நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்...
சங்கீதம் 139:1

சங்கீதம் 139:1-24

நம்மைக் குறித்த பிறருடைய அறிவைவிட நம்மைக் குறித்த நம்முடைய அறிவு முக்கியமானது. மற்றவர்களைவிட நம்மைக் குறித்து நாம்தான் சரியாகவும் முழுமையாகவும் அறிய முடியும். நம்மை நாம் சரியாக அறிந்து கொள்ளும் அறிவைப் பெற்றிருந்தால், பிறர் நம்மை தவறாக அறிந்து வைத்திருப்பதைக் குறித்து கவலைப்படத் தேவையில்லை. சிலருக்கு நாம் உண்மையானவர்கள் என்று தெரியாது. சிலருக்கு நாம் நல்லவர்கள் என்று தெரியாது. சிலருக்கு நாம் தவறு செய்யாதவர்கள் என்று தெரியாது. சிலருக்கு சில செயல்கள் விஷயத்தில் நம்முடைய உண்மை நோக்கங்கள் தெரியாது.

நம்மைச் சரியாக அறிவதற்கான நிலையில் இல்லாதவர்கள், நம்மைக் குறித்த தவறான மதிப்பீட்டை வைத்திருக்கலாம். அதற்காக நாம் வருந்தத் தேவையில்லை. ஆனால், நம்மை நாம் சரியாக அறிந்து வைத்திருக்கின்றோமா என்பதே முக்கியம். அப்படி அறிந்திருந்தால் தேவனுக்கு முன்பாக நாம் அந்த அறிவின் அடிப்படையில் சரியாக இருப்பதை எண்ணி சந்தோஷப்பட வேண்டும். அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்த ஒருவரைக் குறித்து இன்னொருவர் அவர் ஒரு பெண்ணுடன் தவறாகப் பழகுவதாக பலரிடம் கூறினார். ஆனால், இவரோ அதைக் குறித்து கவலைப்படவில்லை. அதைக் குறித்து இன்னொருவர் கேட்டபோது, என்னைக் குறித்து நான் சரியாக அறிந்து வைத்திருக்கின்றேன். எனவே, இன்னொருவருடைய தவறான அறிவைக் குறித்து, நான் கவலைப்படத் தேவையில்லை என்றார்.

சிலர் நம்மை மதிக்கத்தக்கவர்களாக எண்ண முடிவதில்லை. சிலர் நம்மை பாராட்டுக்குரியவர்களாக எண்ண முடிவதில்லை. சிலர் நம்மை நம்பத்தக்கவர்களாக எண்ண முடிவதில்லை. இது நம்முடைய பிரச்சினை அல்ல. இது அவர்களுடைய மனதின் பிரச்சினை. அவர்களின் மனம் எப்படியோ அதற்கேற்பவே பிறரைக் குறித்த அவர்களின் எண்ணங்களும் இருக்கும்.

அதே வேளையில் நாம் நம்மை நம்முடைய கண்களால் அல்ல. நாம் தேவனுடைய கண்களால் நம்மைப் பார்க்கப் பழக வேண்டும். நாம் தேவ சமுகத்தில் வாழ்ந்தால் தாவீதைப் போல நாமும், கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர் என்று கூற இயலும். (சங்கீதம் 139:1) அப்படிக் கூறும்போது நாம் நம்மை நம்முடைய மனதின்படி அல்லாமல், தேவனுடைய மனதின்படி புரிந்து கொள்வோம். அப்போது மற்றவர்கள் நம்மை எப்படிப் புரிந்து கொண்டாலும் நாம் நம்மைச் சரியாக புரிந்து வைத்திருப்போம்.

சிந்தனைக்கு...

சரியாகப் புரிந்து கொள்ள இயலாதவர்களால் மட்டுமே நாம் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவோம்.

மார்ச் 29 ஜீவ நீரோடை

நம்மிடம் பாவம் இல்லையா?

உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல்...
யோவான் 8:7

யோவான் 8:1-12

இன்னொருவருடைய உடலில் இருக்கும் வியாதி நம்மிடம் இல்லை. அதனால், நாம் ஆரோக்கியமானவர்கள் என்று அர்த்தம் அல்ல. அவரிடம் இல்லாத இன்னொரு வியாதி நம்மிடம் இருக்கக்கூடும். எனவே, இன்னொருவரிடமுள்ள வியாதி என்னிடம் இல்லை என்பதை மட்டுமல்ல. என்னிடம் வியாதியே இல்லையா என்று பார்க்க வேண்டும். ஒவ்வொருவரை ஒவ்வொரு விதமான வியாதி பாதிக்கக்கூடும். எனவே, நான் ஆரோக்கியமானவனா என்று பார்க்க வேண்டுமேயன்றி,குறிப்பிட்ட ஒரு வியாதி என்னிடம் இல்லை என்பதை அல்ல.

பாஸ்டர் ஒருவர் தன்னுடைய பிரசங்கங்களில் ஒழுக்கம் பற்றியும், தவறான பழக்கவழக்கங்கள் பற்றியும், மிக மிகச் சீரியஸாகக் கண்டித்து கடிந்து கொண்டு பேசுவாராம். ஆனால் பண ஆசை, பொருளாசை சம்பந்தமாக எதுவும் பேசமாட்டாராம். ஏனென்றால், அவர் ஒழுக்கம் சம்பந்தமாக சரியாக இருப்பார். தப்பான பழக்க வழக்கங்கள் கிடையாது. ஆனால் பணம், பொருள் விஷயத்தில் அவர் என்றுமே திருப்தியடையாமல், அதற்காகவே அதிதீவிரமாய் ஓடிக்கொண்டிருப்பார்.

சிலர், பாலியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தங்களைக் கட்டுப்பாடாக வைத்திருந்தால், பரிபூரண பரிசுத்தர்களாக நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், தங்களிடம் இல்லாத நற்குணங்களைப் பற்றியோ, தங்களை அடிமைப்படுத்தியிருக்கிற பணம், பொருள் ,ஆசைகளையோ பற்றிக் கவலைப்படமாட்டார்கள். பாவம் என்பதைக் குறிப்பிட்ட விதமான சில தவறுகளில் மட்டும் பார்க்கக்கூடாது. எனவே, குறிப்பிட்ட சில பாவங்கள் இல்லாமல் வாழ்வதையல்ல. பாவம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை அடையாளம் கண்டு கொண்டு எதிர்க்க வேண்டும்.

விபசாரப் பாவத்தில் பிடிபட்ட பெண்ணை வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவிடம் கொண்டு வந்தனர். அவளுடைய விபச்சாரப் பாவத்தை அவர்கள் கண்டிக்கவும் தண்டிக்கவும் விரும்பினர். ஆனால், பாவமில்லாத ஒருவர் முதலாவதாக அவளைக் கல்லெறியுங்கள் என்று இயேசு சொன்னபோது, எல்லோரும் அங்கிருந்து போய்விட்டனர். ஏனென்றால், அவர்களிடம் விபச்சாரப் பாவம் இல்லை. ஆனாலும், அவர்கள் பாவம் ஏதும் செய்யாத பரிசுத்தவான்களல்ல. அவர்களிடம் வேறு பல பாவங்கள் இருந்தன. எனவே, அவர்கள் குற்ற உணர்வினால் தாக்கப்பட்டுப் போய்விட்டனர். ஆம், நாம் பிறருடைய தவறுகளைப் பார்த்து அவர்களைக் குற்றவாளியாக்கும் போது, தேவன் நம்மிடம் எந்தப் பாவத்தையும் பார்க்க முடியாதா என்றும் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

சிலரைப் போல சில விஷயங்களில் நாம் மோசம் அல்ல,
வேறு சிலர், சில விஷயங்களில் நம்மைப் போல மோசம் அல்ல.

மார்ச்
30
ஜீவ
நீரோடை

எதற்காகப் போதனைகள்?

தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்...
2 தீமோத்தேயு 3:16

2 தீமோத்தேயு 3:1-17

ஓயாமல் சாப்பிட்டுக் கொண்டேயிருக்கிற சிலரை நீங்கள் பார்த்திருக்கலாம். அவர்கள் விதவிதமான ருசிகளில், விதவிதமான சாப்பாடுகளை சாப்பிட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஆனால், அவர்கள் தங்கள் உடலைக் கொண்டு உருப்படியாய் ஒரு வேலையும் செய்வதில்லை. இவ்வளவு சாப்பிடுகிறார்களே ஏதாவது உழைப்பு இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றுமில்லை. இவர்கள் உழைப்பதற்காகவோ, ஆரோக்கியமாய் வாழ்வதற்காகவோ சாப்பிடுவதில்லை. அவர்கள் சாப்பாட்டுப் பிரியர்கள். எதையாவது சுவைத்துக் கொண்டிருக்கின்ற ஆசைக்கு அப்பால், உருப்படியான நோக்கங்கள் எதுவும் அவர்களுக்கு இல்லை.

இவ்விதமாக ஆவிக்குரிய விஷயங்களில் சிலரைப் பார்க்க முடியும். சிலர் தலைசிறந்த போதகர்களைவிட அதிகமாக வேதாகமத்தை திரும்பத் திரும்பப் படித்து வைத்திருப்பார்கள். சிலர், கேட்ட பிரசங்கங்களுக்கும், போதனைகளுக்கும் அளவேயில்லை. எங்கே பிரசங்கம் என்றாலும் போய் உட்கார்ந்து கொள்வார்கள். ஆனால் கேட்டதினாலோ, வாசித்ததினாலோ ஏதாவது ஆவிக்குரிய விளைவு உண்டா என்றால், இல்லை. சிலருடைய இல்லங்களிலே புத்தக சாலைகளைவிட அதிகமாக மொழி பெயர்ப்பு வேதாகமங்களும், ஆவிக்குரிய புத்தகங்களும் குவிந்து இருக்கும். ஆனால், அவர்களிடமோ ஆவிக்குரிய அனுபவங்கள் எதுவும் இராது.

ஏனென்றால், இவர்கள் பயனடைவதற்காகவோ, பின்பற்றுவதற்காகவோ அல்ல. இவர்கள் கேட்பதும், படிப்பதும் ஆன்மிக சுவை உணர்வைப் பெறவே. இவர்கள் நிறைய விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தினாலேயே கேட்கவும், படிக்கவும் செய்கின்றனர். இவர்கள் ஒரு நல்ல அறிவைப் பெற விரும்புகின்றார் களேயன்றி, நல்ல ஒரு வாழ்க்கையை வாழ்ந்திட அல்ல. சில மருத்துவர்கள் ஏராளம் மருத்துவ டிகிரிகள் வாங்கியிருப்பார்கள். அவற்றை மருத்துவ தொழில் செய்ய பயன்படுத்துவார்களேயன்றி, தங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள பயன்படுத்த மாட்டார்கள்.

ஒரு மனிதன், முதலாவது மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவினால் ஆவிக்குரியவனாகப் பிறக்க வேண்டும். அவன், தேவ ஆவியைப் பெற்று தேவ னுடைய பிள்ளை என்ற நிச்சயம் பெற வேண்டும். அப்பொழுது அவனுக்குள் ஆவிக்குரிய பசியும் தாகமும் ஏற்படும். அது சத்தியம் தொடர்பான பசியும் தாகமும். அவன் ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்வதற்காக, சத்திய போதனைகளையும் உபதேசங்களையும் விரும்பிக் கேட்பான்.

சிந்தனைக்கு...

நல்ல அனுபவம் இல்லாத வேத அறிவு பயனற்றது,
நல்ல வேத அறிவு இல்லாத அனுபவம் பாதகமானது.

மார்ச் 31 ஜீவ நீரோடை

நன்றாகத் தூங்குவோம்

மிகுந்த தூக்கமடைந்து நித்திரை மயக்கத்தினால்....
அப்போஸ்தலர் 20:9

அப்போஸ்தலர் 20:1-12

ஒருவர் பேருந்தில் ஏறி உட்கார்ந்ததும் தூங்கிவிடுவார். இரயிலில் போனால் டிக்கட் பரிசோதகர் அவரிடம் வரும் முன்பே தூங்கிவிடுவார். திருச்சபை பிரசங்க வேளையில் அவர்தான் தூங்குகின்றவர்களுக்கு முன்மாதிரி. அலுவலகத்தில் அதிகமான நேரங்கள் தூங்குவதில் அவரை யாரும் ஜெயிக்க முடியாது. ஆனால், அவருடைய இல்லத்தில் அவரைக் குறித்துக் கேட்டால், மனுஷன் தூங்கவேமாட்டார் என்பார்கள். எவ்வளவுக்கெவ்வளவு தூக்கத்தைத் தவிர்த்து டி.வி பார்க்க முடியுமோ அவ்வளவு பார்ப்பார். இரவெல்லாம் கிரிக்கெட் போட்டிகள், யூடியூப் சானல்கள், கூகிள் தேடல்கள் என தூங்காமல் பிஸியாக இருப்பார். தூங்கவேண்டிய நேரங்களில் போதிய அளவு தூங்காமல் தவிர்ப்பதால், தூங்கக்கூடாத இடங்களிலெல்லாம் அவர் குறட்டைவிடத் துவங்கிவிடுகிறார்.

மனிதன் கணிசமான நேரம் தூங்க வேண்டும். மனிதன் தூங்க வேண்டிய நேரங்களில் தூங்க வேண்டும். தூங்க வேண்டிய நேரங்களில் தூக்கத்தைக் கட்டுப்படுத்திவிடுவதால், தூங்கக் கூடாத நேரங்களிலும், இடங்களிலும் தூக்கம் கட்டுப்பட மறுக்கின்றது. சிலருடைய பல நோய்களுக்கு மூலக் காரணம் போதிய அளவு தூங்காமைதான். சிலருடைய அதிகமான கோபத்திற்கும், எரிச்சலுக்கும் முக்கியமான காரணங்களுள் ஒன்று போதிய தூக்கமின்மை.

சிலரால் தூக்கத்தைத் தவிர்த்து ஜெபிக்கவோ, வேதம் வாசிக்கவோ முடியாது. சிலரால் எவ்வளவு வல்லமையான பிரசங்க வேளையிலும் தூக்கத்தைத் தவிர்க்க முடியாது. சிலரால் எதையுமே ஒரு உற்சாக மனநிலையோடு செவ்வையாகச் செய்ய முடியாது. ஏனென்றால், தூங்க வேண்டிய நேரம் போதிய அளவு தூங்கி தங்களின் சரீரத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளமாட்டார்கள்.

பவுல் அப்போஸ்தலன், தூரோவா பட்டணத்தில் இரவு வேளையில் நெடு நேரம் பிரசங்கித்த போது, ஐத்திகு என்பவன் தூக்க மயக்கத்தில் ஜன்னலிருந்து விழுந்து விட்ட சம்பவத்தை வேதாகமத்தில் பார்க்கின்றோம். அவன் பகல் முழுவதும் வேலை செய்து களைத்துப் போனநிலையில், நீண்ட நேரம் பிரசங்கம் கேட்டதால் அப்படி ஆயிருக்கும். எது எப்படியிருந்தாலும் தூக்கம் என்ற விஷயத்தில் சமரசம் செய்யக்கூடாது. தினமும் எட்டு மணி நேரம் தூங்குவாயாக என்று நமக்கு கட்டளை இல்லை. ஆனால், நம்முடைய பொது அறிவுக்கு எளிதாக எட்டுகின்ற இந்த உண்மையை நாம் மறக்கக் கூடாது. அதிக நேர தூக்கம் தகாது. அதே வேளையில் அவசியமான வேளையில் தூங்காமையும் தவறு.

சிந்தனைக்கு...

செயல்படாமலே தூங்குகிறவன் முன்னேறமாட்டான்,
தூங்காமலே செயல்படுகிறவன் முன்னேறினாலும் அனுபவிக்கமாட்டான்.

ஏப்ரல்
1
ஜீவ நீரோடை

எல்லோருக்கும் நண்பர்

உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது...
யோவான் 7:7

யோவான் 7:1-19

ஒரு அலுவலகத்தில் பணிபுரிகின்ற ஒவ்வொருவரைக் குறித்தும் வேறு சிலருக்கு எதிர் கருத்து இருந்தது. ஒவ்வொருவரையும் சிலர் நல்லவர்கள் என்றனர். வேறு சிலர் மோசமானவர்கள் என்றனர். ஆனால், ஒரே ஒருவரைக் குறித்து மட்டும் யாரும் எதிர்க்கருத்து தெரிவிக்கவில்லை. அவர் எல்லோருக்கும் பிரியமானவராயிருந்தார். ஏனென்றால், அவர் யாரையும் பாராட்டியதும் இல்லை. யாரையும் விமர்சித்ததும் இல்லை. அவர் எல்லோருக்கும் வணக்கம் சொல்லுவார். நல்லது செய்வதைப் பார்த்து புகழவும் மாட்டார். கெட்டது செய்வதைப் பார்த்து இகழவும் மாட்டார்.

ஆம், ஒரு உண்மை நிலைமையைக் குறித்து நாம் பேசாமலிருந்தால் யாருக்கும் நம்மேல் கோபம் வராது. நல்லது செய்தோரைப் பாராட்டினால் சிலருக்கு அது பிடிக்காமல் போகிறது. கெட்டது செய்தவரை இகழ்ந்தால் அது வேறு சிலருக்குப் பிடிக்காமல் போகிறது. எல்லோருக்கும் நண்பனாகக் காண்பித்து வணக்கம் சொன்னால் பிரச்சினையில்லை. ஆனால், கர்த்தருடைய பிள்ளைகள் அப்படி யிருக்க முடியாது. அவர்கள் கறுப்பையும் வெள்ளையையும் ஒரே விதமாகப் பார்க்க மாட்டார்கள். அவர்கள் தவறையும், நல்லதையும் ஒரேவிதமாக உணரமாட்டார்கள்.

நாம் வெளிச்சமாயிருக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். வெளிச்சம் என்றால் பாரபட்சமின்றி எது எப்படியிருக்கிறதோ, அதனை அப்படியே காட்டும். நல்லவர்கள் பாராட்டப்படுவார்கள். தவறானவர்கள் சுட்டிக்காட்டப்படுவார்கள். அவ்விதம் நாம் செயல்படும் போது பலருக்கு அது கசப்பாக இருக்கும். சில உண்மை யான நிலைமைகளை அப்படியே நாம் சொல்லும்போது, அது அவர்களுக்குள் கோபத்தை ஏற்படுத்தும். யோசேப்பின் சகோதரர்களைக் குறித்த உண்மைகளை யோசேப்பு கண்டு கொள்ளாமல் போகாததால், அவர்களின் கடுங்கோபத்தைச் சந்திக்க நேர்ந்தது. பரிசேயர், சதுசேயர்களின் மாய்மால நிலைமைகளை இயேசு சுட்டிக்காட்டியதால், அவர்களின் கோபம் அவர்மேல் பாய்ந்தது.

நாம் எல்லோருக்கும் பிரியமான ஒருவராக இருப்பதற்கு பெரும்பாலும் அவர்களின் எதிர்மறை விஷயங்களைக் கண்டுகொள்ளாமலிருக்க வேண்டும். ஆனால், மனிதர்களை நண்பர்களாக்குவதற்காக சத்தியத்திற்கு நாம் எதிரிகளாகக் கூடாது. உலகத்தின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிறபடியால், அது என்னைப் பகைக்கிறது என்றார் இயேசு (யோவான் 7:7) உலகம் நம்மைப் பகைத்தாலும் தேவன் நம்மை நேசிக்கத்தக்கதாக, சத்தியத்திற்குச் சாட்சியாக நிற்பதே மேன்மையானது.

சிந்தனைக்கு...

ஒருவரிடமுள்ள நல்லதை மட்டுமே பார் என்பது, பாலில் கலந்துள்ள விஷத்தைப் பாராமல், சத்துக்களை மட்டும் பார் என்று சொல்வதாகும்.

ஏப்ரல்
2
ஜீவ நீரோடை

தாங்குதல்

நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால். கலாத்தியர் 5:15

கலாத்தியர் 5:13-26

தாக்கப்படும்போது தாங்கிக் கொள்ளலாம். அல்லது திருப்பித் தாக்கலாம். திருப்பித் தாக்கும்போது தாக்குதல்கள் தொடர்கதை ஆகிறது. தாங்கிக் கொண்டால் அது ஒரு சிறு கதையாகி முடிந்து போகிறது. நான் சரீரப் பிரகாரமான தாக்குதலை இங்கே குறிப்பிடவில்லை. வாழ்க்கைப் பாதையில் பல நேரங்களில் உணர்வு ரீதியாகத் தாக்கப்படுகிறோம். மனதை நோக வைக்கும் விதமான பலவிதமான தாக்குதல்களை வாழ்க்கையில் உணர நேரிடுகின்றது. அதனால் தாக்கினவரை திருப்பித்தாக்க ஒரு ஆயுதத்தைத் தேடுகிறோம். இந்த திருப்பித் தாக்கும் மனநிலையால் நாம் மறுபடி மறுபடி புதிது புதிதான தாக்குதல்களைக் காண நேரிடுகிறது.

பல குடும்பங்களில் துவக்கத்தில் அற்பமான காரணம்தான் தாக்குதலை ஆரம்பித்து வைக்கின்றது. ஆனால், அதனைப் பொறுமையோடு தாங்குவதற்கு மனதில்லாமல், பதிலுக்குப் பதிலாக ஒன்றைச் செய்யும் போது பிரச்சினை பல்வேறு கோணங்களில் பெரிதாகிறது. துவக்கத்தில் ஒரு சிறு பிரச்சினைதான் இருந்தது. ஆனால், தாங்கிக் கொள்ள முடியாமல் போனதால் அது புதிய பல பிரச்சினை களை உருவாக்குகிறது. அதனால் பின்னர் காரியங்கள் சரி செய்யப்பட இயலாத நிலைக்குத் தள்ளப்படுகிறது.

மனிதனுடைய இயற்கை இருதயம் தாங்கிக் கொள்ளும் விஷயத்தில் மிகவும் பலவீனமானது. அது திருப்பித் தாக்கவே தீவிரப்படும். தன்னால் திருப்பித்தாக்கி ஜெயிக்க முடியாவிட்டாலும், அது திருப்பித் தாக்குவதிலேயே குறியாயிருக்கும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்து பட்சித்தீர்களானால் அழிவீர்கள், என்று கலாத் திய திருச்சபைக்கு நிருபம் எழுதினான் அப்போஸ்தலனாகிய பவுல். தாங்குதல் என்பது அன்பின் முக்கியமான ஒரு தன்மை. ஆனால், மனித அன்பு பலவீன அன்பாயிருப்பதாலும், அதனுடைய தாங்கும் திறனும் குறைவானதே. நாம் தேவ அன்பை நமக்குள் ருசிக்க வேண்டும். அந்த அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அந்த அன்பு சகலத்தையும் தாங்கும். (1 கொரிந்தியர் 13:7)

அன்பு திரளான பாவங்களை மூடும். (1 பேதுரு 4:8) அன்பு தவறுகளைப் பெருக விடாமல் தடுக்கிறது. அன்பு மேலும் மேலும் பிரச்சினைகளைப் பெரிதாக விடாமல் தவிர்க்கின்றது. தாக்குதல் என்பது சுயத்திலிருந்து உருவாகின்ற ஒன்று. தாங்குதல் என்பது அன்பினால் நடப்பது. அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. (1 யோவான் 4:7) தேவ உறவுடன் வாழாததால்தான் நம்மைக் காயப்படுத்தின வர்களை, நாமும் காயப்படுத்திப் பார்க்கும் மனநிலை கிரியை செய்கிறது.

சிந்தனைக்கு...

தாங்கிக்கொள்ளுகிறவன் அடுத்த தீமைக்கு வாசலை மூடுகிறான்
தாங்க விரும்பாதவன், அடுத்த தீமைக்கு வாசலைத் திறக்கிறான்.

ஏப்ரல்
3
ஜீவ
நீரோடை

பகை தவிர்ப்போம்

நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்... நீதிமொழிகள் 15:18

நீதிமொழிகள் 15:1-18

சிலரோடுள்ள உறவை உடைத்துக் கொள்வதற்கு ஏராளம் வாய்ப்புகள் திரும்பத் திரும்ப வருகின்றன. அவர்களோடு ஒரு நல்ல உறவோடு தொடருவதற்கு அதிகமதிகமாகச் சிரமப்பட நேரிடுகின்றது. ஒருவர் தன்னுடைய அண்டை வீட்டாரைப் பற்றிப் பேசும் போது இப்படிக் குறிப்பிட்டாராம். அவர்களோடுள்ள ஐக்கியத்தை இழப்பதற்கு தினமும் புதிய புதிய ஒரு கட்டாயத்தை அவர்கள் தருகிறார்கள். ஆயினும், அவர்களை விரோதிகளாகப் பார்க்கும் நிலை வந்துவிடாதபடி, நான் தினம் தினம் போராட வேண்டியுள்ளது.

சில உறவுகளுக்கிடையில் இதுதான் உண்மை. அவசியமான ஒரு உறவு. பயனுள்ள ஒரு உறவு. ஆனால், அதனை தக்க வைப்பதற்கோ அதிகமான ஒரு மனப்பக்குவம் தேவைப்படுகிறது. ஒரு நல்ல உறவை பகையாய் மாற்றுவதற்கு சாத்தான் தீவிரமாகச் செயல்படுகிறான். உறவு என்பதை பகையாக மாற்றுவதற்கு அவன் ஏராளம் தந்திரங்களைச் செய்கிறான். மிக மிகக் கவனமாகச் செயல்படாவிட்டால் சாத்தான் ஜெயித்துவிடுவான்.

அன்பிற்குரியவர்களாகப் பார்க்க வேண்டிய சிலரை விரோதிகளாகப் பார்க்க நேரிடுவது எவ்வளவு வருத்தத்திற்குரியது. நம்மைக் குறித்து நல்ல வார்த்தை பேச வேண்டியவர்கள், மோசமான வார்த்தைகளைப் பேசுகின்றவர்களாக மாறுவது எவ்வளவு சோர்வுக்குரிய விஷயம். குடும்பம் ஒன்றில் அண்ணனுடைய செயல்பாடுகள் யாவும் தம்பியை நோகடிக்கின்றவையே. ஆயினும், தம்பி அதனை மனதிற்குள் பொறுத்துக் கொள்வார். தம்பியின் மனைவி உங்கள் அண்ணன் உங்களை விரோதியைப் போல நடத்துகிறார். நீங்கள் ஏன் அவருடைய உறவை விடாமல் தொடருகிறீர்கள் என்றுகேட்பாராம்.அதற்கு தம்பி, அண்ணனுக்குநான் பாசத்திற்குரிய தம்பி அல்ல.ஆனாலும், என் அண்ணனை என்னால் ஒரு விரோதியைப் போலபார்க்கமுடியவில்லை என்பாராம்.

சில அண்ணன் தம்பி உறவுகள் உடைவதற்கு தினமும் வாய்ப்புகள் எழுகின்றது. சில கணவன் மனைவி உறவுகள் பிரிவினைக்கு நேராகச் செல்ல தினமும் வாய்ப்புகள் உருவாகின்றன. சிலரோடுள்ள நல்ல ஐக்கியங்களை வேண்டாம் என்று வீசுவதற்கு தினமும் ஏதாவது ஒரு காரணம் ஏற்படுகின்றன. ஆனால், இன்னொருவரைப் பகைவராகப் பார்க்கும் நிலை ஏற்பட்டுவிடாதபடி, இறுதிவரை போராடுவதே தேவனுடைய பிள்ளைகளுக்குத் தகுதியான விஷயம். தேவ அன்பின் பலத்தில் கசப்புகளை ஏற்றுக்கொண்டு, உறவுகள் பகைகளாக மாறிவிடாதபடி தடுப்பதற்குப் பிரயாசப்படுவதே, தேவனுடைய பிள்ளைகளுக்கு மேன்மையானது.

சிந்தனைக்கு...

அவர்கள் நல்லவர்களாக இல்லை. என்வே, வெறுக்க முடிகிறது.
நாம் அவர்களைப் போல இல்லையென்றால் நேசிக்க முடியும்.

ஏப்ரல்
4
ஜீவ நீரோடை

தேவையை மறைக்காமல்

கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டு வா.... 1 இராஜாக்கள் 17:11

1 இராஜாக்கள் 17:1-16

ஒரு தேவ ஊழியர் மிகச் சாதாரணமான துவக்க காலத்தில் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தாரோடு நல்ல ஐக்கியம் வைத்திருந்தார். அவர் அந்தக் குடும்பத்தினரிடம் வரும் போது சாப்பிடுகின்றீர்களா? என்று கேட்டால் வேண்டாம் என்பார். ஏதாவது உதவி தேவையா என்று கேட்டால் எதுவும் தேவை இல்லை என்பார். ஒரு நாள் அவர் நல்ல நிலைமைக்கு வந்தார். அந்தக் கால கட்டத்தில் அந்தக் குடும்பத்தினரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது துவக்க காலத்தில் எனக்கு பல நாட்கள் பசியிருந்தது. ஆனால், நான் உங்கள் வீட்டில் சாப்பிடவில்லை. பல முறை எனக்குத் தேவை இருந்தது. ஆனால், உங்கள் உதவியை நான் ஏற்கவில்லை என்று சாட்சி போல சொன்னாராம். அதற்கு அந்த குடும்பத்து சகோதரர், என்னை ஒரு சகோதரரைப் போல உங்களால் பார்க்க முடியாமல் போன அந்த நாட்களுக்காக வருந்துகிறேன் என்றாராம்.

நாம் யாருடைய உதவியையும், தயவையும் சார்ந்து வாழக்கூடாது. ஒரு தொடர்பு அல்லது பழக்கம் கிடைத்தது என்பதற்காக நம்முடைய தேவைகளை அவர்களைக் கொண்டு சந்திக்க விரும்பக்கூடாது. யாரோ ஒருவர் நம்மை நேசிக்கிறார் என்பதற்காக அந்த நேசத்தை பொருளாதார ஆதரவாக மாற்றிப் பார்க்க ஆசைப்படக்கூடாது. அதே வேளையில் சில சூழ்நிலைகளில் நமக்கு தாழ்மையும் வேண்டும். நம்முடைய உண்மை நிலைகளை ஒரு பெருமையின் விளைவாகவோ, அதிக சுயமரியாதை கவனத்தின் விளைவாகவோ மறைக்கக் கூடாது.

எங்கே உதவி? யாரால் உதவி என நாம் தேடி அலையக் கூடாது. அதே வேளையில் தேவன் யாரோ ஒருவர் வாயிலாக நம்முடைய தேவையைச் சந்திக்கக் கூடும். யாரோ ஒருவர் வாயிலாக நம்மை இளைப்பாற்றக்கூடும். அது போன்ற சூழ்நிலைகளில், நாம் ஒரு விதமான சுய கௌரவத்தால், நம்முடைய தேவையை மறைக்கக்கூடாது. ஞானமாகச் செயல்பட வேண்டும். அதே வேளையில், நம்முடைய பலவீன நிலையைத் தன்மான உணர்வால் திரையிட்டு, மறைக்க விரும்பக்கூடாது.

எலியா தீர்க்கன் ஒரு ஏழை விதவையிடம் போய் ஒரு சிறு அப்பம் செய்து தா என்று கேட்டான். அப்போஸ்தலனாகிய பவுல் ஒநேசிப்போரு என்ற மனிதனைக் குறிப்பிட்டு, அவன் அநேக தரம் என்னை இளைப்பாற்றினான் என்றான். (11 தீமோத்தேயு 1:16) ஆம், எல்லோரிடமும் நம்முடைய நிலைமையை வெளிப்படுத்தவும் கூடாது. ஆனால், உரிய சூழ்நிலையில் அதை வேண்டுமென்றே மறைக்கவும் கூடாது.

சிந்தனைக்கு...

யார் உதவியையும் நம்பி வாழாதே,
ஆனால், யார் உதவியும் தேவையில்லை என எண்ணாதே.

ஏப்ரல்
5
ஜீவ நீரோடை

கோபம் அடங்கணும்

பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே....
சங்கீதம் 37:1

சங்கீதம் 37:1-11

கணவன் சொன்ன ஏதோ ஒரு வார்த்தை மனைவியைக் கோபப்படுத்தியது. அதனால் ஆத்திரமுற்ற மனைவி, ஏதோ ஒரு வார்த்தையை கோபமாகப் பேசினாள். அதனால் ஆத்திரம் அதிகமாகவே, அவன் மனைவியை கடுஞ்சொற்களால் வரம்பின்றித் திட்டினான். அதனால் வருத்தமடைந்த மனைவி சமையல் செய்யாமல் போய் படுத்துவிட்டாள். பிள்ளைகளுக்குப் பசித்த போது அவர்கள் சாப்பாடு கேட்டனர். உங்க அப்பா கிட்டப் போய் கேளுங்கள் என்றாள் அவள். இதைப் பார்த்து ஆத்திரமடைந்த கணவன் சமையல் பாத்திரங்களைத் தூக்கி வீசினான். அதை தடுக்கப் போன மனைவிக்கு அடி விழுந்தது. இறுதியில் போலிஸ் வரவழைக்கப்பட்டு ஊருக்கெல்லாம் விபரம் சென்று சேர்ந்தது.

இத்தனை பிரச்சினைகளுக்கு மூல காரணம் என்ன? கோபத்தைக் கட்டுப் படுத்த இயலாத ஒரு மனநிலை. கோபத்தின் வழியிலேயே மனதை விட்டுக் கொடுத்ததால், ஒரு சின்ன விஷயம் பெரிய ஒரு பிரச்சினையாக மாறியது. ஒரு பெரிய காட்டைக் கொழுத்த ஒரு சின்ன அளவு நெருப்பு போதும். கோபமும் அப்படியே. அதனை உருவாக்க ஒரு சிறு விஷயம் போதும். ஆனால், வந்துவிட்ட கோபம் என்னும் சிறு நெருப்பு, ஒரு பெரிய நெருப்புக் களத்தை ஏற்படுத்திவிடும்.

கோபம் மனிதனுடைய இயற்கை சுபாவங்களுள் ஒன்று. கோபம் வருவது பாவம் அல்ல. ஆனால், கோபம் ஒரு பெரிய பாவத்திற்கு வழிவகுக்கும் முன்பு கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆகையால்தான், கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. கோபம் அல்ல பாவம். அந்த கோபம் சார்ந்து செயல்பட நம்மை விட்டுக் கொடுப்பதுதான் பாவம். ஏதாவது ஒரு செயல் அல்லது வார்த்தை கோபமடைய நம்மை தூண்டும். அப்போது அங்கே ஒரு சிறு நெருப்பு உருவாகிவிட்டது என்று அர்த்தம். ஆனால், அது அணைக்கப்படு வதற்குப் பதிலாக அதிகரிக்க விட்டுவிடப்பட்டால், ஒரு பெரிய தீங்கு ஏற்படும். பின்னர் அது பல பல பிரச்சினைகளாக மாறும்.

கோபம் ஆவிக்குரியவர்களுக்கு வரும். ஆனால், சுயம் மேலோங்கி இருக்கிறவர்களிடம்தான் அது அதிகப் பாதிப்பை ஏற்படுத்தும். கோபத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு தெய்வீக ஆற்றல் நமக்கு வேண்டும். தேவ ஐக்கியத்தோடு வாழ்ந்து, தேவ சமாதானத்தையும் தேவ பலத்தையும் நமக்குள் அனுபவிக்க வேண்டும். அப்போது கோபம் வந்தாலும் தேவ சமாதானத்தின் ஆற்றலினால், அதனை வலுவிழக்கச் செய்யமுடியும்.

சிந்தனைக்கு...

பிறரை எரிய வைக்க ஒரு தவறான வார்த்தை போதும்,
அதனை அணைய வைக்க பலருடைய நல்ல வார்த்தை தேவைப்படும்.

ஏப்ரல்
6
ஜீவ நீரோடை

பயந்த காரியம்

என் கிருபை உனக்குப்போதும்...
2 கொரிந்தியர் 12:9

2 கொரிந்தியர் 12:1-10

வாழ்க்கையில் பல நேரங்களில் நாம் பயந்தவிதமாக காரியங்கள் நிகழ்வதேயில்லை. நாம் ஏதோ ஒன்று எதிராக வந்துவிடப் போகிறது என்று கற்பனை செய்து பயப்படுவோம். ஆனால், கற்பனை செய்கின்ற விதமாக எதுவும் நிகழ்வதில்லை. சில வேளைகளில், கார்மேகங்கள் சூழ்ந்து ஒரு பெருங்காற்றுடன் பெரிய மழை வருவதுபோன்ற தோற்றம் எங்கும் ஏற்படும். ஆனால், சற்று நேரத்தில் மேகக்கூட்டங்கள் யாவும் கடந்து போய், எதிர்பார்த்தது போல மழை எதுவும் பெய்யாது. அவ்விதமே, நாம் எதை எதையோ பார்த்து அஞ்சின விதமாக எதுவுமே நிகழாமல் போகும்.

சில வேளைகளில், எது நடக்கும் என்று அஞ்சினோமோ அது நடக்கும். ஆனால், நாம் அஞ்சினது போல, அதனால் நமக்குச் சொல்லத்தக்க அளவிற்கு பாதகம் எதுவும் நிகழ்வதில்லை. சீரிய இராணுவம் எலிசா தீர்க்கதரிசிக்கு எதிராக வந்தது. அந்த சூழலைப் பார்த்து வந்த வேலைக்காரன் ஐயோ ஆண்டவனே, என்ன செய்வோம் என்றான். ஆனால், அவன் பயப்பட்ட விதமாக சீரிய இராணுவத்தால் எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. சில நேரங்களில் சில விஷயங்களைச் சக்திக்கு அப்பாற்பட்டதாக யோசிப்போம். அப்படி ஏதாவது வந்தால் அவ்வளவுதான் என்று நினைப்போம். ஆனால், அவ்விதம் வருகின்றபோது அவை நம்மால் சமாளிக்க இயன்றதாகவே இருக்கும். இதைக் குறித்து இப்படிப் பயப்பட்டோமே, ஆனால், மலை போல் எண்ணப்பட்டது பனிபோல் கரைந்து போனதே என்று எண்ணுவோம். ஆம், பல நேரங்களில் நாம் கற்பனை செய்து பயந்த அளவிற்கு, காரியங்கள் நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இருப்பதில்லை.

சில நேரங்களில் நாம் நினைத்ததைவிட பெரிதாக சில எதிர்மறையான விஷயங்கள் நடக்கும். ஆனால், அதனைக் கடந்து செல்வதற்கு தேவன் ஒரு வழியை நமக்கு ஏற்படுத்தியிருப்பார். நாம் நினைத்ததைவிட அதிகமான பிரச்சினைகள் ஒரு பெரிய ஆற்றைப் போல குறுக்கிடும். ஆனால், அது வந்தபோது அதனைக் கடந்து செல்ல, அங்கே ஒரு பாலம் இருக்கும். நாம் ஆற்றை மட்டும்தான் கற்பனை செய்தோம். கர்த்தரோ கடந்து செல்ல ஒரு பாலத்தையும் வைத்திருப்பார். அதனை அருகில் வந்த பிறகுதான் நம்முடைய கண்கள் காணும்.

அவ்விதமே சில நேரங்களில் ஏதோ ஒன்று எதிர்மறையாக நிகழ்ந்தால், நம்முடைய மனம் எப்படி எப்படிப் பாதிக்குமோ என்று அஞ்சுவோம். ஆனால், அப்படி நிகழும்போது நம்முடைய மனம் அதற்கேற்றபடி கர்த்தரால் தாங்கத்தக்கதாகவும், சகிக்கத்தக்கதாகவும் மாற்றப்பட்டிருப்பதை அறிவோம்.

சிந்தனைக்கு...

வந்துவிட்ட துன்பங்கள் சிலரை வீழ்த்துவதில்லை.
ஆனால், வந்துவிடுமோ என்ற பயம் அவர்களை வீழ்த்திவிடும்.

மனிதனிடம் அன்பு

பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூருகிற எவனும்...
1 யோவான் 5:1

1 யோவான் 5:1-11

நாம் தேவனை அதிகமாக அதிகமாக நேசிக்க ஆயத்தமாயிருக்கின்றோம். ஆனால், தேவன் அன்பாகவேயிருக்கின்றார். எனவே, நம்முடைய அன்பு அவருக்கு அவசியமில்லை. நாம் அவரை நேசிப்பதால் அதனால் அவருக்கு ஒன்றும் ஆகப் போவதில்லை. ஆனால், மனிதனுக்குத்தான் நம்முடைய அன்பு அதிகமாகத் தேவைப்படுகின்றது. மனிதனுக்கு நம்முடைய அன்பு கிடைத்தால் மனிதனுக்கு அது பிரயோஜனமாயிருக்கும். எனவேதான் தேவனிடத்தில் அன்பாயிருக்க நாம் அழைக்கப்படுகின்ற போது, பிறரிடத்திலும் அன்பாயிருக்க கட்டளை பெறுகின்றோம்.

அதே வேளையில், தேவ அன்பை நாம் பெறாமல் மனிதர்களை உரியவிதமாய் நேசிக்க முடியாது. தேவனிடத்தில் அன்பாயிருக்கின்ற அனுபவம் நமக்குள் தேவ அன்பை உணரவும் அனுபவிக்கவும் செய்கிறது. தேவ உறவைத் தேடுவதாலும், தேவ ஐக்கியத்தை நாடுவதாலும் தேவ அன்பில் வளர ஆரம்பிக்கின்றோம். அந்த அன்பை மனிதர்களுக்கு நாம் கொண்டு செல்ல வேண்டும். தேவன் அன்பாக யிருக்கின்றார். ஆனால், மனிதன் அன்பாகயில்லை. எனவே, அந்த மனிதனுக்கு நாம் அன்பைக் கொடுக்க வேண்டும். ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என்னுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக் கடவன் என்றார் இயேசு.

அவருடைய கற்பனைகள் என்ன? கர்த்தர் நம்மிடம் அன்பாயிருப்பது போல நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதே கர்த்தருடைய கற்பனை. (யோவான் 13:34) சத்துருக்களை நேசிக்க வேண்டும். பகைவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். நிந்திக்கிறவர்களுக்கு ஜெபம் பண்ணவேண்டும். மனிதன் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோமோ, அதனை நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும். இவைதான் கர்த்தருடைய கற்பனைகள். நம்மில் அநேகர் கர்த்தருக்காக உயிர் கொடுக்கும் அளவிற்கு அன்பாயிருக்கின்றோம். ஆனால் சகமனிதர்கள், உடனிருக்கும் உறவுகள் சபை மக்கள் ஆகியோர் விஷயத்தில் எந்த அளவு அன்புடையவர்களாயிருக்கின்றோம்?

தேவனிடம் அன்பாயிருப்பது எளிதானது. ஆனால், மனிதர்களிடம் அன்பா யிருப்பது கடினம். ஏனென்றால், அவர்கள் சில விதங்களில் நாம் விரும்புகிற விதமாக இருப்பதில்லை. அவர்களிடம் நாம் காண நேரிடும் சில விஷயங்கள் அவர்களை நேசிப்பதற்கான வழியைக் கடினமாக்கிவிடுகிறது. ஆனால், கடினமான அந்தப் பாதையில் போய் நேசிப்பதுதான் உண்மையான அன்பு. அதற்குத் தேவையான ஆற்றலைத்தான் தேவ அன்பு தருகிறது.

சிந்தனைக்கு...

தேவ அன்பை அனுபவிக்கும் இருதயம்,
மனித வெறுப்புகளினால் சோர்வடைவதில்லை.

ஏப்ரல்
8
ஜீவ நீரோடை

ஒழுங்கா, அன்பா?

பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்...
ரோமர் 15:1

ரோமர் 15:1-10

ஒருவர் எல்லாவற்றையும் சரியாகச் செய்வார். எந்த ஒரு விஷயத்திலும் தவறின்றி நடப்பதில் மிகவும் கவனமாயிருப்பார். நல்ல வார்த்தைகளைப் பேசுவார். நல்ல பல நன்மைகளைப் பலருக்கு செய்வார். ஆனால், யாரிடமாவது ஒரு சிறு குறைவைப் பார்த்தால் சகிக்கமாட்டார். யாரிடமாவது அவர் விரும்பாத விதமான ஒன்றைப் பார்த்தால் அதனை கண்டித்து பேசிவிட்டுதான் அடுத்த வேலை செய்வார். தன்னைப் போல சரியாக இராத எவரையும் பிசாசின் பிள்ளை என்றே சொல்வார்.

ஆம், இவர் பரிசுத்தம் என்பதை தவறாகப் புரிந்து கொண்டவர். பரிசுத்தம் என்பது அன்பை அடிப்படையாக கொண்டு செயல்படுவது. இவரைப் பொறுத்தவரை எதுவும் சரியாயிருக்க வேண்டும். அதுதான் இவருக்குப் பரிசுத்தம். எனவே அன்பு இரண்டாம் இடத்திற்கு போய் விடும். சற்று சரியாயிருக்க இயலாமல் போன எவரையும் இவர் வெறுக்கின்ற காரணத்தால், இவரிடம் அன்பு ஆளுகை செய்யவில்லை. எந்த ஒன்றையும் அன்பின் நிமித்தமாகச் செய்வதுதான் பரிசுத்த வாழ்க்கை.

இயேசு கிறிஸ்து தம்முடனிருந்த சீடர்களையெல்லாம் இறுதிவரை நேசித்தார். அது அவர்கள் மிகவும் சரியாக இருந்தார்கள் என்பதினால் அல்ல. அவர் அன்பான வராக இருந்தார். எனவே, அவர்களுடைய குறைவுகளையும், பலவீனங்களையும் பார்த்து வெறுப்படையாமல், அன்பினால் அவர்களைத் தாங்கிக் கொண்டார். அவர் களின் குறைவுகளைச் சுட்டிக்காட்டத் தவறியதில்லை. அதே வேளையில், அவர்கள் மேல் அன்பு காட்டுவதில் இரண்டாம் இடத்திற்குப் போகவில்லை. ஒழுங்குகள் மிகவும் முக்கியமானவை. அதே வேளையில், அன்பை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி விட்டு, ஒழுங்கு முதலிடம் பெறக்கூடாது.

சிலர், மற்றவர்கள் தங்களுக்கு ஒத்தவிதமாக எல்லா நிலைகளிலும் சரியாயிராவிட்டால், அவர்கள்மேல் கோபத்தை அள்ளி வீசிவிடுகின்றார்கள். அவர்கள்மேல் வெறுப்பைக் கொட்டி விடுகிறார்கள். இது சரியாகயில்லை. அது சரியாகவில்லை என்று சுட்டிக் காட்டுகின்ற விதங்களிலே கோபமும், ஆத்திரமும், பொறுமையற்ற மனநிலையும் வெளிப்பட்டு, அன்பு காணப்படாமல் போய் விடுகிறது. சில விஷயங்கள் சரியாயில்லை என்பதைச் சுட்டிக்காட்டுதல் அவசியமே. ஆனால், அது ஒரு வெறுப்புணர்வு கலந்ததாக இருக்கக்கூடாது. சில விஷயங்களில் நாம் சிலவற்றைச் சகிக்கப்பழகாவிட்டால், நமக்குள் நாம் சரியாயில்லை என்று அர்த்தம்.

சிந்தனைக்கு...

தவறுகளைச் செய்யாத பண்பு மட்டுமல்ல. பிறருடைய தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும் பண்பும் வேண்டும்.

ஏப்ரல்
9
ஜீவ நீரோடை

ஆவியின் அடையாளம்

ஆவியின் கனியோ அன்புச் சந்தோஷம்...
கலாத்தியர் 5:22

கலாத்தியர் 5:13-26

கிறிஸ்தவ விசுவாசி ஒருவர் தான் ஆவியில் நிரம்பியிருப்பதையும், தேவ பிரசன்னத்தோடிருப்பதையும் விசேஷ உணர்ச்சிகளால் உறுதிப்படுத்த விரும்புகின்றவர். அவர் வல்லமையானஆராதனைக் கூட்டங்களை தேடிச் செல்வார். பிரபல ஊழியர்கள் நடத்தும் அபிஷேகக் கூட்டங்களை தேடிச் செல்வார். ஜெபமாயினும் சரி, ஆராதனையாயினும் சரி, பிரசங்க வேளையாயினும் சரி, உணர்ச்சிகரமான ஒரு வல்லமையை தனக்குள் உணரவிரும்பி அதையே தேடுவார். அவ்விதமான ஒரு வல்லமை உணர்வை தனக்குள் பெற்றதும் திருப்தி அடைந்துவிடுவார். ஆனால், அவரிடத்திலோ அவருடைய குடும்பத்திலோ அவருக்கு சந்தோஷமோ சமாதானமோ இல்லை.

அநேகர் தேவன் தங்களோடிருப்பதை தங்களுக்குள் உணர விரும்புகின்றனர். அநேகர் தங்களுக்குள் ஆவிக்குரிய வல்லமையை உணர விரும்புகின்றனர். அநேகர் தாங்கள் தேவ ஆவியை உடையவர்களாயிருப்பதை உணர விரும்புகின்றனர். எனவே, தங்களுக்குள் விசேஷமாக உணரமுடிகின்ற ஒரு பரவச மனநிலையை அதனுடைய அடையாளமாக நம்புகின்றனர். அதே வேளையில், தாங்கள் ஆவிக்குரிய நிலையில் இருப்பதற்கும், தேவ ஆவியோடிருப்பதற்கும் எவை உண்மையான அடை யாளங்கள் என்பதை அறியாமலிருக்கின்றனர்.

உணர்ச்சிகரமான அல்லது வல்லமையான ஒரு மனநிலையை எட்டுவதல்ல. நமக்குள் தேவ சமாதானம் ஆளுகை செய்ய வேண்டும். நமக்குள் தேவ சந்தோஷம் உணரப்பட வேண்டும். நமக்குள் பரிசுத்தமான ஆசைகள் உணரப்பட வேண்டும். நமக்குள் தேவனைப் பிரியப்படுத்தும் நோக்கங்கள் உணரப்படவேண்டும். நமக்குள் நற்குண சுபாவங்களைக் குறித்த தூண்டுதல்களை உணர வேண்டும். நமக்குள் நம்பிக்கையையும், மனநிறைவையும், திருப்தியையும் உணர வேண்டும். இப்படி உணர முடிந்தால்தான் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம் என்பதும், தேவ ஆவி நமக்குள் செயல்படுகிறது என்பதும் உறுதியாகும். அவைதான் ஆவியின் செயல்பாட்டிற்கான ஆவிக்குரிய அடையாளங்கள்.

ஆம், உணர்ச்சிகள் சார்ந்த அடையாளங்களை எட்டுவது நமது இலக்காக இருக்கக்கூடாது. பரிசுத்தமான ஆவிக்குரிய அடையாளங்கள் வேண்டும். நாம் நமக்குள் ஒரு வல்லமையான ஒரு உணர்ச்சியை உணருவது அல்ல. நாம் நமக்குள் எப்படியிருக்கிறோம், எப்படிச் சிந்திக்கின்றோம்? எப்படிப்பட்ட சுபாவங்களோடு காணப்படுகின்றோம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ வல்லமையை எவ்வளவு உணர்ந்தாய் என்பதை அல்ல, அதனால் நீ நற்குணத்தில் எவ்வளவு வளர்ந்தாய் என்பதைப் பார்.

ஏப்ரல்
10
ஜீவ நீரோடை

பண்டிகை பக்தி

அதற்காகக் கண்ணீர் விட்டழுது ....
லூக்கா 19:41

லூக்கா 19:28-48

ஆண்டுதோறும் கிறிஸ்தவ சபைகள் குருத்தோலை ஞாயிறை ஆசரிக்கின்றன. இயேசு கழுதையின்மேல் பவனியாக வந்த சம்பவத்தைச் சபைகள் தவறாமல் கொண்டாடுகின்றன. ஆனால், பவனி வந்த நிகழ்வை ஆண்டுதோறும் விசேஷமாக நினைக்கின்ற சபைகள், அதனுடைய முடிவில் நிகழ்ந்த இன்னொன்றை நினைக்க வேண்டியது அவசியம். அதுதான் எருசலேம் நகரைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுத சம்பவம். அதுதான் எருசலேம் நகரில் கூடியிருந்த ஜனங்களுக்கு எச்சரிக்கை கொடுத்த சம்பவம்.

இயேசு மகிழ்ச்சிக்கு ஏதுவான ஊர்வலத்தை நடத்தினார். ஆனால், சற்று நேரத்தில் கண்ணீர் விட்டு அழுதார். யாரைப் பார்த்து அழுதார்? துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தினரைப் பார்த்து அல்ல. பண்டிகை கொண்டாடி, பக்திப் பரவசத்தோடு காணப்பட்ட மக்களைப் பார்த்துதான் அழுதார். அழுகிறவர்களோடுதானே அழ வேண்டும். இவரோ சந்தோஷமாகப் பண்டிகை கொண்டாடிக் கொண்டிருக்கின்றவர்களைப் பார்த்து அழுதாரே ஏன்?

ஏனென்றால் அவர்களின் பக்தி பண்டிகை கொண்டாடுவதை முதலிடத்தில் வைத்திருந்ததேயன்றி, தேவனுடைய சத்தியத்தை முதலிடத்தில் வைக்கவில்லை. அவர்கள் தேவனால் தரப்பட்டிருந்த நல்ல பல ஆசீர்வாதங்களை இழந்து, நிர் பாக்கியமான நிலையில் இருந்தனர். அவர்கள் கொண்டாடின பண்டிகை பஸ்கா என்ற விடுதலையின் பண்டிகை. ஆனால், அவர்கள் அந்த விடுதலையை இழந்திருந்தனர். தாங்கள் இழந்தவைகளின் பின்னால் இருந்த தங்களின் பாவங்களுக்காக, துக்கப்பட்டு மனந்திரும்ப வேண்டிய ஒரு காலத்தில் பண்டிகை கொண்டாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் தேவனையும், தேவனுடைய கற்பனைகளையும், மறந்து போய்விட்டனர். மனந்திரும்பாமலே வாழ்கின்ற தங்கள்மேல் தேவ கோபம் வரப் போவதை நினையாதிருந்தனர்.

மனந்திரும்பி பக்தியைக் காட்டாமல், சம்பிரதாயப் பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்ந்த அவர்களின் நிலைமையைப் பார்த்து இயேசு கண்ணீர்விட்டார். அநேகர், குருத்தோலை பவனி வேளையில் தரப்பட்ட ஒன்றுமில்லாத பயனற்ற ஒரு சின்ன ஓலை குருசை, ஆசீர்வாதம் என்று எண்ணி வீடுகளில் பத்திரமாக வைத்துக் கொள்கின்றனர். ஆனால், பாவ விடுதலை என்னும் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக, ஈனக் குருசில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவைத் தங்களுடைய இருதயத்தில் வைத்திடக் கவலையில்லாமலிருக்கின்றனர். ஆம், பண்டிகை கொண்டாடும் பக்தி அல்ல. தேவ சத்தத்திற்குச் செவி சாய்க்கும் பக்தி வேண்டும்.

சிந்தனைக்கு...

பக்தியில்லாத பாவிகளைவிட பரிசுத்தமில்லாத பக்தர்கள்தான் தேவனை அதிகமாகத் துக்கப்படுத்துகின்றனர்.

ஏப்ரல்
11
ஜீவ நீரோடை

சிலுவையைப் பயன்படுத்தணும்

கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு....
1 கொரிந்தியர் 1:17

1 கொரிந்தியர் 1:17-31

ஒருவருக்கு அமெரிக்க நாடு தொடர்பாக அதிகமான ஆர்வம். அமெரிக்கா தொடர்பான ஏராளமான தகவல்களை அவர் திரட்டி வைத்துள்ளார். அமெரிக்கா தொடர்பாக அவரிடம் கேள்விகேட்டால் ஏராளம் நல்ல தகவல்களைப் பெற முடியும். அமெரிக்காவில் பிறந்து வாழ்கின்றவர்களைவிட இவர் அமெரிக்காவைக் குறித்த மிகச் சிறந்த விபரங்களைத் தர இயலும். ஆனால், அவர் ஒரு முறைகூட அமெரிக்காவுக்குப் போனதில்லை.

லெந்து காலங்களில் சிலுவை தொடர்பான விஷயங்கள் சபைகளில் அதிகமாகப் பேசப்படும். பல போதகர்கள் சிலுவையைக் குறித்து புதிய புதிய பரவசமான அர்த்தங்களைச் சொல்வார்கள். சபை மக்களும் சிலுவை தொடர்பான ஏராளம் நல்ல விளக்கங்களைப் பெறுவார்கள். சிலுவைக்கு அதிகமான முக்கியத்துவம் கிடைக்கின்ற காலம் லெந்து காலம். ஆனால், சிலுவை என்பது பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்று. சிலுவையைக் குறித்த சிறந்த சிந்தனைகளைப் பெற்றுக் கொண்டே இருப்பதல்ல. சிலுவை நம் வாழ்வில் வீணாகப் போய்விடக் கூடாது என்பதைத்தான் வேதம் போதிக்கின்றது. (1 கொரிந்தியர் 1:17)

சிலுவை அடையாளங்களை விரும்புகிறோம். சிலுவையை நெற்றியில் வரைகிறோம். உபயோகிக்கும் பொருட்களில் சிலுவைக் குறியைப் பயன்படுத்துகின்றோம். சிலுவை தொடர்பாக ஏராளம் பாடல்கள் பாடுகின்றோம். ஆனால், சிலுவையை எதற்காகப் பயன்படுத்த வேண்டுமோ அதற்காகப் பயன்படுத்துகின்றோமா என்பதே முக்கியமானது. சிலுவையைப் பார்ப்பது, சிலுவையை வரைவது, சிலுவையைத் தொடுவது, என பல செயல்களை நாம் செய்யலாம். இவை யாவும் பாரம்பரியம் சார்ந்த செயல்களே. இவற்றால் எந்தப் பயனும் இல்லை. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நாம் பெற்றுக் கொண்டோமா என்பதே முக்கியம். எத்தனை சிலுவைத் தியானக் கூட்டங்களில் கலந்து கொண்டாலும், சிலுவை உபதேசம் நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பதே முக்கியம்.

அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையைக் குறித்த விளக்கங்களை அல்ல. சிலுவையில் அறையப்பட்டவராகிய இயேசுவையே பிரசங்கித்தான். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதின் விளைவான இரட்சிப்பின் ஆசீர்வாதத்தைக் குறித்தே பிரசங்கித்தான். சிலுவையின் மேன்மைகளைப் பிரசங்கிப்பது அல்ல. சிலுவையின் வாயிலாக நமக்காக ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பினை, நாம் அடைந்து சாட்சியாக வாழ்கின்றோமா என்பதே முக்கியம்.

சிந்தனைக்கு...

ஆசீர்வாதம் என்பது சிலுவை அடையாளத்தால் அல்ல,
சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் ஐக்கியத்தால் வருவதே அது.

ஏப்ரல்
12
ஜீவ நீரோடை

உங்களுக்கு என்ன நடந்தது?

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து...
எபிரெயர் 2:4

எபிரெயர் 2:1-18

40 நாட்கள் லெந்து காலம் முடிவடைந்தது. ஒவ்வொரு வாரமும் விசேஷ சிலுவைத் தியானக் கூட்டங்கள் நடந்தது. ஈஸ்டர் தினத்தன்று 40 நாள் லெந்து கால கூட்டங்களைக் குறித்து சபையாரின் கருத்து கேட்கப்பட்டது. அநேகர் சொன்ன கருத்துக்களின் சாரம் ஒன்றுதான். இயேசுவுக்கு என்ன நடந்தது என்பதை எல்லோரும் நன்கு அறிந்துகொள்ள லெந்துகால விசேஷக் கூட்டங்கள் நல்ல உதவியாயிருந்திருக்கின்றது. யாரும் தங்களுக்கு என்ன நடந்தது என்பதைக் குறித்துச் சொல்ல எதையும் கொண்டிருக்கவில்லை.

அநேகருக்கு லெந்து காலங்கள் ஒரே சினிமா படத்தை பலமுறை பார்ப்பது போன்றதோர் அனுபவமாக உள்ளது. இயேசு கிறிஸ்துவின் பாடு மரண சம்பவங்களை, பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கின்ற ஒரு அனுபவமாகவே அது உள்ளது. இயேசுவின் பாடு மரணச் சூழ்நிலைகளைக் கேட்டுக் கேட்டு, ஒரு பச்சாதாப உணர்வோடு அமர்ந்திருந்து கிளம்பிச் செல்வதே பலருடைய லெந்துக் கால அனுபவமாக உள்ளது.இயேசுவுக்கு என்ன நடந்தது என்பது அல்ல. அவருக்கு நடந்தவைகளின் விளைவாக நமக்கென்ன நடந்தது என்பதே முக்கியம். நமக்கு என்ன நடக்க வேண்டும் என்பதற்காக இயேசு பாடுபட்டாரோ, அது நடக்காத பட்சத்தில் லெந்து காலம் என்பது பயனற்ற ஒரு பக்தி சம்பிரதாய காலமே.

அனேகர் லெந்து காலத்தில் பலமுறை வழிபாடுகளில் கலந்து கொள்ளும் ஒரு செயலை, தேவனைப் பிரியப்படுத்தும் ஒரு பக்தி என்று நினைக்கின்றனர். இது தவறான நம்பிக்கை. லெந்து காலம் என்பது விசேஷ ஆசரிப்பின் காலம் அல்ல. அது விசேஷமாய் நம்மை அலசி ஆராய்ந்து பார்த்து நம்மைச் சீர் செய்கின்ற காலம். அது நடக்காவிட்டால் நாம் நன்மையேதும் தருவதற்குத் தகுதியற்ற ஒரு மத வழிபாட்டு நிகழ்ச்சியில், நேரங்களை வீணாக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை.

கர்த்தர் நமக்காகப் பட்ட பாடுகளின் தன்மைகளின் விளக்கங்களைக் கேட்கக் கேட்க, இன்னும் இன்னும் கர்த்தர்மேல் கொஞ்சம் பக்தி ஏற்படலாம். அவர்மேல் பச்சாதாபம் ஏற்படலாம். ஒரு சோக உணர்வோடு ஆலயத்தில் அமர்ந்திருப்பது ஒரு திருப்தியைத் தரலாம். ஆனால், இவைகளினால் என்ன விளைவு என்பதே முக்கியம். நாம் கர்த்தர் சம்பாதித்துத் தந்த இரட்சிப்பினை, பெற்றுக்கொள்ளாமல், சோகமாய் அமர்ந்து ஆராதனை செய்வது அர்த்தமற்றது. நாம் தேவனுடைய பிள்ளைகளாகாமல், வெறும் பக்திப் பச்சாதாபங்களை வெளிப்படுத்துவது தேவையற்றது.

சிந்தனைக்கு...

நம்முடைய பாவங்களுக்காக வருந்தாமல், இயேசுவின் பாடுகளுக்காக வருந்தினால், அது ஒரு போலி பக்தி.

ஏப்ரல்
13
ஜீவ நீரோடை

மறுதலித்தது ஏன்?

அவனை அறியேன் என்று மறுதலித்தான்....
லூக்கா 22:57

லூக்கா 22:54-62

ஒருவன் அதிகமாக மது அருந்திவிட்டு இரயிலில் ஏறினான். அவன் போதையின் விளைவாக ஸ்திரமாக நிற்க இயலாமல் சக பயணிகள்மேல் சிலமுறை சாய்ந்துவிட்டான். சில பயணிகள் அவனை வாய்க்கு வந்தபடி திட்டினர். சிலர் அவனை அடித்து விட்டனர். போலிஸ் வந்தது. ஏன் இப்படி அதிகமாகக் குடித்து விட்டு, ரயிலில் மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்றாய் என்று கேட்டனர். அதற்கு அவன் நான் குடிப்பழக்கம் உள்ளவன் அல்ல. சில நாட்களுக்கு முன்பு என் மனைவி இறந்துவிட்டாள். என்னால் துக்கத்தைத் தாங்க முடியாமல், மது வாங்கி அருந்தினேன். இப்படி ஆகும் என்று எனக்குத் தெரியாது என்றான். அவனைத் திட்டினவர்களும் அடித்தவர்களும் குற்ற உணர்வினால் கஷ்டப்பட்டனர்.

சில நேரங்களில் நாம் சில செயல்களை மட்டும் பார்க்கின்றோம். அது நமக்குத் தவறாகத் தோன்றுகின்றது. அது தவறுதான். ஆனால், அது ஏன் நிகழ்ந்தது. அதனுடைய காரணம் என்ன என்று பார்த்தால், சம்பந்தப்பட்ட நபர் நாம் நினைத்த அளவிற்கு மோசமானவர் அல்ல என்பதை அறிவோம். பேதுரு இயேசுவை மறு தலித்தான். அது நம்முடைய பார்வையில் ஒரு மிகப் பெரிய தவறாகத் தோன்று கிறது. போயும் போயும் பெரிய அளவில் சவால் விட்டுப் பேசிய சீடன், மறுதலிக்கும் அளவிற்குப் போய்விட்டானே என்று சொல்லுவோம்.

ஆனால், இயேசு அவனுடைய மறுதலிப்பின் பின்னணியை அறிந்தவர். அவன் ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டதாக அவர் எண்ணவில்லை. மிகச் சிக்கலான ஒரு சூழ்நிலையில் ஒரு பெரிய அழுத்தத்தைக் காண நேர்ந்ததால், சூழ்நிலைக் கைதியாகி அவன் மறுதலித்தான் என்பது அவருக்குத் தெரியும். எனவேதான் உயிரோடெழுந்த இயேசு அவனைத் தவிர்க்காமல், தேடிச் சென்று தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார்.

பேதுரு இயேசுவின்மேல் கொண்ட அன்பினால்தான், அவருக்கு எதிராக விசா ரணை நடைபெற்ற வேளையில், அவரைப் பிரிய மனமின்றி அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தான். அவன் இயேசுவின் சீடன் என்பதை சிலர் கண்டுபிடித்த பின்ன ரும், உயிர் பிழைக்க அந்த இடத்தை விட்டு ஓடிச் செல்லாமல், திரும்பத் திரும்ப அங்கேயே காணப்பட்டதால்தான், மறுபடியும் மறுபடியும் அவன் கண்டுபிடிக்கப் பட்டான். மறுபடியும் மறுபடியும் மறுதலிக்க நேரிட்டது. ஆம், என்ன நடந்தது என்பதை மட்டும் அல்ல, ஏன் நடந்தது என்பதையும் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

அறிந்திருந்த இயேசுவை அறியேன் என்று கூறினான் பேதுரு,
அறிந்திராத இயேசுவை அறிவோம் என்று கிறிஸ்தவர்கள் பலர் கூறுகின்றனர்

ஏப்ரல்
14
ஜீவ நீரோடை

துக்கம் எதற்காக?

இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும்.... யோவேல் 2:12

யோவேல் 2:11-26

த பேஸன்ஸ் ஆஃப் த கிரைஸ்ட் என்ற சினிமா படம், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைய்பபடும் முன்பு அவர் உணர்ந்த கெத்செமெனே வியாகுலங்களை மிக மிக உணர்ச்சிப்பூர்வமாக சித்தரித்தது. அது லட்சக்கணக்கானோரை அழ வைத்தது. ஆனால், அந்த படம் உணர்ச்சி வசப்படுத்தும் காட்சிகளைக் கொண்டிருந்ததால் பலர் அழுதனர். ஆனால், கர்த்தராகிய இயேசு அடைந்த வியாகுலங்ககளை நினைத்து நாம் பரிதாபப்பட வேண்டும் என்றோ, அவருக்காகப் பரிதவிக்க வேண்டும் என்றோ வேதம் எதிர்பார்க்கவில்லை.

வியாகுல வியாழன் ஆசரிப்பு நாளில், துக்க முகத்தோடு இயேசு கிறிஸ்துவின் கெத்செமெனே தோட்டத்து வியாகுலச் சூழ்நிலைகளை விளக்கும் ஆராதனையில் ஜனங்கள் பங்கேற்கின்றனர். சோகமான பாடல்கள், சோகமான ஜெபங்கள், சோகமான பிரசங்கங்கள் என கூடிவந்தோர் ஒரு துக்க சூழ்நிலையில் காணப்படுகின்றனர். சிலமணி நேரம் இவ்விதம் ஒரு துக்க சூழ்நிலையில் பங்கு பெறுவதை அநேகர் இயேசுவுக்காகக் காண்பிக்கும் ஒரு உணர்வுப்பூர்வ பக்தியாக எண்ணுகின்றனர்.

பொதுவாக மனிதன் தன்னுடைய துன்பங்களை எண்ணி சுயபரிதாபம் கொள்வான். இல்லையென்றால் மற்றவர்களின் மிக அதிக துன்பநிலையை நினைத்து பரிதாபம் கொள்வான். ஆனால், வேதாகமம் நம்முடைய பாவங்களுக்காகத்தான் நாம் மிக அதிக மாகத் துக்கப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அழுகையோடும் புலம்பலோடும், முழு இருதயத்தோடும் என்னிடம் திரும்புங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். (யோவேல் 2:12) நம்முடைய கஷ்டங்கள் நம்மை அழ வைக்கலாம். நம்முடைய துன்பங்கள் நம்மை கண்ணீர் விட வைக்கலாம். ஆனால், தேவனுக்கு முன்பாக நிற்கத் தகுதியற்ற நம்முடைய பாவ நிலைமைதான், நம்மைத் துக்கப்படுத்தும் காரணங்களில் முதலாவது வரவேண்டும். ஒருவருடைய பாவ நிலைமைதான் எத்தனை பக்தியிருந்தாலும் தேவ நன்மைகளைப் பெறாத படிக்குத் தடையாயிருக்கிறது. பாவ நிலமைதான் எத்தனைதான் பக்தி வழிபாடுகள் செய்தாலும் தேவ கோபாக்கினைக்கு வழிவகுக்கிறது.

நம்முடைய பாவங்களுக்காகத்தான் இயேசு வியாகுலங்களை அனுபவித்தார். எந்த நோக்கத்திற்காக இயேசு சிலுவைப் பாடுகளை ஏற்றாரோ, அந்த நோக்கத்தைக் குறித்துக் கவலைப்படாமல், அவருடைய பாடுகளுக்காகப் பரிதாபப்படுவது, தேவனுக்கு ஏற்ற பக்தி அல்ல. நமக்காகப் பாடுகளைச் சகித்தவரை நமக்குள் ஏற்றுக் கொண்டு, அவருடைய சிலுவைப்பாடுகளினால் வரும் ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாவதே தேவன் எதிர்பார்க் கும் பக்தி. அதற்குப் பதிலாக, நாம் இயேசுவின் பாடுகளின் கோரத்தை எவ்வளவுதான் நினைத்துத் துக்கப்பட்டாலும் பரிதவித்தாலும் அதனால் எந்த நன்மையும் இல்லை.

சிந்தனைக்கு...

கர்த்தருக்காக அழுவதற்கு அநேகர் உண்டு,
கர்த்தரைச் சந்தோஷப்படுத்த ஒரு சிலரே உண்டு.

ஏப்ரல்
15
ஜீவ நீரோடை

இந்த துக்கம் வேண்டாம்

எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல்... லூக்கா 23:28

லூக்கா 23:13-31

பெரிய வெள்ளியன்று கிறிஸ்தவ ஆன்மிகத் தலங்கள் பக்தர்களால் நிரம்பி வழியும் நாள். வருடத்தில் ஒரு முறை அல்லது இருமுறை மட்டும் சபை நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களை பெரிய வெள்ளி அல்லது துக்க வெள்ளியன்று நிச்சயம் காணலாம். அழுகிறவர்களோடு சேர்ந்து அழுங்கள் என்ற வசனத்தின்படி, துக்க முகத்தோடு வழிபாடு செய்ய வருகின்றவர்களைக் காண்கின்ற நாள் அது.

ஆனால், துக்க வெள்ளி அல்லது பெரிய வெள்ளி அன்று ஜனங்கள் துக்க முகத்தோடு அமர்ந்திருப்பது தனிப்பட்ட முறையில் இயேசுவின்மேல் கொண்ட பரிதாபம் அல்ல. அது மரபு சார்ந்த ஒரு துக்கம். அது சம்பிரதாயமானதும் சடங்காச்சாரமானதுமான ஒன்று. ஆனால் நாம் துக்கமுகத்தோடும் சோகமான ஒரு மனநிலையோடும், அமர்ந்து பெரிய வெள்ளி நாளை ஆசரிக்க வேண்டியது கட்டாயமல்ல. ஏனென்றால், சிலுவையில் அறையப்பட்ட இயேசு மரணத்தை வென்று உயிரோடு எழுந்து வந்துவிட்டார். எனவே நாம் இனியும் எம்மா ஊரை நோக்கிச் சென்ற சீடர்களைப் போல துக்கமாயிருக்கத் தேவையில்லை.

ஆனால், நாம் சில விஷயங்களை இருதயத்தின் ஆழத்திலிருந்து சிந்திக்க வேண்டிய நாள் இது. பாவம் எவ்வளவு கடுமையானதும், தேவனுடைய பார்வையில் மிகப்பெரிய தண்டனைக்குரியதுமான ஒன்று என்பதை இயேசுவின் சிலுவை மரண நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. நாம் இயேசுவின் சிலுவைப் பாடுகளுக்காக வருந்துவதை பக்தி என எண்ணக்கூடாது. சிலுவைப் பாடுகளுக்குக் காரணமான பாவம் நம்மிடம் இருந்தால் அற்காக வருந்தவேண்டும். சோகப் பாடல்கள் பாடப்படுகின்ற ஒரு சூழ்நிலையில், இயேசு மொழிந்த ஏழு வார்த்தைகளின் விளக்கத்தை இன்னுமொருமுறை கேட்பதல்ல. சிலுவையின் விளைவான பாவ மன்னிப்பும் பாவ விடுதலையும், நம்முடைய வாழ்க்கையில் அனுபவங்களாகி விட்டதா என்று பார்க்க வேண்டும்.

வழக்கமாகச் செல்வது போல இந்த ஆண்டும் பெரிய வெள்ளி ஆராதனைக்குச் செல்லாமல், நம்மை ஆராய்ந்து பார்க்க முன்வருவோம். தாங்கொணாப்பாடுகள் பலஅடைந்து உருவாக்கப்பட்ட இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறாமல், மீண்டும் ஒரு முறை பெரிய வெள்ளி ஆராதனையில் பங்கேற்பது ஆசீர் வாதமானதல்ல. இத்தனை ஆண்டுகள் பெரிய வெள்ளி துக்க ஆராதனையில் கலந்து கொண்டு, இன்னும் மீட்கப்பட்ட அனுபவம் பெறாதிருந்தால் அது மீண்டும் ஒருமுறை இயேசுவை சிலுவையில் அறைவதற்குச் சமம்.

சிந்தனைக்கு...

துக்க வெள்ளி ஆசரிப்பது கட்டாயமல்ல.

ஆனால், மனந்திரும்பாதவர்கள் அதனை ஆசரித்தால் தேவன் துக்கப்படுவார்.

ஏப்ரல்
16
ஜீவ நீரோடை

அவரின் ஐக்கியம்

சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்... மத்தேயு 28:20

மத்தேயு 28:1-20

கிறிஸ்தவர்கள் யாராவது மரணம் அடைந்தால், மரித்தவர் கர்த்தருடைய சமுகத்தில் இருக்கிறார். அவர் மறுபடியும் உயிர்த்தெழுவார் என்றெல்லாம் ஆறுதல் கூறுவார்கள். மரித்துப் போனவர் தேவனுடைய பிள்ளையாக இருந்தால், ஒரு நாள் அவர் உயிரோடெழுந்து வந்து, தேவ சமுகத்தில் இருப்பார் என்பது உண்மை. ஆயினும், ஒருவருடைய மரணத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது போதிய ஆறுதலைத் தராது. ஏனென்றால், மரணம் ஏற்படுத்துகின்ற மிகப் பெரிய வேதனை, ஒருவரின் அன்பான ஐக்கியத்தை நிரந்தரமாக இழந்து போவதுதான்.

மரித்துப் போனவர் மறுபடி உயிர்த்தெழுவார் என்பது பக்திரீதியான ஒரு ஆறுதல்தான். ஆயினும், இனி அந்த நபரின் உறவும் ஐக்கியமும் நமக்கு இல்லாமல் போவதை உணரும்போது, அது எளிதாக ஆற்றத் தகுந்தது அல்ல. உடனிருந்த ஒருவரை இழக்கும்போது சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை, தைரியம், உற்சாகம், ஆதரவு என பல விஷயங்கள் ஒரே நேரத்தில் இழக்கப்படுகின்றது.மறுபடியும் இவற்றை திரும்பப் பெற காலங்கள் ஆகும். கணவனை இழந்த மனைவிக்கோ, மனைவியை இழந்த கணவனுக்கோ, பிள்ளைகளை இழந்த பெற்றோருக்கோ, பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கோ இனி அது போன்ற ஒரு ஐக்கியம் கிடைக்காது. ஈடு செய்யாத இழப்பாகிவிடுகிறது.

ஆயினும், வாழ்க்கையின் எந்த ஒரு இழப்பின் நடுவிலும், அந்த இழப்பு ஏற்படுத்தின வெற்றிடத்தை நிரப்ப இயன்ற ஒரு ஐக்கியம் உண்டு. அதுதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஐக்கியம். அவருடைய ஐக்கியத்தின் விசேஷத் தன்மை என்னவென்றால், அந்த ஐக்கியத்தால் எந்த ஒருவருக்கும் உரிய ஆறுதலைத் தர முடியும். அவருடைய ஐக்கியத்தை ஆத்துமாவில் உணரும்போது, இழந்து போன எந்த ஒரு ஐக்கியத்தின் விளைவான வேதனையும் ஆறும்.

இயேசுவின் மரணம் சீடர்களுக்கு ஈடு செய்ய இயலாத ஒரு இழப்பே. ஆயினும், அவர்கள் அவருடைய ஐக்கியத்தை ஆத்துமாவில் உணர்ந்து உறுதிப்படுத்தும் வாய்ப்பை விரைவில் பெற்றார்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடிருக்கின்றேன் என்ற நம்பிக்கையின் வார்த்தைகளை அவர்கள் கேட்டனர். ஆம், எந்த ஒரு உறவினருடைய ஐக்கியமும் இழந்து போன ஒரு ஐக்கியத்திற்குப் பதிலாக அமையாது. ஆனால், இயேசுவின் ஐக்கியம் அதனை நிறைவு செய்யும். அவருடைய ஐக்கியம், சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை, தைரியம் யாவற்றையும் மீட்டுத்தரும்.

சிந்தனைக்கு...

மனித உறவுகளின் இழப்பு ஒரு பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தும்.
ஆயினும் இறை உறவு அதை நிரப்ப வல்லதே.

ஏப்ரல்
17
ஜீவ நீரோடை

அவர் எங்கே?

உயிரோடிக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? லூக்கா 24:5

லூக்கா 24:1-16

சில ஆண்டுகளுக்கு முன்பு நாள் ஜெர்மனியில் உள்ள டியூசல் டார்ப் விமான நிலையத்தில் வந்து சேர்ந்தேன். என்னுடைய நண்பர் ஜெப்தா என்பவர் ஒரு குறிப்பிட்ட வாசலில் என்னை நிற்கச் சொல்லியிருந்தார். நானோ சற்று குழப்பமடைந்து வெகுதூரத்திலுள்ள இன்னொரு வாசலில் காத்துக் கொண்டிருந்தேன். எப்படியோ அவர் நீண்டநேரம் என்னைக் காணாததால் அங்குமிங்கும் தேடி, இறுதியில் நான் நின்ற இடத்திற்கு வந்துவிட்டார். என்னுடைய செயலால் அவர் சற்று கோபமுகமாக இருந்ததை உணர்ந்தேன்.

இயேசுவின் சீடர்கள் இயேசுவின்மேல் மிகுந்த பற்றுள்ளவர்கள். இயேசு மரித்து அடக்கம் பண்ணின மூன்றாம் நாள் அதிகாலையிலேயே அவர்கள் மிகுந்த பாச உணர்வுடன் அவருடைய கல்லறைக்குச் சென்றார்கள். உயிர்தெழுந்த இயேசுவுக்கு இவை யாவும் தெரியும். ஆனாலும், அவர் தம்முடைய சீடர்களுக்கு கல்லறையில் காட்சி தரவில்லை. அவரை உயிரோடெழுந்தவராக அவரை அங்கே பார்க்க இயலவில்லை. உயிரோடிக்கின்றவரை மரித்தோரின் நடுவில் தேடுகின்றீர்களே என்று தூதர்களால் உணர்த்தப்பட வேண்டியதாகிவிட்டது.

ஏனென்றால், அவர்கள் எங்கே வர வேண்டும் என்று சொல்லப்பட்டதோ அங்கே வரவில்லை. இயேசு அவர்களுக்காக கல்லறைக்குப் போய் தம்மை உயிரோடெழுந்தவராகக் காண்பிக்கவில்லை. அவர் சொன்ன இடத்திற்கு அவர்கள் செல்ல வேண்டியது அவசியமாகியது. நம்மில் அநேகரும் அந்தச் சீடர்களைப் போல இயேசுவின்மேல் அன்புடையவர்கள். நாம் மிகுந்த பக்தியோடுதான் அவரைத் தேடுகின்றோம். நாம் இங்கே அங்கே என்று இயேசுவை நேசித்து செல்லுவது அவருக்குத் தெரியும். ஆயினும், நாம் விசுவாசத்தாலும், சத்திய வேத வார்த்தைகளாலும் உந்தப்பட்டு அவரைத் தேட வேண்டும். கர்த்தர் எங்கே தம்மைக் காண இயலும் என்று சொல்லியிருக்கின்றாரோ, அங்கே நாம் தேட வேண்டும்.

பக்தியோடு ஆலயத்தில் தேடுவது அல்ல. பரவசத்தோடு ஆராதனையில் தேடுவது அல்ல. வாஞ்சையோடு ஜெபக்கூட்டங்களில் தேடுவது அல்ல. வைராக்கியத்தோடு சுயநீதிக் கிரியைகளில் தேடுவது அல்ல. நாம் அவரை மனந்திரும்புதல் என்ற அனுபவத்தின் வாயிலாகத் தேட வேண்டும். நாம் அவரை அவருடைய சித்தப்படி வாழ்வதற்கு அர்ப்பணித்த ஒரு அனுபவத்தில் தேட வேண்டும். நாம் அவரை தனிப்பட்ட தேவ ஐக்கியம் என்ற அனுபவத்தில் தேட வேண்டும். அப்போது நிச்சயம் அவர் நம் நடுவில் இருப்பதைக் கண்டுகொள்வோம்.

சிந்தனைக்கு...

கடவுளைத் தேடி ஆயிரம் கோயில்கள் சென்றாலும்
மனந்திரும்புகிறவன் மட்டுமே அவரைக் காண்பான்.

ஏப்ரல்
18
ஜீவ நீரோடை

நம்பிக்கையும் ஆயத்தமும்

மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.
அப்போஸ்தலர் 21:13

அப்போஸ்தலர் 21:1-15

கோவிட்-19 என்ற கொரோனா வைரஸினால் முழு உலகமும் அசைக்கப் பட்டது. கொரோனா பெருந்தொற்று அநேகரைப் பலிகொண்டது. கொரோனா பெருந்தொற்று அநேகரைத் தாக்க ஆரம்பித்த காலத்திலிருந்து, சுமார் இரண்டு வருடம் பல கிறிஸ்தவப் போதகர்களும் சுவிசேஷகர்களும் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனித்தேன். அவர்கள் எப்பொழுதும் நம்பிக்கை யான வார்த்தைகளையே பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நம்பிக்கையூட்டும் தேவ வாக்குத்தத்தங்களை வேதாகமத்திலிருந்து தேடி எடுத்து அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அவற்றின் மொத்த செய்தி என்னவாகயிருந்தது? பயப்படாதேயுங்கள். உங்களுக்கு ஒன்றும் நடக்காது. கர்த்தர் உங்களை தீங்கு அணுகாமல் பாதுகாப்பார். உலகத்தையே கொரோனா கட்டிப் போட்டாலும், உங்களுக்குப் பயப்படும் விதமாக ஒன்றும் நிகழாது. இதுதான் அவர்கள் சளைக்காமல் தொடர்ந்து பேசிய வார்த்தைகள். இவர்கள் இப்படி நம்பிக்கை வார்த்தைகளை வாரி இறைத்துக் கொண்டிருந்தார்கள். மறுபுறம் பல தேவ ஊழியர்கள், பல விசுவாசிகள், பல சுவிசே ஷகர்கள், பலமிஷனரிகள் மரித்துப் போனார்கள்.

தேவ ஊழியர்கள் நம்பிக்கை வார்த்தைகள் பேச வேண்டும். ஆனால், உலகத்தில் ஒரு தீங்கு அனுமதிக்கப்பட்டிருக்கும்போது அதற்குப் பக்தியாளர்கள் எல்லோரும் முழு விதிவிலக்குகள் அல்ல. சில எதிர்மறையான நிகழ்வுகளின் காலத்தில் பாவிகள் மட்டுமல்ல, தேவனைத் தேடுகின்றவர்களும் அவற்றால் பாதிக்கப்பட இயலும். எனவே, நம்பிக்கை வார்த்தை மட்டும் அல்ல. ஆயத்தப்படுத்தும் வார்த்தைகளும் சொல்லப்பட வேண்டும். யுத்த களத்தில் நிற்கும் வீரனுக்கு நம்பிக்கை வார்த்தை மட்டும் அல்ல. எதையும் அவன் சந்திப்பதற்கு ஏற்றவனாயிருக்கும்படி அவன் ஆயத்தப்படுத்தப்படவும் வேண்டும்.

எருசலேமுக்குப் போனால் பல உபத்திரவங்கள் வரும் என்பதை முன்னறிய நேரிட்ட பவுல், தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டான். ஆம், நாம் மரணத்தை சந்திக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் சிலருடைய மரணத்தையும் ஏற்றுக் கொள்ள ஆயத்தப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், நாம் யுத்தக்களத்தில் நிற்கின்றோம். நாம் ஆயத்தப்படுவது அவநம்பிக்கையின் விளைவு அல்ல. அது கர்த்தர்மேல் கொண்ட நம்பிக்கையின் விளைவு. நாம் ஆயத்தப்பட வேண்டியது அவசியம். ஆயினும், கர்த்தர் நியமித்தபடியே எதுவும் நிகழும்.

சிந்தனைக்கு...

எதுவும் எதிராக வராது என்று நம்புகிறவன் அல்ல,
எது வந்தாலும் எதிர்கொள்வோம் என்பவனே வீரன்.

ஏப்ரல்
19
ஜீவ நீரோடை

வாழ்க்கை எப்படி?

நீ எனக்குப் பின்சென்று வா...
யோவான் 1:43

யோவான் 1:35-51

ஒரு நல்ல போதகர் குறிப்பிட்ட திருச்சபையில் சில ஆண்டுகள் போதகப் பணி செய்தார். பின்னர் இன்னொரு சபைக்கு மாற்றலாகிச் செல்லுவதற்காக ஆயத்தப்பட்டார். அவருக்குப் பிரியாவிடை கொடுத்தனர். அந்த திருச்சபையாரில் சிலர் அவரிடம் வந்து தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர். உங்கள் போதனைகள் எனக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. உங்கள் வேத பாடவகுப்புகள் எனக்கு ரொம்ப பயனுள்ளதாயிருந்தது. என்றெல்லாம் சிலர் வந்து கூறினார்கள். அவர்களில் ஒருவர் அவரிடம் வந்து ஐயா, உங்கள் வாழ்க்கை எனக்கு மிகவும் பயனுள்ளதாயிருந்தது என்றார். எப்படி என்று கேட்டார் போதகர்? உங்கள் வாழ்க்கை எங்களுக்கு பின்பற்றத்தக்க ஒரு மாதிரி என்றார்.

ஒரு நல்ல போதனையைவிட, ஒரு நல்ல உபதேசத்தை விட, ஒரு நல்ல வாழ்க்கை அதிக மதிப்பிற்குரியது. நல்ல போதனையையும் நல்ல உபதேசங்களை யும் பலர் ரசிப்பதோடு நிறுத்திக்கொள்வார்கள். ஆனால், ஒருவருடைய நல்ல வாழ்க்கை என்பது கவனிக்கப்படும் போது, அது இன்னொருவரை நல்லதோர் பாதையில் கொண்டு செல்லத்தக்கது. சிலர் சிலருடைய நல்ல போதனைகளை விரும்புவார்கள். ஆனால், நல்ல வாழ்க்கை முறைகளைக் கவனிக்காமலும், கண்டு கொள்ளாமலும் போவார்கள். ஆயினும், ஒரு வாழ்க்கை நல்லதாயிருக்கும்போது அது இன்னொருவருக்குள் ஒரு உணர்வை ஏற்படுத்தாமலிருப்பதில்லை.

சிலருடைய போதனைகள் போதிக்கப்படும் இடங்களில் மட்டும் கேட்கப்படும். அந்த இடத்தைக் கடந்ததும் போதகரும் மறக்கப்படுவார், போதனையும் மறக்கப்படும். அதற்கு முக்கியமான காரணம், போதிக்கப்படும் உண்மைகள் போதிக்கின்ற வரின் வாழ்க்கையில் வெளியரங்கமாகத் தெரிவதில்லை. குடிசையில் வாழ்கின்ற ஆசிரியர் தாஜ்மஹாலின் பிரமாத நிலையை விளக்கிப் பேசுவது போல, அநேகர் சாதாரணமாக வாழ்ந்து கொண்டு மேன்மையானவைகளைப் பேசுகின்றனர்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடன் 12 சீடர்களை வைத்துக் கொண்டார். அவர்கள் அவரைப் பின்பற்றுகின்றவர்கள். அதாவது அவரை உற்றுக் கவனித்து அதற்கேற்ற விதமாக நடப்பதற்கு ஆயத்தப்பட்டவர்கள். அவர் அவர் களுக்குப் பிரமாதமாகப் போதிக்கின்றவராக மட்டுமல்ல. மிக மிக நல்ல முன் மாதிரியாக அவர்களுடைய கண்களுக்கு முன்பாகக் காணப்பட்டார். அவ்விதமே அப்போஸ்தலனாகிய பவுலும், நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, என்னை நீங்கள் பின்பற்றுங்கள் என்றான். (1 கொரிந்தியர் 11:1)

சிந்தனைக்கு...

எப்படி வாழவேண்டும் என்று கற்பிப்பவன் ஆசிரியன்,
அப்படியே வாழ்ந்து காட்டுகிறவன் போதகன்.

ஏப்ரல்
20
ஜீவ
நீரோடை

மனந்திரும்பாத போதகர்

யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார். மத்தேயு 12:41

மத்தேயு 12:33-50

ஞாயிறு காலை வேளை ஆராதனையில் போதகர் "திரும்பி வருவோரை ஏற்றுக் கொண்டு சந்தோஷப்படுதல்" என்ற தலைப்பில் பிரசங்கம் செய்தார். அது கெட்ட குமாரன் மனந்திரும்பி தந்தையிடம் வந்தபோது அவனை ஏற்றுக் கொண்ட தந்தையின் நல்ல இருயத்தைக் குறித்து விவரித்த பிரசங்கம். தங்கள் தவறுகளை உணர்ந்து வருகிற எவரையும் நாமும் இவ்விதம் ஏற்றுக் கொண்டு சந்தோஷமாகப் பழக வேண்டும் என்று கூறி முடித்தார். ஆராதனை முடிந்து வெளியே வந்ததும். பழைய சபை ஊழியர் ஒருவர் அவரிடம் வந்தார். "ஐயா நான் செய்த தவறுக்கு வருந்துகிறேன். மீண்டும் உங்களோடு பணிபுரிய எனக்கு வாய்ப்புத் தாருங்கள்" என்று கேட்டார். போதகருக்கு முகம் சிவந்தது. அயோக்கியனே, ஆகாதவனே, எந்த முகத்தோடு என்னிடம் வந்தாய், வெளியே போ என்று கோபத்துடன் கத்தினார்.

ஆம், இங்கே கெட்ட குமாரனாகிய சபை ஊழியர் மனந்திரும்பி விட்டார். ஆனால், கெட்ட குமாரனின் தந்தையைக் குறித்து பிரமாதமாகப் பேசிய சபைப் போதகரோ, மனக்கடினத்தை விடவில்லை. ஆம், கெட்ட குமாரர்கள் பலர் ஏதாவது ஒரு தருணத்தில் தங்கள் தவறுகளை உணர்ந்து மனந்திரும்ப இயன்றவர்களாயி ருக்கின்றனர். ஆனால், நல்ல தகப்பன்களாக தங்களை எண்ணுகின்ற பலரோ, மனக்கடினத்தை விட்டு விலகாமலும், மனந்திரும்ப வேண்டிய தேவையை உணராமலும் போகின்றார்கள்.

யோனாவின் பிரசங்கத்தைக் கேட்ட மகா பாவிகளான நினிவே பட்டிணத்தார் மனந்திரும்பினார்கள். ஆனால், அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணின யோனாவோ, எத்தனை முறையோ தேவன் பேசியும் மனதை மாற்ற விரும்பாமல், கடின மனதோடு தொடர்ந்ததால், அவனால் தேவ சத்தத்திற்கு இசைந்து போக முடியவில்லை. ஆயக்காரர்களும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று இயேசு சொன்னார். (மத்தேயு 21:31)

மிக மிக மோசமானவர்களாக எண்ணப்பட்ட சிலர். ஏதோ ஒரு நாளில் கர்த்தரைக் கண்டடைந்து. மிகப்பெரிய மாற்றம் பெறுகின்றார்கள். ஆனால், நீண்டகாலமாக பரிசுத்தத்தைப் போதிக்கின்ற பல போதகர்கள், தங்களிடத்தில் எந்த ஒரு நல்ல மாற்றமுமின்றித் தொடருகின்றார்கள். சிலர், ஒரே ஒரு பிரசங்கத்தால் தொடப்பட்டு பெரிய மாற்றத்தைக் காண்கின்றனர். ஆனால், சிலர் பல்லாண்டுகளாகப் பரிசுத்த போதனைகள் கேட்டும், பாவிகளாகவே வாழ்ந்து முடிக்கின்றனர். நம்மில் தேவைப் படும் மாற்றத்தைக் குறித்து உணர்வடைவோமாக.

சிந்தனைக்கு...

பாவிகள் பரலோக வழியைப் பயன்படுத்தாதவர்கள், பரிசேயர்களோ அந்த வழிகளைக் காண இயலாத குருடர்கள்.

ஏப்ரல்
21
ஜீவ நீரோடை

காரணம் என்ன?

அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டு...
மாற்கு 5:8

மாற்கு 5:1-20

மற்றவர்கள் பேசின தவறான வார்த்தை நம்மைக் கோபப்படுத்துகின்றது. மற்றவர்கள் செய்த ஒரு தவறான செயல் நமக்கு ஆத்திரமூட்டுகின்றது. ஆனால், பெரும்பாலும் நாம் மற்றவர்கள் நமக்கு என்ன செய்கிறார்கள் என்பதைத்தான் பார்க்கின்றோம். மற்றவர்களின் வார்த்தையோ செயலோ நமக்குள் என்ன செய் கின்றது என்பதைத்தான் பார்க்கின்றோம். ஆனால், அவர்கள் ஏன் அப்படிப் பேசி னார்கள்? ஏன் அப்படிச் செய்தார்கள்? ஏன் அப்படி நடந்து கொண்டார்கள்? என் றெல்லாம் கொஞ்சம் பார்ப்போமென்றால், நம்முடைய கோபமும் கசப்பும் பாதி யாவதுபோய் விடும்.

அவர்களை அப்படி நடக்கும்படியாக ஏதாவது தூண்டியிருக்கும். அவர்களின் சரீரத்தில் உள்ள சில நோய்களின் விளைவாக அப்படி நடந்திருக்கலாம். அவர்கள் சில விஷயங்களை தவறாகப் புரிந்து கொள்ள நேரிட்டதால் அப்படி நடந்திருக்கலாம். அவர்களின் மனநிலையில் ஏற்பட்ட சில எதிர்மறையான பாதிப்புகளால் அப்படி நடந்திருக்கலாம். ஆனால், நமக்கு அவ்வளவு பொறுமை கிடையாது. எனவே, ம ற்றவர்கள் செய்ததைப் பார்ப்போமேயன்றி, அதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்தின காரணங்களைப் பார்க்க மாட்டோம்.

அழுகின்ற குழந்தையின் செயல் நமக்கு அசௌகரியத்தைத் தரும். ஆனால், நாம் யோசிக்கிறோம். பசியின் விளைவாயிருக்குமோ? தூக்கம் வருகின்றதோ? வேறு ஏதாவது சரீரப் பிரச்சினை இருக்குமோ என்றெல்லாம் சிந்திக்கின்றோம். எனவே, கோபம் கட்டுப்படுகிறது. லேகியோனின் முரட்டுச் செயல்கள் எல்லோரையும் கோபப் படுத்தியிருக்கும். எனவே அவனை அவர்கள் கயிறுகளினாலும் சங்கிலி களினாலும் கட்டிப்போடப் பார்த்தார்கள். இயேசு அவனைக் கண்ட போது அவனுடைய முரட்டுக் குணத்தை அடக்கவில்லை. அதற்குக் காரணமான அசுத்த ஆவிகளைத் துரத்தினார். அவன் விடுதலை அடைந்தான்.

கர்த்தரை அறிந்தவர்களும், கர்த்தரின் ஐக்கியத்தில் வாழ்கின்றவர்களும் இப்படிப் பேசலாமா இப்படிச் செய்யலாமா, இப்படி நடக்கலாமா என்ற எரிச்சலின் கேள்விகளுக்கு மட்டுமே இடம் தரக்கூடாது. ஏன் அவர்கள் அப்படி நடக்கின்றார்கள் என்ற அக்கறை மிக்க கேள்வியையே கேட்க வேண்டும். எந்தப் பலவீனம் அவர்களை அப்படி நடந்து கொள்ள நிர்பந்திக்கிறது என்று சிந்திக்க இடம் தர வேண் டும். அப்போது கோபத்தின் ஆளுகை போய்விடும். இது கடினமானது. ஆனால், கர்த்தருக்குப் பிரியமானது.

சிந்தனைக்கு...

உன்னுடைய பலத்தைக் குறித்து பெருமைப்படாதே,
பிறருடைய பலவீனத்திற்காகப் பரிதாபப்படு.

ஏப்ரல்
22
ஜீவ நீரோடை

நற்குண ஆசை

ஆவியின் கனி சகல நற்குணத்திலும்... விளங்கும்
எபேசியர் 5:9

எபேசியர் 5:1-21

நற்செயல்மேல் சிலருக்கு நல்ல விருப்பம் இருக்கும். நல்லதைச் செய்து பிறருக்குப் பயன்பட வேண்டும் என்ற ஆசை சிலருக்கு இருக்கும். நல்ல செயல்களைச் செய்து நல்ல பேர் வாங்க வேண்டும் என்ற ஆசை சிலருக்கு இருக்கும். ஆனால், இவ்வித ஆசை தேவனுடைய பிள்ளைகளுக்கும் ஏற்படும். தேவனை அறியாதவர்களுக்கும் ஏற்படும். ஆனால், நற்குணங்களின்மேல் எல்லோருக்கும் ஆசை வராது. நற்செயல்களை விரும்பும் பலருக்கு நல்ல குணங்கள்மேல் எந்த விசேஷ ஆர்வமும் இராது.

நற்குணங்களைக் குறித்து எவ்வளவுதான் போதித்தாலும், அதன்மேல் சிலருக்கு ஆசை வராது. பக்தியாக வாழ்கின்ற ஆசை பலருக்கு இருக்கும். ஆனாலும், அவர்களிடம் நற்சுபாவங்களோடு வாழவேண்டும் என்ற ஆசை இராது. அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தம், மனத்தூய்மை, கபடின்மை போன்றவற்றின் அவசியத்தைப் பிரசங்கித்தால், அநேகர் அதனை ஒரு பக்தி வாழ்க்கைக்கான தேவையாக எண்ணுகின்றார்களேயன்றி, தங்களுக்கு மிகவும் அவசியமானவைகளாக எண்ணி விரும்புவதில்லை.

நற்குணங்களைத்தான் வேதம் நற்கனிகள் என்று சொல்லுகின்றது. இந்த நற்குண ஆசை இல்லாமையின் முக்கியமான காரணம், இருதயம் பரிசுத்தமாக்கப்பட்ட ஆவிக்குரிய அனுபவம் பெறாமையே. உண்மையாக மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட அனுபவம் உடையவர்களிடம், பரிசுத்த ஆவியின் நிறைவு இருக்கும். பரிசுத்த ஆவியின் விளைவாக பரிசுத்தமான ஆசைகள் உருவாகும். பரிசுத்தமாக வாழ வேண்டும் என்ற ஆசை பரிசுத்தாவியினாலேயே ஏற்படுகின்றது. ஒரு மனிதன் சுத்தமாக உடுத்திருப்பானென்றால், அவனுக்குத்தான் தன்னுடைய சுத்தமான உடையில் அழுக்குகள் படிந்து விடாமல், தூய்மையான தோற்றத்தோடு காணப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படும்.

சிலரிடம் ஜெப ஆசை இருக்கும். ஆராதனை ஆசை இருக்கும். ஊழிய ஆசை இருக்கும். பிரசங்க ஆசை இருக்கும். வேத அறிவு ஆசை இருக்கும். ஆனால், நல்ல சுபாவங்களோடு வாழ வேண்டும் என்ற ஆசை இராது. இதுவும் மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவம் பெறாததின் விளைவு. இவர்களுக்குள் பக்தி விரும்பும் இருதயம் இருக்கிறது. ஆனால், பரிசுத்தம் விரும்பும் இருதயம் இல்லை. ஏனென்றால், இருதயத்தில் பரிசுத்த ஆவி செயல்படவில்லை. பரிசுத்தமான சுபாவங்களை விரும்புவதற்குத் தூண்டும் பரிசுத்த ஆவி நம்மிடம் உண்டா என்று பார்ப்போம்.

சிந்தனைக்கு...

நற்செயல்களைச் செய்திட நல்ல ஆசை போதும்,
நல்ல பண்புகளை வெளிப்படுத்த, நல்ல இருதயம் வேண்டும்.

ஏப்ரல்
23
ஜீவ நீரோடை

நகராமல் நின்றால்

நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே... எண்ணாகமம் 11:6

எண்ணாகமம் 11:1-15

எவ்வளவுதான் சுவை மிகுந்த உணவாயினும் . 40 வருடம் ஒரே விதமான உணவு என்றால், அது மிக மிகக் கடினமான காரியம்தான். தேவன் கொடுத்த உணவாயினும் திரும்பத் திரும்ப அதே உணவு என்றால், அது யாருக்கும் திருப்தியைத் தராது. ஆனால், புரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால், அது இஸ்ரவேலர்களுக்கு 40 வருடம் சாப்பிடுவதற்கு என்று கொடுக்கப்பட்ட உணவு அல்ல. அது எகிப்திலிருந்து கானான் போய்ச் சேரும்வரை அந்தப் பயணச் சூழலுக்குப் பொருந்தும் விதமாகக் கொடுக்கப்பட்ட உணவே அது.

எகிப்திலிருந்து கானான் போய்ச் சேர ஒரு சில வாரங்கள் போதும்.அந்தக் குறுகிய கால கட்டத்திற்கான உணவே அது. ஆனால், அவர்களின் கீழ்ப்படியாமையின் விளைவாக 40 வருடங்கள் ஆனது. தேவன் 40 வருடம் சாப்பிட என்று அல்ல. பயண வேளைக்கென தந்த உணவே அது. அதிக பட்சம் 40 நாட்களில் முடிக்க வேண்டிய பயணம், 40 வருடங்கள் தொடர்ந்தது அவர்களின் தவறே.

சிலருடைய வாழ்க்கையில் சில சூழ்நிலைகள், சில நலமான தேவ நோக்கங்களுக்காக அனுமதிக்கப்படுகிறது. அது ஒரு நிலையிலிருந்து அடுத்த ஆவிக் குரிய நிலையை வந்தெட்டும் வரைக்கே. ஆனால், நாம் இஸ்ரவேல் மக்களைப் போல வேகமாக நகராமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தால், அந்தச் சூழ்நிலைகளிலும் மாற்றம் ஏற்படாது. சில சாதாரணமான நிலமைகள், நாம் இன்னும் கர்த்தருக்குள் வளருவதற்கும், நல்ல ஆவிக்குரிய அனுபவங்களை அடைவதற்கும் அவசியமானவையாக இருக்கும். அது பாடங்களைக் கற்றுக்கொண்டு தேர்ச்சி அடைகிறது வரைக்குமே. அது போன்ற இடுக்கமான வாசல் அனுபவங்கள், நாம் ஒரு குறிப்பிட்ட ஆவிக்குரிய அனுபவ முதிர்ச்சியை அடைவது வரைக்கும் அனுமதிக்கப்படுவதே. ஆனால், நாம் வளராமலும், அனுபவங்களைப் பெறாமலும், உரிய வளர்ச்சிகளுக்கு வந்து சேராமலும் போகும் போது, அதுவே தொடர்கதையாகி விடுகிறது.

சிலர் எப்பொழுது சந்தித்தாலும், ஒரே விதமான ஒரு குறிப்பிட்ட தாழ்வு நிலைமையிலேயே இருக்கின்றார்கள். அவர்கள் கர்த்தர் அனுமதித்த சூழ்நிலை கர்த்தர் அனுமதித்த சோதனை என்று கூறி, என்றுமே அடுத்தபடிக்குப் போகவில்லை. அவர்கள் எப்போதுமே இளைப்பாறுதலைக் காணாதவர்களாகவே உள்ளனர். ஏனென்றால், அவர்கள் குறிப்பிட்ட இலக்கை நோக்கி வேகமாக நகராமல், ஒரே விதமான நிலையில் பின்தங்கியிருக்கின்றார்கள்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்கு ஏற்ற மாற்றங்களைப் பெறாதவன்,
கர்த்தரோடிருப்பதாகக் கூறுவதெல்லாம், வெறும் பிரமைதான்.

ஏப்ரல்
24
ஜீவ நீரோடை

கடினமானதல்ல

ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான். ..
ஆதியாகமம் 29:20

ஆதியாகமம் 29:1-28

யாக்கோபு ஏழு ஆண்டுகள் லாபானுக்கு ஆடுகளை மேய்க்கச் சம்மதித்தான். தான் விரும்பிய ராகேலைத் திருமணம் செய்வதற்காக அவ்விதமான ஒரு கடுமையான நிபந்தனைக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டான். ஆயினும், ராகேல்மேல் வைத்த பிரியத்தால் அந்த நீண்ட கால உழைப்பின் காலம், அவனுக்குக் கொஞ்ச காலமாகத் தோன்றியது. ஒருவர்மேல் உள்ள அன்பும், பிரியமும், ஆசையும் கடினமானவற்றை இலகுவாக உணரச் செய்கின்றது, என்பதை இங்கே அறிகின்றோம்.

அது போல, புதிய ஏற்பாட்டின்படி நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்க அழைக்கப்பட்டுள்ளோம். (1 கொரி 1:9) சில பக்திக் காரியங்களைச் செய்வது அல்ல. சில மத நெறி முறைகளைக் கடைப்பிடிப்பது அல்ல. நாம் கர்த்தராகிய இயேசுவோடு ஒரு நல்ல ஐக்கியத்தோடு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. இங்கே பல கடினமான விஷயங்கள் உண்டு. நாம் சரியான சுபாவங்களோடு வாழ வேண்டும். நாம் பிறரோடு நல்ல உறவோடு வாழ வேண்டும். நாம் பிறர் விஷயத்தில் பொறுமை, தாழ்மை, சகித்தல் போன்ற பண்பு நிலைகளோடு வாழ வேண்டும். நாம் சில ஆசைகளுக்கு அடிமையாகாமல் அவற்றை மேலாண்மை செய்ய வேண்டும்.

இவை கடினமானவையே. ஆனால் நாம் கடின உணர்வோடும், அதிகமான அழுத்தத்தை உணர்ந்தும் இவற்றைச் செய்யத் தேவையில்லை. இவற்றை நாம் தேவ ஆவியின் பலத்தாலும், தேவ அன்பாலும், மிக விருப்பத்தோடு நிறைவேற்றலாம். கர்த்தர்மேல் நமக்கு ஏற்படும் அன்பும், அவருடைய ஐக்கியம், நமக்குத் தரும் சந்தோஷமும் கடினமான விஷயங்களை விருப்பத்தோடு செய்வதற்கு நம்மை உற்சாகப்படுத்துகின்றன. ராகேலின்மேல் கொண்ட அன்பு, கடுமையான பாதையை மனரீதியாக எளிமையாக உணர, யாக்கோபை உற்சாகப்படுத்தியது. அது போல, கர்த்தருடைய ஐக்கியத்தில் வாழ்வதைக் குறித்த ஆத்ம தரிசனத்தோடு செயல்படும் போது, கிறிஸ்தவ வாழ்க்கை எளிதாகிறது.

அநேகர் இந்த இந்தக் கட்டளையைப் பின்பற்ற வேண்டும். இந்த இந்த ஒழுங்கைப் பின்பற்ற வேண்டும், என்று எல்லாவற்றையும் ஒரு வேலைக்காரனைப் போல யோசிக்கின்றனர். அப்படி அல்ல. நாம் யாவற்றையும் கர்த்தருடைய ஐக்கியத்தோடு வாழ்வதற்காகவே செய்கின்றோம். கர்த்தருடைய அன்பில் வாழ்வதைக் குறித்த ஒரு தரிசனத்தோடு செயல்பட்டால்தான், கிறிஸ்தவ வாழ்க்கை விரும்பும் விதமான ஒன்றாக விளங்கும்.

சிந்தனைக்கு...

தேவனுடைய ஐக்கியத்தின்மேல் ஆசையில்லாதவன்,
அவருடைய வழிகளில் நடக்கும் ஆற்றல் இல்லாதவனே.

ஏப்ரல்
25
ஜீவ
நீரோடை

முன்பு போல இல்லையே

ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்... 1 பேதுரு 4:8

1 பேதுரு 4:8-19

திருமணமான துவக்க காலங்களில் இருந்தது போல தங்களின் வாழ்க் கைத் துணை இப்போது இல்லையே என்று சிலர் அங்கலாய்ப்பார்கள். அந்த நாட்களில் அவர்களிடம் கண்ட நல்ல பல விஷயங்கள். இப்போது இல்லையே என்று வருந்துவார்கள். ஆனால், வாழ்க்கையில் இது சகஜம்தான். நாம் ஒரு பொருளைப் புதிதாக வாங்கிய போது எப்படி இருந்ததோ, அப்படி இப்போது இல்லாமல் போவது இயற்கையே. திருமண வாழ்க்கையின் துவக்கத்தில் மற்றவருக்குப் பிரியமாக இருக்கும் விதமாகத் தங்களை வைத்துக் கொள்வதில் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பார்கள். நாட்கள் போகப் போக விசேஷக் கவனங்கள் குறைந்து, இயல்பாகச் செயல்பட ஆரம்பிப்பார்கள்.

ஒரு வாகனம் புதிதாக ஷோரூமில் நிற்கும் போது மிகச் சிறப்பாக இருக்கும். ஆனால், அவ்விதம் சிறப்பாகத் தொடர்ந்து அதனைப் பார்ப்பதற்காக ஷோ ரூமிலேயே நிறுத்தி வைக்க முடியாது. வாகனம் சாலையில் ஓட ஓட சிறு சிறு குறைவுகள் ஏற்பட ஆரம்பிக்கும். துவக்கத்திலிருந்த நற்தோற்றம் மாறி சற்று சாதாரணமாகத் தோன்ற ஆரம்பிக்கும். அது போல, குடும்ப வாழ்க்கை என்னும் வாகனம் ஓட ஓட, சில குறைகளும், சில அதிருப்திகளும், சில சலிப்புகளும் ஏற்படவே செய்யும்.

சில நேரங்களில், நல்ல வாகனத்தைச் சரியாகக் கையாளாததின் விளைவாகவும், அது போகப் போக அதிக மோசமாகிவிடுவதுண்டு. அதுபோல அநேகர், மற்றவர் முன்பு போல இப்போது சரியாயில்லை என்று குறை சொல்லுவார்கள். அதே வேளையில், தாங்கள் தங்களுக்குக் கிடைத்த உறவுகளை சரியாகப் பயன்படுத்தாமல் போனதை உணருவதில்லை. நம்முடைய சுபாவங்களும், நடத்தைகளும் சரியாக இல்லாவிட்டால், மற்றவர் நல்லவராயிருந்தும் மோசமானவராக மாறிவிடுவதற்கு வாய்ப்புண்டு. நாம் சரியாக மற்றவரை நடத்தத் தெரியாததின் விளைவாகவும் அவர்கள் தங்கள் பண்புநிலைகளில் மாறலாம்.

நம்முடன் இருக்கும் உறவுகள் நாம் விரும்பியபடியே இருக்கிறதா என்ற பார்வை மட்டும் அல்ல. நாம் தேவ உறவுகளில் சரியாக இருக்கின்றோமா என்றும் பார்க்க வேண்டும். தேவ உறவுகளில் நாம் சரியாக இருக்க கவனமாயிருந்தால், பிறரிடம் காணப்படும் குறைவுகளையும், அதிருப்திக்குரிய காரியங்களையும் ஏற்றுக்கொண்டு வாழப் பழகி விடுவோம். தேவனோடுள்ள ஐக்கியத்தில் நாம் நிலைவரமாயிருந்தால், நம்மிடமுள்ள நற்குணங்களின் பலத்தால் மற்றவர்களின் குறைவுகளை ஏற்க பழகிவிடுவோம்.

சிந்தனைக்கு...

மற்றவர்களை நாம் அன்பாகப் பார்க்கத் தவறும் போது, அவர்கள் நம்மை வெறுப்புடன் பார்ப்பது இயல்பானதே.

பொறாமை பொறுமை

பெலிஸ்தர் அவன்பேரில் பொறாமை கொண்டு....
ஆதியாகமம் 26:14

ஆதியாகமம் 26:12-30

ஈட்டியை எதிர்கொள்ள நாமும் ஈட்டியை ஓங்குவதல்ல ஞானம். ஈட்டி நமக்கெதிராக வந்தால் கேடகம்தான் அதனை எதிர்கொள்ளத் தேவையானது. சிலர் தங்களுக்கு எதிராக வருகின்ற ஈட்டிகளை எதிர்கொள்ள என்ன செய்வதென்று யோசிப்பதில்லை. அதற்குப் பதிலாக, அவர்களைப் போல நாமும் ஈட்டியை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு எதிராகப் பாய்வோம் என்று எண்ணி, தவறு செய்து விடுகின்றனர்.

பிறருடைய பொறாமையும், கோபமும், வெறுப்பும் நமக்கெதிராக வரும் போது, அவர்களைப் போல நாமும் செயல்படுவதால் நன்மை வராது. பொறாமையையும் வெறுப்பையும் எதிர்கொள்ளத் தகுதியான பாதுகாப்பு ஆயுதம் பொறுமையே. பொறாமையோவென்றால் அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார் என்று நீதிமொழிகளில் சாலோமோன் இராஜா கேட்கின்றான். (நீதி 27:4) ஈசாக்குக்கு எதிராக பொறாமையினால் தூண்டப்பட்ட பெலிஸ்தியர்கள் பல தீமையான காரியங்களைச் செய்தனர். அவன் தோண்டிய துரவுகளையெல்லாம் தூர்த்து மண்ணினால் நிரப்பிப் போட்டார்கள். ஆயினும், ஈசாக்கு அந்த தொடர் தாக்குதல்களைச் சாமாளித்து வெற்றி கண்டான்.

எப்படி? பொறுமையினால்தான். அவன் பொறுமையிழந்து போகாமல் ஏற் பட்ட நஷ்டங்களைச் சகித்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் புதிய முயற்சிகளில் ஈடுபட்டான். இறுதியில் பொறாமை தோற்றது. பொறுமை வென்றது. ஆம், பொறாமை என்னும் எதிரிகளின் ஆயுதத்தை எதிர்கொண்டு, தொடர்ந்து வெற்றிப் பயணத்தில் தொடர வைப்பது பொறுமையே. இதே விதமான அணுகுமுறைதான் யோசேப்பிட மும் இருந்தது. சகோதரர்களின் பொறாமை ஈட்டியாக அவனுக்கு எதிராக வந்தபோது, பொறுமை என்னும் கேடகத்தால்தான் அவன் அதனைச் சந்தித்தான்.

பொறாமை என்பது மனிதனுடைய இயற்கைக் குணம். அது எல்லோருக் குள்ளும் இயற்கையாக இருக்கின்றது. ஆனால், பொறுமை என்பது தேவனுடைய கிருபையால் பெற வேண்டியது. பல நேரங்களில் மற்றவர்கள் நடந்து கொள்வது போலவே நாமும் நடந்து கொள்ளத் தூண்டப்படுவோம். ஏனென்றால், பொறாமை இயற்கையாக எல்லோருக்கும் வரும். ஆனால், தேவனுடைய ஐக்கியத்தில் வாழ் வதினாலும், தேவ ஆவியின் ஆளுகையைத் தேடுவதினாலும் பொறுமை நமக்குள் ஆளுகை செய்யும். எனவே, இன்னும் இன்னும் தேவனோடுள்ள தொடர்பு நிலை களில் வளருவதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

பிறருடைய கோபத்தின் அளவை மட்டுமே பாராதே,
உன்னுடைய பொறுமையின் அளவையும் பார்.

ஏப்ரல்
27
ஜீவ
நீரோடை

அன்பு போதனை

உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல...
கலாத்தியர் 5:14

கலாத்தியர் 5:14-20

அன்பைக் குறித்து அதிகமாக போதிக்கும் போதகர் அவர். அன்பு என்ற கருப்பொருளில்தான் அவருடைய பெரும்பாலான பிரசங்கங்கள் இருக்கும். அந்த திருச்சபை மக்கள் அன்பு தொடர்பான போதனைகளை இவரைவிட அதிகமாக யாரிடமும் கேட்டதில்லை. ஆனால், இவருடைய போதனையின்மேல் சபை மக்களுக்குச் சலிப்பு வந்துவிட்டது. சிலர், அவரிடம் போய் நீங்கள் அன்பைக் குறித்து அதிகமாகப் பேசிவிட்டீர்கள். எனவே, வேறு ஏதாவது கருப்பொருளில் பேசுங்கள் என்றனர். போதகருக்கோ அன்பைக் குறித்த போதனைகளை அதிகமாகக் கேட்க விரும்பாத அவர்களைக் குறித்து மிகவும் வருத்தம்.

ஆனால், உண்மை வேறு. இந்த போதகர் அன்பைக் குறித்த அனேகம் பெரிய பெரிய புத்தங்கங்களை வாங்கிப் படித்து பிரசங்கம் செய்வார். ஆனால், அவருடைய வார்த்தைகளிலோ செயல்களிலோ அன்பை மருந்துக்கும் பார்க்க முடியாது. அவர் ஒரு பள்ளிக்கூட ஆசிரியரைப் போல புத்தகங்களைப் படித்துப் படித்து போதனை செய்தார். ஆனால், அவரிடம் அவற்றின்படி செயல்படும் அன்பின் ஆற்றல் இல்லை.

அன்பைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதும், கேட்பதும் சுவாரஸ்யமான காரியம். ஆனால், அன்பை வெளிப்படுத்தி வாழ்வதுதான் கடினமான காரியம். பல விஷயங்களை மனிதன் படித்து, படித்து பயிற்சிகளினால் செய்ய முடியும். ஆனால், அன்பு அப்படியல்ல. அது ஒருவருடைய இருதயத்திலிருந்து தோன்ற வேண்டும். மனிதன் இயற்கையில் பல ஆற்றல்களைப் பெற்றிருந்தாலும் அன்பு என்பதை கர்த்தரிடமிருந்துதான் பெற்றுக் கொள்ள வேண்டும். அன்பு நமக்குள் பொழியப்பட்டால்தான் அதனைப் பிறருக்காக நாம் வெளிப்படுத்த முடியும். அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. தேவ உறவுடன் வாழ்வதற்கு நாம் பழகினால்தான், தேவ ஆவியால் தேவ அன்பு நமக்குள் ஊற்றப்படும். (ரோமர் 5:5)

அன்பை அதிகம் போதிக்க முடியும். அன்பைக் குறித்து அதிகமான தூண்டுதல்களைப் போதனைகளின் வாயிலாகப் பெற முடியும். ஆயினும், நாம் அன்புள்ளவர்களாக வாழ்ந்திட, கிறிஸ்துவின் ஐக்கியத்தின் மூலம் நமக்குள் தேவ அன்பு ஊற்றப்பட வேண்டும். அன்பு என்பது சில நல்வார்த்தைகளைப் பேசுவதும், சில நற்செயல்களைச் செய்வதும் அல்ல. அன்பு என்பது சகிப்பது, பொறுப்பது, தாங்குவது, ஏற்றுக்கொள்வது, பதிலுக்குப் பதில் செய்யாதிருப்பது என்பது போன்ற விஷயங்களில் வெளிப்பட வேண்டியதாகும்.

சிந்தனைக்கு...

உன் வார்த்தைகளில் அன்பு நிறைந்திருக்கட்டும்,
உன் வாழ்க்கையில் அது பிரதிபலிக்கட்டும்.

ஏப்ரல்
28
ஜீவ நீரோடை

உறவுகள் தேவைப்படும்

அவர்கள் ஒருவரை விட்டுப் ஒருவர், பிரிந்தார்கள்...
ஆதியாகமம் 13:11

ஆதியாகமம் 14:11-24

அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்த இருவருக்கிடையில் ஏதோ மனக்கசப்பு ஏற்பட்டது. ஒருவர் இன்னொருவரைக் கடுமையான வார்த்தைகளில் திட்டினார். உன்னுடைய உறவோ, உன்னுடைய உதவியோ எனக்குத் தேவையில்லை. இனி என்னிடம் பேசாதே என்றார். மற்றவரோ, பொறுமையாயிருந்தார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த இவருடைய நண்பர், அவன் உன்னுடைய உறவு வேண்டாம் என்றான். நீயும் அவ்விதம் திருப்பிச் சொல்ல வேண்டியதுதானே என்றார். அதற்கு அவர், இனி அவனுடைய உறவு எனக்குத் தேவைப்படாது என்பது எனக்கு உறுதியாகத் தெரியாது. எதிர்காலத்தில் அது தேவைப்படலாம். இன்று வேண்டாம் என்று கூறிவிட்டு, நாளைக்கு வேண்டும் என்று சொல்லுவது நல்லதல்ல என்றார்.

ஆம், மனிதன் ஆத்திர உணர்வு அடையும்போதும், மற்றவரின் உறவும் ஐக்கியமும் இனி என்றுமே தனக்குத் தேவையில்லை என்று சிந்தித்து விடுகிறான். ஆனால், அது உண்மையல்ல. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையும் அதனால் ஏற்படுகின்ற மனநிலையும், நம்மை அவ்விதம் சிந்திக்க வைக்கும். ஆனால், சூழ்நிலை மாறும் போது மனநிலையும் மாறிவிடும். கோபம் கரைந்த பிறகு மற்றவர் நமக்கு அந்த அளவிற்குத் தேவையற்றவராக இருக்கமாட்டார்.

நாம் ஒரு சிலருடைய உறவோ உதவியோ தேவையில்லை என்று சொல்லுவது சில உண்மைகளின் அடிப்படையில் அல்ல. அது தற்காலிக உணர்ச்சி வசப்பட்ட மனநிலையின் அடிப்படையில். எனவே மற்றவர்களைத் தேவையில்லை என கூறுவதற்கு அவசரப்படக்கூடாது. யோசேப்பின் சகோதரர்கள், யோசேப்பு இனி தங்களுக்குத் தேவையில்லை என்ற உணர்வில் அவனை விற்றுப்போட்டார்கள். ஆனால், பின்னாட்களில் யோசேப்பு அவர்களுக்கு மிகவும் தேவையானவனாக விளங்கினான்.

சில தற்காலிகக் கோபங்கள், கசப்புகள், மனவருத்தங்கள், கருத்து வேறுபாடுகள் இன்னொருவரை நமக்குத் தேவையற்றவரைப் போல காண்பிக்கும். ஆனால், சில காலம் சென்ற பின் சூழ்நிலை மாறும். அப்போது அவருடைய உறவு நமக்கு மிகுந்த பயனுள்ளதாகத் தோன்றும். பவுலும் பர்ணபாவும் இணைந்து கர்த்தருக்கு ஊழியம் செய்தவர்கள். மாற்கு என்ற யோவான் விஷயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தனர். ஆயினும், அவர்கள் ஒருவருக்கொருவர் தேவையற்றவர்களாகி விடவில்லை. பின்னாட்களில் ஊழியங்களில் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்தனர்.

சிந்தனைக்கு...

உறவுகள் திருப்தியைத் தராவிட்டாலும்,
அவை தேவையற்றவை ஆகிவிடாது.

ஏப்ரல்
29
ஜீவ நீரோடை

சமுகம் தேவை

என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்...
யாத்திராகமம் 33:14

யாத்திராகமம் 33:8-17

ஒரு மனிதன் மாடியிலிருந்து விழுந்து தலையில் மிகுந்த உட்காயங்களை அடைந்தான். சிலர் அந்த மனிதனை ஒரு அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அந்த மனிதனுக்குத் தேவையான உணவு, பழங்கள், தண்ணீர் போன்றவற்றை அந்த மனிதனுடைய படுக்கையின் பக்கத்தில் வைத்துச் சென்று விட்டனர். ஆனால், அந்த மனிதனுக்கு ஏற்பட்ட உடல் பாதிப்பால் அவை எதையும் எடுத்துப் பயன்படுத்த அவனால் இயலவில்லை. அவனுக்குத் தேவையானதை எடுத்துக் கொடுக்கக் கரிசனையான ஆள்துணை அங்கே யாருமில்லை.

எல்லாவற்றைவிட நமக்கு எந்த நேரத்தில் எது தேவையோ, அதனைக் கரிசனையாக நமக்குத் தந்து உதவுகின்ற ஒரு நபர் தேவை. ஒரு பிரசன்னம் தேவை. யாரோ ஒருவருடைய சமுகம் தேவை. ஆனால், இந்த உலகத்தில் எல்லாச் சூழ்நிலைகளிலும் நமக்கருகிலிருந்து தேவையானதைச் செய்யும் ஒரு நபர் கிடைப்பது கடினம். திடீரென்று பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, அவருடைய மனைவி அவருக்கு அருகிலிருந்து, எல்லாம் அக்கறையுடன் செய்தார். ஆயினும், அவரோ மனைவியிடம் மிக மிக அதிருப்தியை அதிகமாக காட்டினார். ஏனென்றால், மனைவி எல்லாவற்றையும் செய்தாலும், அவருடைய வேதனை வித்தியாசமானது. அதற்கு அவர் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆம், வாழ்க்கையில் நமக்கு உண்மையில் எது தேவையோ அதனை எல்லோராலும் தரமுடியாது. அன்பானவர்களாலும் தர முடியாது. தர முடியாது. சில நேரங்களில் நம்மிடம் பணம், பொருள், மனித உறவுகள் எல்லாம் இருக்கும். ஆயினும், நம்முடைய மனதின் ஆழத்தில் நம்முடைய தேவையை அவற்றால் சந்திக்க இயலாது. அங்கே தேவை அதற்குரிய ஒருவர். அதைத்தான் கர்த்தர் நமக்குத் தருகிறார். ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் தேவன் மோசேயிடம் வல்லமையைத் தருகிறேன், வரங்களைத் தருகிறேன் என்று சொல்லவில்லை. தம்முடைய சமுகத்தையே தருகிறேன் என்றார்.

தேவ சமுகம் மட்டுமே அந்தந்தச் சூழ்நிலைக்கு நம்முடைய மனதிற்கு எது தேவையோ அதனைத் தர முடியும். தேவன் மட்டுமே நம்முடைய மனதின் தேவையை உள்ளபடி புரிந்து கொள்ள இயன்றவர். அநேகர் தேவனிடத்திலிருந்து உதவிகளை பெறுவதையே ஆவிக்குரிய வாழ்க்கை என்று நினைக்கின்றனர். ஆனால், உண்மையில் கர்த்தருடைய சமுகத்தை நம்முடைய வாழ்வில் காண ஆசைப் படுவதே உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை

சிந்தனைக்கு...

ஆயிரம் பேருடைய உறவுகள் நமக்கிருந்தாலும்,
ஆண்டவருடைய உறவில்லாத வாழ்வு, தனிமை நிறைந்ததே.

ஏப்ரல்
30
ஜீவ நீரோடை

தேவன் தேவையில்லையா?

நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? யோபு 2:9

யோபு 2:1-13

தேவ பக்தர் ஒருவருக்கு பல கஷ்டங்களும் இன்னல்களும் இழப்புகளும் ஏற்பட்டன. மீண்டும் மீண்டும் வாழ்க்கையில் அவர் பல பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. நீங்கள் இவ்வளவு நம்புகின்ற தேவன் உங்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்? அவரை ஏன் இன்னும் நீங்கள் பின் தொடருகின்றீர்கள்? என்று ஒருவர் அவரிடம் கேட்டார். அதற்கு அவர் கர்த்தர் எனக்குத் தேவையில்லாத ஒருவராக இருப்பதாக இதுவரை நான் உணரவில்லை. ஒவ்வொரு நாளும் அவர் ஏதோ ஒரு விதத்தில் எனக்கு மிகவும் தேவைப்படுகின்ற ஒருவராகவே இருக்கின்றார். எனவே, அவரைப் பாடுகளின் வேளையிலும் பின்தொடராமல் இருக்க இயலாது என்றார்.

யோபுவின் மனைவி அவனுடைய விவரிக்க இயலாத பாடுகளைக் கண்டதும் இனி எதற்கு கடவுள். இனி எதற்குப் பக்தி என்ற ரீதியில் பேசினாள். ஆயினும், யோபு தேவனை இனி தேவையற்ற ஒருவராகப் பார்க்கவில்லை. தன்னுடைய மனதில் பாரங்களையும், கேள்விகளையும், கொதிப்புகளையும், விரக்திகளையும் அவரிடமே அவன் கொட்டித் தீர்க்க முடிந்தது. ஒரு காலகட்டத்தில் நான் என் வாழ்க்கையை அசைத்துக் கொண்டிருந்த பல பிரச்சினைகளுக்காகக் கர்த்தரிடம் இடைவிடாமல் தீர்வு தேடினேன். நான் கேட்டபடி தேவன் அந்தக் கால கட்டத்தில் எதையும் தரவில்லை. ஆனாலும், நான் அவரை வேண்டாம் என்று கூற இயலவில்லை.

அது பயத்தினால் அல்ல. பக்தியினால் அல்ல. நான் கேட்டவைகளைத் தராத வேளையிலும், கர்த்தர் இனி எதற்கு என்று கூற முடியாத அளவிற்கு அவர் இன்னும் தேவைப்பட்டதை உணர்ந்தேன். பாடுகளின் பாதையிலே சமாதானத் திற்காக, நம்பிக்கைக்காக, ஆறுதலுக்காக, தைரியத்திற்காக, சூழ்நிலைகளைச் சந்திக்கும் ஆற்றலுக்காக அவரையே என்னால் தேட முடிந்தது. அவற்றிற்காக அவர் எனக்குத் தேவைப்பட்டார். அவைகளை அவரிடமிருந்து பெற வேண்டிய அவசியம் இருந்ததால் ,அவரைத் தேவையற்றவராக எண்ணி என்னால் விலக முடியவில்லை.

ஆம், தேவனை அறிந்தவர்கள் ஆசித்த யாவையும் அடைய முடியாத வேளையிலும், அவரைத் தேவையற்றவராகப் பார்க்க முடியாது. அவர் அனுதின வாழ்க்கையில் தேவைப்பட்டுக் கொண்டேயிருப்பதை அவர்கள் உணருவார்கள். சிலர் குறிப்பிட்ட சில நன்மை கிடைக்காவிட்டால் கர்த்தரும் வேண்டாம், பக்தியும் வேண்டாம் என்று போய்விடுவார்கள். அதனுடைய அர்த்தம் என்ன? அவர்கள் அனுதின வாழ்வில் அவரால் வருகின்ற நம்பிக்கை, தைரியம், சமாதானம், மனத்தெளிவு ஆகியவற்றைப் பெற்றுப் பழகவில்லை.

சிந்தனைக்கு...

தேவ உறவு தேவையில்லை என்று கூற, ஒருபோதும் நமக்குச் சரியான காரணம் கிடைக்காது.

மே
1
ஜீவ நீரோடை

கடைப்பிடிக்க முடிகிறதா?

தேவனால் பிறந்தபடியால் பாவஞ் செய்யமாட்டான்...
1 யோவான் 3:9

1 யோவான் 3:1-11

நீங்கள் கேட்ட உபதேசத்தின்படி வாழ்கின்றீர்களா? நீங்கள் விரும்பிக் கேட்ட போதனையின்படி நடக்கின்றீர்களா? இவ்விதமாகக் கேள்விகள் கேட்கப்பட்டால், நாம் போதனைகளைக் கேட்கின்றபடி அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற உணர்வைப் பெறுகின்றோம். நான் இதுபோன்ற போதனைகளைச் செய்யும் போது நீங்கள் கேட்டதின்படி கடைப்பிடிக்கின்றீர்களா? என்று அதிகமாகக் கேட்பதில்லை. ஆனால், நீங்கள் கேட்கின்ற இந்த போதனையின்படி உங்களால் வாழ முடிகின்றதா? என்று கேட்பேன்.

ஏனென்றால் கேட்டதை கடைப்பிடிக்கின்றீர்களா என்று கேட்கும்போது அவ்விதம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் உணர்த்தப்படுகிறது. ஆனால், அது மோசே கொடுத்த நியாயப்பிரமாணம் போல ஆகிவிடுகிறது.கட்டளைகளையும் போதனைகளையும் கடைப்பிடிக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற உணர்வு ஏற்படுகின்றது. ஆனால், உண்மை இதுதான். நாம் கேட்கும் போதனைகள் வழியாகச் சொல்லப்படுகின்றவை நம்முடைய வாழ்க்கையில் நடந்து கொண்டிருக்க வேண்டும். அதாவது நம்மால் அப்படி வாழ முடிகிறது.

நீங்கள் கவலைப்படாதிருங்கள் என்பது வேறு. நீங்கள் கவலைப்படாதிருக்க முடிகிறதா என்பது வேறு. நீங்கள் சமாதானமாயிருங்கள் என்பது வேறு. நீங்கள் சமாதானமாயிருக்க முடிகிறதா என்பது வேறு. நீங்கள் பரிசுத்தமாயிருங்கள் என்பது வேறு. நீங்கள் பரிசுத்தமாயிருக்க முடிகிறதா என்பது வேறு. அதாவது கிறிஸ்தவ வாழ்க்கை என்பது போதனை கேட்டுக் கேட்டு அப்படியே கடைப்பிடி என்பதல்ல. கிறிஸ்துவின் ஐக்கியத்தைத் தேடி நாம் வாழ வேண்டும். விசுவாசத்தால் தேவ உறவுடன் வாழ்வதைத் தேடி வாழ வேண்டும். தேவ ஆவி நம்மில் செயல்படுவதை விசுவாசித்து வாழ வேண்டும். கர்த்தரோடு பேசி, கர்த்தரோடு பகிர்ந்து கொண்டு கர்த்தருடைய ஐக்கியத்தை ருசித்து வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை.

இவ்விதம் வாழும் போது நாம் கவலையின்றி இருப்போம். நாம் பரிசுத்தமாயிருப்போம். நாம் நம்பிக்கையாயிருப்போம். நாம் கர்த்தரின் வழியில் நடப்போம். நாம் கர்த்தருக்குள் சமாதானமாயிருப்போம். இவை எதுவும் நாம் நம்முடைய தீர்மானத்தால் சாதித்தவை அல்ல. தேவ பிரசன்னத்தோடு வாழ்வதற்குக் கவனமாயிருந்ததின் விளைவாக இவைகள் நம்மிடம் ஏற்படுகின்றது. ஆம், எப்படி வாழவேண்டும் என்று நாம் கேட்கும் போதனைகள், கர்த்தரோடு ஐக்கியமாக வாழ்வதின் விளைவுகளாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்ல சுபாவங்கள், நல்ல கீழ்ப்படிதலின் விளைவு அல்ல.
அவை நல்ல தேவ ஐக்கியத்தின் விளைவுகள்.

மே
2
ஜீவ நீரோடை

துன்பம் தவிர்த்தல்

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்... ஏசாயா 55:6

ஏசாயா 55:1-13

சிலர் தங்களின் சரீரத்தில் ஏதாவது நோய் அறிகுறி தெரிந்ததும், உடனடியாக மருத்துவம் பார்ப்பார்கள். உடல் பலவீனத்தை உணர்ந்ததும் அது தொடர்பான மருத்துவச் சோதனை செய்து சிகிட்சை பார்க்கத் தவறமாட்டார்கள். இது நல்ல பழக்கம்தான். அதே வேளையில், அநேகர் நோய் வந்ததும் மருத்துவம் பார்க்கக் கவனமாயிருப்பார்கள். ஆனால், நோய் வராமல் தடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பின்பற்றி வாழமாட்டார்கள். நோய் வந்துவிட்டால் சிகிட்சைக்கு முந்துவதோடு, நோய் வராமல் காப்பதற்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

ஒருவர் தன்னுடைய மகனிடம் இப்படிச் சொன்னாராம். உனக்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டால் உடனேயே என்னைத் தொடர்பு கொள். ஆனால், உனக்கு ஏதாகிலும் தீங்காக நேரிடாதபடி எப்பொழுதும் கடவுளோடு தொடர்பு வைத்துக்கொள். வருமுன் காப்போம் என்ற கொள்கை மிகவும் தேவையானது. சிலர் ஏதாவது நெருக்கடி வந்ததும் கர்த்தரைத் தேட கவனமாயிருக்கின்றார்கள். ஏதாவது ஒரு கஷ்டம் என்றால், உடனேயே கர்த்தர்மேல் விசுவாசம் வைத்துச் ஜெபிக்கவும், உபவாசிக்கவும் தீவிரம் அடைகின்றார்கள். ஜெபக் கூட்டங்களுக்குச் செல்லவும், தேவ ஊழியர்களின் பிரார்த்தனைகளை நாடவும் கவனம் செலுத்துகின்றனர்.

ஆனால், நாம் தேவனுடன் எப்பொழுதும் ஒரு நல்ல ஐக்கியத்துடன் வாழ்வதற்குக் கவனமாயிருந்தால், சில துன்பங்களுக்கு வாசல் அடைக்கப்பட்டுவிடும். தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கும், தேவ சமுகத்தின் ஆளுகையோடு வாழ்வதற்கும், நாம் விழிப்பாயிருந்தால் பேரளவு துன்பங்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போகும். ஏனென்றால், பல துன்பங்களின் மூல காரணம் நம்முடைய சுபாவங்களும், நம்முடைய மனநிலைகளும், நம்முடைய சிறப்பற்ற செயல்களுமே. நாம் தேவ ஐக்கியத்தோடு வாழ்வதற்கு அதிக கவனம் செலுத்தும் போது, நம்முடைய மனம் தேவ ஆளுகைக்குள் இருக்கும்.

அப்போது நாம் சரியாக யோசிப்போம், சரியாக முடிவெடுப்போம். சரியான வழிகளைத் தெரிந்து கொள்வோம். சரியான தேவ நடத்துதலோடு வாழ்வோம். அதனுடைய விளைவாக பல தேவையற்ற கஷ்டங்களும் நஷ்டங்களும் தவிர்க்கப்படும். நாம் தேவனுடன் நல்ல உறவோடு வாழ்ந்து அவரைத் தேடும்போது, நம்முடைய மனம் அதனால் சமாதானம் நிறைந்ததாகவும் கவலைகளற்றதாகவும் விளங்கும். மனதில் சமாதானமும் நம்பிக்கையும் தங்கியிருக்கும் போது, ஏராளமான மனக் கஷ்டத்திற்கேதுவான சூழ்நிலைகள் தவிர்க்கப்படும்.

சிந்தனைக்கு...

அமைதியற்ற மனம் தீமைகளால் துரத்தப்படுகின்றது,
அமைதியான மனமோ தீமைகளைத் துரத்தி விடுகின்றது.

மே
3
ஜீவ நீரோடை

ஆறப்போடுங்கள்

பேசுகிறதற்குப் பொறுமையாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும்... யாக்கோபு 1:19

யாக்கோபு 1:16-27

நீங்கள் கோபமூட்டப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் ஆத்திரமடையத்தக்க தான ஒரு செயலைக் காண்கின்றீர்கள். உங்களுக்கு உக்கிர கோபம் வருகிறது. எதையாவது செய்துவிட வேண்டும் என்ற ஆத்திரம் ஏற்படுகிறது. இப்பொழுது ஒன்று செய்யுங்கள். உங்கள் கோபத்தை இப்போது காட்டவேண்டாம். உங்களின் ஆத்திர மான பதிலுக்குப் பதில் செயலை, இப்பொழுது செய்ய வேண்டாம். சற்று அமைதி காத்து கோபத்தை வெளிப்படுத்த சில மணி நேரம் காத்திருங்கள். சில மணிநேரம் பொறுத்து இப்போது கோபத்தை வெளிப்படுத்துங்கள். என்ன நடக்கும்? நீங்கள் கோபமூட்டப்பட்ட நேரத்தில் இருந்த ஆத்திரமும், அவசரமும், ஆக்ரோஷமும் இப்போது பேரளவில்குறைந்திருக்கும்.

ஆம், ஆறப்போடுதல் என்பது அதிகமான சேதங்களைக் குறைக்கும். ஒரு வார்த்தை அல்லது செயல் நம்மை மிகுதியாகக் கோபப்படுத்தி தவறாகச் செயல் படத் தூண்டியது. நம்மிடம் பொறுமை தாழ்மை போதிய அளவில் இல்லாமையே காரணம். ஒரு தவ++றான வார்த்தையால் மூர்க்கமடைந்து மிகமிகத் தவறான ஒரு வார்த்தையைப் பேசிவிடுகிறோம். ஒரு தவறான செயலால் ஆத்திரமடைந்து மிக மிகத் தவறான ஒரு செயலை பதிலுக்குப் பதிலாகச் செய்துவிடுகிறோம். பின்னர், இப்படி பதில் பேசி பிரச்சினையை மிகவும் கொடியதாக்கிவிட்டோமே என்று வருத்தப் படுகிறோம். இப்படி அவசரப்பட்டு பதிலுக்குப் பதில் செய்து மிகப்பெரிய தீங்கை வரவழைத்துவிட்டோமே என்று துக்கமடைகிறோம்.

பதிலுக்குப் பதில் பேசுவதில் அவசரம். பதிலுக்குப் பதில் கோபமூட்டுவதில் அவசரம். பதிலுக்குப் பதில் காயப்படுத்துவதில் அவசரம். இந்த அவசரம் மற்ற வர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் மிகப்பெரிய நஷ்டத்தையும் கஷ்டத்தையும் வரவழைக்கின்றது. ஆனால், கோபம் வந்தால் கட்டுப்படுத்த முடியவில்லையே. ஆத்திரமூட்டப்பட்டால் அடுத்து ஏதாவது செய்யாமல் இருக்க முடியவில்லையே.

தேவ சமாதானத்தோடு நாம் வாழ வேண்டும். தேவ சந்தோஷத்தோடு நாம் வாழ வேண்டும். தேவ சிந்தனைகளோடு நாம் வாழ வேண்டும். தேவ ஆளுகை யோடு வாழ வேண்டும். தேவ சமுகத்தைத் தேடி வாழ வேண்டும். தேவ ஆவி யினால் ஆளப்படுவதை நாம் விரும்ப வேண்டும். தேவ அன்பைத் தேடி நமக்குள் அனுபவிக்க வேண்டும். தேவ ஐக்கியத்தில் பழகி தேவனோடு பேசிப் பழகி வாழவேண்டும். அப்போது நமக்குள் பொறுமையின் ஆவியும், அவசரப்படாமல் அமைதியுடன் எதையும் சந்திக்கும் ஆவியும் நம்மிடம் செயல்படும்.

சிந்தனைக்கு...

கோபத்தைக் கட்டுப்படுத்த விரும்பாத மனிதனிடம், துன்பம் பூரண சுதந்திரத்தோடு செயல்படும்

மே
4
ஜீவ நீரோடை

பயப்படாமலிருக்க

தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்... சங்கீதம் 23:4

சங்கீதம் 23:1-6

வியாதியினால் பாதிக்கப்பட்டு சிகிட்சை பெற்று வந்த ஒருவருக்குத் தினமும் டாக்டர் பயப்படாதிருங்கள், கவலைப்படாதிருங்கள், தைரியமாயிருங்கள் என்றும் கூறுவார். ஆனால், அவருடைய வியாதிக்கு டாக்டர் நீண்ட காலமாக மருத்துவம் பார்த்தும் அவர் குணமடையவில்லை. எனவே, அந்த வியாதியாளர் தினமும் பயத்தோடும் கவலையோடும் காணப்படுவார். ஒரு நாள் அவர் சோர்ந்து போய் விரக்தியோடு டாக்டரிடம் பேசினார். அதற்கு டாக்டர் நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டார். உங்களால் என்னுடைய வியாதியைக் குணமாக்க முடியவில்லை. எனவே, என்னால் பயப்படாமலிருக்க முடியவில்லை என்றார்.

தேவ உறவு இல்லாத மனிதனுக்கு கோபப்படாதே, பொறாமைப்படாதே, இச்சியாதே, தவறாகப் பேசாதே, வெறுப்படையாதே என்பது போன்ற கட்டளைகள் பின்பற்றுவதற்கு இயலாதவை. அதுபோல, தேவ சமுகத்தை உணர்ந்து வாழ இயலாத மனிதனுக்கு பயப்படாதே கவலைப்படாதே என்பதுபோன்ற ஆலோசனைகள் பின்பற்றக் கடினமானவை. பயப்படாதே என்று கூறும் போது அந்த மனிதன் தன்னுடைய சுய முயற்சியால் பயப்படாமலிருக்க வேண்டியுள்ளது. அது கடினமானது. ஏனென்றால், அச்சுறுத்துகின்ற சில காரியங்கள் வலிமையாயிருக்கும் போது பயப்படாமலிருப்பது எளிதான விஷயமல்ல.

பயப்படாதே என்ற ஆலோசனை அல்ல. நம்மை பயப்படாமலிருக்கச் செய்கின்ற ஒன்று தேவை. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்பிற்குப் பயப்படேன் என்றான் தாவீது. ஏன் பயப்படமாட்டேன் என்று தாவீது சொன்னான்? அதற்குக் காரணம் உண்டு. தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் என்றான் அவன். தேவ ஐக்கியம் அவனுக்கு அறியப்பட்டதாயிருந்தது. தேவ பிரசன்னம் அவனோடிருந்தது. அந்த தேவ பிரசன்னம் அவனைப் பயப்படாமலிருக்கச் செய்தது. ஆம், தேவ பிரசன்னம் நம்மை பயப்படாமலிருக்கச் செய்யும் ஆற்றல் உள்ளது.

ஆம், நாம் எவ்வளவு தேவ பக்தியோடிருந்தாலும் பயப்படாமலிருக்கின்ற செயலைச் செய்வது கடினம். நாம் தேவ சமுகத்தை அடையாளங்கண்டு உணருகின்ற அளவிற்கு, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை தேவ உறவில் இணைந்ததாக இருக்க வேண்டும். அப்போது கர்த்தர் நம்மோடிருக்கின்ற அனுபவமாகிய தேவ சமுக அனுபவம் நாம் பயப்படாமலிருக்கும்படி நமக்குள் கிரியை செய்யும்.

சிந்தனைக்கு...

பயம் வெகுதூரத்திலிருக்கும் கஷ்டத்தை இப்பொழுதே விரைந்து வரச்செய்துவிடும்.

மே 5 ஜீவ நீரோடை

தேவ பிரசன்னம் எப்படி?

ஆபிரகாமே, நீ பயப்படாதே, நான் உனக்கு.....
ஆதியாகமம் 15:1

ஆதியாகமம் 15:1-21

தேவ பிரசன்னம் நம்மோடிருந்தால் பயம் நம்மை மேற்கொள்ளாது. கவலை நம்மை மேற்கொள்ளாது. பாவம் நம்மை மேற்கொள்ளாது. ஆனால், தேவ பிரசன்னம் எப்படி நம்மிடம் வரும்? தேவ பிரசன்னத்தை நம்மிடம் கொண்டு வருவது எப்படி? துதித்து, ஆராதித்து, பாடி, பரவசப்பட்டு, அதிக சத்தமெழுப்பி நாம் நமக்குள் தேவ பிரசன்னத்தை உணர விரும்பலாம். ஆனால், இவற்றால் நாம் உண்மையான தேவ பிரசன்னத்தை வரவழைத்துவிட முடியாது. தேவ பிரசன்னம் என்பது சில வழிபாட்டுச் செயல்களைச் செய்வதாலோ, நாம் விரும்பி அழைப்பதாலோ வந்துவிடுவதில்லை

தேவ பிரசன்னம் அல்லது தேவ சமுகம் என்பது தேவனுடைய திட்டத்துடன் நம்மை இணைத்து கொள்ளுகின்ற ஒரு செயலின் பிரதிவிளைவு ஆகும். ஆராதனை வேளை பிரசன்னம் அல்ல. ஜெப வேளை பிரசன்னம் அல்ல. ஆரவாரங்கள் எழுப்பி உணரும் பிரசன்னம் அல்ல. ஆவிக்குரிய பிரசன்னம் நமக்குத் தேவை. அதாவது உணர்ச்சிகளைச் சாராத உண்மையான ஆனால் உறுதியான தேவ பிரசன்னம் தேவை.

ஆபிரகாம் தேவ அழைப்பை ஏற்று தேவனுடைய திட்டத்திற்குள் இணைந்தான். மோசே தேவ திட்டம் நிறைவேற தன் வாழ்வை அர்ப்பணித்தான். யோசுவா தேவ நோக்கம் நிறைவேற்றுவதற்கு தன்னை ஒப்புக் கொடுத்திருந்தான். எனவே, தேவன் அவர்களோடிருந்தார். (ஆதி 15:1, யாத் 3:12, யோசுவா 1:9) அவர்கள் எதிர்மாறான சூழ்நிலைகளைச் சந்தித்த வேளையிலும் தேவன் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் தேவ பிரசன்னத்தில் இருப்பதை வெளிப்படுத்தினார். ஆம், தேவ திட்டம் ஏற்றுச் செயல்படும் ஒரு மனிதனுக்குத் தரப்படுவதே தேவ சமுகம்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவதிட்டம், தேவ ஊழியம் என்பவை என்ன? ஒரு பெரிய ஊழிய நடவடிக்கையில் நம்மை இணைப்பதுதான் தேவ திட்டம் என்று கூற இயலாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாக இந்தப் பூமியில் வாழ்ந்து காட்ட வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளுக்கேற்றபடி விசுவாசித்துச் செயல்பட வேண்டும். இது அடிப்படை தேவ திட்டம். நாம் மறுபடியும் பிறத்தல் அனுபவம் பெற வேண்டும். (யோவான் 3:5) நாம் தேவ ஆவியைப் பெற வேண்டும். அப்போது கர்த்தர் நம்மோடிருப்பார். கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடிருந்து நாம் பயப்படாதிருக்க செய்யும்.

சிந்தனைக்கு...

ஆராதனைகளால் தேவனை வரவழைக்க முடியாது,
தேவ சித்தம் செய்ய விரும்புகிறவனிடம் அவர் வராதிருக்கவும் முடியாது.

மே

6

ஜீவ நீரோடை

பிரயோஜனமற்ற புத்தகம்

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து....
எசேக்கியேல் 36:26

எசேக்கியேல் 36:26-38

ஒருவர் தன்னுடைய நண்பர் ஒருவருக்கு ஒரு சிறந்த ஆவிக்குரிய நூலைப் பரிசாக அனுப்பி வைத்தார். அதனைப் படித்த அவர் இது மிக மிகச் சிறந்த நூல். இதைப் பரிசாகத் தந்தமைக்கு நன்றி என்று கடிதம் அனுப்பினார். ஆனால், சில மாதத்திற்குப் பின்பு அதே நூலை அவர் நண்பருக்கு அவர் திருப்பி அனுப்பி விட்டார். அதற்கான காரணத்தையும் குறிப்பிட்டிருந்தார். இது மிகச் சிறப்பான வாழ்க்கை முறையைக் கூறுகின்ற அருமையான புத்தகம். ஆனால் எனக்கு இது பிரயோஜனமற்றது. ஏனென்றால், அந்தப் புத்தகம் கூறுகின்ற நல்ல கருத்துக்களை என்னால் பின்பற்ற முடியவில்லை என்று எழுதியிருந்தார்.

கர்த்தருடைய போதனைகளை எல்லோரும் விரும்புவதில்லை. நல்ல சத்தியங்களைக் கேட்க எல்லோரும் ஆர்வம் காட்டுவதில்லை. அவை சிறப்பில் லாதவை என்பதால்அல்ல.அவர்களைப் பொறுத்தவரை அவை பிரயோஜ மனற்றவை. ஏனென்றால், அவர்கள் கேட்க நேரிடும் நல்ல போதனைகளின்படி வாழ்கின்ற ஆற்றல் அவர்களுக்கு இல்லை. வேதாகமத்தில் நியாயப்பிர மாணத்தைக் குறித்த விஷயமும் இப்படித்தான் சொல்லப்பட்டுள்ளது. ஒரு விதத்தில் மோசேயின் மூலம் தரப்பட்ட நியாப்பிரமாணம் பிரயோஜனமற்றது.

நியாயப்பிரமாணம் பிரயோஜனமற்றது என்றால் அது சிறப்பற்றது என்று அர்த்தமல்ல. நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான். (ரோமர் 7:12) ஆனால் பரிசுத்தமான நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்தி பலனடைய இயலாதபடி மனிதன் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். எனவே, நியாயப்பிரமாணத்தைப் பாராட்ட இயன்றாலும், அதனை மனிதன் பயன்படுத்த இயலாமல் இருக்கின்றான். அவ்விதமே நல்ல போதனைகளையும், உபதேசங்களையும், அறிவுரைகளையும் சிலர் பாராட்டக்கூடும். ஆயினும், அதனைப்பயன்படுத்த இயலாதபடி அவர்கள் பாவத்தினால் பலவீனமாயிருக்கின்றார்கள்.

ஆம், முதலாவது தேவனுடைய நல்ல போதனைகளைப் பின்பற்ற இயன்ற ஓர் பரிசுத்தமான இருதயம் நமக்கு வேண்டும். ஆகையால், கர்த்தர் அவருடைய போதனைகளைக் கேட்டுப் பின்பற்ற நம்மை முதலாவது அழைக்காமல், நாம் ஒரு நல்ல இருதயத்தைப் பெற்றுக் கொள்ளவே அழைக்கின்றார். முதலாவது நமக் கொரு நல்ல இருதயம் வேண்டும். அந்த இருதயம் தேவ ஆவியின் பலத்தைக் கொண்டதாக இருப்பதால், தேவனுடைய நல்ல சத்திய வழிகாட்டுதலைக் கேட்டுப் பின்பற்ற இயன்றதாக அது இருக்கும்.

சிந்தனைக்கு...

நல்ல போதனைகள் ஒரு வெளிச்-சம்,
ஆனால், நல்ல மனதுடையவர்கள் மட்டுமே அதில் நடக்க விரும்புவார்கள்.

மே
7
ஜீவ நீரோடை

வாழ்க்கை அழகு

உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று... ஆமோஸ் 5:23

ஆமோஸ் 5:12-27

கிறிஸ்தவப் பாடகர் ஒருவரின் மிக அழகான பாடல் அநேகரைக் கவர்ந்தது. இந்தப் பாடலைக் கேட்டு ரசித்த ஒருவர் இன்னொருவரிடம் இந்தப் பாடலை நீ கேட்டுவிட்டாயா, அது எப்படியிருக்கிறது என்று கேட்டார். அதற்கு அவர் அந்தப் பாடகரின் பாடலை நான் கேட்க விரும்புவதில்லை என்றார். ஏன்? என்று அவர் திருப்பிக் கேட்டார். மிக அருவருப்பாக வாழ்ந்து கொண்டு, மிக இனிமையாகப் பக்திப் பாடல் பாடும் ஒருவருடைய பாடலை என்னால் ரசிக்க இயலவில்லை என்றார். நீ ஏன் அவருடைய வாழ்க்கையைப் பார்க்கின்றாய் அவருடைய இனிமையான பாடலை ரசிக்க வேண்டியதுதானே என்றார். அதற்கு அவர், அவருடைய இனிமை யான பாடலைக் கேட்க வரும்போது அவருடைய மோசமான வாழ்க்கை முறை கண்முன் வருகின்றதே என்றார்.

அழுக்கான ஒரு தட்டில் அருமையான பலகாரங்களை வைத்துக் கொடுத்தால், அந்த தட்டை கவனிக்காமல் பலகாரங்களை ருசிக்க முடியாது. ஆம், ஒருவரின் திறமைகள், ஆற்றல்கள், வரங்கள் வல்லமை எல்லாவற்றையும் விட ,அவருடைய வாழ்க்கை சாட்சி மிகவும் முக்கியமானது. சிறந்த வாழ்க்கை முறை என்ற சாட்சிப் பின்னணி இல்லாதபோது பிற எல்லா நல்ல விஷயங்களும் விரும்பி ஏற்க இயலாத வைகளாக மாறிவிடுகின்றன.

சிலர் நல்ல போதகர்கள்தான். சிலர் நல்ல எழுத்தாளர்கள்தான். சிலர் நல்ல நிர்வாகத் திறன் மிக்கவர்கள்தான். சிலர் நல்ல ஊழியத்திறமை உடையவர்கள்தான். ஆனால், அவர்கள் நல்ல வாழ்க்கைச் சாட்சி உடையவர்கள் அல்ல. அவர்களிடம் நற்குண அழகு இல்லை. அவர்களிடம் நல்ல நடத்தைகள் இல்லை. அவர்களிடம் உயர்ந்த நோக்கங்கள் இல்லை. அவர்களிடம் முன்மாதிரி அனுபவம் இல்லை. எனவே, அவர்களின் திறமைகளும் ஆற்றல்களும் அழுக்கான தட்டில் வைத்துத் தரப்படும் பலகாரங்கள் போல உள்ளன.

தேவனுடைய பணியில் சம்பந்தப்படும் எவரும், முதலாவது தங்களின் வாழ்க்கையை மற்றவர்களுக்கு இடறலற்றதாகவும், முன்மாதிரியாகவும் வைக்கக் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுது சிறிய சிறிய திறமைகளும், சிறிய சிறிய தாலந்துகளும் மற்றவர்களுக்கு அதிகம் அதிகம் பயனுள்ளதாக மாறும். தீத்துவுக்கு பல ஆவிக்குரிய ஆலோசனைகளை வழங்கிய பவுல், முதலாவது அவன் தன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக நிறுத்துவதற்குக் கூறினான். (தீத்து 2:7)

சிந்தனைக்கு...

பரிசுத்தத்தை மதிக்காதவனுடைய திறமைகளுக்காக, அவனை மதிப்பது ஒரு மதிக்கத்தக்க செயல் அல்ல.

மே

8

ஜீவ நீரோடை

தாயின் அன்பு

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக... எபேசியர் 6:3

எபேசியர் 6:1-9

ஒரு மனிதன் மாடியிலிருந்து விழுந்து தலையில் மிகுந்த உட்காயங்களை அடைந்தான். சிலர் அந்த மனிதனை ஒரு அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அந்த மனிதனுக்குத் தேவையான உணவு, பழங்கள், தண்ணீர் போன்றவற்றை அந்த மனிதனுடைய படுக்கையின் பக்கத்தில் வைத்துச் சென்று விட்டனர். ஆனால், அந்த மனிதனுக்கு ஏற்பட்ட உடல் பாதிப்பால் அவை எதையும் எடுத்துப் பயன்படுத்த அவனால் இயலவில்லை. அவனுக்குத் தேவையானதை எடுத்துக் கொடுக்கக் கரிசனையான ஆள்துணை அங்கே யாருமில்லை.

எல்லாவற்றைவிட நமக்கு எந்த நேரத்தில் எது தேவையோ, அதனைக் கரிசனையாக நமக்குத் தந்து உதவுகின்ற ஒரு நபர் தேவை. ஒரு பிரசன்னம் தேவை. யாரோ ஒருவருடைய சமுகம் தேவை. ஆனால், இந்த உலகத்தில் எல்லாச் சூழ்நிலைகளிலும் நமக்கருகிலிருந்து தேவையானதைச் செய்யும் ஒரு நபர் கிடைப்பது கடினம். திடீரென்று பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, அவருடைய மனைவி அவருக்கு அருகிலிருந்து, எல்லாம் அக்கறையுடன் செய்தார். ஆயினும், அவரோ மனைவியிடம் மிக மிக அதிருப்தியை அதிகமாக காட்டினார். ஏனென்றால், மனைவி எல்லாவற்றையும் செய்தாலும், அவருடைய வேதனை வித்தியாசமானது. அதற்கு அவர் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆம், வாழ்க்கையில் நமக்கு உண்மையில் எது தேவையோ அதனை எல்லோராலும் தரமுடியாது. அன்பானவர்களாலும் தர முடியாது. தர முடியாது. சில நேரங்களில் நம்மிடம் பணம், பொருள், மனித உறவுகள் எல்லாம் இருக்கும். ஆயினும், நம்முடைய மனதின் ஆழத்தில் நம்முடைய தேவையை அவற்றால் சந்திக்க இயலாது. அங்கே தேவை அதற்குரிய ஒருவர். அதைத்தான் கர்த்தர் நமக்குத் தருகிறார். ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் தேவன் மோசேயிடம் வல்லமையைத் தருகிறேன், வரங்களைத் தருகிறேன் என்று சொல்லவில்லை. தம்முடைய சமுகத்தையே தருகிறேன் என்றார்.

தேவ சமுகம் மட்டுமே அந்தந்தச் சூழ்நிலைக்கு நம்முடைய மனதிற்கு எது தேவையோ அதனைத் தர முடியும். தேவன் மட்டுமே நம்முடைய மனதின் தேவையை உள்ளபடி புரிந்து கொள்ள இயன்றவர். அநேகர் தேவனிடத்திலிருந்து உதவிகளை பெறுவதையே ஆவிக்குரிய வாழ்க்கை என்று நினைக்கின்றனர். ஆனால், உண்மையில் கர்த்தருடைய சமுகத்தை நம்முடைய வாழ்வில் காண ஆசைப் படுவதே உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை

சிந்தனைக்கு...

தேவ உறவை மதித்து வாழ்கின்றவன்,
மனித உறவுகளை அசட்டை செய்து வாழமாட்டான்.

மே

9

ஜீவ நீரோடை

வாழ்ந்து காட்டு

மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே...
ரோமர் 2:21

ரோமர் 2:16-29

கணவன் மனைவி இருவர் இணைந்து குடும்ப நல ஆலோசனை நிறுவனம் ஒன்றை நடத்தினார்கள். குடும்பத்தில் பிரச்சினைகளைக் கண்ட அநேகருக்கு சிறப்பாக ஆலோசனை கொடுத்து, நிறுவனம் வெற்றிகரமாக வளர்ந்தது. ஆனால், அவர்கள் இருவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு விவாகரத்து வரை சென்று விட்டனர். பிரச்சினை என்னவென்றால், இரண்டு பேராலும் சிறப்பாகக் குடும்ப நல ஆலோசனைகள் பிறருக்கு தர இயலும். ஆனால், அவர்களுக்கு குடும்பம் நடத்தத் தெரியாது.

எப்படி வாழ வேண்டும் என்று சொல்வது எளிது? எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்ந்து காட்டுவது கடினம். குறிப்பிட்ட ஒருவர் எந்தக் காரில் பயணம் செய்தாலும் ஓட்டுனருக்குக் சிறப்பாக கார் ஓட்டுவது சம்பந்தமாக ஏராளம் ஆலோசனைகளைக் கொடுப்பார். ஆனால், இவருக்கு கார் ஓட்ட சுத்தமாகத் தெரியாது. கிறிஸ்தவ ஊழியர்கள் அநேகர் பரிசுத்தமாக வாழ்ந்திட மிகச் சிறப்பாகப் போதனை தருவார்கள். ஆனால், இவர்களுக்கோ பரிசுத்தமாக வாழ இயலாது. கிறிஸ்தவ விசுவாசிகள் பலருக்கு பிறருக்கு இயேசுவினால் வருகின்ற இரட்சிப்பைக் குறித்து சிறப்பாகப் பேசத் தெரியும். ஆனால், இவர்களுக்கு இரட்சிப்பின் அனுபவத்தோடு நடக்கத் தெரியாது.

ஆனால், நாம் நடக்க இயலாமல் போன பாதையில் பிறரை நடக்க வைக்கப் பிரயாசப்படுவது அர்த்தமற்றது. நாம் செய்ய முடியாமல் போகும் காரியத்தில் பிறரைச் செய்யத் தூண்டுவது தேவ ஒழுங்கு அல்ல. கர்த்தராகிய இயேசு வார்த்தையிலும் செய்கையிலும் வல்லவராயிருந்தார். அவர் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்ந்து கொண்டே, மற்றவர்களுக்கு வாழவேண்டிய விதங்களைக் குறித்துப் போதித்தார். பிரசங்கிக்கிற நானே ஆகாதவனாய்ப் போய்விடாதபடி என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன் என்றான் அப்போஸ்தலனாகிய பவுல். (1 கொரி 9:27)

எனவே, மற்றவர்கள் எப்படி வாழவேண்டும் என்று நாம் சொல்லும் முன்பு, நாம் எப்படி வாழ்கின்றோம் என்பதை அவர்கள் காணச் செய்ய வேண்டும். நாம் வாழ்கின்ற வாழ்க்கை நாம் சொல்லுவதற்கு முரணாக இருக்கும் போது, நாம் சொல்லுகின்றவைகள் மதிப்பிற்குரியதாக இராது. எனவே,தேவ உறவினாலும் தேவ கிருபையினாலும் நாம் எப்படி வாழ்வது தேவனுடைய பார்வையில் மேன்மை யாயிருக்குமோ, அப்படி வாழ்வதற்குப் பிரதான கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

நீ நடக்காத நல்ல பாதையில் பிறரை நடத்த விரும்பாதே,
பிறர் நடக்கும் நல்ல பாதையில் நீ நடக்கத் தயங்காதே.

மே
10
ஜீவ
நீரோடை

அவர்களுக்கு அது பிரச்சினை இல்லை

என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது...
சங்கீதம் 51:3

சங்கீதம் 51:1-19

தேவ பக்தியுடன் வாழ்ந்து கொண்டிருந்த வாலிபன் ஒருவன், தன்னுடைய நண்பர்கள் கொடுத்த அழுத்தத்தால், சில நிமிடங்கள் ஆபாசப் படம் ஒன்றைப் பார்த்தான். பார்த்து முடித்த பிறகு, அது அவனுடைய மனதை அதிகமாக உறுத்தியது. தான் ஒரு பெரிய பாவத்தில் விழுந்த உணர்வைப் பெற்று மிகுந்த மனக்கஷ்டத் துடன் இருந்தான். அவனுடன் படம் பார்த்த நண்பர்களுக்கோ எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் சாதாரணமாக இருந்தார்கள். ஏனென்றால், அது அவர்களுடைய தினசரிப் பழக்கம். அவர்களுக்குப் பாவம் செய்ததால், குத்துதல் உறுத்துதல் எதுவும் கிடையாது.

ஆம், பன்றியால் சாக்கடைப் பகுதிகளில் சாதாரணமாக நடக்க முடியும். ஆனால், ஆட்டுக்குட்டிக்கு அது அசௌகரியமாயிருக்கும். அது போன்ற அசுத்தப் பகுதிகளில் அதனால் சாதாரணமாக இருக்க முடியாது. அழுக்குச் சட்டை அணிந்தவனுக்கு சட்டையில் எவ்வளவு அழுக்குப்பட்டாலும் வருத்தம் வராது. சுத்தமான உடை அணிந்திருக்கிறவனின் உடையில் சிறு அழுக்குப் பட்டாலும், அவனுக்கு அது வருத்தத்தை ஏற்படுத்தும்.

தேவனுக்குப் பிரியமாக வாழ விரும்புகின்றவர்கள் பாவத்திற்கு எச்சரிக்கை யாயிருக்க வேண்டும். தேவனை அறியாத பாவிகள் போல அவர்கள் பாவம் செய்தால், குற்ற மனசாட்சியின் நெருக்குதலை அவர்கள் அதிகமாக உணர நேரிடும். ஏனென்றால், இரட்சிப்பின் அனுபவம் பெற்றவர்களின் இருதயம் வெண்ணிற ஆடை போன்றது. அங்கே சிறு அழுக்குகளும் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பாவம் செய்த இராஜாக்கள் பலர் உண்டு. அவர்கள் பெரிய பெரிய தவறுகளைச் செய்த போதிலும், தங்களின் தவறு களைக் குறித்து அதிகமாக மனம் வருந்தவில்லை. ஆனால், தாவீதோ பத்சேபாள் விஷயத்தில் பாவம் செய்த போது மனங்கசந்து அழுதான். அநேக நாட்கள் அவன் எலும்புகள் உடைக்கப்பட்டது போன்ற அனுபவத்தில் இருந்தான்.

உடன் இருக்கும் உறவினர்களோ, கூட வரும் நண்பர்களோ செய்கின்றார்கள் என்று நாமும் அவ்விதம் செய்தால், அவர்கள் உணராத வருத்தத்தை நாம் உணர நேரிடும். அவர்கள் உணராத குற்ற உணர்வை நாம் உணர நேரிடும். எனவே மற்றவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக நாமும் அவர்களைப் போல செயல்பட்டு விட க்கூடாது. மற்றவர்கள் நடக்கின்றார்களே என்று நாமும் அவ்விதம் நடக்கக்கூடாது.

சிந்தனைக்கு...

கெட்டவன் தவறு செய்தால், அது அவனைக் குத்தாது,
நல்லவன் தவறு செய்தால், அது அவனைக் குத்தாமல் விடாது.

மே

11

ஜீவ நீரோடை

எளிய இருதயம்

சிறுமையானவர்களோடே மனத்தாழ்மையாயிருப்பது நலம்... நீதிமொழிகள் 16:19

நீதிமொழிகள் 16:17-33

ஒருவர் நல்ல வசதியானவர். ஆனால், தாழ்மையாகவும், எளிமையாகவும், இருக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர். எனவே, மிக மிக எளிமையாக உடை அணிந்து, மிக மிகச் சாதாரணமாகத் தோற்றமளிப்பார். அதனுடைய விளைவாக சிலர் அவருடைய உண்மையான நிலைமையைத் தெரியாமல் அவரைச் சாதாரணமாக நடத்திவிடுவார்கள். இவரை மதிக்க வேண்டிய தேவையை அவர்கள் உணராமல் உரிய மரியாதை வழங்காவிட்டால், அதை ஏற்றுக் கொள்ளமாட்டார். சாதாரணமாக வந்தால் மதிக்க மாட்டீர்களோ, பந்தாவாக வந்தால்தான் மதிப்பீர்களோ என்று சண்டை போடுவார். தாழ்மையானவர்களை மதிக்காவிட்டால் விரோதிகளைப் போல பார்ப்பார்.

மனதில் மாற்றம் இல்லாமல் வெளித்தோற்றங்களை மட்டும் தாழ்மையாக்கினால் இதுதான் பிரச்சினை. தாழ்மையான தோற்றம் அல்ல. தாழ்மையான இருதயம் வேண்டும். மனதில் தாழ்மை இருந்தால், அங்கே யாருடைய விசேஷகனமும் மரியாதையும் முக்கிய விஷயமாயிராது. மற்றவர்கள் நமக்கு உரிய மரியாதையைத் தரவில்லையே என்ற மனக்கொதிப்பு அங்கு இல்லை. ஆவியில் எளிமையுள்ளவர்களை பாக்கியவான்கள் என்றார் இயேசு. (மத்தேயு 5:3) தாழ்மை என்பது மனதின் அடித்தளத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

மிக மிகத் தாழ்மையாக உடையணிந்து கிறிஸ்தவ நிகழ்ச்சி ஒன்றிற்குச் சென்ற ஒரு பாஸ்டர், மேடையில் விதவிதமாக நன்றாக உடையணிந்து வந்தவர்களையே, கோப உணர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தாராம். மற்ற பாஸ்டர்கள் இவரைப் போல எளிமையாக உடை அணிந்து வராமல், கச்சிதமாக கலர் உடைகள் அணிந்து வந்ததை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது ஒரு வித்தியாசமான பெருமையின் வெளிப்பாடாகும். தாழ்மையும் எளிமையும் இருதயத்தில் இருந்தால், மற்றவர்கள் நம்மைப் போல இல்லையே என்று பாராமல், நாம் தேவனுக்குப் பிரியமாயிருக்கின்றோம் என்பதில் மட்டும் திருப்தியடைவோம்.

நாம் ஏழையாக வேடமிட்டால் ஏழையைப் போல நடத்தப்படுவது இயற்கை. அப்படி நடத்தப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இயேசு கிறிஸ்து தேவனுக்குச் சமமாயிருந்தும், தம்மைத்தாமே அவர் தாழ்த்தி அவர் மனுஷ சாயலானார். மனுஷ சாயலாக வந்த அவர், தேவனாக தாம் பார்க்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர் தாம் ஏற்றுக் கொண்ட தாழ்மையின் சாயலுக்கேற்ப தாழ்மையுடன் நடந்துகொண்டார்.

சிந்தனைக்கு...

பெருமையாளனின் பெருமை கவலைக்குரியது
தாழ்மை தோற்றமுடையோரின் பெருமை கண்டனத்திற்குரியது.

மே

12

ஜீவ நீரோடை

எது சரி?

அதற்கு அவர்கள், இதோ ,போஜனப்பிரியனும்...
மத்தேயு 11:19

மத்தேயு 11:7-29

அந்த தேவ ஊழியர் எளிமையான உடைகளை அணிந்து கொண்டு ஊழியம் செய்தார். அவரைக் கவனித்த சிலர், எல்லாம் ஊழியத்திற்காகப் போடுகின்ற எளிமையின் வேஷம் என்றனர்.

அந்த தேவ ஊழியர் ஒரு சாதாரணமான வாடகை வீட்டில் குடியிருந்து ஊழியம் செய்தார். அதைப் பார்த்த சிலர், ஒரு நல்ல சொந்த வீட்டில் வாழ்வதற்கான விசுவாசம் இவருக்கு இல்லையே என்றனர்.

அந்த தேவ ஊழியர் சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டி அங்கு குடியேறினார். அதைப் பார்த்த சிலர், உழைத்து சம்பாதித்த பணமா, எல்லாம் காணிக்கையும் தசம பாகமும்தானே என்றனர்

அந்த தேவ ஊழியர் அமைதியாக நிதானமாகப் பிரசங்கம் செய்தார். அதைப் பார்த்த சிலர், என்ன ஊழியர் இவர், ஒரு வல்லமையுமில்லை அபிஷேகமும் இல்லை என்றனர்.

அந்த தேவ ஊழியர் நாளடைவில் மிகச் சத்தமாக துடிப்பாகப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அதைப் பார்த்த சிலர், இவரும் தேவையில்லாத காட்டுக் கூச்சல் போடும் ஊழியத்தை ஆரம்பித்து விட்டார் என்றனர்.

அந்த தேவ ஊழியர், வீடு வீடாய்ச் சென்று விசுவாசிகளைச் சந்தித்து ஜெபம் செய்தார், அதைப் பார்த்த சிலர், இது என்ன? வீடு வீடாய்ப் போய் காணிக்கை கலெக்ஷன் என்றனர்.

அந்த தேவ ஊழியர், வீடு சந்திப்பை நிறுத்தி விட்டு, சபையில் மட்டும் விசுவாசிகளுக்காகச் ஜெபித்தார். அதைப் பார்த்த சிலர், சொஞ்சமும் அக்கறையில்லாத ஊழியர். சொகுசாகச் சாப்பிட்டுச் சாப்பிட்டு வீட்டிலேயே உட்கார்ந்து கொள்கிறார் என்றனர்.

இங்கே தவறானவர்கள் அந்த சிலர் மட்டுமல்ல. இந்த ஊழியரும் தவறானவரே. எது சரி என்று அறிந்து அதனுடைய அடிப்படையில் செயல்படாமல், மற்றவர்களின் நினைவுகளுக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டார். தேவனுடைய பார்வையில் எது சரியோ, அதனை யார் என்ன சொன்னாலும் விட்டுவிடாமல் செய்கிறவனே உண்மை ஊழியன்.

சிந்தனைக்கு...

தேவனுடைய வார்த்தைக்கேற்ப மறுரூபமாகிக் கொண்டேயிரு, மனிதர்களைப் பிரியப்படுத்த மாறிக்கொண்டேயிருக்கத் தேவையில்லை.

மே

13

ஜீவ நீரோடை

எங்கும் நல்லவர்

அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்...
யோவான் 5:35

யோவான் 5:30-47

திருச்சபை ஒன்றில் பணியாற்றிய குருவானவருக்கு ஆதரவான ஒரு கூட்டமும் இருந்தது. அவருக்கு எதிரான ஒரு கூட்டமும் இருந்தது. ஒரு பிரிவினர் அவரை நல்ல ஆயர் என்பார்கள். இன்னொரு பிரிவினர் இவரெல்லாம் ஒரு ஆயரா என்பார்கள். ஏனென்றால், இவர் தன்னைக் கௌரவிக்கின்றவர்களை கௌரவிப்பார். தன்னை விரும்புகின்றவர்களை விரும்புவார். தன்னைப் பாராட்டுகிறவர்களை பாராட்டுவார். யார் அவரை மதிக்கவில்லையோ அவர்களை மட்டம் தட்டுவார். யார் அவரை விரும்பவில்லையோ அவர்களை வெறுத்துத் தள்ளிவிடுவார். யார் பாராட்டவில்லையோ அவர்களை வசை பாடுவார். ஆனால், அந்த சபையில் உள்ள செஸ்டன் என்ற ஆலய பணியாளர் வித்தியாசமானவர். யார் மதிக்காவிட்டாலும் அவர் மதிப்பார். யார் வெறுத்தாலும் அவர் விரும்புவார். எல்லோரிடமும் பணிவாகச் சிரித்த முகத்துடன் நடந்து கொள்வார்.

பல திருச்சபைகளிலே போதனை செய்யும் போதகர்களைவிட, பணிவிடை செய்யும் ஆலயப்பணியாளர்கள் மெச்சத்தக்கவர்கள். அவர்கள் எந்த மரியாதை யையும் விசேஷப் பாராட்டையும் எதிர்பாராமல், தங்கள் கடமையைப் பணிவுடன் செய்வார்கள். எனவே, சில சபைகளில் விசுவாசிகளுக்கு, போதகரைவிட ஆலயப் பணியாளரே ஒரு விதத்தில் நல்ல முன்மாதிரி.

மற்றவர்கள் நம்மை எப்படி நடத்துகின்றார்கள் என்ற அடிப்படையில் அல்ல. நாம் கர்த்தருக்கு முன்பாக எப்படி நடக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே செயல்பட வேண்டும். மற்றவர்கள் நமக்கு நல்லவர்கள் என்பதை அல்ல. நாம் எல்லோருக்கு முன்பும் நல்லவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒவ்வொரு வருடைய மனநிலைக்கேற்றபடி நாம் நம்முடைய மனநிலையை மாற்றுவது அல்ல. தேவனுக்கு முன்பாக நாம் நல்மனசாட்சியோடு நடந்து கொள்ள வேண்டும். நாம் நல்லவர்களுக்கு நல்லவர்களாகவும், தீயவர்களுக்குத் தீயவர்களாகவும் இருந்தால், நாம் உண்மையில் நல்லவர்கள் அல்ல என்பதே உண்மை.

கர்த்தருடைய பிள்ளைகள் என்றால், அவர்கள் மற்றவர்களுக்காகத் தங் களின் அடையாளங்களை மாற்றிக் கொண்டிருக்கமாட்டார்கள். விளக்கு இருளின் நடுவிலும் வெளிச்சத்தைத்தான் தரும். வெளிச்சத்தின் நடுவிலும் வெளிச்சத்தையே காண்பிக்கும். நாம் எந்தச் சூழ்நிலையிலும் தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்துடன் காணப்படுவதிலேயே உறுதியாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்கேற்ற பண்புடையவர்களை மதிக்கத் தெரியாதவர்கள் மதிப்பிற்குரியவர்கள் அல்ல.

மே
14
ஜீவ நீரோடை

எளிய விசுவாசம்

அதிலே அவனுக்குப் பழக்கமில்லாததினால்...
1 சாமுவேல் 17:39

1 சாமுவேல் 17:31-47

சவுல் இராஜாவிடம் உடலை எதிரியிடமிருந்து காப்பாற்றிக் கொள்கின்ற நல்ல கவச உடைகள் இருந்தது. அந்தப் பாதுகாப்பு உடைகள் தாவீதுக்கு சௌகரியமாக இருக்கவில்லை. அவை அவனுக்குப் பழக்கமில்லை. எனவே, அவற்றைத் திருப்பிக் கொடுத்து விட்டு சாதாரணமான ஒரு விதத்தில் அவன் கோலியாத்தை எதிர்க்கச் சென்றான். அந்த எளிய விதமான முயற்சியில் அவன் பெரியதொரு வெற்றியைக் கண்டான்.

சிலரிடம் சிறந்த இறையியல் கல்வி அறிவு இருக்கின்றது. சிலரிடம் பல மத தத்துவங்களைக் கரைத்துக் குடித்த அனுபவம் இருக்கிறது. சிலரிடம் தத்துவங்களும் பேச்சாற்றலும் பல மொழி பேசும் திறனும் இருக்கிறது. ஆயினும், அவர்களில் பலரிடம் தேவ உறவு இல்லை. அவர்களிடம் பாவ எதிர்ப்பு ஆற்றல் இல்லை. அவர்களிடம் பரிசுத்த வாழ்க்கை முறை இல்லை. அவர்களிடம் நல்ல மனம் இல்லை. அதே வேளையில் சிலரிடத்தில் சிறந்த வேதாகம அறிவு இல்லை. வேதாகம வரலாற்று ஞானம் அவர்களிடம் இல்லை. பல்வேறு மொழிகளில் வேதாகமத்தை வாசிக்கும் பழக்கம் இல்லை. ஆனால், அவர்களிடம் தேவ ஐக்கியம் உள்ளது. தேவனை அறிகின்ற அறிவு இருக்கிறது. கர்த்தருக்கேற்ற வாழ்க்கை முறை உள்ளது. பலர் நடுவில் சாட்சியாக வாழ்கின்ற அனுபவம் உள்ளது.

சிறந்த வேதாகம அறிவு நல்லது. பல மதங்களைக் குறித்த அறிவு நல்லது. சிறந்த பேச்சாற்றல் நல்லது. சிறந்த நிர்வாகத்திறமையும் சாதிக்கும் திறனும் நல்லது. ஆயினும், தேவனுக்கேற்ற ஒரு மனமே மிக முக்கியமானது. கர்த்தரை நமக்குள் அறிந்த அறிவே மிக முக்கியமனாது. தேவ வழிகளை அறிந்து நடக்கும் வாஞ்சையே மிகவும் முக்கியமானது. தேவனோடு பேசிப் பழகி வாழும் அனுபவமே மிக முக்கிமானது. தேவனால் மாற்றம் பெற்ற வாழ்க்கைக்குச் சாட்சியாக நிற்பதே மிகவும் நல்லது. ஒரு எளிய விசுவாசத்தோடு கர்த்தரையே சார்ந்து கொண்டு வாழ்வதே மிகவும் முக்கியமானது.

சவுலிடம் மிகச் சிறந்த போர்க் கவச உடைகள் இருந்தும், அவற்றை உபயோகித்து கோலியாத்தை எதிர்க்க அவனால் இயலவில்லை. தாவீதிடம் சிறு கற்களே இருந்த போதும் அவனால் கோலியத்தை வீழ்த்த முடிந்தது. ஏனென்றால், அவன் கர்த்தரைச் சார்ந்து செயல்படப் பழகிக் கொண்டவன். அவன் கர்த்தர் தன்னோடிருக்கும் போது எந்த எதிர்மறைச் சூழ்நிலைகளையும் சந்திக்க அவர் கிருபை தருவார் என்ற விசுவாசத்தோடு அவனால் செயல்பட முடிந்தது.

சிந்தனைக்கு...

அறிவு இல்லாததால் கெடுகிறவர்களைவிட,
பண்புகள் இல்லாததால் கெடுகிறவர்களே அநேகர்.

மே
15
ஜீவ நீரோடை

தியான நேர அமைதி

இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக... யோசுவா 1:8

யோசுவா 1:1-18

தேவ பாத நேசன் ஒரு தியான மனிதன். காலையில் ஜெபம் செய்து, வேதம் வாசித்து, தியானிக்கின்றவர். ஜெபித்து வேதம் வாசித்து வரும் வேளையில் அவருக்குள் ஒரு பெரிய அமைதி இருப்பதை அவர் உணருவார். அந்த விதமான ஒரு அமைதியான மனநிலையை அவர் ஜெப வேளைகளில் பெறுவதால் காலை நேர ஜெபங்களையும், வேத வாசிப்புகளையும், தியானங்களையும் ஒரு போதும் இழக்க விரும்பமாட்டார். ஆனாலும், அவருக்கு ஒரு கேள்வி. ஜெப நேரங்களில் இவ்வளவு அமைதியான மனநிலையைப் பெறுகின்ற தன்னால், மற்ற நேரங்களில் அமைதியான மனநிலையோடு செயல்பட முடியவில்லையே ஏன்?

பொதுவாக நம்முடைய மனதை நல்ல விஷயங்களில் ஈடுபடுத்தி, நல்ல சிந்தனைகளுக்குள் கொண்டு செல்லும் போது, அதனால் மனம் ஒரு விதமான அமைதியைக் காண்பது இயற்கையானது. ஆனால், அந்த அமைதி தேவனால் வந்தது என்று கூற இயலாது. பிற மதங்களில் பலர் யோகா, மந்திரம் ஓதுதல், நாம சங்கீர்த்தனம் செய்தல், மனதை ஒருமுகப்படுத்தி அமைதியாயிருத்தல் போன்ற வழிகளில் சமாதானமான ஒரு மனநிலையைப் பெறுவதுண்டு. ஆனால், அந்த சமாதானம் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் எல்லோரோடும் சமாதானமாக வாழ்ந்திட உதவி செய்யாது. தியான நேரங்களுக்கு அப்பால் அமைதியுடன் வாழ்ந்திட அவை உதவுவதில்லை.

கிறிஸ்தவ தியான நேரம் என்பது சற்று நேரம் ஒரு அமைதியான மன நிலையைப் பெறுவதற்கு அல்ல. நாம் கர்த்தரை நமக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்தக் கர்த்தரோடு நாம் இருப்பதையும், அவர் நம்மோடிருப்பதையும் தொடர்ந்து நாம் தேட வேண்டும். தேவ சமுக வேளைகளில் நாம் பெறுகின்ற சமாதானமும், சந்தோஷமும், பக்தியுணர்வும் வாழ்வின் சூழ்நிலைகளுக்கு வந்து பயன் படாவிட்டால் அதனால் பயனில்லை.

வெறும் பக்தி விருப்பத்தை வைத்துக் கொண்டு, தியான நேர அமைதியைத் தான் பெற முடியும். ஆனால், வாழ்க்கைப் பகுதியில் தொடர்ந்து நாம் அமைதியையும், நம்பிக்கையையும், தெளிவையும் பெற வேண்டுமானால், நாம் கர்த்தர் நம்மோடிருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஜெப நேரங்களுக்கு அப்பாலும், தியான நேரங்களுக்கு அப்பாலும், கர்த்தருடைய பிரசன்ன உணர்வோடு வாழ்வதற்கு, அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ பாதத்தில் அமர்ந்து அமைதியைப் பெற்றவன்,
தேவ பாதையில் நடந்து அதைப் பிறர் அறியச் செய்வான்.

மே
16
ஜீவ நீரோடை

போலி மன உறுத்தல்

சவுல் யோனத்தானுடைய சொல்லைக் கேட்டு...
1 சாமுவேல் 19:6

1 சாமுவேல் 19:1-18

அவர் ஒரு கிறிஸ்தவ விசுவாசி. ஆயினும், தன்னுடைய மனைவியை மிகவும் மோசமாக நடத்தும் பழக்கத்தை விடாதவர். அதனுடைய விளைவாக குடும்பத்தில் அமைதி இல்லை. சில நேரம் அவர் உள்ளத்தை உறுத்துகின்ற விதமாகப் பிரசங்கம் கேட்கும் போது, தன்னுடைய தவறை உணருவார். கண்ணீரோடு தன்னுடைய தவறுகளை அறிக்கையிடுவார். பாஸ்டரிடம் போய், பாஸ்டர், கர்த்தர் என்னை நன்றாய் உணர்த்தினார். இனி நான் முன்புபோல இருக்கமாட்டேன் என்பார். ஆனால், அந்த மனநிலை பத்து நாள் தொடருவதே கடினம். மறுபடியும் மனைவியை மிகவும் மோசமாக நடத்தத் துவங்குவார். அவ்வப்போது கண்ணீரோடு தவறை உணரும் மனிதன் ஏன் மறுபடியும் மோசமாகப் போகிறார் என்ற கேள்வி பலருக்கு உண்டு.

இதன் பெயர்தான் போலி பக்தி, போலி மனந்திரும்புதல். ஒரு மனிதன் உண்மையான மனம் திரும்புதலைக் காணாமல், ஒரு போலியான பக்தி வாழ்க்கை வாழும்போது, அவனிடம் பழைய ஜென்ம சுபாவம்தான் வேலை செய்யும். சில நேரம் மனசாட்சி உறுத்தப்படும் போது, அவன் தன்னைச் சரி செய்ய முன்வருவான். ஆயினும், அடித்தளத்தில் இன்னமும் மனமாற்றம் பெறாத பழைய ஜென்ம இருதயமே இருப்பதால், சில நாட்களில் அவன் மாறி விடுவான்.

சிலர் இப்படித்தான் மதுபானத்தை விட்டு விடுவார்கள். ஆனால் மறுபடியும் அதை நோக்கித் திரும்பி வந்து விடுவார்கள். ஆபாசப் படங்களை விட்டுத் திரும்புவார்கள். ஆனால் மறுபடியும் அங்கே போய்விடுவார்கள். தவறான சில பழக்கங்களை விட்டுவிடுவார்கள். ஆயினும், விரைவில் அங்கே திரும்ப வந்து விடுவார்கள். ஏனென்றால், அவர்கள் அடித்தளத்தில் மனமாற்றம் பெறாதவர்கள். பக்தியையும் விடாமல் பாவ இருதயத்தையும் விடாமல் வாழ்வதால், மீண்டும் மீண்டும் பழைய தவறுகள் தலையெடுக்கின்றன.

சவுல் பக்தியுள்ளவன். ஆனால், அடித்தளத்தில் தவறான ஆவியின் பிடியில் உள்ளவன். தாவீதிற்கு எதிராகத் தான் செயல்படுவதை அவன் மீண்டும் மீண்டும் தவறு என்று உணர்ந்து மனம் வருந்தியிருக்கின்றான். ஆயினும், அதிக நேரம் அது நீடிக்காது. மறுபடியும் அவன் தாவீதை ஒழித்துக் கட்ட வழிகளைத் தேடுவான். போலியான ஒரு பக்திப் பாவத்தை உணர வைக்கும். ஆனால், பாவத்தை விட்டு விலகி உறுதியாக நிற்க விடாது. உண்மையான மனந்திரும்புதலுக்கு வந்தால்தான் வாழ்க்கை மாறும்.

சிந்தனைக்கு...

பாவத்தை உணர்ந்து ஒத்துக் கொள்வது அல்ல.
உணர்ந்த பாவத்தை விட்டு விலகிப் போவதே பக்தி.

மே
17
ஜீவ நீரோடை

அன்பை ருசித்தல்

தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை...
1 யோவான் 4:16

1 யோவான் 4:11-21

இயேசு உங்களை நேசிக்கின்றார் என்பதை அனுபவத்தில் கண்டு கொண்டிருக்கின்றீர்களா என்று சபையாரைப் பார்த்து பாஸ்டர் கேட்டார். எல்லோரும் அதற்கு, ஆம், என்று சொல்வதைப் போல கைகளை உயர்த்தி அல்லேலூயா என்றனர். அனுதின வாழ்க்கையில் கர்த்தருடைய அன்பை ருசித்துப் பழகியிருக்கின்றீர்களா என்று கேட்டபோதும், அதே விதமாக, அல்லேலூயா சொல்லி ஆமோதித்தனர். நீங்கள் கர்த்தருடைய அன்பை எப்படி உணருகின்றீர்கள் என்பதைச் சொல்லுங்கள் என்று சபையாரில் சிலரிடம் பாஸ்டர் கேட்டார். ஆனால், கர்த்தருடைய அன்பு அனுபவத்தில் எப்படி ருசிக்கப்படுகிறது என்பதை யாருக்கும் உரிய விதமாகச் சொல்லத் தெரியவில்லை.

வேதாகமம் வழியாக தேவன் நம்மை நேசிக்கின்றார் என்ற தகவலைப் பெறுகின்றோம். அதை வாழ்க்கையில் நாம் அனுபவத்தில் எப்படிக் காண்கின்றோம் என்பதே முக்கியம். ஏனென்றால், கர்த்தருடைய அன்பை ருசித்துக் கொண்டேயிருப்பதுதான் உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை. ஆண்டவர் நம்மை நேசிப்பதை எப்படி நம்மால் உறுதிப்படுத்த முடிகிறது என்பது முக்கியம். அவரின் அன்பை ருசித்தால்தான்அது தெரியும், அவருடைய அன்பை அனுபவித்தால்தான் அது தெரியும் என்றெல்லாம் சொல்லுகின்றோமே. அது எப்படி என்பதே கேள்வி.

கர்த்தர் நம்மேல் அன்பாயிருப்பதை நாம் உறுதிப்படுத்தும் காரியங்கள் தினசரி வாழ்வில் ஏராளம் உள்ளது. அதனை நாம் உணர வேண்டும். கர்த்தர் அருளும் பாவ விடுதலையை உபயோகித்து பாவத்தைச் ஜெயிக்கின்றோமா? அவ்விதம் ஜெயம் பெற வைக்கும் தேவ கிருபைதான் அன்பு. இயற்கையில் பாவிகளாகிய நம்மால் நல்ல நற்குணங்களோடு வாழ முடிகிறதா? அவ்விதம் நற்குணங்களோடு வாழ்வதற்குத் தேவன் தரும் ஆற்றல்தான் தேவ அன்பு. நம்பிக்கையற்ற சூழ்நிலை களில் நம்பிக்கையோடு இருக்க முடிகிறதா? அந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் தேவ செயல்தான் தேவ அன்பு.

அனுதின வாழ்க்கையில் ஏராளமான நல்ல பாடங்களைக் கர்த்தர் கற்றுக் கொடுப்பதை அறிய முடிகிறதா?ஆம், அப்படி கற்றுக் கொடுக்கும் செயல்தான் தேவ அன்பு. ஆம், நாம் இயற்கையில் எப்படியெல்லாம் வாழ இயலாதோ அப்படியெல்லாம் நம்மை வாழச் செய்கின்றாரே தேவன். அந்த வாழச் செய்யும் தேவ செயல்பாடுகள்தான் தேவ அன்பை நமக்குள் அறியச் செய்கிறது. அதனை நாம் அறிந்து கொண்டும் உணர்ந்து கொண்டும், வாழ்வதுதான் தேவ அன்பை ருசித்தல்.

சிந்தனைக்கு...

தேவ அன்பு என்பது உணர்ச்சி வசப்படுவது அல்ல,
உண்மையைச் சார்ந்து வாழச் செய்வதே அது.

மே
18
ஜீவ நீரோடை

பயன்தராத பிரசங்கங்கள்

உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும்...
மத்தேயு 23:28

மத்தேயு 23:27-39

ஒரு பெண் தன்னுடைய சபை பாஸ்டரிடம் வந்து தன்னுடைய கணவரைக் குறித்த பல குற்றச்சாட்டுகளைக் கூற ஆரம்பித்தாள். அவர் இரவும் பகலும் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளையே டி.வி.யிலும், யூடியூப்-பிலும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் எங்கே கிறிஸ்தவ பிரசங்கம் என்றாலும் தவறாமல் போய்விடுகிறார். அவர் கிறிஸ்தவப் புத்தக சாலைகளுக்குச் சென்று ஏராளம் பக்திப் புத்தகங்களை வாங்கி வருகிறார். அவர் படித்து, கேட்ட பிரசங்கங்களிலே நல்ல கருத்தைக் கண்டால், உடனேயே வாட்ஸ் ஆப், பேஸ்புக் என்று பகிர்ந்து கொள்கின்றார்.

அவள் அடுக்கிக் கொண்டே சென்றாள். பாஸ்டர் குறுக்கிட்டார். நல்ல விஷயங் களைத்தானே செய்கிறார். இதில் உங்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்டார். பாஸ்டர் இவ்வளவு நல்ல விஷயங்களைச் செய்கின்ற அவர், ஒரு பாவியிலும் மோசமாக வாழ்வதைச் சகிக்க முடியவில்லை பாஸ்டர். எதற்கெடுத்தாலும் கோபம், எதற்கெடுத்தாலும் எரிச்சல், எதற்கெடுத்தாலும் சண்டை என்று எங்களைப் பாடாய் படுத்து கின்றார் பாஸ்டர், என்று கூறிக்கொண்டே சென்றாள்.

ஆம், எல்லோரைப் போல தவறான விஷயங்களில் நேரம் செலவழிக்கின்ற ஒருவர், நல்ல சுபாவத்தோடு நடக்காமல் போனால் அது யாரையும் அதிகமாக வருத்துவதில்லை. ஆனால், கேட்பதும் பரிசுத்தம். படிப்பதும் பரிசுத்தம், பேசுவதும் பரிசுத்தம். ஆனால், வாழ்க்கையோ அசுத்தம் என்றால் அதனை யாரும் எளிதாக ஜீரணிக்க முடியாது. எனவேதான், அக்காலப் பரிசேயர்களை இயேசு வெள்ளயடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பிட்டார். ஏனென்றால், அவர்களிடம் ஏராளம் ஏராளம் பக்தியான செயல்கள் உண்டு. ஆனால், அந்தப் பக்திக்கும் சுபாவங்களுக்கும் சம்பந்தம் இராது. சில கிறிஸ்தவர்கள் தங்களின் வீட்டைச் சுற்றியுள்ள காம்பவுண்ட் சுவரில், மிகச் சிறப்பான வேத வசனங்களை எல்லோரும் படிப்பதற்காக எழுதியிருப்பார்கள். ஆனால், அவர்களோ அப்படி ஒரு சத்தியம் இருப்பதே தெரியாதது போல வாழ்வார்கள்.

சாப்பிடுவதெல்லம் மிக மிகச் சத்தான பொருட்கள். ஆனால், சரீரமோ பெல வீனத்திலும் பெலவீனம் என்றால் என்ன அர்த்தம்? ஏதோ ஒரு கடுமையான நோய் உள்ளது என்று அர்த்தம். பாவம் என்ற நோய்க்கு மருந்தான இரட்சிப்பின் அனுபவம் பெறாமல், எத்தனை பிரசங்கம் கேட்டாலும் பயனில்லை. எத்தனை புத்தகம் படித்தாலும் பயனில்லை.

சிந்தனைக்கு...

தீயவன் செய்த ஒரே ஒரு நல்ல செயலை பலர் பாராட்டுவார்கள்
நல்லவன் செய்த ஒரே ஒரு தவறை எல்லோரும் இகழுவார்கள்.

மே
19
ஜீவ நீரோடை

கேட்டவை கிடைக்கவில்லை

தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம்...
யோபு 2:10

யோபு 2:1-13

கிறிஸ்தவ விசுவாசி ஒருவர் தன்னுடைய நண்பனிடம், தன்னுடைய வாழ்க்கையில் தேவனிடமிருந்து பெற இயலாமல் போன நன்மைகளைக் குறித்து உரையாடினார். தன்னுடைய விண்ணப்பங்கள் பல தேவனால் கேட்கப்படாமல் போனதைக் குறித்து அவரிடம் பகிர்ந்து கொண்டார். நீ கேட்கும் இத்தனை நன்மைகள் கிடைக்காத போதும் கர்த்தரைத் தொடர்ந்து விசுவாசிப்பது உனக்குக் கடினமாக இல்லையா என்று கேட்டார். அவரால் கிடைத்த பல நன்மைகள் என்னிட மிருக்கும் போது, அவரை நான் விசுவாசியாமல் போவதற்கு நியாயம் இல்லை என்று பதிலளித்தார்.

கர்த்தரிடத்தில் கேட்டும் பெற இயலாமல் போன சில நன்மைகளைக் குறித்து எண்ணும் போது, சோர்வுகள் ஏற்படுவது இயற்கை. கர்த்தர் எவ்வளவோ கேட்டும் தராமல் போனாரே என்ற வருத்தம் ஏற்படுவது இயற்கை. ஆயினும், அதனால் கர்த்தர் இனி அவசியமில்லை என்பதுபோல் எண்ணிவிட முடியாது. ஒரு உண்மை யான கிறிஸ்தவ விசுவாசியிடம் கர்த்தர் அருளின இரட்சிப்பு, பாவ விடுதலை, தேவ ஆவி, தேவ சமாதானம் போன்றவை நிச்சயம் இருக்கும். இவை கர்த்தரைத் தொடர்ந்து விசுவாசிப்பதற்குப் போதுமான வலிமையான நன்மைகள்.

சிலர், கர்த்தர் எனக்கு எவ்வளவோ செய்திருக்கின்றார் என்று சொல்வார்கள். ஆனால், அவர்கள் கர்த்தருக்குப் பிரியமாக வாழமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் கர்த்தருடைய பார்வையில் மிக அவசியமான நன்மைகளைப் பெறவில்லை. பாவ மன்னிப்பு, பாவவிடுதலை, பரிசுத்தமாகுதல், தேவ ஐக்கியம், நித்திய நம்பிக்கை ஆகியவற்றை ஒருவர் பெற்றிராத நிலையில், அவர் வேறு எவ்வளவு பெரிய உலகப் பிரகார நன்மைககளைப் பெற்றிருந்தாலும் கர்த்தரோடு அவரால் நிலைத்திருக்க முடியாது. சிலர், கர்த்தர் எனக்கு எதையுமே செய்யவில்லை என் பார்கள். அப்படியானால் அவர்கள் இன்னும் தங்களுடைய வாழ்வில் இரட்சிப்பு, பாவ விடுதலை ஆகியவற்றைப் பெறவில்லை என்று அர்த்தம்.

ஒரு மனிதன் கர்த்தரை தனக்குள் பெறுவதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. அப்படிக் கர்த்தரைப் பெற்றிருந்தால் அவருடைய பிரசன்னம் அவனோடிருக்கும். அவருடைய சமாதானமும் அவனோடிருக்கும். அவர் அளித்த நற்குணங்கள் அவனிடமிருக்கும். அவைகளை அவன் கர்த்தரால் வந்தவை என்று அறிந் திருக்கும் போது, வாழ்க்கைச் சூழலில் அவன் கேட்ட நன்மைகள் கிடைக்காமல் போனாலும், கர்த்தரைக் குறித்த விசுவாசத்தை விட்டு விலக அவனுக்குக் காரணங்கள் இராது.

சிந்தனைக்கு...

தேவன் கொடுக்க வந்தவைகளை நாம் பெறாதபோது,
நாம் கேட்கின்றவைகளை அவரிடமிருந்து பெறுவது கடினம்.

மே
20
ஜீவ
நீரோடை

வாழ முடியும்

எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு...
பிலிப்பியர் 4:13

பிலிப்பியர் 4:1-13

என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் சில காலகட்டங்களில், நான் எனக்கு மிக மிக அவசியமானவைகள் என்று எண்ணிய சில நன்மைகளைக் கர்த்தர் தரவில்லை. இவை இவை இல்லாமல் எப்படி நான் வாழ முடியும்? என்று எண்ணின வேளைகள் உண்டு. ஆனால், அவ்விதம் எண்ணின சில நன்மைகளை நான் பெறாதபோதும் நான் வாழ முடிந்திருக்கின்றது என்பதைக் கண்டு கொண்டேன். 1990-களின் துவக்கத்தில் ஒரு நல்ல வீட்டிலிருந்து வாகன சத்தம் மிகுந்த ஒரு நகரப் பகுதியில் ஒரே ஒரு சிறிய அறை மட்டுமே இருந்த ஒரு இடத்திற்கு நான் வர நேர்ந்தது.

இந்த அறையில் தங்கி நான் ஜெபிக்க முடியாது. இந்த அறையில் தங்கி நான் நன்றாக சிந்திக்க முடியாது. இந்த அறையில் தங்கி நான் எழுத முடியாது. உடனேயே எனக்கு வேறு இடம் கிடைத்தாக வேண்டும் என்று சிந்தித்தேன். ஆனால், புற சத்தம் மிகுந்த, காற்றோட்டம் இல்லாத, அந்த அறையில் பல ஆண்டுகள் நான் தங்க நேர்ந்தது. நான் கேட்டதைத் தேவன் தரவில்லை. ஆனாலும், அது ஒரு பிரச்சினையாக இராமல் என்னால் அங்கே வாழ முடிந்தது.

ஆம், நாம் வாழ முடியாது என்று எண்ணுகின்ற சில விஷயங்கள் உண்மையில் வாழ முடியாதது அல்ல. நாம் வாழப் பழகிக் கொள்ள முடியும். வாழமுடியாது என்று எண்ணுகின்ற சில சூழலில் வாழ்வதற்கு சில நேரம் தேவன் விட்டுவிடுகின்றார். அங்கே நாம் நிறைய அனுபவக் கல்விகள் பெறுகின்றோம். இது இது கிடைக்காவிட்டால் நாம் வாழ முடியாது என்று எண்ணுவது, நம்முடைய மனம் சொன்னதுதானேயன்றி, அதுவே உண்மை அல்ல. இந்த இந்தச் சூழ்நிலையில் வாழ முடியாது என்று நாம் சொல்வது, நம்முடைய மனதின் கணக்கிடல்தானேயன்றி, அது உண்மை அல்ல.

சுகமான மனம் விரும்பிய சூழலில், நாம் வலிமையான வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவதில்லை. அசௌகரியமான சூழல்களிலும், முடியாது என்று எண்ணத்தக்க சூழல்களிலும் வாழ நேரிடும்போதுதான், அரிதான அனுபவப் பாடங்களை பெற்றுக் கொள்கின்றோம். அந்தப் பாடங்கள் நாம் கேட்டதையெல்லாம் பெற முடிந்த காலத்திலும், நம்மை சமநிலையோடு வாழச் செய்கின்றது. நமக்கு அமைந்த சௌகரியமான சூழல்களின் அடிப்படையில் வாழாமல், நாம் கற்று அறிந்த அனுபவக் கல்வியின் அடிப்படையில் வாழ்ந்து, வாழ்க்கையை வெற்றியாக்கிக் கொள்ள முடியும்.

சிந்தனைக்கு...

நடக்கக் கடினமான பாதைகளையே பாராதே,
நடத்திச் செல்லும் தேவனுடைய கிருபைகளைப் பார்.

மே
21
ஜீவ நீரோடை

இதுவும் முக்கியமான வேலை

அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்...
உபாகமம் 5:14

உபாகமம் 5:12-22

என்னுடைய நேரங்களுக்குச் சரியான பயன்பாடு இருக்க வேண்டும் என்று நான் எண்ணுகின்றவன். இவ்வளவு நேரங்களுக்குள் நான் இவ்வளவு வேலைகள் செய்து முடித்திருக்க வேண்டுமே என்று சிந்திக்கின்றவன். இரண்டு நிமிடத்தையும் ஒரு நிமிடத்தையும் கணக்கிட்டு கணக்கிட்டு யோசிக்கின்றவன். ஒரு நாள் நிறைய வேலைகள் இருந்த ஒரு சூழ்நிலையில் நண்பர் ஒருவர் முன்னறிவிப்பு இல்லாமல் வந்து பல விஷயங்கள் பேச ஆரம்பித்தார். என் மனதிற்குள் முக்கியமான வேலைகள் உள்ளதே, முக்கியமான வேலைகள் உள்ளதே என்ற சத்தம் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தது. அதே நேரத்தில் திடீரென்று இன்னொரு சிந்தனை உள்ளே வந்தது. இதுவும் முக்கியமான வேலைதான். இதுவும், அவசியமான வேலைதான், கலவரமில்லாமல் கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசிக்கொண்டிரு என்று அது எனக்குச் சொன்னது.

நல்ல ஐக்கியங்களுக்கு நேரம் வேண்டும். சிலரோடு பேசிக்கொண்டிருக்க நேரம் வேண்டும். கொஞ்ச நேரம் வேலை எதுவும் இல்லாமல் சும்மாயிருக்க நேரம் வேண்டும். தேவன் படைத்த இயற்கையின் அழகையெல்லாம் ரசிக்க நேரம் வேண்டும். பறவைகளை, ஆடுகளை, மாடுகளை, நாய்களை கொஞ்சநேரம் உற்றுக் கவனிக்க நேரம் வேண்டும். கொஞ்சம் காலாற நடந்து பலவற்றைக் கவனிக்க நேரம் வேண்டும். எதையும் செய்யாமல், எதை எதை எப்படிச் செய்கிறோம் என்று சிந்திக்க நேரம் வேண்டும். இவை எல்லாம் மிக முக்கியமான வேலைகள்தான். நாம் எதிர்பார்க்கின்ற விளைவைத் தராதவை எல்லாம் முக்கியமற்றவை என்று எண்ணிவிடக்கூடாது.

அரை மணிநேரம் இருந்தால் ஒரு நாளுக்குரிய தினசரி தியானம் எழுதலாமே என்று சிந்திப்பேன். ஒருமணி நேரம் இருந்தால் மாத இதழுக்கு ஒரு கட்டுரை எழுதலாமே என்று சிந்திப்பேன். இவ்விதம் சிந்தித்துச் சிந்தித்து ஏராளமாக எழுதி விட்டேன். அது நல்லதுதான். ஆனால், சிலரோடு பேசவும், பழகவும் இன்னும் கொஞ்சம் நேரத்தை இழந்திருந்தால், இன்னும் கொஞ்சம் நல்ல ஐக்கியங்களைப் பெற்றிருக்கலாமே என்று இன்று சிந்திக்கின்றேன். ஆனால், அதற்குள் காலம் கணிசமாகக் கடந்து சென்றுவிட்டது.

ஆம், குறிப்பிட்ட ஒரு இலக்கை எட்டுவதற்காகவும், குறிப்பிட்ட ஒரு பொறுப்பை நிறைவேற்றுவதற்காகவும் மட்டுமே நேரங்களைச் செலவிடுவது அல்ல. இன்னும் சில முக்கியமான விஷயங்களுக்கும் நேரம் தேவை. வேகம் வேகமாக ஓடுவது மட்டுமே வாழ்க்கை அல்ல. அமைதியாக வேறெந்த வேலையும் இல்லாதது போன்று சற்று நேரம் ஓய்ந்திருப்பதும் மிக மிக முக்கியமான வேலையே

சிந்தனைக்கு...

நாம் விரும்பியவைகளை நிறைவேற்ற மட்டுமே அல்ல, விரும்பத்தக்கவைகளை நிறைவேற்றவும் நேரம் வேண்டும்.

மே
22
ஜீவ
நீரோடை

ஆசீர்வாதத்திற்கு உகந்தவர்களாய்

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும்...
சங்கீதம் 105:19

சங்கீதம் 105:1-22

குறிப்பிட்ட நேரத்தில் ரயில் வந்து சேரக்கூடும். எனவே, சரியான நேரத்தில் ஆயத்தமாயிருங்கள். சில நேரம் ரயில்கள் தாமதமாக வரக்கூடும். தாமத வருகையை ஏற்றுக் கொள்ளவும் ஆயத்தமாயிருங்கள். இவ்விதமான ஒரு அறிவிப்பு பலகை இரயில் நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்ததாம். ஆம், சில நேரங்களில் நாம் எதிர்பார்க்கும் நன்மை, எதிர்பார்க்கும் நேரத்தில் வர வாய்ப்புண்டு. எனவே அப்படி ஒரு விசுவாசமும் நமக்குத் தேவை. சில நேரங்களில் எதிர்பார்த்த நன்மைகள் எதிர்பாராத வேளைகளில் தாமதமாகி வரக்கூடும். அந்தத் தாமத வருகையை ஏற்கவும் ஒரு விசுவாசம் வேண்டும்.

தேவனுடைய நன்மைகள் சில நேரம் நாம் எதிர்பார்க்கும் வேளையில் வரும். ஆனால், அதனை நாம் பெறுவதற்கும், அனுபவிப்பதற்கும் ஏற்ற விதமான மன ஆயத்தங்கள் தேவை. சில நேரங்களில் எதிர்பார்த்த நன்மைகள் வந்தாலும் நாம் நம்முடைய மனநிலைகளினாலும் குணநிலைகளினாலும் அவற்றிற்கு உகந்தவர்களாக இல்லாமல் போய்விடுவதுண்டு. எகிப்தில் அடிமைகளாயிருந்த எபிரெய மக்களுக்கு, தேவன் குறித்த வேளையில் இரட்சிப்பு ஆயத்தமாகி வந்தது. ஆனால், எபிரெய ஜனங்களின் மனமும் குணமும் ஆசீர்வாதத்திற்கு உகந்தவைகளாயிருக்கவில்லை. எனவே, நாற்பது நாட்களுக்குள் சென்று அனுபவிக்க வேண்டிய ஆசீர்வாதப் பகுதியை எட்ட 40 ஆண்டுகள் ஆனது.

சில நேரங்களில், தேவன் தகுதியான நேரத்தில் நம்மை ஆசீர்வதிக்கவே விரும்புகின்றார். ஆனால், அந்த ஆசீர்வாதங்களுக்கு ஏற்றவிதமான ஒத்துழைப்புகளும் அவசியம். நாம் தேவனுக்கு உகந்த மனநிலையோடு காணப்படக் கவனம் செலுத்தாவிட்டால், ஆசீர்வாதங்கள் நம்மிடம் கிரியை செய்யாது. சவுல் தேவனால் மேன்மைப்பட அழைக்கப்பட்டவனே. ஆயினும், அவனுடைய முரண்பாடான சுபாவங்களால் மேன்மைப்படாமல் போனான்.

அவ்விதமே, சில நேரம் நம்முடைய எதிர்பார்ப்பின் அடிப்படையில், நாம் விரும்பிய காலங்களில், தேவ நன்மைகளைக் காண இயலாது. தேவன் சில மேன்மையான காரணங்களினால் வேறொரு நேரம் குறித்திருப்பார். அது நமக்குத் தேவன் தாமதப்படுத்துவது போல தோன்றும். ஆனால், அது தகுதியான நேரத்திற்காக காத்திருக்கிறார் என்று அர்த்தம். எனவே, தாமதம் போல தோன்றும் காலங்களிலும் நாம் விசுவாசத்தோடு காத்திருந்தால், தேவ நன்மையை நிச்சயம் காண்போம்.

சிந்தனைக்கு...

நீ தேடும் நன்மை இன்று வராவிட்டால்,
நீ தேடாத ஒரு நன்மை நாளைக்கு தேவனால் உனக்கு வரக்கூடும்.

மே
23
ஜீவ நீரோடை

பக்தி அடிமைத்தனம்

அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது... ஏசாயா 29:13

ஏசாயா 29:10-24

ஒருவர் தன்னுடைய அலுவலகத்திற்குக் கிளம்பும் முன்பு ஜெபம் செய்யவும், வேதம் வாசிக்கவும் தவறவேமாட்டார். இன்று வேதம் வாசித்தீர்களா? இன்று ஜெபம் செய்தீர்களா? என்று கேட்டால் ஒருநாள்கூட அவர் இல்லை என்று கூற இயலாது. ஆனால், பெரும்பாலும் காலையில் எல்லா அலுவலையும் ஒன்றன் பின் ஒன்றாக முடித்துக் கொண்டிருப்பார். கடைசியில் அலுவலகத்திற்குக் கிளம்ப இரண்டு மூன்று நிமிடங்கள் மட்டுமே உள்ளது என்ற நிலையிலேயே அவசர அவசரமாக அவற்றைச் செய்வார். தான் பைபிள் படிக்காமல், ஜெபம் செய்யாமல் அலுவலகத்திற்குக் கிளம்புவதேயில்லை என்று கூறுவதற்கேதுவாகவே அப்படிச் செய்கிறார். மற்றபடி அவருக்கு ஜெபத்திலோ, வேத வாசிப்பிலோ உண்மையான எந்த மன ஈடுபாடும் இல்லை.

அநேகர் ஜெபம் செய்வது உண்மைதான். பைபிள் படிப்பது உண்மைதான். ஆனால், அப்படிச் செய்வதினால் அவர்களுக்கு எந்த நன்மையும் இல்லை. அந்தப் பழக்கங்களால் அவர்களிடம் எந்த விதமான ஆவிக்குரிய விளைவுகளும் ஏற்படுவதில்லை. அவர்கள் பழகிவிட்ட ஒரு கிறிஸ்தவ பக்திக் கடமையாக அவற்றைச் செய்கின்றார்கள். அவற்றைச் செய்யாவிட்டால் அவர்களுக்குக் குற்ற உணர்வு ஏற்படும். அதைத் தவிர்க்கவே அவர்கள் தினமும் அப்படிச் செய்கின்றனர்.

ஜெபம் என்பது ஆவிக்குரிய ஒரு சடங்கு அல்ல. வேத வாசிப்பு என்பது பூஜை செய்வது போன்றது அல்ல. சில கணவர்கள் காலையில் எழுந்தது முதல், தங்கள் அலுவல்களுக்காக வெளியே கிளம்புவது வரை, ஒரு வார்த்தை, கூட தங்கள் மனைவிகளோட பேசமாட்டார்கள். ஆனால், கிளம்பும் போது ஒரு வார்த்தை நான் கிளம்புகிறேன் என்று சொல்லுவார்கள். இது தங்களின் மனசாட்சியைத் திருப்திப்படுத்தச் சொல்லும் வார்த்தை. மற்றபடி மனைவியோடு பேச வேண்டும் என்ற ஆசையினாலோ பொறுப்புணர்வினாலோ அல்ல. பலருடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் அப்படியே.

சிலர், ஒரு வாரம்கூட கோயில் என்று அவர்கள் நம்பும் சபை கட்டிடத்துக்குப் போகாமல் இருக்கவேமாட்டார்கள். ஆனால், அங்கு நடைபெறுகின்ற எதிலும் அவர்களின் கவனம் இருக்காது. ஆம், சிலர், சில பக்தியான காரியங்களை நீண்ட காலமாகச் செய்து பழகிவிட்ட காரணத்திற்காகவே, அவற்றில் தொடருகின்றார்கள். அவ்விதம் செய்யாவிட்டால் அவர்களின் மனம் உறுத்தும், அந்த உறுத்து தலைத் தவிர்க்கவே அவர்கள் மனம் விரும்பாத சில விஷயங்களில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். இது ஒரு விதமான பக்தி அடிமைத்தனம். இந்த அர்த்தமற்ற அடிமைத்தனம் நீங்க அவசியம் ஜெபிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

செய்ய வேண்டியதைச் செய்யாமல் போவதும் தவறே,
செய்ய முன்வந்தும் சரியாகச் செய்யாமல் போவதும் தவறே.

மே
24
ஜீவ நீரோடை

பரிசுத்தக் குறைவு

நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் ...
ஏசாயா 6:5

ஏசாயா 6:1-13

நம்முடைய உறவினர்கள் சிலர், சொந்தவீடு கட்டி வாழ்கின்றபோது, நாம் வாடகை வீட்டில் வாழ்ந்தால் வருத்தப்படுகின்றோம். எல்லோரும் கோட் சூட் போட்டுக் கொண்டு விசேஷ வைபவங்களுக்கு வரும் போது, நாம் சாதாரண உடையுடன் வந்தால் ஒரு விதமாக வெட்கப்படுகிறோம். அக்கம் பக்கத்தில் எல்லோரும் ஆடம் பரமாக வாழும் போது, நாம் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படாமல் வாழ்ந்தால் மனதில் ஆதங்கம் அடைகிறோம்.

ஆம், நாம் குறிப்பிட்ட விதமான அந்தஸ்து நிலையில் இல்லாமலிருந்தால், மற்றவர்களுக்கு முன்பாக நிற்க மிகவும் தயங்குகிறோம். ஆனால், தேவனுக்கு முன்பாக நம்முடைய ஆவிக்குரிய நிலை தாழ்ந்திருந்தால் வெட்கப்படுகிறோமா? பரிசுத்தமாக வாழ அழைத்த பரிசுத்தராகிய அவருக்கேற்ற பரிசுத்த நிலைமை நம்மிடம் இல்லாவிட்டால் அதற்காக வருந்துகிறோமே. பிற மனிதர்களின் நிலைமைக்கு முன்பாக நம்முடைய நிலைமை குறைந்திருந்தால், எவ்வளவாய் தாழ்வு மனப்பான்மை கொள்கிறோம். மகிமை மிகுந்த கர்த்தருக்கு முன்பாக நாம் இன்னும் பாவ நிலைமையிலேயே இருந்தால், அதற்காகத் தாழ்வு மனப்பான்மை அடைகின்றோமா?

தேவ வார்த்தைகளைக் கேட்கும்போதும், வேத வார்த்தைகளை வாசிக்கும் போதும், நம்மை அழைத்த கர்த்தரின் பரிசுத்த நிலைமையை நாம் அறிகின்றோம். அங்கே நம்முடைய ஆவிக்குரிய நிலைமையை நாம் அறிந்து கொள்ள வாய்ப்புப் பெறுகின்றோம். அப்போது நாம் அது தொடர்பான ஒரு சிந்தனையோடு, தேவனுக்கு முன்பாக நாம் அப்படி இல்லையே என்ற உறுத்தலைப் பெறுகின்றோமா?

ஏசாயா தீர்க்கன், தேவனுடைய மகிமையான தரிசனத்தைக் கண்டான். அப்போது, தேவன் எவ்வளவு மகிமையானவர் என்பதை அல்ல. தேவன் எவ்வளவு பரிசுத்தமானவர் என்பதை அல்ல. தான் தேவனுக்கு முன்பாக நிற்கத் தகுதியற்ற ஒரு நிலைமையில் இருப்பதையே உணர்ந்தான். தன்னுடைய பரிசுத்தக் குறைவை உணர்ந்ததோடு, அது தொடர்பான உறுத்தலினால், நான் அசுத்த உதடுகளை உடையவன் என்று கூவினான். இன்று நம்மில் அநேகர் தேவனுடைய மகிமையை உணர்ந்ததாகச் சொல்லுகின்றனர். தேவனுடைய பரிசுத்த நிலைமையை உணர்ந் ததாகக் கூறுகின்றனர். ஆனால், தங்களிடமுள்ள பாவசாயலான விஷயங்களைக் குறித்து வெட்கப்படாமலும், அதனை ஒரு பொருட்டாக எண்ணாமலும், போகின்றார். தேவனுடைய பரிசுத்த நிலையை உணர்ந்தால், நாம் நம்மிடம் பரிசுத்தம் காண

சிந்தனைக்கு...

நற்குணங்கள்தான் மனிதனின் உண்மையான அந்தஸ்து.
அவை இல்லாதவன் அதற்காக வெட்கப்பட வேண்டியவனே.

மே
25
ஜீவ நீரோடை

நல்ல நிலம்

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்...
லூக்கா 8:15

லூக்கா 8:1-15

விதைக்கிறவனைக் குறித்த உவமையைக் கூறினார். இயேசு (லூக்கா 8:4-15) அந்த உவமையை விளக்கும்போது நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு பலன் கொடுகின்றவர்களாயிருக்கிறார்கள் என்றார். (லூக்கா 8:15) நல்ல நிலம் என்றால் நல்ல இருதயம் என்று அர்த்தம். தேவ வார்த்தைகள் நல்ல நிலமாகிய இருதயத்தில் விழுந்தால், நல்ல பலனைக் கொடுப்பது நிச்சயமான விஷயம் என்பது தெரியவருகின்றது. தேவ வார்த்தைகளாகிய நல்ல விதைகள் விழுந்தும் நல்ல பலன் இல்லாவிட்டால், அந்த நிலம், நல்ல நிலம் அல்ல என்பதே உணமை.

சிலருக்கு தேவ வார்த்தைகள் கேட்கும் ஆர்வம் உண்டு. சிலருக்கு தேவ வார்த்தைகளைக் கேட்கும் பழக்கம் உண்டு. சிலர், எங்கு தேவ வார்த்தை விதைக்கப்படுகிறதோ அங்கு போய் தங்கள் இருதயமாகிய நிலத்தில் அதைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால், பலன் கொடுப்பது இல்லை. எவ்வளவு கேட்டாலும் ஆவிக்குரிய நல் விளைவுகள் இல்லை. ஏனென்றால், அவர்களின் இருதயமாகிய நிலம் நல்ல நிலம் அல்ல. நல் விளைவுகளைக் கொடுப்பதற்கு அந்த நிலம் தகுதியானது அல்ல.

மனிதனுடைய இயற்கையான இருதயம் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. (எரேமியா 17:9) அதனால் நல்ல விதைகளைப் பெற்று நல்ல விளைபலன்களைக் கொடுக்க இயலாது. எனவே பலன் கொடுக்க இயலாத தரிசு நிலம் போன்ற நம்முடைய இருதயம், நல்ல நிலமாக்கப்பட வேண்டும். நாம் நல்ல தேவ வார்த்தைகளாகிய விதைகளைப் பெறுவது அல்ல. முதலாவது, நல்ல விதைகளை முளைப்பிக்கும் தன்மையுடைய நல்ல நிலத்தைப் பெற வேண்டும். கர்த்தர் ஒரு மனிதனுடைய இருதயத்தை, தம்முடைய ஆவியினாலும் ஐக்கியத்தினாலும், நல்ல நிலமாக்க வேண்டும். சுவிசேஷ சத்தியத்திற்குச் செவிசாய்த்து, கர்த்தரால் நாம் இரட்சிப்பின் அனுபவம் பெற்றால்தான், நம்முடைய இருதயம் நல்ல நிலமாக மாறும்.

சிலருடைய இருதயம் பக்தியுள்ள இருதயமாகிறது. ஆனால், தேவ வார்த்தைகளின்படி செயல்படுவதற்கேற்ற நல்ல ஆவிக்குரிய இருதயமாகவில்லை. எனவே, பக்தியுணர்வோடு கேட்கும் செயல் நடைபெறுகின்றது. ஆனால், பரிசுத்த உணர்வோடு அதன்படி நடக்க இயலவில்லை. ஏனென்றால், அவர்கள் பாவமான வாழ்க்கையிலிருந்து பக்தியான வாழ்க்கைக்கு வந்த போதிலும், பாவத்திலிருந்து விடுதலையாகின்ற உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கைக்கு வரவில்லை.

சிந்தனைக்கு...

நீ பக்தியானவன் என்பதற்கு பல அடையாளங்கள் உண்டு,
ஆனால், நீ பரிசுத்தமானவன் என்பதற்கான அடையாளங்கள் எவை, சொல்.

மே
26
ஜீவ
நீரோடை

தேவனுக்குப் பயன்படுதல்

எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்...
அப்போஸ்தலர் 1:8

அப்போஸ்தலர் 1:1-14

தேவனால் பயன்படுத்தப்படுவது தொடர்பாகச் சிந்திக்கும் போதெல்லாம், அநேகர் அது ஆண்டவருக்காகச் செய்கின்ற ஊழியம் என்றே நினைக்கின்றனர். ஆனால், தேவனுக்காக மிகப்பெரிய அளவில் ஊழியம் செய்கின்ற சிலர், தேவனுக்குப் பயன்படவில்லை என்பதே உண்மை. பல திருச்சபைகளை நிறுவின சிலர், தேவனுக்குப் பயன்படவில்லை. நீண்ட காலம் மிஷனரிப் பணிகளில் இருக்கும் சிலர், தேவனுக்குப் பயன்படவில்லை. மிகப்பெரிய எண்ணிக்கையினருக்கு நடுவில் பிரபலமான சிலர், தேவனுக்குப் பயன்படவில்லை. அவர்கள் தேவனுக்குப் பயன் படவில்லை என்றால் என்ன அர்த்தம்?

அவர்கள் கர்த்தருடைய ஊழிய நடவடிக்கைகளில் அதிகமாகப் பிணைந் திருந்தும், கர்த்தருக்கேற்ற சாட்சிகளாக அவர்கள் மாறவில்லை. அவர்களுடைய சுபாவங்கள், நடத்தைகள், ஆசைகள், நோக்கங்கள், வார்த்தைகள் போன்றவை கர்த்தருக்கேற்றவைகளாக இல்லை. அவர்களைக் கர்த்தர் சாதனையாளர்களாகக் காட்டலாமேயன்றி, சத்தியம் அறிந்த சாட்சிகளாகக் காட்ட முடியாது. அவர்களை தேவ சாயலை வெளிப்படுத்தும் தேவனுடைய பிள்ளைகளாகக் கர்த்தர் காண்பிக்க முடியாது.

கர்த்தருக்குப் பயன்படுகின்றவர்கள் பெரிய அளவில் ஊழியம் செய்கின்ற வர்களாக இருக்க முடியும். ஆயினும், முதலாவது அவர்கள் கர்த்தரால் ஆவிக்கேற்ற சாட்சிகளாக பிறருக்குக் காண்பிக்கப்பட வேண்டியது அவசியம். தேவன் ஒருவரை மிகப்பெரிய போதகராகவோ, சுவிசேஷகராகவோ, மிஷனரித் தலைவராகவோ ஜனங்களுக்குக் காட்டுவதற்கு முன்பு, அவர்களை கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் சாட்சிகளாகக் காண்பிப்பதிலேயே, அதிக கவனம் செலுத்துகின்றார். அந்த நோக்கம் நிறைவேறாத நிலையில், ஒருவர் எவ்வளவு பெரிய ஊழியம் செய்தாலும், அது தேவனால் பயன்படுத்தப்பட்டதின் அடையாளம் அல்ல. ஒருவர் போதகர் அல்ல. சுவிசேஷகர் அல்ல. பேராயரோ அல்ல. ஆனால், சரியான கிறிஸ்தவ வாழ்க்கையை அவரிடம் பார்க்கலாம். அப்படியானால், இவர் தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்படும் ஒருவர் என்று அர்த்தம்.

ஏனென்றால், கர்த்தர் ஒருவனை தம்முடைய சித்தத்தின்படியான வாழ்க்கை யில் பழக்குவித்தே பிற ஊழியங்களில் பயன்படுத்துவார். தேவனுடைய பார்வையில் உலகப் பிரசித்தி பெற்ற சிலர் அவருக்குப் பயன்படாதவர்களாகத் தோன்ற முடியும். அது போல, ஒரு சிறு கூட்டத்தின் நடுவில்கூட அறியப்படாத ஒருவர், தேவனால் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறவராகத் தோன்ற முடியும்.

சிந்தனைக்கு...

எத்தனை லட்சங்களுக்கு ஒருவர் பேசுகிறார் என்பதல்ல, அவர் எத்தனை பேருக்கு முன்மாதிரி என்பதே முக்கியம்.

மே
27
ஜீவ
நீரோடை

எப்படி இயேசுவைப் பார்க்கின்றோம்

அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல...
யோவான் 6:27

யோவான் 6:14-36

தேவனை நாம் நோக்கிப் பார்த்தாலும் அவரை எந்த அடிப்படையில் பார்க்கின்றோம் என்பது மிகவும் முக்கியமானது. அவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்போடே பார்க்கின்றோம் என்பது முக்கியமானது. பிரச்சினைகளிலிருந்து விடுதலை தருகின்ற ஒருவராக நாம் அவரைப் பார்க்கலாம். கடன் கஷ்டங்களை நீக்குகின்ற ஒருவராக நாம் அவரைப் பார்க்கலாம். வியாதிகளைக் குணமாக்குகின்ற ஒருவராக நாம் அவரைப் பார்க்கலாம். இவை யாவும் நம்முடைய பக்கத்திலிருந்து பார்க்கப்படும் போது மிகவும் அவசியமானவையே. ஆயினும், இவை யாவும் நம்முடைய சரீரத் தேவைகளைச் சந்திப்பதற்கான ஒரு பார்வையே. இந்தப் பார்வை நம்மை மேன்மை நிலைக்குக் கொண்டு செல்லாது.

பசியோடிருக்கின்ற வியாதியஸ்தன், ஒரு மருத்துவரைச் சாப்பாட்டிற்காக நோக்கிப் பார்க்கலாம். ஆனால், அந்தப் பார்வை அவசியமானது என்றாலும், அதனால் அவன் வியாதி நீங்கி சுகமடையமாட்டான். அவன் தன்னுடைய வியாதியை உணர்ந்து அதற்காக நோக்கிப் பார்த்தால்தான், வியாதி நீங்கி வாழ்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். இன்று அநேகர் இயேசுவை இரட்கராக நோக்கிப் பார்ப்பதில்லை. இரட்சகராக இந்தப் பூமிக்கு வந்த அவரை அநேகர் அதற்காகப் பார்ப்பதில்லை. அவர்கள் தங்களின் வியாதிகளுக்கும், கஷ்டங்களுக்கும் ஏதாவது ஒரு உதவி கிடைக்குமா என்றே நோக்கிப்பார்க்கின்றனர்.

நித்திய வாழ்விற்குத் தேவையான ஒரு ஜீவ அப்பமாக இயேசு தம்மை ஜனங்களுக்குக் காண்பிக்க விரும்பினார். (யோவான் 6:33) ஆனால், ஜனங்களோ நித்திய வாழ்விற்குத் தேவையானதைப் பெறுவதற்காக அவரை நோக்கிப் பார்க்கவில்லை. அவர்கள் வயிற்றுக்குத் தேவையான ஒரு உணவிற்காகவே அவரை நோக்கிப் பார்த்தனர். எனவேதான், இயேசு அவர்களைப் பார்த்து, அழிந்துபோகிற போஜனத்திற்காகக் கிரியை செய்யாதிருங்கள் என்றார்.

ஒவ்வொரு நாளும் சரீரப்பிரகாரமான வாழ்வின் தேவைகள் நம்மை அழுத்துகின்றன. எனவே, அநேகர் அது தொடர்பான ஒரு தீர்விற்காகவே இயேசுவைத் தேடுகின்றனர். எனவே, இயேசுவால் அவர்கள் உயர்ந்த ஒரு மேன்மையான வாழ்க்கை முறைக்கு வருவதில்லை. அவர்கள் ஜெபித்தாலும், ஆராதித்தாலும், பயபக்தியாய் வாழ்ந்தாலும் வாழ்க்கையில் சில உதவிகளையே எதிர்பார்ப்பாக வைத்திருக்கின்றனர். எனவே, கர்த்தரால் உயர்ந்த சுபாவ நிலைகளுக்கு அவர்கள் வருவதற்கான வாய்ப்பைப் பெறுவதில்லை.

சிந்தனைக்கு...

தன்னுடைய தேவைகளுக்காகவே தேவனைத் தேடுகிறவன்,
அவருடைய ஆசீர்வாதங்களுக்குத் தூரமாய் விலகிப் போகிறான்.

மே
28
ஜீவ நீரோடை

மாற்றம் இல்லை ஏன்?

நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல...
மத்தேயு 18:3

மத்தேயு 18:1-14

ஒருவர் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டு மறுபிறப்பின் அனுபவம் பெற்றிருப்பதின் அடையாளம் என்ன? மறுப்பிறப்பின் அனுபவத்தை ஒருவர் பெற்றவர் என்றால், அவர் ஆவிக்குரியவராக வாழ்வதற்கு ஏற்றவிதமான இருதயம் பெற்றிருக்கின்றார் என்று அர்த்தம். இதனை எப்படி அறிவது? ஒருவரிடம் பழைய பாவ இருதயம் இருந்தால், உலகத்திற்குரியவைகளை அந்த இருதயம் விரும்பவும் ஏற்றுக் கொள்ளவும் செய்கிறது. அது போல, மறுபிறப்பின் அனுபவத்தின் விளைவான ஆவிக்குரிய இருதயம் இருந்தால், தேவனுக்குரிய பரிசுத்தமான காரியங்களை அது விரும்பவும் ஏற்கவும் செய்யும்.

உலகப் பிரகார மனநிலை உடையவர்கள் ஒரு வீட்டையோ, ஒரு அந்தஸ்தையோ, ஒரு கல்வி நிலைமையையோ பிறரிடம் காண நேரிட்டால், உடனேயே தங்களிடமும் அப்படியே காணப்பட ஆசைப்படுகின்றனர். ஒரு நவநாகரீக உடையைக் காண நேர்ந்ததும், அது போன்று உடை அணிந்து, நானும் நவநாகரீக நபர்தான் என்று காண்பிக்க உலக மனிதன் விரும்புகிறான்.

அதுபோல ஒரு மனிதன் மறுபிறப்பின் அனுபவத்தின் வாயிலாக ஆவிக்குரிய மனிதனாக மாறியிருந்தால், அவன் மாற்றங்களை ஏற்படுத்த இயன்றவனாயிருப்பான். ஒரு விஷயம் தவறு. ஒரு சுபாவம் தவறு. ஒரு சிந்தனை தவறு. ஒரு பழக்கம் தவறு. ஒரு செயல் தவறு என்று அவன் சத்தியத்தால் அறிய நேரிடும்போது அந்த தவறை உடனேயே அவன் தவிர்க்க விரும்புவான். ஒரு நல்ல மனிதனிடம் நல்ல சில விஷயங்களைக் காண நேர்ந்தால், உடனேயே அவை தன்னிடமும் அதை காண வேண்டும் என்று ஆசைப்படுவான். ஒரு நல்ல போதனையின் மூலம், தன்னிடம் பரிசுத்தத்திற்கேதுவான சில நல்ல குணங்கள் ஏற்பட வேண்டிய தேவையை அறிந்தால் அதனை அவன் தன்னிடமும் காண விரும்புவான். தவறு என உணர்ந்தால் திருந்துவான். சரி எனக் கண்டதை தன்னிடம் ஏற்படுத்துவான்.

மறுபிறப்பின் அனுபவம் ஒரு மனிதனின் இருதயத்தை நல்ல நிலமாக மாற்றும். நல்ல நிலமாக மாறியிருந்தால் அது நல்ல விதைகளை முளைக்க வைக்கும் திறனுடையதாயிருக்கும். ஒரு நிலத்தில் எவ்வளவுதான் நல்ல உரம் இட்டாலும், எவ்வளவுதான் நல்ல விதைகளை விதைத்தாலும், எந்த நல்ல செடியும் முளைத்து வராவிட்டால் என்ன அர்த்தம்? அது பாழான நிலமாக உள்ளது. அந்த நிலத்தில் திரும்பத் திரும்ப நல்ல விதைகளை விதைப்பதால் பலன் ஏற்படாது. அது முதலாவது நல்ல விதைகளை முளைப்பிக்கத் தக்கவிதமாக மாற்றப்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

தரிசு நிலத்தில் நல்ல விதை முளைத்து வளராது
பாவ இருதயத்தில் பரிசுத்த வார்த்தைகள் நல் விளைவு தராது.

மே
29
ஜீவ நீரோடை

இதுவும் தேவ அன்பே

கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்...
2 சாமுவேல் 12:13

2 சாமுவேல் 12:1-13

சிலர் நம்மிடம் தவறுகளைக் கண்டறிய நேரிட்டால், அதனைக்கொண்டு நம்மை மட்டம் தட்டவும், பிறருக்கு நம்மை மோசமாகக் காண்பிக்கவும் பயன்படுத்திக் கொள்வார்கள். சிலர் நம்மிடம் தவறுகளைக் காண நேர்ந்தால், இனி நம்மை யாரும் நல்லவர்களாகப் பார்க்க விடாதபடி அதனை பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால், தேவன் நம்மிடம் குற்றங்களைக் காண நேர்ந்தால், அவற்றை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். இல்லையென்றால், தேவ மனிதர்கள் வழியாக அதனை நமக்கு உணர்த்துகின்றார். அது நம்மை மோசமானவர்களாகக் காட்டுவதற்கு அல்ல. அது நம்மைத் தண்டிப்பதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி கொள்ள அல்ல. அது நம்மைச் சரியானவர்களாக மாற்றுவதற்கே.

ஒரு மருத்துவர் இன்னொருவரிடமுள்ள வியாதிகளைக் கண்டறிய ஆர்வம் காட்டுவது, அந்த மனிதனுடைய வியாதிகளைக் குணமாக்குவதற்கே. தாவீது, பத்சேபாள் விஷயத்தில் பாவம் செய்தபோது, நாத்தானுக்கு தேவன் அதனை அறியச் செய்து, அவனைக் கடிந்துரைக்கச் செய்தார். அது அவனை மிக மோசமானவனாகக் காண்பிக்க அல்ல. மோசமான நிலைக்குச் சென்றுவிட்ட அவனை, மறுபடியும் சீர்மிக்க நிலைமைக்குக் கொண்டு வருவதற்காகவே.

மனிதர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது, அதனால் மனந்திருந்துதல் அல்ல. மனக்கடினமே ஏற்படுகிறது. ஆனால், தேவன் நம் தவறை உணர்த்தும் போது நாம் நம்மைச் சரி செய்வதற்கான தூண்டுதலைப் பெறுகின்றோம். தேவன் நம்முடைய தவறுதலைச் சுட்டிக்காட்டுவதின் பின்னால் தேவனுடைய கரிசனையும் அன்பும் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களின் தவறுகளைத் தேவன் தீர்க்கதரிசிகள் வழியாகத் தொடர்ந்து சுட்டிக்காட்டிக் கண்டித்தார். அது அவர்கள்மேல் கொண்ட கோபம் என்பதைவிட அவர்களைச் சீர்படுத்த விரும்பின தேவனுடைய அன்பு என்றே சொல்லலாம்.

ஆம், தேவனால் நாம் உணர்த்தப்படுவதும், கண்டிக்கப்படுவதும் நமக்கு ஆசீர்வாதமான விஷயங்களே. அது தேவன் நம்மேல் கொண்ட அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய அன்பை நாம் அறிந்துணரும் படியாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவி, நமக்குள் முக்கியமாக செய்கின்ற ஒரு வேலை, நம்மைக் கண்டித்து உணர்த்துவதாகும். (யோவான் 16:8) ஆம், நம்முடைய குறைகளையும் தவறுகளையும் கர்த்தர் உணர்த்த வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு நாம் வாழ வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய வார்த்தை உன்னைக் கண்டித்தால், இன்னும் அவர் உன்னை நேசிக்கிறார் என்பது உறுதிப்படுகிறது.

மே
30
ஜீவ நீரோடை

எளிய விசுவாசம்

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்... எபிரெயர் 11:6

எபிரெயர் 11:1-10

நான் சிலரைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் நல்ல கிறிஸ்தவர்கள். அவர்கள் கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் வழிகளையும் நேசிக்கின்றவர்கள். ஆனால், அவர்கள் விசுவாசம் என்ற விஷயத்தில் வலிமை பெற்றவர்களாக இல்லை. இவர்களிடம் மலையளவு விசுவாசம் இல்லை. இவர்கள் இப்படி இப்படி, நல்லதைக் கர்த்தர் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், இப்படி நடக்கும் இப்படி நிச்சயம் நடந்தே தீரும் என்றெல்லாம் சொல்வதில்லை. இவர்கள் தங்களின் ஆசைகளையும் விருப்பங்களையும் தந்தருளும்படியாக தேவனிடம் ஜெபிக்கின்றனர். ஆயினும், தாங்கள் ஜெபித்தபடியும் விசுவாசித்தபடியும் அப்படியே நடக்கும் என்று சவால்விடும் விதமாக விசுவாசிப்பதில்லை.

அதே வேளையில், வேறு சிலரைப் பார்த்திருக்கின்றேன். இவர்களிடம் விசுவாசம் மலையளவு உள்ளது. இவர்கள் பெரிய பெரிய விஷயங்களைக் கர்த்தர் செய்வார் என்று நம்புகின்றனர். இவர்கள் மிக மிகக் கடினமாகத் தோன்றுகின்ற விஷயங்களை கண்ணை மூடிக்கொண்டு நடக்கும் என்று நம்புகின்றனர். ஆனால், இவர்களிடம் நல்ல ஆவிக்குரிய குணங்கள் இல்லை. இவர்கள் கர்த்தரின் வழிகளில் நடப்பதைப் பார்க்க முடிவதில்லை. ஆனால், கர்த்தர் பெரியவர். அவர் பெரிய காரியங்களைச் செய்வார் என்று சாவல் விடுகின்றனர்.

இந்த இரண்டு பிரிவினர்களில் யார் உண்மையில் கர்த்தருடைய பார்வையில் விசுவாசத்தில் வலிமையானவர்கள்? முதல் பிரிவினர்தான் விசுவாசத்தில் வலிமையானவர்கள். அவர்கள் நம்புகின்ற திறமையில் பலவீனர்கள். ஆனால், விசுவாசத்தில் பலவீனர்கள் அல்ல. அவர்கள் கர்த்தரை நேசித்து அவருடைய வழிகளில் நடப்பது, கர்த்தர்மேல் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தைக் காட்டுகிறது. அவர்கள் கர்த்தர் தங்களுக்கு நலமானதைச் செய்வார் என்ற விசுவாசத்தைக் கொண்டிருப்பதால் தான் அவரைச் சார்ந்து நிற்கிறார்கள். இவர்கள் நம்புகின்ற ஆற்றலில் குறைந்திருந்தாலும் தேவ உறவில் வலிமையாயிருந்து, விசுவாசம் என்ற ஆவிக்குரிய அனுபவத்தில் நிலைத்திருக்கிறார்கள்.

விசுவாசம் என்பது எளிமையானது. இப்படி நடக்கும் அப்படி நடக்கும் என்று குறிப்பிட்ட விதமாக நம்புவதில் அல்ல விசுவாசம். தேவ உறவுடன் வாழ்ந்து, தேவ வழிகளை விரும்பி, தேவன் தங்களுக்கு நல்லதே செய்வார் என்று நம்புவதுதான் உண்மையான விசுவாசம். தேவ உறவுடன் வாழ்வதே விசுவாசம். தேவனை அவர் விரும்பும் வழிகளில் நடந்து கனப்படுத்தி வாழ்வதே விசுவாசம். அங்கே நம்முடைய எளிய நம்பிக்கைகளைக் கர்த்தர் கனப்படுத்துகிறார்.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய உறவை நீ உறுதிப்படுத்திடு,
உன்னுடைய விசுவாசத்தின் வலிமை அதுதான்.

மே

31

ஜீவ நீரோடை

இந்தப் பாதையில் நடக்க

இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு... 1 கொரிந்தியர் 1:9

1 கொரிந்தியர் 1:1-18

சிலர் இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கு தங்களை அர்ப்பணிக்கின்றனர். சிலர், இயேசு கிறிஸ்துவின் வழிகளில் நடக்க தங்களை ஒப்புக் கொடுக்கின்றனர். ஆயினும், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழ்கின்ற ஒரு வாழ்க்கை என்பதை சரியாகச் சிந்திக்கவில்லை. கர்த்தர் நமக்கு நியமித்த பாதை இடுக்கமான வாசலை உடையது. அது நெருக்கமான ஒரு வழி. அந்தப் பாதையில் நடக்க நாம் விரும்பினாலும் அவருடைய ஐக்கியம் இல்லாமல் அது கூடாது.

ஏனென்றால், இந்தப் பாதை நாம் விரும்புவதால் நடந்து செல்ல முடிந்த ஒன்று அல்ல. இது கர்த்தரால் நடத்திச் செல்லப்பட வேண்டிய பாதை. அவர் நம்முடைய கரத்தைப் பிடித்து நடத்திச் செல்லாமல், நாமே நடந்து செல்ல முடியாது. ஏனென்றால், இந்தப் பாதை ஆறுகளையும், அக்கினியையும், சிங்கக் குகைகளையும், அக்கினிச் சூளைகளையும் கடந்து போக வேண்டிய பாதை. அங்கே கர்த்தர் நம்மோடிருந்தால் மட்டுமே, அவருடைய கிருபையால் நாம் கடந்துபோக முடியும். எனவேதான் அப்போஸ்தனாகிய பவுல், நாம் அநேகம் உபத்திவரங்களின் வழியாக தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்றான்.

நாமாக ஒரு பக்திக்காக இந்தப் பாதையில் நடந்தால்தான் இது நடக்க இயலாத ஒரு பாதை என்பதை நாம் கண்டறிய நேரிடும். ஆனால், கர்த்தர் நம்மோடிருந்து நம்மை நடத்திச் செல்லும் போது, இது கடந்து செல்வதற்கு இயன்ற ஒரு பாதையே. ஆனால், சிலரிடம் கிறிஸ்தவ வழியில் நடக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனால், இயேசு கிறிஸ்துவோடு வாழ விரும்புகின்ற தாகம் இல்லை. இவர்கள் கர்த்தருக்காகக் கடுமையான பாதையில் நடக்கத் தங்களை ஆயத்தப்படுத்துகின்றார்கள். ஆனால், தேவ சமுகத்தோடு வாழ்ந்து தங்களை ஆவியானவர் நடத்திச் செல்லும் அனுபவத்தைக் காண கவனம் செலுத்தவில்லை.

ஆம், கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்பது அல்ல. கிறிஸ்துவின் ஐக்கியத்தோடு எல்லாச் சூழ்நிலைகளிலும் வாழ்ந்துவிட வேண்டும் என்ற தாகமே அவசியம். கிறிஸ்தவ பக்தி வாழ்க்கைக்குள் நாம் செல்வது அல்ல. கிறிஸ்துவின் ஐக்கியத்துக்குள் நாம் செல்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் ஐக்கியத்துடன் வாழ்வதை நாம் உறுதிப்படுத்தி வாழவேண்டும். கிறிஸ்துவோடு வாழ்கின்ற ஒரு அனுபவத்தைத் தேடி வாழும் போதுதான், கிறிஸ்துவுக்காக வாழ்கிற அனுபவம் நிறைவேறும்.

சிந்தனைக்கு...

இயேசு நம்முடன் இருப்பதை உறுதிப்படுத்தாதவரை, இயேசுவின் வழியில் நடப்பதில் நாம் உறுதியாயிருக்க முடியாது.

ஜூன்

1

ஜீவ நீரோடை

மாற்றம் இல்லையே ஏன்?

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்...
மத்தேயு 3:8

மத்தேயு 3:1-17

போதகர் ஒருவர் சத்தியத்தின் அடிப்படையில் தேவனுடைய வார்த்தைகளை மிகச் சிறப்பாகப் பேசினார். அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட ஒருவர் மிகவும் தொடப்பட்டார். தான் இது போன்றதோர் மிக அருமையான சத்தியத்தை இதுவரை கேட்டதில்லை என்றார். அதிலிருந்து அந்தப் போதகரின் பிரசங்கங்களைத் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தார். ஒவ்வொரு பிரசங்கத்தைக் கேட்டு முடிந்ததும், ஐயா, இன்று நான் கேட்ட இந்த அருமையான சத்தியத்தை, வேறு எவரும் பேசிக் கேட்டதில்லை என்பார்.

ஒரு நாள் அவருடைய மனைவி அந்தப் போதகரிடம் வந்தார். ஐயா, என் கணவர் உங்களிடமிருந்து கேட்டது போன்ற நல்ல வார்த்தைகளை எங்குமே இதற்கு முன் கேட்டதில்லை. ஆனால், இவ்வளவு கேட்ட பின்னரும், உங்களின் வார்த்தைகள் அவரிடம் எந்த மாறுதலையும் ஏற்படுத்தாமல் போனது ஏன் என்று கேட்டார். போதகருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

என்னுடைய ஊழியப்பாதையிலும் சிலரை நான் இப்படிப் பார்த்திருக்கிறேன். வருடக் கணக்கில் அவர்கள் கேட்டனர். ஒவ்வொரு முறை கேட்கும் போதும் மிக மிக ஆழமான சத்தியத்தைக் கேட்டதாக உணர்ந்தனர். அதனை அநேகருடன் பகிர்ந்து கொண்டனர். ஆனாலும், அவர்களின் வாழ்க்கை முறையில், அவை பெரிய மாற்றங்களை ஏற்படுத்தினதற்கான சான்றுகளைப் பார்க்க முடியவில்லை. சில நேரங்களில் எனக்கு அது பெருத்த ஏமாற்றமுமாக இருந்திருக்கிறது.

சத்தியத்தைக் குறித்த வாஞ்சையில்லாத பலர் உண்டு. இயேசு கிறிஸ்துவே வந்து பேசினாலும் அதைக் கேட்க மனமில்லாதவர் பலர். ஆனால், சிலர் அப்படியல்ல. அவர்களுக்குத் தேவ வார்த்தை கேட்கும் ஆர்வம் உள்ளது. வேத வசனச் சுவையை உணரும் தன்மை இருக்கிறது. ஆயினும், அவற்றால் பயனடைய இயலாத ஒரு உள்ளான பிரச்சினை உள்ளது. ஒரு நல்ல உணவை மிகவும் சுவைத்து சாப்பிட இயலும். ஆயினும், அந்த நல்ல உணவின் சத்துக்களை எடுத்துப் பயன்படுத்துகின்ற தன்மையுள்ளதாக சரீர நிலை இல்லை. அது ஒரு சரீரக் கோளாறு.

அநேகர் நல்ல பக்தி வாஞ்சையுள்ளவர்களே. ஆயினும், அவர்களுக்குள் ஆவிக்குரிய இருதயம் இல்லை.அவர்களிடம் மறுபிறப்பின் அனுபவம் இல்லை. அவர்களிடம் பரிசுத்த ஆவியின் கிரியை இல்லை. இன்னும் உள்ளே பழைய ஜன்ம சுபாவ மனிதனே உள்ளான். ஆவிக்குரிய புதிய மனிதன் இல்லை. எனவே, சுவைக்க முடிந்த சத்தியத்தால் வாழ்ந்து காட்ட இயலவில்லை.

சிந்தனைக்கு...

எவ்வளவு தரமான உரம் போட்டாலும்,
தரமற்ற மரம் அதனால் முழுப்பயன் பெறாது.

ஜூன் 2
ஜீவ நீரோடை

மரண பயம் ஏன்?

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்...
பிலிப்பியர் 1:21

பிலிப்பியர் 1:20-30

முனிவர் ஒருவரிடம் ஒருவன் வந்தானாம். தனக்கு இரண்டு வரங்கள் வேண்டும் என்றானாம். ஒன்று தனக்கு சொர்க்கம் வேண்டும் என்றானாம். இது ரொம்ப நல்ல ஆசைதான் என்றாராம் முனிவர். அடுத்த ஆசை என்ன என்று கேட்டாராம். அதற்கு அவன் எனக்கு சாகா வரம் வேண்டும் என்றானாம். இவ்விதமாக நம்மில் அநேகர் மோட்சத்திற்குச் செல்ல விரும்பும் நல்ல ஆசை உடையவர்களே. ஆனால், சாவைச் சந்திக்க அவர்கள் ஆயத்தமில்லை. ஆனால், மரணம் என்ற ஆற்றை சந்திக்காமல், மோட்சத்திற்குப் போக வேறு வழியில்லை.

நித்திய வாழ்வை விரும்புவோர் கையை உயர்த்துங்கள் என்றால் எல்லோரும் கையை உயர்த்துவோம். ஆனால், அதைப் பெறுவதற்கேதுவாக மரிக்க ஆயத்தமாக என்றால், எத்தனை பேர் கையை உயர்த்துவோம். யோர்தனைக் கடக்காமல் கானானின் வளமையை அனுபவிக்க முடியாது. மரணம் என்னும் யோர்தானைக் கடக்காமல், நித்திய வாழ்விற்குள் பிரவேசிக்க முடியாது. மரணத்திற்கு அஞ்சுவது இயற்கையான ஒன்றுதான். ஆனால், மரணபயம் நம்மை அடிமையாக்கக் கூடாது. இருள் நிறைந்த இரவில் காட்டு வழிப் பயணம் பலவானுக்கும் கொஞ்சம் அச்சத்தை தரவே செய்யும். ஆனால், அவன் பயத்தினால் நிலைகுலையாமல் தைரியத்தோடு முன்னோக்கிச் செல்வான்.

மரணத்தைக் குறித்த பயத்தின் முக்கியமான ஒரு காரணம், நித்திய வாழ்வைக் குறித்த நிச்சயம் இன்மையே. நித்திய வாழ்வைக் குறித்த நிச்சயமின்மையின் முக்கியமானதோர் காரணம், ஜீவனுக்கு அதிபதியாகிய இயேசுவோடிருக்கின்ற நிச்சயம் இன்மையே. இயேசுவோடிருக்கின்ற நிச்சயமின்மையின் முக்கியமான காரணம், இரட்சிக்கப்பட்ட அனுபவத்தைக் குறித்த நிச்சயமின்மையே. நித்திய ஜீவனாகிய இயேசு நம்மோடிருந்தால், மரணம் என்பது நம்மை அச்சுறுத்தும் சிந்தனையாகத் தொடராது.

அப்போஸ்தலனாகிய பவுல், சாவு என் ஆதாயம் என்றான். சாவு என்பதை எல்லோரைப் போல அவன், ஒரு துன்பமான நஷ்டமாக எண்ணாமல், ஒரு பெரிய லாபமாக எண்ணினான். ஏனென்றால் அவன் மரணத்தை எண்ணி மனக்கலக்கம் அடையவில்லை. அதற்குப் பதிலாக மரணத்தின் அடுத்த நிகழ்வாகிய நித்திய ஜீவ பிரவேசத்தை எண்ணி நம்பிக்கையை உணர்ந்தான். ஆம், உண்மையான கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, மரணம் என்பது உணர்வுப்பூர்வமாக ஒரு துக்கம் போல் உணரப்படலாம். ஆயினும், அவர்கள் உண்மையைச் சார்ந்து சிந்தித்து, தங்களுக்குள் நம்பிக்கையை உணருவார்கள்.

சிந்தனைக்கு...

மரணம் இந்தப் பூமியை விட்டு நம்மை பிரிக்கலாம்,
ஆயினும், நித்திய வாழ்வை விட்டு நம்மைப் பிரிக்காது.

ஜூன்
3
ஜீவ நீரோடை

மேடை ஆராதனை அல்ல

இதுவே புத்தியுள்ள ஆராதனை...
ரோமர் 12:1

ரோமர் 12:1-21

நாம் உணர்ச்சிகரமாகப் பாடலாம். நாம் உற்சாகமாக உடலை அசைத்து கர்த்ரை சந்தோஷத்தோடு ஆராதிக்கலாம். நாம் மிக மிகப் பரவசமாக கர்த்தரை துதிக்கலாம். நாம் மேடைகளில் நின்று தேவனை மிக மிக உச்சமாக அவரை நேசிப்பது போல முக பாவனை காட்டிப் பேசலாம். நாம் பாடல் பாடும் விதங்களும், ஆரவாரம் செய்யும் விதங்களும், கர்த்தருடைய மகிமையை மிக மிக உயர்வாகப் பேசும் விதங்களும் இந்த பூமியில் இதைவிட அதிகமாக கர்த்தரை கனப்படுத்த இயலுமா என்று சிந்திக்கத் தூண்டலாம்.

ஆனால், இவை யாவும் நாம் அப்படி செய்ய விரும்பிச் செய்த மேடைச்செயல் பாடுகளாக இருக்க முடியும். இவை யாவற்றையும் அப்படி நம்மை காட்டிக் கொள்வதற்காக மாம்சீக பலத்தால் செய்தவையாக இருக்க முடியும். இது போன்ற பரவச பக்திச் செயல்பாடுகளை பரிசுத்த ஆவியின் தூண்டுதல் இல்லாமல் சுயத்தூண்டுதலாலும் செய்ய முடியும். சினிமா நடிகன் தான் எடுத்துக் கொண்ட வேடத்திற்காக கேமிராவுக்கு முன்பாக நடித்துக் காட்டுவது போல, நாமும் செய்ய முடியும். இவற்றிற்கு தேவ ஆவியின் வல்லமை கட்டாயமானதல்ல.

ஆனால், புதிய ஏற்பாட்டின்படி தேவனை உண்மையாகக் கனப்படுத்த, பரிசுத்த ஆவியின் துணையின்றி ஒன்றும் செய்ய முடியாது. புதிய ஏற்பாட்டின்படியான உண்மையான ஆராதனை என்பது நம்முடைய சுபாவங்களாலும், நற்செயல்களாலும், நடத்தைகளினாலும், நல்ல மனோபாவங்களினாலும் உயர்ந்த நோக்கங்களாலும் தேவனைக் கனப்படுத்துவதாகும். இந்த ஆராதனை சபை அரங்கத்திலோ, மேடைகளிலோ நாம் செய்வது அல்ல. இது வாழ்க்கைப் பகுதிகளில் நடப்பது ஆகும். கலாத்தியர் 5:22, 23 வசனங்களின்படியான உயர்ந்த ஆவிக்குரிய பண்புகள் ஒரு மனிதனிடம் காணப்பட்டால், அவன்தான் உண்மையாகக் கர்த்தரை ஆராதிக்கிறான். அதாவது, அவன் உண்மையாக கர்த்தரைக் கனப்படுத்துகிறான்.

இப்படிப்பட்ட ஒரு ஆராதனையைச் செலுத்த இயன்ற மனிதன்தான் தேவ ஆவியின் அபிஷேகத்தை உடைய மனிதனாயிருக்கின்றான். மேடைகளிலும் ஆராதனை ஸ்தலங்களிலும் மிக மிக உணர்ச்சிகரமாக ஆடிப்பாடி, ஆரவாரம் செய்து ஆராதனை செய்யும் பல கிறிஸ்தவர்கள் வாழ்க்கையிலோ நற்குணமற்றவர்களாக உள்ளனர். ஏனென்றால், அவர்கள் மாம்ச பலத்தினாலும் சுய உற்சாகத்தாலும் தேவனை ஆராதிக்கின்றார்களேயன்றி, தேவ ஆவியின் பலத்தால் ஆராதிக்கவில்லை.

சிந்தனைக்கு...

தேவன் விரும்புகின்றபடி வாழாதவனுடைய ஆராதனைச் செயல் தேவனுக்கு வெறுப்பாகவே இருக்கும்.

ஜூன்
4
ஜீவ நீரோடை

போலி ஊழியம்

நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால்... 2 கொரிந்தியர் 11:15

2 கொரிந்தியர் 11:12-21

அவர் எவ்வளவு நன்றாகச் ஜனங்களை ஆராதிக்க வைக்கின்றார். அவர் எவ்வளவு சிறப்பாக அநேகரைச் ஜெபிக்க வைக்கின்றார். அவர் எவ்வளவு பிரமாத மாக அநேகரைக் கர்த்தருக்காக செயல்பட வைக்கின்றார் என்றெல்லாம் சிலர் கூறுவார்கள். ஒரு தேவ ஊழியர் பலரை ஆராதனையில் நடத்தும்போதும், பலரை ஜெபத்தில் நடத்தும்போதும், அநேகருடைய கண்களுக்கு அவர் மிகச்சிறந்த ஒரு ஊழியத்தைச் செய்வதாகத் தோன்றும். ஏனென்றால், எப்படியோ அநேகர் இவரால் பக்தியாகச் செயல்படுகிறவர்களாக மாறியிருக்கின்றார்களே என்ற திருப்தி பலருக்கு உள்ளது.

ஆனால், ஜனங்களை ஆராதிக்க வைப்பவர் அல்ல, அவர்களைச் ஜெபிக்க வைப்பவர் அல்ல, அவர்களைக் கொடுக்க வைக்கின்றவர் அல்ல, அவர்களை ஊழியம் செய்ய வைக்கின்றவர் அல்ல, அவர்களை கர்த்தரோடு வாழவைக்கவும், கர்த்தருடைய வழிகளில் நடக்க வைக்கவும் செய்கின்றவரே உண்மையான ஊழியர். அநேகர் பாவிகளாயிருக்கும்போது ஜெபிக்கின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். பலர் பாவிகள் என்ற நிலையிலிருந்து ஆராதிக்கின்றவர்கள் என்ற நிலைக்கு மாறிவிடுகின்றனர். அநேகர் பாவிகள் என்ற நிலையிலிருந்து தேவ ஊழியர்கள் என்ற நிலைக்கு மாறிவிடுகின்றனர்.

ஆனால், இது ஒரு போலி அனுபவம். இதுதான் போலியான ஊழியர்களின் போலியான ஊழிய முறையால், அநேகர் போலியான கிறிஸ்தவர்களாக மாறுகின்ற காரியம். சாத்தான் அவர்களை இரட்சிப்பின் அனுபவத்திற்குச் செல்ல விடாமல் இடை மறித்து ஜெப அனுபவத்திற்கும், ஆராதனை அனுபவத்திற்கும், ஊழிய அனுபவத் திற்கும் கொண்டு போய்விடுகின்றான். அவர்கள் மனந்திரும்புதலைக் காண முடியாமலும், வாழ்க்கை மாற்றம் காணாமலும், சுபாவமாற்றம் காணாமலும் நேரடியாகப் போலி அனுபவங்களுக்குள் சென்று விடுகின்றனர்.

பல சுவிசேஷகர்களும் பாஸ்டர்களும் ஜனங்கள் மனந்திரும்புதலின் வழி யாகச் செல்லாமல், நேரடியாகச் ஜெப அனுபவத்திற்கும், ஆராதனை அனுபவத் திற்கும் வந்துவிடச் செய்கின்றனர். அவர்கள் எப்போதும் ஜனங்களுக்குச ஜெபிக் கவும், ஆராதிக்கவும், கற்றுக் கொடுக்கின்றார்கள். அவர்கள் எப்போதும் ஜனங் களுக்குக் காணிக்கை கொடுக்கவும், வளமை வாழ்வை விசுவாசிக்கவும் கற்றுக் கொடுக்கின்றனர். ஏனென்றால், சத்திய வழியைச் ஜனங்கள் கண்டுவிடாதபடி, இந்த போலி ஊழியர்களைச் சாத்தான் நடத்துகின்றான்.

சிந்தனைக்கு...

பக்தியைப் பல செயல்களால் காண்பிக்கலாம்,
பரிசுத்தத்தை நல்ல சுபாவங்களால் மட்டுமே காட்ட முடியும்.

ஜூன்
5
ஜீவ நீரோடை

மதிப்புத் தெரியாதவர்கள்

பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்...
நீதிமொழிகள். 22:1

நீதிமொழிகள் 22:1-18

தங்கத்தின் மதிப்பு எல்லோருக்கும் தெரியும். பணம், அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றின் மதிப்பு எல்லோருக்கும் தெரியும். அழகின் மதிப்பு எல்லோருக்கும் தெரியும். ஆனால், நல்ல குணங்களின் மதிப்பு எல்லோருக்கும் தெரியாது. அதனை மேன்மையானதாகவும், மதிப்பிற்குரியதாகவும், எண்ணுகின்ற தன்மையுள்ள இருதயம் எல்லோருக்கும் இல்லை. ஆனால், தேவனுடைய பார்வையில் மிகுந்த மேன்மைக்குரியது நற்சுபாவங்களே.

அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்த ஒருவர் பெருமையாகவும், ஆணவமாகவும், கோபக்காரராகவும் இருந்தார். அந்த நாட்களில் அவருடைய குணங்களைச் சிலர் பார்த்து அதிருப்தி அடைந்தாலும், எல்லோரும் அவரைப் பயத்தோடு மதிப்பார்கள். அவர் விஷயத்தில் கொஞ்சம் அடங்கியே நடந்து கொள்வார்கள். ஒரு நாள் அவர் தன்னுடைய வாழ்க்கையில் மனந்திரும்புதலைக் கண்டு சுபாவ நிலைகளில் மாற்றம் கண்டார். அவரிடம் தாழ்மை, பொறுமை, எளிமை, சாந்தம் போன்ற பண்புகள் வந்தன. ஆனால், ஒரு காலத்தில் அவரைப் பார்த்தாலே பயத்தோடு நடந்து கொள்கின்றவர்கள், இப்போதோ அவரைக் கண்டு கொள்வதில்லை. அவருடைய நல்ல குணங்கள் அவரை மதிக்கத் தூண்டாமல், அவரைச் சாதாரணமாகப் பார்க்கத் தூண்டியது.

சில நேரங்களில், அது அவரைக் கொஞ்சம் வருத்தப்படுத்தினாலும், அவர் சோர்ந்து போகவில்லை. ஏனென்றால், தேவனுக்கேற்ற குணங்களை மனிதன் மதிக்கவில்லையே என்று வருத்தப்படுவதில் நியாயமில்லை. ஏனென்றால், உலக மனிதர்கள் உலகத்திற்குரியவைகளை மேன்மையாக எண்ணும் தன்மை உடையவர்கள். அவர்களால் உன்னதத்தில் மதிப்பிற்குரியவைகளாக எண்ணப்படும் விஷயங்களை, மதிப்பிற்குரியதாக மதிக்க இயலாது.

இன்றைய சினிமாக்களில் கதாநாயகர்களாகக் காட்டப்படுகிறவர்கள் பெரும்பாலும் எப்படி காட்டப்படுகிறார்கள்? நல்லவர்களாக அல்ல. பண்பாளர்களாக அல்ல. அவர்கள் தாழ்ந்து போகாதவர்கள். அலட்சியமாக நடக்கின்றவர்களாக. தங்களை மதிக்கும்படியான கட்டாயத்தைப் பிறருக்குக் கொடுக்கின்றவர்கள். தங்களைச் சீண்டுகிறவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பார்கள். இப்படிப்பட்டவர்களின் சினிமா குணாதிசயங்களை இவ்வுலக மனிதர்கள் தங்களிடமும் காண விரும்புகின்றனர். ஆனால், ஒரு நல்ல பண்பாளனை அவர்கள் கோழை என எண்ணுகின்றார்கள். எனவே, எவை உயர்ந்தவைகள் என்பதை அறியும் கிருபை பெற்ற நாம், மற்றவர்கள் அவற்றை உயர்வாக எண்ணி மதிக்கவில்லையே என்று எண்ணிச் சோர்ந்து போகக்கூடாது.

சிந்தனைக்கு...

நற்குணத்தை எத்தனை பேர் பாராட்டுகிறார்கள் என்றுபாராதே, உனக்கு அது பயன்படுகிறதா என்று பார்.

பாடங்கள்

உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்...
சங்கீதம் 119:71

சங்கீதம் 119:57-72

ஒருவர் பலரோடு அன்பாகப் பழகுகின்றவர். பலருக்கு பல உதவிகளைச் செய்கின்றவர். ஆனால், அவருக்கு சில கஷ்டங்கள் வந்தபோது அவர் பிறருக்கு ஆதரவாயிருந்தது போல, அவருக்கு யாரும் ஆதரவாயிருக்கவில்லை. அது அவருக்குக் கசப்பான அனுபவமாயிருந்தது. ஆனாலும், அது தனக்கு நிறைய விஷயங்களை கற்றுக் கொடுத்ததாக உணர்ந்தார். நாம் பலருக்கு ஆதரவாயிருந்தாலும், நமக்கொரு கஷ்டம் வந்தால், கர்த்தருடைய ஆதரவை மட்டுமே நம்பியிருக்க வேண்டும் என்ற நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டார். நாம் பிறருக்குச் செய்த நல்லவைகளின் பலனை பிறரிடம் தேடாமல், தேவனிடம் மட்டுமே தேட வேண்டும் என்று உணர்ந்து கொண்டார்.

யோசேப்பு சிறையில் இருந்த போது சக கைதிகளுக்கு ஆதரவாயிருந்தான். தான் கூறினபடியே நல்லதைக் கண்ட பான பாத்திரக்காரனால், தனக்கு நல்லது நிகழும் என அவன் எதிர்பார்த்தான். ஆனால், அப்படி எதுவும் நிகழவில்லை. அது ஒரு கசப்பான அனுபவம் என்றாலும், அந்த நாட்களில் அவன் நிறைய நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. எங்கிருந்தோ ஆதரவான காரியங்கள் வருவது போன்ற ஒரு சூழல் தோன்றினாலும், தேவ ஆதரவை முற்றிலும் நம்பிச் சார்ந்திருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து கொண்டான்.

சில சூழ்நிலைகள் நமக்குக் கசப்பையும், ஏமாற்றத்தையும், சலிப்பையும் ஏற்படுத்தலாம். ஐயோ, இப்படி ஆகிவிட்டதே, ஐயோ, இப்படி நடந்து கொண்டார்களே என்று கசப்புடன் எண்ணத் தோன்றலாம். ஆனால், கசப்பான நிகழ்வுகளாக அவைகளைப் பார்க்காமல், நல்ல பாடங்களைக் கற்றுத்தந்த நிகழ்வுகளாகப் பார்க்க வேண்டும். ஒரு சூழ்நிலை நமக்கு எவ்வளவு வருத்தத்தைத் தந்தது என்பதை அல்ல. அந்தச் சூழ்நிலை நமக்கு என்ன உண்மைகளைக் கற்றுத்தந்தது என்பதையே பார்க்க வேண்டும்.

தாவீதை உடனிருந்த எல்லோரும் கைவிட்டனர். அது மிகவும் கசப்பான ஒரு காரியம். சிக்லாக் என்ற பகுதிக்கு வந்த போது, அவன் எங்கும் சார்ந்து நிற்க இயலாத ஒரு சூழ்நிலையை உணர்ந்தான். ஆனால், அந்தச் சூழ்நிலையின் கசப்பை உணர்ந்து அதனையே திரும்பத் திரும்பச் சிந்திக்காமல், கர்த்தரை முழுமையாகச் சார்ந்து பற்றிக் கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்தான். ஆம், வாழ்க்கை காணச் செய்யும் கசப்புகளை அல்ல. அது கற்றுத்தரும் பாடங்களையே கவனிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

நேற்றுவரை நடந்தவைகளில் எதையும் கற்காவிட்டால்,
நாளைக்கும் நாம் விரும்பாதவைகள் தொடர்கதையாகும்.

ஜூன் 7

ஜீவ நீரோடை

அன்பு என்றால்

அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்...
கொலோசெயர் 3:19

கொலோசெயர் 3:12-25

இன்னொருவரின் வார்த்தையால், செயலால், சுபாவத்தால், மனம் காயமடைந்துள்ளது. மிகுந்த வருத்தமும், கோபமும், கசப்பும் மனதில் ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு மனநிலை காணப்படும்போதும் உண்மையான கிறிஸ்தவனாக இருக்க விரும்பினால், மற்றவரை நேசிக்க வேண்டியது அவசியமாயுள்ளது. இது எப்படிச் சாத்தியமாகும்? மற்றவரைக் குறித்த ஒரு அதிருப்தியும், கோப உணர்வும் மனதில் காணப்படும் போது, அவரிடம் போய் அன்பாக பேசுவதும், அவருக்கு அன்பான செயல்களைச் செய்வதும் சாத்தியமானவைகளா?

சத்துருவை சிநேகியுங்கள் என்று இயேசு சொன்னார். சத்துருவின் செயலால் ஏற்பட்ட ஒரு எரிச்சலுணர்வு மனதில் இருக்கும் போது, எப்படி அன்பொழுக அவரிடம் பேச முடியும்? அன்பு என்றால் என்ன? 1 கொரிந்தியர் 13:4 சொல்வது என்ன? அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்பு சகலத்தையும் சகிக்கும் என்று 1 கொரிந்தியர் 13:7 சொல்கிறது. சத்துருவை நேசித்தல் என்பது உடனே போய் அன்பாய் பேசுவதும், அன்பான செயல்களைச செய்வதும் என்று அர்த்தமாகிவிடாது. அன்பு என்பது சுபாவம் சார்ந்தது.

கோபப்படவேண்டிய இடத்தில் அமைதியாயிருப்பது அன்புதான். பதிலுக்கும் பதில் செய்யாமல் சகித்துக் கொள்வது அன்புதான். மற்றவர் நடந்து கொண்டது போல நாம் நடந்து கொள்ளாமல், பொறுமை காப்பது அன்புதான். உதாசினத்திற்கு உதாசினத்தைப் பதிலாகக் கொடுக்காமலிருப்பது அன்புதான். வெறுப்புணர்வு வெளிப்படப் பேசாமல் தாழ்ந்து போவது அன்புதான். ஆம், மற்றவருக்கு எதிராக சிந்திக்காமலும், மற்றவரைக் குறித்த மனக்கோபத்தை தக்க வைக்காமலிருப்பதும் அன்புதான். நம்முடைய சிந்தனைகளால் மற்றவருக்கு எதிராக யோசிக்காமலும், நம்முடைய செயல்களால் மற்றவருக்குப் பதிலுக்குப பதில் செய்யாமலும், நம்மை நமக்குள் சாந்தப்படுத்திக் கொள்வதும் அன்புதான்.

அன்பு என்றால் நாம் மற்றவரோடு ஏதோ ஒரு விஷயத்தில் கோபதாபமாக இருக்கும் போது அன்பொழுகப் பேசுவதும், அன்பின் செயல்களைச் செய்வதும் என்று அர்த்தம் அல்ல. நாம் எதிர்வினை ஆற்றாமல் சகித்துப் பொறுத்து, தாழ்ந்து விட்டுக் கொடுத்துப் போவதெல்லாம் அன்பின் செயல்பாடுகளே. வாயினால் பேசுவது மட்டுமல்ல. சரியான சுபாவங்களைக் காத்துக் கொள்வதும், ஆத்திரம் அவசரம் சாராமல், சத்தியம் சார்ந்து செயல்படுவதும் அன்புதான்.

சிந்தனைக்கு...

கோப மனநிலையை மறைத்து அன்பாகப் பேசுவது அல்ல,
அந்தக் கோப மனநிலையைச் சார்ந்து செயல்படாமையே அன்பு.

ஜூன் 8

ஜீவ நீரோடை

அன்பு நம் விருப்பம்

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்...
மத்தேயு 5:44

மத்தேயு 5:31-48

திருச்சபை ஒன்றில் புதிதாக ஒரு குடும்பத்தினர் வந்து இணைந்தனர். அவர்கள் வேறு ஊரிலிருந்து அந்த ஊருக்கு வேலை சம்பந்தமாக இடம் மாற்ற மாகி வந்தவர்கள். அவர்கள் அந்த சபைக்கு வந்த சில வாரங்களுக்குள்ளேயே அவர்களின் திருமண நாள் வந்தது. இவர்கள் ஆச்சரியப்படும் விதமாக அந்த சபையார் இவர்களின் திருமண நாளை மிகச் சிறப்பாகக்கொண்டாடினார்கள். புதிதாக வந்த எங்கள் மேல் நீங்கள் இவ்வளவு அன்பு காட்ட, நாங்கள் எதுவும் செய்யவில்லையே என்று அந்த குடும்பத்தினர் உணர்ச்சிகரமாகக் கூறினார்கள். அதற்கு அந்தச் சபையார், புதிதாக வருகின்ற எவருக்கும் இவ்விதமாகச் செய்து, அன்பு காட்ட வேண்டும் என்று நாங்கள் ஏற்கெனவே தீர்மானம் பண்ணி வைத்திருக்கின்றோம் என்றனர் அந்தச் சபையார்.

அன்பு என்பது, ஏதோ ஒன்று நமக்குப் பிரியமாக பிறரால் நடந்ததினால் தூண்டப்பட்டு, மற்றவர் மகிழும்படியாகச் செய்வது அல்ல. அன்பு என்பது நாம் மற்றவர்கள் விஷயத்தில் அவர்களுக்கு நலமாகச் செயல்பட வேண்டும் என்ற தீர்மானம் சார்ந்தது. அவர்களிடம் நாம் அன்பாக நடக்கத்தக்கதாக நமக்கு அவர்களால் எதுவும் நடக்கவில்லை. அவர்களின் அன்பான செயலினால் தூண்டப்பட்டு நாம் அவ்விதம் செய்யவில்லை. இது நாம் தேவனுக்குப் பிரியமாக இப்படியாக மற்றவர்கள் விஷயத்தில்நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றோம்.

தேவனும் அப்படியே. அவர் நம்மிடம் முந்தி அன்பு கூர்ந்தார். அவர் நம்மிடம் அன்பாயிருப்பது அவருடைய தீர்மானம் சார்ந்தது. நாம் நல்லவர்கள் என்பதால் அல்ல. நாம் அவரைப் பிரியப்படுத்துகிறோம் என்பதால் அல்ல. நாம் பாவிகளாயிருந்தபோதும் அவர் நம்மேல் அன்பு கூர்ந்தார். நாம் மாம்சத்தாலும் மனதாலும் பாவம் செய்து வாழ்ந்த போதும், அவர் நம்மேல் அன்பு வைத்தார்.

மற்றவர்கள் நாம் அன்புகூரத்தக்கதாக நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் சிந்திப்பது சரிதான். ஆனால், நாம் அன்பு காட்டுவதையும் அன்பு காட்டாமல் போவதையும் அவர்களின் செயல்பாடுகள் தீர்மானிக்கக்கூடாது. நாம் தேவனைப் பிரியப்படுத்தும் விதமாகப் பிறரிடம் அன்பு காட்டி வாழத் தீர்மானம் செய்துள்ளோம். அவர்கள் நல்லவர்களாக இருப்பதால் அல்ல. நாம் கர்த்தருடைய பார்வையில் நல்லவர்களாக இருக்க விரும்புவதால், அப்படிச் செயல்படுகின்றோம்.

சிந்தனைக்கு...

பிறர் உன்னை நேசிக்கவில்லை என்று கோபமடையாதே, அவர்களால் உன்னை நேசிக்க இயலவில்லை. அதற்காகப் பரிதாபப்படு.

ஜூன்
9
ஜீவ நீரோடை

பாரம் அல்ல

அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல...
1 யோவான் 5:3

1 யோவான் 5:1-13

கர்த்தருடைய வார்த்தைகளின்படி வாழ்வதற்கு தன்னை அர்ப்பணித்திருந்தார் ஒருவர். ஒருநாள் அவர் கர்த்தரை அறியாத தன்னுடைய நண்பரைத் தன்னுடைய போதகரின் பிரசங்கத்தைக் கேட்க அழைத்துச் சென்றிருந்தார். அந்த போதனையைக் கேட்ட அவர் ஆச்சரியமடைந்தார். இந்தப் போதனைகளின்படி நீ வாழ்கின்றாயா என்று கேட்டார். அதற்கு அவர், ஆம், நான் இந்தப் போதனைகளின் படி வாழ்கின்றேன் என்றார். அதனைக் கேட்ட அந்த நண்பர் உன்னால் எப்படி இந்த அளவிற்கு இப்படிப்பட்ட போதனைகளின்படி வாழ முடிகின்றது. என்னால் இது போன்ற போதனைகளில் 10 சதவிகிதத்தைக்கூட பின்பற்ற முடியாது என்றார். அதற்கு அவர் உன்னால் முடியாதது ஒரு பிரச்சினை அல்ல. கர்த்தர் உன்னிடம் வந்துவிட்டால் அது சாத்தியமாகிவிடும் என்றார்.

கிறிஸ்தவப் போதனையின்படி வாழ்வது என்பது மிக மிகக் கடுமையான ஒன்று. ஆனால், அது மிக மிக எளிதான ஒன்றும்கூட. கிறிஸ்தவப் போதனையின் முதல் படி இப்படி இப்படி நட, அப்படி அப்படி நடவாதே என்பது அல்ல. முதலாவது கர்த்தரோடு நடக்க வா. முதலாவது கர்த்தருடைய ஐக்கியத்தோடு வாழ வா. இது தான் முதலாவது போதனை. கர்த்தர் நம்முடன் சேர்ந்து விட்டால் இதுவரை நமக்கு முடியாது என்று இருப்பவை முடிகின்றவையாக மாறிவிடும். தேவ உறவுடன் வாழ்வதை விசுவாசத்தின் மூலம் அனுபவிக்க ஆரம்பித்துவிட்டால், கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்வது கடினமானதல்ல.

அநேகர் கிறிஸ்துவுடன் நடத்தல் என்ற முதல் அனுபவத்திற்கு வராமல், நேரடியாக கிறிஸ்துவின் போதனையின்படி நடத்தல் என்ற அனுபவத்திற்குப் போய் விடுகிறார்கள். அங்கே கிறிஸ்துவின் போதனைகள் சுமப்பதற்கு இயலாத பெரிய சுமைகள் ஆகிவிடுகின்றன. தங்களின் பாரத்தை இயேசுவிடம் வைத்து இளைப்பாற வந்தவர்கள், சரியான ஆவிக்குரிய விழிப்புணர்வு இல்லாததால், கிறிஸ்தவப் போதனைகள் என்ற மிகப் பெரிய சுமையைச் சுமக்க முற்பட்டுச் சோர்ந்து போகிறார்கள்.

ஆம், நாம் முதலாவது வர வேண்டிய இடம், கிறிஸ்தவப் போதனைகள் என்ற கடுமையான சுமைகளைச் சுமக்கும் இடத்திற்கு அல்ல. நாம் வரவேண்டியது கிறிஸ்துவின் ஐக்கியம் என்ற இடத்திற்கே. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக நமக்குள் ஏற்கும் முதல்படிக்கு நாம் வர வேண்டும். இயேசுவிடம் இணைந்து கொள்ளத் தெரிந்தவனுக்கு, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவின் ஐக்கியத்தால் எளிதாக வாழத்தக்க ஒன்றே.

சிந்தனைக்கு...

கர்த்தரோடு நடப்பது இன்னதென்று புரிந்து கொண்டால், கட்டளைகளைப் பின்பற்றுவது கடினமான விஷயமல்ல.

ஜுன் 10

ஜீவ நீரோடை

பணம் எச்சரிக்கை

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து...
எபிரெயர் 13:5

எபிரெயர் 13:1-17

மின்சாரம் மிக மிகப் பயனுள்ளது. மின்சாரம் இல்லாவிட்டால் இன்றைய உலகம் ஸ்தம்பித்து விடும். ஆனால், மின்சாரம் அதிகமாகச் செல்லுகின்ற இடங்களில், போடப்பட்டிருக்கும் பலகை என்ன சொல்கிறது. மின்சாரம் மிக மிகப் பயனுள்ளது என்பது அல்ல." அபாயம்" என்று எழுதப்பட்டு, எலும்புக்கூட்டின் படம் போடப்பட்டிருக்கும். ஏனென்றால், அதனை பயனுள்ளது என்று சொல்லிக் காட்டத் தேவையில்லை. ஆனால், அது அபாயமானது என்று சொல்லிக் காட்ட வேண்டியுள்ளது.

பணமும் அப்படித்தான், பணம் இல்லாவிட்டால் நாம் எப்படியிருப்போம் என்பது நமக்குத் தெரியும். பணம் மிக மிகப் பயனுள்ளது என்று நாம் அறிவோம். ஆனால், வேதாகமத்தில் பணம் பயனுள்ளது. ஆசீர்வாதமானது என்று அல்ல. வேதாகமம் எங்கும் பணம் விஷயத்தில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்ற செய்தியே கொடுக்கப்பட்டுள்ளது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர் என்ற எச்சரிப்பே முக்கியமாகச் சொல்லப்பட்டுள்ளது.

மிக மிகப் பயனுள்ள மின்சாரத்தை கவனமாகக் கையாளாவிட்டால், அது மனிதனைக் கொன்றுவிடும். அது போல, மிக மிக அவசியமாகவுள்ள பணத்தை போதிய எச்சரிக்கையோடு கையாளாவிட்டால், அது நம்மைப் பலவிதங்களில் பாழாக்கிவிடும். பணம் பெருகப் பெருக, சுயசார்ப்பு பெருகுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. மனிதன் தன்னையே அதிகமாக நம்பிவிடும் போது, அவன் தான் விரும்பும் வழியிலே தங்குதடையின்றி ஓடவிரும்புவான். அந்த ஓட்டத்தின் பாதை தவறானதாகவும், விரைந்து விழவைப்பதாகவும் இருக்கும். பணம் பெருகப் பெருக நல்ல குணங்களைத் தக்கவைப்பது மிக மிகக் கடினமான விஷயமாகிவிடும். பணம் நல்ல குணத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, மோசமான குணங்களை முன்னிறுத்தி பெருமைப்படச் செய்யும். அதுவே வீழ்ச்சியை விரைவுபடுத்தும்.

பணம் என்பது யாரிடத்தில் இருந்தாலும் அது தன்னுடைய எல்லையை அங்கே விரிவடைய செய்யவே விரும்பும். அதனை உடையவர்கள் போதும் என்ற திருப்தியின் எல்லையை எட்டுவது மிகவும் கடினம். பணம் எங்கே பெருகுகிறதோ அங்கே இன்னும் வேணும், இன்னும் வேணும் என்ற ஆசையையும் அது ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும். இந்த ஆசைதான் நம்மை கர்த்தருடைய ஒழுங்கை விட்டும், அவருடைய பிரமாணங்களை விட்டும் நம்மை விலகிப் போகத்தூண்டும். எனவே, எச்சரிக்கை தேவை.

சிந்தனைக்கு...

அதிகமாகப் பணம் சேர்க்கின்றவனுக்கு
அந்தப் பணத்தால்தான் அதிக கஷ்டம் வரும்

ஜூன்
11
ஜீவ நீரோடை

கடக்க இயலுமா?

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து...
சங்கீதம் 84:6

சங்கீதம் 84:1-12

வாழ்க்கையில் சில நேரங்களில் இப்படி இப்படி நடக்கும், அப்படி அப்படி நடக்காது என்று நம்மால் உறுதியாகக் கூற இயலாது. இங்கே தேவன்மேல் விசுவாசம் என்பது நான் விரும்பினபடி நடக்கும் என்றோ, நான் விரும்பாதது நடக்காது என்றோ இராது. ஆனால், விரும்பியது நடவாவிட்டாலும் அல்லது விரும்பாதது நடந்தாலும் அந்தச் சூழ்நிலையை நான் தேவ கிருபையால் கடந்து செல்வேன் என்பதே இங்கே விசுவாசம். நான் தேவனைச் சார்ந்து வாழ்வதால் நான் கடக்க முடியாதது என்று ஒன்று இல்லை என்பதே விசுவாசம். கற்பனை செய்து பார்த்தால் கடக்க முடியாதது போலவே தோன்றும். ஆனால், அது அப்படியே நடக்க நேரிட்டால் அது கடக்க இயன்ற ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது என்பதே தெரியவரும்.

எனக்குத் தெரிந்த சிலர், ஈடு செய்ய இயலாத இழப்பு என்பது போல சில இழப்புகளைச் சந்தித்திருக்கின்றார்கள். அவற்றால் அவர்கள் நொந்து நொறுங்கி மிகவும் சோர்ந்துபோய் இருப்பார்கள் என்றே நான் மனதில் நினைப்பேன். அவர்களுக்கு ஆறுதலாக எதையாவது பேச விரும்பும் போது, அவர்கள் அதனை நம்பிக்கையோடு கேட்க இயலுமா என்ற தயக்கத்துடன் நான் பேசுவேன். ஆனால், நான் அவர்கள் எப்படியிருப்பார்கள் என்று கற்பனை செய்ததைவிட, அவர்கள் நன்றாயிருப்பதைக் கண்டிருக்கின்றேன். அவர்கள் அதனைக் கடந்து செல்ல இயன்றவர்களாயிருந்திருப்பதை நான் அறிவேன்.

இவையெல்லாம் நடந்து விட்ட பிறகு, இனி இவர்கள் நல்ல ஒரு இறை நம்பிக்கையோடு இருப்பார்களா என்று, எனக்குள் நான் கேள்வி கேட்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் கர்த்தருடைய கிருபையால் அந்தக் கடினமான சூழ்நிலைகளையும் கடக்க இயன்றவர்களாயிருந்திருக்கின்றார்கள். கர்த்தர் அவர்களை யோர்தான் போன்ற அந்தச் சூழ்நிலைகளைக் கடந்து போக வைத்திருகின்றார்.

துன்பம் என்ற ஒன்று வந்துவிட்டால் கர்த்தரை நம்பாதவர்களும் அதனைக் கடந்துதான் போகிறார்கள் என்று நாம் சொல்லலாம். கடந்து செல்லுதல் என்பது வேறு வழியில்லாமல் சகித்துத் தாங்கிச் செல்லுதல் அல்ல. ஆனால், உண்மையான தேவனுடைய பிள்ளைகள் சோதனைகளைக் கடக்கின்றவர்கள் மட்டுமல்ல. தங்களைக் கடந்து போக வைக்கும் கர்த்தரின் செயல்களைக் காண்கிறார்கள். அவ்விதமான நாட்களில் ஒரு விசேஷமான ஆறுதலும், ஆதரவும், சமாதானமும் நம்பிக்கையும் தங்களைப் பலப்படுத்துவதை அவர்கள் உணருகின்றார்கள். தங்கள்மேல் கரிசனையுள்ள ஒரு கர்த்தரை அவர்கள் அங்கே அறிகின்றனர்.

சிந்தனைக்கு...

சோதனைகளின் முன்பு நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதை அல்ல, தேவன் எவ்வளவு பெரியவர் என்பதையே பார்க்க வேண்டும்.

ஜூன்
12
ஜீவ நீரோடை

மறைக்கப்பட்ட நியாயம்

உன் நியாயத்தைப் பட்டப்பகலைப் போலவும்...
சங்கீதம் 37:6

சங்கீதம் 37:1-20

ஒருவர் தன்னுடைய மனைவியால் அவ்வப்பொழுது மிகவும் காயப்பட்டார். மனைவியின் வார்த்தைகளும், செயல்களும், சுபாவங்களும் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. ஆனால், இது அவருக்கு பெரிய விஷயம் அல்ல. இவ்விதம் மனதைக் காயப்படுத்தும் மனைவியிடம், இப்படி நீ நடந்து கொள்வது நியாயம் அல்ல என்று அவர் சில நேரம் கூற முற்படுவார். ஆனால், அப்படி கூற முற்படும் போதெல்லாம், அவள் தன்னுடைய வாதத்திறமையால் அவரையே குற்ற வாளி என்று காட்டிவிடுவாள். தன்னைக் கணவனால் துன்புறுத்தப்படும் மனைவி போல காட்டிக் கொள்வதில் அவள் ஜெயித்து விடுவாள். தன்னுடைய நியாயத்தை ஒரு போதும் நியாயமாகக் காட்ட இயலாமல் போனதே, அந்தக் கணவருக்கு அதிகமான காயத்தைக் கொடுத்தது.

நீதிமன்றங்களுக்குச் செல்லுகின்ற அநேகர் தங்களின் நியாயத்தை உரிய விதமாக விளங்கப்பண்ண முடிவதில்லை. அநீதியாளரின் அநீதியை விளங்கப் பண்ணவும் முடிவதில்லை. சட்டத்தில் இருக்கின்ற சில நுட்பமான ஓட்டைகளும், எதிர்வாதமிடும் வக்கீலின் வாதத்திறமையும், உண்மையான நீதியையும் நியா யத்தையும் விளங்கப் பண்ணவிடாமல் செய்துவிடும். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஒருபுறம், அந்த அநீதியை அநீதி என்று உறுதிபடுத்திக் காட்ட இயலாமல் போன பலவீனம் இன்னொரு புறம். இதனால் சிலர் மன அழுத்தங்களைக் காண நேர்ந்து மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

ஆம், அநீதியைத் தடுக்கவும் முடியாமல், அந்த அநீதியை அநீதி என்று காட்டவும் முடியாமல் போவது, மிகவும் வருத்தமான விஷயம். ஆனால், இந்தப் பூமியில் இவை இயற்கையானவைதான். தேவனுக்கு முன்பாக நம்மைக் காண பித்து, நாம் தேவனுக்கு முன்பாகச் சரியாக இருக்கின்றோம் என்ற நிச்சயத்தைப் பெற வேண்டும். நீதிபரராகிய கர்த்தர் மட்டுமே எது நீதி, எது அநீதி என்று அறிவார். வாதத் திறமையாலோ சொல்லாற்றலாலோ யாரும் சரியை தவறு என்றும், தவறை சரியென்றும் தேவனுக்கு முன்பாகக் காட்ட முடியாது. உள்ளந்திரியங்களைச் சோதித்தறிகிறவராகிய கர்த்தர், நம்மை எப்படிப் பார்க்கின்றார் என்பதே முக்கியம். ஒரு காலகட்டத்தில் யோசேப்பு ஒரு தவறானவன் போல பிறரால் பார்க்கப்படும் நிலை ஏற்பட்டது. தன்னை தவறற்றவனாக விளங்கப் பண்ணும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆயினும், தேவனுக்கு முன்பாக அவனுடைய நியாயம் மறைக்கப் படவில்லை. ஒருநாள் தேவன் அவனுடைய நியாயத்தைப் பட்டப்பகல் போல விளங்கப்பண்ணினார்.

சிந்தனைக்கு...

மற்றவர்கள் தவறாக இருந்தால்,
அவர்களால் நாம் சரியாகப் பார்க்கப்பட வாய்ப்பில்லை.

ஜூன்
13
ஜீவ நீரோடை

ஆசீர்வதிக்கப்பட்டவன்

எல்லாம் எனக்குக் கிடைத்தது பரிபூரணமும் உண்டாயிருக்கிறது... பிலிப்பியர் 4:18

பிலிப்பியர் 4:1-23

மிகப்பெரிய ஒரு தேவ மனிதனாக வேதாகமத்தில் பார்க்கப்படும் அப்போஸ்தலனாகிய பவுலிடம் பணம், பொருள், ஆஸ்தி, அதிகாரம், ஆடம்பரக் கையிருப்பு என எதுவும் இருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு மனிதன், உலகத்தின் பார்வையில் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதனாகத் தோன்ற இயலாது. ஏனென்றால், மனிதர்கள் பணம், செல்வம், அந்தஸ்து ஆகியவற்றைத்தான் ஆசீர்வாதத்தின் அடையாளங்களாகப் பார்க்கின்றனர். எனவே, பவுலைப் போன்ற ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கை யாருக்கெல்லாம் வேண்டும் என்று கேட்டால், யாராவது எனக்கு வேண்டும் என்று சொல்வது கடினம்.

ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதன் என்பதற்கான அடையாளங்கள் பல உண்டு. உலகம் கூறுகின்ற விதமான செல்வவளம் எதுவுமில்லாமலே, எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க இயன்ற மனிதன் (பிலி 4:4) பணமும், பொருளும், வெள்ளியும், தங்கமும் இல்லாவிட்டாலும், திருப்தியோடு வாழ்வதற்கு இயன்ற ஒரு மனிதன்.

செல்வவளம் இல்லாவிட்டாலும் இந்த மனிதனால் பயனடைந்த மக்கள் கூட்டம் மிகவும் பெரியது. இந்த மனிதன் தங்களை விட்டுப் பிரிந்துபோகிறார் என்ற செய்தியை ஏற்க இயலாமல், கண்ணீர் விட்ட மக்கள் ஏராளம். (அப் 20:37) உலகம் பார்க்கும் விதமாகச் செல்வந்தனாக வாழவிட்டாலும், ஒரு பரிசுத்தவானாக வாழ்ந்து காட்ட இயன்ற மனிதனாயிருந்தான். இவைதான் அப்போஸ்தலனாகிய பவுல் ஆசீர்வதிக்கப்பட்டதிற்கான அடையாளங்களாகக் கொண்டிருந்தவை. இவைதான் உண்மையான தேவ ஆசீர்வாதங்கள்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு தேவ ஊழியனாக என்னைப் பார்த்த பலர், என்னை மிகவும் பரிதாபமாகப் பார்த்தார்கள். ஏனென்றால், என்னிடம் பணம், பொருள், வீடு, வசதி, வாகனம், தேவைகளைச் சந்திக்கும் ஆற்றல் என எதையும் அவர்களால் பார்க்க முடியவில்லை. ஒரு வேளை இன்று என்னை அவர்கள் பார்த்தால் பராவாயில்லை பரவாயில்லை இந்த அளவிற்காவது தேவன் இந்த ஊழியனை ஆசீர்வதித்திருக்கிறாரே என்பார்கள். ஆனால், நான் 25 ஆண்டுகளுக்கு முன்னே ஆசீர்வதிக்கப்பட்டவன்தான். ஏனென்றால், உலகம் பார்த்த ஆசீர்வாத அடையாளங்கள் இல்லாவிடினும், தேவனுடைய பார்வையில் அப்போதே நான் ஆசீர்வதிக்கப்பட்டவன். ஏனென்றால், அப்போதே என்னிடம் சந்தோஷம், திருப்தி, நம்பிக்கை, பரிசுத்த வாழ்க்கை, பிறருக்குப் பயன்படுதல் என எல்லா ஆசீர்வாத அடையாளங்களும் இருந்தன.

சிந்தனைக்கு...

நமக்குள் நாம் கர்த்தரைப் பார்த்தால், பிறர் நம்மிடம் செல்வம் எதையும் பார்க்காவிட்டாலும், நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே.

ஜுன்
14
ஜீவ
நீரோடை

நாமும் இப்படியிருந்தோம்

முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும்... தீத்து 3:3

தீத்து 3:1-15

ஒருவன் மதுபானம் அதிகமாக அருந்திவிட்டதால் போதை தலைக்கேறி, வாய்க் கட்டுப்பாட்டை இழந்தான். சிலரை அவன் மோசமாகத் திட்டி வம்பு வளர்த்ததால், அவனைச் சிலர் அடிப்பதற்கு ஆயத்தமாயினர். அந்தக் குடிகாரனுக்குச் சரியான பாடம் கற்பிக்க எல்லோரும் விரும்பினார்கள். ஆனால், ஒரே ஒரு நபர் மட்டும் அவனை அடிக்கவிடாமல் அந்தக் கூட்டத்தினரைச் சமாதானப்படுத்தி அவனைத் தப்புவித்தார். அந்தக் குடிகாரனுக்கு இவர் யார் என்ற கேள்வி வந்தது. அதற்கு அவருடைய பதில் இவனைப் போல நானும் ஒரு முன்னாள் குடிகாரன். போதை அதிகமானால் ஏற்படும் விளைவுகள் எனக்குத் தெரியும். எனவே, சுயநிலை இழந்து போதையின் விளைவாக வம்பு இழுத்த இவனைக் காப்பாற்ற விரும்பினேன் என்றார்.

கர்த்தரை ஏற்றுக் கொண்டு தேவனுடைய பிள்ளைகளான யாவரும் முன்னாள் பாவிகளே. இன்று நம்மால் தவிர்க்க இயன்ற பல தவறுகளை, பாவத்தின் விளைவாக முற்காலத்தில் நம்மால் தவிர்க்க இயலாமலிருந்தது. நம்முடைய சுபாவங்களும், சிந்தனைகளும், ஆசைகளும் பாவத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததால், முற்காலத்தில் நாமும் எல்லோரைப் போல மோசமாகவே வாழ்ந்தோம். ஆனால், நம்மில் அநேகர் இதனை மறந்து விடுகிறோம். நம்மைப் போல பிறர் நல்லவர்களாக இல்லாவிட்டால் கோபத்தில் பொங்குகிறோம். நாம் செய்யாத தவறுகளை அவர்கள் செய்தால் ஆத்திரப்படுகிறோம். அவர்களுடைய தவறுகளை மன்னிக்க மறுக்கின்றோம்.

மற்றவர்களைப் போல நாமும் முன்னாளில் ஜென்ம சுபாவ இயல்புகளுக்கும், பாவத்தின் ஆதிக்கத்திற்கும் அடிமையாயிருந்தோம். கர்த்தருடைய கிருபைதான் நம்மை மாற்றியிருக்கிறது. இந்த கிருபையைப் பெறாததால் பலரிடம் நல்ல சுபாவங்களோ, ஒழுங்குகளோ, நல்ல மனநிலையோ இல்லை. அந்தப் பலவீனங்களை நாம் உணர வேண்டும்.

லேகியோன் கட்டுப்படுத்தப்பட இயலாதவனாயிருந்தான். அவனை ஜனங்கள் கயிறுகளாலும் சங்கிலிகளாலும் கட்டிப் போட்டு கட்டுப்படுத்தப் பிரயாசப்பட்டனர். ஆனால், இயேசுவோ அவன் கட்டுப்படாமல் செயல்படுவதற்குக் காரணமாயிருந்த அசுத்த ஆவிகளைக் கண்டார். அவன் சுயநிலையை இழந்து அசுத்த ஆவிகளின் பிடியில் இருப்பதைக் கண்டு, அவனுக்காகப் பரிதாபப்பட்டார். அந்த அசுத்த ஆவிகளைத் துரத்திவிட்டு அவனை விடுவித்தார். ஆம், சிலருடைய சுபாவங்களும், செயல்களும் கண்டிக்கத்தக்கவைகள்தான். ஆயினும், அவர்களின் பாவ அடிமைத்தன நிலையைப் புரிந்து அவர்களுக்காக பரிதாபப்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

தவறை தவறு என்று பார்ப்பது தவறல்ல. ஆனால், தவறு செய்ய நேரிட்ட காரணத்தைக் கவனிக்காமல் போவது தவறு.

ஜூன்
15
ஜீவ நீரோடை

இந்த நன்மை வேண்டாம்

கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்...
ஆதியாகமம் 14:23

ஆதியாகமம் 14:11-24

பாண்டிச்சேரியிலிருந்து சென்னை செல்லுவதற்காக பஸ் நிலையத்தில் நின்ற ஒருவர், இரண்டு மூன்று பேருந்துகள் சென்னைக்காகப் புறப்பட்ட போதும் ஏறவில்லை. ஏனென்றால், அவர் ஒரு குறிப்பிட்ட பேருந்துக்காக க்காத்திருந்தார். அது தாமதமாகப் பஸ்நிலையத்திலிருந்து கிளம்பும். ஆனால், முந்திக் கிளம்பின சில பேருந்துகளைவிட சீக்கிரமாக அது சென்னை சேர்ந்துவிடும். சில நேரங்களில் நாம் நினைத்தது நிகழ சற்று காலதாமதமாகும். ஆயினும், அது பிற வழிகளில் சாதிக்க ஓடுவதைவிட மிக மேன்மையானது.

சில விஷயங்களை உலக வழியில் பெறுவது எளிதாகவும், உடனடியாக சாதிக்க வாய்ப்புக் கிடைப்பது போலவும் இருக்கும். ஆயினும், நாம் எதிர்பார்த்த சந்தோஷத்தையும், திருப்தியையும் அவை தராமல் போகும். சிலர் சில விஷயங்களை உலகத்தாரின் வழியில் சாதிக்க வாய்ப்பு இருப்பதினால், தேவனுக்குக் காத்திருப்ப தில்லை அங்கே அவர்கள் புத்திசாலித்தனமாக சாதித்து விட்டதைப்போல உணருகின்றனர். ஆயினும், அவர்கள் அவற்றால் உண்மையான நன்மைகளைப் பெறுவதில்லை. சில நேரங்களில் வேகமாகக் காரியங்கள் நடக்கின்றன. அதுபோல, வேகமாக விலகியும் போகிறது.

ஆபிரகாம் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய நேரத்திற்காகக் காத்திருந்தான். ஆனால், லோத்துவோ சுய வழியில் உலகத்தாரைப் போல எதையும் இப்பொழுதே, இங்கேயே பெற வேண்டும் என்ற மனநிலையில் இருந்தான். யோர்தான் நதிக்கரையோர வளமையான நிலங்களை அவன் வரும்பி, அதற்கேற்றபடி தன்னுடைய தங்குமிடத்தை அமைத்துக் கொண்டான். ஆனால், விரைவாக வந்த நன்மை அவனுக்கு உண்மையான ஆசீர்வாதமாக இருக்கவில்லை. ஒருநாள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவன் விலகிப் போக நேர்ந்தது.

சோதோம் இராஜா ஆபிரகாம் பெற்ற வெற்றியை மனதில் வைத்து, நிறையப் பொருட்களைக் கொடுக்க முன்வந்தான். ஆயினும், கர்த்தர் தன்னை ஆசீர் வதிக்கும் வேளைக்காகக் காத்திருந்தானேயன்றி, சோதோம் இராஜாவினால் வந்த நன்மைகளை ஏற்கவில்லை. ஆம், நாம் எதிர்பார்க்கும் இலக்குகளை எட்டிட இந்த உலகத்தில் பலவழிகள் உண்டு. ஆனால், இலக்குகளை எட்ட உதவினாலும் எட்டப்பட்ட இலக்குகள் ஆசீர்வாதமாயிருப்பதில்லை. கர்த்தருடைய வேளைக்காகக் காத்திருப்பதினால் வெறும் இலக்குகளை அல்ல. ஆசீர்வாத உத்தரவாதமுள்ள இலக்குகளை எட்டுவோம்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்குக் காத்திருந்து பெற்ற நன்மை
சிறிதாயினும், அதனால் வருகின்ற திருப்தி பெரியது.

ஜுன்
16
ஜீவ நீரோடை

யார் துணை?

என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வரும்...
யோவான் 16:32

யோவான் 16:20-33

கொரோனா வைரஸ் பாதித்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட சிலருக்கு ஏராளம் நண்பர்கள் உண்டு. செல்வாக்கு மிக்க உறவினர்கள் உண்டு. ஓடி வந்து உதவி செய்ய ஏராளம் பேர் உண்டு. ஆயினும், கொரோனா தொற்று தங்களையும் தொற்றிவிடக்கூடாதே என்பதற்காக எவரும் அவர்களை நெருங்கவில்லை. ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்ட அநேகர் தங்களுடைய நண்பர்களையோ உறவினரையோ தங்களுக்கு அருகில் பார்க்க முடியவில்லை. ஆறுதலாக நாலு வார்த்தை கூறும் எவரும் தங்களுக்கு இல்லாமலே. கடைசி நேரங்களை தனிமையிலேயே உழன்று சந்தித்தனர்.

அன்பு இருந்தது. அக்கறை இருந்தது. மன வாஞ்சை இருந்தது. ஆனால், அவற்றை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்புவதற்கு அவன் எம்மாத்திரம் என்று வேதம் சொல்கிறது. ஆம், வாழ்க்கையின் சில சூழல்களில் நம்மை நேசிக்கப் பலர் இருந்தாலும், அந்த நேசத்தை நாம் பெற முடியாமல் போகும். நம்மேல் அக்கறை பலருக்கு இருந்தாலும், அந்த அக்கறையை அவர்களால் செலுத்த இயலாமல் போகும்.

இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் இயேசுவின்மேல் அதிக அன்பும் அக்கறையும் உடையர்வர்களே. ஆயினும், அவர்களின் அன்பையோ அக்கறையையோ இயேசு பெற்று பயனடைய முடியவில்லை. நீங்கள் எல்லோரும் என்னைவிட்டுப் போய்விடுவீர்கள். என் பிதா மட்டுமே என்னோடு இருக்க முடியும் என்றார். (யோவான் 16:32) ஆம், எவரும் உடன் இருந்து உதவ இயலாத வேளையிலும் பிதாவாகிய தேவன் தம்மோடு இருப்பார் என்றார். அந்தபடியே நெருக்கடியான நேரத்தில் பிதாவாகிய தேவனுடைய ஐக்கியத்தை மட்டுமே அவர் பெற முடிந்தது.

ஆம், நமக்குக் கிடைத்த நல்ல நண்பர்களுக்காகவும், நல்ல உறவினர்களுக்காகவும், நல்ல நலம் விரும்பிகளுக்காகவும் சந்தோஷப்படுவோம். ஆனால், இவர்கள் எல்லோரும் எல்லாச் சூழ்நிலையிலும் நம்மோடிருக்க இயன்றவர்கள் அல்ல. நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் தேவரீர் என்னோடிருக்கிறீர் என்றான் தாவீது. தேவ உறவு மட்டுமே நாம் எங்கிருக்க நேரிட்டாலும், எப்டியிருக்க நேரிட்டாலும் நமக்கு ஆதரவாக அருகிலிருக்க முடியும். யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்ட நேரத்திலும் கர்த்தர் அவனோடிருந்தார். ஆம், எல்லா மனித உறவுளைவிட தேவ உறவே நாம் தேடி உறுதிப்படுத்த வேண்டிய உறவு.

சிந்தனைக்கு...

பிறர் புரிந்து கொள்ளும் விதமாக நேசிக்கப் பழகு,
பிறர் உன்னை நேசிப்பதைப் புரிந்து கொள்ளவும் பழகு.

ஜுன்
17
ஜீவ நீரோடை

அழுகை ஜெபம்

அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது...
1 சாமுவேல் 1:10

1 சாமுவேல் 1:1-18

சிலர், நன்றாகச் ஜெபிக்க விரும்புகின்றனர். ஆனால், எவ்வளவு ஜெபித்தாலும் அவர்களுக்கு நல்ல பாரத்தோடு ஜெபித்திருக்கின்றோம் என்ற திருப்தி இல்லை. ஏனென்றால், இவர்களால் அழுது ஜெபிக்க இயலவில்லை. இவர்களால் கண்ணீரோடு ஜெபிக்க இயலவில்லை. இவர்களால் புலம்பிச் ஜெபிக்க முடியவில்லை. இவர்கள் நீண்ட காலமாக, அழுது கண்ணீர்விட்டு புலம்பி பாரத்தோடு ஜெபித்தால், அது வல்லமையான ஜெபமாயிருக்கும் என்று பலர் போதித்துக் கேட்டிருக்கின்றார்கள். எனவே, அவ்விதம் ஜெபிக்க வராததால், இவர்கள் தங்களின் ஜெபத்தைக் கேட்டுக் கர்த்தர் கிரியை செய்வார் என்று நம்ப இயலாதவர்களாக உள்ளனர்.

ஆனால், நாம் வேண்டுமென்றே அழுகையை உருவாக்குவதும், கண்ணீரைச் சிந்தும் விதமாக நமக்குள் சிந்தித்துச் செயல்படுவதும் நாம் உணர்ச்சிவசப்பட ஆயத்தமாகி புலம்பி ஜெபிப்பதும் அவசியமற்றவை. தேவன் இயற்கையாகவே அன்பும், கிருபையும், இரக்கமும் மனதுருக்கமும் உடையவர். அவர் நம்முடைய தேவைகளின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு இரங்க இயன்றவர். நாம் அழுது கண்ணீர்விட்டு புலம்பினால்தான், அவரை உருக வைக்க முடியும் என்று எண்ணக்கூடாது. தேவன் எளிதாக இரங்க இயலாத ஒருவராக இருந்தால்தான், நாம் அவரை இரங்க வைப்பதற்காக அழவும், கண்ணீர் வடிக்கவும் வேண்டும்.

தேவனுக்கு நாம் பிள்ளைகள். அப்பா, பிதாவே என்று கூப்பிடும் உரிமை படைத்தவர்கள். இந்த உரிமை உணர்வுதான் முக்கியம். பிள்ளைகள் அழாமலே, கண்ணீர் சிந்தாமலே தங்களின் தேவையைச் சொல்லி பெற்றுக் கொள்ளலாம். அன்னாளைப் போல நம்முடைய கஷ்டங்கள் நம்மை அழுத்தி அழவைத்தால் தேவ சமுகத்தில் அழலாம். தாவீதைப் போல வாழ்க்கைச் சூழ்நிலைகளால் நொந்து போய், கண்ணீர்விட நேர்ந்தால், அந்தக் கண்ணீரை தேவ சமுகத்தில் சிந்தலாம். அதே வேளையில், மனதில் பாரத்தை உணருகின்ற எல்லோருக்கும் அழுகையும், கண்ணீரும் வரும் என்று கூற இயலாது.

தேவன் இருதயத்தைப் பார்க்கின்றார். நம்முடைய நடித்துக் காட்டும் மனோபாவங்களை அவர் விரும்பமாட்டார். நம்முடைய மனதின் சுமைகளையும், நோவுகளையும், அழுத்தங்களையும் பார்த்து அவர் புரிந்து கொள்வார். இவை யாவும் நமக்குள் இருக்கும் போது நமக்கு கண்ணீர் வராமல் போகலாம். அது கட்டாயமல்ல. நம்முடைய பாவங்களுக்காகவும் குறைகளுக்காகவும்தான் நாம் மனம் உணர்ந்து, வருந்தி, அழுகையோடு ஜெபிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உன்னுடைய அழுகையை கர்த்தர் பார்க்கட்டும்
ஆயினும் அவர் பார்ப்பதற்காக அழாதே.

ஜூன்
18
ஜீவ
நீரோடை

வாழ்க்கை முழுவதும்

உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்...
லேவியராகமம் 26:11

லேவியராகமம் 26:1-13

ஒருவருக்கு நண்பர்கள் பலர் உண்டு. அவர் யாரிடம் பழகினாலும் தன்னுடைய வீட்டிற்கு வரும்படிஅவர்களை மிகவும் வருந்தி அழைப்பார். அவருடைய அன்பான அழைப்பை ஏற்று வீட்டிற்கு வருகின்றவர்களை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்பார். ஆனால், யாரையும் வீட்டிற்குள் அழைத்துச் செல்லமாட்டார். அவருடைய வீட்டிற்கு முன்பாக உள்ள ஒரு பகுதியில் அவர்களை உட்கார வைத்து மணிக்கணக்கில் பேசுவார். அவருடைய வீட்டிற்கு 100 முறை சென்றாலும் அவருடைய வீட்டின் உட்பகுதி எப்படியிருக்கும் என்பதோ, அந்த வீட்டில் யார் யார் இருக்கின்றார்கள் என்பதோ, யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

கர்த்தரோடுள்ள உறவுகளிலும் சிலருடைய நிலைமை இதுவே. அவர்கள் கர்த்தரை மிகவும் விரும்புகின்றவர்கள். அவருடைய பிரசன்னத்தை அதிகமாகத் தேடுகின்றவர்கள். அவரை அதிகமாக ஆராதித்துக் கனப்படுத்துகின்றவர்கள். ஆனால், இவர்களின் வாழக்கையின் உட்புறங்களில் கர்த்தருக்கு அனுமதி யில்லை. அவர்கள் தங்களின் வாழ்க்கையைத் தேவ சமுகத்தோடு தொடர்புபடுத்து வதில்லை. ஜெபம், ஆராதனை, குடும்ப ஜெபம், சபை கூடுதல் என சில ஆவிக்குரிய பகுதிகளில் அவர்கள் கர்த்தரை அதிகமாக நினைப்பார்கள். ஆயினும், அவர்களின் வாழ்க்கையின் உட்பகுதிகளில் கர்த்தரை எதிர்பார்ப்பதில்லை.

அவர்கள் தங்களின் சுபாவங்களிலோ, செயல்களிலோ, உறவுகளிலோ, வேலை, தொழில் போன்ற விஷயங்களிலோ, பழக்க வழக்கங்களிலோ கர்த்தரின் ஆளுகையையும் அதிகாரத்தையும் எதிர்பார்ப்பதில்லை. தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியில் தேவனைக் கனப்படுத்திய போதிலும், எல்லாப் பகுதிகளிலும் தேவ னுடைய தலையிடுதலை அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. தங்களுடைய வாழ்க்கைத் தொடர்பான செயல்பாடுகளிலோ, தொழில் தொடர்பான விஷயங்களிலோ, உறவு கள் சம்பந்தமான விஷயங்களிலோ, கர்த்தரின் வழிநடத்துதலையோ, தேவ ஆலோசனைகளையோ பின்பற்றுவதில்லை.

ஆம், இவர்கள் தேவ ஆசீர்வாதங்களை விரும்புகின்றனர். ஆனால், தேவனுடைய தலையீடுகளையோ ஆளுகையையோ விரும்புவதில்லை. ஆனால், தேவனுடைய செயல்பாடு அப்படி அல்ல. ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தேவ னையும் தேவனுடைய ஆளுகையையும், வாழ்க்கையின் அனைத்துச் செயல் பாடுகளிலும் காண விரும்புவதாகும். தேவனுக்கு ஆராதனையையும் காணிக் கையையும் கொடுத்துவிட்டு, வாழ்க்கையை நாம் விரும்பியபடி வாழ்வது அல்ல.

சிந்தனைக்கு...

நம்முடன் கர்த்தர் இருப்பதை உறுதிப்படுத்தாதவரை,
கர்த்தரை நோக்கிய விண்ணப்பங்கள் பதில் பெறாது.

ஜூன்
19
ஜீவ நீரோடை

நமக்கொரு தந்தை

அப்பா, பிதாவே, என்று கூப்பிடத்தக்கதாக...
கலாத்தியர் 4:6

கலாத்தியர் 4:1-7

நமக்கொரு பாலகன் கொடுக்கப்பட்டார் என்று வேதாகமத்தில் வாசிக்கின்றோம். நாம் ஒரு பாலகனை பெற்றுக்கொண்டோம் என்பதைவிட அந்த பாலகனின் மேல் உள்ள விசுவாசத்தினால் ஒரு தகப்பனைப் பெற்றோம் என்பதே விசேஷ செய்தி. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக நாம் பெறுகின்றபோது, நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆகின்றோம். (யோவான் 1:12) அதனுடைய பின்னணியில் உள்ள சத்தியம் என்ன? நாம் விண்ணகத் தேவனை தகப்பனாகப் பெறுகின்றோம்.

நம்முடைய உலகப்பிரகாரமான தகப்பனைக் குறித்து இன்று விசேஷமாகச் சிந்திக்கிற நாள். நம்மைத் தூக்கி வளர்த்து, நடத்தி உயர்த்திய அந்த தகப்பனுக்காக நன்றி சொல்லும் நாள். தேவன் நமக்கு அருளிய மாம்சப்பிரகாரமான தகப்பனை நாம் நினைத்து, கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். அந்த தகப்பன் நம்மோடிருக்கும் காலமெல்லாம் அந்த தகப்பனுக்கு உரிய விதமான கனம் கொடுத்து, கர்த்தருடைய அன்பில் அவருக்கு நல்ல ஐக்கியம் தரவேண்டும்.

இந்த தந்தையர் நாளிலே நமக்குக் கிடைக்கப்பெற்ற விண்ணகத் தகப்பனை நினைத்து நன்றி கூறுவோம். அப்பா, பிதாவே! என்று கூப்பிடப் பண்ணுகின்ற புத்திர சுவிகார ஆவிக்காக கர்த்தருக்கு நன்றி கூறுவோம். நம்மைப் பெற்ற தகப்பன் எவ்வளவு அன்பை நம்மேல் வைத்திருந்தாலும், என்றும் நம்முடன் இருக்க அவருடைய ஆயுள் கால அளவு அனுமதியாது. ஆனால், என்றென்றும் நம்மோடிருக்கும் இந்த பரலோகத் தந்தை, நம்மை விட்டு விலகவும் மாட்டார், நம்மை கைவிடவும் மாட்டார். உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடிருக்கும் ஆற்றல் பெற்றவரே அவர். ஆனால், இவரை நாம் கடவுளாக மட்டும் எண்ணி வழிபாடு செய்கின்றோமா அல்லது தந்தையாக நமக்குள் பார்த்து, பிள்ளைகளைப் போல அவருடைய அன்பின் ஐக்கியத்தோடு இருக்கின்றோமா என்பதைப் பார்க்க வேண்டும்.

பல கிறிஸ்தவர்களின் வாழ்க்கை தேவனைக் கனப்படுத்த விரும்புகின்ற வாழ்வாகவும், தேவனை ஆராதிக்கின்ற வாழ்வாகவும் இருக்கின்றது. ஆனால், தேவ உறவில் வாழ்கின்ற வாழ்வாக இல்லை. தேவனைத் தந்தை என்று அழைத்தாலும் அவரை ஆராதிக்கின்ற பழக்கம் இருக்கிறதேயன்றி, அவருடன் ஐக்கியமாயிருந்து அவருடைய அன்பை அனுபவிக்கும் பழக்கம் இல்லை. எனவேதான், பக்தி அடையாளங்கள் அவர்களிடம் இருந்த போதிலும், தேவனுக்காகக் கனிகொடுத்து தேவ சாயலோடு வாழ்கின்ற வாழ்வு இல்லை.

சிந்தனைக்கு...

தந்தையின் வார்த்தைகள் இன்று உனக்குக் கசப்பான மருந்து,
நீ தந்தையாகும் போதுதான் அது எவ்வளவு அவசியமானது என்பது விளங்கும்.

ஜூன்
20
ஜீவ நீரோடை

அதிகமாகத் தேடப்படுவது

உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிற போதும்...
உபாகமம் 6:7

உபாகமம் 6:1-14

ஜெபம் பண்ணுவதற்கு ஒரு நேரத்தைக் குறித்துக் கொள்கிறோம். வேத வாசிப்பிற்கு ஒரு நேரத்தைக் குறித்துக் கொள்கிறோம். ஆராதனைக்கு ஒரு நேரத்தைக் குறித்துக் கொள்கிறோம். அந்தந்த குறித்த வேளைகளில் அவற்றை முடித்துவிட்டு வெளியே வருகின்றோம். ஆனால், டி.வி பார்க்க கால அளவு உள்ளதா? ஸ்மார்ட் போன் பயன்படுத்த கால அளவு உள்ளதா? யூ.டியூப் எவ்வளவு நேரம், கூகிள் எவ்வளவு நேரம்? வாட்ஸ் ஆப் எவ்வளவு நேரம்? பேஸ்புக் என் றெல்லாம் ஏதாவது காலம் குறிக்கும் பழக்கம் உள்ளதா?

அப்படியெல்லாம் இல்லை. சில பிள்ளைகளிடம் கொஞ்ச நேரம் பைபிள் படிக்கக்கூடாதா, கொஞ்ச நேரம் ஜெபம் பண்ணக்கூடாதா என்றெல்லாம் சொன்னால், அவற்றைக் காலையிலேயே செய்து விட்டேன் என்பார்கள். ஆனால், டி.வி, போன், கேம்ஸ், பொழுதுபோக்கு என எந்த விஷயத்திலும் அப்படிச் சொல்லமாட்டார்கள். பெரியவர்கள் விஷயத்திலும் இன்று இதே நிலமையைத்தான் பார்க்க முடிகிறது.

ஜெபம், வேத தியானம், ஆராதனை ஆகியவற்றை ஒரு கடமையாகச் செய்கின்றோம். டி.வி, ஸ்மார்ட் ஃபோன், போன்றவற்றையோ நம்மை விட்டு விலக விடா மால் அவற்றோடு வாழ்கின்றோம். திரும்பத் திரும்ப டி.வி பார்க்கின்றோம். ஆனால், திரும்பத் திரும்ப ஜெபிப்போமா? திரும்பத் திரும்ப கூகிள் தேடல் செய்கிறோம். திரும்பத் திரும்ப வாட்ஸ் ஆப், பேஸ்புக் பகுதிகளில் மேய்கிறோம். ஆனால், திரும்பத் திரும்ப வேதம் வாசித்து தியானிப்போமா? ஜெபம், பைபிள் வாசிப்பு ஆராதனை எல்லாம் கடமையாகத் தொடருகிறது. தகவல் தொடர்பு சாதனங்களோ வாழ்வாகக் கருதப்பட்டு, திரும்பத் திரும்ப தேடப்படுகிறது.

ஆனால், வாழ்க்கை முழுவதும் தேவ ஆசீர்வாதங்களைத் தேடுகிறோம். தேவன் நம்முடைய வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தேவன் நம்மை நடத்த வேண்டும், தாங்க வேண்டும், உயர்த்த வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். அவ்வளவு செயல்பாடுகளை தேவன் நமக்காகச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோம். ஆனால், அவ்வளவு எதிர் பார்க்கின்ற நாம், தேவனுடைய காரியங்கள் விஷயத்தில் சின்னச் சின்ன வட்டங் களை வரைந்து, அவற்றிற்குள் நம்மை நிறுத்திக் கொள்கின்றோம். திரும்பத் திரும்ப தேவனைத் தேடும் ஒரு அனுபவம் வேண்டும். இன்னும் இன்னும் அதிகமாக தேவ காரியங்களில் சம்பந்தப்படும் அனுபவம் வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ சமுகத்திற்குக் கொஞ்சம் நேரம் தருகிறவன், தான் தேவனிடம் கேட்ட நன்மையைப் பெற அதிக நேரம் ஆகும்.

ஜூன் 21

ஜீவ நீரோடை

குடும்பமும் ஐக்கியமும்

ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்...
1 கொரிந்தியர் 7:5

1 கொரிந்தியர் 7:1-17

திருமணமாகி குடும்பம் நடத்திக் கொண்டிருந்த ஒரு பெண் ஒரு நல்ல வேலை தேடிக் கொண்டிருந்தாள். அந்தச் சூழ்நிலையில் மிக நல்ல சம்பளத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்று வந்தது. குறைந்த சம்பளத்தில் ஊரில் வேலை பார்த்துக் கொண்டு குடும்பமாக ஒரே இடத்தில் இருப்பதா? குடும்பத்தை விட்டுத் தூரமாகப் போய், நிறையச் சம்பளம் தரும் வேலையை ஏற்பதா? இறுதியில் அதிகச் சம்பள ஆசை வென்றது. அந்தப் பெண் நீண்ட காலமாக வெளிநாட்டில் வேலை செய்து ஊரில் ஏராளம் சொத்து வாங்கிவிட்டாள். ஆனால், பல ஆண்டுகளாக கணவனோடும் பிள்ளைகளோடும் ஊரில் ஒன்றாய் இருப்பது, இரண்டாண்டு அல்லது மூன்று ஆண்டுக்கு ஒரு முறை, அதிகபட்சம் ஒரு மாதம் மட்டுமே.

இது என்ன குடும்ப வாழ்க்கை? இதில் என்ன குடும்ப வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறுகிறது? கணவன் மனைவி பிள்ளைகள் என ஐக்கியமாயிருந்து வாழ்வது வாழ்க்கையா? அதிக சம்பளம் பெற்று சொத்து வாங்கிச் சேர்த்துக் கொண்டு, ஆளுக்கொரு நாட்டில் வாழ்வது வாழ்க்கையா? பணத்திற்கு உரிய இடமும் உரிய முக்கியத்துவமும் வேண்டும். ஆனால், முதலாவது பணம். பின்னர் மற்ற எல்லாம் என்பது அர்த்தமற்ற ஒரு வாழ்க்கை.

எதற்காகத் திருமணம்? எதற்காகக் குடும்பம்? ஆளுக்கொரு திசையாக இருந்து கொண்டு பணத்தைச் சம்பாதித்து மகிழ்ந்து கொண்டிருப்பதற்கா? மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்ற தேவ சிந்தையின் விளைவுதானே திருமணம். திருமணம் என்ற பந்தத்திற்குள் வந்துவிட்டால் மட்டும் தனிமை நிலமை மறைந்துவிடுமா? கணவனுடைய வருமானத்தில் சௌகரியமாக வாழ்வது அல்ல குடும்ப வாழ்க்கை. கணவனுடைய ஐக்கியத்தோடு வாழ்வதே வாழ்க்கை. மனைவியின் நல்ல வருவாயைக் கொண்டு வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதல்ல வாழ்க்கை. மனைவியின் ஐக்கியத்தோடு வாழ்வதே குடும்ப வாழ்க்கை.

சரீரத்தால் தூரம் தூரமாக இருந்தாலும், மனதால் இணைந்து இருப்பது போதாதா எனக் கூறலாம். ஆனால், மனிதனுடைய தனிமையின் வெற்றிடத்தை மனதால் இணைந்திருக்கின்ற ஒரு சிந்தனையால் நிரப்ப முடியாது. குடும்ப வாழ்க்கை என்பது மனரீதியாக வாழ்வது மட்டுமல்ல. சரீரப்பிரகாரமான ஐக்கியத்தோடும் வாழ்வதே அது. எனவே, வாழ்க்கைச் சூழ்நிலை நிர்ப்பந்தங்கள் பல இருப்பது உண்மையாயினும், இயன்றவரை தேவ கிருபையைத் தேடி, ஐக்கிய இடைவெளிகளைத் தவிர்த்து வாழ்வதே ஆசீர்வாதமானது.

சிந்தனைக்கு...

**குடும்பத்திற்காகச் சம்பாதிக்கக் கவனமாயிரு
ஆனால் ,குடும்ப ஐக்கியத்தை இழந்து அல்ல.**

ஜூன்
22
ஜீவ நீரோடை

நன்றியுணர்வு

நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே... நீதிமொழிகள் 19:22

நீதிமொழிகள் 19:1-21

குறிப்பிட்ட ஒருவர் அவருடைய நெருங்கின உறவினர்கள் வாயிலாகப் பெற்ற நல்ல உதவிகளைக் குறித்து நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வார். ஆனால், அவர்கள் செய்த நல்ல உதவிகளுக்காக அவர்களைப் பாராட்டவோ, நன்றியுணர்வைக் காட்டவோ செய்யமாட்டார். ஏனென்றால், அவர்கள் யாரும் தன்மேல் அன்பு வைத்து நன்மை செய்யவில்லை என்பார். அவர்கள் கடவுளுடைய புண்ணியத்தைப் பெறுவதற்காக நன்மை செய்கிறார்கள். அவர்கள் தேவையில் உள்ள எனக்கு உதவி செய்யாமல் போவதால் வருகின்ற குற்ற உணர்வை தவிர்க்கவேஅப்படி செய்கின்றார்கள். அவர்கள் எனக்கு உதவி செய்து, அதின் மூலம் நல்லதைச் செய்கின்றவர்கள் என்ற நல்ல பெயரைப் பெறவே, அப்படிச் செய்கின்றார்கள் என்பார்.

சிலர், தங்களுக்கு என்ன நன்மை செய்யப்பட்டாலும் அதனை ஒரு நற் செயலாகப் பார்க்க இயலாதவர்கள். மற்றவர்களை நல்லெண்ணத்தோடு பார்க்கும் மனநிலையை அவர்கள் பெற்றிராததால், தங்களுக்கு நல்லது செய்தாலும் தவறான உள்நோக்கத்தை அதற்குக் கற்பித்து விடுகின்றார்கள். சில கணவர்கள், மனைவிகள் எவ்வளவு நல்ல விஷயங்களைச் செய்தாலும், இப்படியே நினைக்கின்றனர். சில மனைவிகள், தங்கள் கணவர்கள் எவ்வளவு நல்லதைச் செய்தாலும், இப்படியே நினைக்கின்றனர்.

மற்றவர்கள்மேல் நமக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் இல்லாவிட்டால், அவர்கள் என்ன செய்தாலும் அதற்குப் பின்னால் இருக்கும் நல்ல எண்ணத்தை, நாம் அங்கீகரிக்க மாட்டோம். சில நேரம், சிலர் நல்ல நோக்குடன் நன்மை செய்வதில்லை என்பது உண்மைதான். சிலருடைய நற்செயல்களின் பின்னால் அன்பு இருப்பதில்லை என்பது உண்மைதான். ஆயினும், நாம் நல்லதை ஒருவரிடமிருந்து பெற்றால், அதற்குரிய நல்ல உணர்வையும், நன்றியையும் வெளிப்படுத்தும் நல்ல பழக்கம் வேண்டும்.

நமக்குச் செய்யப்பட்டது நன்மையாயிருக்கின்ற பட்சத்தில், அதனைச் செய்தது விரோதியாயினும் அதற்குரிய நன்றியை நாம் வெளிப்படுத்த வேண்டும். ஏனென்றால், நம்முடைய தேவையில் அது ஒரு நல்ல உதவியாயிருந்திருக்கிறது. ஒரு வேளை அவர்களின் வழியாக அந்த உதவி கிடைக்காமலிருந்திருந்தால், நாம் நம்முடைய தேவையைச் சந்திக்க இயலாமல் போயிருக்க வாய்ப்புண்டு. ஆம், நல்லதைச் செய்கின்ற எவருக்கும் ஒரு மறைவான நோக்கம் இருக்கிறது என்று சிந்திக்க ஆரம்பித்தால், பின்னர் நாம் யாரையும் நல்லவராகப் பார்க்க இயலாது.

சிந்தனைக்கு...

தீயவராயினும் நல்லது செய்தால் பாராட்டு.
நல்லவராயினும் தீயது செய்தால் சுட்டிக்காட்டு.

ஜூன்
23
ஜீவ நீரோடை

தவறான பார்வை

நடக்கிற மனுஷரை மரங்களைப் போல ...
மாற்கு 8:24

மாற்கு 8:22-26

அலுவலகத்தில் பணிபுரிந்த ஒருவர் தன்னுடைய சக பணியாளரால் எப்பொழுதும் சந்தேகக் கண்களோடு பார்க்கப்பட்டார். இவருடைய ஒவ்வொரு அசைவையும் அவர் ஒரு சந்தேக உணர்வோடேயே பார்ப்பார். இது இந்த மனிதருக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. சில நேரம் மிகவும் கோபமாக உணரவும் செய்வார். தன்னைச் சந்தேகப்படுகின்ற அளவிற்கு தான் தவறாக இல்லை என்று இவர் பல விதங்களில் தெளிவுபடுத்துவார். ஆயினும், அந்த நபரோ இவரைச் சந்தேகிக்கும் குணத்தை மாற்றவே இல்லை. ஆண்டுகள் பல கடந்தும் அவர் இவரை சந்தேகத்தோடு பார்ப்பதை நிறுத்தவில்லை.

இந்த மனிதருடைய சந்தேக மனநிலையை மாற்ற என்ன செய்வது என்று இவர் ரொம்ப யோசித்தார். அப்பொழுது நடக்கின்ற மனிதர்களை மரங்களை போல் பார்த்த ஒரு பார்வையற்றவனைக் குறித்து, வேதத்தில் படித்தது அவருக்கு ஞாபகம் வந்தது. அந்த மனிதர் தன்னைக் குறித்துக் கொண்டிருக்கும் ஒரு சந்தேக மனநிலை என்பது, அவருடைய இயற்கையான மனநிலை குறைபாடு என்பதை உணர்ந்தார்.

ஆம், சிலருக்கு இப்படி ஒரு பிரச்சினை உள்ளது. அது ஒரு இயற்கைக் குறைபாடு. அவர்கள் சிலரைச் சந்தேகமாகப் பார்க்க ஆரம்பித்தால், அவர்களே விரும்பினாலும் அந்த மனநிலை மாறுவதில்லை. அந்தப் பார்வையற்றவனுக்கு ஒரு இயற்கைக் குறைபாடு. நடக்கின்ற மனிதர்களை மரங்களைப் போல பார்க்க நேரிடும் ஒரு பார்வைக் கோளாறு. என்னுடைய ஊழியத்தின் துவக்க காலத்திலிருந்தே, ஒன்றிரண்டு பேர் என்னைக் குறித்த ஒரு தவறான சித்திரத்தையே மனதில் வைத்துள்ளனர். அது தவறான ஒரு பார்வை என்பதை உணர, அவர்களுக்கு அளவுக்கதிகமான காரணங்கள் கிடைத்திருக்கிறது. ஆனால், அவர்களோ இன்றும் அந்தத் தவறான பார்வையின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வரவில்லை.

சிலர், நம்மை இயேசுவோடு இருக்கிறவர்களாக நேரடியாகப் பார்க்க வாய்ப்புக் கிடைத்தால் கூட நம்பமாட்டார்கள். இயேசுவோடிருந்த யூதாஸ் தவறாகப் போனானே என்றுதான் சிந்திப்பார்கள். இவர்களுக்கு முன்பாக நாம் அக்கினியில் நடந்து நம்முடைய சரியான வாழ்க்கையை நிரூபித்தாலும், அவர்களால் நம்மைச் சரியாகப் பார்க்க இயலாது. ஏனென்றால், அது அவர்களின் இயற்கைக் குறைபாடு. எனவே, இவர்கள் நம்மை சந்தேகப் பார்வை பார்ப்பதையே நாம் சிந்தித்துக் கொண்டிராமல், கர்த்தர் நம்மை எப்படிப் பார்க்கின்றார் என்பதைப் பார்த்து, அதில் நாம் திருப்தி பெற வேண்டும். கர்த்தர் அவர்களுக்குத் தெளிவான பார்வை அருளச் ஜெபிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

மற்றவர்களின் சந்தேகப் பார்வை,
இன்னும் இன்னும் நாம் சரியாயிருக்க உதவும்.

ஜூன்
24
ஜீவ நீரோடை

பரிதாப ஜெபம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே...
லூக்கா 11:2

லூக்கா 11:1-13

பல ஆண்டுகளுக்கு முன்பு மாதந்தோறும் நடைபெறும் இரவு ஜெபக் கூட்டத்தில் பங்குபெற்ற ஒரு சகோதரரை எனக்குத் தெரியும். அவர் ஜெபம் துவங்கும் வரை மிக மிக இயல்பாகச் சிரித்து கலகலப்பாக பேசிக்கொண்டிருப்பார். அவர் ஜெபிப்பதற்கான வேளை வந்ததும் அழுது கண்ணீர் விட்டு புலம்பி ஜெபம் செய்வார். அவர் ஜெபிக்கின்ற வேளைகளில் அழுகைக் கண்ணீர், புலம்பல் ஆகியவை இல்லாமல் அவரைப் பார்க்க முடியாது. ஏன் அப்படி ஜெபிக்கிறார் என்றால், அப்படி அழுது ஜெபித்தால் ஆண்டவர் அதிகமாக இரங்குவார் என்பதே.

பொதுவாகப் பிச்சைக்காரர்களிடம் எவ்வளவு பணம் இருந்தாலும், அவர்கள் மிக மிகப் பரிதாப தோற்றத்தைக் காண்பித்துதான் பிச்சை கேட்பார்கள். ஏனென் றால், கெஞ்சிக் கூத்தாடி, புலம்பிக் கேட்டால்தான் மற்றவர்களின் இரக்கத்தைப் பெற முடியும். அநேகர் தேவனிடமிருந்து நன்மை பெறுகின்ற விஷயத்திலும் ஒரு பிச்சைக்கார மனநிலைக்கே முக்கியத்துவம் தருகின்றனர். மிக மிக நம்மை அற்பப் படுத்தி, அழுது புரண்டு வேண்டுதல் செய்தால், தேவன் செவிகொடுப்பார் என்பது உண்மையல்ல.

புதிய ஏற்பாட்டில் இந்த அணுகுமுறைக்கு ஆதரவாக எதுவும் இல்லை. புதிய ஏற்பாட்டில் தேவ நன்மைக்காக தேவன் குறித்திருக்கும் அணுகுமுறை வேறு. நாம் பிள்ளைகளாக உரிமையோடு தேவனிடம் கேட்கும் முறைதான் புதிய ஏற்பாட்டு அணுகு முறை. தேவன் அழுகின்றவர்களுக்காக அல்ல. கெஞ்சுகின்றவர்களுக் காக அல்ல. தங்களை மிகுதியாய் அற்பப்படுத்துகின்றவர்களுக்காக அல்ல. கர்த்தர் உரிமையோடு பிள்ளைகளாக நின்று “அப்பா பிதாவே” என்று கூப்பிடு கின்றவர் களுக்காகவே தம்முடைய ஆசீர்வாதங்களை வைத்திருக்கின்றனர்.

நாம் நம்மைத் தாழ்த்துவது தவறல்ல. அழுவதோ, கண்ணீர் வடிப்பதோ, புலம்புவதோ தவறல்ல. ஆனால், இப்படியெல்லாம் செய்தால் தேவன் ஆசீர் வதிப்பார் என்று நம்புவது தவறு. தேவன் புதிய ஏற்பாட்டின்படியும் புதிய உடன் படிக்கையின்படியும், அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக புதிய தகுதி முறையை வைத்திருக்கின்றார். அதுதான் புத்திரசுவிகாரத் தகுதி முறை. கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்வதின் வாயிலாக தேவ ஆவியால் நாம் தேவ புத்திரர்களாக தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும். அவ்விதம் நாம் நின்று ஜெபிப்பதுதான் தேவன் எதிர்பார்க்கும் ஜெபத் தகுதி.

சிந்தனைக்கு...

உண்மையான உன்னுடைய உணர்வுகளை தேவனிடம் பகிர்ந்து கொள், ஆயினும், உணர்ச்சி வசப்படுதலை விரும்பாதே.

ஜூன்
25
ஜீவ
நீரோடை

பாவ விடுதலை

குமாரன் உங்களை விடுதலையாக்கினால்....
யோவான் 8:36

யோவான் 8:31-47

சுவிசேஷகர் ஒருவர் ஒருவரிடம் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பேசினார். அதற்கு அந்த மனுஷன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க எனக்கு ரொம்ப ஆசை உண்டு. ஆனால் என்னால் மதுபானத்தை விட்டுவிட முடியாது. எனவே இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ள எனக்கு இயலவில்லை என்றான். அதற்கு அந்த சுவிசேஷகர் அது பிரச்சினையில்லை. நீ இயேசு கிறிஸ்துவைப் பிடித்துக் கொண்டால் மதுபான பழக்கம் உன்னை விட்டு விடும். இயேசுகிறிஸ்து உன்னிடம் வரும் போது மதுபானத்தை உன்னால் விடாமல் இருக்க இயலாது என்றார்.

சில பழக்கங்களை விட்டு விட இயலாததால் சிலர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள முன்வருவதில்லை. தங்களால் சில பழக்கங்களை விட்டு வருவது கடினம் என்பதால் கிறிஸ்தவ அனுபவத்திற்குள் வருவதற்கு வாய்ப்பில்லை என்று எண்ணுகின்றனர். நாம் ஆகாதவைகளையும் தவறானவைகளையும் விட்டு விட்டு இயேசுவிடம் வருவதல்ல. நாம் இயேசுவிடம் வருவதால் அவை நம்மை விட்டு விட்டுப் போகின்றன என்பதே உண்மை. நம்மிடம் உள்ள தவறானவைகளை விட்டு விலகும் ஆற்றல் நம்மிடம் இயற்கையாக இல்லை. இயேசுவை ஏற்றுக் கொள்வதால்தான் அந்த ஆற்றல் நம்மிடம் வருகின்றது.

நம்மைப் பாவத்திலிருந்து மீட்டெடுக்கின்ற இரட்சகராகத்தான் இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தார். அவராடு நாம் சேரும் போதுதான் நம்மிடமுள்ள பாவ அடிமைத்தனம் நீங்கி தவறானவைகள் விலகவும், சரியானவைகள் நம்மிடம், வரவும் வாய்ப்பு ஏற்படுகின்றன. சிலரிடம், நீங்கள் சபைக்கு வாருங்கள். சத்தி யத்தைக் கேளுங்கள் என்றால், அவர்கள் இன்னும் கொஞ்சம் என்னைச் சரிசெய்து விட்டு வருகிறேன் என்பார்கள். நாம் நம்மை இயேசு இல்லாமலே சரிசெய்ய முடிந்தால், நாம் பாவத்திற்கு அடிமை அல்ல என்று பொருள்.

ஆனால், இயற்கையில் நாம் அப்படி அல்ல. நம்மை நாமே சரிசெய்து பூரண மாக்க முடியாது. நம்மிடமுள்ள தவறான சிந்தனைகளும் சுபாவங்களும் ஆசை களும் நம்மை அடிமைகளாக்கி வைத்திருக்கின்றன. விசுவாசத்தினால் இயேசுவிடம் வந்தால்தான், அவை நம்மை விட்டு விலகும். வியாதி நீங்கின பிறகு அல்ல. வியாதி நீங்கப்படுவதற் காகத்தான் நாம் மருத்துவரிடம் வரவேண்டும். எனவே, நாம் பாவிகள் என்ற நிலமையிலேயே இயேசுவிடம் வரவேண்டும். இயேசுவிடம் வந்தால்தான் பாவி என்ற நிலமை நீங்கும்.

சிந்தனைக்கு...

நம்மைச் சீர்செய்துவிட்டு கர்த்தரிடம் வருவது அல்ல.
நாம் கர்த்தரால் சீர்செய்யப்படவே அவரிடம் வருகின்றோம்.

ஜூன் 26

ஜீவ நீரோடை

சந்தோஷம்

அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்...
சங்கீதம் 4:7

சங்கீதம் 4:1-8

கொரோனா வைரசின் இரண்டாம் அலை வீசி, அநேகர் பெருந்துன் பங்களைக் கண்டார்கள். மனதைத் துக்கப்படுத்துகின்ற பல செய்திகள் வந்து கொண்டேயிருந்தன. ஆனால், இவை யாவற்றிற்கும் நடுவிலும் நான் சில தருணங்களில் மிகவும் சந்தோஷமாக இருப்பதை உணர்ந்தேன். அது எனக்குள் சிலநேரம் ஒரு விதமான குற்ற உணர்வைத் தந்தது. அநேகர் தாங்கொணா துயர்களோடு வாழும் போது, நான் மகிழ்ச்சியாயிருப்பது நியாயமா என்று சிந்திக்க வைத்தது. ஆனால், நான் உணர்ந்த சந்தோஷம் பணம், பொருள், நல்ல சூழ்நிலைகளால் வந்தது அல்ல. அது கர்த்தருடைய சமுகத்தின் விளைவான சந்தோஷம்.

தேவன் இது குறித்த ஒரு சிந்தனையைத் தந்தார். நீ துக்கமாயிருப்பதால் யாருடைய துக்கத்துக்கும் உதவ முடியாது. சந்தோஷமாயிருந்தால்தான் சிலருடைய துக்கத்திற்கு ஆறுதலாகச் செயல்பட முடியும் என்பதே அந்த சிந்தனை. ஆம். துன்புறும் வியாதியஸ்தர்களின் நடுவில் மருத்துவருக்குப் பாரமும் கரிசனையும் தேவை. ஆனால், அவர் மகிழ்ச்சியற்றவராக இருப்பாரென்றால், அவர்களின் துன்பத்தைக் கூட்ட முடியுமேயன்றி குறைக்க முடியாது.

ஆம், அப்போஸ்தலனாகிய பவுல் எப்போதும் சந்தோஷமாயிருங்கள் என்று பிலிப்பு திருச்சபை மக்களுக்கு எழுதினான். அழுகிறவர்களோடு அழுங்கள் என்பது, அவர்களின் துன்ப நேரத்தில் அவர்களுடைய சூழ்நிலையில் நீங்களும் பங்கேற்றுக் கொள்ளுங்கள் என்பதே. அதே வேளையில்,இருதயம் மகிழ்ச்சியாயிருந்தால்தான் பிறருக்கு ஆக்கப்பூர்வமாக ஏதாவது உதவி செய்ய முடியும். எனவே, துக்க மன நிலையோடு இருப்பதை நலமென்று எண்ணாமல், எல்லாச் சூழ்நிலையிலும் மனதை மகிழ்ச்சியாக்கிக் கொள்ள விரும்ப வேண்டும்.

கர்த்தருடைய ஐக்கியத்தின் மூலமாகவும், கர்த்தருடைய பிரசன்னத்தின் மூலமாகவும், நமக்குள் நம்மை சந்தோஷப்படுத்திக் கொள்வதால், நம்முடைய மனவலிமை அதிகமாகும். அங்கே மனத்தெளிவு ஏற்படும். அங்கே மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகச் செயல்படுவதற்கேற்ற மன உற்சாகம் ஏற்படும். எருசலேம் அலங்கத்தைக் கட்டுவதற்காக வந்த நெகெமியா, ஜனங்களிடம் பேசும் போது கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான். (நெகேமியா 8:10) கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பது என்பது ஒரு சொகுசான மன நிலை அல்ல. அது சோர்ந்து போகாமல், சலிப்படையாமல், தொய்ந்து போகாமல், உற்சாகத்தோடு செயல்படத்தூண்டுகின்ற ஒரு மனநிலை.

சிந்தனைக்கு...

அழுகிறவர்களோடு அழுவதற்குப் பழகிக் கொள்,
ஆயினும், உன்னுடைய அழுகையால் அவர்களின் அழுகை நிற்காது.

ஜூன் 27

ஜீவ நீரோடை

மறப்பது எப்படி?

அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்... ஆதியாகமம் 45:5

ஆதியாகமம் 45:1-15

மனிதர்கள் செய்த தீங்கை மறப்பது எப்படி என்று ஒரு தேவ ஊழியரிடம் ஒருவர் கேட்டார். ஒருவர் பிறர் செய்த தீங்கை மறப்பது கடினமான காரியம். தேவனிடம் நன்மை பெறுகின்றவனாய் இரு. அவர் உனக்காகச் செய்கின்ற நன்மைகளை நினைத்துக் கொண்டேயிரு. பிறர் செய்த தீங்கு மறந்து போகும் என்றாராம். ஆம், எதை நாம் அதிகமாக மறக்க முயற்சிப்போமோ அதுதான் நம்முடைய நினைவுகளில் அதிகமாக வரும். சில தீமையான காரியங்களைக் குறித்த கசப்பான நினைவுகளின் பிடியிலிருந்து வெளியே வர வேண்டுமானால், நன்மையான சில விஷயங்களைக் குறித்த நினைவுகள் நம்முடைய மனதை ஆக்கிரமிக்க வேண்டும்.

யோசேப்பிற்கு அவனுடைய சகோதரர்கள் செய்த தீங்குகள் மறக்க இயலாதவைகள். ஆனால், அந்தக் கசப்பான நினைவுகள் அவனை சிறைப்படுத்தவில்லை. தன் சகோதரர்கள் செய்தவைகளை எண்ணி அவன் கோபத்துடனோ பழிவாங்கும் சிந்தனையுடனோ, இருக்கவில்லை. அவன் தேவன் தனக்கு செய்த நன்மையான காரியங்களைக் குறித்தே சிந்தித்தான். தனக்கு நேரிட்டவைகளை அவன் வெறுப்பிற்குரியதாகப் பார்க்காமல், தேவனுடைய நல்ல திட்டங்கள் நிறைவேறுகிறதற்கேதுவாகத் தேவன் அனுமதித்த செயல்களாகப் பார்த்தான்.

தனக்கு எதிராகச் சகோதரர்கள் என்ன செய்தார்கள் என்று பாராமல், அவற்றைத் தேவன் எப்படி நன்மைக்கேதுவாக மாற்றினார் என்பதையே அவன் பார்த்தான். அவர்கள் செய்தது தீமைதான். ஆனால், அதனை தேவன் நன்மையாக முடியப்பண்ணினாரே என்பதையே சிந்தித்தான். அவன் உயர்ந்த நிலைக்கு வந்தபோது, தனக்குத் தீங்கு செய்தவர்களுக்குத் தீங்கு செய்ய விரும்பாமல், நல்லதையே செய்ய விரும்பினான்.

சில நேரம், சிலருடைய சில தீங்கான மனநிலையின் விளைவான விஷயங்களை நான் நினைக்க ஆரம்பித்தால், அது கசப்பானதாகவும் வெறுப்புக்குரியதாகவுமே தோன்றும். அதே நேரத்தில் தேவன் எனக்குக் கிருபையாய் செய்த பல நன்மைகளை நினைத்துப் பார்ப்பேன். கர்த்தர் தந்த அமைதி, கர்த்தர் தந்த ஆதரவு, கர்த்தர் தந்த நல்ல சிந்தனைகள், கர்த்தர் வெளிப்படுத்திய உண்மைகள், கர்த்தர் கொடுத்த நம்பிக்கை என ஒவ்வொன்றாய் நினைக்கும் போது, பிறர் செய்த காரியங்களைக் குறித்த நினைவுகள், மனத்திரையை விட்டு மறைந்து போகும். கர்த்தரைக் குறித்த சந்தோஷமான சிந்தனைகள்தான், பிறரைக் குறித்த கசப்பான சிந்தனைகளை மறந்து போக வைக்கும்.

சிந்தனைக்கு...

தேவனிடமிருந்து நன்மை பெற்றுப் பழகினவர்கள் பிறருக்குத் தீங்கு நிகழ ஒரு போதும் விரும்பமாட்டார்கள்.

ஜூன்
28
ஜீவ நீரோடை

கர்த்தரை அறியணும்

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்... 2 தீமோத்தேயு 1:12

2 தீமோத்தேயு 1:1-12

சபையின் போதகர் ஒருவரால் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வழிநடத்தப் பட்ட ஒரு வாலிபன், ஒருநாள் அந்தச் சபை போதகரின் போதனையில் உள்ள குறை பாட்டைச் சுட்டிக்காட்டினான். அது அந்தப் போதகருக்குப் பெரிய கோபத்தை ஏற் படுத்தியது. உன்னைக் கர்த்தருக்கு நேராக நடத்தினவனே நான்தான். இன்று என் போதனையிலே குறைகண்டு பிடிக்கிற அளவிற்கு நீ பெரிய ஆள் ஆகி விட்டாயா என்று கேட்டார். அதற்கு அவன், பாஸ்டர் நான் பெரிய ஆளாகவில்லை. ஆனால், நீங்கள் என்னை எந்த கர்த்தருக்கு நேராக நடத்தினீர்களோ, அந்தக் கர்த்தர் எனக்குக் கொடுத்த ஆவிக்குரிய அறிவால், இதை தவறு என்று கண்டேன் என்றான்.

யார் கர்த்தருக்கு நேராக நம்மை நடத்தினாலும் கர்த்தரை நாம் அறிந்த பின்பு, அந்தக் கர்த்தரால் நாம் நடத்தப்பட வேண்டும். அந்தக் கர்த்தரால் நாம் தனிப்பட்ட முறையில் நடத்தப்பட்டால், சத்தியத்தைச் சரியாக அறிய முடியும். ஒருவர் நம்மை இரட்சிப்பின் அனுபவத்திற்குள் நடத்தினார் என்பதற்காக, அவர் பேசுவ தெல்லாம் ஆரோக்கியமான சத்தியமாகத்தான் இருக்கும் என்று கூற முடியாது.

பரிதாபகரமாக, பல விசுவாசிகள் தங்கள் போதகர் எவற்றையெல்லாம் சொல்லிக் கொடுத்தாரோ, அவற்றையெல்லாம் அப்படியே பின்பற்றுகிறார்கள். ஆனால், தங்களுக்குத் தரப்படும் போதனைகள் யாவும் சத்தியத்தை அடிப் படையாகக் கொண்டதா இல்லையா என்பதை, அவர்களால் சரியாக நிதானிக்க இயலவில்லை. ஏனென்றால், அவர்கள் கர்த்தரைத் தனிப்பட்ட முறையில் அறிய வில்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் தேவ ஆவியால் நடத்தப்படவில்லை. ஆவிக்கேற்றபடி நிதானித்தறியும் ஆவிக்குரிய ஞானம் அவர்களுக்கு இல்லை.

சில குடும்பங்களில், பிள்ளைகள் தங்களுடைய தாய் தந்தையர் கற்றுக் கொடுத்த ஆவிக்குரிய ஒழுங்குகளை அப்படியே பின்பற்றுவார்கள். ஒரு பக்கத்தி லிருந்து பார்க்கும் போது, அது ரொம்ப நல்ல விஷயமாகத் தோன்றும். அதே வேளை யில் அவர்களிடம் இருக்கும் ஆவிக்குரிய செயல்பாடுகள் யாவும், அவர்களின் பெற்றோரைப் பிரதிபலிக்குமேயன்றி தேவனைப் பிரதிபலிக்காது. அவர்கள் பெற்றோரால் கற்பிக்கப்பட்டவைகளை அப்படியே பின்பற்றுகின்றார்கள். ஆனால், பெற்றோர்களின் ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலிலும் சில குறைபாடுகள் இருக்க முடியும். எனவே, கர்த்தரோடு நமக்குத் தனிப்பட்ட ஐக்கியம் இருந்தால்தான், சரியான அனுபவங்களைப் பெற முடியும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்கு நேராக நடத்தினவர்களுக்கு நன்றியோடிரு, ஆயினும், அவர்களின் எல்லா வழியிலேயும் நடக்காதே.

ஜூன் 29
ஜீவ நீரோடை

அன்பு கூருவது கடினம்

அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவது போல...
எபேசியர் 5:33

எபேசியர் 5:20-33

சில குடும்பங்களில் கணவன் மனைவி ஒருவரையொருவர் நேசிக்க இயலாதபடி ஏதாவது நடந்துவிடுகிறது. சில குடும்பங்களில் கணவன் மனைவிக் கிடையில் ஒருவரையொருவர் மதிப்பிற்குரியவர்களாகப் பார்க்க முடியாதபடி ஏதாவது நடந்துவிடுகிறது. அதற்குப் பின்பு ஒருவரையொருவர் நேசிப்பதோ, மதிப்பதோ கடினமாகிவிடுகின்றது. மனைவியிடம் அன்பு வார்த்தை பேசுவது தனது கடமை என்று கணவன் உணருகின்றான். ஆனால், அன்பாகப் பேச இயலவில்லை. கணவனுக்கு உரிய மரியாதை தருவது தனது கடமை என மனைவி உணர்ந்தாலும், மதிப்பை வெளிப்படுத்தும் விதமாகப் பேச இயலவில்லை.

எனவே, எத்தனை பேர் ஆலோசனை கூறினாலும், எத்தனை கவுன்சிலிங் போனாலும், நடைமுறையில் அன்பையும் கனத்தையும் வெளிப்படுத்துவது முடியாத காரியம் ஆகி விடுகிறது. இது மனோரீதியான பிரச்சினை. மனதால் ஒருவரை நேசிக்கவோ மதிக்கவோ உண்மையான தூண்டுதல் இல்லாத நிலையில், அதனை நேரடியாக நடைமுறைப்படுத்துவது கடினமான காரியமே.

ஒருவரிடம் அதிருப்தியும் வருத்தமும் இருக்கும் போது, எப்படிச் சகஜமாக அன்புடன் நடக்க முடியும்? ஒருவரைக் குறித்து மனதில் பெரிய மரியாதை உணர்வு இல்லாதபோது, அந்த நபரை மதிப்பது போல நடப்பது எப்படி? ஒருவர் மற்றவர்மேல் வருத்தமும் எரிச்சலுமாய் இருக்கும் போது, உன்மேல் எனக்கு அன்பு எதுவும் இல்லை என்று சொல்லுவது போலவே நடக்க விரும்புவார். இது போன்ற மனநிலைப் பிரச்சினைகளுக்குப் பின்னால் இருப்பது, ஒரு விதமான மனக்கடினம்தான். மற்றவரைக் குறித்து அன்பாகச் சிந்திக்க முடியாத மனக்கடினம், மற்றவரை மதிக்கத்தக்கவராக உணர விரும்பாத மனக்கடினம்.

இதற்குத் தீர்வு ஒரே ஒரு இடத்தில்தான் உள்ளது. அது கர்த்தரிடத்தில் உள்ளது. கர்த்தரின் அன்பை அனுபவித்துப் பழகின ஒரு மனிதன், அந்த அன்பை இழக்காமல் தொடர்ந்து அனுபவிக்கக் கர்த்தர் எதைச் சொன்னாலும் செய்வான். என்னுடைய அன்பினைத் தொடர்ந்து அனுபவிக்க உன் மனைவியை நேசி என்று கர்த்தர் சொல்லுவார். என்னுடைய ஐக்கியத்தின் மகிழ்ச்சியைத் தொடர்ந்து உணர்ந்திட, உன் கணவனை உரிய விதமாகக் கனப்படுத்து என்று கர்த்தர் சொல்லுவார். அந்தக் கர்த்தரின் அன்பையும் ஐக்கியத்தையும் இழக்காமல் அனுபவிக்க விரும்பும் மனிதன், தனக்குப் பிரியமில்லாதவர்களாயினும் அவர்களை நேசிக்கவும் கனப்படுத்தவும் இயன்றவனாய் மாறுவான்.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய அன்பை அனுபவித்துப் பழகினவர்கள்,
மனிதர்களின் வெறுப்பைச் சகித்திடப் பழகிவிடுவார்கள்.

ஜுன் 30 ஜீவ நீரோடை

கோடீஸ்வரப் பிச்சைக்காரி

தானியத்தைக் கட்டி வைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்... நீதிமொழிகள் 11:26

நீதிமொழிகள் 11:11-31

உலகத்தின் மிகப்பெரிய கஞ்சப் பெண்மணி என்று அறியப்பட்டவர் ஹெட்டி கிரீன் (1834-1916) இவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு மிகப்பெரிய பணக் காரப் பெண்மணி. மிகப்பெரிய தொகைகளை கடனாகக் கொடுத்துச் சம்பாதிக்கும் பெண்மணி. இவரிடமிருந்த செல்வங்களுக்கு அளவேயில்லை. ஆனால், இவர் ஒரு பிச்சைக்காரியைவிட மிகமிக எளிய நிலையில் வாழ்ந்தவர். மிக மிக விலை குறைந்த உணவைச் சாப்பிடுவார். ஒரு உடை வாங்கி அது கிழிந்து போனால்தான் அடுத்த உடை வாங்குவார். தன்னுடைய சொந்த மகனுக்கு காசு செலவு செய்து மருத்துவம் பார்க்காமல், இலவச மருத்துவமனை தேடி அலைந்ததால், அவனுடைய ஒரு காலை இழக்க நேரிட்டது. சுருக்கமாகச் சொன்னால் பிச்சைக்காரியாக வாழ்ந்த மிகப்பெரிய கோடீஸ்வரி.

அநேகர் ஹெட்டி கிரீன் அளவிற்கு கஞ்சத்தனமாக வாழாவிட்டாலும், பேரளவில் ஹெட்டி கிரீனை ஞாபகப்படுத்துகிற அளவிற்கு வாழ்கின்றனர். சிலரிடம் கோடிக் கணக்கில் மதிப்புள்ள செல்வம் இருந்தாலும், ஒன்றுமில்லாத ஏழை களைப் போன்ற வாழ்க்கை வாழ்கின்றனர். அது எளிமையின் விளைவு அல்ல. கஞ்சத்தனத்தின் விளைவு. சம்பாதிக்கின்ற எதையும் செலவு செய்யாமல் அப்படியே வைத்து, அழகு பார்க்கின்ற ஒரு மனநிலை.

அடுத்தவர்களின் பொருளைத் திருடுவது மட்டும் அல்ல பாவம். நம்மிட மிருக்கும் செல்வத்தை உரிய விதமாகப் பயன்படுத்தாததும் பாவமே. ஆடம்பரமாக வாழ்வது மட்டுமல்ல பாவம். பொருளாசையின் விளைவாக எதையும் செலவிடாமல் கஞ்சத்தனமாக வாழ்வதும் பாவமே. சிலர் தாங்களும் அனுபவிப்பதில்லை. அவ சியமான சில உதவிகளைச் செய்து பிறருக்குப் பயன்படவும் அனுமதிப்பதில்லை.

எதையும் வீணாக்கக்கூடாது. எதையும் அர்த்தமின்றிச் செலவிடக் கூடாது. அதே வேளையில், எல்லாவற்றையும் நமக்காகச் சேர்த்து வைத்துப் பின்னர் அனுபவிப்பதற்கு வாய்ப்பே இல்லாமல் போவது ஒரு மதியீனமாகும். சிக்கனம் வேண்டும். சேமிப்பு வேண்டும். ஆனால், நம்மிடம் இருக்கும் அளவுகளின் அடிப் படையில் அதனை நம்முடைய நலனுக்காகவும், பிறருடைய நலனுக்காகவும் செல விட வேண்டும். எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு இல்லாதவனைப் போல வாழக்கூடாது. பயன்டுத்தப்படாத ஆசீர்வாதம் சாபமாக மாறிவிடும். தானியத்தை உரிய விதமாகப் பயன்படுத்தாமல் கட்டி வைப்பவனைச் ஜனங்கள் சபிப்பார்கள் என்று வேதாகமத்தில் வாசிக்கின்றோம்.

சிந்தனைக்கு...

செலவு செய்ய இயலாத ஏழைகள் இரக்கத்திற்குரியவர்கள்,
எவ்வளவோ இருந்தும் செலவிட விரும்பாதவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

ஜுலை

1

ஜீவ நீரோடை

திறமைகளும் சுபாவங்களும்

திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு... 2 பேதுரு 1:4

2 பேதுரு 1:1-10

திரையுலகக் கலைஞர்கள் பலருடைய திறமைகள் ஆச்சரியப்பட வைப்பவை. பாடல் திறன், பேச்சுத்திறன், நடிப்புத் திறன், சிந்தனைத் திறன், நகைச்சுவைத் திறன், நடனத் திறன் என அவர்களிடம் உள்ள பல திறமைகள் மிக மிக ஆச்சரியமானவை. அவை மிக மிக வியந்து ரசிகத்தக்கவை. ஆனால், அவ்வளவு ஆச்சரியமான தாலந்துகளைப் பெற்றிருக்கும் அவர்களில் பலருடைய வாழ்க்கை ரசிக்கத்தக்க தல்ல. அவர்களின் ஆச்சரியமான மேடைச் செயல்பாடுகள் லட்சக்கணக் கானோரைப் பரவசப்படுத்துகிறது. ஆனால், அத்தகைய விசேஷ ஆற்றல்களைப் பெற்றிருக்கின்ற அவர்களில் பலருடைய வாழ்க்கைத் தோல்வியிலும் தோல்வி.

சிறந்த திறமைகளை அவர்கள் இயற்கையாகவும், செயற்கையாயும் பெற்றிருக்கின்றனர். ஆனால், அவர்களிடம் உள்ள சுபாவநிலைகள் மிகவும் பலவீனமானவை. மிக மிக அழகாகத் தோன்றும் அவர்களில் பலருடைய குணங்கள் மிக மிக அருவருப்பானவை. திறமைகளினால் உயர்ந்து நிற்கும் அவர்களை, சுபாவங்கள் மிக மிகத் தாழ்ந்து போக வைக்கின்றன. திறமைகளால் வருமான நிலைகளைக் கட்டி எழுப்ப முடிகிறது. ஆயினும், வாழக்கையைக் கட்டி நிறுத்துவதோ சுபாவங்கள். அவை இல்லாததால் வாழ்க்கை நிலைகுலைந்து சோகமானதாக மாறுகின்றது.

திறமைகளும் ஆற்றல்களும் இயற்கையாகவும் அமையும். முயற்சிகளாலும் அமையும். ஆனால், வாழ்க்கையை நிலைநிறுத்தும் சுபாவங்கள் இறை அருளால் மட்டுமே அமையும். மனிதன் திறமைகளை வளர்த்துக் கொள்ள இயன்றவன். ஆனால், நல்ல குணங்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் அவனுக்கு இல்லை. ஏனென்றால், மனிதனுடைய இருதயம் இயற்கையிலேயே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. (எரேமியா 17:9)

அநேகர் இறைஅருளால் பொருளாதார வசதி பெறவும், பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெறவும், வாழ்க்கையை சௌகரியமாக்கிக் கொள்ளவும் விரும்புகின்றனர். ஆனால், இறையருளின் மிகப்பெரிய தேவை நமக்குள் செயல்பட்டு, நம்மை நல்ல பண்புடையவர்களாக மாற்றுவதாகும். திராட்சைச் செடியாகிய இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட ஒரு அனுபவத்தை நாம் தேட வேண்டும். கர்த்தருடைய ஐக்கியத்தை நம்முடைய ஆத்துமாவில் அதிகமாக அனுபவிக்கத் தேடுவதின் விளைவாகத்தான், நமக்குள் நல்ல பண்புகள் உருவாகின்றன. அந்தப் பண்புகள்தான் நம்முடைய வாழ்க்கையைக் கட்டுகின்றன.

சிந்தனைக்கு...

திறமைகளினால் பல்லாயிரங்களை வசீகரிப்பவன் அல்ல,
நல்ல பண்புகளால் ஒரு சிலரை வழிநடத்துகிறவனே பயனுள்ளவன்.

ஜூலை
2
ஜீவ நீரோடை

தள்ளி கொண்டு முன்னேறு

தள்ளி விட்டு விசுவாசத்தைத் துவக்குகிறவரும்...
எபிரெயர் 12:1

எபிரெயர் 12:1-16

மும்பாயில் மின்சார ரயில்களில் தொடர்ந்து பயணம் செய்கின்றவர்கள் சில பயிற்சிகளை உடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் தாங்கள் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வரும்போது சாதாரணமாக இறங்க இயலாது. அவர்கள் முன்னால் நிற்கின்றவர்களை தள்ளிக் கொண்டே இறங்க வேண்டும். அது போல இரயிலுக்குள் செல்ல விரும்பும் போது முன்னால் நிற்கின்றவர்களை தள்ளிக் கொண்டே உள்ளே ஏற வேண்டும். இல்லையென்றால், அவர்கள் ஏறவும் முடியாமல் இறங்கவும் முடியாமல், நெரிசலில் சிக்கிக் காயமடைந்து விடுவார்கள்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்முடைய பாதையில் பாரங்களும் பாவங்களும் நெருங்கி நிற்கும். நாம் சாதாரணமாக முன்னோக்கிச் செல்ல முடியாது. தள்ளிக் கொண்டுதான் முன்னேற வேண்டும். தள்ளிவிட்டு முன்னோக்கிச் செல்லும் பயிற்சி இல்லாதவர்கள் முன்னாலும் போக முடியாமல், பின்னாலும் போக முடியாமல், இடைவழியில் சிக்கி விடுவார்கள். சிலர் பரிசுத்தத்திலும் ஒரு நிலைமையை எட்டவில்லை. பழைய பாவ வாழ்விற்கும் திரும்பவில்லை. ஆனால், இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள். அவர்களைப் பாவிகள் என்றும் கூற இயலாது. பரிசுத்தவான்கள் என்றும் கூற இயலாது.

சிலர், தாங்கள் செல்லும் பாதையில் சிறு தடைகளைக்கூட தாங்கிக் கொள்ள மாட்டார்கள். ஆனால், பாவத்தை எதிர்க்கும் ஒரு துடிப்பு நமக்கு வேண்டும். அதுபோல, பரிசுத்தத்தை நோக்கி முன்னேறும் ஒரு துடிப்பும் வேண்டும். யோசேப்போட கர்த்தர் இருந்தார். அதனுடைய விளைவாக அவனுக்குள் ஒரு பரிசுத்தமான துடிப்பும், முனைப்பும் இருந்தது. அவன் பாவத்தைத் தள்ளிவிடவும் செய்தான், பரிசுத்தத்தைப் பற்றிக் கொள்ளவும் செய்தான்.

அநேகர் பக்தியாய் வாழ்வதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். பாவத்தை மேற்கொள்வதற்கோ அல்லது ஒரு உயர் பண்பை வெளிப்படுத்துவதற்கோ அவர்களுக்கு ஆர்வம் இல்லை. ஏனென்றால், அவர்களில் பரிசுத்த ஆவி இல்லை. எனவே, ஒரு ஆவிக்குரிய அகத்தூண்டுதல் இல்லை. அவர்கள் தள்ளி விட்டு முன்னோக்கிச் செல்ல விரும்பாமல், தடையில்லாத பயணத்திற்காகக் காத்திருக்கின்றார்கள். பாவத்தைத் தள்ளிவிடுவதும், பரிசுத்தத்தை நோக்கி முன்னேறுவதும் தானாய் நடந்துவிடுவதில்லை. அது விசுவாசம் சார்ந்த ஒரு ஆக்கப்பூர்வச் செயல்பாடு.

சிந்தனைக்கு...

பாவத்தில் வாழ்கின்றவனைவிட அரைகுறைப் பக்தியோடு வாழ்கின்றவனுக்கு, அதிகத் துன்பம் உண்டு.

ஜுலை

3

ஜீவ நீரோடை

அறிவைப் பயன்படுத்து

விசாரிக்குமுன் நிருணயம் பண்ணாமலும்...
1 தீமோத்தேயு 5:21

1 தீமோத்தேயு 5:19-25

திருமணமான ஒரு பெண்ணிற்கு ஒரு கனவு வந்ததாம். அந்த கனவில் ஒரு தூதன் தோன்றி, உன்னுடைய கணவன் தவறானவன். எனவே, நீ எச்சரிக்கையாயிருந்து குடும்பம் நடத்து என்றதாம். ஆனால், அவளுடைய கணவன் மிகவும் நல்லவன். தேவனுக்குப் பயந்து பரிசுத்தமாய் வாழ்கின்றவன். ஆயினும், அவளுக்கு அந்தத் தூதன் சொன்னதுதான் மனதில் நின்றது. அவனிடத்தில் அவள் தவறு எதையும் காண இயலவில்லை. ஆனால், அவள் தூதன் சொன்னது எப்படிப் பொய்யாயிருக்கும் என்று சிந்தித்தாள். அவனை அவள் எப்பொழுதும் தவறானவன் என்றே சிந்தித்ததால், அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் ஏதாவது தவறு இருக்கிறதா என்று பார்த்துப் பார்த்து குடும்பத்தையே அமைதியற்றதாக்கிவிட்டாள்.

அவள் தூதன் போன்று தோன்றினவன் சொன்னதை நம்பினாளேயன்றி, தன்னுடைய அறிவைப் பயன்படுத்தவில்லை. அறிவு என்பது அலட்சியப் படுத்தப்படத்தக்கதல்ல. அறிவை மட்டும் சார்வதுதான் தவறு. அதே வேளையில், மனிதனுக்குத் தேவன் தந்த அறிவையும் பயன்படுத்தவேண்டும். சில நேரங்களில் சில கள்ளத்தீர்க்கதரிசிகள் சிலரைப் பிறருக்குச் சுட்டிக்காட்டி, அவர்கள் தவறானவர்கள் என்று சொல்லி விடுகின்றார்கள். அதற்குப் பின்பு அவர்கள் தாங்கள் தீர்க்கதரிசிகள் என்று நம்பினவர்கள் எதைச் சொன்னார்களோ அதையே நம்பி விடுகின்றார்கள்.

மற்றவர்களை நாம் நிதானிக்கும்போது ஆவிக்குரிய ரீதியான ஒரு பார்வை அவசியம். அதே வேளையில், அறிவைக் கொண்டு பகுத்தறிதலும் அவசியம். நம்முடைய நல்ல அறிவைப் பயன்படுத்தி ஒருவரைச் சோதித்தறியும்போது, அவர் சரியாக இருக்கும் போது யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக, அவரைத் தவறானவராகப் பார்த்தல் மிகவும் அநீதியானது.

திருச்சபையைச் சேர்ந்த ஒருவர், குறிப்பிட்ட ஒரு தேவ ஊழியரைத் தவறானவர் என்றே நம்புவார். அந்தத் தேவ ஊழியரோ மிகவும் நல்லவர். அந்த தேவ ஊழியரை எந்த அடிப்படையில் தவறானவர் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டால், எங்கள் பாஸ்டர் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்பார்கள். உங்கள் பாஸ்டர் சொன்னார் என்பதற்காக அவரை எப்படித் தவறானவர் என்று சொல்லலாம் என்று கேட்டால், எங்கள் பாஸ்டர் தீர்க்கதரிசன வரம் உடையவர் என்பார். ஆம், மற்றவர்கள் சொன்னதின் அடிப்படையில் அல்ல. நாம் அறிவு சார்ந்து யோசித்து நல்லதா கெட்டதா என்று அறியும் அனுபவமும் வேண்டும்.

சிந்தனைக்கு...

சிலர் தவறாகப் பார்க்கப்படுவது அவர்கள் மோசம் என்பதால் அல்ல. பார்க்கின்ற கண்கள் மோசமாக இருப்பதாலேயே

ஜூலை

4

ஜீவ நீரோடை

இப்பொழுது எப்படி?

கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு...
அப்போஸ்தலர் 9:21

அப்போஸ்தலர் 9:1-22

சினிமா துறையில் இருந்த ஒருவர், கிறிஸ்தவ நற்செய்தியைக் கேட்டு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இரட்சிப்பின் அனுபவம் பெற்ற பின்னர் தன்னுடைய சாட்சியை பல இடங்களில் கூற ஆரம்பித்தார். அவர் எங்கு சென்றாலும், யாரைச் சந்தித்தாலும் முன்பு நான் அப்படியிருந்தேன். முன்பு நான் இப்படியிருந்தேன் என்று பழைய கதைகளைச் சொல்வதிலேயே அதிக ஆர்வ மாயிருப்பார். அவருடைய கடந்த காலப் பாவ வாழ்க்கை எப்படியெல்லாம் இருந்தது என பலர் அறிந்து கொண்டனர். ஆனால், இப்போது அவர் வாழும் வாழ்க்கை குறிப்பிட்டுச் சொல்லும்படியான விசேஷங்களைக் கொண்டிருக்கவில்லை. முன்பு மிகமிக மோசமாயிருந்ததை அறியச் செய்யும் அவர், இப்பொழுது தான் ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ்வதைச் சாட்சியாகக் காட்ட முடியவில்லை.

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் தங்களின் கடந்த காலப் பாவ அனுபவங் களைச் சொல்வதில் அல்ல. தற்போது கிறிஸ்துவால் ஏற்பட்ட விசேஷமான மாற்றங்களின் அனுபவத்தைச் சொல்ல வேண்டும். அநேகர் கடந்த காலப் பாவச் செயல்களில் இப்போது இல்லை என்று காட்ட முடிகிறதேயன்றி, இப்போது பரிசுத்த சாட்சி வாழ்க்கையை வாழ்பவராக காட்ட முடிவதில்லை. கிறிஸ்துவை ஏற்றுக் கொண் டதால், இப்போது நாம் எந்த அளவிற்கு ஆவிக்குரிய விசேஷ குணங்களோடு வாழ்கிறோம் என்பதே முக்கியம்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாயிருக்கின்றான் என்று வேதம் சொல்கின்றது. அந்தப் புதிய சிருஷ்டியின் சாட்சியை பலர் அறியச் செய்வதே உண்மையான அனுபவம். நம்முடைய கடந்த காலத்தைக் குறித்த செய்திகளே கேட்கின்றவர்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடாது. முன்பு அப்படியிருந்த நாம், இப்போது எப்படி பிறர் முன்பு நிற்கின்றோம் என்பதே முக்கியமானது.

சிலரிடத்தில் பழைய பாவ வாழ்க்கை போய்ப் புதிதாகப் பக்தி வாழக்கை வந்திருக்கிறது. ஆயினும், பரிசுத்த வாழ்க்கை வரவில்லை. அவர்களிடம் பழைய விஷயங்கள் இல்லையென்றாலும், புதிய பரிசுத்தமான விஷயங்கள் வந்து தேவனுக்கு மகிமை தரவில்லை. அப்போஸ்தலனாகிய பவுலின் பழைய வாழ்க்கை மிக மிக மோசமானது. அதே வேளையில் கிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட பின்பு, அவ னுடைய வாழ்க்கை தெய்வீக அழகு நிறைந்ததாக மாறியது. அவன் பரிசுத்தமான வாழ்க்கைக்குச் சாட்சியாக மாறினான்.

சிந்தனைக்கு...

நேற்று எப்படி இருந்தாய் என்பதைப் பிறருக்குச் சொல்லு,
இன்று எப்படி இருக்கிறாய் என்பதையும் அவர்களுக்குக் காண்பி.

ஜூலை
5
ஜீவ நீரோடை

குற்றச்சாட்டு

அவர் பாவஞ் செய்யவில்லை...
1 பேதுரு 2:22

1 பேதுரு 2:12-25

ஒருவர் தான் செய்யாத ஒரு தவறைச் செய்ததாக தன்னுடைய உறவினர் ஒருவரால் குற்றஞ்சாட்டப்பட்டார். பலமுறை தான் அவ்விதம் தவறு செய்யவில்லை என்று விளக்கிச் சொன்ன பின்பும், அந்த உறவினர் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ளவேயில்லை. ஆனால், தன் மேல் அபாண்டமாகக் கூறப்பட்ட இந்தக் குற்றசாட்டிற்காக, அவர் அதிகமாக மன உளைச்சல் ஏதும் அடையவில்லை. இப்படி ஒரு குற்றம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதைக் குறித்து, உங்களுக்குக் கவலையில்லையா என்று நண்பர் ஒருவர் கேட்டார்.

அதற்கு அவர், வெள்ளைச் சுவரைப் பார்த்து சிகப்பு சுவர் என்று ஒருவர் சொன்னால், அப்படிச் சொன்னவருக்காகத்தான் நாம் கவலைப்பட வேண்டும் என்றார். ஏனென்றால், அவருடைய கண்களில் ஏதோ குறைபாடு இருப்பதால்தான் அப்படி அவரால் பார்க்க முடிகிறது என்றார். இயேசு கிறிஸ்துவைக் குறித்து பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளை பரிசேயர்கள் சதுசேயர்கள் போன்றோர் கூறினார்கள். இயேசு அதற்காகக் கவலைப்படவில்லை. ஏனென்றால், அது அவர்களின் பார்வையில் உள்ள பிரச்சினை.

செய்யாத தவறுகளுக்காக ஒருவர் பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டால், அது வருத்தத்தைத் தருவது இயற்கையே. ஆயினும், நாம் தேவனுக்கு முன்பாக நம்மைச் சரியாக இருப்பதாகப் பார்க்கும்போது, அதற்காக வருத்தம் தேவையில்லை. நம்முடைய மனசாட்சியும் தேவனுடைய பார்வையும் நாம் சரியாக இருப்பதைக் காட்டும் போது, மற்றவர்களின் தவறான பார்வையின் விளைவான குற்றச்சாட்டிற்காகக் கவலைப்படத் தேவையில்லை. யோசேப்பின்மேல் ஒரு பெரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. ஆயினும், அதற்காக அவன் சோர்ந்து போய் செயலற்றவனாகவில்லை. அவன் தேவனுக்கு முன்பாகத் தான் சரியாக இருப்பதை அறிய முடிந்ததால், நம்பிக்கையோடு வாழ்ந்தான்.

கர்த்தருடைய ஊழியக்காரன் ஒருவரை இன்னொருவர் திரும்பத் திரும்ப தவறானவர் என்று குற்றம் சாட்டினார். அது அவரை விசனப்படுத்தினது. அவர் தன்னுடைய ஜெப வேளையில், தேவனே நான் தவறு செய்யாதிருந்தும், திரும்பத் திரும்ப நான் தவறானவனாகப் பார்க்கப்படுகிறேனே என்று முறையிட்டார். அதற்குக் கர்த்தர் திரும்பத் திரும்ப என்னுடைய சமுகத்தில் நீ சரியாயிருப்பதை உறுதிப் படுத்து, அப்பொழுது விசனம் போய்விடும் என்றாராம்.

சிந்தனைக்கு...

கர்த்தர் உன்னைப் பேதுருவாகப் பார்க்கும் போது,
உலகம் உன்னை யூதாசாகப் பார்த்தால், கவலைப்படாதே.

ஜூலை

6

ஜீவ நீரோடை

தீமையின் நினைவுகள்

அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே...
சங்கீதம் 103:2

சங்கீதம் 103:1-22

நினைக்கத்தக்கவைகளை விரைவில் மறந்து விடுகிறோம். மறக்கத்தக்கவைகளை என்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். இது நம்முடைய பெரிய பிரச்சினை. வாழ்க்கையில் எவ்வளவோ நல்லது நடந்தது. ஆனால், அவை நினைக்கப்படுவதில்லை. தீங்காக நிகழ்ந்த ஒரு சில விஷயங்கள்தான் திரும்பத் திரும்ப நினைவுக்கு வருகின்றது. எத்தனையோ நல்லவைகளைச் சிலர் செய்திருக்கின்றனர். ஆனால், அவை இப்போது ஞாபகத்தில் இல்லை. ஆனால், யாரோ ஒருவர் செய்த கெட்டதை திரும்பத் திரும்ப நினைக்கின்றோம். இது இயற்கையானது. இது இயல்பானது.

இது மனிதன் ஒரு சுய நலமி என்பதின் விளைவு. சுயநலம் பிறர் செய்த நல்லவைகளை எளிதாக மறந்துவிடும். ஆனால், பிறர் செய்த தீமைகளை மட்டும் அசைபோட்டுக் கொண்டேயிருக்கும். நமக்குள் இருப்பது நல்ல மனம் என்றால், அது நல்லதை நினைப்பதிலும், நல்லதைச் செய்வதைக் குறித்துச் சிந்திப்பதிலும் அதிக ஈடுபாடுள்ளதாயிருக்கும். நமக்குள் நல்ல மனம் இல்லாவிட்டால், அது தீமையைச் சிந்திப்பதற்கே முதலிடம் தரும். அது காயம் கட்டின பலரை மறந்துவிடும். காயப்படுத்தின ஒருவரை மட்டும் முன்னால் நிறுத்தி வைத்துக்கொண்டிருக்கும்.

நல்லது செய்த மனிதனைப் பார்க்கும்போதுதான், அவன் செய்த நல்லது ஞாபகத்திற்கு வரும். தீயது செய்த மனிதனைப் பலவருடம் பார்க்காவிட்டாலும், அவன் செய்த தீயது நினைவை விட்டு நீங்காமலிருக்கும். ஆனால், தீயவன் செய்த தீமையைவிட, அந்த தீயதைக் குறித்த நம்முடைய நினைவுகளும் சிந்தனைகளும் நமக்கு அதிகத் தீமை செய்யும். சிலர் செய்த தீமைகளின் பாதிப்புகள் விரைவில் சரியாகிவிடும். ஆனால், இப்படிச் செய்துவிட்டார்களே இப்படிச் செய்துவிட்டார்களே என்ற சிந்தனைகள், சிலருக்கு இரத்த அழுத்த நோயையும், சர்க்கரை நோயையும், குடல்புண் நோயையும் கொடுத்துவிடும்.

கர்த்தர் நன்மை செய்ததால் அவரைப் பாடுவேன் என்றான் சங்கீதக்காரன். கர்த்தரை ஏற்றுக் கொண்ட மனிதன், கர்த்தர் தனக்குச் செய்த நன்மைகளைக் குறித்த நினைவுகளினால் நிறைந்திருப்பான். ஒவ்வொரு நாளும் அவனுடைய இருதயம் விரோதி செய்த தீமைகளை மறந்துவிடாதே என்று சொல்லாமல், கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறந்து விடாதே என்று சொல்லும். நாம் கர்த்தரை விசுவாசித்து புதிய இருதயத்தை பெற்றுக் கொண்டிருந்தால், தேவன் நம்முடைய ஆத்துமாவுக்குச் செய்த நன்மைகளின் நினைவுகளினால் சமாதானமாய் வாழும்.

சிந்தனைக்கு...

நடந்து முடிந்தவைகளை ஞாபகத்தில் வை,
நடக்க வேண்டியவைகளை சிந்தனையில் வை.

ஜூலை
7
ஜீவ நீரோடை

ஒரே ஒரு காரணம்

இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு...
1 சாமுவேல் 24:6

1 சாமுவேல் 24:1-22

சிலரை வெறுக்க நமக்குப் பல காரணங்கள் இருக்கும். சிலரைக் கசந்து கொள்ள பல காரணங்கள் இருக்கும். சிலரை வேண்டாம் என்று தள்ளிவிடவும் பல காரணங்கள் இருக்கும். ஆனால், அப்படிப்பட்டவர்களை நேசிப்பதற்கு நமக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கும். அது என்ன? அது தேவனுக்குப் பிடிக்கும் என்பது தான். அது ஏன் தேவனுக்குப் பிடிக்கிறது? நேசிக்கத் தகுதியில்லாதவர்களும், ஏற்றுக் கொள்வதற்கான தகுதியில்லாதவர்களுமான நம்மை கர்த்தர் நேசித்தார். அவர் நம்மை நேசித்தது போல, நாம் பிறரை நேசிப்பது அவருக்குப் பிடிக்கிறது. நம்மை அவர் நடத்தினது போல, நாம் பிறரை நடத்துவதை அவர் விரும்புகின்றார்.

தன்னை மிகவும் மோசமாக நடத்தும் கணவரை விவாகரத்துச் செய்துவிட ஒரு பெண் பலமுறை யோசித்தாள். அந்த யோசனையை பலர் சரிதான் என்றனர். ஆனாலும், அவள் விவாகரத்துச் செய்யவில்லை. அதற்கு அவள் சொன்ன காரணம், கர்த்தருக்கு அது பிடிக்கவில்லை என்பதே. மனிதன் பக்கத்திலிருந்து ஒரு எதிர்மறையான செயலைச் செய்திட, ஆயிரம் நல்ல காரணங்கள் இருக்கலாம். ஆயினும், தேவனுடைய பக்கத்திலிருந்து அவ்விதம் செய்யாமலிருக்க ஒரே ஒரு காரணம்தான் சொல்லப்படும். அது கர்த்தருக்குப் பிடிக்கவில்லை என்பதே.

ஆனால், அந்த ஒரே ஒரு காரணத்திற்காக நாம் விரும்புவதைச் செய்யாமலும், நாம் விரும்பாததைச் செய்வதும் மிகப்பெரிய நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். 1999-ம் ஆண்டு ஒரிசாவில் தியாகமாக இறைப் பணிசெய்த கிரகாம் ஸ்டெயின்சும் அவருடைய பிள்ளைகள் பிலிப்பு, தீமோத்தேயு என்பவர்களும் உயிரோடு எரிக்கப் பட்டனர். ஆயிரக்கணக்கானோர் இந்த மாபாதகச் செயல்களைச் செய்தவனுக்கு இரக்கம் காட்டக்கூடாது என்றனர். ஆனால், தேவ பக்தனாகிய கிரகாம் ஸ்டேயின்சின் மனைவி கிளாஸ்டிஸ் "நான் மன்னிக்கிறேன்" என்றார். அதற்கு ஒரே ஒரு காரணம். கர்த்தருக்கு மன்னிப்பதுதான் பிடிக்கும் என்பதே.

தாவீதுக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு தீமை செய்ய ஓடின சவுலைக் கொலை செய்ய, தாவீதுக்கு ஏராளம் நல்ல காரணங்கள் இருந்தது. ஆனால், தாவீது அவ்விதம் செய்யவில்லை. அதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவனுக்கு எதிராக எதையாவது செய்வதை தேவன் விரும்பமாட்டார் என்பதே, ஆம், தீமை செய்ய ஆயிரம் காரணம் இருக்கலாம். ஆயினும், நன்மை செய்வதற்கு இருக்கும் ஒரே ஒரு காரணத்தைப் பயன் படுத்துவதே தேவனுக்குப் பிரியமானது.

சிந்தனைக்கு...

சத்துருவிடம் அன்பாகப் பேசமுடியாவிட்டாலும்,
அவன் செய்த தீமையைப் பொறுமையாய்ச் சகிப்பதும் அன்பே.

ஜுலை

8

ஜீவ நீரோடை

சகிக்க முடியுமா?

தீமையை நன்மையினாலே வெல்லு...
ரோமர் 12:21

ரோமர் 12:9-21

சில காலகட்டங்களில், சில விஷயங்கள் தாங்கிக் கொள்வதற்குக் கடினமான தென்றாலும் நான் தாங்கியிருக்கின்றேன். சில விஷயங்களில், பொறுமையின் எல்லைகளைக் கடந்து பொறுத்துப் போயிருக்கின்றேன். சில விஷயங்கள் என்னை மிக மிக இழிவாக நடத்துவது போல உணர்ந்த போதிலும், நான் என்னை தாழ்த்திக் கொண்டு சும்மாயிருந்திருக்கிறேன். அது எப்படி? கர்த்தருக்காகத் தாங்கினேன். கர்த் தருக்காகப் பொறுத்துக் கொண்டேன் என்று சொல்லமாட்டேன்.

கர்த்தருடைய ஐக்கியம் தந்த பலத்தால் தாங்கினேன். கர்த்தர் கொடுத்த கிருபையால் பொறுமை காத்தேன். கர்த்தர் கொடுத்த மனப் பக்குவத்தால் தாழ்ந்து போனேன். இப்படிச் சொல்வதுதான் சரியாயிருக்கும். ஏனென்றால், அது அப்படித் தான் நடந்தது. தாங்குவதற்கும், சகிப்பதற்கும் ,ஏற்பதற்கும் கடினமான சூழ்நிலை களில், கர்த்தருடைய ஐக்கியத்தால் எனக்குள் ஏற்பட்ட கர்த்தருக்கேற்ற மனநிலை களின் விளைவாகத்தான், அவை சாத்தியமாயின. ஒருமுறை தாங்கிக் கொள்ள கடுமையான சில வார்த்தைகளை நான் கேட்டபோது, அவை என்னைப் பொறுமை யிழந்து போக வைத்து, எப்படியும் சில நாட்கள் என்னை அவை வெறுப்பான மன நிலையில்தான் நிறுத்தும், என்றுதான் எண்ணினேன். ஆனால், தேவ சமுகத்தில் போய் என் மனதைக் கொட்டினபோது மனம் அப்படியே மாறிப் போய்விட்டது.

என்னைப் பலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்றான் அப்போஸ்தலனாகிய பவுல். தேவ சமுகம் நம்மைப் பலப்படுத்துகிறது. தேவ ஐக்கியத்தைத் தேடுவதால், நம்முடைய மனம் தேவ ஆவியால் பக்குவப்படுத்தப்படுகிறது. தேவ சமுகத்தில் நம்முடைய மனதில் உள்ள யாவற்றையும் நாம் ஊற்றிவிடும் போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட அமைதியும், தெளிவும், ஆற்றலும் இருதயத்தில் வருவதை உணர முடியும். கர்த்தரால் நம் முடைய இருதயம் தொடப்படும் போது கோபம், எரிச்சல், ஆத்திரம், வெறுப்பு, கசப்பு யாவையும் வலுவிழந்துபோகின்றன.

எரிந்து கொண்டிருக்கும் அக்கினியில் தண்ணீரை ஊற்றும் போது, அக்கினி அணைந்து வெம்மை தணிந்து போகிறது. அப்படியே, தேவ பிரசன்னத்தினால் நம்முடைய மனம் ஆவிக்கேற்ற குளிர்ச்சியை உணரும் போது வெறுப்பு, கசப்பு, கோபம், பழிவாங்கும் விருப்பம், வைராக்கியம் ஆகிய தீமையின் நெருப்புகள் அணைந்து போகின்றன. நாம் மறுபிறப்பின் அனுபவம் பெற்று, தேவ ஆவியினால் நடத்தப்படும் ஒரு வாழ்க்கை வாழும் போது, இவ்வித அனுபவங்கள் ஏற்படுகின்றன.

சிந்தனைக்கு...

கஷ்டப்பட்டுக் கர்த்தருக்காகச் சகிப்பது அல்ல,
அவரால் பக்குவப்பட்டுச் சகிப்பதே சாந்தம்.

ஜுலை

9

ஜீவ நீரோடை

மன்னிக்க முடியுமா?

கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல...
கொலோசெயர் 3:13

கொலோசெயர் 3:12-25

கட்டிட வேலை செய்து கொண்டிருந்த இடத்தில் ஒருவருடைய அலைபேசி காணாமல் போனது. அதனை யார் எடுத்திருப்பார் என்பதைத் தொலைத்தவரால் ஓரளவு கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால், அந்த நபரோ அதனை மறுத்ததுடன், தன்னைச் சந்தேகித்த நபரை அடிக்கவும் பாய்ந்தார். ஆனால் அலைபேசியைத் தொலைத்தவர் விடுவதாகயில்லை. தான் சந்தேகித்த நபர்தான் அலைபேசியைத் திருடியவன் என்பதை எப்படியாவது நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று தீவிர மாகச் செயல்பட்டார். இதற்குள் அந்த கட்டிட ஒப்பந்தக்காரர் பிரச்சினையை வளர விடக்கூடாது என்பதற்காக, இவருக்கு ஒரு நல்ல அலைபேசியைக் கொடுத்தார். அது தொலைக்கப்பட்ட அலைபேசியைவிட இரண்டு மடங்கு விலையுள்ளது. தனக்கு மிகச்சிறந்த மொபைல் கிடைத்த மகிழ்ச்சியில் தன்னுடைய மொபைல் போன் திருடியவரைத் தொடருவதை விட்டுவிட்டார்.

சிலரை நம்மால் மன்னிக்க முடியவில்லையா? அப்படியானால், அதைவிட ஒரு பெரிய மன்னிப்பை நாம் தேவனிடமிருந்து பெறவில்லை என்று அர்த்தம். சிலரை நம்மால் நேசிக்க முடியவில்லையா? அப்படியானால், தேவனிடமிருந்து ஒரு பெரிய அன்பை அனுபவிக்கவில்லை என்று அர்த்தம். சிலருக்கு முன்னால் நம்மை தாழ்த்த முடியவில்லையா? தேவனால் நாம் உயர்த்தப்பட்ட அனுபவம் பெறவில்லை என்று அர்த்தம்.

அன்பு, மன்னிப்பு, உதவி ஆகிய நல்ல விஷயங்கள் நம்மிடமிருந்து பிற ருக்குக் கிடைக்க வேண்டும். ஆனால், சில நேரங்கள் இவற்றைக் குறித்த உணர் வுகள் கிடைத்தாலும், நாம் அவ்விதம் செயல்படுவதில்லை. ஏனென்றால், நாம் தேவனிடமிருந்து எவற்றைப் பெற்று ஆத்துமாவில் அனுபவித்திருப்போமோ, அவற்றைத்தான் பிறருக்குக் கொடுக்க முடியும். அநேகர் தேவன் அருளும் மன்னிப்பு, அன்பு, உதவிகள், உயர்வுகள் போன்றவற்றை வேத அறிவாகப் பெற் றிருந்தாலும், தனிப்பட்ட அனுபவமாகப் பெறவில்லை. எனவே, அவர்களால் பிறருக்கு அவ்விதம் செய்ய முடியவில்லை.

கர்த்தரால் மன்னிக்கப்பட்ட அனுபவத்தை பரிசுத்த ஆவியால் நமக்குள் பெற வேண்டும். கர்த்தரால் நேசிக்கப்படும் அனுபவத்தை தேவ ஆவியால் உள்ளத் திற்குள் உணர வேண்டும். அப்பொழுது ஆத்துமாவில் ஒரு பெரிய சந்தோஷத்தை, அனுபவமாகப் பெறுவோம். அவ்விதமான ஒரு பூரிப்பைப் பெறும்போதுதான் பிறரை மன்னிக்கவும், நேசிக்கவும், தாங்கவும் நமக்குள் உந்துதல்கள் ஏற்படும்.

சிந்தனைக்கு...

கர்த்தரால் சந்தோஷப்படுத்தப்பட்டவர்கள்,
மனிதர்களால் வரும் துக்கத்தை எளிதாக மறக்கின்றார்கள்.

ஜுலை

10

ஜீவ நீரோடை

ஆராதனைச் சந்தோஷம்

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும்... யோவான் 15:11

யோவான் 15:1-12

கிறிஸ்தவர் ஒருவர் இந்த சபை, அந்த சபை என்று பார்ப்பதில்லை. எந்த சபையில் வல்லமையான அபிஷேகம் நிறைந்த ஆராதனை என்றாலும், போய்க் கலந்து கொள்வார். அவ்விதமான ஆராதனைகளில் கலந்து கொண்டு பாடி ஆடி ஆராதித்து மிகுந்த சந்தோஷத்தை உணருவார். ஆராதனை வேளை அபிஷேக அனுபவங்களில் மிகுதியாக மகிழுகின்ற அவருடைய வாழ்க்கையிலோ, எந்த சந்தோஷமுமில்லை. அபிஷேக ஆராதனைக் கூட்டங்களுக்கு புறப்படும்போது பரலோகத்துக்குப் போக டிக்கெட் எடுத்தது போல சந்தோஷமாகப் புறப்படுவார். ஆனால், வீட்டிற்கு வரும் போதோ நரகத்திற்குள் மறுபடியும் வந்து சேர்ந்து விட்டதைப் போல உணருவார்.

ஆனால், கிறிஸ்துவினால் வருகின்ற சந்தோஷ அனுபவங்கள் இப்படியல்ல. நாம் ஆராதனைச் சூழல்களோடு நம்மை இணைத்து சந்தோஷம் தேடுவது அல்ல. தேவ சமுகச் சூழல்களோடு நம்மை இணைத்து, கிறிஸ்துவினால் வருகின்ற மகிழ்ச்சியைத் தேட வேண்டும். தேவ சமுகச் சூழல்கள் என்பது யாரோ ஒருவர் நடத்தும் ஆராதனையில் நாம் கலந்து கொள்வது அல்ல. நாம் தனிப்பட்ட முறையில் தேவனைத் தேடி, அவருடைய ஐக்கியத்தை அனுபவிப்பதாகும். நானும் கர்த்தரும் என்ற உறவிற்குள் நம்மை இணைத்து, கர்த்தரோடு நாம் பேசிப் பழகி வாழும் போது நம்முடைய இருதயங்கள் அவரால் மகிழ்விக்கப்படும். இந்த மகிழ்ச்சிதான் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் செயல்படும்.

ஒரு சபையில் அல்ல. ஒரு கோயிலில் அல்ல. ஒரு ஆராதனை நிகழ்ச்சியில் அல்ல. ஒரு ஆராதனை நடத்துனரால் நடத்தப்படுதலில் அல்ல. நாம் கர்த்தரை நமக்குள் இருக்கிறவராகக் காண ஆசைப்பட்டு, அவரைத் தேட வேண்டும். நம்முடைய தனி ஜெப வேளைகள்தான் தனிப்பட்ட முறையில் தேவ பிரசன்னத்தை உணருவதற்குத் தலைசிறந்த இடம். நமக்குள் தேடாமல், ஆராதனை நிகழ்ச்சி சூழல்களில் தேடினால், தற்காலிகச் சந்தோஷத்தைத்தான் காண முடியும்.

நம்மை ஆவிக்குரிய சந்தோஷ அனுபவங்களில் நடத்துகிறவர் ஆவியானவரே. அந்த ஆவியானவர் கூட்டங்களிலும், ஆராதனை வேளைகளிலும் மாத்திரம் அல்ல. அவர் நம்மோடிருந்து நம்முடைய வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மை நடத்துகின்றார். நாம் பாஸ்டர்களால் நடத்தப்படுகின்ற ஒரு அனுபவத்தை மட்டும் சார்ந்திராமல், நாம் எங்கிருந்தாலும் நம்மை கர்த்தருக்குள்ளான ஐக்கியத்தில் நடத்தும் பரிசுத்தாவியை சார்ந்து செயல்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

ஆராதனைச் சூழல்களில் உணர்ந்த சந்தோஷம், வாழ்க்கைச் சூழல்களில் தொடராவிட்டால், அதுதேவன் தந்தது அல்ல.

ஜூலை
11
ஜீவ நீரோடை

வாழ்க்கை முறை எப்படி?

வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன்... லூக்கா 6:47

லூக்கா 6:39-49

ஒருவர் ஆரோக்கியமான உடல்நலனுக்கு எந்தெந்த உணவை உண்ண வேண்டும், எந்தெந்த உணவை உண்ணக்கூடாது என்ற தகவல்களை யூ-டியூப் வழியாக அதிகமாகக் கேட்பார். ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவுமுறைகள் சம்பந்தமான செய்திகள் அவருக்கு ரொம்ப பிடிக்கும். எந்தெந்த உணவுகளில் என்னென்ன நல்ல விஷயங்கள் இருக்கிறது. எந்தெந்த உணவுகளில் என்னென்ன பாதக விஷயங்கள் இருக்கிறது என்பதையெல்லாம் மெனக்கெட்டு குறிப்பெடுத்து வைப்பார். ஆனால் அவர் எங்கு சாப்பிடப் போனாலும் அதிசுவை உணவு எங்கே என்றுதான் தேடுவார். சுவைக்கு முதலிடம் தருவாரேயன்றி, ஒருபோதும் தரமான உணவு எது என்று பார்த்து சாப்பிடமாட்டார்.

சிலர் இப்படித்தான். கிறிஸ்தவ பிரசங்கங்கள் என்றால் மிக மிகச் சத்திய தரமனாவைதானா என்று பார்த்துதான் கேட்பார்கள். வியாபார ரீதியான பிரசங் கங்களையும், உணர்ச்சி வசப்படுத்தும் பிரசங்கங்களையும் கேட்க மாட்டார்கள். மிக மிகச் சரியான வேத அடிப்படையில் பேசுகின்ற தேவ ஊழியர்களை மட்டுமே அங்கீகரிப்பார்கள். ஆனால், வாழ்க்கை முறை என்று வருகின்ற போது தங் களின் மனதின்படியே வாழ்வார்கள். சுபாவங்கள் என்று வரும்போது மனுஷீக சுபாவங்களையே வெளிப்படுத்துவார்கள். பணம், பொருள், ஆடம்பரம் என்று வருகின்றபோது எல்லோரைப் போலவே வாழ்வார்கள்.

நாம் சத்தியத்தை விரும்பலாம். தேவ அடிப்படை உபதேசங்களில் நாம் பிரியப் படலாம். சத்தியத்தைக் கலப்படமின்றிப் பேசுகின்றவர்களைப் பாராட்டலாம். தவறாகப் போதிக்கின்றவர்களைக் கண்டிக்கலாம். இவை யாவும் இருந்தாலும் சத்தியத்தின்படி நாம் வாழ்கின்றோமோ என்பதே முக்கியம். நாம் நம்புகின்றதும் மதிக்கின்றதுமான சத்தியம், நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றா என்பதே முக்கியம். தவறாகப் போதிப்பது மட்டும் பாவமல்ல. சரியான போதனையைக் கேட்டு விட்டு சத்தியத்தின்படி வாழாமல் போவதும் பாவமே.

முதலாவது, நாம் கேட்பது நல்ல உபதேசமா, கெட்ட உபதேசமா என்பதல்ல. நம்முடைய இருதயம் நல்லதா கெட்டதா என்பதே முக்கியம். நாம் கேட்பது ஆவிக் கேற்ற போதனையா, மாம்சத்துக்கேற்ற போதனையா என்பதல்ல. நம்முடைய இருதயம் ஆவிக்குரிய இருதயமா, மாம்சீக இருதயமா என்பதே முக்கியம். நாம் இரட்சிப்பின் அனுபவம் பெற்று ஆவிக்குரிய இருதயம் பெற்றால்தான், நல்ல சத்தியத்தின்படி நடக்க இயலும்.

சிந்தனைக்கு...

நற்போதனைகளைக் கேட்டும் நல்லவர்களாகாதவர்கள், துர்போதனைகளைக் கேட்கிறவர்களைவிட சிறந்தவர்கள் அல்ல.

ஜுலை
12
ஜீவ நீரோடை

யாரிடம் கற்ற பக்தி

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்....
யோவான் 3:3

யோவான் 3:3-16

ஒருவர், சிறுவயதிலிருந்து தேவ பக்தியோடு வளர்வதற்குப் பெற்றோரால் நடத்தப்பட்டவர். அவர் வளர்ந்த பிறகும் பெற்றோர் கற்றுக் கொடுத்த பக்தி முறைகளைப் பின்பற்றத் தவறவில்லை. ஜெபம், வேத வாசிப்பு, குடும்ப ஜெபம், சபை ஆராதனை, பய பக்தி, ஒழுங்கு முறைகள் என நல்ல ஒரு பக்தி வாழ்க்கை முறை அவரிடம் இருந்தது. ஆனால், எத்தனை புதிய புதிய பிரசங்கங்கள் கேட்டாலும், எவ்வளவு ஆழமான சத்தியங்கள் கேட்டாலும், அவரிடமுள்ள பக்தி அளவில் எந்த மாற்றமும் ஏற்படாது. அவருடைய பெற்றோர் கற்றுக் கொடுத்த பக்தி வாழ்க்கை முறைக்கு அப்பால் அவர் புதிதாக எதையும் கற்றுப் பின்பற்றமாட்டார்.

ஆம், இவர் வாழ்வது பெற்றோர் கொடுத்த பக்தி ஒழுங்கின் அனுபவம். ஆனால், தேவ ஆவியால் இவர் எதையும் கற்றுக்கொள்ளவில்லை. பக்திமானாக வாழப் பழகியிருந்தாரேயன்றி பரிசுத்தவானாக வாழ்ந்திடப் பழகவில்லை. ஏனென்றால், இவரிடம் மறுபிறப்பின் அனுபவம் இல்லை. இவருடைய பக்திக்கு நிக்கொதேமு பக்தி என்று பெயர் வைக்கலாம். நிக்கொதேமிடம் முன்னோர்கள் வழியாகப் பெற்றுக் கொண்ட பக்திமான் வாழ்க்கை முறை இருந்தது.

ஆனால், அவனிடம்மறுபடியும் பிறக்க வேண்டிய அனுபவத்தை இயேசு வற்புறுத்தினார். தேவனுடைய காரியங்களை அறிகின்ற அறிவு மறுபடியும் பிறந்தால்தான் வரும். தேவ ஆவியால் வழிநடத்தப்பட்டால்தான் தேவனுக்கேற்ற பரிசுத்த வாழ்க்கைமுறை ஏற்படும். நாம் பெற்றோரால் நடத்தப்பட்ட முதற்கட்ட பக்தி அனுபவம் பெற்றிருக்கலாம். ஆனாலும், அதனைக் கொண்டு தேவனுக்கேற்ற உயர்தரமான வாழ்க்கையை வாழ முடியாது. நாம் தேவ ஆவியால் நடத்தப்படுகிற அடுத்த கட்ட ஆவிக்குரிய அனுபத்திற்கு வர வேண்டும். அப்பொழுதுதான் தேவ உறவில் வாழ முடியும். அப்பொழுதுதான் தேவ ஐக்கியத்தால் மேன்மையான சுபாவ மாற்றங்கள் ஏற்படும்.

நாம் மாம்சீக ஆற்றலைப் பயன்படுத்திப் பக்தியான சில ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து ஆன்மிகமாக வாழ்கின்றோம் என்ற திருப்தியைப் பெற முடியும். ஆயினும், அங்கே அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தம், மனத்தூய்மை போன்ற ஆவிக்கேற்ற குணங்களைக் காண முடியாது. தேவ ஆவியால் நடத்தப்படும் அனுபவம் பெற்றால்தான், ஒரு பக்தனைப் போல வாழ்வதில் திருப்தியடையாமல், தேவனுடைய பிள்ளையாக வாழ்ந்து காட்டும் வாஞ்சை ஏற்படும்.

சிந்தனைக்கு...

சிலர் பரிசுத்தமாக வாழாமைக்குக் காரணம், பாவம் அல்ல, அவர்களின் பக்தி வாழ்க்கையே காரணம்.

ஜூலை
13
ஜீவ நீரோடை

பிள்ளையாக நில்

பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்... யோவான் 1:12

யோவான் 1:1-13

மகா பரிசுத்தமான தேவனுடைய பார்வையில் இருக்கிறோம் என்ற விழிப்புணர்வு தேவை. ஆனால், இதுவே தேவனைக் குறித்த நம்முடைய பிரதான பார்வையாக இருக்கக்கூடாது. தேவன், நான் சரியாக, ஒழுங்காகப் பரிசுத்தமாக இருக்கிறேனா என்பதையே முதல் பார்வையாகக் கொண்டிருக்கிறார் என்று எண்ணக்கூடாது. முதலாவது, தேவன் நம்மைப் பார்க்கும் போது, அவருடைய பிள்ளை களாக நாம் இருக்க வேண்டும் என்பதே அவருடைய சித்தம். அப்படியானால், நாம் முதலாவது அவருடைய பிள்ளைகள் என்ற நிலையில் தோன்ற வேண்டும்.

பிள்ளைகளைப் பார்க்கும் தகப்பன், முதலாவது அவன் சரியாக ஒழுங்காக இருப்பதை அல்ல. தன்னுடைய பிள்ளை நன்றாக நலமாக இருக்கிறானா என்பதே பிரதான கவனமாயிருக்கும். அதாவது, தேவன் நம்மை அன்புள்ள தகப்பனாகப் பார்க்கின்றார். நல்ல அன்புள்ள தகப்பனுக்குப் பிள்ளையாக இருக்கின்ற ஒரு உணர்வு நமக்கு வேண்டும். சிலர் பயந்து பயந்து தங்களைச் சரிசெய்து சரிசெய்து வாழ்கின்றனர். அதனால், இன்னும் இன்னும் தவறுகளில்லா ஒரு வாழ்க்கை முறையில் முன்னேறுகின்றனர். ஆயினும், தேவ அன்பிலும், உறவிலும், ஐக்கி யத்திலும் முன்னேறுவதில்லை.

தேவன் முதலாவதாக, அன்புள்ள தகப்பனாக நமக்குள் சிந்திக்கப்பட வேண் டும். அந்த அன்பான தேவனைக் குறித்த ஒரு வாஞ்சை அவருக்கேற்ற பரிசுத்தத்திலும் நம்மை வளரச் செய்யும். சிலர் அவர் பரிசுத்தர், அவர் பரிசுத்தர் என்ற உணர்வோடு எங்கே என்னிடம் ஏதாவது குறை இருக்கிறதா என்று சிந்திப்பார்கள். அந்த சிந்தனை ஒரு பயங்கரமான தேவனுக்கு முன்பாக பயப்படும் ஒரு பக்தனாக நம்மை மாற்றும். தேவன் அன்பானவர். அவர் என்னுடைய தந்தை என்ற விதமாகச் சிந்திக்கும் போது, அவருடைய பிள்ளையாக நம்மை உணரவும், அவருடைய ஐக்கியத்தை விரும்பித் தேடவும் நம்மை ஊக்குவிக்கும். அவருடைய அன்பின் ஐக்கியம்தான் அவர் விரும்பு கின்ற விதமான பரிசுத்த நிலமைக்கு நம்மைக் கொண்டு செல்லும்.

அனேகர், பக்தர்களாகத் தங்களைக் காண்பிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். அனேகர், வேலைக்காரனைப் போல கீழ்ப்படிவதிலேயே கவனம் செலுத்துகின்றனர். அனேகர், பரிசுத்தமாக வாழ வேண்டும் என்பதிலேயே குறியாயிருக்கின்றனர். ஆனால், நாம் பிள்ளைகளைப் போல கர்த்தருக்கு முன்பாக வந்தால்தான், நம்மிடம் உண்மையான பக்தியும், பரிசுத்தமும் தோன்றும். முதலாவது, மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்றால்தான், பிள்ளையைப் போல கர்த்தரைத் தேட முடியும்.

சிந்தனைக்கு...

பிள்ளைகளாக வாழப் பழகிக் கொண்டவர்கள்,
பரிசுத்தமாக வாழ்ந்திட தனியாகப் பழகத் தேவையில்லை.

ஜூலை
14
ஜீவ நீரோடை

நியாயமா நல்லதா?

தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும்... 1 பேதுரு 3:9

1 பேதுரு 3:9-22

இதைப் பொறுத்துக் கொள்ள அவசியமில்லைதான். இதனைத் தாங்கிக் கொள்ளத் தேவையில்லைதான். இதையெல்லாம் சகித்துக்கொண்டு மௌன மாயிருக்க வேண்டியதில்லைதான்? இது போன்ற விஷயங்களில் கோபமடை வதையோ, ஆத்திரப்படுவதையோ, பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு எதிராகச் செயல் படுவதையோ அநீதி என்று யாரும் சொல்ல இயலாது. நியாயமாக எந்த மனிதரும் இதுபோன்ற சூழ்நிலைகளில், தங்களின் நியாயத்திற்காகப் போராடி மற்றவர்மேல் வெறுப்பையும், கசப்பையும் காட்டுவது இயற்கைதான்.

ஆனால், இது நியாயமாக இருந்தாலும் இதனால் நமக்கு சில நஷ்டங்கள் ஏற்படும். இதனால் நமக்கு சில கஷ்டங்கள் அதிகமாகும். இதனால், நமக்கு அமைதி யின்மையும், குழப்பமும், மகிழ்ச்சியின்மையும், போராட்டங்களும் ஏற்படும். மற்றவர் தவறாக நடந்து கொண்டதின் அடிப்படையில், நாம் பதிலுக்குப் பதில் நியாயத்தின் அடிப்படையில் செயல்படும்போது, நமக்கு இன்னும் பல பிரச்சினைகள் சேர்ந்து கொண்டே போகும்.

எனவே, பொறுத்துக்கொள்வது நல்லதாக மாறுகின்றது. சகித்துப் போவதால் மேற்கொண்டு பிரச்சினைகள் வளராமல் தடுக்கப்படுகிறது. தாழ்ந்து போவதால் கோபதாபங்களுக்கும், வாக்குவாதங்களுக்கும், பதிலுக்குப் பதில் செயல்களுக்கும் வாய்ப்பில்லாமல், ஆக்கப்பூர்வமான செயல்களைத் தொடர்ந்து செய்ய முடிகிறது. எது நியாயம் என்பதைவிட, எது நமக்கு மிகவும் நல்லது என்பது மிக முக்கியம். நெடுஞ்சாலைகளில் நாம் குறிப்பிட்ட அளவு வேகத்தில் வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது, பின்னால் வருகின்ற சிலர் நம்மை முந்திப் போவதற்கு வழி கேட்பார்கள். நியாயப்படி நாம் வழிவிடத் தேவையில்லை. ஏனென்றால், அதே வேகத்தில் அந்த சாலையில் போக நமக்கு உரிமை உள்ளது. ஆனால், அந்த உரிமைக்கு முதலிடம் தந்தால், சாலைவிதிகளின்படி வாகனத்தை ஓட்டாமல் முந்திப் போக விரும்பு கிறவரால் நமக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, நியாயத்தை விட்டுக் கொடுத்து ஆபத்தைத் தவிர்ப்பது நல்லது.

வேதாகமத்தில் பொறுமை, தாழ்மை, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், ஏற்றுக் கொள்ளுதல் போன்ற ஆவிக்குரிய பண்புகள் ஏன் அதிகம் வற்புறுத்தப் படுகின்றன. நியாயமற்றுச் செயல்பட்டுப் பழகின மக்கள் மத்தியிலும், அநீதியான செயல்களைப் பெரிய விஷயமாக எண்ணாத மக்கள் மத்தியிலும், நாம் ஞானமாக வாழ்ந்து தேவையற்ற துன்பங்களைத் தவிர்த்துக் கொள்ளத்தான்.

சிந்தனைக்கு...

அநீதியை நாம் சகிப்பதினால் அநீதிக்காரன் பயன்படமாட்டான். ஆனால், நாம் பயன்பெறாமல் போவதில்லை.

ஜுலை
15
ஜீவ நீரோடை

பிரிவது கடினம்

கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? ரோமர் 8:36

ரோமர் 8:28-39

நான்சி பெலினா (கற்பனைப் பெயர்) எல்லாராலும் நல்ல பக்தியுள்ள பிள்ளையாக அறியப்பட்டவள். நன்றாகச் ஜெபிப்பாள். வேதாகமத்திலிருந்து என்ன கேட்டாலும் நன்றாகப் பதில் சொல்வாள். சபையில் பக்திக்கு அவள்தான் முன்மாதிரி. ஆனால், அவளுக்குத் திருமணமாகி கணவர் ஒரு பெரிய விபத்தைச் சந்தித்தபோது அவளுடைய பக்தியில் அவளால் தொடரமுடியவில்லை. அவள் கர்த்தரை விட்டு விலகிவிட்டவளாக அறியப்பட்டாள். ஜெபம், வேத வாசிப்பு, சபை கூடுகை எல்லாவற்றையும் விட்டுவிட்டாள். துன்பம் வந்ததற்காக கர்த்தரை விட்டுவிட்டாளே என்று எல்லோரும் வருத்தப்பட்டனர்.

ஆனால், அவளுடைய சபை பாஸ்டரோ வித்தியாசமான விளக்கம் கொடுத்தார். நான்சி நல்ல ஒரு பக்தி வாழ்க்கையை விட்டுவிட்டாள். ஆனால், கர்த்தரை விட்டுவிட்டதாக சொல்வது சரியல்ல. ஏனென்றால், கர்த்தரைப் பெற்றுக் கொண்ட எவரும் அவரை எளிதாக விட்டுவிட இயலாது என்றார். கர்த்தரை விட்டு விட்டுப் பின் மாற்றம் அடைந்ததாக சிலரைக் குறித்து நாம் கேட்கின்றோம். ஆனால், அநேகர் கர்த்தரை விட்டுவிட்டார்கள் என்பது உண்மை அல்ல. அவர்கள் உண்மையில் கர்த்தரைத் தங்கள் வாழ்க்கையில் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பக்தியாக வாழ்வதைக் கர்த்தரோடு வாழ்வதாக தவறாகப் புரிந்து கொண்டார்கள்.

அநேகர் நல்ல பல பக்திச் செயல்களோடு வாழ்வதைக் கர்த்தரோடு வாழ் வதாக எண்ணுகின்றனர். ஒரு பெரிய துன்பமோ, தோல்வியோ, ஏமாற்றமோ வாழ்வில் வரும்போது அவ்விதமான பக்திச் செயல்களில் தொடர்ந்திட அவர்களால் முடியவில்லை. அதனைக் கர்த்தரை விட்டு விலகிவிட்ட அனுபவமாகப் பலர் எண்ணுகின்றனர். ஆனால் ,உண்மையில் அவர்கள் கர்த்தரைத் தங்களுக்குள் ஏற்றுக் கொண்டு, அவருடைய ஐக்கியத்தில் பழகி, அவருடைய அன்பை அனுபவிக்கவில்லை என்பதே உண்மை. அப்படிப் பழகியிருந்தால் எதிர்மறையாக ஏதோ ஒன்று நிகழும் போது, அவருடைய ஐக்கியத்தை வேண்டாம் என்று விலகிப் போவது மிக மிக கடினம்.

ஒருவர் கர்த்தரை தன்னுடைய வாழ்க்கையில் இரட்சகராக அறிந்து ஏற்றுக் கொள்ளும் போது, கர்த்தருடைய ஐக்கியத்தை அனுபவிக்கும் கிருபையைப் பெறு கின்றனர். அவ்விதம், தேவ உறவோடு வாழ்கின்ற மனிதன் தேவ அன்பையும், ஐக்கியத்தையும் அனுபவிக்கிறான். அவ்விதமாக அனுபவித்துப் பழகிவிட்ட மனிதன், வாழ்க்கையின் பிரச்சினைகளினால் விரக்தியடைந்து, அவரை விட்டுப் போக இயலாது.

சிந்தனைக்கு...

ஒருவரிடமுள்ளது உண்மையான இறை உறவு அல்ல என்பதை, துன்பங்கள் காட்டிக் கொடுத்து விடும்.

ஜூலை

16

ஜீவ நீரோடை

ஆதி அன்பு

நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்... வெளிப்படு. 2:4

வெளிப்படுத்தின விசேஷம் 2:1-11

திருச்சபை விசுவாசிகளில் சிலர் முன்பு போல சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாததை பாஸ்டர் பார்த்தார். சபை விசுவாசிகளில் சிலர், முன்பு, போல காணிக்கை கொடுக்காததை பாஸ்டர் கண்டறிந்தார். சபை விசுவாசிகளில் சிலர் முன்பு போல கிராம ஊழியங்களிலே ஆர்வமில்லாததை பாஸ்டர் தெரிந்து கொண்டார். எனவே, பாரத்தோடு அடுத்த சில வாரங்கள் விசுவாசிகள் ஆதி அன்பை இழந்துவிட்டார்களே என்று பிரசங்கித்தார். தாங்கள் முன்பு போலச் செயல்படாததை உணர்ந்த பலர், மறுபடியும் சபை கூடுகை, ஜெபம், காணிக்கை, ஊழியம் என ஒப்புக் கொடுத்துச் செயல்பட ஆரம்பித்தனர். பாஸ்டர், விசுவாசிகள் ஆதி அன்பிற்குத் திரும்பிவிட்டதைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டார்.

ஆனால், பாஸ்டர் எதிர்பார்த்த விதமான செயல்களில் விசுவாசிகள், மறுபடியும் ஆர்வம் காட்டியதால், ஆதி அன்பிற்கு வந்து விட்டார்கள் என்று அர்த்தம் அல்ல. அவர்கள் முன்பு செய்து கொண்டிருந்த சில பக்திச் செயல்களுக்கு மறுபடியும் திரும்பிவிட்டனர். ஆனால், ஆதி அன்பை வெளிப்படுத்துவது என்பது வெறும் செயல்கள் அல்ல. அது நாம் வாழ்கின்ற விதம். அது நம்முடைய சுபாவங்களோடு சம்பந்தப்பட்டது. அது நம்முடைய சிந்தனைகளோடு சம்பந்தப்பட்டது. அது தேவ சமுகத்தில் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதோடு சம்பந்தப்பட்டது. அது நாம் ஒருவரோடொருவர் அன்பாயிருப்பதோடு சம்பந்தப்பட்டது.

சிலர் தாங்கள் ஜெபம், ஆராதனை, ஊழியம், காணிக்கை என பல பக்தியான செயல்பாடுகளோடு இருப்பார்கள். அவை கர்த்தர்மேல் அதிக அன்பாயிருப்பதாகப் பார்க்கப்படும். ஆயினும், அவர்களில் பலருக்கு நல்ல ஆவிக்குரிய சுபாவங்கள் இராது. கர்த்தருக்குச் சாட்சியாகத் தங்களின் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ளும் அனுபவம் இராது.

தொழிலதிபர் ஒருவர் நிறைய காணிக்கை கொடுப்பார். கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டுவதற்கு தாராளமாக நிதி கொடுப்பார். இத்தகைய செயல்கள் அவர் கிறிஸ்துவின்மேல் அதிக அன்பு கொண்டிருக்கும் அனுபவமாகப் பார்க்கப்பட்டுப் பலரால் புகழப்படுகிறது. அதே வேளையில், அவர் உலகப்பிரகாரமான செயல்பாடுகளில் அதிக ஆர்வம் கொண்டவர். உலக ஆடம்பரம், உலக கேளிக்கைகள், என பல விஷயங்களில் எந்த கிறிஸ்தவ அடையாளமும் இல்லாமல் இருப்பார். ஆம், கிறிஸ்துவுக்காகப் பல காரியங்களைச் செய்வது அல்ல. கிறிஸ்துவைப் பிரதிபலித்து வாழ்வதே அவர்மேல் அன்பாயிருக்கின்ற அனுபவம்.

சிந்தனைக்கு...

தேவ பக்தியோடு வாழப்பழகுதல் அல்ல,
தேவ உறவுடன் வாழப் பழகினால்தான், பின்மாற்றம் வராது.

உணர்ச்சிவசப்படுத்துதல்

வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும்...
1 தெசலோனிக்கேயர் 1:5

1 தெசலோனிக்கேயர் 1:1-10

உண்மையைச் சொல்லும் போது உணர்ச்சிகரமாகச் சொல்ல வேண்டும். அதே வேளையில், உணர்ச்சிவசப்படுத்தும் விதமாகப் பேசுவதால், உண்மையை விட உணர்ச்சிதான் கேட்கின்றவரை ஆட்கொள்ளும். ஒன்றுமில்லாத விஷயங்களைப் பேசுகின்ற போது கிறிஸ்தவப் போதகர்கள் ஏன் இவ்வளவு உடலை உதற விட்டு, ஊரைக் கூட்டும் விதமாகச் சத்தமிட்டுப் பேசுகிறார்கள் என்றாராம் ஒருவர். பல கிறிஸ்தவப் போதகர்கள் விஷயத்தில் இது உண்மைதான். அவர்களுடைய பிரசங்கத்தில் ஆவிக்கேற்ற ஒரு வலிமையான சத்தியமோ, சிந்திக்கத் தூண்டும் ஒரு சிந்தனையோ இராது. ஆனால், அதனைப் பேசும் போது உடலை உலுக்கியும், தேவைக்கு மிஞ்சிப் போய் சத்தமிட்டும் பேசுவார்கள்.

சத்தியம் சார்ந்த உருவகப்படுத்துதல்களும், உண்மையை உரிய விதமாக விளக்கும் உதாரணங்களும் அவசியமே. அதே நேரத்தில் சிலருடைய உதாரணங்களும், உருவகங்களும், கவர்ச்சிகரமாக மனதை மயக்குகின்றதேயன்றி, மனதில் மாற்றங்கள் ஏற்பட உதவி செய்யவில்லை. அநேகர் தேவசத்தியத்தால் ஆத்துமாவைத் தொடவில்லை. அவர்கள் பேசுகின்ற விதத்தாலும், சில விஷயங்களைக் கவர்ச்சிகரமாக விவரிக்கின்ற விதத்தாலும், மனிதனுடைய உணர்ச்சி மண்டலத்தையே தொடுகிறார்கள்.

பலருக்கு உள்ளங்களைத் தொடுகின்ற விதமாக உண்மையைப் பேசத் தெரியாது. ஆனால், கேட்கின்றவர்களை உணர்ச்சிவசப்படுத்துவது எப்படி என்று தெரியும். எப்படிப்பட்ட பரவசப்படுத்தும் தன்மையுள்ள வார்த்தைகளைச் சினிமாப்பாணியில் பேசினால் ஜனங்கள் பரவசப்படுவார்கள் என்பது தெரியும். ஆனால், கேட்கின்றவர்களை சற்று நேரம் பரவசப்படுத்துவது அல்ல. நாம் பேசும் வார்த்தைகள் கேட்கின்றவர்களின் பரவசம் அடங்கிய பின்பு, எந்த அளவிற்கு பரிசுத்தப்படுத்த முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மாபெரும் சத்தியப் போதகனாகிய பவுல், நயவசனிப்பு பிரசங்கங்கள் செய்யத் தெரியாதவன். ஆனால், பவுலின் பிரசங்கம் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதுமாயுமிருந்தது. (1கொரி 2:5) வான வேடிக்கை நடத்தும் இடத்தில் கொஞ்ச நேரம் சத்தங்கள் காதைக் கிழிக்கும். கொஞ்ச நேரம் அந்த சத்தம் கேட்பதற்குப் பரபரப்பாயிருக்கும். ஆனால், சத்தம் அடங்கிய பிறகு அங்கே சாம்பல் கொஞ்சம் குவிந்திருக்குமேயன்றி, அந்த வான வெடிகளால் ஒரு நல்ல விளைவும் ஏற்பட்டிருக்காது. பலருடைய பிரசங்கத் தரம் பயனற்ற வாண வேடிக்கை தரமாகவே உள்ளது.

சிந்தனைக்கு...

உணர்வடைகின்றவன் உண்மையால் தெளிவடைவான்,
உணர்ச்சிவசப்படுகின்றவன் உண்மையை அறியும் தெளிவை இழப்பான்.

ஜூலை
18
ஜீவ நீரோடை

விசுவாச சிறகுகள்

அவன் கர்த்தரை விசுவாசித்தான்... ஆதியாகமம் 15:6

ஆதியாகமம் 15:1-21

பாஸ்டர் ஒருவர் எதையும் பெரிதாக விசுவாசிக்க வேண்டும் என்ற சிந்தை உடையவர். எனவே, ஆயிரம் பேர் அமர்வதற்கான ஒரு சபைக் கட்டிடம் கட்டுவதற்கு வசதி இல்லாத நிலையில் 25000 பேர் உட்காரும் விதமான ஒரு பெரிய ஆலயம் கட்ட முன்வந்தார். கர்த்தர் இவ்வளவு பெரிய ஆலயத்தைக் கட்டுவதற்கு உதவுவார் என்பதை எத்தனைபேர் விசுவசிக்கின்றீர்கள் என்று சபையாரிடம் கேட்டார். எல்லோரும் ஒரே குரலில் ஆமென் அல்லேலூயா என்றனர். ஆனால், பல ஆண்டுகள் ஆகியும் அப்படி ஒரு ஆலயம் கட்டுவதற்கான நிலம் கூட வாங்க இயலவில்லை.

இங்கே தோல்வியடைந்தது விசுவாசமா? இல்லை. ஒரு பெரிய ஆலயம் கட்ட வேண்டும் என்ற ஆசைதான் தோல்வி அடைந்தது. பெரிய ஆலயத்தைக் கட்டித்தர கர்த்தர் வல்லவர் என்ற விசுவாசம் சரியானதே. ஆனால், அப்படி ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் சித்தம் கொண்டுள்ளாரா என்பதை அந்த பாஸ்டர் உறுதி செய்யவில்லை. தேவனுடைய வல்லமையை மட்டுமே சார்ந்து நாம் பெரிய விஷயங்களை எதிர்பார்க்க முடியாது. அந்த வல்லமையை நாம் கேட்கும் விஷயத்தில் கர்த்தர் வெளிப்படுத்த விரும்புகிறாரா என்பதையும் பார்க்க வேண்டும்.

வானத்தைம் பூமியையும் படைத்த தேவன், எதை வேண்டுமானாலும் செய்ய இயலும். ஆனால், ஆண்டவர் நாம் விரும்புவதைச் செய்ய விரும்புகிறாரா? என்பது முக்கியம். விசுவாசம் என்பது ஒரு பறவையின் இரண்டு சிறகுகள் போன்றது. ஒன்று அவருடைய வல்லமையின்மேல் வைக்கும் விசுவாசம். இன்னொன்று அவருடைய சித்தத்தின்மேல் வைக்கும் விசுவாசம். எனவேதான், நாம் பல விஷயங்களைக் கூறும் போது கர்த்தருக்குச் சித்தமானால் என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்கின்றோம்.

உங்கள் எல்லோருக்கும், கர்த்தர் ஒரு விமானம் தரப்போகிறார் என்பதை, எத்தனைபேர் விசுவாசிக்கின்றீர்கள் என்று ஒருவர் கேட்டால், நாம் எல்லோரும் நான் நான் என்று சொல்லலாம். ஏனென்றால் அவரால் அது கூடாத காரியம் இல்லை. ஆனால், நம் எல்லோருக்கும் ஒரு விமானம் தருவதற்கு கர்த்தர் திட்டம் வைத்திருக்கின்றாரா என்பதே முக்கியம். எனவே, தேவ வல்லமையைக் குறித்த விசுவாசம் மட்டும் போதாது. தேவன் எதை எதை நமக்காகச் செய்யச் சித்தமாயிருக்கின்றார் என்ற அறிவைப் பெறுதலும் அவசியம். நாம் தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து வாழும் போது, அவருடைய வல்லமையை மட்டும் அல்லாமல், அவருடைய சித்தத்தையும் அறியப் பழகுவோம்.

சிந்தனைக்கு...

விசுவாசம் என்பது நாம் விரும்பியதைப் பெறுவது அல்ல, தேவன் விரும்பியவற்றைப் பெறுவோம் என்பதே அது.

ஜூலை
19
ஜீவ நீரோடை

தரிசனம் வேண்டும்

உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும்...
2 தெசலோனிக்கேயர் 1:3

2 தெசலோனிக்கேயர் 1:1-12

எந்தத் துறையாயினும் சரி, அந்தத் துறையில் குறிப்பிட்ட ஒரு இலக்கை எட்ட வேண்டும் என்ற தரிசனம் தேவை. அவ்விதத் தரிசனம் உடையவர்கள்தான் ஜெயிக்கின்றார்கள். தரிசனம் உடைய எல்லோரும் உயர்ந்த இலக்கை எட்டி விடுகிறார்கள் என்று கூற முடியாது. ஆனால், உயர்ந்த இலக்கை எட்டுகிற எவரும் தரிசனம் இல்லாதவர்களாக இருந்திருக்க முடியாது. நாம் பணக்காரர்களாக விரும்புகின்றோம். உயர்கல்வி பெற விரும்புகின்றோம். சமுதாய அந்தஸ்தைப் பெற விரும்புகின்றோம். ஆனால், ஆவிக்குரியவர்களாக எண்ணுகின்ற நாம் பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழ்ந்து காட்ட ஆசைப்படுகின்றோமா?

ஜெபித்தால் போதும், ஆராதித்தால் போதும், காணிக்கை கொடுத்தால் போதும், என்று எண்ணுகின்றோம். ஜெபங்களோடும், ஆராதனைகளோடும், ஊழியங்களோடும் நம்மை இணைத்துக் கொண்டால் திருப்தியடைகின்றோம். ஆனால், கிறிஸ்தவர்கள் என்றால், கிறிஸ்துவின் சாயலைப் பிரதிபலிக்கின்ற ஒரு அனுபவத்தை எட்ட வேண்டும். கிறிஸ்தவர்கள் என்றால் ஒரு மேன்மையான வாழ்க்கை முறையால் சாட்சிகளாக நிற்க வேண்டும் என்ற ஆசை வேண்டும்.

இன்று அநேகர் கிறிஸ்தவ விசுவாசிகள் என்றால் சபைக்குச் செல்லுதல், ஜெபங்கள் செய்தல், பிரசங்கம் கேட்டல், கொஞ்சம் பய பக்தியாய் வாழ்தல் என்ற அளவில் திருப்தியடைந்து விடுகின்றார்கள். அங்கே ஒரு தரிசனம் இல்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, கிறிஸ்து என்னை எதற்காகப் பிடித்தாரோ அதை நான் பிடிக்க வேண்டும் என்றான். தொழிலில் உயர விரும்புகிறோம். வேலையில் உயர்வுகளை எதிர்பார்க்கின்றோம். இன்னும் ஒரு நல்ல வீடு கட்ட விரும்பு கிறோம். ஆனால், இன்னும் ஒருபடி முன்னால் சென்று உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையால் பிரகாசிக்க விரும்புகின்றோமா?

ஆனால், இப்படிப்பட்ட முன்னேற்ற ஆசைகள் இல்லாமலிருப்பதற்கு, இப்படி ஒரு காரணம் இருக்கலாம். நாம் கிறிஸ்துவை நமக்குள் பெற்றுக் கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கையை ஆரம்பிக்காமல், கிறிஸ்துவை ஆராதிக்கும் ஒரு செயல்பாட்டிலிருந்து ஆரம்பித்திருக்கலாம். கிறிஸ்துவை நமக்குள் விசுவாசம் மூலமாகப் பெற்றுக் கொண்டு ஆரம்பித்தால், பரிசுத்தாவியை நாம் பெற்றுக் கொண் டிருப்போம். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருந்தால், அந்த ஆவியால் இன்னும் இன்னும் உயர்ந்த ஒரு ஆவிக்குரிய நிலையை நோக்கிச் செல்லத் தூண்டப்பட்டிருப்போம்.

சிந்தனைக்கு...

நல்லதை நோக்கி ஓடுவதில் நீ மெதுவாக இருந்தால்,
தீயவை உன்னை நோக்கி வர வேகமாக இருக்கும்.

ஜூலை
20
ஜீவ
நீரோடை

எல்லாம் சடங்கு

அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள்...
யோவான் 4:24

யோவான் 4:19-29

திருச்சபைகளிலே திருவிருந்து என்ற சடங்கு மிக முக்கியமானதாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், இந்தத் திருவிருந்து வழக்கமான விருந்துகளைப் போல, நன்றாக விதவிதமாகச் சாப்பிட்டு சந்தோஷப்பட்டோம் என்று சொல்லுகின்ற விதமான விருந்து அல்ல. ஒரு அடையாளத்திற்காக சிறிய அளவு திராட்சை ரசமும், சுவையற்ற ஒரு சிறு துணிக்கை அப்பமும் தரப்படுகிறது. இதனால் நமக்கு மிகப்பெரிய விருந்துண்ட திருப்தி கிடைக்காது. இது ஒரு சடங்குச் செயல். ஆனால், இந்தத் திருவிருந்தில் சபை உறுப்பினர்கள், பெரும்பாலும் தவறாமல் கலந்து கொள்கின்றார்கள்.

ஆனால், இன்று திருச்சபைகளில் திருவிருந்து மட்டுமல்ல சடங்காக உள்ளது. பெரும்பாலான திருச்சபை நிகழ்வுகள் வெறும் பக்திச் சடங்குகளாகவே உள்ளன. ஜெப சடங்கு, ஆராதனைச் சடங்கு, பாடல் சடங்கு, பாவ அறிக்கைச் சடங்கு, விசுவாச அறிக்கைச் சடங்கு, காணிக்கைச் சடங்கு, பிரசங்கச் சடங்கு என எல்லாமே சடங்குகளாகவே உள்ளன. ருசித்துப் புசித்து மகிழ முடியாத திருவிருந்து ரசத்தையும், அப்பத்தையும் பக்திக்காக விரும்பிப் பெறுகிறோம். அது போலவே, மேலே சொன்ன பல விஷயங்களையும் நம்மில் அனேகர் எந்தச் சுவை அனுபவமும் இல்லாமல், ஒரு பக்திச் சடங்காகவே முக்கியத்துவப்படுத்துகின்றோம்.

பெரும்பாலான திருச்சபைகளில் கர்த்தருடைய செய்தி என்று தரப்படும் பிரசங்கத்தில், கர்த்தருக்குரிய எந்த ஆவிக்கேற்ற சுவையும் இல்லை. இதனைப் போதகர்கள் ஒரு பக்திச் சடங்காகச் செய்கின்றனர். அந்தப் பக்தி சடங்குப் பிரசங்கத்தை அநேகர் தவறாமல் கேட்கின்றனர். ஆனால், அதனால் எந்த சுவையையோ திருப்தியையோ அவர்கள் பெறவில்லை. அவர்கள் கேட்பது சுவைக்கு அல்ல. பக்திக் கடமைக்காகக் கேட்கின்றார்கள். ஒரு வேளை, உண்மையான தேவ செய்தி வழங்கப்பட்டாலும், அதனை யாரும் விசேஷமாக எண்ணி உள்வாங்குவதில்லை. ஏனென்றால், அவர்கள் வார்த்தையைச் சுவைக்க வரவில்லை. அவர்கள் பக்திக் கடமைக்காகவே கேட்கின்றார்கள்.

பெரும்பாலானோர் பிரசங்கங்களைப் பயன்படுத்துவதற்காகக் கேட்பதில்லை. ஒரு பக்திக் கடமைக்காகவே அவர்கள் கேட்கின்றனர். அவர்கள் உப்புசப்பற்ற பிரசங்கம் செய்தால் கவலைப்படுவதுமில்லை. சத்திய ஆரோக்கியம் நிறைந்த தேவ வார்த்தைகளைப் பிரசங்கித்தால் சந்தோஷப்படுவதுமில்லை. ஏனென்றால், அவர்கள் இதனைச் சடங்காச்சாரமாகவே கேட்கின்றனர்.

சிந்தனைக்கு...

தேவ வார்த்தை கேட்க வராத பாவிகளைவிட,
தேவ வார்த்தை கேட்டும் செயல்படாதவர்களே மோசமான பாவிகள்.

ஜுலை
21
ஜீவ
நீரோடை

சந்தேகப் பார்வை

உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்... யூதா 24

யூதா 15-25

கிறிஸ்தவர் ஒருவர் எந்த ஒரு கிறிஸ்தவ ஊழியரையும் நம்பமாட்டார். எல்லோரையும் ஒரு சந்தேகக் கண்ணோடுதான் பார்ப்பார். ஒருவர் தேவ தூதனைப் போல குறைகளற்றிருந்தாலும், தூதர்களே பாவம் செய்து விழுந்து போனார்களே என்பார். ஒருவர் தாவீதைப் போல தேவனுடைய இருதயத்திற்கேற்றவராயிருந் தாலும், அப்படிப்பட்ட தாவீதே விழுந்து போகவில்லையா என்பார். நீண்டகாலமாக ஒருவர் தன்னைச் சரியான பரிசுத்தவான் என்று நிருபித்தாலும், தேமாவைப் போல இவரும் இப்பிரபஞ்சத்தில் ஆசை வைத்துப் போகமாட்டார் என்பதற்கு என்ன நிச்சயம் என்பார். அவரைப் பொறுத்தவரை எவ்வளவு பெரிய பரிசுத்தவனாக யிருந்தாலும், ஏதோ ஒரு பகுதியில் அவர் தவறினவராக இருக்க வாய்ப்புண்டு.

எந்த ஒன்றிற்கும் விதி விலக்கு என்ற ஒன்று இருக்கும். யாரோ ஒருவர் தவறிப் போயிருக்கலாம். யாரோ ஒருவர் விழுந்து போயிருக்கலாம். யாரோ ஒருவர் எதிர்பாராத ஒரு கண்ணியில் சிக்கியிருக்கக்கூடும். ஆயினும், அவற்றையே அடிப்படையாக வைத்து எந்த ஒருவரும் அப்படியிருக்கலாமே என்று எண்ணுவது தவறு. வேதா கமத்தில் ஒரு கேயாசி, ஒரு தாவீது, ஒரு தேமா, ஒரு யூதாஸ் என ஒரு சிலர்தான் தேவ ஊழியப் பின்னணியிலிருந்து கொண்டு தவறியிருக்கின்றார்கள்.

ஆனால், ஆபிரகாம், யோசேப்பு, மோசே, யோசுவா, எலியா, எலிசா என எவ்வளவோ தேவ மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தவறவில்லையே. பவுல் அப்போஸ்தலனுடைய ஊழியத் தொடர்பில் ஏராளமானவர்கள் இருந்தனர். எல்லோரும் தவறவில்லை. ஒரு தேமாவைக் காண்பித்து எல்லோரும் அவ்விதமே போக முடியும் என சிந்திக்கக்கூடாது. எனவே, சிலரை நாம் கர்த்தருடைய பாதையில் நடக்கிறவர்களாகப் பார்க்கும் போது, மேகம் போன்ற திரளான சாட்சிகளில் சிலரைப் போல இவர்களும் இருக்க முடியும் என்று எண்ண வேண்டும்.

ஒருவர் எந்த தேவ ஊழியரைப் பார்த்தாலும் தாவீதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். எங்கோ ஒரு நேரம் விழுந்துவிடக்கூடாது என்பாராம். ஆனால், பவுலை ஞாபகம் வைக்கவோ, பேதுருவை ஞாபகம் வைக்கவோ சொல்லமாட்டார். எச்சரிக்கை அவசியம். யாரையும் அப்படியே நம்பிவிடக்கூடாது. அதே வேளையில், ஒருவருடைய ஜீவியம் கர்த்தருக்கேற்றபடியாக பல நிலைகளில் இருக்கும்போது, இவர் தாவீதைப் போல விழுந்து விட வாய்ப்புண்டு என்று சிந்திப்பதற்கே அதிகமாக மனதை ஈடுபடுத்தக்கூடாது.

சிந்தனைக்கு...

ஆயிரம் தீயவர்களை நல்லவர்கள் என்று பார்ப்பதைவிட, ஒரு நல்லவனைத் தீயவனாகப் பார்ப்பது பெரும்பாவம்.

தேவையா ஆசையா?

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்... கொலோசெயர் 3:2

கொலோசெயர் 3:1-17

வயதான தம்பதியினரிடம் ஏராளமான செல்வங்கள் இருந்தது. அவர்களுக்குப் பிள்ளைகளும் இல்லை. அவர்கள் தங்களிடத்தில் உள்ள செல்வங்களிலிருந்து யாருக்கும் எந்த உதவியும் செய்வதில்லை. ஒரு நாள் அவர்களிடம் ஒருவர் நீங்கள் இன்னும் அதிகபட்சம் ஒரு சில வருடங்கள்தான் உயிர் வாழ இயலும். அதற்கு இவ்வளவு ஏராளமான செல்வங்கள் தேவைப்படாதே. ஏன் நீங்கள் ஏழைகளுக் கெல்லாம் உதவி செய்யக்கூடாது என்று கேட்டார். அதற்கு அவர்கள் நாங்கள் எங்கள் தேவைக்காகச் சொத்துக்களை வைத்திருக்கவில்லை. எங்களுடைய ஆசைக்காகத்தான் அவற்றை வைத்திருக்கின்றோம் என்றார்கள்.

அவர்கள் சொன்னது உண்மை. சிலரிடத்தில் செல்வங்கள் இருப்பது தேவைக்காக அல்ல.அவர்களின் ஆசைக்காகவே. சிலரிடம் ஏராளம் பொருட்கள் இருக்கும். அவைகள் அவர்களுடைய தேவைக்காக வைக்கப்படாமல், ஆசைக் காகவே வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதை உபயோகிப்பதுமில்லை. தேவையில்லை என்று யாருக்கும் கொடுப்பதும் இல்லை. இந்த உலகத்தில் பணம், பொருள் என்பது தேவைக்காகவே இருக்க வேண்டும். ஆனால், அநேகர் அவற்றை ஒரு ஆசையின் விளைவாகவே தங்களோடு வைத்திருக்கின்றார்கள்.

மனிதனுடைய தேவைகள் அளவுகளுக்கு உட்பட்டவையே. ஆனால், ஆசைகள் எல்லையற்றவை. பெரும்பாலும் மனிதர்கள் தேவைகளின் அடிப்படையில் அல்ல. அவர்கள் ஆசைகளின் அடிப்படையிலேயே தேடுகின்றார்கள். எனவேதான் பணஆசை, பொருளாசை போன்றவற்றை வேதம் பாவம் என்று சொல்லுகிறது. ஏனென்றால், எல்லைகளற்ற மனித ஆசைகள் மனிதனை எங்கெங்கோ, இழுத்துச் சென்று அவனைக் கேட்டிற்குள் தள்ளிவிடும். பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேர் என்று வேதம் சொல்கின்றது. மனிதன் ஆசைகளின் பாதையில் இழுக்கப்பட்டுச் செல்லும் போது, அவன் விதிகளை விட்டு விலகி ஓடுவதற்குக் கட்டாயப்படுத்தப்படுவான்.

தேவைகளைவிட ஆசைகளுக்கே அதிக முக்கியத்துவம் தருகின்ற மனி தனைக் கேடுகளுக்குத் தப்புவிப்பது எப்படி? எனவே தான் மேலானவைகளைத் தேடும்படி வேதம் சொல்கின்றது. ஒரு மனிதன் தனக்கு அதிக சமாதானத்தையும், சந்தோஷத்தையும், திருப்தியையும் தருவது தேவனுக்குரிய காரியங்களே என்ற உண்மையைக் கண்டுணர வேண்டும். அப்போது தேவனுக்கு உகந்த காரியங்களை அவன் அதிகமாகத் தேடுவான். அப்போது பண ஆசையும், பொருளாசையும் அவனை அலைக்கழிக்க முடியாது.

சிந்தனைக்கு...

ஆசைகள் ஒருவனை உயர உயரப் பறக்க வைக்கும்,
ஆனால், அவைகளே அவனை உயரத்திலிருந்து விழவும் வைக்கும்.

ஜூலை
23
ஜீவ
நீரோடை

மன்னிப்பது கடினம்

உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்...
கொலோசெயர் 3:18

கொலோசெயர் 3:9-25

ஒரு பெண் தன்னுடைய கணவனுக்குரிய மரியாதையைக் கொடுக்காமல், மிகவும் தாழ்வான வார்த்தைகளைப் பேசி, அவனை நொந்து போகச் செய்வாள். அவன் மனதில் வேதனையடைவதால் அதனைத் தொடர்ந்து கோபமான ஒரு மனநிலையுடன் இருப்பான். அவளிடம் சரியாகப் பேசாமல் மௌனமாக இருக்கும் அவனைப் பார்க்கும்போது அவளுக்கு ஆத்திரம் அதிகமாகும். எனவே, மனைவியை நேசிக்கத் தெரியாத மனிதனெல்லாம் கணவனா என்று கேட்பாள். உடனேயே பாஸ்டருக்குப் போன் செய்து, என் கணவர் என்னை நேசிப்பதுமில்லை, என்னிடம் பேசுவதுமில்லை என்பாள். உடனேயே பாஸ்டர் அவருக்குப் போன் செய்து, சத்துருக்களையே நேசிக்க இயேசு சொல்லியிருக்கும் போது, நீங்கள் சொந்த மனைவியை நேசிக்காமலிருக்கலாமா என்று கேட்பார்.

ஆனால், இங்கு கவனிக்கவேண்டிய ஒரு உண்மை உண்டு. சத்துருக்களிடம் நமக்குப் பெரிய எதிர்பார்ப்புகள் இராது. சத்துரு நமக்கு எதிராக எதையாவது செய்வது இயற்கையானது. அது நம்மை அதிகமாகப் பாதிக்காது. ஏனென்றால், சத்துருக்களின் மனநிலை அப்படித்தான் இருக்கும். எனவே, சத்துரு தீங்கு செய்திருந்தாலும் நாம் அவர்களை நேசிப்பது அதிகக் கடினமான விஷயம் அல்ல. ஆனால், கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் சத்துருக்களல்ல.அவர்கள் ஒருவருக்கொருவர் தோழர்கள். எனவே, அவர்களுக்கிடையில் எதிர்பார்ப்புகள் ஏராளம்.

எனவேதான், அடுத்தவர்கள் எப்படித் தங்களை நடத்தினாலும், அதனை மன்னிக்க இயன்றவர்கள், அடுத்திருக்கின்றவர்கள் கொஞ்சம் வித்தியாசமாக நடத்தினாலும் வைராக்கியத்தில் நிறைந்து , மன்னிக்க இயலாமல் போய் விடுவார்கள். எங்கே அதிகமான எதிர்பார்ப்புகள் உண்டோ அங்கே ஏமாற்றம் வந்தால் தாங்குவது, கடினமான விஷயமாயிருக்கும்.

எனவே கணவன் மனைவி இருவருமே ஒருவருக்கொருவர் மதிக்கவும், நேசிக்கவும் வலிமை பெற்றவர்களாயிருக்க வேண்டும். ஊராரின் அன்பற்ற செயலை மனம் எளிதாக மறந்துவிடும். உறவுக்குள் இருக்கிறவர்களின் அன்பற்றதும் மரியாதையற்றதுமான செயலை மறப்பது கடினம். எனவே ,கர்த்தரை உரிய விதமாகக் கனப்படுத்தி வாழ்ந்து, அதனுடைய விளைவாக கணவன் மனைவி ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்து வாழப்பழக வேண்டும். கர்த்தருடைய அன்பை அதிகமாக ருசித்து அதனுடைய விளைவாக கணவன் மனைவி ஒருவரையொருவர் உரியவிதமாக நேசிக்கப் பழக வேண்டும்.

சிந்தனைக்கு...

அடுத்தவர்களுக்கு உன் மரியாதை போதும்,
அடுத்திருக்கிறவர்களுக்கோ உன்னுடைய அன்பு வேண்டும்.

ஜூலை

24

ஜீவ நீரோடை

விவேகமான காத்திருப்பு

கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்...

ஆதியாகமம் 16:2

ஆதியாகமம் 16:1-16

சிலர், டிராபிக் ஜாம் ஆகும்போது, முன்னால் நிற்கின்ற கார் நகரும் வரை காத்திருக்கமாட்டார்கள். அவசரப்பட்டு வலது புறமோ, இடதுபுறமோ கொஞ்சம் இடமிருந்தால் அது வழியாக வேகமாகப் போவார்கள். கொஞ்சம் தூரம் போனதும் எங்கும் போக இயலாதபடி அங்கேயே நிற்க நேரிடும். சில நேரங்களில் எதையும் செய்யாதபடி அடுத்து என்ன நடக்கிறது என்று கவனித்து பார்த்துக் கொண்டிருப்பது அவசியம்.

ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்து பொறுமையாய்க் காத்திருந்தான். ஆனால், அவனுடைய மனைவி சாராளினால் அப்படியிருக்க முடியவில்லை. எவ்வளவு காலம்தான் இப்படியே காத்திருப்பது என்று யோசித்து உலகத்தார் பின்பற்றும் ஒரு வழியில் போக விரும்பினாள். ஆனால், அது மகிழ்ச்சியான விளைவுகளைத் தரவில்லை. நினைத்தது நடந்தது. ஆனால் அது தேவனுடைய நினைவுகளோடு இசைந்து போகாத ஒன்றாகயிருந்ததால், பலவித வருத்தங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்தது.

மருத்துவர் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டு நல்விளைவு ஏற்படாததால், வியாதியஸ்தன் ஒருவன் வருத்தமடைந்தான். டாக்டர், எனக்கு இன்னும் சரியாக வில்லை. நான் என்ன செய்யலாம் என்றான். அதற்கு டாக்டர் அந்த மருந்தையே தொடர்ந்து சாப்பிடு. இதுதான் உன்னுடைய நோய்க்கான மருந்து என்றார். அவனோ இந்த டாக்டர் சரியில்லை என்று எண்ணி வேறொரு டாக்டரிடம் சென்றான். அந்த டாக்டர் அதிரடியாக வலிதீர்க்கும் மருந்துகளைக் கொடுத்தார். அதைச் சாப்பிட்டதும் அவனுக்கு விடுதலை கிடைத்தது. ஆனால், அந்த மருந்தின் உக்கிரத்தால் சரீரத்தின் வேறு சில பகுதிகள் பாதிக்கப்பட்டு நிரந்தர வியாதியாளன் ஆனான்.

தேவன் நமக்கு இதுதான் வழி என்று ஒன்றைக் காட்டும் போது விரும்பிய நன்மை வராவிட்டாலும், அந்தப் பாதைதான் நாம் தொடர்ந்து நடக்க வேண்டிய பாதை. நாம் காத்திருக்கும் பொறுமையின்றி, மனித ஆலோசனைகளைப் பின்பற்றிச் சாதிக்க விரும்பினால், ஒருவேளை விரைவாகக் காரி ய யம் நடக்கலாம். ஆனால், அதனுடைய பின்விளைவுகள் வேறுவிதமாக இருக்கும். சாமுவேல் தீர்க்கனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான் சவுல் இராஜா. ஆனால், பெலிஸ்தர் தன்னை நெருங்கி வருவதைக் கண்டு பதட்டமடைந்தான். எனவே, ஆசாரியனாகிய சாமுவேல் வந்து நிறைவேற்ற வேண்டிய பலியிடுதலை சவுலே செய்தான். அதனுடைய பின்விளைவுகள் அவனுக்கு மிகவும் பாதகமாக மாறியது. கர்த்தருடைய வழியில் காலதாமதம் சகஜமானது. ஆனாலும், விவேகமான காத்திருப்பே அவசியம்.

சிந்தனைக்கு...

அவசரத்தால் இன்றே பெறும் நன்மையை விட,

ஆண்டவருக்குக் காத்திருந்து நாளை பெறும் நன்மையே நிலைத்திருக்கும்.

கோபக்காரன்

நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்... நீதிமொழிகள் 15:18

நீதிமொழிகள் 15:1-18

சிலர் எதற்கெடுத்தாலும் கோபம் அடைகின்றவர்கள். அது அவர்களுடைய இயற்கையான பிரச்சினை. கோபப்படுகின்றவர்கள் எல்லோரும் மோசமானவர்கள் என்று கூற இயலாது. சிலர், உண்மையில் நல்ல மனம் உடையவர்களே. ஆனால், அவர்கள் எளிதில் கோபமடையும் ஒரு மனரீதியான பலவீனமுடையவர்கள். அவர்கள் சாதாரணமான ஒரு வார்த்தையாலோ அல்லது அவர்களால் விரும்ப முடியாத ஒரு செயலினாலோ எளிதாகக் கோபமடைந்து விடுவார்கள். அவர்கள் கோபமடைவது மனிதர்களிடம் மட்டும் அல்ல. அவர்கள் உபயோகிக்கும் பொருட்களால்கூட கோபமடைவார்கள். அந்தப் பொருட்கள் அவர்கள் விரும்பியபடி செயல்படாமல் போனால்கூட கடுங்கோபமடைவார்கள்.

சிலர், பேனா சற்று சரியாக எழுதாமல் போனால் தூக்கி வீசிவிடுவார்கள். சிலர், தாங்கள் ஒரு பொருளை வைத்த இடத்தில் சரியாக இருக்காமல் போனால் அதை உடைத்துப் போடுவார்கள். கோபப்படுகிற யாவரும் பாவிகள் என்றோ, மிக மோசமான சுபாவக்காரர்கள் என்றோ கூற இயலாது. அவர்கள் நல்லவர்களாயிருந்தாலும் அவர்களிடமுள்ள மனரீதியான ஒருபலவீனமோ, அல்லது சமநிலையற்ற ஹார்மோன் பிரச்சினையோ அவர்களை எளிதில் கோபமடையச் செய்து கொண்டிருக்கும்.

இதுபோன்ற பிரச்சினை உடையவர்களுடன் சம்பந்தப்பட நேரிடுகின்றவர்களுக்கு, நல்ல புரிந்து கொள்ளுதல் தேவை. அவர்களின் பலவீனத்தின் அடிப்படையில் அவர்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். சரீர ரீதியான ஊனம் உடையவர்களை நாம் புரிந்து கொள்கின்றோம். அவர்களிடம் நாம் பரிவாக நடந்து கொள்ளுகின்றோம். அதுபோல சில கோபக்காரர்கள் விஷயத்தில் ஆத்திரம் அல்ல, அதிகப் பரிவு அவசியம். கோபப்படாமல் இருக்கும்படியாக தங்களைக் கட்டுப்படுத்தும் வலிமை அவர்களுக்கு இல்லை. எனவே, அவர்களின் கோபமடைகின்ற பழக்கங்களைப் பெரிய குற்றச்செயல்களாகவோ கெட்ட சுபாவங்களாகவோ எண்ணாமல், அவர்களைக் கோபப்படுத்தாமலிருக்கக் கவனம் செலுத்த வேண்டும்.

மற்றவர்கள் கோபமடைவதைப் பார்த்ததும் நமக்கு அதிகமான கோபம் வருகிறது என்றால், நாமும் அவர்களைப் போல எளிதாகக் கோபமடையும் பிரச்சினையில் இருக்கின்றோம் என்று அர்த்தம். எனவே, எளிதாகக் கோபமடைகின்றவர்களைச் சகிக்கும் ஆற்றலை தேவ கிருபையால் பெற வேண்டும். கோபமடைகின்ற செயலைப் பார்த்து அவர்களைப் போல நாமும் கோபமடையும் பிரச்சினையிலிருந்து விடுதலை கிடைக்க தேவ கிருபை தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

வார்த்தையால் கோபத்தை வெளிப்படுத்துகிறவனைவிட, அதனைத் தனக்குள் மறைக்கின்றவன் அதிகத் தீங்குள்ளவன்.

ஜூலை

26

ஜீவ நீரோடை

நல்லவரா கெட்டவரா?

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து...
1 தெசலோனிக்கேயர் 5:21

1 தெசலோனிக்கேயர் 5:5-22

ஒருவர் யார் ஒருவரிடமும் தான் நல்லது என்று நினைக்கின்ற ஒன்றைப் பார்த்தாலும் சந்தோஷப்பட்டு, அவர்களை நண்பர்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்வார். அது போல, யார் ஒருவரிடத்தில் தான் நல்லதல்ல என்று எண்ணுகின்ற ஒன்றைப் பார்த்தாலும், அவரை வெறுக்கத்தக்கவர்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்வார். ஆனால், இவருடைய விருப்பத்திற்குரியவர்களின் பட்டியலில் மிக மிக மோசமானவர்களும் இருப்பார்கள். ஏனென்றால், மிக மிக மோசமானவர் களிடமும் அவர் விரும்புகின்ற ஒரு நல்லது இருப்பதால். அதுபோல இவருடைய வெறுக்கத்தக்கவர்களின் பட்டியலில் மிக மிக நல்லவர்கள் இருப்பார்கள். ஏனென்றால், அவர்களிடம் இவர் விரும்பாத ஒரு விஷயம் இருப்பதால். நாம் நல்லது என்று எண்ணுகின்ற ஒன்றே ஒன்று ஒரு மோசமானவரிடமும் இருக்க இயலும்.

நாம் நல்லதல்ல என்று எண்ணுகின்ற ஒன்று மிக மிக நல்லவர்களிடமும்இருக்க இயலும். எனவே, ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை, அவரிடம் நாம் விரும்புகின்ற ஒன்று இருக்கிறதா இல்லையா என்ற அடிப்படையில் தீர்மானிப்பது மிகவும் தவறான ஒன்று. சிலருக்கு, மிஷனரிப் பணி செய்கிற எந்த ஒருவரும் நல்லவர். சிலருக்குத் தவறான ஊழியங்களை விமர்சிக்கும் எந்த ஒருவரும் மோசமானவர். சிலருக்கு, ஒரு குறிப்பிட்ட உபதேச நம்பிக்கை உடையவர் யூதாசாக இருந்தாலும், அவர் பிரியத்திற்குரியவரே. சிலருக்குத் தாங்கள் நம்புவது போல நம்பாதவர் பேதுருவாக இருந்தாலும், அவர் வெறுக்கத்தக்கவரே.

பித்தளையில் கொஞ்சம் தங்கம் ஒட்டிக் கொண்டிருந்தால், அது சிறந்ததாக ஏற்கத்தக்கதாகி விடாது. தங்கத்தில் கொஞ்சம் பித்தளை கலந்திருந்தால் அது மதிப்பற்றது என்று வீசி எறியத்தக்கதாகிவிடாது. எந்த ஒன்றிலும் மேலோங்கி நிற்பது எது என்பதே மிக முக்கியம். அப்போஸ்தலனாகிய பவுலின் பார்வையில், பேதுருவிடம் ஒரு சிறு மாய்மாலம் இருந்தது. அதற்காகப் பவுல் பேதுருவை கள்ளத்தீர்க்கதரிசிகளின் பட்டியலில் சேர்த்துவிடவில்லை. சமாரியா பட்டிணத்து மாயக்காரனாகிய சீமோனிடம் இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஒரு நற்செயல் இருந்தது. அதற்காக பேதுரு அவனைப் பரிசுத்தவான் என்று ஏற்றுக் கொள்ளவில்லை.

நம்மைப் பிரியப்படுத்தும் ஒரு விஷயம் ஒருவரிடம் இருக்கிறதா இல்லையா என்பதை அல்ல. தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்க்கை அவரிடம் இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். ஒருவர் நமக்குப் பிரியமற்றவர் என்பதை அல்ல. அவர் தேவனுக்குப் பிரியமற்றவராகவே இருக்கிறார் என்று நிதானிக்க முடிகிறதா என்பதே முக்கியம்.

சிந்தனைக்கு...

நீ விரும்பும் நல்லதை உடைய யாவரும் நல்லவர்களல்ல.
நீ வெறுக்கும் தீயதை உடைய யாவரும் கெட்டவர்களும் அல்ல.

ஜூலை
27
ஜீவ நீரோடை

பயனற்றவையா?

தேவனைச் சேவிப்பது விருதா...
மல்கியா 3:14

மல்கியா 3:6-18

நிறையப் பழங்கள் ஒருவர் சாப்பிடுகிறார். தினமும் பால் அருந்துகிறார். நல்ல சத்தான சாப்பாடு சாப்பிடுகிறார். தினமும் உடற்பயிற்சி செய்கிறார். ஆனால், அவருக்கு ஆரோக்கியமான உடல் நலன் இல்லை. நன்றாகச் சாப்பிட்டும், நன்றாக உடற்பயிற்சி செய்தும் பலனில்லையே என்று கூறி, இவை யாவும் இனி பயனற்றவை என்று அவர் விட்டு விடுவாரா? இல்லை. அவற்றிலிருந்து அவர் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும், அவை யாவும் நலமானவை நன்மையானவை. எனவே, அவற்றை அவர் தொடர்ந்து பயன்படுத்துவார்.

சில நேரங்களில் நாம் எவ்வளவோ ஜெபித்தும் எவ்வளவோ பயபக்தியாய் வாழ்ந்தும் எதிர்பார்த்த பலன்கள் இல்லாதது போன்ற நிலைமை காணப்படலாம். எனவே, இவற்றால் நன்மை ஏதும் இல்லையே என்று விரக்தியடைகிறோம். அவற்றை விட்டு விலகினால் என்ன என்பது போன்று சிந்திக்கத் தூண்டப்படுகிறோம். ஆனால், உண்மை என்ன? நாம் எதிர்பார்த்த சில பலன்களை நாம் காணாவிட்டாலும். அவை நமக்கு பல நன்மையான காரியங்களைத் தருகிறது.

ஒருவர் பல ஆண்டுகளாக நடைப்பயிற்சி செய்கிறார். ஆயினும், அவருக்குத் தொப்பையும் குறையவில்லை. உடல் எடையும் குறையவில்லை. இவ்வளவு ஒழுங்கும் கிரமுமாக நடைப்பயிற்சி செய்கிறீர்கள். ஆனால், எந்த மாற்றமும் இல்லையே என்று யாராவது கேட்பார்கள். அதற்கு அவர், இந்த நடைபயிற்சி மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும், உடல்நிலை மிகவும் மோசமாகிவிடாமல் தடுக்கிறது. இதனை மட்டும் நிறுத்திவிட்டால் வேறு பல நோய்கள் வந்துவிடும். தொப்பையும் பலமடங்காகிவிடும் என்பார். ஆம், தேவனுக்கேற்ற பக்தியான வாழ்க்கை நாம் கேட்ட சிலவற்றை நமக்கு பெற்றுத்தராததால் அது எதையும் நன்மையாகச் செய்யவில்லை என்று அர்த்தமல்ல. அதனால் பல நன்மைகள் ஏற்படுகிறது. இந்தப் பக்தி அனுபவம் இல்லாதிருந்தால், வாழ்க்கை எவ்வளவோ மோசமாகியிருக்கக்கூடும்.

சிலர், தங்களுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய தீங்கு நிகழ்ந்தால், தேவன்மேல் வருத்தமடைந்துவிடுவார்கள். எனவே, இனி பக்தி சம்பந்தமாக எந்தச் செயலும் வேண்டாம் என்று சும்மாயிருந்து விடுவார்கள். ஆனால், இப்படிப்பட்ட பலரை நான் பார்த்திருக்கின்றேன். இவர்களிடம் சமாதானம் இல்லை, நம்பிக்கை இல்லை, இவர்களிடம் நல்ல குணங்கள் இல்லை, இவர்களிடம் தனிமையுணர்வு மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டது. ஆம், ஏதோ ஒன்றைக் குறித்த வருத்தத்தால் இவர்கள் நன்மையான பல காரியங்களுக்கு வாசலை அடைத்துவிட்டார்கள்.

சிந்தனைக்கு...

நல்ல பாதையில் நன்மை வராவிட்டாலும் அதை விடாதே,
கெட்ட பாதையில் நன்மை வந்தாலும் அதில் தொடராதே.

ஜுலை

28

ஜீவ நீரோடை

மனநலன்

அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்...
பிலிப்பியர் 4:8

பிலிப்பியர் 4:4-13

சிலர் மிகவும் தரமான உணவுகளை உண்கின்றனர். தினமும் உடற்பயிற்சி செய்கின்றனர். சரீர நலன் தொடர்பான ஒழுங்குகளை மிகவும் சரியாகப் பின்பற்றுகின்றனர். அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை செய்து வியாதி தவிர்த்து வாழக் கவனமாயிருக்கின்றனர். ஆயினும், அவர்களுக்குச் சில வியாதிகள் வந்துவிடுகின்றன. அவர்களுக்கு வருகின்ற வியாதிகள் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. ஏனென்றால், இதுபோன்ற வியாதிகள் சரீர நலன் பேணாமல் ஒழுங்கின்றி வாழ்கின்றவர்களுக்குத்தான் அதிகமாக வரும். உண்மை என்னவென்றால் சரீர நலனை அவர்கள் பேணி வாழ்ந்தாலும் மனநலன் பேணல் இல்லை. மனதை அமைதியாகவும், தெளிவாகவும், வலிமையாகவும், நம்பிக்கையாகவும் வைக்க இயலவில்லை.

அல்சர், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இதய சம்பந்தமான பல நோய்கள் மனம் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் இல்லாமையினால் வருவதற்கு வாய்ப்பு உண்டு. மனம் நோகடிக்கப்படுவதாலும், அழுத்தப்படுவதாலும், பதட்டங்களும், கோபங்களும், சோர்வுகளும் நிறைந்திருப்பதாலும் சரீரத்தில் வியாதிகளாக அவை மாறும். எனவே, சரீர ஆரோக்கியப் பேணல் இருந்தாலும், மனநிலை பேணல் வேண்டும். சரீரத்தை நன்றாகப் பேண நம்மால் முடியும். ஆனால், மனதைப் பேண தேவ கிருபை வேண்டும்.

தேவ பிரசன்னமும் தேவ சமாதானமும் உள்ளே வந்தால், அங்கே ஆரோக்கியமான மனநிலை இருக்கும். கர்த்தர்தான் நம்முடைய இருதயத்தை அமைதியாகவும், நம்பிக்கை நிறைந்ததாகவும், பதட்டமற்றதாகவும், சோர்வற்றதாகவும், குழப்பமற்றதாகவும் வைக்க முடியும். அவர் அவ்விதமாக இருதயத்தைப் பராமரிக்க நாம் ஒத்துழைப்புத் தர வேண்டும். தேவ ஐக்கியத்தை நாம் தேட வேண்டும். தேவ உறவுடன் வாழ்வதை விரும்ப வேண்டும். தேவ சத்தியங்களை மனதிற்குள் நிரப்ப வேண்டும்.

தேவ உறவையும், தேவ ஆளுகையையும் நமக்குள் தேடும்போது கவலைகள் மனதை ஆள முடியாது. வாழ்க்கையில் காண நேரிடும் அனைத்துக் காரியங்களையும் தேவனோடு பகிர்ந்து கொண்டு வாழும்போது பயம் நம்மை ஆளுகை செய்யாது. தேவனுக்கேற்ற சிந்தனைகளையும் உயர்ந்த ஆசைகளையும் உள்ளத்திற்குள் கொண்டு வரும்போது, தவறான எண்ணங்களும் தவறான ஆசைகளும் நம்மை ஆளுகை செய்யாது. அங்கே தேவ சமுக ஆளுகை இருக்கும். அதுதான் மனதை ஆரோக்கியமாக்கி, உடலையும் ஆரோக்கியமாக வைக்கும் வழி.

சிந்தனைக்கு...

மனதை எப்படி வைக்கவேண்டும் என்று அறியாதவன்,
உடலை எப்படி நலமாக வைத்தாலும், வியாதி துரத்திப் பிடிக்கும்.

ஜூலை

29

ஜீவ நீரோடை

கொஞ்சம் தீயது

புளிப்புள்ள கொஞ்ச மாவானது...
கலாத்தியர் 5:9

கலாத்தியர் 5:1-16

ஒரு பெரிய பாத்திரத்தில் மிகவும் தூய்மையான தண்ணீர் நிரம்பியிருக்கின்றது. அந்தத் தண்ணீரில் ஒரு சில துளிகள் அழுக்குத் தண்ணீர் சேர்ந்தால், அந்தப் பாத்திரத்தில் உள்ள தண்ணீர் யாவும் குடிக்கத் தகுதியற்றதாகும்.அது போல, ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் அழுக்குத் தண்ணீர் இருக்கின்றது. அந்தப் பாத்திரத்தில் நீங்கள் எவ்வளவு சுத்தத் தண்ணீர் ஊற்றினாலும் அந்தப் பாத்திரத்துத் தண்ணீர் குடிக்கத்தக்கதாக மாறாது. அது போல ஒருவருடைய இருதயத்தில் எவ்வளவு தூய்மையான சத்திய உபதேசங்கள் இருந்தாலும், அதில் ஒரு சில தவறான உபதேசங்கள் சேர்ந்தால், அது முழுவதும் பயனற்றதாகும். அதுபோல, ஒருவருடைய இருதயத்தில் ஒரு சில தவறான உபதேச நம்பிக்கைகள் இருக்கும் போது, எவ்வளவு நல்ல உபதேசங்கள் உள்ளே போனாலும், நல்லது நிகழாது.

சிலர், நல்ல சத்திய உபதேசங்களைக் கேட்டு விசுவாசித்து நல்ல ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்வார்கள். ஆனால், ஒரு சிலரால் ஒரு சில தவறான உபதேச நம்பிக்கைகளை மதியீனத்தால் பெற்றுக் கொள்வார்கள். இப்பொழுதும் அவர்களிடம் பழைய விதமான ஏராளமான சத்தியம் சார்ந்த செயல்பாடுகள் இருக்கின்றன. ஆனால், தந்திரமாய் உள்ளே நுழைந்த தவறான உபதேசம் அவற்றைப் பயனற்றதாக்கிவிடும்.

சிலர், தங்கள் இருதயத்தில் பல தவறான உபதேசங்கள் சார்ந்த நம்பிக்கை களை வைத்திருப்பார்கள். ஆனால், சிலருடைய நல்ல உபதேசங்களைக் கேட்டு அவற்றையும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனாலும், அடித்தளத்தில் இன்னும் சத்தியம் சாராத நம்பிக்கைகள் இருப்பதால், இந்தப் புதிய நல்ல போதனை களால் அவர்களுக்கு எந்தப் பயனும் கிடையாது. ஆவிக்குரிய இருதயத்தில் சத்தியம் மட்டுமே இருக்க வேண்டும். கொஞ்சம் புளித்தமா எல்லா மாவையும் புளிக்கப்பண்ணுவது போல, ஒரு சில தவறான போதனைகள் எல்லாவற்றையும் நாசமாக்கிவிடும்.

சிலர் நல்ல போதனைகளை நன்றாகவே கேட்பார்கள். ஆனால், தவறான போதனைகளை வெறுக்கமாட்டார்கள். நல்ல போதகர்களிடம் கற்ற நல்ல விஷயங்கள் கனிகொடுக்க இயலாதபடி, கள்ளப் போதகர்களின் தவறான போதனை அவர்களைத் தடுத்துவிடும். சிலர், நல்ல போதனைகளை நன்றாகக் கேட்பார்கள். ஆனால், கள்ளத் தீர்க்கதரிசனம் கேட்பதை நிறுத்தமாட்டார்கள். எனவே, ஒருபோதும் ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கையை அவர்கள் வாழ்வதில்லை. ஆம். நல்லவை இருந்தாலும், அவை முழுமையாக நல்லவையாக இராவிட்டால் பலனில்லை.

சிந்தனைக்கு...

எத்தனை நல்லவைகள் சேர்ந்தாலும், தீமை நல்லதாகாது.
ஒரே ஒரு தீமை சேர்ந்தாலும், நல்லது நல்லதாகத் தொடராது.

தேவ உறவின் சான்று

சாலொமோன்... கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல்... 1 இராஜாக்கள் 11:6

1 இராஜாக்கள் 11:1-13

தேவ உறவை ஒருவர் தனக்குள் நிச்சயப்படுத்தாதவரைக்கும், அவருக்கு எவ்வளவு தேவ நன்மைகள் கிடைத்தாலும், அவர் நிலைத்திருப்பது கடினம். சிலர், நீண்டகாலமாக தங்களுக்குத் திரளான தேவ நன்மைகள் கிடைத்ததைக் குறித்து சாட்சி கூறுகின்றார்கள். ஆனால், திடீரென்று சாட்சியற்றவர்களாக மாறிவிடுகின்றனர். ஏனென்றால், தேவ ஐக்கியத்தை அனுபவிக்கும் ஒரு ஆவிக்குரிய வாழ்க்கை இல்லாதவர்கள், எப்போது வேண்டுமானாலும் இடறிப்போக வாய்ப்புண்டு.

சாலொமோன் இராஜாவுக்கு தேவனால் கிடைத்த நன்மைகள் ஏராளம் ஏராளம். ஆயினும், அவ்வளவு ஏராளமான நன்மைகள் அவன் இடறிப் போகாமல் அவனைக் காப்பதற்கு இயன்றவையாயிருக்கவில்லை. ஏனென்றால், அவன் தேவ உறவை அடையாளம் கண்டு, அந்த உறவில் மகிழுகின்ற ஒரு ஆன்மிக அனுபவம் அவனுக்கு இருக்கவில்லை. அவன் தேவன் தந்த செல்வங்களால் தன்னை எப்படி மகிழ்ச்சியாக்க முடிந்தது என்று சொன்னான். ஆனால், தேவ ஐக்கியத்தோடு வாழ்ந்து மகிழ்ந்த அனுபவம் எதையும் சொல்லவில்லை.

தாவீது ஏராளம் போராட்டங்களின் நடுவில் வாழ்ந்தாலும் அவன் தேவ உறவு, தேவ ஐக்கியம், தேவ பிரசன்னம் ஆகியவற்றைக் குறித்த அனுபவங்கள் உடையவனாயிருந்தான். உம்முடைய சமுகத்தில் எனக்குப் பரிபூரணமான ஆனந்தம் உண்டு என்றான். (சங் 16:11) அவன் கர்த்தரோடுள்ள ஐக்கியத்தால் தனக்குள் மிகுந்த சந்தோஷத்தை மனதில் அடைந்த சாட்சியைக் கூறினான். (சங்கீதம் 4:7) தாவீதுக்கு தேவனைத் தேடும் தாகம் இருந்தது. தாவீதுக்கு தேவ உறவை அடையாளம் காணும் அனுபவம் இருந்தது. எனவே, தேவனோடு அவனுடைய உறவு என்றும் நிலைத்திருந்தது. தேவ நன்மைகள் நம்மை பாவம் செய்யவிடாமல் தடுத்து நிறுத்தாது. தேவ உறவினால்தான் அது ஆகும். தேவன் தந்த ஆசீர்வாதங்கள் நம்மை முழுமையான பரிசுத்தவான்களாக்காது. தேவ ஐக்கியம்தான் அதைச் செய்யும்.

அநேகர் தங்களுடைய வாழ்வில் பெற்ற பொருளாதார உயர்வுகளை, தேவன் தங்களோடிருப்பதற்கான சான்றாக நினைக்கின்றனர். ஆனால், அது ஒரு மாயை. நல்ல வசதிகளோடு நாம் வாழ இயன்றாலும், தேவன் நம்மோடு வாழ்வது என்பது வேறுவிதமான அனுபவம். பொருளாதார ரீதியாக நம்மிடம் எதுவும் இல்லாவிட்டால்கூட, நாம் தேவ உறவை உடையவர்களாக இருக்க இயலும். அதே வேளையில், ஏராளம் செல்வங்களோடு வாழ்ந்தாலும் தேவ உறவு நம்மோடு இல்லாமலிருக்க வாய்ப்புண்டு

சிந்தனைக்கு...

ஆயிரம் நன்மைகளைத் தேவனால் பெற்றாலும், அவருடைய ஐக்கியத்தைத் தவிர, எல்லாம் நிலையற்றதே.

ஜூலை
31
ஜீவ நீரோடை

திறமைகளும் பண்புகளும்

விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு...
1 தீமோத்தேயு 4:12

1 தீமோத்தேயு 4:1-16

சிலருடைய பேச்சாற்றல் மெய்சிலிர்க்க வைக்கின்றது. சிலருடைய சிந்தனை ஆற்றல் மனதைக் கொள்ளையடிக்கின்றது. சிலருடைய நடிப்பாற்றல், ஆஹா, ஓஹோ, என்று சொல்லத் தூண்டுகின்றது. சிலருடைய பாடல் திறன், பாராட்டை வாரியிறைத் தூண்டுகிறது. சிலருடைய விளையாட்டுத்திறன் வாழ்த்தோ வாழ்த்து என்று வாழ்த்தத் தூண்டுகின்றது. ஆனால், இவர்களில் எத்தனை பேரிடம் அன்பாற்றல் இருக்கிறது? இவர்களில் எத்தனை பேரிடம் மனக்கட்டுப்பாட்டாற்றல் இருக்கிறது? இவர்களில் எத்தனை பேரிடம் பொறுமையாற்றல் இருக்கிறது? இவர்களில் எத்தனை பேரிடத்தில் நல்ல நடத்தையாற்றல் இருக்கிறது? இவர்களில் எத்தனை பேரிடத்தில் நீதியாற்றலும் நேர்மையாற்றலும் உள்ளது?

அநேகரைக் கவரும் திறமைகளும், பலரைப் பாராட்டத்தூண்டும் தாலந்துகளும் சாதாரணமானவை அல்ல. ஆனால், இவற்றை அரங்கத்தில் அமர்ந்து ரசிக்கலாம். பொழுது போகாதபோது இவர்களின் அபாரமான ஆற்றல்களைப் பார்த்து பரவசப்படலாம். ஆனால், இவை வாழ்க்கையைக் கட்டுவதற்கு உதவாது. இவை ரசனைக்குரியவை. ஆனால் இவை வாழக்கை என்னும் படகைச் சிறப்பாக, ஓட்டுவதற்கு எந்த விதத்திலும் உதவாது.

மனிதனுடைய திறமைகளைவிட மனிதனுடைய பண்புகள்தான் பிறருக்குப் பிரயோஜனமானவை. ரசிப்பிற்குரிய தாலந்துகளைவிட மனிதன் பின்பற்றி வாழ்வதற்கேற்ற பண்புச் செயல்கள்தான் மிகவும் பிரயோஜனமானவை. ஒரு மனிதன் எவ்வளவு சிறப்பான திறமைகளைக் கொண்டிருக்கின்றான் என்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது. ஆனால், எந்த அளவிற்கு ஒரு நல்ல மனிதனுக்குத் தேவையான பண்படையாளங்களை அவன் கொண்டிருக்கின்றான் என்பதைப் பார்க்கத் தவறக்கூடாது.

சிறந்த திறமைகள் இயற்கையாகவும் அமையும், முயற்சிகளாலும் அமையும். ஆனால், சிறந்த பண்புகள் என்பவை இயற்கையாலும் வராது, முயற்சியாலும் வராது. மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கு ஆற்றல் தரும் ஆண்டவரால் மட்டுமே அது கூடும். மனிதனைப் பார்த்துப் பார்த்து, திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால், தேவனோடு இணைந்து வாழ்ந்துதான் நற்குணங்களைப் பெற முடியும். ரசிக்க வைக்கும் பல திறமைகளைவிட, வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்று சிந்திக்கத் துண்டுகின்ற உயர்ந்த நற்குணங்கள்தான், ஒரு மனிதனுக்கு மிக மிக மேன்மையான விஷயங்கள்.

சிந்தனைக்கு...

நல்ல திறமைகள் உடையவனைப் பாராட்டு,
நல்ல பண்புகள் உடையவனைப் பின்பற்று.

ஆகஸ்ட்
1
ஜீவ நீரோடை

கிறிஸ்துவே தரிசனம்

கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே சகல... ஆசீர்வாதத்தினாலும்... எபேசியர் 1:3

எபேசியர் 1:1-14

சந்தோஷமாக வாழ ஆசைப்படுங்கள். சமாதானமாக வாழ ஆசைப் படுங்கள். திருப்தியுடன் வாழ ஆசைப்படுங்கள். பிறருக்கு நலன் ஏற்படுத்தும் வித மாக வாழ ஆசைப்படுங்கள். இந்த ஆசைகள் யாவும் நிறைவேறும் இடம்தான் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவுடன் வாழும்போது இவை யாவும் உங்களிடத்தில் செயல்படும். இயேசு கிறிஸ்துவோடு வாழ்வதில் வெற்றியடைவதுதான், மேற்கண்ட யாவற்றையும் வாழ்க்கையில் காண்பதற்கான ஒரே வழி.

சந்தோஷமாக வாழ்வதோ, சமாதானமாக வாழ்வதோ, நம்பிக்கையுடன் வாழ்வதோ நம்முடைய இலக்குகளாக இருக்கக்கூடாது. இயேசு கிறிஸ்துவுடன் வாழ்வதே நம்முடைய இலக்காக வேண்டும். அனுதின வாழ்க்கையில் இயேசுவுடன் வாழ்வதற்குக் கவனம் செலுத்தும் போது, அந்த உறவின் விளைவுதான் சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை போன்றவை. எனவேதான் இயேசு கிறிஸ்து திராட்சைச் செடியாக தம்மை ஒப்பிட்டுப் பேசிவிட்டு, நம்மைக் கொடிகளுக்கு ஒப்பிட்டுப் பேசினார்.

அநேகர் சரீரப்பிரகாரமான நன்மைகளையே தேடுகின்றனர். தேவன் நாம் கேட்டவைகளை நமக்கு அருளினால் நாம் சந்தோஷமாயிருப்போம் என்று எண்ணுகின்றனர். நாம் கேட்டவைகள் யாவும் தரப்பட்டாலும் அவற்றால் சந்தோஷம், சமாதானம், திருப்தி வந்துவிடாது. நாம் எவைகளைப் பெறுகின்றோம் என்பது அல்ல. பெற்றவைகள் நமக்கு எவற்றைத் தருகின்றன என்பதே முக்கியம். ஏனென்றால், கிறிஸ்துவுக்குள்தான் தேவன் சகல ஆசீர்வாதங்களையும் வைத் திருக்கின்றார். (எபேசியர் 1:3) எனவே, கிறிஸ்துவை அனுதின வாழ்வில் நம் மோடிருக்கின்றவராகக் காண வாஞ்சையாயிருந்து தேடுதலே, உண்மையான ஆவிக்குரிய தேடல். அவற்றால் வருவதே சந்தோஷம்.

கிறிஸ்துவின் பிரசன்னத்தோடு வாழ வேண்டும் என்ற சிந்தைதான், கிறிஸ்துவுக்குப் பிரியமல்லாத பாவங்களை மேற்கொள்ளும் ஆற்றலை நமக்குத் தருகிறது. கிறிஸ்துவின் ஐக்கியத்தை இழக்காமல் வாழவேண்டும் என்ற சிந்தனைதான், தேவனுக்கு உகந்த பரிசுத்தமான சுபாவங்களோடு வாழ்ந்திட நமக்கு உத்வேகம் தருகிறது. நாம் பாவம் செய்யக்கூடாது. நாம் பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற கொள்கையே நம்மை ஆசீர்வதித்து விடாது. நாம் தேவப் பிர சன்னத்தோடு வாழவேண்டும் என்ற தரிசனத்தோடு வாழும்போதுதான், பாவத்தை வெறுத்து பரிசுத்தத்தை நாடி வாழ முடியும்.

சிந்தனைக்கு...

தேவனோடு வாழப்பழகினவன்,
நற்பண்புகளுடன் வாழும் பழக்கமற்றவனாக இருக்க முடியாது.

ஆகஸ்ட்
2
ஜீவ நீரோடை

போதனையா ஐக்கியமா?

இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு...
1 கொரிந்தியர் 1:9

1 கொரிந்தியர் 1:1-23

இயேசு கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்வது என்பது வேறு. இயேசு கிறிஸ்துவோடு வாழ்வதென்பது வேறு. புதிய ஏற்பாடு இயேசுவின் போதனைகளின் படி வாழ்வதை அல்ல, இயேசு கிறிஸ்துவோடு வாழ்வதைக் குறித்தே சொல்லுகின்றது. இயேசு கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்கின்ற ஒருவர், இயேசுவின் ஐக்கியம் இல்லாதவராக இருக்க இயலும். ஆனால், இயேசு கிறிஸ்துவோடு வாழ்கின்ற ஒருவர் இயேசுவின் போதனைகளின்படி வாழாதவராக இருக்க முடியாது.

ஒருவர் கிறிஸ்தவர் என்றால் அவர் இயேசுவின் போதனைகளின்படி வாழ்கின்றவர் என்று அல்ல. அவர் இயேசுவோடு வாழ்கின்றவர் என்றுதான் அர்த்தம். ஏனென்றால், ஒரு மனிதன் கிறிஸ்துவோடு இணைந்து கொள்ளத்தான் அழைக்கப்படுகிறானேயன்றி, இயேசுவின் போதனைகளைப் பின்பற்ற அல்ல. மனிதன் எப்படி வாழவேண்டும்? மனிதன் எப்படி ஆசீர்வதிக்கப்படுவான்? மனிதன் எப்படி விண்ணக வாழ்வு பெறுவான்? என்பது போன்ற ஏராளம் விஷயங்கள் தொடர்பான இயேசுவின் போதனைகள் உண்டு.

ஆயினும், இயேசுவோடு வாழ்கின்ற ஒரு மனிதன்தான் அவ்விதமான போதனைகளின்படி வாழ்வதற்கு ஆற்றல் பெறுகின்றான். இயேசு கிறிஸ்துவின் ஐக்கியமும், இயேசு அருளும் ஆற்றலும்தான் ஒருவரை இயேசுவின் போதனைகளின்படி வாழச் செய்யும். ஒருவன் என் போதனைகளைக் கவனமாகக் கடைப்பிடித்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்று இயேசு சொல்லவில்லை. ஒருவன் என்னில் நிலைத்திருந்தால்தான் அவன் மிகுந்த கனிகொடுப்பான் என்றார். (யோவான் 15:8) ஒருவர் வேதாகமத்தைப் படித்து இயேசுவின் போதனைகளை அறிந்து கொள்ள முடியும். ஆனால், அவர் இயேசுவின் உறவினை அனுபவித்தால் மட்டுமே அவற்றின்படி வாழ முடியும்.

இயேசுவின் போதனைகளைப் படித்துப் படித்து நாம் பின்பற்றும் போது, நம்முடைய வாழ்க்கை சற்று நீதி உடையதாகவும், ஒழுக்கம் நிறைந்ததாகவும், பயபக்தி உடையதாகவும் மாறும். ஆயினும், கர்த்தரை நமக்குள் பெற்றுக் கொண்ட நிச்சயத்துடன் கர்த்தருடைய ஐக்கியத்தைத் தேடி வாழும்போதுதான் தெய்வீக சந்தோஷமும், சமாதானமும், நம்பிக்கையும் நிறைவும் நம்முடைய வாழ்வில் பெருகும். போதனைகளின்படி வாழ்தல் என்பது நம்மை நாமே செதுக்குதல். கிறிஸ்துவின் உறவினைத் தேடி வாழ்தல் என்பது, அவரால் நாம் செதுக்கப்பட்டு உருவாக்கப்படுதல்.

சிந்தனைக்கு...

நல்ல போதனைகளைத் தேடிச் செல்வது நல்லது,
ஆனாலும், நல்ல தேவ உறவை உனக்குள் முதலாவது தேடு.

சுவையா, ஆரோக்கியமா?

என் பேச்சும் என் பிரசங்கமும்....
1 கொரிந்தியர் 2:5

1 கொரிந்தியர் 2:1-16

சாப்பாடு சுவையாயிருக்க வேண்டும். இது ஒன்றும் தவறான கருத்து அல்ல. ஆனால், சாப்பாடு என்றால் சுவைக்குத்தான் முதல் முக்கியத்துவம் என்பது தவறு. சில நேரங்களில் அந்தச் சுவையான உணவே பல வியாதிகளுக்கு காரண மாகின்றது. சுவை அவசியம். ஆனால், ஆரோக்கியத்திற்கு எதிரானவை அவற்றில் இருக்கும் போது அதனை தவிர்க்கும் நிலைப்பாடும் அவசியம். சுவையை மட்டுமே நல்ல உணவிற்கான அடையாளமாகக் கொண்டால், அதனால் பல வியாதிகள் உருவாக வழிவகுக்கும்.

இன்று ஆவிக்குரிய செயல்பாடுகளில் சுவைக்குத்தான் முதலிடம் தரப்படு கிறது. அதாவது, ஆன்மிக சம்பந்தமான காரியங்கள் எதுவும் மனதிற்கு இனி மையாக உணரப்பட வேண்டும் என்பதே பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. ஆராதனையாயினும், ஜெபமாயினும், பிரசங்கமாயினும், போதனையாயினும் மனதிற்கு ஒரு பரவச உணர்வைத் தர வேண்டும் என்பதே பலருடைய விருப்பமாக உள்ளது. ஆவிக்குரிய செயல்பாடுகள் மனதிற்கு உற்சாகமூட்டுவதாக இருக்க வேண்டும் என்பது நல்ல எதிர்பார்ப்புதான். அதேவேளையில், உற்சாகத்தைத் தருகின்ற எல்லாவற்றிற்குப் பின்னும் சத்தியம் இருக்கிறதா? என்றும் பார்க்க வேண்டும்.

பல திருச்சபைகளில் நடத்தப்படும் ஆராதனைகளில் ஜனங்கள் எளிதாக உற்சாகமடைகின்றார்கள். அவர்கள் எளிதாகத் தாங்கள் எதிர்பார்த்த மனப்பரவச நிலையை அடைகின்றார்கள். அவர்கள் எளிதாக ஆவியில் நிரம்பிய உணர்வைப் பெறுகின்றனர். ஆனால், அவற்றிற்குப் பின்னால் இருப்பது தரமான சத்தியச் செயல்பாடா என்று பார்ப்பதில்லை. பரவச வார்த்தைகளும், ஆரவார சத்தங்களும், உணர்ச்சிகரப் பாடல்களும்தான் தங்களை ஒரு உற்சாக மனநிலைக்குக் கொண்டு செல்கின்றன. என்பதை அவர்கள் பார்ப்பதில்லை. பலர் செயற்கையான பரவச மூட்டும் செயல்களால் மனநிலையில் உணர்ச்சிவசப்படுத்தப்பட்டு, உண்மையான ஆவியின் நிரம்புதலின் அனுபவத்தைக் காணாமல் போகிறார்கள்.

பல கிறிஸ்தவப் போதகர்களின் இன்றைய பிரசங்கங்கள், ஜனங்களை எப்பொழுதும் ஒரு மாயையான நம்பிக்கைக்குள் கொண்டு செல்கின்றன. அவை கேட்பதற்குத் தேவ ஆவியால் நம்பிக்கையூட்டப்படுவது போல தோன்றுகிறது. ஆனால், அவர்களின் பிரசங்கங்கள் ஒருபோதும் ஜனங்களைப் பாவத்தை உணர்வதற்கோ, தவறுகளைச் சரி செய்வதற்கோ கொண்டு செல்லாது. அவை சுவையான பிரசங்கங்கள். ஆனால், ஆரோக்கியமான பிரசங்கங்கள் அல்ல.

சிந்தனைக்கு...

மனதிற்கு எது பிரியமானது என்று பாராதே,
வாழ்விற்கு எது பிரயோஜனமானது என்று பார்

ஆகஸ்ட் 4

ஜீவ நீரோடை

பக்தியும் பாவமும்

மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே ...
லூக்கா 11:44

லூக்கா 11:38-54

மத போதகர் ஒருவர் காலை, மாலை, இரவு என தினமும் அதிகமான நேரங்கள் ஜெபம் செய்வார். அதிகமான நேரங்கள் திருமறையை வாசித்து ஆராய்ச்சி செய்வார். வாரத்தில் இருமுறை உபவாசம் இருப்பார். சில மத ஒழுங்கு களில் கறாராயிருப்பார். அவருக்கு ஒரு உதவியாளன் இருந்தான். அவனுக்கு ஜெபம், வேதவாசிப்பு, உபவாசம் எதுவும் கிடையாது. பலருக்கு மிகவும் ஆச்சரியம். அதிகமாகச் ஜெப தபங்களிலும், வேத தியானங்களிலும் ஈடுபடுகிற போதகருக்கு உதவியாளனாய் இருக்கிறவனிடத்தில், அவை எதுவும் இல்லையே என்று. அவ னுடைய தாய் தகப்பனுக்கு அவன்மேல் ரொம்ப கோபம். பக்தியான போதகரிடம் இருக்கிற நீ பக்தியற்று இருக்கலாமா என்று கேட்டனர். அதற்கு அவன், அவர் பக்தியாக வாழ்ந்து பாவத்தைச் செய்கிறார். நான் பக்தியின்றி வாழ்ந்து பாவத்தைத் தவிர்க்கிறேன் என்றானாம்.

அநேகர் பக்தி நிறைந்த பாவிகளாக வாழ்கின்றனர். அவர்களிடம் பக்தியான வாழ்க்கையை அதிகமாகப் பார்க்க முடியும். ஆனால், பக்தியையும் விடாமல் பாவத் தையும் விடாமல், மாய்மால வாழ்க்கை வாழ்கின்றனர். இது பலருக்குப் பக்தியினால் பலன் ஏதும் இல்லை என்ற எண்ணத்தைக் கொடுத்து விடுகிறது. சிலர் தங்களின் சுய முயற்சியால் இவர்களைவிட நல்ல வாழ்க்கை வாழ முடிவதால், பக்தி அவசிய மில்லை என சிந்திக்கின்றனர்.

பக்தியோடு வாழ்ந்தவர்கள் பரிசேயர்கள். பலவிதமான ஆன்மிகச் செயல் களோடு அடையாளம் காணப்படுகின்றவர்கள்தான் சதுசேயர்கள். ஆனால், அவர் களின் பக்தி அவர்களை நல்லவர்களாக மாற்றவில்லை. இயேசு அவர்களை வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகள் என்று கூற நேரிட்டது. ஏனென்றால், அவர் களின் பக்தி ஒரு மதத்தை மையப்படுத்தின பக்தியேயன்றி, தேவ உறவை மையப் படுத்தினது அல்ல. மதத்திற்காக அவர்கள் பக்திச் செயல்களைச் செய்ததால் பாவத்தை தவிர்க்க அவர்களால் இயலவில்லை. தேவ உறவை மைய மாகக் கொண்ட பக்தியாயிருந்தால், அது அந்தப் பக்திமானை பாவம் செய்யாமல் வாழ வைக்கும்.

எந்த மனிதனிடத்தில் பக்தியும் பாவமும் இணைந்திருக்கிறதோ, அவன் ஒரு மதத்திற்காக வாழ்கின்றான் என்று அர்த்தம். அவன் மாம்ச பலத்தால் பல பக்திச் செயல்களையும் செய்வான். அவன் மாம்ச பலவீனத்தால் பாவங்களையும் செய்வான். உண்மையான பக்தி தேவ உறவைப் பெறுவதிலிருந்து ஆரம்பிக்கின்றது. தேவ உறவு அவனுடைய பக்திக்கு அடிப்படையாயிருப்பதால், அவன் பாவத்தில் தொடர முடியாது.

சிந்தனைக்கு...

பக்தியில்லாத பாவியைப் பார்த்து தேவன் பரிதாபப்படுவார்,
பக்தியிருந்தும் பாவம் செய்கிறவனைப் பார்த்து எரிச்சலடைவார்

ஆகஸ்ட்
5
ஜீவ நீரோடை

கருத்து வேறுபாடு

அவர்களுக்குள்ளே கடுங்கோப மூண்டபடியினால்...
அப்போஸ்தலர் 15:39

அப்போஸ்தலர் 15:27-41

சிலருடைய ஆவிக்குரிய நிலைப்பாடுகளில் எனக்கு ஒத்த கருத்தில்லை. அவர்கள் சரி என்று சாதிப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், நான் சற்று வேறுபட்டதும், என்னை வெறுப்பிற்குரியவர்களின் பட்டியலில் சேர்த்து விட்டார்கள். நான் அவர்களை வெறுக்கவோ, கசக்கவோ, அவர்களை வேண்டாம் என்று சொல்லவே இல்லை. ஆனால், அவர்களுக்கு இசைந்து போகாத ஒரு காரணத்தை, என்னை வெறுப்பதற்குப் போதுமான நியாயமாக அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அவ்விதமே என்னுடைய ஆவிக்குரிய கருத்துக்கள் சில வற்றில் சிலருக்கு உடன்பாடு இல்லை. இது சகஜம்தான். ஆனால், அதுவே அவர் களுக்கு என்னை அவசியமில்லாதவனாகப் பார்க்கப் போதுமானதாயிருந்தது.

சிலர், தங்கள் கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டால், அதனை ஒரு மன்னிக்க இயலாத குற்றம் போல கருதுகின்றனர். சிலர், தங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிக்காவிட்டால், அவர்களை மரண தண்டனைக்குரிய குற்றவாளிகளைப் போல பார்க்கின்றனர். அப்படியென்றால், இவர்கள் தங்களைக் கடவுளின் நிலைக்குக் கொண்டு செல்கின்றனர். கடவுளின் கருத்தை ஏற்காதது கடவுளையே ஏற்காததற்குச் சமம். கடவுளின் உண்மைக்கு எதிராகப் போவது கடவுளுக்கே எதிராகப் போவது போல் ஆகும். ஆனால், மனிதர்கள் கடவுள்கள் அல்ல. மனிதர்கள் சத்தியம் பேசினாலும் அது நூற்றுக்கு நூறு விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது என்று கூற இயலாது.

மாற்கு என்ற யோவான் விஷயத்தில் பவுலுக்கும் பர்னபாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அது தற்காலிகமான ஒரு கோபதாபத்தை ஏற்படுத்தியது உண்மை. ஆயினும், இருவரும் தங்களின் கருத்து வேறுபாடு கசப்பு நிறைந்த விரோதமாக மாறிட இடம் தராமல் பார்த்துக் கொண்டனர். அந்தியோகியாவுக்கு வந்த பேதுருவிடம் பவுல் ஒரு விஷயத்தைக் கண்டு கருத்து வேறுபட்டான். கண்டிக்கவும் செய்தான். ஆனால், பேதுரு அதற்காகப் பவுலை விரோதியாகப் பார்க்கவில்லை.

நம்முடைய கருத்துக்களை கண்ணை மூடி ஏற்றுக் கொள்கின்றவர்கள் நண்பர்கள் என்று அர்த்தம் அல்ல. நம்முடைய கருத்தில் வேறுபடுகின்றவர்கள் விரோதிகள் என்றும் அர்த்தமல்ல. கருத்துக்களில் வேறுபட்டாலும், அன்பு என்ற விஷயத்தில் வேறுபடக்கூடாது. நம்முடைய சுயத்தை நாம் மிகவும் உயரத்தில் தூக்கி வைத்திருந்தால்தான், நம்மை விமர்சிப்பவர்களை விரோதிகள் என்று எண்ணுவோம். நம்மை நாமே உயர்த்தி வைத்தால்தான், நம்முடைய கருத்தை ஏற்றுக் கொள்கின்றவர்களை அன்பிற்குரியவர்கள் என்று முத்திரையிடுவோம்.

சிந்தனைக்கு...

ஒருவருடைய கருத்து சரியற்றதாக இருக்கலாம்,
ஆயினும், அதனையே அவரை வெறுப்பதற்குக் காரணமாக்காதே.

ஆகஸ்ட்
6
ஜீவ நீரோடை

நீதி கிடைக்காது

தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்... நீதிமொழிகள் 8:13

நீதிமொழிகள் 8:1-21

ஒரு போதகர் போலி ஊழியர். அவர் பொய் தீர்க்கதரிசனம் சொல்வார். நடந்திராத சம்பவங்களை நடந்தது போல காண்பித்து, தன்னால் பெரிய அற்புதங்கள் நடந்தது போல கூறுவார். கர்த்தர் பேசினார் என்று பொய்யாக பல விஷயங்களைக் கூறுவார். இது போன்ற தேவ விரோத செயல்களில் அவர் ஈடுபடுவது அவருடைய மனைவிக்குத் தெரியும். ஆயினும், கணவனுக்கு எதிர்த்துப் பேசினால் குடும்பம் பாதிக்கும் என்று எண்ணி, அவருடைய தவறான வழிகளுக்கெல்லாம் இசைந்து போனாள். ஒரு நாள் அந்தப் போதகர் ஒரு பெண்ணோடு தவறாகப் பழகுவதை அவள் அறிந்தாள். அவ்வளவுதான் எரிமலையாய் வெடித்தாள். கணவன் மாறவில்லை. கர்த்தர் நிச்சயம் நியாயத்தீர்ப்பு செய்வார் என்று சவாலிட்டாள்.

ஆனால், தன் கணவன் அதுவரை கர்த்தருக்கு எதிராக எத்தனையோ தவறுகள் செய்தும், அவள் தேவ நீதியை அவனுக்கு ஞாபகப்படுத்தவில்லையே. தனக்குப் பாதிப்பு என்றதும் தேவ நீதி நியாயத்தீர்ப்பு எல்லாவற்றையும் நினைவு படுத்தினாள். சிலருக்குத் தாங்கள் பின்பற்றுகின்ற பாஸ்டர்களும், போதகர்களும் அநேகரை வஞ்சிக்கின்றார்கள் என்று தெரியும். தங்கள் பாஸ்டர்கள் கர்த்தருடைய வழியில் செல்லவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால், அந்தப் பாஸ்டர்கள் இவர்களுக்கு ஊழியத்தில் சில முக்கியத்துவங்கள் கொடுப்பதால், சத்திய விரோத விஷயங்களைப் பார்த்தும் மௌனமாயிருப்பார்கள்.

ஒருநாள் இவர்களுக்கு எதிராக அந்தப் பாஸ்டரோ, போதகரோ ஏதாவது செய்யும் போது, பினகாஸைப் போல தங்களை எண்ணிக் கொண்டு, அவர்களுக்கு எதிராகப் பாய்வார்கள். அவர்களின் மாய்மாலத்தை காட்டிக் கொடுப்பார்கள். ஆனால், இது சுயநலம் சார்ந்த ஒரு மாய்மாலம். தங்களுக்கு அவர் பிரச்சினையாக வராத வரை அவரைப் பற்றி வாய் மூடிக்கொண்டு இருந்துவிட்டு இப்பொழுதோ எலியாவைப் போல வானத்திலிருந்து அக்கினி இறக்க விரும்புவார்கள்.

தேவனுடைய நாமத்திற்கும், தேவனுடைய சத்தியத்திற்கும் எதிராக காரியங்கள் நடக்கும்போது அமைதி காத்துவிட்டு, நமக்கெதிராக ஏதாவது வந்ததும் நியாயம் கேட்பதை தேவன் விரும்பமாட்டார். சத்தியத்திற்கு எதிரான காரியங்களைச் சகித்துக் கொள்வதும், நமக்கெதிராக ஏதாவது நேர்ந்தால் தேவனிடம் நியாயம் கேட்ள ளபதும் ஏற்கத் தக்கவை அல்ல. இது போன்ற காரியங்களில் கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது.

சிந்தனைக்கு...

தவறானவனுக்கு நீ கொடுக்கும் ஆதரவு தவறு என்பதை,
அவன் உனக்குத் தவறு செய்யும்போது [illegible] அமைதியாதே.

ஆகஸ்ட்
7
ஜீவ நீரோடை

சுபாவமே முக்கியம்

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம்...
கலாத்தியர் 5:22

கலாத்தியர் 5:13-26

ஒருவர் சபைகளுக்காக வாரி வாரி வழங்குவார். அனாதை ஆசிரமங்களுக்கும், சமூகப் பணிகளுக்கும் பல உதவிகளைச் செய்வார். படிக்க வசதியில்லாத பல பிள்ளைகளுக்குப் படிக்க வசதி செய்து கொடுப்பார். பல நற்செய்தி கூட்டங்களை தன்னுடைய சொந்தச் செலவில் நடத்துவார். பலரால் பாராட்டப்படும் ஒரு நல்ல மனிதர் அவர். ஆனால், இவருடைய சகோதரர்களோடு இவருக்கு நல்லுறவு இல்லை. இவருடைய மனைவியுடனும் ஏராளம் கருத்து வேறுபாடுகள். சிலர், இவருக்கு திடீர் என்று நண்பர்கள் ஆவார்கள். அப்படியே தீடிரென்று மனக் கசப்பு ஏற்பட்டுப் பிரிந்து விடுவார்கள்.

ஏன் நல்லவர் என்று அறியப்படும் ஒருவருக்கு, உறவு ரீதியான காரியங்களில் இத்தனை மனக் கஷ்டங்கள். இவர் சமூக அக்கறை கொண்டவர். ஆயினும், சுபாவரீதியாக தன்னைச் சரியாக வைத்துக்கொள்ள இயலாதவர். இவர் நல்லதைச் செய்வதுதான் கர்த்தருக்குக் கொடுக்கின்ற கனம் என்று எண்ணுகின்றாரேயன்றி, நல்ல சுபாவங்களால் கனப்படுத்துவதை அறியவில்லை. நன்மை செய்வது பற்றி அவரிடம் பேச முடியுமேயன்றி, நற்குணங்களைப் பற்றி அவரிடம் பேச முடியாது.

இருதயத்திற்குள் இயேசுவால் நடைபெற வேண்டிய மனமாற்றங்களைக் குறித்து, இவர் கலைப்படவில்லை. ஆம், நமக்கு நல்ல எண்ணங்கள் இருக்கலாம், நல்லதைச் செய்யும் ஆசைகள் இருக்கலாம். ஆனால், நாம் நமக்குள் நற்சுபாவக் காரர்களாக இருப்பது என்பது வேறு. கர்த்தருக்காக நாம் நல்லவைகளைச் செய்வது என்பது வேறு. கர்த்தர் நமக்குள் நல்லவைகளைச் செய்வது என்பது வேறு. முதலாவது நாம் நமக்குள் கர்த்தருக்கேற்ற நற்குணாதிசயக்காரர்கள் ஆக வேண்டும். மனந்திரும்பி கர்த்தரால் ஆவியில் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தை நாம் தேடினால் தான் அது நிகழும். நாம் நமக்குள் நற்குணங்களை உடையவர்களாக மாறும் போதுதான், பிறரோடு அன்பினால் நல்ல உறவுகளைத் தக்க வைக்க இயலும்.

நாம் நமக்குள் தேவ ஆவியால் செவ்வை அடைய வேண்டும். நாம் நமக்குள் தேவ ஐக்கியத்தால் தெய்வீக சுபாவங்களைப் பெற வேண்டும். நாம் நமக்குள் கர்த்தரால் தேவ அன்பினை அனுபவிக்க வேண்டும். இது நம்மைச் சுபாவரீதியாகப் பிறருக்கு அதிகப் பிரயோஜனமுள்ளவர்களாக மாற்றுகிறது. நாம் பலருக்கு பல நன்மைகளைச் செய்தாலும், முதலாவது கர்த்தரால் நாம் நமக்குள் சுபாவ ரீதியான நன்மைகள் பெறுவதுதான் மிக அவசியமானது.

சிந்தனைக்கு...

பணம் நிறைய இருந்தால் ஏழைகளுக்கு உதவ முடியும்,
பண்புகள் இருந்தால்தான் உறவுகளுடன் வாழ முடியும்.

ஆகஸ்ட்

8

ஜீவ நீரோடை

பாராட்டும் விமர்சனமும்

குறை சொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறது... மத்தேயு 11:17

மத்தேயு 11:15-30

நம்மைச் சிலர் பாராட்டி விட்டார்கள் என்பதற்காக நாம் சரியாகச் செயல் படுகிறோம் என்று உறுதி செய்து விடக்கூடாது. நம்மைச் சிலர் விமர்சிக்கின்றார்கள் என்பதற்காக நாம் சரியாகச் செயல்படவில்லை என்ற முடிவு செய்துவிடக்கூடாது. பாராட்டினவர்கள் சரியாகப் பார்த்துப் பாராட்டியிருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும்.அப்படியே நம்மை விமர்சித்தவர்கள், நியாயமான விதமாக விமர்சித் திருக்கின்றார்களா என்றும் பார்க்க வேண்டும். பாராட்டு நமக்கு உற்சாகத்தைத் தரும். விமர்சனம் நமக்கு விசனம் தரும். இரண்டையும் நாம் சார்ந்துவிடக்கூடாது. இரண்டையும் நமக்கு முன்பே வைத்துக் கொண்டிருக்கக்கூடாது.

பாராட்டுகின்றவர்களை பாராட்டத் தூண்டியது எது என்பதையும் பார்க்க வேண்டும். விமர்சித்தவர்ளை விமர்சிக்கத் தூண்டியது எது என்பதையும் பார்க்க வேண்டும். பாராட்டப்பட்ட விஷயம் நல்லதென்றால் அந்த நல்லதைப் பற்றிக் கொள்ள வேண்டும். விமர்சிக்கப்பட்ட விஷயம் தவறுதான் என்றால், அதனைச் சரி செய்ய வேண்டும். கள்ளர்களும் பாராட்டப்படுவது உண்டு. எனவே, நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பரிசுத்தமானவர்களும் விமர்சிக்கப்படுவது உண்டு. எனவே, சிலவற்றை அசட்டை செய்யவும் வேண்டும்.

தேவனுடைய பார்வையில் நல்லது என்று நினைத்து நாம் செய்வதை மனிதர்கள் பாராட்டினாலும், விமர்சித்தாலும், அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரக்கூடாது. தேவனால் பாராட்டப்படும் என்ற நம்பிக்கை சத்தியத்தின் அடிப்படையில் இருந்தால், முழு உலகமும் விமர்சித்தாலும் அது கவலைக்குரியது அல்ல. தேவனுடைய பார்வை யில் நலமானது என்று சத்திய அடிப்படையில் நிதானிக்க இயலாதிருந்தால், உலகமே திரண்டு பாராட்டினாலும், அந்தப் பாராட்டின் பின்னால் சாபம் இருக்கும். தேவனுக்கு முன்பாக நம்முடைய நல்மனசாட்சி “இது நல்லது” என்று உணர்ந்தால், பிறருடைய வார்த்தைகளால் காயப்படத் தேவையில்லை.

ஒரு சிறு புள்ளிகூட தவறு இல்லாத இயேசுவின் செயல்களில் பரிசேயர்களும், சதுசேயர்களும் பல தவறுகளைக் கண்டனர். அது அவர்களின் பரிசுத்தமற்ற கண்களின் தெளிவற்ற பார்வையின் விளைவு அது. எனவேதான், பாராட்டுதலை அடிப்படையாக வைத்து இயேசு செயல்பட்டதுமில்லை. விமர்சனங்களை அடிப் படையாக வைத்துச் செயல்படாமல் நின்றதுமில்லை. இன்று பல பாஸ்டர்களும் சுவிசேஷகர்களும் ஜனங்களால் அதிகமாகப் பாராட்டப்படுகின்றார்கள். எனவே, அவர்கள் தவறான விதமான ஊழிய வழிகளில் இன்னும் இன்னும் வேகமாக நடக்கின்றார்கள். இது தேவ கோபத்தை வரவழைக்கும் செயல்பாடு.

சிந்தனைக்கு...

பாராட்டுகளைத் தொடர்ந்து பெற கவனமாயிரு,
விமர்சனங்கள் தொடர்ந்து வராதிருக்க, எச்சரிக்கையாயிரு.

ஆகஸ்ட் 9

ஜீவ நீரோடை

பில்லி சூனியமா?

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை... எண்ணாகமம் 23:23

எண்ணாகமம் 23:13-30

சில துன்பங்கள் தொடர்ந்து வரலாம். காரணங்கள் அறிய இயலாத சில கஷ்டங்கள் வரலாம். சில தோல்விகளும் ஏமாற்றங்களும் தொடர்கதையாகலாம். அடிக்கடி சில வியாதிகள் வரலாம். ஆனால், இவைகளுக்குப் பில்லி சூனியம் காரணம் என்று சொல்லிவிட முடியாது. யாரோ மந்திரம் வைத்திருக்கின்றார்கள் அல்லது யாரோ பிசாசை ஏவி விட்டிருக்கின்றார்கள். எனவே, இப்படியெல்லாம் நடைபெறுகிறது என நம்புவது மூட நம்பிக்கையாகவும் இருக்கும். இந்த சபிக்கப் பட்ட பூமியில் சில கஷ்டங்களும், போராட்டங்களும், தோல்விகளும் ஏமாற்றங் களும் இயற்கையானவை.

சிலருக்கு சில உடல் அசௌகரியங்கள் ஏற்படும். ஆனால், மருத்துவப் பரி சோதனை செய்தால் எல்லாம் நார்மல் என்று வரும். உடனேயே அப்படியென்றால் இது பில்லி சூனியம்தான் என்று சொல்வார்கள். மருத்துவ சோதனையில் கண்டறிய இயலாத பலவித வியாதிகள் மனிதனுடைய சரீரத்தில் காணப்பட முடியும். எனவே, எல்லாம் பில்லி சூனியம் என்று கூற இயலாது.

பல கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களை மந்திரம், ஏவல், பில்லி சூனியம், மாந்திரீகம் போன்றவை பாதித்திருப்பதாகச் சொல்வார்கள். இதனுடைய அர்த்தம் என்ன? இவை எதுவும் தங்களைப் பாதிக்காமல் பாதுகாக்கும் கர்த்தர், தங்கள் வாழ்க்கையில் இல்லை என்று சொல்வதாகவே அர்த்தம். பிசாசின் தொல்லைகள் பாதிக்கிறது என்கிறோம். பில்லி சூனியப் பாதிப்புகள் என்கிறோம். அதற்குச் சான்றாக பல நிகழ்வுகளைக் காண்பிக்கின்றோம். ஆனால், உண்மை என்ன? நம்முடைய வாழ்க்கை பிசாசின் வல்லமைதான் தேவ வல்லமையைவிட அதிக மாகச் செயல்படுகிறது என்று சொல்லுகின்றோம். நாம் கிறிஸ்தவர்கள் என்றால், கிறிஸ்து நம்முடைய வாழ்க்கையில் ஏன் வல்லமையாகச் செயல்படவில்லை. கிறிஸ்துவின் வல்லமை செயல்பட்டால், ஏன் பில்லி சூனிய வல்லமைகள் மேலோங்கி நிற்கின்றன?

கிறிஸ்துவை உடையவர்கள்தான் கிறிஸ்தவராயிருக்க முடியும். நாம் கிறிஸ் துவை உடைய கிறிஸ்தவராக இருந்தால் மந்திரம், தந்திரம், மாந்திரீகம் எதுவும் நம்மை மேற்கொள்ளாது. பில்லி சூனியம் நம்மிடம் கிரியை செய்கிறது என்றால், கிறிஸ்து நம் வாழ்வில் இல்லை என்று அர்த்தம். அப்படியென்றால், முதலாவது கிறிஸ்து நம்முடைய வாழ்க்கையில் வரத்தக்கதாக, நாம் மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவம் பெற வேண்டும். நாம் கிறிஸ்துவை உடைய கிறிஸ்தவர் என்ற நம் பிக்கையிருந்தால் நம்மை பில்லி சூனியம் பாதிக்காது என்று நம்ப வேண்டும்.

சிந்தனைக்கு...

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சாத்தானைக் காரணமாக்கினால், உன்னுடைய தவறுகளை உணர்வதற்கு வாய்ப்பே இராது.

ஆகஸ்ட்
10
ஜீவ நீரோடை

கர்த்தர் தேவையில்லையா?

தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்... யோனா 2:8

யோனா 2:1-10

அநேகர் செய்கின்ற ஒரு தவறு உண்டு. அது ஒரு உணர்ச்சி வசப்பட்ட முடிவின் விளைவு என்று சொல்லலாம். அது என்னவென்றால், கர்த்தர் எப்பொழுது அதிகமாகத் தேவைப்படுகின்றாரோ, அப்பொழுது அவரை வேண்டாம் என்பதுதான். சிலர் துன்பங்களைச் சந்திக்கும் போது கர்த்தர்மேல் விரக்தி அடைந்து விடுகின்றனர். சிலர், இழப்புகளைச் சந்திக்கும்போது இனி எனக்கு எதற்காகத் தேவன் என்று கூறி அவருக்குக் கதவைச் சாத்திவிடுகிறார்கள். சிலர், சில வேதனை மிகுந்த நிகழ்வுகளைக் காண நேரிடும் போது ஏற்படும் வருத்தத்தால், கர்த்தரால் நாம் கண்ட பயன் என்ன என்று கூறி அவரைத் தேடுவதை நிறுத்திவிடுகின்றார்கள்.

ஒரு பெண் கணவனை இழந்தாள். அவளுக்காகச் ஜெபிக்க ஒரு பாஸ்டர் சென்றார். அவளுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறினார். இறுதியில் ஜெபிக்கச் சென்றதும், வேண்டாம் பாஸ்டர், கர்த்தர் இப்போது எனக்குச் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றாள் அவள். அதற்கு அந்த பாஸ்டர், சகோதரியே, எப்போதையும் விட இப்போதுதான் கர்த்தர் உங்களுக்காக அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கிறது என்றாள். அவளோ, அவர் செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்பட வில்லை. இனி எனக்கு அவர் என்ன செய்ய இருக்கிறது என்றாள்.

வாழ்க்கையில் நிகழ்ந்த துன்பங்களும், இழப்புகளும், தோல்விகளும் கர்த்தர் மேல் ஒரு வருத்தத்தை ஏற்படுத்துவது இயற்கை. தன்னுடைய ஜெபங்களுக்கும், பக்தியான வாழ்விற்கும் தேவன் பதில் தராமல் போனாரே, என்ற ஆதங்கம் ஏற்படுவது இயற்கை. ஆனால், அந்த வருத்தமும், மனச்சோர்வும் நமக்கு நல்லதைக் கொண்டு வராது. கர்த்தர் இனி அவசியமில்லை என்பதுபோன்ற சிந்தையால், நமக்கு எந்த நல்ல பலனும் இல்லை. கர்த்தரைத் தேடமால் போகும்போது என் வாழ்க்கையை நானே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லுவது போல அர்த்தம் ஆகிவிடும்.

இந்த உலகத்தில் நம்முடைய இறுதி மூச்சு வரை கர்த்தர் தேவைப்படாத காலம் என்ற ஒன்று இல்லை. வருத்தங்களும் சோர்வுகளும் தேவனால் நமக்கு வரவேண்டிய ஆறுதல், ஆதரவு, துணையிருப்பு, நடத்துதல், தாங்குதல், பலப்படுத்துதல் போன்றவற்றைத் தடுத்து விடும். கர்த்தர்மேல் நமக்கு ஏற்படும் மனவருத்தங்கள், அவரால் வருகின்ற தைரியத்தையும், நம்பிக்கையையும், ஐக்கியத்தையும் அசட்டை செய்ய நம்மை தூண்டும். அதனால் நாம் மறுபடியும் தேவ கிருபையால் எழுந்து நின்று வாழ்ந்து காட்டுகின்ற வாய்ப்பை இழந்து போகிறோம்.

சிந்தனைக்கு...

தனித்து விடப்படும் வேளைகளில்தான் நம்மை தாங்கி நடத்த இயேசு அதிகமாகத் தேவைப்படுகிறார்.

ஆகஸ்ட்
11
ஜீவ நீரோடை

திருப்தி தராத வாழ்க்கை

உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்... ஏசாயா 55:2

ஏசாயா 55:1-13

எனக்கு அமைந்த ஒரே ஒரு திருமண வாழ்க்கை திருப்தியற்றதாகப் போய் விட்டதே என எண்ணுகின்றவர்கள் பலர். நான் நீண்ட காலமாக ஆசைப்பட்டுக் கட்டின வீடு, கடைசியாக நான் எதிர்பார்த்தபடி இல்லாமல் போய்விட்டதே என வருத்தப்படுவோர் பலர். அங்கு இங்கு என்று தேடி கடைசியில் கிடைத்த வேலை ஒரு முள்ளாகவே இருக்கின்றதே என சோர்ந்து போகிறவர்கள் பலர். எத்தனை ஆசை அருமையாய் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தும், இறுதியில் அவர்கள் கசப்பான கனி கொடுக்கும் மரங்களாவிட்டார்களே என்று நொந்து போகின்றவர்கள் பலர்.

ஆம், இந்த பூமியில் நமக்கு அமைகின்ற வாழ்க்கையில் பல விஷயங்கள் நமக்குத் திருப்திக்குரியவையாக இல்லை. நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற உறவு களும், நமக்கு அமைந்த வாழ்க்கைச் சூழல்களும் நமக்கு திருப்தியைத் தரவில்லை. ஆனால், இது ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் அல்ல. இது இயற்கையானது தான். பாவிகளுக்கு அமைந்த சூழ்நிலைகள் மட்டும் அல்ல, பரிசுத்தவான்கள் பலருக்கு அமைந்த சூழ்நிலைகளும் அவர்களுக்கு திருப்தியைத் தரவில்லை.

ஆனால், இதற்காக நாம் இழந்து போன உணர்வோடோ, நஷ்டப்பட்ட உணர்வோடோ, ஏமாற்றப்பட்ட உணர்வோடோ வாழத் தேவையில்லை. வாழ்க்கையின் சில பகுதிகளில் பெற இயலாமல் போன திருப்திகளை ஈடு செய்ய வழியுண்டு. கர்த்தருடைய ஐக்கியத்தின் சந்தோஷத்தை அனுபவித்து வாழும் போது, சில இடங்களில் நமக்கு ஏற்படும் அதிருப்திகள் நம்மை பாதிப்பதில்லை. உறவுகள் தர இயலாமல் போன சந்தோஷத்தைத் தேவ உறவினால் பெற முடியும். சூழ்நிலைகள் தர முடியாமல் போன சந்தோஷத்தை, நாம் தேவனுக்குள் வாழ்கின்ற ஒரு வாழ்க்கை தரும் சந்தோஷத்தால் ஈடு செய்ய இயலும். கர்த்தர் அருளும் திருப்தியும் சந் தோஷமும் நிறைவும் நம்முடைய மனதை மகிழ்விக்கும் போது, நம்மை மகிழ் விக்கத் தவறும் சூழ்நிலைகளால், நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை.

எனவேதான், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள் என்று வேதம் சொல் கிறது. அநேகர் தங்களை மகிழ்விக்கத் தவறிய உறவுகளையும், தங்களைத் திருப்திப்படுத்தாமல்போன சூழ்நிலைகளையுமே பார்த்து பார்த்து சோகமடைந்து போய் விடுகிறார்கள். ஏன், எனக்கு இப்படி வாழ்க்கை அமைந்தது என்று விரக்தி யடைகின்றனர். ஆனால், மனிதர்களாலும் சூழ்நிலைகளாலும் அடைய இயலாமல் போன மகிழ்ச்சியையும், நிறைவையும் ஆண்டவரிடம் நாம் தேடுகின்ற போது, அங்கே நாம் பூரிப்படைகின்றோம்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்குள் தன்னைச் சந்தோஷப்படுத்த அறிந்தவன்,
மனிதர்கள் கொடுக்கும் சஞ்சலங்களால், மனம் தளர்ந்து போவதில்லை.

ஆகஸ்ட்
12
ஜீவ நீரோடை

தனி ஜெபம்

தனித்துப் போய் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்... லூக்கா 5:16

லூக்கா 5:12-26

ஒருவர் ஜெபங்கள் விஷயத்தில் அதிகமான நம்பிக்கையுடையவர். ஆனால், தனித்து ஜெபிக்கின்ற பழக்கம் அவருக்கு அவ்வளவாக இல்லை. தேவ ஊழியர்களின் ஜெபங்களை அதிகமாக நாடுவார். ஜெபிப்பார். ஜெபக் கூட்டங்கள் நடக் கின்ற இடங்களை, அற்புதம் நடக்கின்ற இடங்களாகக் கருதி தவறாமல் கலந்து கொள்வார். டி.வி மற்றும் யூ.டியூப் போன்ற ஊடகங்கள் வழியாக ஒளிபரப் பாகும் ஜெப நிகழ்ச்சிகளோடு உணர்ச்சிகரமாக இணைந்திருப்பார். ஆயினும், தனித்து ஜெபியுங்கள் என்றால் அது தனக்கு சரிப்பட்டுவரவில்லை என்பார்.

ஜெப அனுபவம் என்பது வேறு. ஜெபக் கூட்ட அனுபவம் என்பது வேறு. நாம் தேவனை நோக்கிச் ஜெபிப்பது என்பது வேறு. நமக்காகச் ஜெபிக்கின்றவர்களின் ஜெபங்களை நாடுவது என்பது வேறு. எத்தனை பேர் நமக்காகச் ஜெபித்தாலும், நாம் தேவனை நோக்கிச் ஜெபிப்பதற்கு அவை பதில் ஆகாது. எத்தனை ஜெபக் கூட்டங்களில் பங்கு பெற்று ஜெபித்தாலும் அவற்றில் நாம் தேவனை நோக்கி தனித்துச் ஜெபிப்பதினால் வருகின்ற நல்விளைவுகளைக் காண இயலாது.

தனித்து தேவ சமுகத்தில் ஜெபிக்கும் பழக்கம், தேவனோடு ஒரு மனிதனுக்கு தனிப்பட்ட தொடர்பும் இருக்கிறது, என்பதற்கு முக்கியமானதோர் சான்றாக உள்ளது. தேவ சமுகத்தில் தனித்துப் போய் எவ்வளவு நேரம் ஜெபிக்கின்றோம்? எவ்வளவு ஈடுபாடுடன் ஜெபிக்கின்றோம்? என்பதுதான் ஒருவருடைய ஆவிக்குரிய நில மையைக் காட்டுகிறது. சிலர், தங்களை ஆழமான ஆவிக்குரிய அனுபவமுடையவர் களாக எண்ணுவார்கள். ஆனால், அதிக நேரம் ஜெபிப்பதில் செலவிடத் தேவை யில்லை என்ற கொள்கையையும் வைத்திருப்பார்கள். ஜெபம் என்பது தேவ உற வினை வளர்க்கும் இடம். அதிக நேரம் பேசாவிட்டால் யாருடனாவது நம்முடைய உறவு வளருமா?

சிலருக்குச் ஜெபங்களின் முக்கியத்துவம் தெரியும். ஆனாலும், போதுமான நேரங்கள் தேவனிடம் தனித்து ஜெபிக்கத் தெரியாது. ஜெபம் என்பது தேவனோடு பேசிப்பழகி மனப்பகிர்வு செய்யும் நேரம். ஆனால், அதற்கு முதலாவது தேவ னோடு நாம் ஒரு உறவை ஏற்படுத்திக் கொண்ட வலிமையான பின்னணி வேண்டும். கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட அனுபவம் வேண்டும். அதன்மூலம் தேவனுடைய பிள்ளை என்ற மறுபிறப்பின் அனுபவம் வேண்டும். அதனை உறுதிப்படுத்த தேவ ஆவியின் ஐக்கிய அனுபவம் வேண்டும். (ரோமர் 8:15) அப்போது வெற்றிகரமான தனி ஜெப அனுபவம் ஏற்படும்.

சிந்தனைக்கு...

ஆயிரம் பேர் நமக்காக, ஜெபித்தாலும்,
நம்முடைய ஜெபத்தால் மட்டுமே நமக்கு உண்மையான நன்மை வரும்.

ஆகஸ்ட்
13

ஜீவ நீரோடை

ஏதாவது செய்வார்?

செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை... 2 நாளாகமம் 20:12

2 நாளாகமம் 20:11-26

ஒருவர் எந்த ஒரு பிரச்சினையானாலும், நாம் கர்த்தரிடம் சொல்லி விட்டு காத்திருப்போம், கர்த்தர் எதையாவது செய்வார் என்பாராம். அவர் இப்படியே சொல்வதால் சிலர் அவரிடம் கர்த்தர் என்ன செய்வார் என்று உங்களுக்குத் தெரியாதா என்று கேட்பார்கள். அதற்கு அவர், கர்த்தர் என்ன செய்வார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், எதையாவது செய்யாமலிருக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும் என்பாராம். சிலர், இப்படிச் செய்யும் அப்படிச் செய்யும் ஆண்டவரே, என்று கட்டளை தொனியில் ஜெபிப்பதைத்தான் விசுவாசம் என்று நினைப்பார்கள். ஆனால், எந்த ஒரு விஷயத்திலும் கர்த்தரிடம் பகிர்ந்து கொண்டு, அவர் எதையாவது செய்வார் என்ற காத்திருப்பது, ஒரு சிறந்த விசுவாச அனுபவமே.

சில நேரங்களில் சில விஷயங்கள் இப்படித்தான் நடக்க வேண்டும் அல்லது அப்படித்தான் நடக்க வேண்டும் என்பது நம்முடைய பக்கத்திலிருந்து சரியாக இருக்கும். ஆனால், தேவனுடைய வழிகள் வேறு விதமாக இருக்கும். எனவே, இப்படித் தான் செய்வார் என்ற எதிர்பார்ப்பு அல்ல. கர்த்தர் எதையாவது செய்வார் என்ற எதிர் பார்ப்புதான் சரியானதாயிருக்கும். வாழ்க்கையில் நாம் எதிர்பார்த்தபடி தேவன் செய்யாவிட்டாலும், தேவன் எதையாவது செய்யாமலிருக்கமாட்டார். தம்முடைய பிள்ளைகளின் விண்ணப்பங்களைக் கேட்டு எதையாவது செய்யாமலிருக்கமாட்டார்.

தேவன் எதையாவது செய்தேயாக வேண்டும் என்ற சூழ்நிலையில் அவர் சும்மாயிருக்கமாட்டார். எலிசாவுக்கு எதிராக ஒரு பெரிய சீரிய இராணுவம் வந்தது. கர்த்தர் எதையாவது செய்யப் போகிறாரா என்பதைப் பற்றி எலிசாவின் வேலைக் காரனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், எலிசாவிற்கு அந்த நம்பிக்கை யிருந்தது. கர்த்தர் எதையாவது செய்யாமலிருக்கமாட்டார் என்ற நம்பிக்கையில் தைரியமாகயிருந்தான். எதையாவது செய்வார் என்றால் ஏதோ ஒன்றைச் செய்வார் என்று அர்த்தம் அல்ல. அந்தச் சூழ்நிலைக்கு எதைச் செய்வது சரியாயிருக்குமோ, அதனை அவர் செய்வார்.

சில நேரங்களில் இதைச் செய்ய வேண்டும் அல்லது அதைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுக் கேட்க நம்மால் இயலாது. ஏனென்றால், எது செய்யப் பட வேண்டும் என்று நமக்குத் தெரியாது. ஆனால், அந்தச் சூழ்நிலையில் எதை யாவது செய்ய நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும் போது, கர்த்தர் அந்தச் சூழ் நிலையை நாம் கடந்து செல்லுவதற்கு ஏதுவானதைச் செய்வார். மாராவின் கசப்பான நீரை என்ன செய்வது என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால், கர்த்தர் எதையாவது செய்வார் என்ற விசுவாசம் மோசேக்கு இருந்தது.

சிந்தனைக்கு...

சில நேரங்களில் நாம் கேட்டதைத் தராததும், கர்த்தர் நமக்குச் செய்த நன்மையாக மாறுவதுண்டு.

ஆகஸ்ட்
14
ஜீவ நீரோடை

பாவ அறிக்கை

உங்கள் இருதயங்களைக் கிழித்து...
யோவேல் 2:13

யோவேல் 2:12-19

கிறிஸ்தவர் ஒருவர் எந்தச் சூழ்நிலையிலும் சபை ஆராதனைக்குப் போகாமல் இருக்கமாட்டார். ஆனால், பாவ அறிக்கை ஜெபம் முடிந்ததும் வீடு திரும்பி விடுவார். இவ்வளவு தவறாமல் ஆலயம் வருகின்ற நீங்கள் ஆராதனையின் இறுதிவரை இராமல் இடையில் செல்வது ஏன் என்று யாராவது கேட்பார்கள். அதற்கு அவர் நான் ஆலயம் வருவதே பாவ அறிக்கை செய்யத்தான். அது முடிந்த பிறகு எனக்கு வேலையில்லை என்பாராம். ஏனென்றால், வாரம் முழுவதும் செய்கின்ற பாவத்தை ஆலயத்தில் வந்து அறிக்கையிட்டுவிட்டால், அவருக்குப் பாரம் நீங்கி விடும். அதன் பின்பு புதிதாகப் பாவம் செய்ய ஆரம்பிப்பார்.

குப்பைத் தொட்டியில் குப்பைகள் நிரம்பும் போது வெளியே கொட்டிவிடு வார்கள். காலியாகிவிட்ட குப்பை தொட்டியில் மறுபடியும் குப்பைகள் குவிய ஆரம் பிக்கும். அனேகருக்கு திருச்சபைப் பாவ அறிக்கை என்பது குப்பைத் தொட்டியில் சேர்ந்ததை காலி செய்வது போல. பாவ அறிக்கை முடிந்த பிறகு, பாவ குப்பைகள் மறுபடியும் குவிய ஆரம்பித்துவிடும். ஆனால், குப்பைத் தொட்டியைக் கையாளு வது போல, நாம் நம் இருதயத்தைக் கையாளக் கூடாது. திரும்பத் திரும்ப பாவம் செய். திரும்ப திரும்ப பாவ அறிக்கை செய் என்ற முறை சரி அல்ல.

பாவம் என்பது தற்காலிகமாக நீங்குவது அல்ல. அது நிரந்தரமாக நீக்கப்பட வேண்டும். இதுவரை செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்டு விட்டோம். இனி செய்யும் பாவத்திற்குப் பின்னர் மன்னிப்பு கேட்போம் என்பது சரியானதல்ல. சிலர், பாவ அறிக்கை ஜெபம் இருக்கும் வரை பாவம் செய்து கொண்டேயிருக்கலாம் என எண்ணுகின்றனர். ஒரு முறை சகதியில் சிக்கினோம். மீண்டும் எழுந்து வந்து குளித்து சுத்தமாகினோம். இனி மறுபடி சகதிக்குள் போய் விழக்கூடாது. செல்லும் வழிகளில் ஏதாவது அழுக்கை மிதிக்க நேர்ந்தால், அதற்காகக் கால்களை கழுவிக் கொள்ளலாம்.

ஏராளமான கிறிஸ்தவர்கள் பாவ அறிக்கை ஜெபம் செய்து செய்து பாவத்தைக் குறித்த உணர்வை இழந்து போனார்கள். பாவத்தைக் குறித்த எந்த வருத்தமும் இல்லாமல் பாவ அறிக்கை செய்வது, இன்னுமொரு பாவமாக மாறும். பாவத்தை விட்டுவிட மனமின்றி பாவ அறிக்கை செய்வது, தேவனைப் பரிகாசம் செய்யும் ஒரு செயலாகும். அநேகர் ஒரு பக்தி சம்பிரதாயச் செயலாக பாவ அறிக்கை செய்கின்றார் களேயன்றி, பாவம் சம்பந்தமான விஷயத்தில் அவர்களுக்கு குற்ற உணர்வு எதுவும் இல்லை.

சிந்தனைக்கு...

உன்ன பாவத்தை அறிக்கை செய்யாதவன் பாவி,
அறிக்கை செய்த பாவத்தை விட்டு விலகாதவன் மா பாவி.

ஆகஸ்ட்
15
ஜீவ நீரோடை

சுதந்திரம் பிறப்புரிமை

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு...
ரோமர் 6:18

ரோமர் 6:1-23

சுதந்திரம் எனது பிறப்புரிமை. அதை நான் அடைந்தே தீருவேன் என்று லோகமானிய பாலகங்காதர திலக் முழக்கமிட்டது, இன்றும் இந்திய சரித்திரத்தை வாசிக்கின்றவர்களின் காதில் ஓங்கித் தொனிக்கின்றது. அவருடைய அந்த வீர முழக்கம் மகாத்மா காந்தி வழியாக ஒருநாள் நிறைவேறியது. இந்தியா வெள்ளைக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. இந்திய வளங்கள் வெளிநாட்டவரால் சுரண்டப்பட்ட நிலமை நீங்கி நாடு சுதந்திரமடைந்தது. இன்று 76 வது சுதந்திர தினத்தை நாடு கொண்டாடுகின்றது.

ஆனால், இந்தியா இன்று எந்த அளவு சுதந்திரமாக இருக்கின்றது என்பது மிகப்பெரிய ஒரு கேள்வி. வெளிநாட்டவரிடமிருந்து நம்மை மீட்டுக் கொள்வதில் வெற்றியடைந்தோம். ஆனால், இந்தியாவின் சுதந்திரம் எத்தனையோ விதங்களில இந்தியாவில் வாழ்கின்றவர்களாலேயே பாதிக்கப்படும் நிலைமை உள்ளது. அநேகர், அதிகார துஷ்பிரயோகங்களால் அடிமைப்படுத்தப்படுகின்றனர். அநேகர், அரசியல் தந்திரங்களால் அடிமைப்படுத்தப்படுகின்றனர். அநேகர், ஜாதிய வெறித்தனங்களால் அடிமைப்படுத்தப்படுகின்றனர். அநேகர், தவறான மத நம்பிக்கைகளாலும், மூட பழக்கவழக்கங்களாலும் அடிமைப்படுத்தப்படுகின்றனர்.

இந்திய நாட்டின் வளங்கள் வெளிநாட்டவரால் கொள்ளையடிக்கப்பட்ட நிலமை மாறியது பெருஞ்சாதனை. ஆனால், இன்று இந்தியர்களின் வளங்கள் இந்தியாவைச் சேர்ந்த ஒரு சிறு கூட்டத்தினராலேயே வித்தியாசமான முறையில் கொள்ளையடிக்கப்படுகின்றதே. பல கோடி மக்களிடம் பரவலாக இருக்க வேண்டிய செல்வங்கள், இன்று ஒரு சிலருடைய கஜானாக்களிலேயே குவிந்து கிடக்கிறதே. மத சுதந்திரம், கருத்து சுதந்திரம், என அரசியலமைப்பு அளித்துள்ள பல சுதந்திரங்களை போராடிப் போராடிப் பெற வேண்டிய நிலமை உள்ளதே.

அரசியல் ரீதியான சுதந்திரத்தைப் பெற்றது மட்டுமே போதுமானதல்ல. மனிதனுக்கு மன சுதந்திரம் வேண்டும். மனம் போல வாழும் சுதந்திரம் அல்ல. மனதை இயற்கையாக ஆளுகின்ற பாவத்தின் பிடியிலிருந்து சுதந்திரம் வேண்டும். தவறான சிந்தனை, தவறான ஆசைகள், தவறான சுபாவங்கள், தவறான நோக்கங்கள், தவறான உறவுகள் என பல தவறான காரியங்களிலிருந்து விடுதலை வேண்டும். பாவத்திலிருந்து விடுதலை பெற்று பரிசுத்தமாக வாழ்வது என்பது கர்த்தராகிய இயேசு தரும் ஆவிக்குரிய பிறப்புரிமை. அதை அனுபவித்தே தீருவேன் என்ற ஆர்வம் சார்ந்த விசுவாசச் செயல் நமக்கு வேண்டும்.

சிந்தனைக்கு...

விரும்பியபடியெல்லாம் வாழ்வது அல்ல சுதந்திரம்,
விரும்பத்தக்க விதமாக வாழ்ந்து காட்டுவதே சுதந்திரம்.

ஆகஸ்ட் 16 ஜீவ நீரோடை

நீர்க்குமிழிப் பக்தி

உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும்... ஓசியா 6:4

ஓசியா 6:1-11

சிலர் ஜெப வேளை முடிந்து வரும் போது சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்த மோசேயைப் போல பிரகாசமாய் இருப்பார்கள். அப்போது அவர்களிடம் பொறுமை, தாழ்மை, அன்பு, சகிப்புத் தன்மை யாவற்றையும் பார்க்க முடியும். ஆயினும், சில நிமிடங்கள் கடந்ததும் மிகவும் சாதாரணமாகிவிடுவார்கள். கொஞ்ச நேரத்தில் கோபம், எரிச்சல், வெறுப்பு, விரோதம், கபடம், கடுஞ்சொல் எல்லாம் அணிவகுத்து வந்துவிடும். சிலர் அவ்விதமே சபை ஆராதனை முடிந்துவரும் போது பரலோகத்திலிருந்து வருவது போல, மிக மிகப் பரிசுத்தமாய் வருவார்கள். ஆயினும், கொஞ்ச நேரத்தில், நாங்கள் இன்னும் பழைய பாவ சுபாவக்காரர்கள் தான் என்று காட்டிவிடுவார்கள்.

ஏனென்றால், இவர்களிடம் ஏற்பட்ட அமைதி, பொறுமை, தாழ்மை, அன்பு, சாந்தம் யாவும் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளின் தாக்கத்தால் ஏற்பட்டவை. ஜெப நேரங்களிலும், வேத வாசிப்பு நேரங்களிலும், ஆராதனை நேரங்களிலும், பிரசங்கம் கேட்கும் நேரங்களிலும் நம்முடைய மனம் அந்தப் பக்திச் சூழ்நிலையால் பாதிக்கப் பட முடியும். ஏனென்றால், மனம் சற்று நேரம் பக்தியான ஒரு சூழலில் உலா வருவதால் அது அமைதியும், தெளிவும் பெற்று நல்ல குணாதிசயங்களை சற்று நேரம் வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுகிறது. ஆனால், இது நீர்க்குமிழி போன்றது. சற்று நேரத்தில் ஏதாவது ஒரு காற்றினால் அது இல்லாமல் போகும்.

நம்முடைய மனம் உண்மையான தேவ உறவைக் காண வேண்டும். நமக்குள் தேவ ஆவி வாசம் செய்து நம்மை நடத்த வேண்டும். அப்போது நாம் உண்மையான தேவ சமுகத்தை அனுபவிக்க முடியும். அந்த தேவ சமுக அனுபவம் சற்று நேரத்தில் கரைந்து போவதல்ல. அது ஜெப நேரத்திற்கு அப்பாலும் செயல்படும். அது ஆராதனை வேளைக்கு அப்பாலும் தெய்வீக அமைதியை உணரும். அது பக்திச்சூழ்நிலைகளுக்கு அப்பாலும் நற்குணங்களை வெளிப்படுத்தும். ஏனென்றால் அவர்களுக்குள் கர்த்தர் இருக்கின்றார்.

உலகச் சூழலை விட்டு பக்திச் சூழலுக்கு மனதைக் கொண்டு போகும் போது, தேவ தொடர்பு இல்லாமலேயே இருதயம் ஒரு விதமான அமைதியையும், ஆனந்தத்தையும், தெளிவையும், உத்வேகத்தையும் உணர முடியும். ஆனால், இதற்கு நிலைத்திருக்கும் வலிமை கிடையாது. இது சற்று நேரம் மனதைச் சற்று நன்றாக வைத்துவிட்டு கடந்து சென்று விடும். கர்த்தரை நமக்குள் பெற்றுக் கொண்ட நிச்சயத்தோடு, நாம் தேவ சமுகச் சூழ்நிலைகளில் வரும் போது, அதனால் ஏற்படுகிற விளைவு, உண்மையான தேவ ஆவியால் ஏற்பட்ட விளைவாக இருக்கும்.

சிந்தனைக்கு...

தேவாலயப் பக்திச் சூழலில் அமைதியைத் தேடாதே,
தேவாலயமாக வாழ்ந்து அதை அனுபவி.

ஜன்னலைத் திற

எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை... 1 கொரிந்தியர் 5:10

1 கொரிந்தியர் 5:1-13

ஒருவர் தன்னுடைய வீட்டின் எந்த ஒரு ஜன்னலையும் திறந்து வைப்பதில்லை. ஒரு துளி வெளிக்காற்று உள்ளே வர வாய்ப்பில்லாமல் எல்லாம் அடைக்கப் பட்டிருக்கும். அதே வேளையில், உள்ளே அமர்ந்து, ஆ என்ன வெம்மை, என்ன உஷ்ணம், என்ன சூடு, என்று புலம்பிக் கொண்டிருப்பார். கதவு ஜன்னலைக் கொஞ்சம் திறந்து வைத்தால் காற்று கொஞ்சம் உள்ளே வருமே என்றால், ஐய்யய்யோ, வெளியே உள்ள தூசிகளும் உள்ளே வந்துவிடும் என்பார். காற்று வருகிற இடத்தில் தூசியும் வரத்தான் செய்யும். அதற்காகக் காற்றை முற்றிலும் தடுத்து விட்டால், பின்னர் உஷ்ணமடைவதை எப்படித் தவிர்க்க முடியும்?

சிலர், அதிக பக்தியினால் தங்களின் உபதேசங்களைப் பின்பற்றாத யாரோடும் பேச்சுவார்த்தை வைப்பதில்லை. தவறான உபேதசம் தங்களைத் தீட்டுப்படுத்தி விடும் என்று கூறி, மனித உறவுகளையே தவிர்த்து விடுவார்கள். சிலர் யாரிடமும் பேச பழக செய்யமாட்டார்கள். மனிதர்களோடுள்ள உறவுகள் தேவனை விட்டுப் பிரித்து விடும் என்று கூறுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே அதிக பக்தியால் தனிமைப்படுத்தி விடுவதால், மனித உறவுகளினால் வர வேண்டிய பல நன்மைகள் இவர்களுக்குத் தடைபட்டுப் போகும்.

ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் இல்லத் திருமணத்திற்கு, அவருடைய சபையைச் சேர்ந்த சிலரைத் தவிர வேறு யாரும் அதிகமாக வரவில்லை. மிகக்குறைவாக ஆட்களை அழைத்து திருமணம் நடத்துகிறீர்களே என்று கேட்டவருக்கு அவர் கொடுத்த பதில், எனக்கு இவ்வளவு பேரோடுதான் தொடர்பு உள்ளது என்பதே. ஆதியிலே மனிதனைப் படைத்த தேவன், நான் மட்டுமே உனக்குப் போதும் என்று சொல்லவில்லை. மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கூறி மனிதத் துணையை தேவன் ஆதாமுக்குக் கொடுத்தார்.

எல்லோரோடும் பழக முடியாது. எல்லோரோடும் ஐக்கியம் வைக்க முடியாது. அதே வேளையில் எவரோடும் ஐக்கியம் வேண்டாம், ஆண்டவர் மட்டும் போதும் என்பது நல்ல ஆவிக்குரிய நிலைப்பாடல்ல. மனிதர்களிடத்திலே குறைபாடுகள் இருக்கும். மனிதர்களோடு ஐக்கியம் கொள்ளும்போது, சிறு சிறு பிரச்சினைகளுக்கு வாய்ப்பு உண்டு. அவற்றை உரிய விதமாக அணுகி, கேடு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே வேளையில் மனித உறவுகளையே வேண்டாம் என்று தவிர்ப்பது விவேகம் அல்ல. தேவ ஆவியால் நடத்தப்படுகிறவர்கள், மனித உறவுகளே வேண்டாம் எனக் கூறாமல், எச்சரிக்கையோடு பழக இயன்றவர்களாயிருப்பார்கள்.

சிந்தனைக்கு...

எந்த மனிதனும் சரியில்லை என்று சொல்கிறவர்கள், தாங்கள் சரியில்லாமல் இருப்பதை அறிக்கையிடுகின்றனர்.

ஆகஸ்ட்
18
ஜீவ நீரோடை

இப்படிச் ஜெபியுங்கள்

உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்...
சங்கீதம் 62:8

சங்கீதம் 62:1-12

மகன் ரொம்ப நேரமாக அறையில் போய் ஜெபித்துக் கொண்டிருந்தான். ஜெபித்துவிட்டு வெளியே வந்தபோது தகப்பன் அவனிடம். கர்த்தரிடம் என்ன கேட்டாய் என்று விசாரித்தார், அதற்கு அவன், எதையும் கேட்கவில்லை என்றான். அப்படியானால், கர்த்தரை ஸ்தோத்தரித்துக் கொண்டிருந்தாயா என்று கேட்டார். இல்லை என்று பதிலளித்தான். அப்படியானால், ஜெப வேளையில் என்ன செய்தாய் என்று கேட்டார். அதற்கு அவன், என் மனதில் இருந்ததையெல்லாம் அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன் என்றான். ஜெபம் என்றாலே, அதைத்தாரும் இதைத் தாரும் என்று கேட்பதையே பழக்கமாகக் கொண்டிருந்த தந்தைக்கு, அது ஆச்சரிய மாயிருந்தது.

ஆம், புதிய ஏற்பாட்டு சத்தியத்தின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, ஜெபம் என்பது வெறுமனே கர்த்தரிடம் விண்ணப்பிப்பது அல்ல. அது தேவனோடு நாம் பேசிக்கொண்டிருக்கும் ஒரு அனுபவமே. ஜெபம் என்பது ஒரு அதிகாரியிடமோ அமைச்சரிடமோ எதையோ கேட்டு விண்ணப்பிப்பது போல் அல்ல. நம்மை பிள்ளை களாக அழைத்த தேவனை, தகப்பன் என்ற உணர்வோடு நாம் அணுகி அவரிடம் பேசுவதாகும். ஜெபத்தின் முதலாவது நோக்கம் தேவ உறவை நமக்குள் உணர்ந்து அனுபவிப்பதாகும்.

நாம், நம்முடைய மனதில் உள்ளவைகளை தேவனிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம், நம்முடைய எண்ணங்களைத் தேவனோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம், நமது அபிலாஷைகளை தேவனோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம், நமது நிலமைகளை தேவனோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். தருவீராக, செய்வீராக, கட்டளையிடுவாராக, இப்படி நடப்பதாக, அப்படி நடப்பதாக என்று அதிக சத்தத்தோடு ஆணித்தரமாகச் சொன்னால்தான் கர்த்தர் செய்வார் என்று எண்ணக்கூடாது. நம்முடைய நிலமைகளையெல்லாம் தகப்பனிடம் சொல்வது போல சொல்வதே வல்லமையான ஜெபம் ஆகும்.

இன்று அநேகர் மேடைகளிலும், சபைக் கூடுகைகளிலும், ஜெபக் கூடுகை களிலும் நாடகத்தில் பேசுவதைப் போல பேசி, ஜெபிப்பதைப் பார்த்து அதையே பலர் பின்பற்றுகின்றனர். போதகர்கள் ஜெபிப்பதைப் போல அல்ல. பாஸ்டர்கள் ஜெபிப் பதைப் போல அல்ல. சுவிசேஷகர்கள் ஜெபிப்பதைப் போல அல்ல. பிள்ளைகள் பேசுவதைப் போல பேசுங்கள். கதை வசனம் பேசி நடிகர்கள் நடிப்பது போல அல்ல. தாழ்மையோடும், அமைதியோடும், மனதை உள்ளபடியே வெளிப்படுத்தி

சிந்தனைக்கு...

கண்களால் பார்க்க இயலாத தேவனை இருதயத்தால் பார்த்து உறுதிப்படுத்தும் நேரமே ஜெப நேரம்.

ஆகஸ்ட்
19
ஜீவ நீரோடை

உறவுகளை மகிழ்விக்க

நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்... ரூத் 3:11

ரூத் 3:1-11

அவர் நகைச்சுவையாகப் பேசி எவரையும் கலகலவென்று சிரிக்க வைக்கும் ஆற்றல் உடையவர். அவர் வாய் திறந்தாலே அங்கிருக்கும் எவரும் கவலை மறந்து சிரித்து விடுவார்கள். எவரையும் சிரிக்க வைக்கும் உங்கள் குடும்பம் பற்றி ஏதாவது சொல்லுங்கள் என்று ஒருமுறை அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், என்னால் எவரையும் சிரிக்க வைக்க முடியும், என் குடும்பத்தைத் தவிர என்றாராம். ஏனென்றால், அரங்கத்தில் எவரையும் சிரிக்க வைக்கும் அவருடைய நகைச்சுவைத் திறமை செயல்பட்டது. அவரது குடும்பத்திலோ அவருடைய சுபாவங்கள் செயல்பட்டது. அது எவரையும் மகிழ்விக்கும் சுபாவங்கள் அல்ல.

ஒரு போதகர் பிரசங்கிக்கும் போது, சபையார் யாவரும் சோர்வுகளை மறந்து அவருடைய வார்த்தைகளால் மிகவும் உற்சாகமாகிவிடுவார்களாம். ஆனால், பாஸ்டரம்மா என்று அழைக்கப்படும் அவருடைய மனைவி மட்டும், குட்டியைப் பறிகொடுத்த குரங்கு போல சோகமயமாக இருப்பாராம். ஏன் அப்படி என்று கேட்டால், பாஸ்டர் வீட்டில் பேசுகிற வார்த்தைகள் அவருடைய பிரசங்க வேளையில் ஞாபகத்தில் வந்து விடுகிறது என்பாராம். ஆம், ஒருவர் தன்னுடைய பல்வேறு திறமைகளினால் ஜனங்களைப் பலவிதங்களில் மகிழவைக்கலாம். நம்முடைய பல்வேறு ஆற்றல்களினால் மேடைகளில் நாம் பலரைப் பரவசப்படச் செய்யலாம். ஆனால், நம்மிடம் நல்ல சுபாவங்கள் இல்லாவிட்டால், நம்முடைய உறவு வட்டத்தில் இருப்பவர்களை மகிழச் செய்ய முடியாது.

ஒரு பெரிய தொழிலதிபர், தன்னுடைய கம்பெனியில் வேலை பார்க்கும் பலருக்கு பல சலுகைகளைக் கொடுத்து, அவர்களுக்கு ஒரு இரட்சகர் போல தோன்ற முடியும். ஆனால், தன்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களை சலுகைகளால் மகிழ்விக்க முடியாது. நல்ல பண்புகளினால்தான் தன்னுடைய உறவு வட்டத்தில் உள்ளவர்களை மகிழ்விக்க முடியும். எனவே, நமக்கு எவ்வளவு திறமைகள் இருந்தாலும், நம்முடைய சுபாவங்கள்தான் நம்முடைய வாழ்க்கைக்கு மகிழ்ச்சியைத் தர முடியும்.

திறமைகளை மனிதன் வளர்த்துக் கொள்ள முடியும். நல்ல சுபாவங்களை அவன் சுதந்தரிக்க வேண்டும். நல்ல திராட்சைச் செடியாகிய இயேசுவோடு கொடிகளைப் போல நாம் பிணைந்திருந்தால், நம்மிடம் நல்ல கனிகள் தோன்றும். அன்பு, தாழ்மை, பொறுமை, மனத்தூய்மை, சாந்தம், சமாதானம் போன்ற உயர் பண்புகளை கர்த்தரோடுள்ள ஐக்கியங்களை வளர்த்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது குடும்ப உறவுகள் ஆசீர்வாதமாயிருக்கும்.

சிந்தனைக்கு...

திறமைகள் பலரைப் பாராட்டத் தூண்டும்.
நற்குணங்கள் சிலரைச் சிந்திக்கத் தூண்டும்.

ஆகஸ்ட்
20
ஜீவ நீரோடை

கவலை

கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்... சங்கீதம் 118:6

சங்கீதம் 118:1-29

கவலை என்பது, எதிர்மறையான சிந்தனைகள் நம்முடைய மனதைத் தொடர்ந்து அழுத்திக் கொண்டிருப்பதால் உணருகின்ற அசௌகரியமாகும். ஒருவருக்குச் சந்தோஷமாயிருப்பதற்கு ஏதுவான பல காரியங்கள் இல்லாமல் இல்லை. ஆனால், அவரால் அவற்றைச் சந்தோஷமாக உணர இயலவில்லை. சிலருடைய குடும்பங்களில் பணம், வசதிகள், நல்ல உணவு, நல்ல உடைகள், என பல காரியங்கள் இருக்கும். ஆனால், அவர்களால் சந்தோஷமாயிருக்க முடியாது. அவர்களின் மனதை கவலைகள் அழுத்துவதால், அவர்களால் அவற்றை அனுபவித்துச் சந்தோஷப்பட இயலாது.

ஒரு ஓவியன் இரண்டு படங்களை வரைந்து, பக்கம் பக்கமாக வைத்தான். ஒரு படத்தில், ஒரு ஏழை சிறுவன் ஒரு ரொட்டியை மிக மிகச் சந்தோஷத்தோடு ருசித்து சாப்பிடுகிறான். இன்னொரு படத்தில், ஒரு பெரிய பணக்காரன். அவனுக்கு முன்னால் மேசை முழுவதும் விதவிதமான சுவை உணவுகள். ஆனால், அவனோ மிகுந்த துக்கத்தோடு அந்த மேசைக்கு முன்பாக உட்கார்ந்திருக்கின்றான். வித்தியாசமென்ன? கவலையற்ற ஏழை, ரொட்டித் துண்டினால் மிகுதியாகச் சந்தோஷப்படுகிறான். கவலை மிகுந்த பணக்காரனை, அத்தனை உணவுகளும் சேர்ந்து கொஞ்சம்கூட மகிழ்விக்க முடியவில்லை.

கவலை மனதை அழுத்த ஆரம்பித்துவிட்டால், எதுவுமே நமக்கு இனிமையாயிராது. கவலையின் காரணம், ஏதோ ஒன்றோ பலவோ நமக்கு எதிராக இருப்பதாக நாம் எண்ணுவதுதான் என்று நாம் எண்ணலாம். ஆனால், உண்மைக் காரணம் அதுவல்ல. நாம் தனியாக நிற்கின்றோம் என்ற ஒருவிதமான உணர்வுதான் கவலையின் மிகப்பெரிய காரணம். நாம் தனித்து விடப்பட்டது போல உணருவதுதான், கவலையைப் பன்மடங்காக்குகின்றது.

பிரச்சினைகள் நீங்கினால், கவலை போகும் என நாம் எண்ணலாம். அச்சுறுத்தும் ஏதோ ஒன்று அகன்று போனால், கவலை காணாமல் போகும் என்று நாம் நினைக்கலாம். ஆனால், ஒரு பிரச்சினை நீங்கினால் இன்னொரு பிரச்சினை வரும். ஒரு விஷயம் சரியானால் இன்னொரு விஷயம் வரும். நாம் முதலாவது தேவ உறவினை நமக்குள் பெற வேண்டும். நம்மோடு வலிமையான ஒரு தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அனுதின வாழ்வில் கர்த்தருடைய பிரசன்னத்தில் வாழும் நிச்சயத்திற்கு வந்துவிட்டால், கவலைகளின் ஆளுமை போய்விடும்.

சிந்தனைக்கு...

கர்த்தரை நீ நெருங்கிக் கொண்டேயிரு,
கவலைகள் உன்னை நெருக்கிக் கொண்டிருக்க இயலாது.

ஆகஸ்ட்

21

ஜீவ நீரோடை

இது பெரிய தவறு

நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்க...
சங்கீதம் 50:16

சங்கீதம் 50:1-23

கிறிஸ்தவர் ஒருவருக்கு அவர் வேலை செய்யும் இடத்தில் கெட்ட பெயர். கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் கெட்ட பெயர். தன்னுடைய உறவினர்களின் நடுவில் கெட்ட பெயர். தன்னுடைய குடும்பத்தில் கெட்ட பெயர். இவர் நல்லதாக எதையாவது செய்வதாக யாரும் நற்சாட்சி தருவதில்லை. ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் அவர் நல்லதைச் செய்வதாக ஒருவர் கூறினாராம். அது என்ன என்று கேட்டபோது, அவர் ஒரு கிராம திருச்சபையில் கேட்ட கீஸ்ட் என்ற பொறுப்பில் சபை ஊழியர் பணி செய்கிறார் என்றாராம். அது கிராம திருச்சபையில் போதகராகச் செயல்படும் வேலை. அதனைக் கேட்ட மற்றவர், அவர் செய்கின்ற எல்லா தவறை விட இப்படி ஒரு சபைக்குப் போதகராயிருப்பது பெரிய தவறாயிட்டே என்றாராம்.

உண்மைதான். மருத்துவருக்குரிய திறன் இல்லாதவர் மருத்துவம் பார்ப்பது தவறு. கற்றுக் கொடுக்கும் திறமை இல்லாதவர் ஆசிரியராயிருப்பது தவறு. வீடு கட்டுவது எப்படி என்று தெரியாதவர் வீடு கட்டச் செல்வது தவறு. அதுபோல, கர்த்தருக் கேற்ற சாட்சியில்லாதவர் போதகர் பணிக்குச் செல்வது தவறு. தன்னுடைய தனிப் பட்ட வாழ்க்கையில் சரியாக வாழ்வதற்கான தேவ கிருபையைப் பெற்று செயல் படாதவர், மற்றவர்களுக்கு பரிசுத்தத்தைக் குறித்துப் போதிப்பதற்குத் தகுதியானவர் அல்ல. ஒருவர் கிறிஸ்தவராக எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழாமல் போனால், மற்றவர்களைக் கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழச் சொல்வதற்கு எந்தத் தகுதியும் இல்லை.

பாவிகளாக வாழ்கின்றவர்கள்மேல் தேவன் பரிதாபப்படுவார். அவர்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற்று வர வேண்டுமே என்று அக்கறைப்படுவார். ஆனால், பாவியாக இருந்து கொண்டு பரிசுத்த விஷயங்களைப் பேசுகின்றவர்கள் மேல் தேவன் கோபப்படுவார். ஏனென்றால், அறியாமல் பாவிகளாயிருப்பது வேறு. ஆனால், பலருக்கு நல்லதைப் போதித்துக் கொண்டே பாவியாயிருப்பது வேறு.

பாவியாயிருந்து கொண்டே நான் பரிசுத்தத்தைப் போதிப்பேன் என்று கூறு கின்ற செயல் துணிகரம். அநேகர் திருச்சபை சார்ந்த சில பணிகளைச் செய்வது, தேவனுக்கு ஊழியம் செய்யக் கிடைத்த வாய்ப்பு என எண்ணுகின்றனர். கமிட்டி உறுப்பினர், செயலாளர், பொருளாளர், ஜெபக் குழுத் தலைவர், ஞாயிறு பள்ளி ஆசிரியர், பாடற்குழுத் தலைவர், இசைக்கருவி இசைப்பவர் என எந்த ஒரு பணி செய்தாலும், கிறிஸ்தவ அடிப்படைத் தகுதியான இரட்சிப்பின் அனுபவம் இல்லாமல் செய்வது பாவமாக மாறும்.

சிந்தனைக்கு...

கர்த்தரைக் குறித்து நமக்குத் தெரிந்ததைப் பேசுவது அல்ல.
கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டதால் பேசுவதுதான் பிரசங்கம்.

பண ஆசை சரியா?

அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன்...
2 இராஜாக்கள் 5:20

2 இராஜாக்கள் 5:14-27

பண ஆசை தவறல்ல. பொருளாசை தவறல்ல. எப்பொழுது? தேவ வழியில் நடக்க வேண்டும் என்ற ஆசை வாழ்க்கையின் முதலிடத்தில் இருக்கும்போது. பணம் அதிகமாகச் சம்பாதிக்க விரும்புவது தவறல்ல. பொருட்களை அதிகமாகப் பெற்றிட விரும்புவது தவறல்ல. எப்பொழுது? தேவனுக்கேற்ற நற்சாட்சியைச் சம்பாதிப்பது வாழ்க்கையின் முதலிடத்தில் இருக்கும் போது, பணத்திற்காக பொருளுக்காக, அந்தஸ்திற்காக தேவ வழியை விட்டு விலகி வரமாட்டேன் என்ற நிலைப்பாடு உடையவனை, பண ஆசையோ பொருளாசையோ மேற்கொள்ளாது.

பணம், பொருள் போன்றவை சுவை மிகுந்த உணவைப் போன்றவை. அவை ஒருவரை எளிதாகச் சோதனைக்கு உட்படுத்தும். இயற்கையாக மனிதனை அவற்றின்மேல்,அதிகமாக ஆசை கொள்ளச் செய்யும். ஆனால் தேவனுடைய வழிகள், தேவனுடைய வார்த்தைகள், என்பவை ஆரோக்கியமான சத்துணவு போன்றவை. அவை இயற்கையாக மனிதனை ஈர்க்கும் தன்மையில் பலவீன மானவை. ஆனால், அவற்றைச் சுவைத்து நல்ல ஆரோக்கியத்தை அனுபவித் தவர்கள், வேறெந்தச் சுவை சோதனையிலும் சிக்கிக் கொள்ளமாட்டார்கள்.

எலிசாவை நாகமானின் பணமோ பொருளோ தேவ வழியை விட்டு விலக வைக்க முடியவில்லை. ஏனென்றால், தேவ வழிகளில் நடப்பதினாலும் தேவ வார்த்தைபடி வாழ்வதினாலும் வருகின்ற ஆத்தும திருப்தியை அவன் அனு பவித்துப் பழகியிருந்தான். எனவே பணமோ, பொருளோ அவனை இச்சித்து இழுத்து பாதை தவறச் செய்யவில்லை. ஆனால், எலிசாவின் உதவியாளனாகிய கேயாசிக்கு நாகமானின் பணம் பொருள் பெரிய சோதனையைக் கொடுத்தது. அவற்றை வேண்டாம் என்று நினைக்க அவனால் இயலவில்லை. ஏனென்றால், சத்தியத்தின்படி வாழ்வதினால் இருதயத்திற்குக் கிடைக்கின்ற ஒரு பெரிய நிறை வையும் சந்தோஷத்தையும் அவன் அறிந்திருக்கவில்லை.

சிலருக்கு, தேவ பக்தி உண்டு. பரிசுத்த ஆர்வம் உண்டு. ஆனாலும் பணம், பொருள், உலகம் ஆகியவை தருகின்ற உணர்ச்சிகரமான ஆசைகளால் இழுக்கப் படாமல் இருக்க முடிவதில்லை. ஏனென்றால், அவர்கள் தேவ உறவு என்பதை அறிந்திருந்தாலும், அந்த உறவிற்குள் ஆழமாகச் செல்லாமல் வெறும் பக்தி வாழ்க்கையோடு நின்று விடுவார்கள். எனவே, பணம் பொருள் போன்றவைகளைக் குறித்த ஆசைகள், அவர்களை எளிதாக இழுத்து, தேவ வழிகளை விட்டும், தேவ வார்த்தைகளை விட்டும் விலகிப் போக வைத்துவிடும்.

சிந்தனைக்கு...

தேவ உறவின்மேல் ஆசை அதிகமாக இல்லாவிடில், பணத்தின்மேல் ஆசை அதிகமாயிருப்பது இயல்பானதே.

ஆகஸ்ட்
23
ஜீவ
நீரோடை

சற்று நேர மனநிலை

நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு...
கொலோசெயர் 2:4

கொலோசெயர் 2:1-15

பெரும்பாலும் தங்களுக்கு சில மணி நேரம் உற்சாகமாயிருக்க, எதை யாவது செய்கின்றவர்களையே மக்கள் விருப்பத்தோடு பின் தொடருகின்றனர். சினிமா, நாடகம், பாட்டு கச்சேரி, சர்க்கஸ், பட்டிமன்றம், கருத் தரங்கம், என்பது போன்ற நிகழ்ச்சிகள்தான் ஜனங்களை அதிகமாக ஈர்க்கின்றன. இதுபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பித்து, ஜனங்களை சில மணிநேரங்கள் ஒரு வித்தியாசமான மனநிலையில் வைக்க இயன்றவர்கள்தான், வேகமாகப் பிரபலமடைகின்றனர். இவற்றிற்குத் திறமைகளும் தாலந்துகளும் தேவைப்படு கின்றன. ஆனால், இவற்றால் ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்குக் குறிப்பிடத்தக்க எந்தப் பலனும் கிடைப்பதில்லை.

ஆனால், சத்தியப் போதனைகள் அப்படி அல்ல. தேவ வழியில் நடப்பதற்கு ஏதுவான உபதேசங்கள் அப்படி அல்ல. அவை கேட்கின்ற இடங்களோடு முடிந்து போவதில்லை. அவை, ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் உயர்வுக்கும், மகிமை க்கும் உதவி செய்து, அவனைச் சரியான அஸ்திபாரத்தின்மேல் நிறுத்தும். இது போன்ற தேவ வார்த்தைகளை தேவ சமுகத்தில் காத்திருந்து பெற்றுத் தரு கிறவனே தேவ ஊழியன். இவன் ஒரு சில மணிகள் ஜனங்களைக் குறிப்பிட்ட ஒரு மனநிலையில் வைக்கின்றவன் அல்ல. அவன், ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையைச் சீர்செய்யவும், வலிமையாக்கவும் உதவுகின்றவன்.

ஆனால், இவர்களின் பணிக்குக் கவர்ச்சியில்லை. இவை அநேகரைக் கவருவதில்லை. இவர்களைப் பெருந்திரள் பின் தொடருவதில்லை. இயேசு ஜனங்களுக்கு அப்பம் தருவார் என்ற எதிர்பார்ப்பில் பல்லாயிரங்கள் வந்தனர். ஆனால், நித்திய வாழ்விற்கான உணவைக் குறித்து அவர் பேசினபோது, பின்பற்ற பெருந்திரள் வரவில்லை. ஏனென்றால், ஜனங்கள் தற்போதைய தங்கள் மனநிலையை உற்சாகப்படுத்த என்ன கிடைக்கிறது என்பதையே பார்க்கின்றனர்.

எனவே, இன்று எல்லாம் மாறிவிட்டன. சபை கூடுகை நிகழ்ச்சிகள், ஆராதனை, நிகழ்ச்சிகள், ஜெப நிகழ்ச்சிகள், பிரசங்க நிகழ்ச்சிகள் என பல விஷயங்கள் மாறி விட்டன. இவையாவும் இன்று பிற பொழுது போக்கு நிகாழ்ச்சிகளைப் போல மாறிவிட்டன. கூடி வருகின்ற இடங்களில் ஒருமணிநேரமோ இரண்டு மணிநேரமோ மட்டும், ஒரு குறிப்பிட்ட மனநிலையில் ஜனங்களை வைத்திருக்கும் நோக்கில் எல்லாம் செய்யப்படுகின்றன. அந்த இடங்களைக் கடந்து போனபின்பு அவற்றால் ஜனங்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

சிந்தனைக்கு...

கொஞ்ச நேரம் உங்களை உற்சாகப்படுத்துவது அல்ல,
நீண்ட காலம் உங்களை உறுதியாக நிற்க வைப்பதே தேவ வார்த்தை.

ஆகஸ்ட்

24

ஜீவ நீரோடை

பக்தியோடு பாவம்

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல்...
2 தீமோத்தேயு 1:7

2 தீமோத்தேயு 1:1-14

சிலர், பாவங்கள் பல செய்து கொண்டிருப்பார்கள். ஒரு நாள், பக்தியாய் வாழ விரும்பி பாவத்தோடு வாழ்வதை விட்டு விடுவார்கள். சிலர், பக்தியோடு வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஒரு நாள் பாவத்தை எதிர்த்து நிற்கும் வலிமை யில்லாதவர்களாய், தங்களை உணர்ந்து பக்தியாய் வாழ்வதை விட்டுவிடுவார்கள். ஆனால், சிலர் வித்தியாசமானவர்கள். இவர்கள் பக்தியாய் வாழ்ந்தாலும் பாவத்தை விட இயலாதவர்கள். அவர்கள் பாவத்தில் விழ நேர்ந்தாலும் பக்தியை விட்டுவிட இயலாதவர்கள். ஒரே நேரத்தில் இவர்களை பாவமும் விட மறுக்கின்றது, பக்தியும் விட மறுக்கின்றது.

எனக்கு ஒருவரைத் தெரியும். அவர் நல்ல பக்தி வாஞ்சையுள்ளவர். இயேசு கிறிஸ்துவின்மேல் உணர்ச்சிகரமான அன்பு உடையவர். அந்த உணர்வோடு ஆராதனைகளிலும், பக்திக் கூட்டங்களிலும், ஜெபக் கூட்டங்களிலும் கலந்து கொள்வார். தாராளமாகக் காணிக்கை கொடுப்பார். ஆனால், ஒரு தவறான பழக் கத்தினால் அடிக்கடி தேவனுக்குப் பிரியமற்ற முடிவு எடுத்துச் செயல்படுவார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு தான் செய்தது தவறு என்று உணர்ந்து, பக்தி வாழ்க்கையை மறுபடியும் தொடங்குவார். ஆனால், இன்று வரையிலும் அவர் பாவத்தையும் ஜெயித்ததாக இல்லை. இயேசுவை விட்டுவிட்டதாகவும் இல்லை. அதாவது கர்த்தரை ஆராதிக்கும் பக்தியை விடவில்லை.

இவருடைய பக்தி இயேசுவின்மேல் கொண்ட அன்பையோ அல்லது இயேசு வால் அனுபவித்த அன்பையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. இது ஒருவித மான பயத்தின் விளைவு. இயேசு கிறிஸ்துவுக்காக வாழாவிட்டால் தனக்கு ஏதாவது பொல்லாப்பாக நடந்துவிடுமோ என்ற ஒரு அச்சம் அவரைப் பிடித்துள்ளது. எனவே, இவர் இயேசு பக்தியை விடவில்லை. அதே வேளையில் இயே சுவைக் குறித்த அச்சம், பாவத்தை மேற்கொள்வதற்கு இவருக்கு வலிமை தரவில்லை.

கர்த்தரைக் குறித்த பயத்தைக் கொண்டு இச்சை சார்ந்த பாவங்களை மேற்கொள்ள முடி ய யயாது. எனவே, எவ்வளவுதான் இயேசுவுக்காகப் பக்தியாக வாழ விரும்பினாலும், பாவத்தைச் ஜெயித்து வாழ முடியவில்லை. அவ்விதமே பாவத்தில் விழுந்தாலும், ஒரு பயத்தின் காரணத்தினால் இயேசுவைக் குறித்த பக்தியை விட முடியவில்லை. ஆம், இயேசுவைக் குறித்த பயம் நிறைந்த பக்தி அல்ல. அன்பு நிறைந்த பக்தி வேண்டும். இயேசுவின் அன்பால் ஈர்க்கப்பட்டு, அவர் மேல் பக்தி வைத்தாலன்றிப் பாவத்தை விடுவதும் கஷ்டம், பக்தியை விடுவதும் கஷ்டம்.

சிந்தனைக்கு...

இதுவரை இயேசுவைச் சத்தியத்தின்படி அறியாததே திரும்பத் திரும்ப பாவத்தில் விழ நேரிடுகிறது.

பிரிவதை தவிர்ப்போம்

அன்பு சகலத்தையும் சகிக்கும்...
1 கொரிந்தியர் 13:7

1 கொரிந்தியர் 13:1-13

கணவன் மனைவிக்கிடையே பிரச்சினை ஏற்பட்டது. கணவன் சரியில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாகயிருந்தது. கணவன் அன்பற்றவர், பொறுப்பற்றவர், பிரச்சினை ஏற்படுத்துகிறவர், தவறான வழிகளை விட்டு விலகி வர மறுப்பவர் என்ற மனைவியின் குற்றச்சாட்டு உண்மையானதே. இறுதியில் கணவனை விவாகரத்துச் செய்ய மனைவி முடிவு செய்தாள். அவள் விவாகரத்துக் கேட்டது எல்லோருடைய பார்வையிலும் நியாயமாகவேபட்டது. ஆனால், ஒரே ஒருவர் மட்டும் வித்தியாசமான ஒரு கருத்தைச் சொன்னார். விவாகரத்து கேட்கும் உன்னுடைய நியாயம் மிக மிகச் சரியானது. ஆனாலும், விவாகரத்து உன்னுடைய எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்றார். அவள் அதைக் கேட்கவில்லை. ஆனால், அவர் சொன்னபடியே அவளுடைய எதிர்காலம் விவாகரத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது.

பல பெண்கள் தங்களின் கணவர்களை விட்டுப் பிரிந்து சென்றதற்கு நல்ல காரணங்கள் உண்டு. பல ஆண்கள் தங்கள் மனைவிகளை விவாகரத்துச் செய்ததற்கு நல்ல காரணங்கள் உண்டு. ஆயினும், அவர்கள் பிரிந்து சென்றதால் அவர்களுக்கு நன்மை ஏற்படாமல் தீமையே நடந்தது. வாழ்க்கையைத் தனித்து நின்று சந்திக்க இயலாமல் போனவர்கள் பலர். சிலருடைய திருமண வாழ்வில் ஏராளம் போராட்டங்கள் இருந்தது உண்மை. ஆனால், திருமணத்தை ரத்து செய்ததால் ஒரு விதமான போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டது. ஆனால், வேறுவிதமான போராட்டங்களுக்கு அவர்களை அது அழைத்து சென்றது. அவை முன்னரைவிட மிகவும் வியாகுலத்தைத் தந்தன.

சில நேரங்களில் நியாயங்களைப் பயன்படுத்தி முடிவுகள் எடுப்பது அல்ல. தேவனுடைய கிருபையைப் பெற்று போராட்டங்களைச் சந்திப்பதற்கு முன்வருவதே விவேகமானவை. அநேகர் தங்களுக்கு ஏற்பட்ட மனக்கஷ்டங்களைச் சகிக்க விரும்பாமல், உறவுகளை வெட்டினார்கள். பின்னரோ, தாங்கள் எடுத்த முடிவு தங்களுக்கு அதிகமான கஷ்டங்களைத் தந்ததையே கண்டனர்.

சில பிரிவுகள் தவிர்க்க இயலாதவை என்பது உண்மைதான். ஆயினும், பிரிந்து செல்லுதல்களைத் தவிர்க்க தேவ உதவியை நாடி இயன்றவரை பிரியாசப்பட வேண்டும். கர்த்தரோடுள்ள உறவுகளை ஆழமாக்கிக் கர்த்தருடைய ஐக்கியத்தினால் வருகின்ற தாங்கும் சக்தியைப் பெற வேண்டும். அதைக் கொண்டு சுமூகமற்றுப் போன குடும்ப உறவுகளைத் தக்க வைக்க வழிதேட வேண்டும்.சில உறவுகள் இன்று கசந்தாலும், நாளைக்குத் தேவ உதவியால் இனிமையாக வாய்ப்புண்டு. மாராவைத் தவிர்க்காமல், மதுரமாக்க வழிதேடலாம்.

சிந்தனைக்கு...

உறவுகள் சில உறுத்தல்களைத் தந்தாலும்
உறவு இல்லாத தனித்த வாழ்வு, அதைவிடச் சிறந்தது அல்ல.

ஆகஸ்ட்
26
ஜீவ நீரோடை

சுத்தமான கோப்பை

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு...
மத்தேயு 5:16

மத்தேயு 5:1-16

திருச்சபையைச் சேர்ந்த ஒருவர், தன்னை தவறுகள் அணுகாதபடியும், பாவங்கள் அணுகாதபடியும் இருக்கக் கவனமாயிருப்பார். ஒவ்வொரு நாளும் தான் தவறிவிடாமலும், பாவம் செய்யாமலும் வாழ்ந்து ஜெயிப்பதை டைரியில் குறித்து வைப்பார். தன்னுடைய சபை பாஸ்டரை சந்திக்கும் போதெல்லாம், தான் எந்தெந்த விதத்தில் பாவம் செய்யாமல் வாழ்வதைக் குறித்துப் பேசுவார். ஒரு நாள் அந்த நபர் தான் தவறேதும் செய்யாதபடி சாட்சியாக வாழ்வதைக் குறித்து சாட்சி சொல்ல பாஸ்டரிடம் வந்தார். அவர் வந்ததும் பாஸ்டர் அவருக்கு முன்பாக தேனீர் கோப்பையை வைத்தார். பாஸ்டர் தேனீர் தரப்போகிறார் என்று அவர் நினைத்தார். ஆனால், கடைசி வரை அந்த கோப்பையில் தேனீர் எதையும் பாஸ்டர் ஊற்றாமல், காலியாகவே வைத்திருந்தார்.

இறுதியில், பாஸ்டர் அவரிடம் இந்த தேனீர் கோப்பை எவ்வளவு சுத்தமாக இருக்கிறது பார்த்தீர்களா என்று கேட்டார். ஆனால், அந்த நபரோ எரிச்சலுடன் தேநீர் எதுவும் இல்லாத கோப்பை சுத்தமாயிருந்து என்ன பயன் என்று கேட்டார். அதற்கு அந்த பாஸ்டர், உங்கள் வாழ்க்கையும் பாவம் ஏதும் இல்லாமல் இருந்து என்ன பயன்? பரிசுத்தமான நல்ல விஷயங்களைக் குறித்து நீங்கள் ஒரு போதும் சாட்சி சொன்னதில்லையே என்றார். அந்த நபர் பாஸ்டர் சொன்னதைப் புரிந்து கொண்டார்

அநேகர் பரிசுத்தமான வாழ்க்கை என்றால் தவறுகள் இல்லாமலும், குற்றங்கள் இல்லாமலும், தப்பிதமான காரியங்கள் எதுவும் இல்லாமலும் வாழ்வது என்றே நினைக்கின்றனர். இது நல்ல வாழ்க்கைதான். ஆனால், சிறந்த வாழ்க்கை அல்ல. தவறேதும் செய்யாமல் ஜாக்கிரதையாய் வாழ்வது நல்லதே. ஆயினும், பரிசுத்த வாழ்க்கையென்றால் விசேஷமாக ஏதாவது இருக்க வேண்டும். ஒரு பொருள் சுத்தமாயிருப்பதால், அதனை யாரும் அருவருப்பாக உணரமாட்டார்கள். ஆனால், அதை யாரும் பாராட்டமாட்டார்கள். ஏனென்றால், அந்தப் பொருள் சிறந்ததென்று சொல்லும்படியாக அதில் எதுவும் இல்லை. அதுபோல, எல்லோரைப் போல தவறு களோடும் குறைகுற்றங்களோடும் வாழாமல், யோக்கியமாக வாழ்வது நல்ல விஷயம்தான்.

ஆயினும், நம்மிடம் ஆவிக்குரிய பரிசுத்த அழகு தோன்ற வேண்டும். நம்மிடம் அன்பின் செயல்கள் காணப்பட வேண்டும். நம்மில் நல்ல விசேஷமான வாழ்க்கை முறைகள் காணப்பட வேண்டும். நம்மிடம் பாவங்களைப் பார்க்க வாய்ப்பில்லை என்ற நிலைமை மட்டும் போதாது.

சிந்தனைக்கு...

தீமை செய்யாதவர்களாக நம்மைப் பார்ப்பது,
நன்மை செய்கிறவர்களாக பலர் நம்மைப் பார்ப்பதே சாட்சி.

ஆகஸ்ட்
27
ஜீவ நீரோடை

தேவன் விரும்புவது என்ன?

வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.
எபேசியர் 5:8

எபேசியர் 5:1-21

அநேகர் தங்களை ஒடுக்கி ஒடுக்கித் தாழ்மைப்படுத்தும் ஒரு வாழ்க்கை முறையில்தான் தேவன் பிரியமாயிருக்கின்றார் என்று எண்ணுகின்றனர். என்னை அதிகமாகச் ஜெபிக்கின்றவனாகவும், அதிகமாக உபவாசம் செய்து சரீரத்தை சிரமப்படுத்துகிறவனாகவும் பார்க்கவுமே தேவன் விரும்புகின்றார் என்றே பலர் எண்ணுகின்றனர். வேலையை விட்டுத் தொழிலை விட்டு, குடும்ப உறவுகளை விட்டு நட்பு வட்டாரங்களை விட்டு, கர்த்தரே போதும் என்று வந்து விடும் நிலமை தான் கர்த்தரை மகிமைப்படுத்துகின்றது என்று பலர் நினைக்கின்றனர். மிக மிக எளிமை யான உடைகள், மிக மிகச் சாதாரண உணவுகள், மிக மிக அற்பமான தங்கு மிடம் இப்படி வாழ்ந்தால் தேவன் அதைப் பார்த்து ரொம்ப சந்தோஷப்படுவார் என்று எண்ணுகின்றோம்.

கர்த்தருக்கேற்ற வாழ்க்கை வாழும்போது தேவனுடைய நோக்கங்களை நிறை வேற்றுவதற்காக சுய வெறுப்பு, தாழ்மை, எளிமையான அணுகுமுறை, தியாகம், சுகபோகப் பிரியம் வெறுத்தல், ஆடம்பரத் தவிர்ப்பு போன்றவை தேவைப்படுவ துண்டு. ஆனால், ஆழமான அல்லது ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை என்பது சுயவெறுப்பு, எளிமை, தியாகம், நம்மை சிரமப்படுத்தி வாழ்தல் ஆகியவை தான் என்று எண்ணிவிடக்கூடாது. தேவன் நம்மைப் பார்க்கும் போது எவ்வளவு அற்பமாக வாழ்கின்றோம் என்பதையோ, எப்படி ஒடுக்கிக் கொண்டு வாழ்கின்றோம் என்பதையோ அல்ல. அவருடைய நாமத்திற்குப் புகழ்ச்சியாக நாம் எந்த அளவு வாழ்கின்றோம் என்பதையே பார்க்கின்றார்.

ஒரு துறவித்தனமான வாழ்க்கையை அல்ல. ஒரு சன்னியாசித்தனமான வாழ்க்கையை அல்ல. கர்த்தர் ஒரு பரிசுத்த ரகமான வாழ்க்கையே விரும்பி எதிர் பார்க்கின்றார். நாம் நம்முடைய சுபாவங்களால் எப்படி அறியப்படுகின்றோம் என்பதே முக்கியம். நாம் நம்முடைய செயல்களால் எப்படி காணப்படுகின்றோம் என்பதே முக்கியம். நாம் நம்முடைய உறவுகளிலும் தொடர்புகளிலும் எப்படியிருக்கின்றோம் என்பதையே தேவன் பார்க்கின்றார்.

காவி உடைகளோடும், தாடி மீசை தனித்துவங்களோடும், வெள்ளை வெள்ளை தோற்றங்களோடும் காணப்பட விரும்புவது அவரவருடைய மனதிருப்திக் காகவே. ஆனால், ஜனங்களின் நடுவில், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற அந்தஸ்துக்கேற்ற விதமாக நல்ல சாட்சியோடும், உயர்ந்த ரகமான ஒரு வாழ்க்கை முறையோடும் வாழ்வதே, தேவன் நம்மிடம் பார்க்க விரும்புவதாகும்.

சிந்தனைக்கு...

உடைகளாலும் தோற்றங்களாலும் பக்தியைக் காட்டாதே
உண்மை நிறைந்த ஒரு வாழ்க்கையினாலே அதைக் காட்டு.

ஆகஸ்ட்
28
ஜீவ நீரோடை

யார் பயன்படுவார்?

பொல்லாத இருதயம், ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு... எபிரெயர் 3:12

எபிரெயர் 3:1-19

ஒருவரிடம் நிறையப் பணம், அறிவு, ஞானம், நிர்வாகத் திறன், பாடல், தாலந்து, பேச்சாற்றல், சிந்தனைத் திறன், சாதிக்கும் திறன் இப்படி ஏராளம் திறமைகள் காணப்படலாம். ஆனால், இவை எதையும் சார்ந்து ஒரு மனிதனை தேவன் பயன் படுத்துவதில்லை. இப்படிப்பட்ட தாலந்துகளும், திறமைகளும் உடையவர்கள் தேவ ஊழியங்களில் அதிகமாகக் காணப்படலாம். தேவ ஊழியர்கள் என்ற நிலமையில் அவர்கள் மேற்கண்ட திறமைகளுக்காக அறியப்படலாம். ஆயினும், அவர்களைத் தேவன் பயன்படுத்துகின்றார் என்று கூற இயலாது.

தேவன் யாராயிருந்தாலும் அவர்களின் மனம் எப்படிப்பட்டதாக இருக் கின்றதோ அதனுடைய அடிப்படையிலேயே அவர்களைப் பயன்படுத்துகின்றார். எல்லாத் திறமைகளும் தாலந்துகளும் தேவனால் பயன்படுத்தப்படும். ஆயினும், முதலாவது அவர்களின் மனம் ஆவிக்கேற்ற மனமாயிருக்க வேண்டும். ஆவிக் கேற்ற மனம் ஆவிக்கேற்றபடி சிந்திக்கும். பரிசுத்தத்தை அது முதலிடத்தில் வைக்கும். தேவ உறவை அது தேடும். தேவ வார்த்தைகளை அது விரும்பும். தேவ நோக்கங் களை வேறெல்லாவற்றையும்விட மேன்மையாக எண்ணும். தேவ வழிகளிலே அந்த மனம் வாஞ்சையாயிருக்கும். எனவே, அந்த மனதை உடையவர்களைத் தான் தேவன் பயன்படுத்துவார்.

ஒருவருடைய இயற்கைத் தாலந்துகளையோ அல்லது பயிற்சிகளால் பெற்ற திறமைகளையோ அல்லது ஆன்மிகத் தோற்றம் கொண்ட செயல்களையோ பார்த்து தேவன் அவர்களைப் பயன்படுத்துவதில்லை என்பது சாத்தானுக்குத் தெரியும். எனவே, இது போன்ற தாலந்துகளையும், திறமைகளையும் உடையவர்கள் தேவ ஊழியர்களாக இருக்கும் போது, அவர்களின் செயல்களைச் சாத்தான் தொந்தரவு செய்வதில்லை. அவர்களின் மனம் ஆவிக்கேற்றதாக இல்லாவிட்டால் தேவதிட்டம் ஒன்றும் அவர்கள் வழியாக நிறைவேறப்போவதில்லை என்பது அவனுக்குத் தெரியும்.

ஆனால், யார் ஆவிக்குரிய மனம் உடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்களின் மனதைப் பாதிப்பதற்கு என்ன செய்யலாம் என்றுதான் அவன் யோசிப்பான். எனவே பண ஆசை, பொருளாசை, அந்தஸ்து ஆசை, வெறுப்புணர்வு, கசப்புணர்வு, உலக ஆடம்பரம், இச்சைகள் இப்படி ஏதாவது ஒன்றினால் அவர் களின் மனதைப் பாதிக்க அவன் முயற்சி செய்வான். எனவே, இது போன்ற சோதனை களில் சிக்கி விடாதிருக்க எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனால் பண்படுத்தப்பட்ட இருதயம் இல்லாதவனின் பலவிதத் தாலந்துகள், தேவனுக்குப் பயன்படாது.

ஆகஸ்ட்
29
ஜீவ நீரோடை

வெறுப்புணர்வு

பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே...
சங்கீதம் 37:1

சங்கீதம் 37:1-16

கோப உணர்வு, வெறுப்புணர்வு, கசப்புணர்வு, வைராக்கிய உணர்வு ஆகியவை ஒருவருடைய ஆவிக்குரிய மனதைப் பாதித்து தேவனுக்குப் பிரயோஜன மற்றதாக்கிவிடும். இப்படிப்பட்ட எதிர்மறையான உணர்வுகளால் மனதில் பாதிக்கப் பட்டு, ஆவிக்கேற்றபடி செயல்பட இயலாமல் போகும்போது, அங்கே யாரும் தேவனுக்குப் பயன்பட முடியாது. எனவே, தேவனுக்குப் பயன்பட வேண்டும் என்ற ஆவிக்குரிய வாஞ்சையுடையவர்களின் மனதை கோப உணர்வுகளாலும், வெறுப்புணர்வுகளினாலும், வைராக்கிய உணர்வுகளினாலும் பாதிப்பதற்கு சாத்தான் வழி தேடித் திரிவான்.

தேவனுடைய பிள்ளைகள் தேவ ஆவியால் நடத்தப்படும்போது, அவர்களாக வலியப் போய் யாரையும் கோபப்படுத்தமாட்டார்கள். அவர்களாக வலியப் போய் யாரையும் வெறுக்கமாட்டார்கள். அவர்களாக வலியப் போய் யாரையும் கசக்க மாட்டார்கள். ஆனால், இவர்களைக் கோபமூட்டவும், வெறுப்பூட்டவும், வைராக்கிய மூட்டவும், கசப்பூட்டவும் சாத்தான் யாரையாவது எழுப்புவான். அவர்களின் அநீதி யான அக்கிரமமான செயல்பாடுகளால், இவர்களுக்குள் கோப உணர்வும், எரிச்சலுணர்வும், வெறுப்புணர்வும் ஏற்படும்.

யோசேப்பு யாரையும் வலியப்போய் வெறுக்கவோ, விரோதிக்கவோ, கசக் கவோ செய்யவில்லை. ஆனால், யோசேப்பின் சகோதரர்கள் சாத்தானால் தூண்டப் பட்டு அவனுக்குப் பல அக்கிரமமான காரியங்களைச் செய்தார்கள். எனவே, யோசேப்பு கோப உணர்வும், வெறுப்புணர்வும், கசப்புணர்வும் உடையவனாக மாறுவதற்கு பல நியாயமான காரணங்கள் இருந்தன. ஆனால், யோசேப்பு அந்த எதிர்மறை உணர்வுகளால் பாதிக்கப்படாதபடிக்கு தன்னைப் பாதுகாத்தான். அவன் தேவ ஐக்கியமுடையவனாகவும், தேவ திட்டத்திற்கு அர்ப்பணித்தவனாகவும் இருந்த படியால் கோப உணர்வுகளும், வெறுப்புணர்வுகளும் தன்னுடைய மனதைப் பாதிக்க அவன் இடம் தரவில்லை.

சில நேரங்களில் நமக்குள் ஏற்பட்ட கோப உணர்வும், வெறுப்புணர்வும், நம்முடைய மனம் தவறாக இருந்ததால் அல்ல. பிறருடைய மனம் தவறாக இருந் ததின் விளைவாக அவை நமக்கு ஏற்பட்டன. அவை நியாயமானவைதான். ஆயினும், அவை நம்முடைய மனதைப் பாதித்து தேவனுக்குப் பயன்படும் ஆவிக் குரிய தகுதியை இழக்கச் செய்வதால், அவற்றைத் தேவ அன்பினாலும், விசு வாசித்தாலும், தேவ ஐக்கியத்தினாலும் அகற்றிடக் கவனமாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

சுய முயற்சியால் அடக்கப்படும் கோபங்கள் வெடிக்கும்,
தேவ அன்பினால் ஆளப்படும் கோபங்கள் கரையும்.

ஆகஸ்ட்
30
ஜீவ
நீரோடை

கடமை சுவிசேஷம்

அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு...
1 பேதுரு 2:12

1 பேதுரு 2:1-12

கிறிஸ்தவர் ஒருவருடைய பக்கத்துவீட்டார் கிறிஸ்துவை அறியாதவர்கள். எனவே, அந்தக் கிறிஸ்தவக் குடும்பத்தார் அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஆத்மபாரத்தோடு ஜெபிப்பார்கள். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இயேசு கிறிஸ்துவின் தேவையைக் குறித்து அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லுவார்கள். ஆனால், கிறிஸ்துவை அறியாத குடும்பத்தார் குடும்ப வாழ்க்கையில் எந்த பிரச்சினையும் இல்லாமல் நல்ல ஐக்கியத்தோடு வாழ்கின்றனர். இந்தக் கிறிஸ்தவக் குடும்பத்தார், மிகுந்த ஆத்தும பாரத்தோடு அநேகருக்கு சுவிசேஷம் சொல்வார்கள். ஆயினும், தினமும் ஒரு முறையாவது குடும்ப சண்டையைக் காணாமல், அந்த நாளை அவர்கள் கடப்பதில்லை.

ஒரு நல்ல மருந்தைக் குறித்து பலருக்குச் சொல்லுவது மிக மிக நல்ல காரியம். ஆனால், அந்த மருந்தை யாருக்குப் பரிந்துரைக்கின்றோமோ அவர்கள் வியாதி எதுவுமின்றி, நம்மைவிட ஆரோக்கியமாயிருக்கின்றார்கள். அப்படி யானால், அந்த மருந்தை அவர்கள் விசேஷமாக நினைக்க மாட்டார்கள். இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற ஆசீர்வாதங்களைக் குறித்து நாம் பலருக்குச் சொல்ல வேண்டும். ஆனால், நாம் இயேசுவினால் பெற்ற நன்மைகளுக்கு அவர்கள் நடுவில் சாட்சியாயிருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் பலர் பிறருக்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சொல்வதை ஒரு மத சம்பிரதாயமாகவும், கட்டளையாகவும் எண்ணுகின்றனர். ஏனென்றால், அவர்களே தாங்கள் பிறருக்குச் சொல்லும் சுவிசேஷத்தால் பயனடையவில்லை. தங்களுடைய வாழ்க்கையில் சுவிசேஷம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் சாட்சியுள்ள ஒரு பரிசுத்த வாழ்க்கை ஏற்பட்டிருக்கும். குடும்ப வாழ்க்கையிலும் அதனுடைய நல்ல விளைவுகள் பிரதிபலிக்கும். அப்படி எதுவும் இல்லாமல் இயேசுவை அறியாதவர்கள்மேல் ஆத்மபாரம் கொள்ள வேண்டும் என்று நமக்குப் போதித்ததின் விளைவாக, நாம் அப்படிச் செய்வதில் சிறப்பில்லை.

அநேகர், உண்மையான மனந்திரும்புதலின் அனுபவம் பெறவில்லை. அநேகர், தேவ உறவின் அனுபவம் பெறவில்லை. அவர்கள், தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற வாழ்க்கை மாற்றங்கள் பெற வில்லை. ஆயினும், கிறிஸ்துவைப் பிறருக்கு அறிவிப்பது தங்களின் கடமை என்று நினைப்பதால், பிறருக்குச் சுவிசேஷம் அறிவிக்கின்றனர். ஆனால், அவர்கள் தங்களிடம் இயேசுவினால் வருகின்ற விசேஷங்கள் எதையும் கொண்டிராததால், கேட்கின்றவர்கள் அதற்கு முக்கியத்துவம் தரவில்லை.

சிந்தனைக்கு...

வாயினால் சொன்ன செய்தி உண்மை என்பதை,
உன் வாழ்க்கையினால் உறுதிப்படுத்தத் தவறாதே.

ஆகஸ்ட்
31
ஜீவ நீரோடை

காட்சியும் வீழ்ச்சியும்

ஒரு ஸ்திரீயை உப்பரிகையின் மேலிருந்து கண்டான்... 2 சாமுவேல் 11:2

2 சாமுவேல் 11:1-17

காட்சி வரும் முன்னே, வீழ்ச்சி வரும் பின்னே என்பதுதான் இன்றைய சமுதாயச் சூழலில் தேவையான எச்சரிக்கை. இன்றைக்கு மனிதன் தன்னுடைய இச்சையின் தூண்டுதலுக்கு இசைந்து, எந்த விதமான காட்சிகளைப் பார்க்க விரும்பினாலும், அவற்றைப் பார்க்க நவீனத் தொழில் நுட்பம் உதவி செய்கிறது. இன்று, காட்சி இன்பம் என்பது மனிதனால் அதிகமாக விரும்பித் தேடப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது. எப்பொழுதும் அவன் ஏதோ ஒன்றை தன்னுடைய ஜென்ம சுபாவ சுவையின்படி பார்த்துக் கொண்டேயிருக்க விரும்புகின்றான். ஆனால், காட்சிகள் கண்கள் வழியாக இருதயத்திற்குச் சென்று, அவன் வீழ்ச்சி அடையும் படியான சூழல்களுக்கு வழிவகுக்கின்றது.

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதனாக அறியப்பட்டவன் தாவீது. ஆனால், அந்த தேவ மனிதனை ஒரு நாள் ஒரு பெண் விழ வைத்தாள். அவள் பெயர் பத்சேபாள். தாவீது ஒரு பெண் விஷயத்தில் தவறிப் போனவன் என்ற கருப்பு பதிவு அவனுடைய வரலாற்றில் சேர்ந்தது. தாவீது எப்படி பத்சேபாள் விஷயத்தில் வீழ்ந்தான்? பலநாள் பழக்கத்தின் விளைவா? இல்லை. பலமுறை பார்க்க நேர்ந்து அவளுடைய அழகில் சொக்கிப் போனதின் விளைவா? இல்லை.

ஒரு கணப் பொழுதில் தாவீது வீழ்ந்தான். அதற்குக் காரணம் தாவீது கண்ட இச்சைக்குரிய காட்சி. ஸ்நானம் பண்ணும் தன்னுடைய சூழ்நிலையை பிறர் கண்கள் படாதவாறு மறைக்கத் தவறிய ஒரு கவனக்குறைவின் விளைவு. ஸ்நானம் செய்து கொண்டிருந்த பத்சேபாளைஅவன் பார்க்க நேர்ந்தது அந்த இச்சைக் காட்சியை மனதை விட்டு விலக்க இயலாமல் போன ஒரு பிரச்சினையினால்தான் பெரிய பாவத்தைச் செய்யும் துணிகர மனிதனாக மாறினான். பல வாலிபர்கள் தங்களால் இச்சை சார்ந்த பாவத்திற்கு நேராகச் செல்லாமல் தங்களைக் கட்டுப் படுத்த முடியவில்லை என்பார்கள். அதற்குப் பெரும்பாலும் அவர்களுக்குக் காரணமாக அமைவது இச்சையைத் தூண்டும் காட்சிகளே.

ஆம், காட்சிகளின் வலைகளுக்குத் தப்பிக் கொள்ள கவனமாயிராவிட்டால், வீழ்ச்சிகளின் துன்பத்தைத் தவிர்க்க வாய்ப்பின்றிப் போகும். ஆகாத காட்சிகள் உள்ளே சென்று விட்டபின் அது மனதைப் பாதித்து தவறான ஒரு செயலுக்குக் கட்டாயப்படுத்தாமல் இருக்காது. எனவே, ஆணோ பெண்ணோ தங்களின் உடற்காட்சிகள் பிறர் கண்களுக்கு பிரச்சினையாக மாறாதபடி, இயன்றவரை உரிய ஒழுக்கக் கட்டுபாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

சிந்தனைக்கு...

சரீரம் தேவனுடைய ஆலயம்.
அது பிறரை இடற வைக்கும் கவர்ச்சி வலை ஆகக்கூடாது.

செப்டம்பர்

1

ஜீவ நீரோடை

நிச்சயமற்ற அறிவு

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து...
யோவான் 6:69

யோவான் 6:60-71

ஒரு பெண்ணிடம் அண்டை வீட்டில் குடியிருக்கும் ஒரு பெண் வந்தாள். உன்னுடைய கணவன் அலுவலகத்தில் பணிபுரியும் பிற பெண்களிடம் தவறாகப் பழகி வருகிறான். எனவே, நீ எச்சரிக்கையாயிரு என்று கூறிச் சென்றாள். ஆனால், அது பொய்யான தகவல். ஆயினும், இந்தப் பெண்ணுக்கு தன் கணவன்மேல் சந்தேகம் எழ ஆரம்பித்தது. எனவே வீட்டில் ஓயாத சண்டை நடந்தது. இதனை அறிந்த அவளுடைய கணவனுடைய நண்பன் ஒருவன் அதைக் குறித்து விசாரித்தான். பக்கத்து வீட்டுப்பெண் கொடுத்தது தவறான தகவல் என்பதை அவன் கண்டறிந்தான். எனவே. அந்தப் பெண்ணின் கணவனிடம் அதைக் கூறி, அந்தப் பக்கத்துவீட்டு பெண்ணைக் கண்டிக்கும்படி ஆலோசனை சொன்னான்.

ஆனால், அவனோ அடுத்து வீட்டுப் பெண்ணைக் கண்டிப்பது நியாயமல்ல, என்னிடம் எந்தத் தவறும் இல்லை என்பதை அறிந்திட என் மனைவிக்கு ஏராளம் வாய்ப்புகள் உண்டு. அதையெல்லாம் மீறி அடுத்த வீட்டுப் பெண் சொல்வதை அவள் நம்பினால், அது என் மனைவியின் பலவீனம். அதை நினைத்து வருத்தப் படுவதைத் தவிர, வேறெதுவும் செய்வது நியாயமல்ல என்றான்.

ஒருவர் நல்லவரா கெட்டவரா என்று நாம் நிச்சயமாக அறிந்து வைக்க வேண்டும். நாம் நல்லவர் என்று நம்பின ஒருவரைக் குறித்து இன்னொருவர் எதிர் மறையாகச் சொன்னால், அது சரியா தவறா என்று கண்டறிவது தவறல்ல. அதே வேளையில், ஒருவரை உத்தமமான பேதுரு என்று நம்புகிறோம். ஆனால், இன் னொருவர் அவர் ஒரு யூதாஸ் என்றதும், அப்படியா சேதி, ஆச்சரியமாயிருக்கிறதே என்று கூறினால், அது நாம் அவரை இன்னும் சரியாக அறியவில்லை என்று அர்த்தம்.

இயேசு கிறிஸ்துவை சிலர் நல்லவர் என்றனர். வேறு சிலர் வஞ்சிக்கின்றவர் என்றனர். ஆனால், பேதுரு போன்றோருக்குச் சந்தேகமில்லை. ஏனென்றால், அவன் இயேசுவை நல்லவர் என்பதை நேரடியாக அறிந்து உறுதிப்படுத்தி வைத்திருந்தான். அநேகர் தங்களுடன் தொடர்பில் உள்ள சிலரை எந்தச் சோதனையுமின்றி நல்லவர் என்று கூறுகின்றனர். யாரோ ஒருவர் வேறுவிதமாகச் சொன்னதும் தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொள்கின்றனர். கர்த்தரைக் குறித்த காரியத்திலும் சிலர் இப்படியே. அவர்கள் வேதாகமம் கூறுகின்றபடியால் நல்லவர் வல்லவர் என்று கூறுவார்கள். ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டால் அவரை வாய் திறந்து துதிக்க இயலாமல் போவார்கள். ஏனென்றால், பவுலைப் போல, நான் விசுவாசிக்கின்றவர் இன்னார் என்று அறிவேன் என்ற ரீதியில் அவர்கள் அவரை அறியவில்லை.

சிந்தனைக்கு...

ஒருவரைக் குறித்து உயர்வாகப் பேசும் முன்பு, சிலமுறை சிந்தி,
ஒருவரைக் குறித்து தாழ்வாகப் பேசும் முன்பு, பலமுறை சிந்தி.

செப்டம்பர்

2

ஜீவ நீரோடை

அவர் துவங்கினால்

அக்கரைக்குப் போகும்படி அவர்களை...
மத்தேயு 14:22

மத்தேயு 14:23-36

இந்த நாளுக்குரிய தியானம்தான் 2022-ம் ஆண்டு தியான நூலுக்காக நான் எழுதிய கடைசி தியான சிந்தனை. இந்த கடைசி தியான வார்த்தைகளை எழுதும் போது, கர்த்தருக்கு நான் அதிகமாக நன்றி செலுத்த வேண்டிய ஒரு உணர்வு என்னை நெருக்குகிறதைக் காண்கின்றேன். ஏனென்றால், எழுத்துப் பணி என்பது உடலால் செய்கின்ற ஒரு பணி அல்ல. உடல் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் தான். ஆயினும், தியானங்கள் எழுதுவது என்பது மனம் சம்பந்தப்பட்டது. மனதைக் குறிப்பிட்ட விதமாக வைத்துக் கொள்ளாமல், ஆவிக்குரிய நல்ல சிந்தனைகளைக் கர்த்தருடைய சமுகத்திலிருந்து பெற்று எழுதமுடியாது.

நான் ஒரு ஊழிய இயந்திரம் அல்ல. நான் ஒரு சிந்தனை இயந்திரம் அல்ல. நான் ஒரு எழுத்து இயந்திரம் அல்ல. பட்டனை தட்டிவிட்டால் அதுவாக வேலை செய்யும் என்று கூறும் விதமான ஒரு வேலை அல்ல. இது, நான் எனக்குள் கர்த்தரோடு அவருக்கேற்ற விதமாக இருக்கின்ற ஒரு நிச்சயம் பெறாவிட்டால், சிந்தனையும் வராது, வார்த்தையும் வராது.

2022-ம் ஆண்டிற்கான தியானங்களை எழுதுவதற்கு நான் ஆயத்தப்பட்ட காலங்கள் வித்தியாசமாயிருந்தது. எனக்கு வழக்கத்தைவிட அதிகமான கிருபையும், ஆதரவும் என் மனதை கர்த்தருக்கேற்ற காரியங்களோடு இணைத்து வைப்பதற்கான அதிகமான ஆற்றலும் தேவைப்பட்டது. ஆனால், கர்த்தர் போதுமானவராயிருந்தார். அவர் விசுவாசத்தோடு துவங்கிட வழி நடத்தினார். தேவ சமுக ஆதரவோடு தொடர்ந்திட உதவி செய்தார். வெற்றியாகக் கரை சேர்ந்தது போல முடிக்கவும் உதவி செய்தார். ஒவ்வொரு நாளும் மனதைப் பாரப்படுத்தவும், பலவீனப்படுத்தவும் ஏதாவது இருந்தன. அலைகளைக் கடந்து செல்வது போலத்தான் ஒவ்வொரு நாள் சூழ்நிலையையும் கடந்து செல்ல நேர்ந்தது. தேவனை முற்றிலும் சார்ந்து, அவர் மேல் வைத்த பார்வை விலகாதபடி அவருடைய கிருபையைப் பெற்று, கர்த்தர் அளித்த ஒரு சிறிய வேலையை வெற்றியாய்ச் செய்து முடித்தேன்.

பொருளாதார ரீதியாக அல்ல. உடல்ரீதியாக அல்ல. மன ரீதியாக சில அழுத்தங்களையும், நெருடல்களையும், சோர்வு ஏற்படுத்தும்சில விஷ யங்களையும் எதிர் கொண்டு தேவப்பணியைச் செய்து முடிக்க கர்த்தர்கிருபை செய்தார். காற்றுகள் எதிராக வீசலாம். கடலில் அலைகளின் நிலைமை மாறலாம். படகு அலசடிப்பட்டுக் கொண்டே போகலாம். ஆயினும், அக்கரைக்குப் போங்கள் என்று சொன்னவர் நிச்சயம் வெற்றியாகக் கரை கொண்டு சேர்ப்பார்.

சிந்தனைக்கு...

ஏன் திரும்பத் திரும்ப அலைகள் எதிராக வருகிறது?
திரும்பத் திரும்பக் கடந்து செல்ல வைக்கும் கிருபையை நீ உணர்ந்திட.

செப்டம்பர்

3

ஜீவ நீரோடை

நன்றி

கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால்...
சங்கீதம் 116:7

சங்கீதம் 116:1-19

கிறிஸ்தவ விசுவாசி ஒருவர் மிகுந்த நன்றி உணர்வுடையவர். எல்லாவற்றிலேயேயும் ஸ்தோத்திரம் செலுத்துங்கள் என்ற வார்த்தையின்படி, எந்த ஒரு சிறு செயலிலும், எந்த ஒரு சிறு நன்மையிலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தத் தவறமாட்டார். அவருக்கு யாராவது ஒருசிறு உதவி செய்தாலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று பலமுறை சொல்வார். பெரிய நன்மையோ, சிறிய நன்மையோ, நன்றி இயேசுவே, நன்றி இயேசுவே என்று சொல்லுவார். ஒரு டீ குடிக்கும் போதும் நன்றி சொல்லி ஸ்தோத்திரிக்காமல் குடிக்கமாட்டார். ஆனால், அவர் யாருக்கும் ஒரு சிறு உதவி செய்யமாட்டார். கர்த்தருக்குப் பிரியமான ஒரு பரிசுத்த வாழ்க்கையை அவரிடம் பார்க்க முடியாது.

கர்த்தருக்கு நன்றியுடையவர்களாயிருக்க வேண்டும். ஒவ்வொரு சின்ன நன்மைக்கும், பெரிய நன்மைக்கும் கர்த்தருக்கு நன்றி செலுத்துவது மகிழ்ச்சியான அனுபவம். ஆனால், கர்த்தருக்கு நன்றி என்பது வெறும் வார்த்தைகளோடு நின்று விடக்கூடாது. வாயினால் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், நன்றி, நன்றி என்று சொல்வது போதாது. அது செயலளவில் இருக்க வேண்டும். கர்த்தரால் நன்மை பெற்றவர்கள் முதலாவது அதற்குப் பதிலீடாக கர்த்தருக்கேற்ற சாட்சியாக வாழ கவனம் செலுத்த வேண்டும். அது போல நாம் கர்த்தரால் நன்மை பெற்ற சந்தோஷத்தை வெளிப் படுத்த நம்மால் இயன்ற நன்மையைப் பிறருக்குச் செய்ய வேண்டும்.

மக்கெதோனிய திருச்சபையார் பொருளாதார ரீதியாக தேவனிடமிருந்து எவ்வளவு நன்மை பெற்றவர்கள் என்பது நமக்கு தெரியாது. ஆனால், அவர்கள் தங்களை கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக உணர்ந்து சந்தோஷமுடைய வர்களாகயிருந்தனர். எனவே தங்களுக்கு கொடிய தரித்திரம் இருந்த போதும், எருசலேமிலுள்ள திருச்சபை மக்களின் கஷ்டத்திற்கு தாராளமாக உதவி செய்தனர். ஆம். நாம் பிறருக்கு எந்த நன்மையும் செய்யாத நிலையில், கர்த்தருக்கு நன்றி நன்றி என்ற சொல்லிக் கொண்டிருப்பது, ஒரு சடங்காச்சாரம்.

அவ்விதமே நமக்கு நன்மை செய்த தேவனுக்கு நாம் செலுத்தும் நன்றி, ஜனங்களுக்கு முன்பாக அவருக்குக் கனத்தையும் மகிமையையும் கொண்டு வரவேண்டும். தேவன் விரும்புகின்ற விதமான நற்குணங்களோடும் நல் ஒழுங்கு களோடும் நாம் வாழும்போது, அதுதான் தேவனுக்கு நாம் செலுத்துகின்ற ஆவிக் கேற்ற ஸ்தோத்திர பலி. உலக மக்களைப் போல சம்பிரதாயமாக நாம் நன்றி கூறாமல், ஆவிக்கேற்ற விதமாக நன்றியை வெளிப்படுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்குச் சாட்சியாக வாழாதவர்கள் கர்த்தரால் நன்மை பெற்றதாகச் சொல்லும்! சாட்சி சந்தேகத்திற்குரியது.

செப்டம்பர்
4
ஜீவ நீரோடை

ஒரு சிறு செயல்

என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்....
மாற்கு 14:6

மாற்கு 14:1-9

சுவிசேஷகர் ஒருவர் திருச்சபை ஒன்று நடத்திய மூன்று நாள் கூட்டத்திற்காகச் சென்றிருந்தார். அவர் அற்புத அடையாள ஊழியங்களுக்காகப் பிரபலமானவர் அல்ல. எனவே, முதல் இருநாள் கூட்டங்களுக்கும் மிகக்குறைவாகவே ஆட்கள் வந்திருந்தனர். கலந்து கொண்டவர்களிடமும் பெரிய ஆர்வமோ, வாஞ்சையோ இருக்கவில்லை. விரும்பாதவர்களின் வீட்டிற்கு வந்த விருந்தாளியாக அவர் தன்னை உணர்ந்தார். மூன்றாவது நாள் கூட்டத்திற்கு தேவ செய்தியை ஆயத்தப்படுத்த அவருக்கு விசேஷ உந்துதல் இல்லாதிருந்தது.

ஆனால், இரண்டாவது நாள் கூட்டம் முடிந்து திரும்பும் போது அவரிடம் ஒருவர் ஓடி வந்தார். இந்த திருச்சபையில் நடந்த கூட்டங்களில் இவ்வளவு அருமையான தேவ வார்த்தைகளை நான் இதுவரை கேட்டதில்லை. மூன்றாவது நாள் கூட்டத்தில் நான் மிக விசேஷமானவைகளை உங்கள் மூலம் கேட்பதற்காக ஜெபத்தோடு காத்திருப்பேன் என்று கூறிவிட்டுச் சென்றார். அந்த சுவிசேஷகரின் சோர்வு, சலிப்பு யாவும் பஞ்சாகப் பறந்து போனது. முதல் இரண்டு நாட்களைவிட மிக வல்லமையாக மூன்றாம் நாள் கூட்டத்திற்கு அவர் ஆயத்தப்பட்டார்.

மனுக்குலத்தை மீட்க வந்த இயேசுவை, அவருடைய சொந்த ஜனங்களே வேண்டாம் என்று விலக்கப்போவதை அவர் முன்னறிந்தார். உடனிருந்த சீடனாகிய யூதாஸ் தம்மை முப்பது காசுக்காக காட்டிக் கொடுக்கப்போவதை அவர் முன்னறிந்தார். ஆனால், இது போன்ற சோர்வுக்குரிய ஒரு பின்னணி யில்தான், ஒரு பெண்மணி 300 பண செலவில் நளதம் என்றும் தைலம் வாங்கி வந்து, இயேசுவின்மேல் தனக்கிருந்த மிகப்பெரிய மரியாதையை வெளிப்படுத்தினாள். அவர் எவ்வளவு விரும்பத்தக்கவர் என்பதை வெளிப் படுத்தினாள். அது இயேசுவுக்கு மிகப்பெரிய ஆறுதலாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆம், ஒரு பெரிய சோர்வான ஒரு சூழலில் நம்முடைய ஒரு சிறு அன்பின் செயல் மிகப்பெரிய சக்தி வாய்ந்த ஒரு ஆறுதலாக விளங்கும். ஒரு சிறு வெளிச்சம் ஒரு பெரிய இருளின் நடுவில் ஒரு பெரிய நம்பிக்கையைக் கொடுப்பது போல, நம்முடைய ஒரு சிறு நற்செயல் அமையும். சில நேரங்களில் நாம் செய்கின்ற ஒரு நற்காரியமோ அல்லது ஒரு நல்வார்த்தையோ, இன்னொருவரைத் தூக்கி நிறுத்தி தொடர்ந்து வல்லமையாய் ஓடத் தூண்டுகின்றதாக விளங்கும். ஆம். சோர்ந்து போய் துவண்டு நிற்கின்ற யாருக்கு நம்முடைய ஒரு சிறு அன்பின் செயல் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்தும் என்று கூற இயலாது.

சிந்தனைக்கு...

மற்றவர்களின் பாராட்டுகளை மேன்மையாக எண்ணாதே,
மற்றவர்களின் ஊக்குவிப்புகளை அவசியமற்றதாக எண்ணாதே.

செப்டம்பர்
5
ஜீவ நீரோடை

ஆசிரியர்

கற்றுக் கொள்கிறவர்களைப் போல நான் கேட்கும்படி... ஏசாயா 50:4

ஏசாயா 50:1-11

இன்று ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. மிகப்பெரிய கல்விமானும், இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியுமான சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் பிறந்த நாள், ஆசிரியர் தினமாக விசேஷமாக நினைக்கப் படுகிறது. ஆசிரியர்கள் என்றவுடன் பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் நமக்குக் கற்று கொடுத்த ஆசிரியர்களை மட்டும் அல்ல. தாய், தந்தை, நண்பர்கள், நல்லவர்கள், போதகர்கள் என பல்வேறு நிலையிலுள்ளவர்களும் நமக்கு நிறைய காரியங்களைக் கற்றுக் கொடுக்கின்றார்கள். குறிப்பிட்ட ஒரு பாடத்திட்டத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் மட்டும் அல்ல. வாழ்க்கையில் பல காரியங்களை அறிந்து கொள்ளவும், நாம் நல்ல நிலையில் உருவாக்கப்படவும் காரணமாயிருந்த யாவரும் நமக்கு ஆசிரியர்களே.

பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து, நாம் உயர்ந்த கல்விநிலைகளை அடைந்த நாள்வரை, நமக்குக் கற்றுக்கொடுக்கும் பொறுப்பிலிருந்த அனைத்து ஆசிரியர்களுக்காகவும், கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். எத்தனை திறன்மிக்க ஆசிரியர்கள் ஆயினும், அவர்கள் யாவரும் நம்முடைய அறிவினை மேலும் மேலும் கூர்மையாக்கி, பல்வேறு திறமைகளில் நம்மை வளர்க்கின்றவர்களே. ஆனால், நாம் வாழ்க்கையை வாழத் தெரிந்தவர்களாக வேண்டும். இந்த வாழ்க்கையை சிறப்பாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும்.

வாழ்க்கை எப்படி வாழப்பட வேண்டுமோ அப்படி வாழ்ந்திட நம்மை உருவாக்கும் திறன் கர்த்தருக்கு மட்டுமே உண்டு. அவர் ஒருவரே நம்முடைய இருதயத்தைப் பண்படுத்தி, பரிசுத்தப்படுத்தி, பண்புகளை உருவாக்க இயன்றவர். அவர் ஒருவரே எவ்விதமாக மனம் இருந்தால் நம்முடைய வாழ்க்கை சிறப்பாயிருக்குமோ, அவ்விதமாக மனதை மாற்ற வல்லவர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அநேகர் கடவுள் என்ற உயர்ந்த சிந்தையுடன் ஆராதனை செய்கின்றனர். அநேகர் அவரை ஆராதிக்க அதிக ஆர்வமாயிருந்தும், அவரிடமிருந்து கற்றுக்கொள்ள அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை.

நம்முடைய மிகப்பெரிய ஆசிரியர் கர்த்தரே. அவர் கற்றுக் கொடுக்கின்றவர் மட்டுமல்ல. கற்பித்தபடி வாழ்வதற்கு நம்மை பலப்படுத்துகிறவரும் அவரே. ஒவ்வொரு நாளும் அவர் பல காரியங்களைக் கற்றுத் தருகின்றார். நாம் மரிக்கும் வரை கர்த்தர் நமக்கு ஆசிரியரே. நாம் அவருக்கு மாணவர்களே. ஒவ்வொரு நாளும் அவரிடம் கற்பதே நம்மை வாழ்க்கையில் உயர்ந்து நிற்க வைக்கின்றது.

சிந்தனைக்கு...

மூளைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆசிரியர் பலர், இருதயத்திற்குப் பாடம் சொல்லிக் கொடுக்க இயேசு ஒருவரே.

செப்டம்பர் 6

ஜீவ நீரோடை

எதற்காகச் ஜெபம்

தனித்துப்போய் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்...
லூக்கா 5:16

லூக்கா 5:12-28

குறிப்பிட்ட ஒருவர் யாராவது அதிகமாகச் ஜெபம் செய்ய வேண்டும். அதிகமாக வேதம் வாசிக்க வேண்டும். அதிகமாகச் சபை ஐக்கியங்களில் பங்கு பெற வேண்டும் என்று போதித்தால் தாங்கிக் கொள்ளமாட்டார். அவரைப் பொறுத்த வரைக்கும் அதிக ஜெபம், அதிக வேத வாசிப்பு, அதிக சபை ஐக்கியம் என்பதெல்லாம் தேவை யில்லாத நேர விரயம் என்பதே. பக்தி வேண்டும். விசுவாசம் வேண்டும். சற்று நேரம் ஜெபதபம் வேண்டும். அதற்குமேல் தேவையில்லை. அது மட்டுமல்ல. தான் இவ் விதமான குறைந்தபட்ச கிறிஸ்தவ அனுபவங்களோடுதான், தேவனிடமிருந்து ஏராள மான செல்வ வளங்களைப் பெற்று, சீர் சிறப்பாய் இருப்பதாகச் சாட்சி கூறுவார்.

ஒரு எளிமையான சின்ன அளவு பக்தியைக் கொண்டு, பெரிய அளவில் தேவ ஆசீர்வாதங்களைப் பெறலாம் என்பதே இவருடைய வாதம். ஆனால், ஒருவருடைய தனிப்பட்ட சாட்சியே வேதம் ஆகிவிடாது. ஒருவர், நான் சினிமாப் படங்களில் நடித் தாலும் கர்த்தர் என்னைப் பிரமாதமாக ஆசீர்வதித்திருக்கிறார் என்றால், அதுவே வேதம் ஆகிவிடாது. ஒருவர் தன்னுடைய செல்வச் செழிப்புக்களை தன்னுடைய குறிப் பிட்ட ஒரு பக்தியின் பலன் என கூறலாம். அது அவருடைய தனிப்பட்ட நம்பிக்கை. ஆனால், அது சத்தியத்தால் அங்கீகரிக்கப்படுகிற நம்பிக்கை ஆகிவிடாது.

இன்று, அநேகர் தங்களுடைய செல்வ நிலமையையே தேவனுடைய ஆசீர்வாதம் என எண்ணுகின்றனர். குறிப்பிட்ட ஒருவிதமான பக்திக் கருத்தைக் கொண்டிருக்கையில், தங்களுக்கு ஏற்படுகிற வலிமை நிலைகளை, அந்தப் பக்தி நிலைப்பாட்டின் பலன் என எண்ணுவது தவறு. அதிக ஜெபம், அதிக வேத வாசிப்பு, அதிக சபை ஐக்கியங்கள் என்பதெல்லாம் பணம், பொருள், வசதிகளை அதிகமாக்கிக் கொள்வதற்காக அல்ல.

அதிகமாகச் ஜெபிக்கின்ற மனிதன் அதிகமாக தேவ ஐக்கியத்தை உணரு வான். அதிகமாக வேதம் வாசிப்பவன் அதிகமாக தேவனை அறியும் வாய்ப்பைப் பெறுவான். அதிகமாக சபை ஐக்கியம் உடைய மனிதன், அதிகமாக பக்தி விருத்தி அடைய இயலும். தேவ ஐக்கியத்திலும், தேவனை அறிகின்ற அறிவிலும் வளரு வதற்கேதுவான ஆவிக்குரிய காரியங்களைச் செய்கின்றவன், ஆரோக்கியமான ஆவிக் குரிய மனிதனாக வளருவான். அவன் தேவனை அறிகின்ற அறிவில் பெருகி, பலர் நடுவில் நல்ல சுபாவங்களோடும், நல்ல நடத்தைகளோடும் சாட்சியாக நிற்பான். அதற்கு உதவுவதே ஜெபமும், அதிக வேத தியானமும்.

சிந்தனைக்கு...

தனிப்பட்ட அனுபவங்களை அசட்டை செய்யாதே,
அவை வேத அடிப்படையில் உள்ளதா என்பதைக் கவனிக்க மறவாதே.

செயல் தேவை

நீயும் போய் அந்தப்படியே செய்...
லூக்கா 10:37

லூக்கா 10:25-37

சிலர் தங்களுக்கு யாராவது சின்ன உதவியோ, பெரிய உதவியோ, எது செய்தாலும், பலமுறை நன்றி சொல்வார்கள். தங்களுக்குச் செய்யப்பட்டது சிறிய உதவியாயினும்,அதற்கு அவர்கள் நன்றி செலுத்தும் விதம், மற்றவர்களின் மனதை தொட்டுவிடும். ஆனால், இவர்கள் தங்களுக்குச் செய்யப்பட்ட உதவியைப் போல மற்றவர்களுக்கு ஒரு உதவி தேவைப்பட்டால் செய்யவேமாட்டார்கள். தங்களுக்குச் செய்யப்பட்ட உதவியை அவ்வளவு பெரிய விஷயமாக எண்ணி, அவர்களை நன்றி மழையில் நனைய வைப்பார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரு ஆக்கப்பூர்வமான உதவி செய்ய வேண்டிய நேரத்தில், அமைதியாக இருந்து விடுவார்கள்.

சில நேரங்களில், மற்றவர்களின் நற்செயலை நாம் பாராட்டுகிறவர் களாகவும், புகழ்கின்றவர்களாகவும் இருப்போம். ஆனால், அது போன்ற நற் செயல்களைச் செய் வதற்கு நமக்கு ஒரு ஆர்வம் இல்லை. நாம் பாராட்டும் மக்களாக இருந்துவிட்டுப் பாராட்டத்தக்கவர்களாகச் செயல்படுவதைத் தவிர்த்து விடு கின்றோம். நாம் நற் குணசாலிகளைப் புகழ்ந்து நற்குணங்களை விரும்புகின்ற வர்களைப் போன்ற தோற்றத்தைக் கொடுக்கின்றோம். ஆனால், நற்குணங் களுக்கு ஒரு மாதிரியாக நிற்கத் தவறுகின்றோம்.

சிலர், வீடுகளை மிகவும் சுத்தமாக வைக்கின்றவர்களை பாராட்டுவார்கள். ஆனால், தங்கள் வீடுகளைப் படுமோசமாக வைக்கும் பழக்கத்தை மாற்றமாட்டார்கள். சிலர், தங்களை மிகச் சிறப்பாக உபசரிக்கின்றவர்களைக் குறித்து பலரிடம் சொல்லி மெச்சுவார்கள். ஆனால், இவர்கள் யாரையும் நன்றாக உபசரிக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வித்தியாசமா யிருக்கும். ஏனென்றால், இவர்கள் சரியானவைகளை விசேஷமாகப் பார்க்க இயன்றவர்களாயிருக்கின்றார்கள். எனவே, அதனுடைய அடிப்படையில் செயல்பட வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. அப்படிச் செயல்படாமல் போனால், அது தேவனுடைய கோபத்தை வரவழைக்கும்.

எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டதோ, அவனிடத்தில் அதிகமாக எதிர் பார்க்கப்படும். ஒரு நல்லதைச் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்தும் அவ்விதம் செய்யாமல் போனால், அது மிக மிக மோசமானவர்களுக்குரிய அடை யாளம். ஒரு செயலையோ சுபாவத்தையோ நாம் நலமானதாகக் காண இயன்றவர் களாயிருந்து பாராட்டும் போது, அதனை நம்மிடம் காண வேண்டிய அவசியத்தை உணர்ந்துவிட்டோம் என்று அர்த்தம்.

சிந்தனைக்கு...

யாரோ ஒருவரால் ஒரு உதவியைப் பெறும்போது,
யாரோ ஒருவருக்கு உதவும் பொறுப்பு, உனக்கு உண்டு என்பதை நினை.

செப்டம்பர்
8
ஜீவ நீரோடை

ஏன் பாராட்டவில்லை?

கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள்... மத்தேயு 24:11

மத்தேயு 24:1-13

ஒரு தேவ ஊழியர் அநேகருக்கு மருத்துவ சேவை வழங்குகிறார். அநேகருக்கு பொருளாதார உதவிகள் செய்கின்றார். ஆனால், இவருடைய ஊழியத்தில் தவறான உபதேசங்களும், போதனைகளும் ஏராளம் உண்டு. இவர் சத்தியத்தின் அடிப்படையை விட்டு விலகி, ஜனங்களைப் போலியான அபிஷேக அனுபவங்களுக்குள் கொண்டு செல்கின்றார். இவருடைய தவறான உபதேசங்களையும் போதனைகளையும் சிலர் விமர்சிப்பார்கள். ஆனால், இது தொடர்பான சிலருடைய கருத்துக்கள் வித்தியாசமானவை. அவர், இத்தனை நல்ல செயல்களைச் செய்கிறாரே அதனை ஏன் எவரும் பாராட்டவில்லை என்பதே அவர்களின் கேள்வி.

ஒருவரிடம் உள்ள நல்ல செயல்கள் பாராட்டப்பட வேண்டியவையே. அதே வேளையில், ஒருவருடைய செயல்பாடுகளில் பலரை வழி தவறச் செய்யும் தன்மைகள் இருந்தால், அவரிடம் எத்தனை நற்செயல்கள் இருந்தாலும், அவை பாராட்டப்பட வேண்டிய தகுதியை இழந்துவிடும். ஏனென்றால், அவருடைய செயல்பாடுகளில் உள்ள நன்மையைப் பெறச் செல்லுகின்றவர்கள், அவருடைய தவறான செயல்பாடுகளின் விளைவான தீங்கினாலே, பெரிய கேட்டைக் காண்பார்கள்.

ஒரு டம்ளரில் உள்ள பால் 98 சதவிகிதம் நலமான தன்மையுடையதாக உள்ளது. ஆனால், இரண்டு சதம் விஷம் என்றால், அந்த டம்ளரில் உள்ள பால் பயன்பாட்டிற்கு ஏற்றதல்ல. ஏனென்றால் 98 சதவிகிதம் நல்ல அம்சங்களாலே நாம் நன்மையடையாமல், 2 சதவிகிதம் விஷம் அதிக கேட்டை ஏற்படுத்திவிடும். தவறான உபதேசம் தவறான போதனை போன்றவை ஒருவருடைய நித்தியப் பங்கை, நஷ்டமடையச் செய்துவிடும். எனவே, ஒருவரிடம் நல்லவை பல இருந்தாலும், அவரிடம் உள்ள தீயவையால் அதிகப் பாதிப்பு ஏற்படும் என்பதால், அவரின் நற்செயல்களைப் பாராட்டுவது நல்லதல்ல.

ஒருவர், தேவனுடைய காரியங்களில் ஜனங்களைத் தவறாக வழிநடத்திவிட்டு, வேறு பல நல்ல காரியங்களைச் ஜனங்களுக்கு செய்தாலும், அவரைப் பாராட்டுவது நல்லதல்ல. ஏனென்றால், அவர் செய்யும் நல்ல விஷயம், தூண்டில் முள்ளை இரைக்குள் மறைத்து வைத்து, மீன்பிடிப்பது போன்றதாகும். அப்பாவி மீன் அந்த நல்ல இரையைப் பயன்படுத்தச் செல்லும் போது, அந்த தூண்டில் முள்ளில் சிக்கிக் கொள்ளும். சாத்தான் சில ஊழியர்களின் நல்ல செயல்களைச் ஜனங்களுக்குக் காண்பித்து, அவர்களிடமுள்ள சத்திய விரோதச் செயல்களால் அவர்களை வஞ்சித்து விடுவான்.

சிந்தனைக்கு...

தீயவனிடம் கண்ட ஒரு நல்ல விஷயம்,
உன்னைச் சிக்க வைக்கும் தூண்டிலாக மாறலாம்

செப்டம்பர்
9
ஜீவ நீரோடை

போலி அனுபவம்

சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்....
1 தீமோத்தேயு 4:1

1 தீமோத்தேயு 4:1-16

ஒருவர் தான் வாழ்கின்ற பட்டணத்தில் உள்ள எந்த சபைகளுக்கும் ஆராதனைக்காகப் போகமாட்டார். அவர் ஞாயிறு தோறும் சுமார் 150 கிலோ மீட்டர் பயணம் செய்து, இன்னொரு பட்டணத்திலுள்ள சபைக்கு ஆராதனைக்காகச் செல்கின்றார். எதற்காக? நல்ல போதனை அங்கே கிடைக்கிறது என்பதற்காக அல்ல. அந்த சபை பாஸ்டர் நடத்தும் வல்லமையான ஆராதனையில்தான் இவரால் ஆவியில் நிரம்புவதை உணர முடிகிறது. அந்த சபைக்குப் போனால்தான் இவரால் ஆவிக்குரிய உணர்ச்சிநிலையைப் பெற முடிகின்றது.

இது ஒரு நூதனமான கிறிஸ்தவக் கலாச்சாரம். யாராவது ஒருவருடைய தயவினால், தன்னை ஆவியில் நிரம்பியிருப்பது போல உணருகின்ற இந்த அனுபவம் தவறானது. ஆவியில் நிரம்புதல், அபிஷேகம், தேவ பிரசன்னம், ஆவியின் வல்லமை போன்றவற்றை ஒருவர் நேரடியாக தான் விசுவாசிக்கின்ற கர்த்தரிடத்திலிருந்து பெற வேண்டும். ஒரு குறிப்பிட்ட நபரின் ஆராதனையோ அல்லது ஒரு குறிப்பிட்ட விதமான ஆராதனையோ ஒருவரை ஆவியில் நிரப்புகிறதென்றால், இவர் இன்னும் கர்த்தரை அறியவில்லை என்பதே அர்த்தம்.

ஏனென்றால், ஆவியில் நிரம்புதல், அபிஷேகம், வல்லமை என எதுவும் விசுவாசத்தின் மூலம் கர்த்தரிடமிருந்தே வருகிறது. யாரோ ஒருவரால்தான் அந்த அனுபவத்தை நாம் பெற முடிகிறதென்றால், நமக்கு இன்னும் கர்த்தரோடு ஆவிக்குரிய தொடர்பு வரவில்லை என்பதே அர்த்தம். இன்றைய பல கிறிஸ்தவ சபைகளில் போலியான ஆராதனைகளும், வஞ்சிக்கின்ற ஆராதனைகளும், ஏராளம். சிலர், தவறான பரவசப்படுத்தும் யுக்திகளைக் கையாண்டு ஆராதனைநடத்துகின்றனர். சிலர், தவறான ஆவிகளின் செயல்பாட்டைப் பயன்படுத்தி போலியான அபிஷேக அனுபவங்களைப் பலருக்குக் கொடுக்கின்றனர்.

இதுபோன்ற ஆராதனைக் கூட்டங்களைச் சார்ந்து அபிஷேக அனுபவங்களைப் பெறுகின்றவர்கள், ஒருவிதமான உணர்ச்சி போதைக்குள் சிக்கிக் கொள்கின்றார்கள். அதாவது, போலியான ஒரு அபிஷேக அனுபவம், இவர்களுக்கு உணர்ச்சிரீதியான ஒரு பரவசத்தைத் தருகிறது. அதனை உணர ஆரம்பித்தால், பின்னர் அது போன்ற உணர்ச்சிகர பரவச நிலையை எதிர்பார்க்கும் ஒரு பழக்கம் உருவாகி விடுகிறது. அது ஒருவிதமான போதையாகிவிடுகிறது. நேரடியான தேவ ஐக்கிய அனுபவம் இல்லாதவர்கள், இது போன்ற போலியான பரவச அனுபவங்களில் சிக்கிப் பின்னால் வெளியே வர இயலாதவர்கள் ஆகிவிடுகின்றனர்.

சிந்தனைக்கு...

எளிதாக ஆவியில் நிரம்பியும்
ஆவிக்கேற்றபடி நடக்க இயலாவிட்டால், அது போலியான நிரம்புதலே.

செப்டம்பர்

10

ஜீவ நீரோடை

தனிமைப்படுதல்

கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று...
2 தீமோத்தேயு 4:17

2 தீமோத்தேயு 4:1-22

2020-ம் ஆண்டு கொரோனா வைரசின் தாக்குதல் வேகமடைந்த போது தனிமைப்படுத்துதல் (Quarantining) என்ற வார்த்தை அதிகப் பிரபல மடைந்தது. கொரோனா பெருந்தொற்று ஒருவரிடமிருந்து வேறு யாரையும் தொற்றாமலிருப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடு அது. கொரோனா கொள்ளை நோயினால் பாதிக்கப்படுதலின் வேதனையைவிட, இந்த தனிமைப்படுதலின் வேதனையை எண்ணித்தான் அநேகர் அதிகமாக மனம் பாதிக்கப்பட்டார்கள். ஏனென்றால், மனித உறவுகளைத் தவிர்த்துத் தனியாக விடப்படுதல் என்பது மிகவும் வேதனையான ஒன்று.

சிலருக்கு, ஏராளம் நல்ல உறவினர்கள் உண்டு. நல்ல நண்பர்கள் உண்டு. நல்ல நலம் விரும்பிகள் உண்டு. ஆனால், இவர்களின் அன்பையோ, ஆதர வையோ, ஐக்கியத்தையோ, ஆறுதலையோ கொரோனா வியாதியஸ்தர்கள் பயன் படுத்த இயலாமல் தடுக்கப்பட்டனர். எனவே, அன்பானவர்களாலும் ஆதரவாளர் களாலும் ஒரு நேரடியான ஐக்கிய உதவியை இவர்கள் பெற முடியவில்லை. தேவன் ஒருவரே எந்த நேரத்திலும், எந்தச் சூழலிலும் நமக்கு ஆதரவாக இருக்க இயலும் என்ற உண்மை அங்கே உறுதிப்படுத்தப்பட்டது.

தேவன் ஒருவர்தான் எந்த ஒரு நெருக்கடியின் வேளையிலும் நம்முடனிருந்து, நமக்கு ஆறுதலாயிருக்க முடியும் என்ற உண்மையை, அநேகர் உணர்ந்து கொண்ட னர். மரண இருளில் நான் நடந்தாலும் தேவரீர் என்னோடேகூட இருக் கின்றீர் என்றான் தாவீது. அநேகர், தங்களின் மரண வேளையில் தங்களை நேசிக்கும் பிள்ளைகளையும், தங்களின் நீண்ட கால வாழ்க்கைத் துணை களையும் காண இயலாமல் போயினர். தேவ உறவில் வாழ்ந்தவர்கள் மட்டுமே மனித உறவுகள் வர இயலாத தங்களின் தனிமைப்படுத்தப்பட்ட சூழலில், ஒரு ஆறு தலான துணையை உணர முடிந்தது.

கொரோனா பெருந்தொற்று மட்டுமல்ல. வாழ்க்கையின் பல சூழல்கள் நம்மை மனித உறவுகளை விட்டுத் தூரப்படுத்த இயலும். அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு காலகட்டத்தில், எல்லோருடைய ஐக்கியத்தையும் இழந்து தனிமைப்படுத்தப் பட்டதோர் நிலமைக்குத் தள்ளப்பட்டான். ஆயினும், தனக்குத் துணையாக தேவன் இருப்பதை உணர்ந்து, தன்னை திடப்படுத்திக் கொண்டான். தேவ பக்தி என்பது இந்த உலகத்தில் தேவ உறவைப் பெற்று வாழும் ஒரு வாழ்க்கையே. எனவே, தேவ உறவை நாம் நம் முடைய வாழ்க்கையில் அனுபவித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

ஆயிரம் பேர் அருகிலிருந்தாலும் ஆண்டவரோடிருப்பவன் மட்டுமே, தனித்துவிடப்படாததை உணருகிறான்.

செப்டம்பர்
11
ஜீவ நீரோடை

பிள்ளையா பரிசுத்தவானா?

இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்...
1 யோவான் 3:2

1 யோவான் 3:1-16

தேவன், நீ பரிசுத்தமாக வாழ்ந்தால் எனக்குப் பிள்ளையாக இருப்பாய் என்று சொல்லவில்லை. ஆனால், நீ எனக்குப் பிள்ளையாகயிருந்தால் நீ பரிசுத்த மாயிருப்பாய் என்றே சொல்லுகின்றார். தேவன் என்னைப் பரிசுத்தவானாக அல்ல. அவர் என்னைப் பிள்ளையாகவே பார்க்க விரும்புகின்றார். நான் பிள்ளை யாகப் பார்க்கப்படும் நிலமை வந்துவிட்டால், அவரால் பரிசுத்தமாக்கப்பட்ட நிலமை அதனுடைய விளைவாக வந்துவிடும்.

அநேகர், தேவன் என்றால் அவரை எப்பொழுதும் பரிசுத்தக் கண்களோடே பார்க்கிறவராகவே சிந்திக்கின்றனர். எனவே, அவருடைய பார்வையில் பரிசுத்தமாக இருப்பதே நாம் செய்ய வேண்டியதென்று நினைக்கின்றனர். ஆனால், தேவன் பரிசுத்தமான கண்களோடு பார்க்கிறார் என்பது உண்மையாயினும், அவர் பாசக்கண்களோடு பார்க்கின்றார் என்பதே உண்மை. அவர் பரிசுத்தக் கண்களோடு பார்க்கின்றார் என்ற சித்திரத்தையே கொண்டிருந்தால், ஏசாயாவைப் போல நாம் எங்கே அழுக்காக இருக்கிறோம் என்பதையே பார்க்க முடியும். ஆனால், அவர் நம்மை பார்ப்பது அன்பின் கண்களாலே. அங்கே அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது நம்முடைய ஐக்கியத்தையே.

பிள்ளைகளிடம் பெற்றோர் எதிர்பார்ப்பது முதலாவது ஒழுங்குமிக்க வாழ்க்கை அல்ல. அவர்களின் ஐக்கியமே அவர்களின் எதிர்பார்ப்பு. அதுபோல, தேவன் நம்மிடம் முதலாவது எதிர்பார்ப்பது ஐக்கியமே. நாம் அவரோடு ஐக்கியமாயிருக்கும் ஒரு அனு பவம்தான் அவர் எதிர்பார்க்கும் பரிசுத்தத்தை நம்மிடம் ஏற்படுத்துகின்றது. தேவன் தம்முடைய ஐக்கியத்தின் வாயிலாகத்தான் நம்மைப் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடையச் செய்கின்றார். திராட்சைச் செடியாகிய இயேசு கிறிஸ்துவோடு, கொடிகளாக பிணைந்திருப்பதே கிறிஸ்தவ அழைப்பு. அந்தப் பிணைந்திருக்கும் அனுபவம்தான் நம்மைக் கனிகொடுக்கும் அனுபவமுடையவர்களாக மாற்றுகிறது. (யோவான் 15:8)

நாம் பிள்ளைகளாக, தேவ உறவையும் ஐக்கியத்தையும் இன்னும் இன்னும் தேடும் போது, நாம் ஆவியிலும் ஆத்துமாவிலும் தேவன் விரும்புகின்ற விதமான மாற்றங்களைக் கண்டு கொண்டிருப்போம். அநேகர் தங்களைச் சரியாக வைத்துக் கொள்வதிலே அதிகக் கவனம் செலுத்துவார்கள். ஆனால், ஆண்டவரோடு பேசிப் பழகி, மனப்பகிர்வு செய்து, ஐக்கியத்தை அனுபவிக்கும் வாஞ்சை இல்லாமலிருப் பார்கள். எனவே, தங்களை இன்னும் இன்னும் சரி செய்தாலும், தேவனுடைய பிள்ளைகளுக்குரிய ஆசீர்வாதங்களைக் காணாதிருப்பார்கள்.

சிந்தனைக்கு...

பரிசுத்தமில்லாமல் தேவ உறவில் வாழ முடியாது,
தேவ உறவில்லாமல் பரிசுத்தமாக முடியாது.

செப்டம்பர்
12
ஜீவ நீரோடை

பணத்தின் ஆற்றல்

எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது...
பிரசங்கி 2:17

பிரசங்கி 2:1-17

பணம், எனக்கு மகிழ்ச்சியைத் தராது என்று நான் கூறமாட்டேன். பணம் எனக்கு நம்பிக்கையைத் தராது என்று நான் கூறமாட்டேன். பணம், எனக்கு உதவியாக வராது என்று நான் கூறமாட்டேன். பணம் மேற்கண்ட வேலைகளைச் செய்வது உண்மை. ஆனால், பணம் தருகின்ற மகிழ்ச்சியும், நம்பிக்கையும், உதவியும் எனக்குப் போதுமானதல்ல. எனக்கு ஏதாவது குறுக்கீடு ஏற்பட்டால், பணம் என்னை மகிழ்ச்சியாக்குவதைத் தொடர இயலாமல் போகும். எனக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டால் பணம் எனக்குத் தந்து வந்த நம்பிக்கையைத் தொடர்ந்து தராது. எனக்கு ஒரு வித்தியாசமான சூழல் ஏற்பட்டால், பணம் எனக்கு உதவிக்கு வர இயலாமல் போகும்.

பணம் என்னை சந்திரமண்டலம் வரை கொண்டு செல்ல இயன்றதாயிருக்கவும் செய்யும். அதே வேளையில், எனக்கொரு பிரச்சினை ஏற்பட்டால், ஒரு சிறு குழியிலிருந்துகூட என்னைத் தூக்கிவிட இயலாததாகவும் போய்விடும். பணம், என்னைச் சந்தோஷம் என்ற விஷயத்தில் வானத்திலே பறக்க வைக்கவும் இயன்றதாயிருக்கும். ஆனால், சிறு துக்கம் ஏற்பட்டால் என் முகத்தில் ஒரு சிறு புன்னகையைத் தருவதற்குக் கூட இயலாததாகிப் போய்விடும். எனவே, பணத்தைச் சார்ந்த வாழ்க்கை எனக்கு நம்பிக்கைக்கு உரியது அல்ல.

எனவே, ஒருவருக்கு எவ்வளவு ஐசுவரியம் இருந்தாலும், அதற்கு அப்பாற்பட்ட ஒரு ஆதரவு அவசியம். தேவ உறவு மட்டுமே என்னை எல்லா நேரங்களிலும் மகிழ்ச்சியாக நிற்க வைக்கும்.தேவ உறவு மட்டுமே என்னை எந்தச் சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காமல் நிலைநிறுத்தும். தேவ உறவு மட்டுமே, என்ன நேர்ந்தாலும் எனக்கு அனுகூலமான துணையாக வந்து நிற்க இயலும். தேவ உறவுக்குள் என்னுடைய சந்தோஷம் உறுதிப்படுத்தப்பட்டது. தேவ உறவுக்குள் என்னுடைய நம்பிக்கை நிலைபெயராதது.

சாலெமோன் இராஜா ஏராளமான பணமும், பொருளும், ஆஸ்தியும் உடையவன். அவற்றால் அவன் தன்னுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளை மிக மிக ஆடம்பரமாக்கிக்கொள்ள முடிந்தது. ஆனால், அவற்றால் தன்னைச் சஞ்சலத்திற்கு விலக்கி வைத்துக் கொள்ள இயலவில்லை. எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமும் என்று புலம்பிக் கொண்டிருந்தான். ஆனால், தேவ உறவுடன் வாழப் பழகியிருந்த தாவீது, பலவிதமான போராட்டமான சூழ்நிலைகளின் நடுவிலும், உம்முடைய சமுகத்தில் எனக்குப் பரிபூரணமான ஆனந்தம் உண்டு என்ற கூற முடிந்தது.

சிந்தனைக்கு...

பணமில்லாமலே வாழ முடியும் என எண்ணாதே,
பணம் இருந்தால் வாழ்ந்துவிட முடியும் என்றும் எண்ணாதே

செப்டம்பர்
13
ஜீவ நீரோடை

கடைசி அத்தியாயமா?

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்...
யோபு 42:2

யோபு 42:1-17

சில வருடங்களுக்கு முன்பாக ஒருவர் விபத்து ஒன்றில் சிக்கித் தன்னுடைய குடும்பத்தினர் அனைவரையும் இழந்தார். பல காயங்களோடு இவர் உயிர் பிழைத்தார். நண்பர் ஒருவருடைய வேண்டுகோளுக்கிணங்கி அவருக்காக நான் ஜெபிக்கச் சென்றிருந்தேன். இத்தனை இழப்புகளைச் சந்தித்த ஒருவருக்கு, நான் எதை ஆறுதலாகச் சொல்ல முடியும் என்ற கேள்வி எனக்குள் மேலோங்கி நின்றது. ஆயினும், தேவன் அளித்த கிருபையால் சுமார் இரண்டு மணிநேரம் அவரோடு பேச முடிந்தது. அதற்குப் பிறகு அவரை நான் பார்க்கவில்லை.

இதற்குப் பிறகு வாழ்க்கையில் இவருக்கு நம்பிக்கையாக என்ன இருக்க முடியும் என்ற கேள்வி எனக்குள் சில நேரம் எழும். ஆனால், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், இன்னொருவரோடு நான் தொலைபேசியில் பேசும் போது, இவர் என்னிடம் தன்னை அறிமுகம் செய்தார். நான் சந்தித்த அந்த நபரே அவர். ஆச்சரியம் என்னவென்றால் தனக்கு ஆதரவாகவும், ஆறுதலாகவும் ஒரு வாழ்க்கை துணையைப் பெற்று வெளிநாட்டில் வாழ்கின்றார்.

மிக மிகச் சிறப்பாக வாழப்போகிறார்கள் என்று நான் சிந்தித்த சிலர், வாழ்வைக் காணாமல் போனதையும் கண்டிருக்கின்றேன். இதற்குப் பிறகு இவர்களுக்கு எப்படி ஒரு வாழ்வு அமைய முடியும் என எண்ணியிருந்த சிலருக்கு ஆச்சரியமான வாழ்வு கிடைத்ததையும் பார்த்திருக்கின்றேன். வாழ்க்கையில் இது என்னுடைய கடைசி அத்தியாயம் என்று சிலர் எண்ணுவார்கள். ஆனால், அவர்களே ஆச்சரியப்படும்படி மேலும் பல சிறப்பான அத்தியாயங்கள் இருந்ததை அவர்கள் காண்பார்கள்.

யோபுவின் வாழ்க்கையில் அனைத்தும் இழக்கப்பட்டு, அவனுடைய மனைவியே அவனுக்குச் சாவை ஆலோசனையாகக் கூறினாள். ஆனால், அதே யோபுவுக்கு அதற்குப் பின்னாலும் கற்பனை செய்து பார்க்க இயலாத, பல சிறப்பான அத்தியாயங்கள் இருந்தது. சிக்லாக்கில் தாவீது சந்தித்த அதிர்ச்சியான நிகழ்வு, தாவீதின் கதை முடிந்தது என்று கூறுவதற்கேதுவாகவே இருந்தது. ஆனால், கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்ட தாவீதுக்கு, அதற்குப் பிறகுதான் மிகமிகச் சிறப்பான வாழ்க்கை அத்தியாயங்கள் ஆரம்பமாயின. ஆம். நாம் ஒருபோதும் இதுதான் இறுதி என்று எண்ணக்கூடாது. நம்முடைய கண்களுக்கு நாம் சாலையின் கடைசிக்கு வந்துவிட்டதாகத் தோன்றலாம். ஆனால், விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கிப்பார்க்கும் போது, இன்னும் நம் பிரயாணத்தை நிறுத்தாமல் தொடர அங்கு ஒரு ஆச்சரியமான பாதை தோன்றும்.

சிந்தனைக்கு...

கர்த்தரை இறுகப் பிடித்துக் கொண்டவனைவிட்டு,
இன்னும் வாழ முடியும் என்ற நம்பிக்கை, விலகிப் போகாது.

செப்டம்பர்
14
ஜீவ
நீரோடை

இயேசு எதற்காக?

அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல...
யோவான் 6:27

யோவான் 6:14-33

ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனம் ஆதரவற்ற பிள்ளைகளையும், அநாதைப் பிள்ளைகளையும் தங்களிடம் வைத்து வளர்த்து, அவர்கள் கல்வி பயிலவும் செய்தது. எந்த ஒரு ஆதரவுமில்லாத பிள்ளைகள் வளர்ந்து, உயர்கல்வி பெற்றுப் பல்வேறு துறைகளிலே நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற்றார்கள். அந்த நிறுவனத்திற்கு நான் பலமுறை போய் பிரசங்கித்திருக்கிறேன். அங்கே நான் கண்ட ஒரு உண்மை என்னவென்றால் ஆதரவற்றவர்களாக வளர்ந்த பலர் அந்த ஸ்தாப னத்தின் மனிதாபிமான ஆதரவுகளை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். அந்த ஸ்தாபனம் அளித்த கல்வி கற்கும் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண் டார்கள். ஆயினும், பெரும்பாலானோர் இவை யாவற்றிற்கும் காரணராயிருந்த கர்த்தராகிய இயேசுவைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அந்த ஸ்தாபனத்தால் உயர்நிலைக்கு வந்த பலரிடம், இயேசுவால் கிடைக்கும் இரட்சிப்பு, பாவ விடுதலை, பரிசுத்த வாழ்க்கை, தேவ வழிநடத்துதல், நித்திய நம்பிக்கை ஆகியவை இல்லை. ஆம். அநேகர் தங்களின் சரீரப்பிரகாரமான தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழியாக இயேசுவை எண்ணு கின்றார்கள். இயேசு அற்புதம் செய்ய வேண்டும். இயேசு வியாதியைக் குண மாக்க வேண்டும். இயேசு என்றுதான் ஆசைப்படுகின்றார்கள். கிறிஸ்தவக் கூட்டங் களுக்கும் ஜெபக் கூட்டங்களுக்கும் செல்லுகின்ற பலருடைய நோக்கம் இதுவே.

மனிதன், பாவத்திலிருந்து விடுவிக்கப்படவேண்டிய தேவையை உணர வில்லை. மனிதன், பரிசுத்தமாக வாழவேண்டிய தேவையை உணரவில்லை. மனிதன், தேவ உறவோடு வாழவேண்டிய தேவையை உணரவில்லை. மனிதன், அழிந்து போகிற உலகத்திற்கு அப்பால் போய், வாழத் தேவையான நித்திய வாழ்வைப் பெற வேண்டிய தேவையை உணரவில்லை.

அன்று இயேசுவைத் தேடித் தேடி அலைந்த ஒரு கூட்டம் மக்கள், இயேசுவை எதற்காகத் தேட வேண்டுமோ அதற்காகத் தேடவில்லை. அவர்கள் தங்கள் வயிற் றுக்குச் சாப்பாடு போடும் ஒரு இயேசுவையே தேடினார்கள். அவர் ஜனங்களுக்காக தம்மையே அப்பமாகக் கொடுக்க வந்தார். ஆனால், அவர்களோ அவருடைய அற்புதம் செய்யும் வல்லமையினால் தர முடிந்த, அழிந்து போகும் உணவையே தேடினார்கள். தேவனுடைய பிள்ளைகளாக நாம் மாற்றம் பெற்று, பரிசுத்தவான் களாக வாழ்வதற்குத் தேவையான கிருபையைப் பெறவே, நாம் பிரதானமாக இயேசுவைத் தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனுக்குப் பயன்படுவதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் மட்டுமே, தேவனை முழுமையாகப் பயன்படுத்துகிறான்.

செப்டம்பர்

15

ஜீவ நீரோடை

ஆசீர்வாதம் இவர்களுக்கே

நாம் பிள்ளைகளானால் சுதந்தருமாமே...
ரோமர் 8:17

ரோமர் 8:1-18

சிலர், இரவும் பகலும் இடைவிடாமல் ஜெபிக்கின்றவர்கள்தான். ஆனால், ஜெபம் பண்ணுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று வேதம் சொல்லவில்லையே. சிலர், தேவனை மிக மிக அதிகமாகப் புகழ்ந்து பாடி ஆராதனை செய்கிறவர்கள்தான். ஆனால், தேவனைப் புகழ்ந்து கொண்டேயிருந்தால் ஆசீர்வதிக்கப்படுவோம் என்று வேதம் சொல்லவில்லையே. சிலர், அழுது கண்ணீர் வடித்து, கெஞ்சி, உபாவாசித்து வேண்டுதல் செய்கிறவர்கள்தான். ஆனால் இப்படியெல்லாம் செய்யுங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் என்று வேதம் சொல்லவில்லையே. சிலர், பயந்து பயந்துதங்களை இன்னும் இன்னும் சரியாக வைக்க முயற்சிக்கின்றவர்கள்தான். ஆனால், நாம் நம்மைச் சரியாக வைக்கும் முயற்சிகள்தான் தேவ ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் என்று வேதம் சொல்லவில்லையே.

புதிய ஏற்பாட்டில் தேவ ஆசீர்வாதத்துக்கான வழி எளிமையானது. பிள்ளைகளானால் சுதந்தரருமாமே இதுதான் ஆசீர்வாத வழி. (ரோமர் 8:17) தேவன் என்னை முதலாவது அவருடைய பிள்ளையாகப் பார்க்க விரும்புகின்றார். அதுதான் அவருடைய ஆசீர்வாதங்களுக்கு அவர் விதித்த தகுதி. ஜெபிக்கின்றவர்களையெல்லாம் தேவன் பிள்ளைகளாகப் பார்க்கமாட்டார். ஆராதனை செய்கின்றவர்களையெல்லாம் தேவன் பிள்ளைகளாகப் பார்க்கமாட்டார். கெஞ்சி, மன்றாடி, இரக்கம் தேடுகின்றவர்களையெல்லாம் தேவன் பிள்ளைகளாகப் பார்க்கமாட்டார்.

கர்த்தராகிய இயேசுவை இரட்சகராகப் பார்த்து, அவரை ஏற்றுக் கொண்டவர்களைத்தான் பிள்ளைகளாகப் பார்ப்பார். (யோவான் 1:12) தேவனுடைய பிள்ளைகளாகும் நோக்குடன், மறுபிறப்பின் அனுபவம் பெற்றவர்களைத்தான் பிள்ளைகளாகப் பார்ப்பார். நான் தேவனுடைய பிள்ளை என்ற ஒரே தகுதியை முதலிடத்தில் வைத்து, கர்த்தரைத் தேடுகிறவர்களைத்தான் தேவன் பிள்ளைகளாகப் பார்ப்பார். அப்பா பிதாவே, என்று உரிமையுடன் தேவனைக் கூப்பிடும் விதமாக, தேவ ஆவியைப் பெற்றவர்களைத்தான் தேவன் பிள்ளைகளாகப் பார்ப்பார்.

தேவனுடைய பிள்ளைகள் ஜெபம், ஆராதனை, பரிசுத்தமாகுதல் என எல்லா நல்ல விஷயங்களிலும் ஆழமாய்ச் செல்வார்கள். தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற தங்களுடைய ஆவிக்குரிய நிலைமையையும், தேவனுடைய பிள்ளைக்குரிய ஆவிக்குரிய தரத்தையுமே முதலிடத்தில் வைத்துச் செயல்படுவார்கள். தேவ ஐக்கியத் தோடு வாழ்கின்ற ஒரு ஆவிக்குரிய அனுபவத்தையே, ஆசீர்வாத நிச்சயமாகப் பார்ப்பார்கள்.

சிந்தனைக்கு...

தேவன் பிள்ளைகளுக்கென்று குறித்துவிட்ட நன்மைகளை, பக்தர்களாக வாழ்கின்றவர்கள் பெற முடியாது.

செப்டம்பர் 16

பணமும், சந்தோஷமும்

பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை...
பிரசங்கி 5:10

பிரசங்கி 5:9-20

பணம் நமக்கு மகிழ்ச்சியைத் தருமா? பணத்திற்கு நமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்ற ஆற்றல் உண்டு. நாம் விரும்பியவைகளைப் பெறவும், அவற்றால் நம்மைச் சந்தோஷப்படுத்திக் கொள்ளவும் பணத்திற்கு ஆற்றல் உண்டு. பண மில்லாமை நமக்குப் பலவிதமான வருத்தங்களையும், கவலைகளையும், பாரங் களையும் உண்டு பண்ணும். அதே வேளையில், ஏதோ ஒன்று நிகழும்போதும், ஏதோ ஒன்று நாம் நினைத்தபடி நடவாமல் போகும்போதும், நம்முடைய மனதைச் சந்தோஷப்படுத்தும் சக்தி பணத்தை விட்டுப் போய்விடும்.

சில தோல்விகள், சில ஏமாற்றங்கள், சில எதிர்மறை நிகழ்வுகள் பணத்தின் சந்தோஷப்படுத்தும் ஆற்றலை அழித்துவிடும். அதே வேளையில், தேவ ஐக்கியத்தின் விளைவான சந்தோஷம் வித்தியாசமானது. கர்த்தர் அருளும் சந்தோஷம் எல்லா சூழ்நிலைகளிலும் ஆற்றல் மிக்கதாகவே இருக்கும். நம்முடைய எந்தச் சூழ்நிலை யிலும் நம்முடைய மனதைச் சந்தோஷப்படுத்தும் சக்தி, தேவ ஐக்கியத்திற்கு உண்டு. எனவேதான், ஆபகூக் என்ற பழைய ஏற்பாட்டு கால தீர்க்கன், தன்னுடைய எல்லா எதிர்பார்ப்புகளும் தோல்வியுற்றாலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க முடியும் என்ற நம்பிக்கை உடையவனாயிருந்தான்.

தேவ உறவினால் வருகின்ற ஆத்தும சந்தோஷத்தை அனுபவித்தவன் பணம், பொருள் ஆகியவற்றால் வருகின்ற சந்தோஷங்களுக்குக் கதவை அடைத்து விடமாட்டான். ஆனால், பணத்தாலோ பொருளாலோ வருகின்ற சந்தோஷத்திற்கு முதலிடம் கொடுக்கமாட்டான். அவற்றிற்காக தேவனுக்கு உகந்ததல்லாத எந்த வழிகளிலும் செல்லமாட்டான். ஏனென்றால், தேவ உறவை இழந்து பெறுகின்ற அளவிற்குப் பணத்தால் வருகின்ற சந்தோஷம் மேன்மையானதல்ல. பொய்யான வழிகளிலும் தவறான விதங்களிலும் அவன் ஒருபோதும் தன்னைப் பணக்கார னாக்க விரும்பமாட்டான். ஏனென்றால், தேவனுக்குப் பிரியமாக வாழ்வதினால் வருகின்ற சந்தோஷத்தைப் போல, பணத்தினால் வரும் சந்தோஷம் இராது.

சில தேவ ஊழியர்களும் விசுவாசிகளும் தேவனுக்கு உண்மையாக வாழ் வதைவிட, பணத்தையும் பொருளையுமே அதிக வாஞ்சையோடு நாடுகின்றனர். ஏனென்றால், அவர்கள் ஒருபோதும் தேவ ஐக்கியத்தினால் வருகின்ற பரிசுத்த சந்தோஷத்தை அனுபவித்ததில்லை. எனவே அவர்கள் தங்களுக்குப் பணத்தாலும் பொருளாலுமே சந்தோஷத்தைத் தேடுகின்றனர். அதனுடைய உண்மைக் காரணம் தேவ உறவின் சந்தோஷத்தை அனுபவித்திராத வறுமையே.

சிந்தனைக்கு...

பணமும் பொருளும்தான் ஒருவனைச் சந்தோஷப்படுத்தினால், அவன் கர்த்தருடைய சந்தோஷத்தைக் கண்டதில்லை என்பதே உண்மை.

செப்டம்பர்

17

ஜீவ நீரோடை

பண்பைப் பயன்படுத்துவோம்

உதாசனத்துக்கு உதாசனத்தையும்...
1 பேதுரு 3:9

1 பேதுரு 3:8-22

சபை உறுப்பினர் ஒருவரை அந்த சபையைச் சேர்ந்த சிலர் வேண்டுமென்றே மதிப்பதில்லை. அவரைப் பார்த்தாலும் பாராதது போல போய்விடுவார்கள். அவர் இவர்களைப் பார்த்து நலம் விசாரிப்பார். ஆனால், அவர்கள் திருப்பி நலம் விசாரிக்கமாட்டார்கள். பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வந்தனம் சொல்வார்கள். ஆனால், இவரைக் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால், அதை எல்லாம் மனதில் வைக்காமல், இவரோ அவர்களுக்கு உரிய கனத்தைச் செலுத்துவார். உங்களைச் சற்றும் மதிக்காதவர்களை நீங்கள் மட்டும் ஏன் தேடித் தேடிக் கனப்படுத்துகின்றீர்கள் என்று அவருடைய மனைவி கேட்பார். அதற்கு அவர் அவர்களிடம் அந்தப் பண்பு இல்லாததால் அவர்கள் மதிக்கவில்லை. எனக்குக் கர்த்தர் அந்த நல்ல பண்பைத் தந்திருக்கின்றாரே. அதைப் பயன்படுத்தாமல் இருப்பது எப்படி என்று கேட்பார்.

இதுதான் சரியான புரிந்து கொள்ளுதல். சிலருக்கு சிலரைப் பாராட்ட இயலாது. சிலரை வாழ்த்த இயலாது. சிலரை மதிக்க இயலாது. சிலரை நேசிக்க இயலாது. இது அவர்களின் இல்லாமையின் விளைவு. தங்களுக்குப் பிரியப் படாதவர்களை மதிக்கவும், நேசிக்கவும் தேவையான பண்பு வலிமை அவர்களுக்கு இல்லை. எனவே அவர்கள் அப்படியிருக்கின்றார்கள்.

ஆனால், கர்த்தரை உண்மையாகக் கனப்படுத்தி வாழ்கின்ற மக்களிடம் நல்ல பண்புகள் இருக்கும். அவற்றை வைத்துக் கொண்டு மற்றவர்களைப் போல நடந்து கொள்வது நல்லதல்ல. மற்றவர்களுக்கு எது முடியவில்லையோ, அது நம்மால் முடியும் என்று காண்பிப்பதுதான் உண்மையான விசுவாசம். மற்றவர்கள் நடந்து கொள்வது போல நாமும் நடந்துகொண்டால், நாமும் மற்றவர்களைப் போல பண்பற்றவர்களின் பட்டியலில்தான் இடம் பெற முடியும். அதாவது, பதிலுக்குப் பதில் என்ற ரீதியாகவும், தீமைக்குத் தீமை என்ற ரீதியாகவும் நடந்து கொள்ளக்கூடாது. நம்மை மதிக்கத் தெரியாதவர்களைக் காணும் போது தேவையான சூழலில் நமக்கு அவர்களை மதிக்க இயலும் என காண்பிப்பதுதான் ஆவிக்குரிய விவேகம்.

நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது, தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்று வேதம் சொல்கின்றது. (1 பேதுரு 2:15) மற்றவர்கள் என்ன செய்யவில்லை என்று நாம் பார்த்து அதற்கேற்ப செயல்படுவது ஆவிக்குரியவர்களுக்கு அழகல்ல. நாம் தேவ கிருபையாலும், தேவ ஆவியாலும் என்ன செய்ய இயலும் என்று சிந்தித்துச் செயல்படுவதேத் தேவனை அறிந்தவர்களுக்கு அழகு.

சிந்தனைக்கு...

பிறரிடம் தீய பண்பைக் காணும் போதெல்லாம்,
உன்னிடம் நற்பண்பு இருப்பதை பிறர் காணச் செய்.

செப்டம்பர்
18
ஜீவ நீரோடை

அவர் தவறாதவர்

தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறவன்...
யோபு 40:2

யோபு 40:1-24

என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் துவக்க நாட்களில், பல்வேறு தருணங்களில் கர்த்தர் ஏன் இப்படிச் செய்கிறார், ஏன் இப்படிச் செய்யாதிருக்கின்றார் என்றெல்லாம் அதிருப்பதியான கேள்விகளை எனக்குள் எழுப்பியிருக்கின்றேன். ஏன் என் வாழ்வில் இப்படியெல்லாம் நடக்க விடுகிறார்? ஏன் எனக்காகக் குறிப் பிட்ட சில சூழல்களை மாற்றாமலிருக்கின்றார், என்பது போன்ற கேள்விகள் எழும்ப விடாமல் தடைசெய்வது, எனக்கு கடினமாயிருந்திருக்கிறது. அவை மிக மிகச் சொற்பமான நேரம்தான் எனக்குள் தங்கும் என்பது உண்மையாயினும், அப்படிப் பட்ட மனநிலைகள் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் காலங்கள் போகப்போக தேவன் தவறு செய்ய இயலாதவர் என் பதையும், தேவன் சற்றுக் கூட சரியற்றுச் செயல்படமாட்டார் என்பதையும் நான் உறுதியாக கற்றுக் கொண்டேன். இப்பொழுது கூட சில நேரங்களில் தேவன் இப்படிச் செய்திருக்கலாமே தேவன் இப்படி செய்யாமலிருந்துவிட்டாரே என் றெல்லாம் சிந்திக்கத் தூண்டப்படுவதுண்டு. ஆயினும், அது சற்று நேரம் கூட தொடரவிடாமல் சிறுநெருப்பை ஊதி அணைப்பது போல அணைத்துவிடுவேன். ஏனென்றால், தேவனுடைய பக்கத்தில் தவறு இருக்கவே முடியாது என்றதொரு சந்தேகமற்ற நம்பிக்கையே.

ஏதாவது ஒரு இடத்தில் தவறு இருந்தால் அது என்னுடைய பக்கத்தில்தான் இருக்க முடியும். தவறு எங்கே இருக்கிறது என்று தேவனுடைய செயல்பாட்டில் பக்கத்தில் போய் தேடுவது மதியீனம். அது என் பக்கத்தில்தான் இருக்க முடியும். எனவே, ஆராய்ந்து பார்ப்பதென்றால் என்னைத்தான் நான் ஆராய்ந்துபார்க்க வேண்டும். குறைந்தபட்சம் எனக்குச் சரியாகப் புரிந்து கொள்ளத் தெரியவில்லை என்ற தவறாவது என் பக்கத்தில் இருக்கும். எனவே, சில நேரங்களில் நான் ஜெபிக்கும் போது, ஆண்டவரே, நான் சற்று அதிருப்தியான மனநிலையை உணருகின்றேன். ஆயினும், நீர் மிக மிகச் சரியாகவே செய்கிறீர் என்ற நம்பிக்கையை விட்டு இறங்க மாட்டேன். ஏனென்றால், நீர் சில வேளைகளில் செயல்படும் விதத்தின் பின்னால் உள்ள நியாயத்தை நான் உணர இன்னும் சில காலம் ஆகலாம். ஆனால், நீர் நல்லவராகவே இருக்கிறீர் என்று சொல்லுவேன்.

சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளின் அழுத்தத்தால், தேவன் சில விஷயங்களை சரியாகச் செய்யாதது போல நாம் உணர நேரிடலாம். ஆனால், அந்த உணர்வுகளையல்ல. தேவனைக் குறித்த உண்மை நிலையைத்தான் நாம் அதிகமாகச் சார்ந்து கொள்ள வேண்டும்.

— சிந்தனைக்கு... —

நல்ல நேரங்களில் கர்த்தர் நல்லவர் என்று பாடு.
துன்ப நேரத்தில் அவர் நல்லவர் என்ற நம்பிக்கையில் உறுதியாயிரு.

செப்டம்பர்
19
ஜீவ நீரோடை

ஜெபம் பண்ணினாலும்

நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்...
ஏசாயா 1:15

ஏசாயா 1:1-20

ஜெபம் என்பதை ஆவிக்குரிய வாழ்க்கையின் முதுகெலும்பு என்று கூறலாம். ஆயினும், ஆவிக்குரிய வாழ்க்கையின் எல்லா எலும்புகளும் ஜெபம் தான் என்று சொல்லிவிடக்கூடாது. ஜெபத்தின் முக்கியத்துவத்தை அறியாததால், அநேகர் தேவ நன்மை பெறும் வாய்ப்புகளை இழக்கின்றனர் என்பது உண்மை. அதே வேளையில், ஜெபத்திற்கு அதனுடைய எல்லைகளைத் தாண்டி முக்கியத் துவம் தருவதால், பல தேவ நன்மைகளுக்கான வாசல் திறக்காமல் போகிறது என்பது உண்மை. ஏனென்றால், இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் தேவனைச் செயல்பட வைப்பது, ஜெபம் மட்டுமே என்றதொரு தவறான நம்பிக்கை, ஆழமாக வேர் ஊன்றிப் போய்விட்டது.

தேவன் எந்த ஒன்றிற்கும் நம்முடைய ஜெபங்களைத்தான் எதிர்நோக்கி யிருக்கின்றார் என்று எண்ணிவிடக்கூடாது. ஏதாவது ஒன்றைத் தேவன் செய்யாமல் போனால், ஜெபம் குறைவுபட்டதுதான் காரணம் என்று எண்ணிவிடக்கூடாது. சில நேரங்களில் தேவன் ஒரு நன்மையான விஷயத்தைச் செய்வதற்கு அவருக்கு தேவைப்படுவது ஜெபம் மட்டுமல்ல. நாம் நம்மை ஆராய்ந்து பார்க்கும் ஒரு அனுபவம் தேவனுக்கு அவசியம். நாம் நம்மைச் சரி செய்யும் ஒரு செயல்பாடு தேவ னுக்கு அவசியம். நாம் நம்மை அறிந்து உணர்ந்து மனந்திரும்பும் செயல்பாடு தேவ னுக்கு அவசியம். நாம் முற்றிலுமாக தேவனுடைய வழியை நம்பி, அதில் நடக்கும் ஒரு அனுபவம் தேவனுக்கு அவசியம்.

ஜெபம் ஜெபம் என்று ஜெபத்தைக் கொண்டே தேவனுக்கு அழுத்தம் கொடுத்துச் சாதித்து விட முடியும் என்று எண்ணக்கூடாது. நாம் அழுது ஜெபிக்கலாம். நாம் உபவாசித்துச் ஜெபிக்கலாம். நாம் பெருங்கூட்டமாய் கூடி, ஜெபிக்கலாம். நாம் இடைவிடாமலும் ஊக்கமாகவும் ஜெபிக்கலாம். நாம் இரவெல்லாம் ஜெபிக் கலாம். நாம் போராடி ஜெபிக்கலாம். இவை யாவும் நல்ல விஷயங்களே.

ஆனால், இவை யாவும் இருந்தாலும் நம்மை நாம் உணராமல் ஜெபித்தால் பலன் வராது. நம்மை நாம் சீர்படுத்தாமல் ஜெபித்தால் நன்மை வராது. நாம் கர்த்தருக்கேற்ற ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாமல் ஜெபித்தால் நல்லது நிகழாது. நாம் கர்த்தருடைய சத்தியத்தை அறிவதற்கு முக்கியத்துவம் தராமல் ஜெபித்தால் நன்மை வராது. ஓசியா தீர்க்கன் காலத்தில் அவர்கள் தங்கள் தவறு களை உணர்ந்து என் முகத்தைத் தேட மட்டும், நான் என் ஸ்தானத்திற்கு திரும்பிப் போய்விடுவேன் என்றார் தேவன். (ஓசியா 5:15)

சிந்தனைக்கு...

பரிசுத்தமாக வாழ்வதற்குக் கவனம் செலுத்து, இல்லையேல் ஜெபமும் இன்னொரு விக்கிரகம் ஆகிவிடும்.

செப்டம்பர்
20
ஜீவ நீரோடை

தாழ்மை எப்படி?

தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.
1 பேதுரு 5:5

1 பேதுரு 5:1-14

நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது தாழ்மையின் முதல்படி. நம்மை பிறர் தாழ்த்தும் போது அதனை தாங்கிக் கொள்வதுதான் தாழ்மையின் முக்கியமானபடி. சிலரால் நாம் வேண்டுமென்றே தாழ்த்திக் காட்டப்படலாம். சிலரால் நாம் தேவையின்றி இழிவுபடுத்தப்படலாம். சிலரால் நாம் காரணமின்றி மன நோவடைய செய்யலாம். இது போன்ற சூழ்நிலைகளில் நாம் அவற்றிற்கு பதிலுக்குக் பதில் செயல்களை நாடாமல், அவற்றை ஏற்றுக் கொள்வதே உண்மையான தாழ்மை ஆகும்.

அதே வேளையில் நாம் நம்மைக் கட்டாயப்படுத்தி நம்முடைய உணர்வுகளை அடக்கிக் கொள்வதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். புண்பட்ட உணர்வையும், இழிவுபடுத்தப்பட்ட உணர்வையும், கோபமூட்டப்பட்ட உணர்வையும், அநீதி செய்யப்பட்ட உணர்வையும் நமக்குள் அடக்கிக் கொள்வதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நமக்குள் ஏற்பட்ட வலிகளை வெளிக்காட்டாமல் நமக்குள் அடக்கிக் கொள்வதை தாழ்மையின் வெற்றி என்று எண்ணிவிடக்கூடாது. அதனால், மன ரீதியான அழுத்தங்கள் ஏற்பட்டு அவை வியாதிகளுக்குக் கூட வழிவகுக்கும். அவை இதய நோயாகவும், இரத்த அழுத்த நோயாகவும், சர்க்கரை நோயாகவும், அல்சராகவும், மன நோய்களாகவும் மாறிவிடக்கூடும்.

மற்றவர்களால் நமக்குள் ஏற்பட்ட நோவுகளின் உணர்வுகளை அடக்குவதல்ல. அவற்றைக் கரைக்க வேண்டும். கர்த்தருடைய அன்பைத் தேடுவதாலும், தேவ சமாதானத்தைத் தேடுவதாலும், தேவ ஐக்கியத்தைத் தேடுவதாலும் இருதயத்தில் நிறைகின்ற வேதனையான உணர்வுகளைக் கரைக்க வேண்டும். பிறருடைய வார்த்தைகளாலும் செயல்களாலும் ஏற்பட்ட கோப உணர்வையும், கசப்புணர்வையும், வெறுப்புணர்வையும் நமக்குள் அடக்க அடக்க, அது ஆவிக்குரிய வாழ்க்கையின்மேல் அதிருப்தியை ஏற்படுத்தும். எனவே, அவற்றை தேவ சமுகத்தில் தேவனோடு பேசிப் பேசி கரைக்க வேண்டும்.

பலத்திற்கு மிஞ்சிய சுமைகள் நமது நரம்பு மண்டலத்தை நொறுக்கிவிடும். அதிகமான நோவுகளையும், கோபங்களையும், வருத்தங்களையும், அங்கலாய்ப்பு களையும், மனதிற்குள் அடக்க அடக்க, அதனால் பலவிதமான எதிர்மறை விளைவுகள் ஏற்படும். எனவே, தேவ உறவோடு மனதை இன்னும் இன்னும் தேவ ஆவியால் பலப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியின் பலப்படுத்தலின் வாயிலாகத்தான், நாம் நம்மை தாழ்த்திக் கொள்ளுதலில் நல்ல வெற்றியைப் பெற முடியும்.

சிந்தனைக்கு...

நம்மை தாழ்த்துகின்றவர்களை எதிர்த்து நின்றால், நம்மிடம் தாழ்மை இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

செப்டம்பர்
21
ஜீவ நீரோடை

செயலில் அன்பு

அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை...
1 கொரிந்தியர் 13:2

1 கொரிந்தியர் 13:1-13

முந்தின வாரம் ஞாயிறு ஆராதனை வேளையில் அன்பைச் செயலில் காட்டுதல் தொடர்பாக போதகர் பிரசங்கம் செய்தார். மறுவாரம் ஞாயிறு ஆராதனை வேளையில் அன்பைச் செயலில் காட்டியவர்கள் சாட்சி சொன்னார்கள். அநேகர் மற்றவர்களுக்குச் செயல்ரீதியாகப் பல நன்மைகளை செய்ததைக் குறித்து சாட்சி சொன்னார்கள். ஆனால், ஒருவர் மட்டும் வித்தியாசமாகச் சாட்சி சொன்னார். தன்னால் செலவு செய்து பிறருக்கு அன்பைச் செயலளவில் காட்ட முடியவில்லை என்றார். ஆனால், தான் சிலரை மன்னித்ததாகவும், சிலரைப் பொறுத்துக் கொண்ட தாகவும், பிறரால் ஏற்பட்ட சில அநீதிகளை சகித்துக் கொண்டதாகவும் சாட்சி சொன்னார். அதனைக் கேட்ட போதகர் இதுதான் அன்பை மிக வலிமையாகச் செயலில் காட்டுதல் என்றார்.

அன்பைச் செயலில் காட்டுதல் என்றால், அநேகர் சில நற்செயல்களைச் செய்தல் என்றே எண்ணுகின்றனர். நற்செயல்கள் வழியாக அன்பு வெளிப்படுத்தப் படமுடியும். ஆயினும், அன்பில்லாத ஒருவரும் நற்செயல்கள் பல செய்ய முடியும். உண்மையான அன்பின் செயல்கள் பல நல்ல சுபாவங்கள் வழியாகவே வெளிப் படுகிறது. பழிக்குப் பழியாகச் செய்யாமையில் அன்பு வெளிப்படுகிறது. பிறருடைய தவறான செயல்கள் தந்த வேதனையைச் சகிப்பதில் அன்பு வெளிப்படுகிறது. பிறரை மன்னித்தல் பிறரை ஏற்றுக் கொள்ளுதல், பிறருக்கு நல்ல ஐக்கியம் கொடுத்தல் ஆகியவற்றால் அன்பு செயலளவில் வெளிப்படுகின்றது.

இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 13-ம் அத்தியாயத்தில் கூறுகின்றதைப் பார்க்கின்றோம். அன்பு என்பது நீடிய சாந்தம், தயவு, பொறாமை யின்மை, தன்னைப் புகழாமை, இறுமாப்பின்மை போன்ற பண்புகளில் வெளிப் படுகிறது. அயோக்கியமானதைச் செய்யாமை, தற்பொழிவை நாடாமை, சின மடையாமை, தீங்கு நினையாமை போன்ற நற்குணங்களில் வெளிப்படுகின்றது.

ஆம், மற்றவர்களுக்கு சில நன்மைகளைச் செய்வதில் மட்டுமல்ல. மற்ற வர்களின் நலனுக்கு எதிராக நம்முடைய சுபாவங்கள் இருக்கக்கூடாது. மற்றவர்கள் நடந்து கொண்டது போல நாமும் நடப்பதற்கு நம்முடைய சுபாவங்கள் தூண்டக் கூடாது. எனவே வெறுப்பு, கசப்பு, கோபம், பழிவாங்கல், பொறாமை, பெருமை போன்ற தவறான சுபாவங்கள் என்னும் அம்புகளை பிறர் மேல் எய்யாம லிருப்பதே அன்பைச் செயலில் காட்டுவதற்கு மிகப்பெரிய அடையாளங்கள் ஆகும்.

சிந்தனைக்கு...

நல்ல செயல்கள் நம்மைப் பலர் நடுவில் உயர்த்தும்,
ஒரு தீய சுபாவம் அவர்களுக்கு முன்பாக நம்மை விழச் செய்யும்.

செப்டம்பர்
22
ஜீவ நீரோடை

தேவ அன்பை புரிந்து கொள்தல்

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள... எபேசியர் 3:19

எபேசியர் 3:9-21

தேவ அன்பு என்பதை நாம் தேவனுடைய பக்கத்திலிருந்து பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். ஆப்பிரிக்க நாட்டுப் பெண்கள் சிலருடைய சிகை அலங்காரத்தைப் பார்த்தால், இந்தியாவில் உள்ளவர்களுக்கு அது சிரிக்கத் தக்க வேடிக்கையாயிருக்கும். இந்த சிகை அலங்காரத்தில் என்ன அழகு இருக்கிறது என்று நாம் சிந்திப்போம். ஆனால், அதனை ஆப்பிரிக்க நாட்டவரின் கலாச்சாரப் பின்னணியிருந்து பார்த்தால்தான் அது அவர்களின் நாட்டில் பாராட்டத்தக்க சிகை அலங்காரம் என்பது தெரியும். அதுபோல, தேவனுடைய அன்பை மனிதர்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் புரிந்து கொள்வது கடினம்.

சில நேரங்களில் நம்முடைய பார்வையில் மிக மிக அவசியமான ஒரு உதவி யாகத் தோன்றும் ஒன்றை தேவன் செய்வதில்லை. அவ்விதமான வேளையில், தேவன் நம்மை நேசிக்கிறார் என்று சொல்வதை நம்மால் புரிந்து கொள்ள இயலாது. அன்பு என்றால் நமக்கு மிக மிக தேவையான ஒன்றைத் தர வேண்டாமா? அன்பு என்றால், அதற்குரிய வலிமை பெற்றிருக்கும் ஒருவர் அதனை நமக்குச் செய்ய வேண்டாமா? என்ற கேள்விகளே எழும்பும். ஏனென்றால், இந்த உலகத்தில் நமக்கு மிக மிக அவசியம் என்று கருதப்படும் ஒரு உதவியை ஒருவர் செய்யாவிட்டால், அவரை நம்மை நேசிக்கிறவராக நம்மால் கருத முடியாது.

சில நேரங்களில், நம்முடைய வாழ்க்கையைப் பெரிய அளவில் பாதிக்கப் போகும் ஒரு விஷயத்தில் தேவன் உதவி செய்யாவிட்டால் நமக்கு சலிப்பும் வருத் தமும் வருகிறது. ஆனால் தேவன் நாம் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் அப்படியே தருவார் என கூற இயலாது. நம்மை நேசித்து பல நன்மைகளைச் செய்யும் தேவன் சில நன்மைகளைத் தராமல் போவதுமுண்டு. அதனை நாம் புரிந்து கொள்வது கடினம்.

தேவன் எல்லாவற்றையும் நித்திய திட்டத்தின் அடிப்படையிலேயே பார்க் கின்றார். அவர் எல்லாவற்றையும் தம்முடைய தெய்வீக சித்தாந்தத்தின் அடிப் படையிலேயே செய்கின்றார். நாம் இந்த பூமியில் நமக்கு என்ன நடக்கிறது என்ற அடிப்படையில் அவருடைய அன்பைப் புரிந்து கொள்கின்றோம். ஆனால், தேவனோ தம்முடைய நித்திய திட்டத்தின் அடிப்படையில் செயல்படுவதால், நாம் கேட்டபடி செய்யாமல் போகிறார். ஆயினும், அவர் நம்மேல் வைத்த அன்பு உண்மை யானது. கேட்டது தரப்படாத வேளையிலும், அவர் நம்மோடிருந்து தம்முடைய ஆவியினால் அவருடைய அன்பை நாம் அறியும்படி செய்து, நம்மை தாங்குகிறார்.

சிந்தனைக்கு...

ஏன் இந்தத் துன்பப் பாதை என்ற கேள்வி அதனைக் கடப்பதற்கான தேவ பாதையை மறைத்து விடுகிறது.

செப்டம்பர்
23
ஜீவ நீரோடை

இது தெரியுமா?

நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே... மத்தேயு 23:28

மத்தேயு 23:23-39

ஒரு சபையில் ஒருவர் மிகவும் பெருமைக்காரராக அறியப்பட்டிருந்தார். இன்னொருவர் மிகவும் தாழ்மையானவராக அறியப்பட்டிருந்தார். பெருமைக் காரரின் தோற்றம், உடை, நடை, பேச்சு, குணம் எல்லாமே, அவர் ஒரு பெருமை பிடித்தவர் என்பதை பிறர் அறிய வைக்கும். அதே போல அந்த தாழ்மையாளரின் உடை, நடை, தோற்றம், பேச்சு எல்லாமே, அவரை ஒரு நல்ல தாழ்மையாளராக அறியச் செய்யும். ஆனால், இரண்டு பேரையும் நன்கு அறிந்திருந்த ஒருவர் இப்படிச் சொன்னாராம். அந்த பெருமைக்காரருக்குத் தன்னிடம் தாழ்மை இல்லை என்பது தெரியும். இந்த தாழ்மையாளருக்கோ தன்னிடம் பெருமை இருப்பது தெரியாது.

ஆம், சிலர் மிக மோசமான பாவிகளாகயிருந்தாலும், தாங்கள் பாவிகள் என்பது அவர்களுக்கு தெரியும். ஆனால், சிலர் தங்களை மிக மிக நல்ல பரிசுத்த வான்கள் என்று எண்ணிக் கொண்டாலும் அவர்கள் தங்களுக்குள் பாவிகள். ஆனால் அது அவர்களுக்குத் தெரியாது. தங்களைப் பாவிகள் என்று அறிந்த வர்கள். இன்று இல்லாவிட்டால் என்றாவது ஒரு நாள் மனந்திரும்புவதற்கான வாய்ப்பு உடையவர்களே. ஆனால். தங்களுக்குள் பாவம் இருந்ததும் சில தோற்றங்களாலும். சில பக்திச் செயல்களாலும் தங்களைப் பரிசுத்தவான்கள் என எண்ணுகின்றவர்கள் அந்த வாய்ப்பை இழக்கின்றார்கள். ஏனென்றால், இவர்களின் பரிசுத்த வெளித்தோற்றங்களும், பக்திச் செயல்களும் இவர்கள் தங்களைப் பாவிகள் என்று அறிய விடாமல் செய்துவிடுகின்றது.

ஒருவர் தனக்கு தாழ்மைத் தோற்றம் கொடுப்பதிலே அதிகத் தீவிரமா யிருப்பார். மற்றவர்கள், தன்னைப் போல தாழ்மையாயிருக்காவிட்டால் அவர் களைப் பெருமைக் காரர்கள் என்றும், நரகத்துக்கு போகிறவர்கள் என்றும் கூறுவார். ஆனால், தன்னிடத்தில் பிறரை நேசிக்கும் மனம் இல்லாததை இவர் உணர்வ தில்லை. தன்னிடம் பிறருக்கு உதவும் பண்பு இல்லாததை உணருவதில்லை. தான் ஒரு பெரிய தாழ்மையாளர் என்ற சிந்தனையே இவருக்குள் பெருமையை வளர்ப்பது இவருக்குத் தெரியாது.

ஆம், நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள் என்றார் இயேசு. (லூக்கா 16:15) நாம் எப்படித் தோன்றுகின்றோம். எப்படிக் காணப்பட விரும்புகின்றோம் என்பதல்ல. நம்மிடம் தேவன் காண்கின்ற குறைகளை நாம் காண்கின்றோமா என்பதே முக்கியம். தேவ சமுகத்தில் நாம் வாழ்ந்தால், நம்மில் இல்லாததை நாம் அறியாமல் இருக்க இயலாது.

சிந்தனைக்கு...

தாழ்மை தேவனை உன்னை நோக்கி வரவைக்கும்
பெருமை உன்னை தேவனை விட்டு விலகி ஓட வைக்கும்.

செப்டம்பர்
24
ஜீவ நீரோடை

பாவத்தின் நெருக்கம்

நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும்.
எபிரெயர் 12:1

எபிரெயர் 12:1-16

காரில் பின்னால் உள்ள காட்சிகளைப் பார்க்க கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கும். அந்தக் கண்ணாடியில் இதில் நீங்கள் காண்கின்ற பொருட்கள் தோன்றுவதை விட அவை மிக அருகாமையிலே இருக்கிறது என்று எழுதியிருக்கும். அதாவது அந்த கண்ணாடி தூரத்தில் இருப்பதைப் போல காட்டுகின்ற ஒன்று. நாம் எண்ணுவதைவிட மிக அருகாமையில் வந்துவிட்டது என்று அர்த்தம். சில நேரங்களில் பாவம் என்பது வெகு தூரத்தில் இருப்பதைப் போலவே தோன்றும். ஆனால், உண்மையில் அது மிக மிக அருகாமையில் இருக்கும். சில நேரங்களில் நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் வெகுதூரத்தில் இருப்பதாக எண்ணிச் சிலர் சாலையை கடக்க நினைப்பார்கள். ஆனால், சாலையைக் கடக்குமுன்னரே வாகனங்கள் பக்கத்தில் வந்து விடும்.

வாழ்க்கையில் சில தொடர்புகள் பாவமானதாக எப்பொழுது மாறும் என்று கூற இயலாது. பணம் பொருள் சம்பந்தமான விஷயங்கள் எப்பொழுது நம்மை வழிவிலகக் கட்டாயம் தரும் என்று கூற இயலாது. கவனிக்கப்படாத சில தவறான சுபாவங்கள் எப்போது வெடிகுண்டுகளைப் போல வெடிக்கும் என்று கூற இயலாது. சில விஷயங்கள்மேல் இருக்கின்ற சாதாரணமான ஈர்ப்புகள், எப்பொழுது காந்தமாக நம்மைப் பிடித்து இழுத்துக் கொள்ளும் என்று கூற இயலாது.

நாம் இவை யாவும் நம்மை நெருங்க இயலாத அளவிற்கு தூரத்திலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே கிட்ட வந்து நெருக்கி விடக்கூடும். பாவங்களும் பாரங்களும் நம்மை நெருங்கி நிற்கின்றன என்று எபிரெயர் நிருபத்தில் வாசிக்கின்றோம். (எபிரெயர் 12:1) நாம் அவற்றைத் தள்ளிவிட்டு ஓடத்தக்க அளவிற்கு, எப்போதும் அதற்குரிய விழிப்புணர்வோடும், எதிர்ப்பு சக்தியோடும் காணப்பட வேண்டும். யோசேப்பை பாவம் நெருக்கும்படியாக வந்தது. அவன் அதைத் தள்ளிவிட்டு ஓட இயன்றவனாய் இருந்தான்.

ஏனென்றால், அவன் தேவ உறவோடும், தேவனுக்குப் பயப்படுகின்ற பயத்தோடும் வாழ்ந்தான். இன்று பாவம் என்பது ஒரு தொடுதல் தூரத்தில்தான் உள்ளது. சில நேரங்களில் ஸ்மார்ட் போனில் நல்லதை தேடுகின்ற ஒருவர், சற்று தவறுதலாக இடம் மாற்றி தெட்டுவிட்டால், ஒரு அழிவுக்கேதுவான அசுத்த பாவம் அங்கே கண்முன் தோன்றி விடும். எனவே, தேவ கிருபை, தேவ ஐக்கியம், தேவ வார்த்தை விழிப்புணர்வு ஆகியவற்றை மிகச் ஜாக்கிரதையாகத் தேடுகின்ற ஒருவரால்தான் விழாமல் நிற்க முடியும்.

சிந்தனைக்கு...

பாவம் ஒரு வெடிகுண்டு போன்றது. அது வெடித்த பின்புதான் அதனுடைய பயங்கரம் தெரியும்.

செப்டம்பர்
25
ஜீவ நீரோடை

பதவி தேவையா?

எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால்...
மாற்கு 10:43

மாற்கு 10:35-45

தேர்தல் வைத்து சபை கமிட்டி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தை உடைய சபை அது. அந்த திருச்சபையில் மிக மிகப் பக்தியும் நேர் மையும் உடைய இருந்த ஒருவரை, சிலர் தேர்தலில் நிற்கக் கட்டாயப்படுத்தினர். அவருக்கு அதில் விருப்பமில்லை. உங்களைப் போன்ற நேர்மையான நபர் கமிட்டியில் வந்தால், சபைக்கு சிறப்பாகப் பணிபுரியலாமே என்று சிலர் கூறவே ஒத்துக் கொண்டார். ஆனால் தேர்தலில் அவர் ஜெயிக்கவில்லை. இந்த திருச்சபையில் கணிசமானவர்கள் என்னை தேவையில்லை என்று கூறிவிட்டார்களே என்று அவர் மிகவும் வருத்தப்பட்டார்.

ஆனால், அவருடைய மனைவிக்கோ ரொம்ப சந்தோஷம். ஏனென்றால், அவருடைய பார்வை வேறு. சபை மக்கள் நடுவில் மிக சிறப்பாக பல சேவைகளை செய்து வருகின்ற தன்னுடைய கணவர் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டால் பாதி வேலைகூட செய்ய முடியாது என்பது அவருக்குத் தெரியும். இவர் என்ன செய்யப் போனாலும் கமிட்டியில் சிலர் எதிர்த்துப் பணி செய்ய விடமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

ஆம், சிலரைப் பதவிகள் கட்டிப்போட்டு விடுகிறது. பரிசுத்தமாகச் செயல்பட்டு வந்த சிலர், பதவி என்னும் மகுடம் வந்ததும் பாவிகளாகி விடுகின்றனர். சிலர், சுயாதீனமாகயிருந்து செய்த நல்ல விஷயங்களைப் பதவி என்னும் இருக்கையில் அமர்ந்ததும் செய்ய முடியாமல் போய் விடுகிறார்கள். சில நேரம் நம்மைத் தேடி பதவி வராமல் போனாலோ அல்லது நாம் தேடிச் சென்று பதவி கிடைக்காமல் போனாலோ கவலைப்படுவதற்கு அவசியமில்லை. ஏனென்றால், பதவி என்பது அநேகர் தங்களுடைய நல்ல நிலையைப் பலியிடும் கசாப்புக் கடைக்காரனின் கத்தியாகிவிடுகிறது. பதவியைத் தந்தால் நாம் விரும்பப்பட்டுள்ளோம் என்று எண்ணுவது தவறு. பதவி தராவிட்டால் நாம் தேவையற்றவர்களாக நிராகரிக்கப் பட்டிருக்கின்றோம் என்று எண்ணுவது தவறு.

கர்த்தருடைய அன்பில் அநேகருக்கு நல்லதைச் செய்ய பதவி என்ற சங்கிலி தேவையில்லை. பதவியால் கட்டப்பட்டு நாம் செயல்படுவதைவிட பதவி என்ற சங்கிலியால் கட்டப்படாமல் தேவ அன்பால் கட்டப்பட்டு அதிகமாகச் செய்யலாம். நமக்குத் தேவை கர்த்தருடைய நாமத்தில் பணியாற்ற வாய்ப்புதானேயன்றி ஒரு குறிப்பிட்ட பதவி தரும் கௌரவம் அல்ல. ஏனென்றால், பதவி பலருடைய பரிசுத்த வஸ்திரத்தை தீட்டாக்கி அருவருப்பானவர்களாக நிற்க வைத்து விடுகிறது.

சிந்தனைக்கு...

பாவத்தால் விழ வைக்க முடியாத பலரை,
பதவிகள் எளிதாக விழ வைத்து விடுகிறது.

செப்டம்பர்

26

ஜீவ நீரோடை

கர்த்தருக்கு வாய்ப்பில்லை

அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமா யிருந்தது... 1 சாமுவேல் 3:1

1 சாமுவேல் 3:1-21

ஒரு மிகப்பெரிய சபையின் விசேஷ நிகழ்ச்சி ஒன்றிற்கு, மிக முக்கியமான கிறிஸ்தவ ஊழியப் பொறுப்பில் உள்ள பலர் மேடையில் அமர்ந்திருந்தனர். பேராயர்கள், பிரபல சுவிசேஷகர்கள், சபை அமைப்பு நிர்வாகிகள் என பலருக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், அந்த மேடையில் அழைக்கப்பட்டு அமர்ந்திருந்த ஒருவர் அவ்வளவு பிரபலமோ பெரிய பதவியோ இல்லாதவர். ஆனால், மிக நன்றாக சத்தியத்தைப் பேசுகின்றவர். ஆனால், அவர் சாதாரண மானவராகக் கருதப்பட்டதால், அவருக்குப் பேச வாய்ப்புத் தரப்படவில்லை.

இறுதியில் அந்தக் கூட்டம் பற்றிய கருத்துக்களைக் கூற சிலர் அழைக்கப் பட்டனர். கருத்துக் கூற வந்த ஒருவர் இவ்விதம் கூறினாராம். கர்த்தருடைய நாமத்தை முன்னிலைப்படுத்தி நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில், கர்த்தருக்குப் பேச ஏன் வாய்ப்பளிக்கவில்லை என்றாராம். ஏனென்றால், கர்த்தருடைய வார்த்தை பேசும் அந்த எளிய ஊழியரைப் பேச விடாததையே அவர் அவ்விதம் குறிப்பிட்டார்.

தேவன், ஒருவர் பேராயர் பொறுப்பில் இருப்பதாலோ, ஆயர் பொறுப்பில் இருப்பதாலோ, பெரிய நிர்வாகப் பொறுப்பில் இருப்பதாலோ அவர்களிடம் பேசுவ தில்லை. அவர் தமக்கேற்ற இருதயம் யாரிடமிருக்கின்றதோ அவர்கள் வழியாகவே பேசுகின்றார். ஏலி என்ற பிரதான ஆசாரியன் காலத்தில் தேவனுடைய வார்த்தை களை மக்கள் கேட்க வாய்ப்பின்றியிருந்தனர். ஏனென்றால், தேவன் பேசுவதைக் கேட்டுப் பேசுவதற்கு உகந்த இருதயமுடையவர்கள் அங்கே இல்லை. அங்கே தேவன் ஒரு சாதாரண சாமுவேல் வழியாக பேச ஆரம்பித்தார். ஏனென்றால், அவன் தேவ சத்தத்தை கேட்பதற்கேற்ற இருதயமுடையவனாயிருந்தான். ஆசாரிய பொறுப்பில் ஏலி இருந்த போதிலும், தேவன் சிறுவயது சாமுவேல் வழியாகவே பேச விரும்பினார்.

இன்று மிகப்பெரிய தலைமைப் பொறுப்பிலிருக்கின்றவர்கள், பெரிய பதவிகளுக்காக அறியப்படுகின்றார்கள். ஆனால், அவர்களில் அநேகர் தேவ வார்த்தையை தேவனிடமிருந்து பெறுவதற்குத் தேவையான இருதயமுடையவர்கள் அல்ல. அவர்கள் திறமையுடைவர்களாகயிருந்தும் அறிவு மிக்கவர்களாயிருந்தும், ஜனங்கள் அவர்களால் ஆவிக்குரிய பயன் அடைய முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் மிக மிகச் சிறந்த புத்தகங்களைப் படித்து அறிவில் சிறந்தவர்களா யிருந்தும், தேவ சத்தம் கேட்டு அதனை மக்களுக்குச் சொல்லும் ஆவிக்குரிய அனுபவம் உடையவர்கள் அல்ல.

சிந்தனைக்கு...

தேவன் பெரிய பதவிகளை உடையவர்களிடம் அல்ல, தாழ்மையான இருதயத்தை உடையவர்களிடமே பேசுகிறார்.

செப்டம்பர்

27

ஜீவ நீரோடை

சூழ்நிலைகளைப் பாராதே

பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு...

மாற்கு 5:36

மாற்கு 5:21-43

உன்னுடன் கர்த்தர் இருக்கின்றார். நீ உன்னையே பார்த்துக் கொண்டிராதே. உன்னோடிருக்கும் கர்த்தரையே பார். இன்னும் அவரையே பார். இவ்விதமாகக் கடுமையான வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த மகனிடம், தந்தை விசுவாச ஆலோசனை கொடுத்தாராம். ஆம், தேவன் நமக்கு ஆதரவாயிருக்கும் போதும், சூழ்நிலைகள் கொந்தளிப்பாக இருக்கக்கூடும். தேவன் நமக்கு அனுகூலமான துணையாயிருக்கும் போதும், நம்மைச் சுற்றிலும் பல விஷயங்கள் ஆரவாரம் செய்து கொண்டிருக்க முடியும். ஆனால், அதன் நடுவிலும் நம்முடைய பார்வை சூழ்நிலைகளின்மேல் அல்ல. தேவன்மேல் இருக்க வேண்டும். அதுவே விசுவாசம்.

விசுவாசம் என்பது சூழ்நிலைகள் எனக்கு என்ன சொல்கிறதோ அதைக் கேட்பது அல்ல. தேவன் என்ன சொல்லுகின்றாரோ அதைக் கேட்பது. யவீருவின் மகள் மரித்துப் போனாள் என்ற செய்தி வந்தது. ஆனால், அந்தச் சூழ்நிலையிலும் இயேசு அவனிடம் அந்த சத்தத்தை அல்ல. தாம் சொல்லுவதையே விசுவாசிக்கக் கூறினார். பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு என்றார். ஆம், யவீரு அந்த வேளையிலும் தனக்கு ஆதரவு வார்த்தை சொன்ன அவரையே தொடர்ந்து நம்பிக்கையோடு பார்க்க ஏவப்பட்டான்.

சூழ்நிலைகள் யாவும் நம்முடைய கவனத்தை அவற்றின்மேல் இழுக்கும் போதும் நம்முடைய பார்வையை இயேசுவின்மேல் வைப்பதே விசுவாசம். பேதுரு கொந் தளிக்கும் கடலில்தான் இயேசுவை நோக்கி வெற்றிகரமாக நடக்க ஆரம்பித்தான். ஆனால், காற்றையும் கடலையும் கவனிக்க ஆரம்பித்த போது மூழ்க ஆரம்பித்தான். இயேசுவை விட்டுப் பார்வையை விலக்காமலிருப்பதே விசுவாசம். அந்த விசு வாசம்தான் மூழ்கடிக்கும் தன்மை கொண்ட கடலின்மேல் மூழ்காமல் நடக்கும் அற்புதம்.

விசுவாசம் என்பது இப்படித்தான் நடக்கும், அல்லது இப்படி நடக்காது என்று நம்புவதில் வெற்றி காண்பது அல்ல. எதுவானாலும் அவருடைய சித்தப்படியே நடக்க முடியும் என்ற உணர்வோடு அவரையே நோக்கிப் பார்ப்பதாகும். எந்த எதிர் மாறான சூழ்நிலையிலும் நாம் அவரையே நினைத்து,அவரையே சார்ந்து, அவரிடமே மன பாரத்தை பகிர்ந்து கொள்ளும் போது, நாம் மூழ்கத்தக்க கடலிலே மூழ்காமல் வெற்றிகரமாய் நடப்பதைக் காண முடியும். என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது. அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார் என்றான் தாவீது. (சங்கீதம் 25:15)

சிந்தனைக்கு...

சூழ்நிலைகளின் சத்தத்தால் பயம் வருவது இயற்கை, ஆனால், அதன் நடுவில் கர்த்தரின் சத்தத்தால் பலம் வரும்.

செப்டம்பர்
28
ஜீவ

பரிசுத்த வல்லமை

கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்...
ஓசியா 6:1

ஓசியா 6:1-11

கர்த்தரின் அற்புதம் செய்யும் வல்லமை. கர்த்தரின் பரிசுத்தமாக்கும் வல்லமை. இவை தேவ ஊழியர்களின் வாயிலாக ஒருவரிடம் செயல்பட முடியும். அதனால் அவருடைய வாழ்க்கையில் வல்லமையான ஒரு அற்புதம் நிகழலாம். ஆனால், கர்த்தருடைய பரிசுத்தமாக்கும் வல்லமை என்பது ஒருபோதும் இன்னொரு நபர் வாயிலாக ஒருவரிடம் செயல்பட முடியாது. பரிசுத்தமாக்கும் வல்லமை என்பது ஒருவரைப் பாவம் செய்யாமல் வாழவைப்பது. ஒருவரை நல்ல சுபாவங்களை உடையவராக மாற்றுவது, ஒருவரை உலகத்தால் கறைபடாமல் வாழச் செய்வது என்பது போன்ற செயல்களை உள்ளடக்கியது ஆகும்.

இந்தப் பரிசுத்தமாக்கும் வல்லமை என்பது, ஒருவர் நேரடியான தேவத் தொடர்புக்குள் வரும்போது மட்டும் செயல்பட இயன்றது. தேவ ஐக்கியம்தான் ஒருவரைப் பாவத்தைச் ஜெயிக்க இயன்றவராகவும், பரிசுத்த நற்குணங்களோடு வாழ இயன்றவராகவும் மாற்றுகின்றது. எனவே, ஒருவர் கர்த்தரோடு தன்னை இணைத்துக் கொண்டாலொழிய, பரிசுத்தமாக வாழ இயன்றவராக வாழ இயலாது.

இன்று தேவ ஊழியர்கள் வாயிலாகவும், ஜெபக்கூட்டங்கள் வாயிலாகவும் வெளிப்படுகிறது என்று நம்பப்படுகின்ற அற்புத வல்லமையை நோக்கி அனேகர் செல்கின்றனர். சரீர நலன், பொருளாதார நன்மை, வேலை, தொழில் பிரச்சினைகளுக்குத் தீர்வு, என பல சரீரப்பிரகார நன்மைகளைப் பெற்றிட மிகவும் ஆர்வமாயிருக்கின்றார்கள். எனவே, எந்த தேவ ஊழியரிடம் போனால் அற்புதம் நடக்கும்? எந்த ஜெபக் கூட்டம் போனால் அற்புதம் நடக்கும் என்று தீவிர மாகத் தேடிச் செல்கின்றனர். ஆனால், தங்களுடைய வாழ்க்கையில் இல்லாத நற்சுபாவங்களுக்காகவும், நற்செயல்களுக்காகவும் கவலை கொள்வதில்லை.

அவர்கள் பரிசுத்தத்தோடு சம்பந்தப்பட்ட காரியங்களில் உள்ள இல்லாமைகளையும், இயலாமைகளையும் குறித்துக் கவலை கொண்டால், அவர்கள் கர்த்தரை நேரடியாகத் தேட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால், அநேகர் தங்களிடம் நல்ல குணங்கள் இல்லாமலிருப்பதையோ, நல்ல பழக்கங்கள் இல்லாமலிருப்பதையோ ஒரு பிரச்சினையாக எண்ணுவதில்லை. எனவே, இவர்கள் எத்தனையோ தேவ ஊழியர்களோடு தொடர்பு வைத்திருந்தும், எத்தனையோ ஜெபக்கூட்டங்களுக்குப் போய் வந்தும், ஆவிக்குரிய ரீதியாக எந்த மாட்சியையும் பெறவில்லை.

சிந்தனைக்கு...

கர்த்தரிடம் நன்மை பெற விரும்பினால் கர்த்தரைத்தான் தேட வேண்டும். கர்த்தரின் ஊழியரை அல்ல.

செப்டம்பர்
29
ஜீவ நீரோடை

சகிப்பவன் வீட்டில் சண்டையில்லை

எல்லா மனுரோடும் சமாதானமாயிருங்கள்...
ரோமர். 12:18

ரோமர் 12:9-21

அண்ணன் தம்பி இருவருமே கோபக்காரர்கள்தான். இருவருமே எதற் கெடுத்தாலும் ஆத்திர உணர்வோடும், எரிச்சலோடும் பேசி மற்றவர்களை கோபப் படுத்தும் குணம் கொண்டவர்களே. அண்ணனுடைய வீட்டில் தினமும் குடும்பச் சண்டையின் சத்தம் அந்த தெருவெல்லாம் தொனிக்கும். ஆனால், தம்பியின் குடும் பத்திலோ அப்படி பெரிய சண்டையின் சத்தங்கள் கேட்காது. அதற்குக் காரணம், தம்பி தன்னுடைய மனைவியிடம் மிகவும் சமாதானமாக நடந்து கொள்கின்றார் என்பது அல்ல. அண்ணனைப் போலவே தம்பியும், மனைவியிடம் கோபதாப மாகப் பேசி எரிச்சலூட்டும் நபர்தான். ஆனால், தம்பியின் மனைவியோ பொறுமை யும் தாழ்மையும் உள்ளவள். எனவே, தன்னை கோபப்படுத்தினாலும் சாந்த குணத்தோடு நடந்து சண்டைகளைத் தவிர்த்து விடுகிறாள்.

பெரும்பாலான குடும்பங்களில், சண்டை சச்சரவுகளுக்கும் ஓயாத கொந் தளிப்புகளுக்கும் உண்மையான காரணம், ஒருவர் கோபமூட்டுகிறார் என்பது மட்டுமல்ல. மற்றவர் பொறுமையற்றவர் என்பதும் ஒரு காரணமே. சிலர் மற்றவர் களை தாங்களாகக் கோபமூட்டுவதோ எரிச்சலூட்டுவதோ இல்லை. அதே வேளை யில், தங்களை மற்றவர்கள் கோபமூட்டினால் பொறுத்துக் கொள்ளும் குணம் கொஞ் சமும் இராது. அவர்கள் சண்டையைத் துவங்குவதில்லை. ஆனால், சண் டைக்கு இழுத்துவிட்டால் பின்னர் முடிக்க விடமாட்டார்கள்.

சிலர் மற்றவர்களின் கோபமூட்டும் செயல்களைப் பிரச்சினையின் காரண மாகக் காட்டுவார்கள். ஆனால் தங்களின் சகிப்புதன்மையற்ற மனநிலைப் பல வீனத்தை உணரமாட்டார்கள். கணவனாயினும் சரி, மனைவியாயினும் சரி, யாரோ ஒருவருக்குத் தாழ்மைப்பண்பும் சகிப்புத் தன்மையும் இல்லாமல் போகும்போது, பிரச்சினை பன்மடங்காக்கப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு, பிரச்சினைகளில்லாத சமாதான சூழ் நிலைகளையே தருவார் என்று கூற இயலாது. ஆனால், தம்முடைய பிள்ளைகளுக்கு சமாதானமான இருயத்தையும், சகித்துப் போகின்ற மனநிலைப் பக்குவத்தையும் அளித்து, பிரச்சினைகளின் நடுவிலும் வாழ உதவுகின்றார். சவுலின் கோபதாப மான கசப்பின் செயல்களுக்கு நடுவில், தாவீதுக்கு தேவன் சகித்துப் போகின்ற கிருபையை அளித்திருந்தார். எனவே, அவன் பதிலுக்குப் பதில் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. யோசேப்பின் சகோதரர்கள் மனிதாபிமானமற்று நடந்தாலும், யோசேப்பிற்கோ தேவன் தெய்வீக குணங்களைக் கொடுத்து, அமைதியாய் வாழ வைத்தார்.

சிந்தனைக்கு...

பிறரிடம் தீயகுணம் எவ்வளவு என்பதை மட்டும் அல்ல,
உன்னிடம் நல்ல குணம் எவ்வளவு என்றும் பார்.

குற்றங்கூறல் எதற்காக?

ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக.... ரோமர் 14:13

ரோமர் 14:1-13

ஒரு கிராமத்தில் இளைஞன் ஒருவன் ஒரு பொருளைத் திருடிவிட்டான். உடனேயே அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் ஒரு கும்பலாகச் சேர்ந்து அந்த இளைஞனை கடுமையாகத் தாக்கினார்கள். அதனை தொடர்ந்து போலிஸ் அந்த இளைஞனை திருட்டுக் குற்றத்தில் கைது செய்தனர். அதே வேளையில், அவனை கடுமையாகத் தாக்கினவர்கள் மேலும் பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து அவர்களையும் கைது செய்தனர். அவன்தானே குற்றம் செய்தான் எங்களை எதற்காகக் குற்றவாளிகள் போல கைது செய்கின்றீர்கள் என்று அவர்கள் கேட்டனர். அதற்குப் போலிசார் அவன் செய்ததும் குற்றம், அவனை கடுமையாக நீங்கள் தாக்கினதும் குற்றம் என்றனர்.

சில நேரங்களில் சிலர் செய்வது தவறு என்றும், குற்றம் என்றும் நமக்குத் தெரிகிறது. அவற்றை நாம் கண்டு கொள்ளாமல் அமைதியாயிருக்கத் தேவை யில்லை. அதே வேளையில், அவர்கள் செய்த குற்றத்தை நாம் பகிரங்கப்படுத்தும் போதும், அவற்றின் அடிப்படையில் நாம் குற்றம் சாட்டும் போதும், நம்முடைய உண்மையான நோக்கம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஒருவருடைய தவறினால் அல்லது குற்றத்தினால் பலர் பாதிக்கப்படும் சூழ்நிலை இருந்தால், அதனை வெளியரங்கமாய்ச் சுட்டிக்காட்டி எச்சரிப்பது சரியே. இல்லையேல், சம்பந்தப் பட்ட நபர் அவ்விதம் தவறுகளில் தொடரக்கூடாது என்பது நோக்கமாயிருக்க வேண்டும்.

சிலர், மற்றவர்கள் தவறும்போது அந்த தவறான செயலின்மேல் கொண்ட கோபத்தினால் அல்ல. அந்த நபரின்மேல் உள்ள தனிப்பட்ட கோபத்தின் விளை வாகவே குற்றஞ்சாட்டுகிறார்கள். ஒருவர்மேல் பிரியமில்லாமலிருக்கும் போது அவரின் தவறை தங்களுக்குச் சாதகமாக்கி கொள்கின்றவர்கள் உண்டு. சிலரைப் பலர் நடுவில் அவமானப்படுத்துவதற்காக, சிலர் அவர்களின் தவறுகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

மற்றவர்களை நோகடிப்பதற்காகவும், அவர்களை பலர் நடுவில் இழிவு படுத்துவதற்காகவும், அவர்களின் தவறுகளைப் பயன்படுத்திக் கொள்வதும் குற்றச் செயலே. தேவன் நம்முடைய இருதயங்களைப் பார்க்கின்றார். நம்முடைய உண்மையான நோக்கங்கள் என்ன என்பதை கர்த்தர் கவனிக்கின்றார். நாம் நம்மை யோவன் ஸ்நானன் என்றும், பினகாஸ் என்றும் ஜனங்களுக்குக் காண பித்து, பாவத்தை விரும்பாத பரிசுத்தர்கள் போல செயல்படலாம். ஆனால், நாம் உள்ளத்தில் பரிசேயர்களாக இருக்கின்றோமா அல்லது பரிசுத்தவான்களாக இருக்கின்றோமா என்பதை தேவன் அறிவார்.

சிந்தனைக்கு...

பிறரின் தவறுகளைக் கவனிப்பவன் கெட்டவனல்ல,
பிறரிடம் தவறுகளைத் தேடுகிறவன் நல்லவனல்ல.

அக்டோபர்
1
ஜீவ நீரோடை

பூரணத்தின் அடையாளம்

அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது... ரோமர் 13:10

எபிரெயர்- 12 :1-14

நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவிடம் வந்து நியாயப்பிரமாணத்திலே எந்த கற்பனை பிரதானமானது என்று கேட்டான். அங்கே இயேசு, பிரதான மான ஒரு கட்டளையை மட்டும் சுட்டிக்காட்டாமல், இரண்டு முக்கியமான கட்டளை களைச் சுட்டிக்காட்டினார். அதாவது பிரதான கற்பனை ஒன்றல்ல, இரண்டு என்பதைக் குறிப்பிட்டார். அவை இரண்டும் சம அளவு முக்கியத்துவம் கொண்டவை என்பதே அதன் கருத்து. ஒன்று தேவனிடம் முழுமனதுடன் அன்புகூருதல். இரண்டு, நம்மிடம் நாம் அன்புகூருவது போல, பிறனிடத்திலும் அன்புகூருதல்.

ஆவிக்குரிய வாழ்க்கையின் பூரணநிலை என்றால் என்ன? ஒரு புறம் தேவ னிடம் அன்புகூருவதில் முழுமை நிலை அடைதலும், மறுபுறம் மனிதனிடம் அன்புகூருவதில் முழுமைநிலையடைதலும் ஆகும். நம்முடைய பல்வேறு ஆவிக்குரிய செயல்கள் மூலம் நாம் தேவனிடத்தில் அதிக அன்பு கூருவதாக எண்ணலாம். ஆனால். அந்த அன்பின் அளவு எவ்வளவு என்பதை அறிய வேண்டு மானால், பிற மனிதரிடத்தில் நம்மால் எந்த அளவு அன்புகூற முடிகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால். தேவன் தம்மை நாம் முழுமையாக அன்புகூற அழைப்பதின் முக்கிய நோக்கமே, பிறரிடத்தில் சரியான அன்பை வெளிப்படுத்தி வாழ்வதற்கான வல்லமையைப் பெற்றுக்கொள்ளத்தான்.

தேவனை நேசிக்கின்ற அளவுகளுக்கேற்ப நாம் பிறரை நேசிக்கும் அன்பின் ஆற்றலை பெறுகின்றோம். பிறர் விஷயத்தில் நம்முடைய அன்பு முழுமை நிலையை நோக்கிச் செல்லாவிடில், தேவனிடத்தில் அன்பு கூருகிற விஷயத்திலும் நாம் முழுமை யை நோக்கிச் செல்லவில்லை என்பதே பொருள். பலவித, ஆவிக்குரிய செயல்கள் இருந்தும் கூட பிறர் விஷயத்தில் அன்புகூருகின்ற நிலையில் நாம் குறைவுபட்டால், நம்முடைய பக்திச் செயல்கள் தேவ ஐக்கிய நிலைக்கு நம்மை கொண்டு செல்ல வில்லையென்பதே பொருள்.

சிலர் உணவு, உடை, உலகம் என எல்லாவற்றையும் வெறுத்து எப்பொழு தும் இயேசு என்று சொல்லிக் கொண்டு, சன்னியாசமான ஒரு வாழ்க்கையை வாழ்கின்றனர். எந்த விதமான பாவச் செயல்களிலும் ஈடுபடாமல் பரிசுத்த மாக வாழ்கின்றார்கள். ஆயினும், அவர்களில் பலருக்கு அன்பாகப் பேசவோ, அன்பாக நடந்துக்கொள்ளவோ, அன்பாகப் பிறரை ஏற்றுக் கொள்ளவோ இயல வில்லை. ஆனால், அன்பின் வாசனையை வெளிப்படுத்தாத, துறவற வாழ்க்கை பிரயோஜனமற்றது. அது பூரணப்படாத வாழ்க்கை.

சிந்தனைக்கு...

இயேசு என்னும் ஒளியை தன் வாழ்வில் கண்டவன் பிறர் நடுவில் இருளாக இருக்க முடியாது.

அக்டோபர்
2
ஜீவ நீரோடை

காற்று வீச வேண்டும்

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
மத்தேயு 11:28

மத்தேயு 11 : 25-30

சமீபத்தில் கொளுத்துகின்ற வெயிலில் ஒருநாள் கொஞ்சம் இளைப் பாறுதலுக்காக ஒரு மரத்தின் நிழலில் போய் கொஞ்ச நேரம் உட்கார்ந்தேன். அங்கே நல்ல நிழல் இருந்த போதிலும், காற்று சற்றும் வீசாததால் மரத்தின் இலைகள் எதுவும் அசையவில்லை. எனவே, நிழலில் அமர்ந்தும்கூட கடுமையான உஷ் ணத்தினால் உடல் புழுங்கி இளைப்பாறுதல் எதுவும் கிடைக்கவில்லை..

ஆன்மிக வாழ்க்கை என்பது ஒரு நிழல் தரும் மரத்தைப் போன்றதே. அங்கே மன அமைதியும், இளைப்பாறுதலின் சந்தோஷமும் உண்டு. ஆனால், வெறும் மத ஒழுங்குகளும், வழிபாடுகளும், பக்தி நடவடிக்கைகளுமே இளைப்பாறுதல் தரும் ஆன்மீக வாழ்க்கையாகி விடுவதில்லை. அங்கே இலைகளை அசைத்து, குளிர்ச்சியை உருவாக்கும் காற்றைப் போல பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு கள் என்னும் காற்று வீச வேண்டும். பரிசுத்த ஆவியானவர் மூலமாக நம்முடைய ஆத்துமா உயிரூட்டப்படும் போதுதான், நம்முடைய பக்தி சார்ந்த செயல்களெல் லாம் நமக்கு தெய்வீக சந்தோஷங்களைக் கொண்டு வரும்.

பலர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வருகின்றார்கள். பலர் கிறிஸ்தவ மதநெறிகளுக்கும், ஒழுங்குகளுக்கும் உட்படுகிறார்கள். ஆயினும், அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கும் ஆத்ம அமைதியோ, ஆவியின் சந்தோஷமோ கிடைப்பதில்லை. ஏனென்றால் ஒழுங்குகளுக்குள் வந்தும்கூட தேவ ஐக்கியம் உணர்தல், ஆவியானவரின் அசைவாடுதலை அனுபவித்தல், கர்த்தரின் தொடுதலை ருசித்தல் போன்றவை அங்கே இல்லை. ஏனென்றால், பரி சுத்த ஆவியானவர் என்னும் காற்று அவர்களின் வாழ்க்கையில் வீசவில்லை.

பலர் பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஒரு பரவசமான திடீர் மனநிலையை எதிர் பார்க்கின்றார்கள். அந்தப் பரவச நிலையை அடைந்திட ஜெபம், பாடல், ஆராதனை, அதிக சத்தங்கள், போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால், அந்த திடீர் பரவச மனநிலைகள் அற்பநேர சந்தோஷங்களை அளித்து மறைந்து விடுகின்றது. அவைகளால் உண்மையான நற்குணங்களோ, மகிழ்ச்சி யான ஒரு ஆவிக்குரிய வாழ்க்கையோ ஏற்படுவதில்லை. வெறும் பரவசத்தை யல்ல. பரிசுத்தமான தேவ உறவை எல்லா நேரங்களிலும் இருதயத்தில் எதிர் பார்த்துச் செயல்படும் ஓர் அனுபவமே அவசியம். திட்டவட்டமான மனந்திரும்புதல், விழிப்புணர்வுடன் கூடிய ஒப்புக் கொடுத்தல், இதயப்பூர்வமான ஜெபம், தேவனோடு இணைந்து விட்ட விசுவாச உணர்வு போன்றவைகள் இருந்தால்தான் ஆவியின் காற்று வீசும்.அங்கே கர்த்தரின் இளைப்பாறுதல் உண்டு.

சிந்தனைக்கு...

வேதவார்த்தையை இதயத்தில் நீ சுமந்தால் இறைவன் உன்னைச் சுமப்பதை அதனால் உணரமுடியும்.

அக்டோபர்

3

ஜீவ நீரோடை

என்றும் இளமை

உன் வயது திரும்ப வால வயது போலாகிறது
சங்கீதம் 103:5

உபாகமம். 34:1-12

சிக்காக்கோவில் நடந்த ஒரு வாலிபர் கருத்தரங்கில் சிறப்பு பேச்சாளராக ஒரு எண்பது வயது மனிதர் அழைக்கப்பட்டிருந்தார். இளம் வயதினருக்குப் பேச இந்த முதிர்வயது மனிதர்தான் கிடைத்தாரா? என்று பலரும் வேடிக்கையாகப் பேசினார்கள். ஆனால், அவருடைய பேச்சைக் கேட்ட யாவரும் வாயடைத்துப் போனார்கள். முதிர்வயதான அவரிடமிருந்து வெளிவந்த கருத்துகள் யாவும் மிகவும் இளமையாக இருந்ததே அதன் காரணம். இவ்வளவு எழுச்சியான, இளமை யான எண்ணங்களை உடையவராக தாங்கள் இருப்பதின் ரகசியம் என்ன? என்று கேட்டனர். நான் எப்பொழுதும் மற்றவர்களுக்காகவே சிந்திக்கின்றேன். மற்றவர் களின் நலனுக்காகவே உழைக்கின்றேன், என்பது அவர் கொடுத்த பதில்.

நான் என் குடும்பம், என் வாழ்க்கை என்ற குறுகிய எல்லைக்குள் வாழும் மனிதன் குறைந்த வயதுகளிலேயே, தளர்ந்து போய் எண்ணங்களில் முதிர் வயதாகிவிடுகிறான் என்பது உண்மை. பிறரைக்குறித்தும், பிறருடைய நலன்களைக் குறித்தும் அக்கறைப்படுகின்ற மக்கள், முதிர்வயதில்கூட இளமையாகவே இருப் பார்கள் என்பதும் உண்மை. வயது முதிர்ந்த காலத்தில் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதினான். அதனைப் படித்துப் பாருங்கள். அதில் எத்தனை இளமை! எத்தனை எழுச்சி! எத்தனை தளர்வில்லா சுறுசுறுப்பு! உடலில் முதுமை. ஆவியிலோ இளமை.

ஆம், பிரியமானவர்களே! இயேசுவைப் போல நன்மை செய்கின்றவர்களாக சுற்றி வாருங்கள். மோசேயைப் போல கடைசி வரையிலும் சேவை செய்வதிலேயே குறியாக இருங்கள். பிறர்மேல் அன்புகொண்டு அவர்களைப் பாருங்கள். நான்கு பேருக்கு அன்பினால் நன்மை செய்கின்ற அனுபவம்தான் நம்முடைய வாழ்க்கையை அர்த்தமுடையதாகவும், அனலுள்ளதாகவும் மாற்றுகிறது. உங்களையும் உங்கள் நலனையும், உங்கள் குடும்ப நலனையும் சுற்றியே உங்கள் பார்வையும் எண்ணமும் கரிசனையும் ஓடிக்கொண்டிருக்குமானால், நீங்கள் முதுமையை நோக்கி அதிவிரைவாக ஓடுவீர்கள். ஆனால், நன்மை செய்ய நாடும் இதயம் என்றும் இளமையாகவே இருக்கும்.

நாம் செய்யும் எல்லா நன்மைகளைவிட, நற்குணம் நிறைந்த ஒரு வாழ்க்கை பிறருக்கு மிகவும் பிரயோஜனமானவை. பிறர் நடுவில் பிறர் பயன்படும் வித மாக முன்மாதிரியுள்ள ஒரு நல்ல வாழ்க்கையை நாம் வாழ்கின்றபோது, அங்கே முதுமையின் எண்ணங்கள் அல்ல. இளமையான உணர்வுகளே மேலோங்கி நிற்கும்.

சிந்தனைக்கு...

உன் துன்பங்களை தேவனுடன் பகிர்ந்துகொள்,
உன் மகிழ்ச்சியை மனிதர்களோடு பங்கிட்டுக்கொள்.

அக்டோபர்
4
ஜீவ நீரோடை

நல்லதும் கெட்டதும்

பொல்லாங்காய்த் தோன்றுகின்ற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் 1 தெசலோனிக்கேயர் 5:22

1 தெசலோனிக்கேயர் 5:1-22

சிலருடைய கண்கள் நலமான எந்த ஒன்றிலும்கூட சில குறைவுகளையே காணும். சிலருடைய கண்கள் எந்த மோசமான ஒன்றிலும் சில நல்லவை களையே காணும். இந்த இரண்டு விதமான பார்வையும் தவறானது. தீயதை மட்டும் பார்க்கும் அனுபவம், நல்லவைகளால் வரும் பலனை இழக்கச் செய் கின்றது. நல்லதை மட்டும் பார்க்கும் அனுபவம், நல்லவைகளோடு இணைந்த தீயவைகளினால் வரும் கேடுகளைக் காணவிடாமல் செய்கின்றது.

இந்தப் பூமியில் எந்த ஒரு செயலிலும் எந்த ஒரு மனிதனிலும் பரிபூரண நன்மையை நாம் காண முடியாது. எந்த ஒன்றிலும் தேடினால் சில குறைகள் இருக் கவேச் செய்யும். ஆயினும் அந்த சிறு குறைவிற்காக, அதனை வேண்டாம் என்றால் அதில் உள்ள நல்ல பல நன்மைகளை நாம் இழக்க நேரிடும். ஆபிரகாமிடமும், மோசேயிடமும், எலியாவிடமும் சில குறைவுகள் இருக்கவே செய்தது. ஆயினும் அவர்களைக் கொண்டு தேவன் பெரிய காரியங்களைச் செய்தார். ஏனென்றால் அவர்களிடம் மேலோங்கி நின்றவை நல்ல விஷயங்களே. அவர்கள் அடிப்படை யிலோ, செயல்களிலோ மோசமானவர்கள் அல்ல. சூழ்நிலை சந்தர்ப்பங்கள் அவர்களும் மனிதர்கள்தானே என்று பார்க்க வைத்து விட்டது.

சிலர் சுட்டிக்காட்டும் குறைகள் உண்மையிலேயே குறைகள்தான். ஆனாலும் அங்கே மேலோங்கி நின்ற நிறைவுகளை அவர்கள் கவனிக்காமல் போனார்கள். பவுலிடம் கோபம் வெளிப்பட்ட வேளைகள் உண்டு. பேதுருவிடம் உறுதியின்மை வெளிப்பட்ட நேரம் உண்டு. யோவானிடம் சுயநலம் தோன்றின சூழ்நிலை உண்டு. ஆயினும், அவைகள் அவர்களின் அடிப்படைக் குணங்கள் அல்ல. அடிப்படையில் அவர்கள் மோசமானவர்கள் அல்ல.

அதுபோலவே சிலர், எவ்வளவு மோசமானவர்களிடமும் சில நல்ல பண்பு களைக் கண்டு அவர்களைப் பின்பற்றுவார்கள். நல்லதை மட்டும் பார்ப்போம் என்ற கொள்கை தீயவைகளையும் நமக்குக் கொண்டு வந்து விடும்.அழுகிப் போன பழத்தில்கூட சில பகுதிகள் நன்றாகவேயிருக்கும், ஆயினும், அந்த சிறு நல்ல பகுதி களுக்காக அந்த அழுகின பழத்தை விரும்புவது நல்லதல்ல.

சில மோசமான ஊழியர்களிடமும், சில நல்ல பக்தியான அம்சங்கள் உண்டு. அதனால் அதனை மட்டும் பார்த்து, அவரை ஏற்றுக்கொள்ளுதல் நல்லதல்ல. ஏற்றுக் கொண்டால் அவரிடமுள்ள தீயவிஷயங்கள் விரைவில் நம்மை நாசமாக்கிவிடும்.

சிந்தனைக்கு...

பலர் புகழ்வதால் நீ சரியாக இருக்கிறாய் என்றோ, சிலர் இகழ்வதால் நீ சரியில்லை என்றோ கூற முடியாது.

தேவையான தோற்றம்

இவர் பரிசுத்தவான் என்று காண்கின்றேன்
2 இராஜாக்கள் 4 : 9

2 இராஜாக்கள் 4:8-17

தேவனை மையமாக வைத்து ஆன்மிக வாழ்விற்குள் பிரவேசிக்கின்ற சிலர், தங்களுக்கு ஒரு ஆன்மிகத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதுண்டு. சிலர், அங்கி அணிந்து கிறிஸ்தவப் போதகர்கள் என்று எளிதாக அறியச் செய்வார்கள். சிலர், வெள்ளை நிறத்திலோ அல்லது காவி நிறத்திலோ உடைகளை அணிவார்கள். சிலர், ஜிப்பா அணிவார்கள். சிலர், தற்கால நவீன கிறிஸ்தவத் தோற்றம் தரும் கோட் சூட் அணிவார்கள். இன்னும் தலைமுடி வளர்த்தல், தாடி வளர்த்தல், பாட்ஜ் அணிதல், சிலுவை அணிதல் போன்றவற்றாலும் கிறிஸ்தவப் பக்தியாளர்களாக தங்களை அடையாளப்படுத்துவார்கள். இது ஒரு தனிப்பட்ட ஆவிக்குரிய உற்சாகம் சார்ந்த விஷயம். இதில் எதுவும் தவறானதல்ல.

ஆனால். ஒரு கிறிஸ்தவராயினும் சரி, கிறிஸ்தவ போதகராயினும் சரி, இறைப் பணியாளராயினும் சரி அவருக்கு மிகவும் தேவையானதொரு தோற்றம்... "இவன் ஒரு பரிசுத்தவான்" என்ற சொல்லத்தக்கதான தோற்றம். அது ஒரு மனிதன் தேவனோடு தொடர்ந்து நடந்து, தேவனுக்கேற்றபடி வாழ்ந்து காட்டுவதினால், பிறர் அவனிடம் காண்கின்ற தோற்றமாகும்.

நாம் ஏற்படுத்திக் கொள்ளும் தோற்றங்கள் மூலமாக பிறர் நம்மை தீவிர பக்தியாளர்களாகவோ, சன்னியாசிகளாகவோ, போதகர்களாகவோ எளிதாக அறிந்து கொள்ளச் செய்யலாம். ஆனால். தேவ மனிதர்கள் அல்லது பரிசுத்தவான்கள் என்ற தோற்றத்தையோ பிறர் காணச் செய்வது ஒரு நல்ல ஆவிக்குரிய இருதயமே. நம்மை சாதுக்களாக. சன்னியாசிகளாக, போதகர்களாக, பேராயர்களாக மக்கள் அடையாளம் காண்பது நல்லது. ஆனால். நாம் தேவனுடைய உறவை உடையவர்களாக பிறர் கண்களுக்குத் தோன்றுவதுதான் மிகவும் மேன்மையானதும், மிகவும் அவசியமானதும் ஆகும்.

சூனேம் என்ற ஊரில் உள்ள ஒரு பெண், எலிசா என்ற தேவ ஊழியரின் போக்கு வரவையும், நடத்தைகளையும் கவனித்தாள். அங்கே அந்த மனிதன் அவளுடைய பார்வையில் ஒரு தேவனுடைய மனுஷனாகவும், பரிசுத்தவானாகவும் தோன்றினான். (11 இராஜாக்கள் - 4 : 9) ஆம். இதுதான் நமக்கு அவசியமான தோற்றம். இது உடைகளால் வந்தது அல்ல. உயர்ந்த குணங்களால் வந்தது.

சிந்தனைக்கு...

அகத்தில் சரியாக இருக்க விரும்பிச் செயல்படுகிறவன் புறத்தில் சரியற்றவனாகத் தோன்ற முடியாது.

உண்மை நிலை உணர்வோம்

நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல்...
வெளி 3:17

வெளி 3:14-22

குறிப்பிட்ட ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு நீண்டகால ஊழிய அனுபவம் உடையவர். ஆனால், இவர் தன்னைக் குறித்து கூறும் போதெல்லாம் "நான் ஒரு ஒன்றுக்கும் உதவாத குப்பை" என்று சொல்லி தன்னைத் தாழ்த்திக் கொள்வாராம். அவரைப் பார்த்து ஒருவர் நீங்கள் இத்தனை ஆண்டுகள் கிறிஸ தவராயிருந்தும் ஒன்றுக்கும் உதவாத குப்பையாகவே இருக்கிறீர்கள். அப்படி யானால் உங்கள் ஊழியத்தால் மற்றவர்கள் எப்படி மேன்மைநிலை அடைய முடியும்? என்று கேட்டாராம்..

ஆழ்ந்த ஆவிக்குரியவர்களாக அறியப்பட்டவர்களில் ஒரு சாரார் எப்பொழு தும் தங்களைப் பாவிகளாக நினைத்து, பாவிகள் என்றே அறிக்கையிட்டுக் கொண்டும் இருப்பார்கள். அவர்கள் தாங்கள் பரிசுத்தமாக வாழ்வதாக எண்ணு வதே கர்த்தருக்கு முன்பாக பாவமாக இருக்கும் என எண்ணுகின்றனர். தாங்கள் பரிசுத்தமாக வாழ்ந்தாலும்கூட, தங்களைப் பாவிகள் எனச் சொல்வதை இவர்கள் தாழ்மையின் அடையாளமாகக் கருதுகின்றார்கள். இன்னொரு சாராரோ தாங்கள் எவ்வளவு பரிசுத்தக் குறைவாக வாழ்ந்தாலும் தங்களை பரிசுத்தவான்கள் என்று எண்ணி அறிக்கையிடுகின்றனர். கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் தங்களைப் பரிசுத்தவான்கள் என எண்ணுவதுதான் உண்மையான விசுவாசம் என நினைக் கின்றனர். எனவே, இவர்களின் விசுவாசம் எப்பொழுதும் இவர்களின் உண்மை நிலையை உணரவிடாமல் தடைசெய்து கொண்டிருக்கின்றன.

ஆனால், உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சரியான சம நிலையை உடையதாக இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்கேற்றபடி வாழ்கின்றபோதும், வேதத்திற்கேற்றபடி செயல்படுகின்ற போதும், பரிசுத்தமான அந்த நல்நிலைகளைப் பார்த்து மகிழ்ச்சியடையவும், திருப்திப்படவும் வேண்டும். அதுபோல, கிறிஸ்துவுக் கேற்ற நல் நிலைகளுக்கும், குணநிலைகளுக்கும் நாம் கீழாகப் போய் குறைவுபடும் போது, அந்தக் குறைவுகளைப் பார்த்து மனவருத்தமடைய வேண்டும்.

பாவிகள் என்றே எண்ணிக்கொண்டிருப்பதும், பரிசுத்த உயர்நிலைக்கு வராமலே பரிசுத்தவான்கள் என்று விசுவாசித்து திருப்திப்பட்டுக்கொள்வதும் தொடர்ந்து நாம் பாவிகளாக தொடரவே வழிவகுக்கும். யதார்த்த நிலைகளை நாம் உணரவேண்டும். ஆம். தவறான தாழ்மை தகாது. உண்மை நிலை உணராத விசுவாசம் உதவாது.

சிந்தனைக்கு...

வார்த்தைகள் ஒருவனை யார் என்று அறிவிக்கும். ஆயினும் அவனுடைய செயல்கள்தான் அதனை உறுதிப்படுத்தும்.

சிங்கங்களின் நடுவில்

சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு...
தானியேல் 6:22

தானியேல் 6:16-28

சில நேரங்களில் என்னுடைய உள்ளத்தில் நான் ஆழ்ந்த அமைதியையும், கலவரம் எதுவுமில்லாத ரம்மியமான உணர்வையும் அனுபவிப்பதுண்டு. அப்போது இத்தகைய அமைதிக்கும், சமாதானத்திற்கும் ஏதுவான ஒரு சூழ்நிலையில்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேனோ என்று எண்ணிப் பார்ப்பதுண்டு. ஆனால், அப்படி எதுவும் இருப்பதில்லை. சுற்றிலும் ஏராளமான கஷ்டங்களும், தீர்வு காணாத பிரச்சினைகளும், சிங்கங்களைப் போல நின்று கொண்டிருக்கும். ஆனாலும், அவைகளினால் உள்ளம் காயப்படுவதோ, அலசடிப்படுவதோயில்லை. அதுதான் தேவனுடைய சமுகத்தில் கிடைக்கும் ஒப்பற்ற இதய இளைப்பாறுதல்..

சிங்கக் கெபியில் தானியேலைச் சுற்றிலும் கடித்துக் குதறுகின்ற இயல்புடைய சிங்கங்கள் பல நின்று கொண்டுதானிருந்தன. ஆனாலும், அவைகளால் தானியேலுக்கு எந்தக் காயமோ, கலக்கமோ இல்லை. காரணம் என்ன? கர்த்தரைச் சார்ந்து வாழும் அவனைச் சுற்றிலும் தேவப் பிரசன்னம் நிறைந்திருந்தது. எனவே, கொடிய சிங்கங்கள் அவனை அணுகி எந்தப் பாதிப்பையும் உருவாக்க முடியவில்லை.

தானியேல் தன்னைச் சுற்றிக்கொண்டிருந்த சிங்கங்களைக் கவனிக்காமல் அவைகளின்மேல் அதிகாரம் உடைய தேவனையே நோக்கிப் பார்த்தான். எனவே, அவன் பதட்டமின்றி அந்தச் சூழ்நிலையைச் சந்திக்க முடிந்தது. சோதனைகளின் போதும், பிரச்சினைகளின்போதும், நம்முடைய கணகளை அவைகளின் மேலே வைத்து கலங்கிக்கொண்டிராமல், தேவ வல்லமையின் மேலும், அவருடைய அன்பின் மேலும் வைக்க வேண்டும். அங்கே நிச்சயம் விடுதலை உண்டு.

ஆம், தேவனுடையப் பிள்ளைகளைச் சுற்றி பலவிதப் பிரச்சினைகளும், சோதனைகளும், சிங்கங்களைப் போல நின்று கொண்டிருக்கலாம். ஆயினும், அவைகள் அவர்களின் இதய அமைதியை அலைக்கழித்து, அவர்களைக் காயப்படுத்திவிட முடியாது. தேவப் பிரசன்னம் அவர்களைச் சூழ்ந்திருப்பதால் பலவித பாடுகளின் நடுவிலும் அவர்கள் கர்த்தர் அருளும் அமைதியையும், தெய்வீக சந்தோஷத்தையும் அனுபவிப்பார்கள். அது கிறிஸ்துவினால் வரும் ஒப்பற்ற ஆசீர்வாதமாகும். ஆம், வாழ்க்கையில் குழப்பமான நேரங்களிலே நம்மைச் சூழ்ந்து நிற்கும் சிங்கங்களைக் கவனியாமல், கர்த்தருடைய ஐக்கியத்தை அதிகமாகத் தேடுவோமாக.

சிந்தனைக்கு...

இறைவனுடைய சோதனைகள் உன்னைப் பக்குவப்படுத்தும்
அந்தப் பக்குவமே அவரின் நன்மைகளுக்குத் தகுதிப்படுத்தும்.

மாய்மாலம்

சர்ப்பங்களே விரியின்பாம்புக் குட்டிகளே ....
மத்தேயு 23:33

மத்தேயு 23:13-39

தேவன் பாவிகளை நேசிக்கிறார். ஆனால், பாவிகளாயிருந்தும் தங்களை பரிசுத்தவான்களாக எண்ணுகின்றவர்கள்மேல் கோபமடைகின்றார். பாவிகளுக்குத் தேவன் உதவ முடியும்.அவர்களை பாவத்திலிருந்து வெளியே கொண்டு வரமுடியும்.ஆனால், பரிசுத்தத் தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு, பாவிகளாயிருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது. எனவேதான் பாவிகளைவிட தேவன் மாய்மாலக்காரர்களையே அதிகமாகக் கடிந்து கொள்கின்றார்..

அநேகரால் பாவி என்று அழைக்கப்பட்ட சகேயு, தகாதவிதமான வாழ்க்கையால் “பாவியான பெண்” என்று பெயரிடப்பட்ட ஒருத்தி, மற்றும் ஒருவர் மாற்றி ஒருவராக பலரோடு வாழ்ந்து கறைபட்டுப் போன சமாரிய நாட்டுப் பெண், ஆகியோர் விஷயத்தில் இயேசு மிகவும் அன்பாக நடந்து கொண்டார். ஆறுதலாகப் பேசினார். அவர்களின் ஆத்தும ஈடேற்றத்திற்காக அக்கறையோடு பேசினார்.

ஆனால், வேறுசிலர் விஷயத்திலோ மிகவும் கோபமாக, கடுமையாக நடந்து கொண்டார். அவர்கள் விஷயத்திலோ மாயக்காரனே, மதிகேடனே, விரியன்பாம்புக் குட்டிகளே, சர்ப்பங்களே, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே, குருடர்களே என்றெல்லாம் மிக, மிகக் கடுமையான வார்த்தைகளை உபயோகித்தார். அவர்களை மிகவும் கூர்மையான வார்த்தைகளால் கண்டித்துப் பேசினார்.

காரணம் என்ன? அவர்கள் மாய்மாலவாதிகள்.உள்ளத்தில் ஒன்று வைத்து உதட்டில் இன்னொன்று பேசுகின்றவர்கள். இதயத்தில் இல்லாத இறைத்தன்மையை, இருப்பது போலப் பிறருக்குக் காண்பித்து ஏமாற்றுகின்றவர்கள். தேவதூதர்களைப் போல பேசிக்கொண்டு பிசாசுகளைப் போலச் செயல்படுகின்றவர்கள். ஆடுகளைப் போன்ற நல்ல தோற்றத்தைக் கொடுத்துக்கொண்டே, ஓநாய்களைப் போல வாழ்கின்றவர்கள். இறைப்பணியில் தங்களை தீவிரமாக இணைத்துக் கொண்டு, பிசாசின் குணங்களுக்கும் இசைந்து போகிறவர்கள்.

பாவிகளை இயேசு நேசிக்கின்றார். ஆனால், நீதிமானின் வேடத்தை அணிந்து கொண்டு, பாவத்தில் வாழ்கின்றவர்களையோ கடுமையாக வெறுக்கின்றார். நாம் உயர்வான அறிக்கைகளைக் கொடுக்கும் போது, உயர்வான ஒரு வாழ்க்கையை வாழ வேண்டியது மிக அவசியம். நமக்கு நாம் கொடுக்கின்ற பெயருக்கும், தோற்றத்திற்கும் ஏற்றவிதமாக, இதயத்தில் இல்லாமலிருக்கின்ற பொய்யான நடைமுறைகள், தேவ கோபத்தை நம்மேல் குவிக்கின்றன.

சிந்தனைக்கு...

மனிதனின் போலித் தனத்தை நீ வெறுக்கவில்லையேல், இறைவனின் உண்மையை நீ விரும்பவில்லை என்பதே பொருள்.

அக்டோபர்
9
ஜீவ நீரோடை

தோல்விகள் நிரந்தரமல்ல

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்;
பிரசங்கி 11:4

பிரசங்கி 11:1-10

தோல்விகளினால் ஏற்படும் மனக்கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் பெறாத யாரும் வெற்றிகளினால் வரும் நீண்டகால மனமகிழ்ச்சியைக் காண முடியாது. விஞ்ஞானத் துறையானாலும் சரி, தொழில் துறையானாலும் சரி, அரசியல் துறையானாலும் சரி, இன்று மாபெரும் வெற்றியாளர்களாக நிற்கும் பலர் பலவிதத் தோல்விகளின் கசப்புகளைக் கண்டவர்களேயாகும்.

தேவனை விசுவாசித்து, அவருடைய வழிகளில் நடக்கின்றவர்களுக்கு நிச்சயம் வெற்றிகள் உண்டு. ஆயினும், அவர்களுக்கு வருவது எல்லாம் வெற்றியே. தோல்வி எதுவும் அங்கு இல்லை என்று கூறமுடியாது. ஒரேயடியாக நம்மை தேவன் வெற்றியின் உயர் நிலைகளுக்குக் கொண்டு செல்ல முடியும். ஆயினும், சில தோல்விகளின் பாதையில் நடந்து வெற்றிகளைக் காணும் முறையை அவர் ஆதரிக்கின்றார். தோல்விகள் வாயிலாகப் பாடங்கள் கற்றுக்கொண்டுதான், வெற்றிகளை எட்ட வேண்டும் என்பதும் ஒரு தேவ விதியாக உள்ளது.

ஆபிரகாமுக்கும் தோல்விகள் உண்டு. யோசேப்பிற்கும் தோல்விகள் உண்டு. தாவீதுக்கும் தோல்விகள் உண்டு. பல வேதாகம மனிதர்கள் தோல்விகள் பல கடந்துதான் வெற்றிகளைக் கண்டார்கள். வில்லியம் கேரி இந்தியாவிற்கு வந்த மிஷினரிகளில் மிகப்பெரிய சாதனையாளர் என்றும், வெற்றியாளர் என்றும் கூற முடியும். ஆனால், அவருடைய வாழ்க்கையில் பல தோல்விகளின் கசப்புகளை அனுபவித்துதான் வெற்றிக் கனிகளைப் பறித்தார். அவருடைய இல்லற வாழ்வில் பல சோதனைகள் இருந்தன. அவருடய முயற்சிகள் பல துவக்கத்தில் மன வேதனையைக் கொடுத்தது, ஆயினும், அவருடைய குறிக்கோள் வலிமையாயிருந்ததால், தோல்விகள் தந்த வேதனைகளைத் தாங்கிக்கொண்டே வெற்றியின் சிகரங்களைத் தொட்டார்.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும், ஊழியங்களிலும்கூட நாம் தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்திக்க நேரிடும். ஆனால், அவைகள் நிரந்தரங்கள் அல்ல. அடுத்துப் பெறப்போகும் வெற்றிகளுக்கு அவசியமான சில நல்ல பாடங்களை அவைகள் கற்றுத் தந்துள்ளன. தோற்றுவிட்டோம், பின்தங்கிவிட்டோம், என்றே சிந்தித்துத் துவளாமல் ஏன் தோற்றோம்? எவைகளால் தோற்கிறோம்? என்பவைகளைச் சிந்தித்துத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். அங்கே வெற்றிகள் நிச்சயம்.

சிந்தனைக்கு...

அதிக சுமைகளை வைத்தது இறைவன் என்றால், அதனைத் தாங்கும் பலமுடைய தோளையும் தந்திருப்பார் என நம்பு.

அக்டோபர் 10

ஜீவ நீரோடை

யாருக்காக உண்மை

மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே செய்யுங்கள். கொலோசெயர் 3:24

பிலிப்பியர் 3:17 -21

"எவ்வளவுதான் மாடாக உழைத்தாலும், இந்த அலுவலகத்தில் அதற்கு ஒரு சிறு மரியாதைகூட கிடையாது. எனவே, வேண்டுமென்றே இங்கு நான் மிக சாதாரண மாக வேலை செய்கின்றேன்" இது தனியார் கம்பெனி ஒன்றில் பணிபுரியும் ஒரு கிறிஸ்தவ அலுவலர் சலிப்புடன் கூறிய விஷயம். சில நேரங்களில் நம்முடைய உழைப்பு, நேர்மை, உண்மை, நியாயம் ஆகியவற்றிற்கு சம்பந்தபட்டவர்களிட மிருந்து உரிய மரியாதை கிடைக்காதபோது, நாம் சோர்ந்து போக நேரிடுவது உண்மைதான். சில நேரங்களில் நம்முடைய நேர்மை மற்றவர்களால் சரியாக உணரப்படாமல் போகும் போது, ஏன் நேர்மையில் தொடர வேண்டும் என்ற எண்ணம் வந்து விடுகிறது.

ஆனால், தேவனை அறிந்தவர்கள் எதையும் தேவனுக்கு ஏற்ற கோணத் திலேயே பார்க்க வேண்டும். உத்தமம், உண்மை, நேர்மை, உழைப்பு இவைகளை நாம் ஏதோ சில மனிதர்களுக்காக அல்ல. நாம் அவைகள் மூலம் தேவனைக் கனப்படுத்தவும், பிரியப்படுத்தவும் செய்கின்றோம். எத்தகைய சூழ்நிலைகளின் நடுவிலும், அவ்விதமான உயர்ந்த குணமுடையவர்களாக விளங்கி, நாம் தேவனுக்குரியவர்கள் என்ற வித்தியாசத்தைக் காண்பிப்பது தேவனின் சித்தமா யிருக்கிறது. எனவே, நம்முடைய உண்மைக்கு மனிதர்களின் பாராட்டுதலோ, நல் லெண்ணங்களோ கிடைக்காமல் போனால்கூட, நாம் அவைகளை தேவனுக்காகச் செய்யும் போது, தேவன் நமக்குத் தகுந்த பிரதிபலன் தராமல் இருப்பதில்லை.

நாம் மனிதர்களைப் பிரியப்படுத்த அல்ல. உயர்ந்த விதமான பண்புகளில் பிரியப்படும் தேவனைப் பிரியப்படுத்தவே வாழ்கின்றோம். நாம் மனிதர்களிட மிருந்து நற்பலன்களை எதிர்நோக்கி அல்ல. உண்மையையும், உத்தமத்தையும் கனப்படுத்தும் கர்த்தரிடமிருந்து நற்பலன்களை எதிர்பார்த்தே வாழ்கின்றோம். எனவே, மனிதர்களுக்காக அல்ல. தேவனுக்காக எதையும் அவர் விரும்புகின்ற விதமாகச் செய்யவே நாம் கவனமாயிருக்க வேண்டும்.

நாம் எவ்விதக் குணநிலைகளோடும், கொள்கையோடும் செயல்பட வேண்டும் என்பது தேவ விருப்பமோ, அதிலே நாம் உறுதியாயிருக்க வேண்டும். மற்றவர் களுக்காக நம்முடைய நல்ல நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக்கூடாது. யோசேப் பின் உண்மைக்கும், நேர்மைக்கும் உரிய பலன் கிடைக்காமல் போன பிறகும், அவன் தொடர்ந்து உண்மையில் நிலைத்து நின்றான். அது தேவனைப் பிரியப்படுத்தியது. எனவே, ஒரு நாள் தேவன் அவனை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து, பலர் நடுவில் அவனைக் கனப்படுத்தினார்.

சிந்தனைக்கு...

பிறர் சொன்னதற்காக உண்மையை மறுக்காதே.
பிறருக்காக உண்மையை மறைக்கவும் செய்யாதே.

அக்டோபர்
11
ஜீவ நீரோடை

தீமை நன்மையாகும்

நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்
ஆதியாகமம் 50:20

ஆதியாகமம் 50:14-26

தேவன் தம்முடைய வழிகளில் நடந்து, தம்முடைய பார்வையில் நலமான வைகளைச் செய்கின்றவர்களுக்கு எப்பொழுதும் ஆதரவாகவேயிருக்கின்றார். அவர்களுக்கு எதிராக தீமைகளைச் செய்ய விரும்புகின்றவர்களை அவர் கவனிக் கின்றார். ஆயினும், சில வேளைகளில் அவர்கள் செய்ய விரும்பும் தீமைகளை அவர் தடுப்பதில்லை. அவர்கள் விரும்பும்படியே தீமையான காரியங்களைச் செய்ய அனுமதித்து விடுகின்றார். ஏனென்றால், அவர்கள் தீமைகள் என்று எண்ணிச் செய்கின்ற காரியங்கள் உண்மையில் தீமைகள் அல்ல. அவைகள் தம்மை விசுவாசித்து உண்மையோடு வாழ்கின்றவர்களுக்கு நன்மைகளாக மாறப் போகின்றது என்று அவர் காண்கின்றார்.

தேவன் நம்மை நேர்மறையான நன்மைகளால் மட்டுமல்ல. எதிர்றையான தீமைகள் வாயிலாகவும் ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கின்றார். யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்குத் தீமை செய்ய விரும்பினார்கள். தேவன் தடுக்கவில்லை. ஏனென்றால், தீமை என்று எண்ணி அவர்கள் செய்ய விரும்பிய செயல், யோசேப் பிற்கு நன்மையாக அமையப் போவதை கர்த்தர் கண்டார். அவர்கள் அவனை அடிமையாக விற்று எகிப்துக்குப் போக வைத்தது நல்லதே. அதனால் எகிப்தின் உயர்பதவியில் யோசேப்பை அமர்த்தப்போகும் தேவ திட்டத்திற்கு அது உதவியாகி விட்டது. எகிப்தில் ஆகாதபழி சுமத்தப்பட்டு அவன் சிறையில் தள்ளப்பட்டபோது தேவன் தடுக்க வில்லை. ஏனென்றால், அது தேவனுடைய திட்டத்தின் நிறை வேறுதலுக்கு வழிவகுத்தது.

தேவனுடைய வழிகளில் நடவாதவர்களுக்கு நிகழும் நல்லவைகள் தீமை களாகவும் மாறும். தேவனுக்குப் பிரியமாக வாழ்கின்றவர்களுக்கு நேரிடும் தீமை களும் நல்லவைகளாக மாறும். நாம் தேவனுடைய திட்டத்திலும், அவருடைய ஐக்கியத்திலும் வாழ்வதற்குக் கவனமாயிருக்க வேண்டும். அப்பொழுது நம்மை ஏற்படுகின்ற தீமைகள் தற்காலிக வேதனைகளைத் தந்தாலும், எதிர்காலங்களில் அவைகளே ஆசீர்வாதங்களாக மாறும்.

சில தோல்விகள், இழப்புகள், நஷ்டங்கள், அவமானங்கள், நம்மை வீழ்த்த வந்தவைகள் போல தோன்றலாம். ஆனால், அவைகள் நம்மை உயரிடங்களுக்குக் கொண்டு செல்லும் ஏணிகளாக மாறும்படி கர்த்தர் செயல்படுவார். தாவீதை ஒழித்துக்கட்ட சவுல் விரும்பினான். ஆனால், அதுவே தாவீது உயர்ந்து நிற்க உதவியது.

சிந்தனைக்கு...

நீ தேவனுடைய பிள்ளையானால் எதிர்ப்புகள் உன்னை உருக்குலைக்க அல்ல, உறுதிப்படுத்தவே வருகிறது.

அக்டோபர்
12
ஜீவ நீரோடை

தேவசித்தத்தின் மையத்தில்

நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான் .... யோவான் 12:26

யோவான் 12: 20-33

நகரப்பகுதி ஒன்றில் தங்கியிருந்து இறைப்பணி செய்து கொண்டிருந்த ஒரு குடும்பத்தினர், தேவ அழைப்பிற்கிணங்கி கிராமம் ஒன்றிற்குச் சென்றனர். எந்த அடிப்படை சௌகரியங்களையும் கொண்டிராத அந்தக் கிராமத்தில் அவர்கள் பல சிரமங்களோடு தேவ ஊழியம் செய்ய வேண்டியிருந்தது. நகரத்தில் அவர்கள் அனுபவித்த பல சௌகரியங்கள் அந்தக் கிராமத்தில், அவர்களுக்கு இல்லை. பலர் அவர்களை மிகவும் தியாகத்தோடு பட்டணத்தை விட்டு குக்கிராமத்தில் ஊழியம் செய்வதாகப் பாராட்டினார்கள்.

ஆனால், அவர்களோ தாங்கள் செய்வதை பெரிய தியாகமாக எண்ணவில்லை. ஏனென்றால், பட்டணத்தில் அவர்கள் வாழ்ந்து ஊழியம் செய்த நாட்களை விட, அந்த கிராமத்தில் அவர்கள் ஊழியம் செய்யும் நாட்கள் அவர்களுக்கு மகிழ்ச்சியும், சமாதானமும் திருப்தியும் நிறைந்த நாட்களாக இருப்பதாக அவர்கள் உணர்ந்தனர்.

ஆம். சௌகரியம், சந்தோஷம், திருப்தி போன்றவைகள் நாம் எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருக்கிறோம் என்பதைவிட, எப்படிப்பட்ட மனநிலையோடு இருக்கின்றோம் என்பதைச் சார்ந்ததாகும். நாம் தேவனுடைய சித்தத்தின் மையத்தில் இருக்கவேண்டும். தேவ உறவின் நிச்சயத்தோடு இருக்கவேண்டும். தேவன் விரும்புகின்றதைச் செய்கின்றோம் என்று கூறத்தக்கதாக நம் வாழ்க்கை இருக்க வேண்டும். அப்பொழுது அங்கே அமைதி, திருப்தி, நிறைவு, மனதின் உள்ளே சௌகரியம் ஆகியவைகள் இருக்கும்.

டேவிட் லிவிங்ஸ்டன் மெத்தவும் படித்த ஒரு மனிதர். அவர் நகரத்தில் தங்கி சகல சௌகரியங்களோடும் வாழ்ந்திருக்க முடியும். ஆயினும், அவரோ மனிதர்களைத் தின்னும் மனிதர்கள் வாழும் ஆப்ரிக்க காடுகளுக்குள் ஊடுருவிச் சென்றார். சோதனைகள் பலவந்த போதும் திரும்பிப் போகவில்லை. அங்கே பாடுகள் பல இருந்த போதிலும் அவர் திருப்தியும், நிறைவும் சந்தோஷமும் உடைய ஒருவராக இருந்தார். ஏனென்றால், தான் எங்கே இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அங்கே இருப்பதாக உணர்ந்தார். எதைச் செய்திட தேவன் விரும்பினாரோ அதைத் தான் செய்வதாக அவர் நம்பினார். எனவே சௌகரியங்கள் ஏதுமற்ற அந்தக் காட்டுப் பகுதிகளிலும் அவர் மனரம்மியத்தோடு ஊழியம் செய்தார்.

சிந்தனைக்கு...

தேவனோடு நடக்க நீ ஆயத்தமாயிருந்தால் உன்னோடு அவர் நடப்பதை உணர்ந்து கொள்வாய்.

குறை கூறும் ஆவி

மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். மத்தேயு 7:1

மத்தேயு 7:1-20

ஒருமுறை ஒரு நாள் முழுவதும் ஒரு ஆவிக்குரிய நண்பரோடு ஐக்கியம் கொள்ள நேர்ந்தது. அந்த நாள் முழுவதும் அவர் பல ஊழியர்களைப் பற்றியும், பல விசுவாசிகளைப் பற்றியும் பேசினார். அவருடைய பேச்சு முழுவதும் மற்றவர்களின் தவறுகளைக் குறித்ததாயிருந்தது. மிகச் சிறிய விஷயங்களைக்கூட கூர்மையாக அவர் அலசி விமர்சித்தார். பேச்சிற்கு இடையில் ஒருமுறை நான் "பிறருடைய குறைகளையே பார்த்துக் கொண்டிருப்பதும் நல்லதல்ல" என்றேன். உடனே அவர் "பிரதர்... நான் எதையும் மனதில் வைக்காமல் பேசிவிடுவேன். தவறைக் கண்டால் மூடி மறைக்கின்ற பழக்கமெல்லாம் எனக்குக் கிடையாது." என்றார் தன்னை நியாயப்படுத்தும் விதமாக.

தவறுகளையும், குற்றங்களையும், மாய்மாலங்களையும், சுயநலப் போக்குகளையும் கண்டுகொள்ளாமல் அவைகளைச் சாதாரணமாக எடுத்துக் கொள்வது சரியல்ல. பினகாஸைப் போல கர்த்தருக்கு எதிரான காரியங்களின் விஷயத்தில் சுட்டிக்காட்டுதலும் கண்டித்தலும் ஆகிய ஈட்டியை எடுத்துக்கொண்டு பாய்வது தேவையானதுதான். அதே வேளையில் ஈட்டியை கையில் பிடித்துக்கொண்டு, எங்கே யாரிடம் குறை இருக்கிறது குத்திப் போடலாம் என்று தேடி அலைகின்றவர்களாக நாம் இருக்கக்கூடாது. பிறரின் குறைபாடுகளை விமர்சிப்பதில் பேர் பெற்ற பலர், பிறருடைய நல்ல அம்சங்களை ஒருபோதும் பாராட்டுவதில்லை.

பரிசுத்த வைராக்கியம் என்பது கண்டன ஈட்டிகளோடு பாய்வதோடு மட்டுமல்ல. அன்பிற்காகவும், நல்ல பாசத்திற்காகவும் நாம் அறியப்பட வேண்டும். அன்பும், பொறாமையும், தாழ்மையும், அடக்கமும் கலவாத வெறும் விமர்சனங்களும், கண்டனங்களும், குறைகூறும் ஆவியால் ஏற்படுவதே. பிறருடைய குறைவுகளைச் சுட்டிக்காட்டும்போதும், கண்டிக்கும்போதும் நம்முடைய உண்மையான உள் மனதின் நோக்கங்கள் என்ன என்பதையும் கண்டறிய வேண்டும். பிறருடைய தவறுகளை அவர்களை மட்டந்தட்டிக் காட்டுவதற்கு கிடைத்துவிட்ட பொன்னான வாய்ப்புகளாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

மற்றவர்களிடம் குறைவுகளைக் கண்டு சுட்டிக்காட்ட விரும்பும் நாம், நம்மிடம் யாரும் குறைகளைக் காண இயலாத அளவிற்கு குற்றமற்றவர்களாக வாழவும் வேண்டும். பிறரிடம் நாம் கண்ட குறைவுகள் ஒரு வேளை நம்மிடம் இல்லாமல் இருக்கலாம். ஆனாலும், வேறுபகுதிகளில் நாம் குறைவுகளுடையவர்களாக இருக்கக்கூடும். அவைகளையும் நாம் கவனிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உன் வழி சரியென்றால் குறை சொல்பவர்களின் வாயை அல்ல, உன் காதை அடைத்துக்கொண்டு தொடர்ந்து செல்.

அக்டோபர்
14
ஜீவ நீரோடை

நல்ல வாழ்க்கையும் சந்தோஷமும்

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்...
பிலிப்பியர். 4:4

பிலிப்பியர். 4:1-10

சந்தோஷம் என்பது மனிதனுடைய அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. அந்தத் தேவையை நிறைவேற்றிட மனிதன் முயற்சிப்பது நியாயமானதே. ஆனால், பெரும்பாலும் சந்தோஷமான ஒரு வாழ்க்கையைப் பலர் எதிர்பார்க் கின்றார்களேயன்றி, நல்ல ஒருவாழ்க்கையை எதிர்பார்க்கவில்லை. ஆனால், நல்ல ஒரு வாழ்க்கையின் பிரதிவிளைவுதான் சந்தோஷமான வாழ்க்கை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்..

மனிதன் தன்னுடைய உடலையும், மனதையும், சந்தோஷப்படுத்திக் கொள்ள மிகவும் பிரயாசப்படுகின்றான். மிக மிக மோசமான வாழ்க்கை முறையை உடைய ஒருவன்கூட தன்னைச் சந்தோஷப்படுத்துவதில் மிகவும் முனைப்பாயிருக்கின்றான். பணம், பொருள், அந்தஸ்து, அதிகாரம், சௌகரியம், ஆகியவைகளால் தன்னைச் சந்தோஷப்படுத்திக் கொள்ள மிகவும் விரும்பு கின்றான். ஆனால், ஒரு நல்ல இருதயத்தின் தேவையை உணராத மனிதன், எவ்வளவுதான் தான் விரும்பியவைகளையெல்லாம் பெற்றாலும்,உண்மையான சந்தோஷத்தை அனு பவிக்கமாட்டான்.

ஒருவனுடைய சரீரம் நோயுற்று இருக்கும்போது, எவ்வளவு தான் சுவை மிக்க உணவுகளை உண்டாலும் அதனால் சரீரம் சற்றும் ஆரோக்கியமடையாது. அதுபோல ஒருவனுடைய இருதயம் பலவிதமான மோசமான குணங்களாலும், தேவவெளிச்ச மற்ற இருளினாலும் கேடானதாக இருக்கும் போது பணமும், பொருளும், பலவித சௌகரியங்களும் மிகுதியாக இருந்தாலும் அவன் சந்தோஷத்தின் நிலையைக் காணமுடியாது.

சாலொமோன் ராஜாவிடம் பணமும், பொருளும், அந்தஸ்தும், அதிகாரமும் தாராளமாக இருந்தது. விரும்பிய எதையும் பெற்று அனுபவிக்கும் வாய்ப்புகள் குறைவின்றி இருந்தது. ஆயினும், அவன் வாழ்வை வெறுக்கின்றவனாகவும், எல்லாவற்றையும் மாயை மாயை என்று கண்டு ஏமாற்ற உணர்வினால் பாதிக் கப்பட்டவனாகவும் மாறினான். காரணம் என்ன? தேவ உறவின் விளைவான ஒரு நல்ல இருதயமும், நற்குணங்களும், அவனிடம் இல்லை. எனவே, அவன் அனு பவிக்க ஆயிரம் பெற்றிருந்தும், சந்தோஷத்தில் நிறைவடையாமல், சஞ்சலம் மிகுந்த ஒரு மனிதனாக மாறினான். ஆம், தேவ உறவைத் தேடுங்கள். அதனால் இருதயம் நல்லதாக மாறும். அதனுடைய பிரதி விளைவே சந்தோஷம்.

சிந்தனைக்கு...

ஆயிரம் கோடி வைத்திருக்கிறவனைவிட ஆண்டவரை இதயத்தில் வைத்திருப்பவனே அதிகச் செல்வந்தன்.

வேகமான ஓட்டம்

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து. ஏசாயா 40:31

ஏசாயா 40:27-31

இடைவிடாமலும் இடைவேளையில்லாமலும் அதிவேகமாக தேவ ஊழியம் செய்கின்ற சிலரை நான் கவனித்திருக்கின்றேன். அவர்கள் தங்களின் முழு நேரங்களையும் அதிவிரைவான ஊழியச் செயல்பாடுகளினால் நிரப்பிக் கொள்கின்றனர். அவர்களுக்கு அதிக நேரம் ஜெபிப்பதற்கோ, அமர்ந்திருந்து வேதத்தை தியானிப்பதற்கோ, தங்களையும் தங்களின் செயல்பாடுகளின் தரங்களையும் சிந்தித்துப் பார்ப்பதற்கோ, நேரம் இருப்பதில்லை.

ஆனால், அதிவேகமாக ஓட விரும்புகின்றவன் அதிக நேரம் ஓய்வெடுக்கவும் வேண்டும். நன்றாக ஓய்வெடுக்கத் தெரியாதவன் நன்றாக ஓடமுடியாது. சிலருடைய விசுவாச வாழ்க்கையிலும் சிலருடைய ஊழியங்களிலும் வேகம் அதிகமாகயிருக்கின்றது. ஆனால், அந்த அளவிற்கு அடிப்படை வலிமையில்லை.

வேதாகமம் வேகமாக ஓடவேண்டியதின் தேவையையும் கூறுகின்றது. பொறுமையாகக் காத்திருக்க வேண்டியதின் தேவையையும் கூறுகின்றது. மோசே 40 ஆண்டுகள் அமைதியானதொரு சூழ்நிலையில் ஆடுகளை மேய்த்து தனக்குள் பல நல்ல தன்மைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியதாயிருந்தது அதற்குப் பின்னர்தான் 40 ஆண்டுகள் அதிவேகமாக ஆண்டவருடைய பணி ஓட்டத்தில் வெற்றியாக ஓடமுடிந்தது.

இயேசுகிறிஸ்து கிராமங்கள் தோறும் பட்டணங்கள் தோறும் சென்று அதிவேகமாக ஊழியம் செய்தார். அதே வேளையில், எவ்வளவு மிகுதியான ஊழிய நடவடிக்கைகளின் நடுவிலும், தம்மைத் தனியாகப் பிரித்துக் கொண்டு, தேவ சமுகத்தில் காத்திருக்கத் தவறவில்லை. எனவே, அவருடைய ஊழியம் வல்லமையானதாகவும், தேவ மகிமை நிறைந்ததாகவும் இருந்தது.

சிலர் அங்கே கூட்டம், இங்கே கூட்டம், இரவுக் கூட்டம், பகல் கூட்டம் என்று காலில் சக்கரம் கட்டிக் கொண்டு ஆவிக்குரிய நிகழ்ச்சி பங்கேற்புகளில் தீவிரமாயிருப்பார்கள். ஆனால், கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருந்து வேதத்தை தியானிப்பதிலும், தேவனிடம் ஜெபிப்பதிலும், நேரங்களைச் செலவிடமாட்டார்கள். சிலர் ஓயாத ஊழியங்களின் விளைவாக சற்று நேரம் அமர நேரமின்றி ஓடிக் கொண்டிருப்பார்கள். ஆனால், மரியாளைப் போல கர்த்தரின் சமுகத்தை நாடுவதிலும், அவருடைய ஆலோசனைகளைக் கேட்பதிலும், அவரோடுள்ள ஐக்கியங்களில் வளர்வதிலும் ஆர்வமற்றிருப்பார்கள். ஆனால், கர்த்தருடைய ஐக்கியத்துடன் காத்திராதவர்களின் ஓயாத ஓட்டங்கள் வீணானவை.

சிந்தனைக்கு...

இறைவனிடம் நெருங்கிட நீ காட்டும் ஆர்வம்தான்
இறைவனை உன்னிடம் நெருங்கிவரச் செய்யும் தூண்டுகோல்.

அக்டோபர்

16

ஜீவ நீரோடை

கண்களை மூடாதீர்

நீங்கள் அமர்ந்திருந்து
சங்கீதம் 46:10

ஏசாயா 37:1-20

சிலர் எப்பொழுதுமே எதையும் செய்யாமல் அமைதியாகக் கொஞ்சநேரம் உட்காரமாட்டார்கள். எப்பொழுதும் சினிமாப் பாடல்கள், டி.வி. சினிமாக் காட்சிகள், கதைப் புத்தகங்கள், எதையாவது பிறரிடம் பேசிக் கொண்டிருத்தல் என ஏதாவது ஒன்றில் மூழ்கியிருப்பார்கள். ஏன்? சந்தோஷத்திற்காக அல்ல. பொழுது போக்கிற்காக அல்ல. கவலைகளை உள்ளத்தில் உணர்ந்து விடாமலிருப்பதற்காக, பிரச்சினைகளைச் சிந்திக்க நேரமில்லாமல் செய்வதற்காக. உள்ளத்தின் போராட்டங்களைக் கண்டுகொள்ளாமல் மறைத்துக் கொள்வதற்காக. அவர்கள் தங்கள் நிலைமையைப் பார்க்கத் துணிவின்றி, பயந்துபோய் எதற்குள்ளாவது போய் ஒளிந்து கொள்கிறார்கள்.

ஆனால், நாம் அப்படியிருக்கக் கூடாது. பிரச்சினைகள் இருக்கலாம். கஷ்டங்கள் இருக்கலாம். மனப் போராட்டங்கள் இருக்கலாம். சிந்திக்கத் தொடங்கினால் பல சிக்கலான கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய கட்டாயம் வரலாம். ஆனாலும், அதைக் கண்டுகொள்ளாமல் தப்பித்து ஓட விரும்பக் கூடாது. கண்களை மூடிக் கொண்டிருக்கக்கூடாது. அதனால் தீர்வுகள் ஏற்படுவதில்லை. அவற்றைத் தைரியமாகப் பார்க்கவேண்டும். உணரவேண்டும். நம்முடைய உண்மையான நிலைமையினை தயக்கமின்றிக் கவனிக்கவேண்டும்.

சில புண்களுக்குப் புறம்பாகக் களிம்பு தடவினால் குணமாகாது. அதற்குக் காரணமான உள் வியாதியைக் கண்டறிந்து உள்ளாக மருந்து சாப்பிட வேண்டும். உட்புறத்தில் நோயின் கூறு கண்டறியப்பட்டு மருந்து உட்கொள்ளப்பட்டால், வெளியில் தெரியும் புண் தானாகக் குணமாகிவிடும். தாவீது தன் பாவங்களை மறைத்துக் கொண்டிருந்தவரை அவனுக்கு நிம்மதியே இல்லை. ஒருநாள் மனதார பாவத்தை உணர்ந்து மனஸ்தாபப்பட்டு கதறிய பின்னர்தான், காயங்கள் ஆறுவதற்கான வழி ஏற்பட்டது.

பிரச்சினைகளை, தோல்விகளை, தவறுகளைப் பார்க்காமல் மனதை வேறு எங்கோ திருப்பி வைத்துக் கொண்டிருந்தால், பிரச்சினைகள் அங்கே நின்று கொண்டுதான் இருக்கும். அவைகளைப் பார்த்து சந்திக்க முன்வரும் போதுதான், அவைகளிலிருந்து விடுதலை அடைவதற்கான வழி பிறக்கும். அப்போதுதான் அதற்குரிய தீர்வுகளைத் தேவன் தர முடியும். கிறிஸ்தவப் பாடல்களைக் கேளுங்கள். செய்திகளைக் கேளுங்கள். ஆனாலும், உங்களது நிலைமையைக் காண்பதற்குப் பயந்து தப்பித்துக்கொள்ள. அவற்றை உபயோகிக்காதீர்கள்.

சிந்தனைக்கு...

ஆன்மீகம் என்பதை பொல்லாத இதயத்தின் குறைகளை மறைப்பதற்காக அல்ல, அவற்றை மாற்றுவதற்காக உபயோகி.

அக்டோபர்
17
ஜீவ நீரோடை

பண்புகளைப் பாராமல்

அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும்...
மத்தேயு 5:45

மத்தேயு 5:39-48

ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இரண்டு நண்பர்கள் இணைந்து சமூக சேவை நிறுவனம் ஒன்றை நிறுவினார்கள். நல்ல விதமாக பணிகள் நடந்து கொண்டிருக்கும் போது, அவர்களில் ஒருவர் அந்தப் பணிகளில் சலிப்புற்று அந்த நிறுவனத்தை விட்டுப் போய்விட்டார். ஏனென்றால், உதவி பெறுகின்ற ஆதரவற்றவர்கள் பலரிடம் நல்ல குணங்களே இல்லை. அவர்கள் ஆதரவற்ற நிலையிலிருந்தபோதும், நன்றியுணர்வில்லாதவர்களாகவும், கீழ்ப்படியும் தன்மையில்லாதவர்களாகவும், பொய் பேசுகின்றவர்களாகவும் இருந்தனர்.

சிலருடைய வறுமைநிலை, ஆதரவற்றநிலை, நோயுற்ற நிலை ஆகியவை நமக்கு அவர்கள்மேல் இரக்கத்தை உருவாக்கி உதவ வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால், அவர்களின் தவறான குணங்கள், தவறான மனோபவங்கள் தாழ்மையற்ற மனநிலைகள் ஆகியவற்றைப் பார்த்ததும், இப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஏன் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விலகிவிடச் செய்கின்றது.

ஆனால், ஒருவர் நற்பண்புகளை உடையவரா என்பதை அல்ல. அவர் பரிதாபத்திற்குரிய ஒரு நிலையிலுள்ளவரா என்பதற்கே நாம் அதிக முக்கியத்துவம் செலுத்த வேண்டும். உதவி பெறும் நிலையிலிருப்பவர்களிடம் நாம் உன்னத குணங்களை எதிர்பார்த்தால், ஒருபோதும் நல்லதைச் செய்யமுடியாது.

நாம் பாவிகள் என்ற ஒரு மோசமான நிலையிலிருந்த போதுதான், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி நமக்கு உதவி செய்தார். கானகத்தில் பயணம் செய்த இஸ்ரவேல் மக்கள் முரட்டாட்டமான மனநிலை உடையவர்கள். நன்றியில்லாதவர்கள். எத்தனை நன்மை பெற்ற பின்னரும் முறுமுறுத்துக் கொண்டேயிருந்தவர்கள், ஆயினும், அவர்களுக்கு தேவன் அப்பத்தையும் தண்ணீரையும் அனுதினத் தேவைகளையும் தராமலிருக்கவில்லை. அவர்கள் வெறுக்கப்படத்தகுந்த விதமான மோசமான சுபாவங்களோடிருந்த வேளையிலும், தேவன் ஆதரவு தராமலிருக்கவில்லை. ஏனென்றால், தேவனைத் தவிர அவர்களை ஆதரிக்க அங்கே யாருமில்லை.

நன்றியில்லாதவர்களுக்கும் நல்லதைச் செய்வோம். உண்மையில்லாதவர்களுக்கும் உதவி செய்வோம். பண்பற்றவர்கள் மேலும் பரிதாபம் கொள்வோம். ஏனென்றால், அவர்களின் ஆதரவற்ற நிலைக்கு தேவ அன்பில் நாம்தான் உதவி செய்தாக வேண்டும்.

சிந்தனைக்கு...

இறை அன்பினால் நிரம்பாத இதயமுடையவனின் கண்கள்,
எப்போதும் குற்றப்பார்வையினால் நிரம்பியிருக்கும்.

அக்டோபர்
18
ஜீவ நீரோடை

நித்திய வாழ்வு

நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்....
மத்தேயு 19:16

மத்தேயு 19:16-30

மிகுந்த செல்வங்களையுடைய ஒரு வாலிபன், நித்திய வாழ்வைப் பெற விரும்பினான். எனவே, இயேசுவிடம் வந்தான். அதற்காக எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அவரோ செல்வங்களை விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, தம்மைப் பின்பற்றி வரச் சொன்னார். அதனை ஏற்றுக்கொள்ள இயலாத அந்த வாலிபன் துக்கத்துடனே திரும்பிப்போனான். அவன் நித்தியமான வாழ்வினைப் பெற சில நன்மைகளைச் செய்யத் தயாராகயிருந்தான். அதாவது சில நன்மையான செயல்களைச் செய்து நித்திய வாழ்வினைப் பெற விரும்பினான்.

இயேசுவோ தம்மைப் பின்பற்றி வருவதால் மட்டுமே அதனைப் பெற முடியும் என்று தெளிவாகச் சொன்னார். ஆம், இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக மாறி, அவரோடு ஐக்கியம் கொண்டு, தினமும் அவரைப் பின் தொடர்ந்து வாழ்ந்தால் மட்டுமே, நித்திய வாழ்வினைப் பெற முடியும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. செயல்களால் மட்டும் அது முடியாது. நாம் இயேசுவுக்கேற்றபடி அவருடைய வழிகளில் நடவாமல்கூட பல பக்திப்பூர்வமான நல்ல காரியங்களைச் செய்ய முடியும். ஆனால், தேவன் ஒருவர் எவ்வளவு நல்லதைச் செய்தார் என்பதைவிட, எவ்வளவு தூரம் தம்முடைய பாதையில் அவர் நடந்தார் என்பதையே முதலில் பார்க்கின்றார்..

சிலர் திடீரென்று ஆன்மிக உணர்வடைந்து பலவித நன்மைகளைச் செய்ய முன்வருவதுண்டு. ஊழியங்களுக்கு உதவி செய்தல், தானதர்மங்கள் செய்தல், ஜெபக் கூட்டங்கள் நடத்துதல் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபடுவதுண்டு. இவை யாவும் நல்லதே. ஆனாலும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தல், இயேசுவின் பாதையில் நடக்க முன்வருதல், அவரோடு நெருங்கிய ஐக்கியம் கொள்ளுதல், அவர் வாழ்ந்தது போலவே வாழ்வதற்கு ஆர்வம் கொள்ளுதல், அவருக்காக நிந்தை அவமானம் சகித்தல் போன்ற தெய்வீக அனுபவங்களுக்குள் தங்களை ஈடுபடுத்தி, உயர்ந்த லட்சியத்தை நோக்கி ஓடவில்லையேல், நித்திய வாழ்வைப் பெற முடியாது.

சிலர் கர்த்தருடைய பணிகளுக்காக மிகத் தாராளமாகக் கொடுக்கின்றனர். அவ்விதமான தாராள சிந்தையை தேவன் கனப்படுத்தி அவர்களின் கைகளின் பிரயாசங்கள் மேலும் மேலும் ஆசீர்வதிக்க வேண்டும் என யாருமே விரும்புவார்கள். ஆயினும், தேவனுடைய விதி வித்தியாசமாக இருக்கிறது. தாராள சிந்தையைவிட தம்மை உண்மையாய்ப் பின்பற்றுவதையே கர்த்தர் விரும்புகின்றார். கர்த்தருடைய வழியில் நடந்து, அவருக்காகக் கொடுப்பதுதான் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் என்பதே வேத நியதி.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய ஆசீர்வாதம் வாரி வாரி வழங்குவதில் அல்ல.
அவருடைய வழிகளில் நடப்பதாலேயே அது வருகிறது.

அக்டோபர்
19
ஜீவ நீரோடை

தேவனுக்கு ஆலோசனை

நீ எகிப்துக்குப் போகாமல் இந்தத் தேசத்திலே வாசம் பண்ணு... ஆதியாகமம் 26:2,3

ஆதியாகமம் 26:1-18

ஒருமுறை தேவ ஊழியர் ஒருவர் தனக்குக் கொஞ்சம் கடன் சுமைகள் இருப்பதாகவும், சில ஊழியத் தேவைகள் சந்திக்கப்படாமல் இருப்பதாகவும் வருத்தத்தோடு கூறினார். தொடர்ந்து அவர் பேசும்போது ஒருமுறை அமெரிக்கா போய் வந்தால் எல்லாத் தேவைகளையும் எளிதாகச் சந்தித்து விடலாம் என்று நம்புவதாகவும், அதற்காகத் தேவனை நோக்கித் தொடர்ந்து ஜெபிப்பதாகவும் கூறினார்.

கடன் சுமைகளை நீக்கவும் ஊழியத் தேவைகளைச் சந்திக்கவும் தேவனை நோக்கி அவர் ஜெபிப்பதில் நியாயமுண்டு. ஆனால், அமெரிக்காவுக்குத் தன்னைத் தேவன் கொண்டு சென்றால் எல்லாம் சரியாகிவிடும் என்ற அவருடைய விசுவாசம் ஆவிக்கேற்றதோ, ஆரோக்கியமான விசுவாசத்திற்கேற்றதோ அல்ல. தேவனை நோக்கி விசுவாசத்தோடு மன்றாட நமக்கு உரிமை உண்டு. ஆனால், இன்னின்ன விதமாக எனக்குச் செய்து என்னை ஆசீர்வதியும் என்று தேவனுக்கு ஆலோசனை கூற நமக்கு அதிகாரமில்லை.

பலருடைய விசுவாசங்கள் இப்படி விசித்திரமாகவே உள்ளது. அவர்கள் தேவனுக்கு வழி நடத்துதல்களையும் ஆலோசனைகளையும் கொடுத்து தங்களை ஆசீர்வதிக்கக் கூறுகின்றனர். இது தவறான வழி. நம்முடைய தேவைகள் பெரிதாகயிருந்தாலும், அவைகளைச் சந்திக்கத் தேவன் யாரையும் பணக்கார நாடாகிய அமெரிக்கா வரை அழைத்துச் செல்ல வேண்டிய கட்டாயமில்லை. அவர் நினைத்தால் இந்த ஏழை நாடாகிய இந்தியாவிலேயே அதைச் செய்ய முடியும். ஆனால், நமக்கு அந்த விசுவாசம் வேண்டும்.

எலியாவுக்குத் தேவையான அனுதின ஆகாரத்தைக் கொடுக்க, தேவன் அவனை வசதியான பிரபுவின் வீட்டிற்கோ, செழிப்புள்ள இராஜா வீட்டிற்கோ அனுப்பவில்லை. அடுத்த வேளை உணவிற்கு வழியின்றி சாகத் தயாராயிருந்த ஒரு ஏழை விதவையின் மூலம் அதனை அவரால் செய்ய முடிந்தது.

வனாந்திரத்தில் பல்லாயிரங்களுக்கு உணவு வழங்க விரும்பிய கர்த்தர் சீடர்களை மிகுதியான உணவுப் பொருள் வைத்திருப்பவர்களிடம் அனுப்பவில்லை. ஒரு சாதாரண சிறுவனைக் கொண்டு அதனை அவரால் நிறைவேற்ற முடிந்தது. இதை இதை இன்னவிதமாகச் செய்து தேவனே என் தேவைகளைச் சந்தியும் என்றோ, ஆசீர்வதியும் என்றோ நாம் ஜெபிக்கத் தேவையில்லை. தேவன் சகலவற்றையும் செய்ய வல்லவர். அவர் தம்முடைய சித்தத்தின்படி நம்மை நடத்தி ஆசீர்வதிக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும்.

சிந்தனைக்கு...

உன் தேவையை தேவனிடம் கூறுவது விசுவாசம்
அவருக்கு வழியையும் கூறுவது அவிசுவாசம்.

அக்டோபர்
20
ஜீவ நீரோடை

துன்பங்கள் ஏன்?

ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள்... எரேமியா 2:13

எரேமியா 2:13-22

வாழ்க்கையில் துன்பங்கள் தொடருகின்றது. மன வேதனைக்குரிய நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்கின்றன. கஷ்டங்களும் நஷ்டங்களும் சங்கிலித் தொடர் போல வருகின்ற போது ஏன் இப்படி? என்ற கேள்வி எழும்புகின்றது. இவைகள் தேவபக்தியுடன் வாழ்வதினால் என்ன பயன்? என்றும், தேவன்மேல் நம்பிக்கை வைத்து வாழ்வதினால் என்ன நன்மை? என்றும், நம்மை எண்ணத் தூண்டுகின்றது.

ஆனால், இதுபோன்ற சூழ்நிலைகள் தேவ பக்தியாய் வாழ்வது பயனற்றது என்று அல்ல. இன்னும் நாம் தேவனிடம் நெருங்கி வர வேண்டிய தேவை இருக்கின்றது என்பதையே நமக்கு அறிவிக்கின்றது. நாம் பக்தியாய் பல காரியங்களைச் செய்து தேவனைப் பிரியப்படுத்துகின்றவர்கள் என்று எண்ணிக் கொள்ளலாம். ஆனாலும் தேவனோடுள்ள நம்முடைய நெருக்கமும், தேவனுக்கேற்ற வாழ்க்கையின் தரமும், சோதனைகளையும் துன்பங்களையும், தொடர்கதையாகாமல் தடுப்பதற்குப் போதுமான அளவில் இல்லாதிருக்கலாம்.

பெரும்பாலும் நான் ஜெபிக்கின்றேன். நான் ஆராதிக்கின்றேன். நான் தேவ பக்தியுடன் வாழ்கின்றேன். பின்னர் ஏன் தேவன் எனக்கு இத்தனை துன்பங்களைத் தருகின்றார்? என்று எண்ணவே நாம் தூண்டப்படுகின்றோம். ஆனால் எந்த அளவிற்குத் தேவ உறவினை நான் நாடுகின்றேன்? எந்த அளவிற்கு தேவ உறவை உணர்ந்திருக்கின்றேன்? எந்த அளவிற்கு தேவன் விரும்புகின்றவிதமான ஒரு வாழ்க்கையை வாழ்கின்றேன் என்றெல்லாம் நாம் சிந்திப்பதில்லை.

துன்பங்களால் சோர்ந்து போகவும் விரக்தியடையவும் செய்கின்றோம். ஆனால், அவைகள் இன்னும் நீ தேவனை நெருங்கு, இன்னும் அவரோடுள்ள உறவை அதிகமாக்கு. இன்னும் உன்னை ஆராய்ந்து பார்த்து கர்த்தருக்கு முன்பாக அவருக்கு உகந்த வாழ்க்கையை வாழ முன்வா, என்று சொல்லுகின்ற உண்மைகளைக் கேட்கக் கவனமின்றியிருக்கின்றோம். அதனுடைய விளைவாகத் துன்பங்களைச் சந்திக்கும் ஆற்றலைப் பெறாமலும், அவைகளினின்று விடுதலையடையும் வழியைக் காணாமலும் போகின்றோம்.

நம்முடைய வெறும் ஜெபதபங்களும், ஆராதனைகளும், பக்தியுணர்வு கொண்ட பல செயல்களும், வாழ்க்கையில் சோதனைகளையும் துன்பங்களையும் தடுப்பதற்கும், வெற்றியாகக் கடந்து செல்வதற்கும் போதுமானவைகள் அல்ல. தேவ உறவில் வலிமையும், தேவனுக்கு ஏற்றதொரு நல்லதொரு வாழ்க்கையும்தான் துன்பங்களைத் தொடர்கதையாக்காமல் தடுக்கும்.

சிந்தனைக்கு...

தேவனோடு நிலைத்திருப்பவன்,
சோதனைகளால் நிலைகுலையாதிருப்பான்.

அக்டோபர்
21
ஜீவ நீரோடை

தேவனுக்கு நீ வேண்டும்

உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன். ஏசாயா 54:7

ஏசாயா 54:1-17

திருமணமான ஒரு பெண் சந்தர்ப்ப சூழ்நிலையின் விளைவாகவும், ஞானமில்லாமல் செயல்பட்டதின் விளைவாகவும் ஒரு தவறுக்குள் விழுந்தாள். அதனுடைய விளைவாக அவளுடைய கணவன் நீ எனக்குத் தேவையில்லை என்று கூறி அவளை விட்டுப் பிரிந்தான். அவளுடைய உறவினர்கள் அவளுடைய தோழிகள் யாவரும் அவளோடு பழகுவதை நிறுத்திக் கொண்டனர். அவளுடைய தகப்பனும் மனமுடைந்த நிலையில், நீ எங்களுக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டார். ஆனால், அவளுடைய தாயார் மட்டும் அவளைச் சேர்த்துக் கொண்டார். தாய் அவளை ஏற்றுக் கொண்டதை நெருங்கிய சில உறவினர்களே விரும்பவில்லை. அதற்கு அந்தத் தாய் உங்களுக்கு அவளை வேண்டாம் என்பது எளிதானது. ஆனால், நான் பெற்றெடுத்த பிள்ளையை வேண்டாம் என்று வெறுப்பது எனக்கு எளிதான விஷயமல்ல என்றார்.

உயிரைப் போல நம்மை நேசிக்க பலர் இருக்கலாம். ஆனால், ஒரு தவறைக் காண நேர்ந்தால், ஒரேயடியாக நம்மை வெறுத்துக் குப்பையைப் போல வெளியே வீசிவிட நேரிடலாம். ஆனால், எல்லா உறவுகளைவிட ஒரு தாயின் மனநிலை என்பது மிகவும் வித்தியாசமானது. ஆனால், இந்தத் தாயின் மனநிலையைவிட மிகவும் மேலானதே, நம்மைப் படைத்த தேவனுடைய மனநிலை. உலகமே நம்மைத் தூசி என எண்ணி உதறிவிட்டாலும்கூட, அவரோ நம்மை உதாசீனப்படுத்துவதில்லை. ஏனென்றால், நாம் அவருடைய பார்வையில் விசேஷமானவர்கள். பாவிகள் என்று உலகம் நம்மை அற்பமாக எண்ணும். ஆனால், தேவனோ அவ்விதம் எண்ணி நம்மைத் தள்ளாமல், நீ எனக்கு வேண்டும் என்பார்.

ஏனென்றால், அவர் பாவிகளான நமக்காகத்தானே இந்தப் பூமியில் மனிதராக வந்து, தம்முடைய உயிரைத் தந்து நம்மை மீட்டார். அந்த மீட்பிற்காக அவர் கொடுத்த கிரயம் மிகப்பெரியது. எனவே, யார் தள்ளினாலும் அவர் நம்மைத் தள்ள இயலாது.

ஒரு ஆப்பிள் பழம் சாக்கடையில் வீழ்ந்தால் சீ, வேண்டாம் என்று தூக்கி வீசிவிடுவோம். ஆனால், கையில் அணிந்திருந்த தங்கமோதிரம் விழுந்தால் வீசி விடுவோமா? அதனைக் கழுவி சுத்திகரித்துப் பயன்படுத்தவே செய்வோம். தேவ சாயலில் படைக்கப்பட்ட மனிதன் போனால் போகட்டும் என்று வீசி எறியத்தக்க ஒரு ஆப்பிள் பழம் அல்ல. அவன் தேவனுடைய பார்வையில் தங்க மோதிரம். அவர் அவனைக் கழுவிப் பயன்படுத்துவாரேயன்றி வேண்டாம் என்று வீசமாட்டார்.

சிந்தனைக்கு...

இறைவனுக்குரியவைகளைத் தேட நீ வேகமாயிருந்தால், உனக்குரியவைகளைத் தேட தேவன் தாமதமாக இருக்கமாட்டார்.

அக்டோபர்
22
ஜீவ நீரோடை

சந்தோஷம் தேவை

உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.
சங்கீதம். 51:12

சங்கீதம் 51:10-19

சில நேரங்களில் தாழ்ந்து போவதும், விட்டுக் கொடுப்பதும், சகிப்பதும், பிறருடைய அநீதியான செயல்களை நினையாமல் அவர்கள் மேல் அன்புகாட்டுவதும், எனக்கு எளிதான விஷயங்களாயிருக்கின்றன. ஆனால், சில நேரங்களில் மற்றவரின் கோபமூட்டும் ஒரு சிறு வார்த்தைக்கு மறுபதிலளிக்காமல் பொறுமை காப்பது மிகவும் கடினமான காரியமாயிருக்கின்றன. சகித்து பொறுத்துப் போனால் கூட, அது ஒரு பெரிய சுமையைச் சுமப்பது போல் இருக்கின்றது.

எப்பொழுது என்னால் அதிகமாகத் தாழ்மைப்படவும், விட்டுக் கொடுக்கவும் அன்புகாட்டவும் முடிகின்றது என்பதை கவனித்துப் பார்ப்பேன். இருதயத்திற்குள் கர்த்தர் ஒரு விசேஷ சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அருளும் போதுதான் அவ்விதம் எளிதாயிருக்கின்றது. தேவன் ஆவியில் ஒரு விசேஷ மகிழ்ச்சியையும் விடுதலையையும் தரும்போது, ஆண்டவருக்காக எதையும் சகிக்கும் ஆர்வமும், வலிமையும் வந்துவிடுகிறது.

கர்த்தர் நல்லவர். அவருடைய கட்டளைகள் யாவும் நல்லவைகள். அவருடைய ஆலோசனைகள் யாவும் அன்பு நிறைந்தவை. ஆயினும் அது சர்க்கரை கலக்காத தேநீர் போன்றது. அதனை நாவு சுவைக்காது. கர்த்தர் தருகின்ற சந்தோஷம் சமாதானம் போன்ற இனிப்புப் பகுதிகள் சேர்ந்தால்தான், கர்த்தருடைய கட்டளைகளாகிய தேநீரை விரும்பி ஏற்றுச் சுவைக்க முடியும். தேவனுடயை கட்டளைகளை நாம் மிக நல்லது என்று பின்பற்ற விரும்பினாலும் அவர் நமக்குள் தம்முடைய ஐக்கியத்தினால் ஒரு சந்தோஷத்தைத் தர வேண்டும். அந்தச் சந்தோஷத்தை நாம் நமக்குள் உணரும்போதுதான் கர்த்தருடைய ஒழுங்குகள் யாவற்றையும் விரும்பிக் கடைப்பிடிக்கும் நல்ல தூண்டுதல்கள் நமக்குள் ஏற்படும்.

எனவே, கர்த்தருடைய போதனைகளின்படிச் செயல்பட பிரயாசப்படுவதோடு, முதலாவது தேவ உறவையும் ஐக்கியத்தையும் நமக்குள் அதிகமாகத் தேட வேண்டும். தேவ ஐக்கியம் நமக்குள் உணரப்படும் போதுதான் இருதயம் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அதிகமாக உணரும். நம்முடைய ஜெப வேளைகள் மட்டுமல்லாமல் பிற நேரங்களிலும் கர்த்தரை உள்ளான இருதயத்தில் நினைக்கவும் தேடவும் வேண்டும். அப்பொழுது அவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவார். அதனால் வருகின்ற மகிழ்ச்சி தேவ கட்டளைகளை எளிதாகப் பின்பற்றும் பலத்தைத் தரும்.

சிந்தனைக்கு...

வேதமும் தியானமும் உனக்குத் தூரமாயிருந்தால்
பயமும் கவலையும் உன் பக்கத்தில் இருக்கும்.

அக்டோபர்
23
ஜீவ நீரோடை

மனிதனுக்கு ஆறுதலாக

என் சிநேகிதரே, எனக்கு இரங்குங்கள்...
யோபு 19:21

1 யோவான் 3:11-24

யோபுவின் நண்பர்களைப் பார்க்கும் போது நமக்குக் கொஞ்சம் வெறுப்பு தான் ஏற்படுகிறது. ஆனால், அவர்களும் யோபுவைப் போல இறைபக்தி மிகுந்தவர்கள் என்பது தெரிகிறது. அவர்களுக்கு அதிகமான தேவ வைராக்கியம் இருந்ததை அவர்களின் நீண்ட சொற்பொழிவுகள் விளக்குகின்றது. அவர்கள் தேவனைக் குறித்தும், அவருடைய நியாயங்களைக் குறித்தும் சொன்ன பல விஷயங்கள் மிகச் சரியானவையே.

ஆனால், அவர்களின் தேவபக்தியும் வைராக்கியமும் தேவனுக்காகப் பரிந்து பேசத்தூண்டியதேயன்றி, தங்கள் நண்பனுக்காகப் பரிந்து பேசத் தூண்ட வில்லை. தேவன் தவறே செய்ய முடியாத பரிசுத்தர் என்பதை அவர்கள் அதிகமாக வற்புறுத்த விரும்பினார்கள். ஆனால், அந்த நோக்கத்தை நிறைவேற்ற யோபுவை அவர்கள் மகாபாவியாக சித்தரிக்கத் துணிந்தார்கள். தேவனுடைய நீதியைக் குறித்த அவர்களின் பார்வை சரியானதே. ஆனால், யோபுவையும் அவனுடைய நீதி யான வாழ்க்கையையும் அநீதியானது போல காண்பிக்க, அவர்கள் காட்டிய தீவிரம் மிகவும் தவறானவை.

அவர்களுடைய உண்மையான நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதோ அவருடைய நியாயங்களை உயர்த்திப்பிடிப்பதோ அல்ல. யோபுவைச் சாதாரணப் படுத்திக் காண்பித்து, அவனை மறைமுகமாகக் காயப்படுத்தி மகிழ்வதே அவர்களின் நோக்கம். ஆனால், முடிவைப் பார்க்கும் போது கடவுளுக்காக வாதாடும் வக்கீல் களாக அவர்கள் நின்றதைத் தேவன் கணம் பண்ணவில்லை. மாறாக அவர்கள் மேல் கோபமேயடைந்தார். ஏனென்றால், அவர்கள் யோபுவின் பாடுகளைக் கண்டு அவனுக்காக ஆறுதல் வார்த்தையைப் பேசாமல், மாம்சீக வைராக்கியத்தில் தேவனை மெச்சிக் கொண்டிருந்தார்கள்.

தேவ வைராக்கியமும், மிகுந்த தேவ பக்தியும் நமக்கு அவசியம் தேவை. ஆனால், அவைகள் இன்னொரு மனிதனை நேசிக்கவும் தேற்றவும் நம்மைப் பலப்படுத்தவும் வேண்டுமேயொழிய, மற்றவர்களை அருவருக்கத்தூண்டும் விஷ யங்களாகி விடக்கூடாது. தேவ வைராக்கியத்தின் வெளிப்பாடு மற்றவர்களுக்கு ஆறுதல் அளிப்பதில் விளங்க வேண்டுமேயன்றி மட்டந்தட்டுவதிலோ, புண்படுத்து வதிலோ விளங்கக் கூடாது. சிலருடைய தேவபக்தி தேவனை உயர்த்துவதைப் போன்று காட்சியளித்தாலும் மறைமுகமாக பிறரைத் தாழ்த்திப் பார்க்க விரும்பும் ஒரு மாய்மாலச் செயலாகவே உள்ளது. மனிதனை வெறுப்பதின் வாயிலாக நம்முடைய தேவ அன்பை வெளிப்படுத்த விரும்பினால் அந்த அன்பு தேவ அன்பாயிராது.

சிந்தனைக்கு...

கிளையை வெறுத்து மரத்தை நேசிக்க முடியுமா?
மனிதனை வெறுத்து இறைவனை நேசிப்பது நிஜமாகுமா?

அக்டோபர் 24

ஜீவ நீரோடை

உணர்வுகளை அடக்காமல்

நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன்.
சங்கீதம் 39:2

சங்கீதம் 39:1-13

மனதிற்குள் கோபமாயிருக்கும் போது அந்தக் கோபத்தை அடக்கி மறைத்துக் கொண்டு அன்பான வார்த்தைகளைப் பேசுகின்றோம். மனதிற்குள் மற்றவர்களின் நல்ல நிலைமைகளும், உயர்வுகளும், பொறாமையை ஏற்படுத்துகின்றது. ஆனால் சிரமப்பட்டு அதனை வெளியே தெரியாமல் பார்த்துக் கொண்டு மற்றவர்களை வாழ்த்தவும் பாராட்டவும் செய்கின்றோம். வெறுப்புணர்வு உள்ளத்தை நிரப்பியுள்ளது. ஆனால் நாம் யாரையும் வெறுக்காதவர்கள் என்று காண்பிப்பதற்காக அதனை மறைத்து பாசமாக நடந்து கொள்கின்றோம்.

ஆம், நமக்குள் இருக்கும் உணர்வுகள் வேறு, நாம் நடந்து கொள்ளும் விதங்கள் வேறு. நம்முடைய உண்மையான உணர்வுகளை அடக்கிக்கொண்டு பிறரைத் திருப்திப்படுத்துவதற்காக வித்தியாசமாகச் செயல்படுவதை நல்ல பழக்கம் என்று எண்ணுகின்றோம். ஆனால், இதனால் பல தீமைகள் உண்டு. நம்முடைய உணர்வுகள் வெளிப்படுத்தப்படாமல் அடக்கப்படுவதால் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல பிரச்சினைகளை அவை ஏற்படுத்தும். அப்படியானால் கோபத்தையும், வெறுப்பையும், கருத்து வேறுபாட்டையும் பொறாமையையும் அப்படியே வெளிப்படுத்த வேண்டுமா? நாம் உள்ளுக்குள் உணருகின்றபடியே வெளிப்படுத்த முந்தினால் அது நன்றாகயிருக்குமா? மேற்கண்ட மனநிலைகளை அப்படியே வெளிப்படுத்துவது நல்லதல்ல. ஆனால் அவைகளை அடக்கி வைப்பதில் அதிக மோசமான விளைவுகள் உண்டு.

அவைகளை மனிதர்களிடம் நாம் வெளிப்படுத்தாமல் தேவனிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவைகளை அடக்கி மறைக்காமல் கோபத்தையும், வெறுப்பையும், பொறாமையையும், அதிருப்தியையும், மனக்காயமடைந்த உணர்வையும் கரைத்து அகற்றவேண்டும். தாவீதைப் போல பிறர்மேல் நமக்கிருக்கும் உண்மையான உணர்வுகளைக் கர்த்தரிடம் சொல்லி அவரிடம் உள்ளதை உள்ளபடியே திறந்து காட்ட வேண்டும். தேவன் தம்முடைய அன்பினாலும், ஆவியினாலும், ஐக்கியத்தினாலும் அவைகளை பலமிழந்து போகச் செய்வார். கோபமும், வெறுப்பும், பொறாமையும், மனக்காயமும், வருத்தமும், கசப்பும் முற்றிலும் அகன்று போகாத வேளையிலும், தேவனோடு அவைகளைக் குறித்து மனந்திறந்து பேசும் போது அவைகளின் வேகங்களும், உக்கிரங்களும், அழுத்தங்களும், சுட்டெரிக்கும் தன்மைகளும் கணிசமாகக் கரைந்து போய்விடும்,

சிந்தனைக்கு...

நீதிமானின் வாழ்க்கையைத் துன்பங்கள் கஷ்டப்படுத்தும்,
ஆனாலும் அது அவனை நஷ்டப்படுத்தி விடாது.

அக்டோபர்

25

ஜீவ நீரோடை

வளமையா, வாழ்க்கையா?

அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்...
எபிரெயர் 13:7

எபிரெயர் 13:7-25

வேதாகமக் கால தேவ மனிதர்கள் சிலருடைய வாழ்க்கையின் சில பகுதிகள், மிகச் செழிப்பானவையாகவும், மேன்மையும், உயர்வும் உடையதாகவும் விரும்பத்தக்க பசுமையானதாகவும் உள்ளன. எனவே, பலர் அவ்விதமாகவே தங்களின் வாழ்க்கைப் பகுதிகளும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என வாஞ்சிக்கின்றனர். அவ்விதம் ஆசீர்வதிக்கப்பட இடைவிடாமல் வேண்டுதலும் செய்கின்றனர். ஆபிரகாமின் செல்வச்சீர் மிகுந்த வளமையான நிலை, தாவீதின் உயர்த்தப்பட்ட நிலை, யோசேப்பின் மகிமை, தானியேலின் உயர்பதவி, ஆகியவைகளை முன்னுதாரணங்களாக வைத்து, அவர்களைப் போலத் தங்களையும் தேவன் உயர்த்த வேண்டும் என்று, யாக்கோபைப் போல விடாமல் போராடுவோர் பலர்.

இதனைத் தவறு எனக் கூறிவிட முடியாவிட்டாலும், அவர்களுடைய பார்வைகள் மேற்கண்டவர்களின் வலிமையான சூழ்நிலைகளை மட்டும் மையங்கொண்டு, அவர்கள் கடந்து வந்த பாதையில் கர்த்தருக்கு முன்பாக வாழ்ந்த விதங்கள்மேல் மையங் கொள்ளாமல் போவதுதான் வருத்தமானது. எப்பொழுதுமே நமக்கு என்ன கிடைக்க வேண்டும் என்பதிலேயே நாம் பார்வையைப் பதிக்காமல், நாம் எப்படியிருக்கவேண்டும் என்பதிலேயே நம்முடைய பார்வை பதிய வேண்டும். அதுவே கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான கண்ணோட்டம்.

ஆபிரகாம் தேவன் மேல் வைத்த விசுவாசத்திற்காக எதையும் இழக்கத் தயாராயிருந்தான். தன் ஒரே மகனைக்கூட இழக்க அவன் தன்னை ஆயத்தமாக்கிய மனிதனாக இருந்தான். வேதமும், வேத நியதிகளும், தேவ பயமும் செயல்படாதக் காலத்தில், யோசேப்பு தேவனுக்குப் பயந்து மிகவும் இச்சிக்கத்தக்க பாவத்தை வென்று சாதித்தான்.

இந்தத் தேவ மனிதர்களிடம் வெளிப்பட்ட உயர்ந்த விசுவாச நிலைப்பாடுகளும், உறுதியான பரிசுத்தக் கொள்கைப்பிடிப்புகளும், மெச்சத்தக்க குணநிலைகளும், பின்பற்றத்தக்க தேவ பக்தியின் செயல்பாடுகளுமே, முதலாவது நம்மைக் கவர வேண்டும். அவர்களுக்குக் கிடைத்தது போல நமக்குக் கிடைக்க வேண்டுமே என்பதே நம்முடைய வாஞ்சையாயிராமல், அவர்கள் வாழ்ந்தது போல நாமும் வாழ்ந்து காட்டவேண்டும் என்பதே நம்முடைய ஏக்கமாக இருக்க வேண்டும். அவர்களைக் குறித்த செய்திகள் வேதத்தில் பதிவாயிருப்பது, அவர்களின் ஆசீர்வாதநிலைகளை நாமும் அடையவேண்டும் என்பதைவிட, அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

சிந்தனைக்கு...

கிறிஸ்துவை நோக்கி நீ ஓடுகின்ற பாதையில்தான்
ஆசீர்வாதங்கள் உன்னைத் தேடிவருகின்றன.

அக்டோபர்
26
ஜீவ
நீரோடை

கேள்விகள்

அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு...
பிரசங்கி 3:4

பிரசங்கி 3:1-11

காலங்கள் என்றும் ஒரேவிதமாக இருப்பதில்லை. கோடையும், குளிரும், மழையும் மாறி மாறி வந்து கொண்டுதானிருக்கும். அவைகளை நம்முடைய விருப்பத்திற்கு மாற்ற முடியாது. ஆனால், அந்தந்தக் கால சீதோஷ்ண நிலைகளின் பாதிப்புகள் நம்மை அதிகமாகத் தாக்காதபடி, சில தற்காப்பு நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதுபோலவே வாழ்க்கையும். அது என்றும் ஒரே விதமாக இராது. மகிழுகின்ற காலமும் வரும். துதிக்கின்ற காலமும் வரும். லாபமடையும் காலமும் வரும். நஷ்டமடையும் காலமும் வரும். அடைகின்ற காலமும் வரும். இழக்கின்ற காலமும் வரும். எல்லோராலும் விரும்பும் காலமும் வரும். எவருக்குமே வேண்டாம் என்பது போன்ற காலமும் வரும். இவைகள் இந்தப் பூமியின் இயற்கையான நிகழ்வுகளே.

இன்று போல் என்றும் நலமாகத் தொடரவேண்டும் என்றால் அது இயலாது. சூழ் நிலைகள் மாறி மாறித்தான் வரும். அவைகளுக்காக வருந்துவதில் பயனில்லை. ஏன் இப்படி வந்தது? என்ற கேள்வியோடு நாம் நின்றால் ஒருபோதும் விடையும் வராது, விடிவு காலமும் வராது. வந்து நேர்ந்தது நாம் விரும்பியதல்ல. ஆனால் வந்துவிட்டது. இதுவும் இந்த சாப உலக வாழ்க்கையின் ஒரு பகுதியே. இப்போது அடுத்து என்ன செய்வது என்பதே நம் எண்ணமாக இருக்கவேண்டும். இந்தச் சூழ்நிலையைச் சந்திக்க என்ன செய்யலாம் என்பதே நம்முடைய யோசனையாயிருக்க வேண்டும். இந்த விதமான சூழ்நிலை இயற்கையாக ஏற்படுத்தும் பாதிப்புகளின் விஷயத்தில் நம்மைத் தற்காத்துக் கொள்ள என்ன செய்யலாம் என்பதே இப்போது தேவையான சிந்தனை.

ஒன்று நிகழ்ந்து விட்டால் நாம் பரிகாரங்களைத் தேடவேண்டும். காயம் ஏன் ஏற்பட்டது? என்ற கேள்வி ஒருபோதும் காயத்தை ஆற்றாது. எத்தகைய துன்பங்களின் நடுவிலும், எத்தகைய இழப்புகளின் நடுவிலும் நம்மைத் தேற்றித் திடப்படுத்தி நிலைநிறுத்த தேவன் போதுமானவரும், கிருபை உள்ளவராகவும் உள்ளார். தேவனே! ஏன் இப்படி? என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்ற வரையிலும், அடுத்த கட்ட உதவியை அவர் நமக்குச் செய்ய வாய்ப்பில்லாமல் போகிறது. நாம் ஆராய்ந்து பார்க்க முடியாத விதமாக அவர் நம்மை சமாதானத்தின் பாதையில் நடத்த முடியும். எப்படி அவர் செய்வார்? என்ற கேள்வியைக் கேளாமல், எப்படியாவது எனக்கு ஏதாவது அவர் செய்ய முடியும் என்ற விசுவாசத்தோடு, கர்த்தரிடம் வரும்போது நிச்சயம் ஒரு இளைப்பாறுதல் அங்கே உண்டு.

சிந்தனைக்கு...

எப்படி வாழவேண்டும் என்பதை உணராததால்தான், ஏன்தான் வாழ்கிறோம் என்ற சலிப்பு பின்தொடர்கிறது.

அக்டோபர்
27
ஜீவ நீரோடை

சூழ்நிலையும் தேவையும்

எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமு மாயிருக்கிறது... பிரசங்கி 2:17

பிரசங்கி 2:1-17

குறிப்பிட்ட ஒருவருடைய வீடு இராஜ அரண்மனை போலிருக்கும். வீட்டைச் சுற்றி சில ஆடம்பரமான கார்கள் நிற்கும். அங்கு வேலை செய்யப் பல வேலை யாட்கள் உண்டு. அந்த வீட்டில் நவநாகரீக ஆடம்பரப் பொருட்கள் ஏராளம் உண்டு. வீட்டையும் சூழ்நிலையையும் பார்ப்பவர்களுக்கு, ஒரு சிலருக்கு மட்டும் வாழ்க்கை இவ்வளவு சொகுசாக அமைகிறதே, என்ற எண்ணம் உடனே வந்துவிட வாய்ப்புண்டு. ஆனால், அந்த வீட்டிற்குள் அமைதியில்லை. கணவன் மனைவி கருத்து வேற்றுமையால் அங்கே யாருக்கும் நிம்மதி இல்லை.

ஒருவருக்கு எவ்வளவு இருக்கிறது என்பது முக்கியமல்ல. ஒருவருடைய சூழ் நிலைகள் எவ்வளவு வசதியாக இருக்கிறது என்பது பிரதான விஷயமல்ல. அந்த நபருக்குள் அமைதியும் நிறைவும் சந்தோஷமும் இருக்கிறதா என்பதே முக்கியம். பலருடைய வசதி வாய்ப்புகளும் ஆடம்பர நிலைமைகளும் அவர்களைச் சூழ்ந்தி ருக்கின்றதேயன்றி, அவைகளால் அவர்கள் மனம் மகிழ்ச்சியடையவில்லை.

சில நேரங்களில் நாம்கூட மற்றவர்கள் நன்றாக உண்டு, உடுத்து சொகுசாக வாழ்வதைத்தான் பார்க்கின்றோமேயன்றி, அவர்கள் தங்களுக்குள் நிறைவாக, அமைதியாக, மனரம்மியாக வாழ்கின்றார்களா என்று பார்க்கக் கவனம் செலுத்து வதில்லை. அரண்மனை போன்ற பல ஆடம்பர வீடுளில் அநேகர் சிறைக் கைதி களாகத் துக்கத்துடனேயே வாழ்கின்றார்கள் என்பதை நாம் அறியவில்லை. சாலொ மோன் ராஜா அறிவிலும் ஞானத்திலும், செல்வத்திலும், பேர் பிரஸ்தாபத்திலும், ஆடம்பர வாழ்க்கையிலும் கொடி கட்டிப் பறந்த ஒரு ராஜாதான். ஆனாலும், அவன் தனக்குள் நிறைவைக்கண்டவனல்ல. வாழ்க்கையின் வசதியான சூழ்நிலைகளால் மனதில் மகிழ்ச்சியை உணர்ந்து திருப்தி கண்டவனல்ல. அவனால் இறுதியில் மாயை மாயை, எல்லாம் மாயை என்று விரக்தியுடன் கூற முடிந்ததேயன்றி, நிறைவுடன் எதையும் சொல்ல முடியவில்லை.

ஆனால், தேவன் நமக்கு ஒரு வசதியான புறத்தோற்றத்தை அல்ல, உண்மையான உள்ளான ஆசீர்வாதங்களைத் தருவதற்கே அதிக அக்கறை உடை யவராயிருக்கின்றார். நமக்கு அடிப்படையில் எது முக்கியத் தேவை என்பதை அறிந்து அவைகளைத் தருகிறார். பணம் படைத்தவர்களும், கல்வி நிலையில் சிறந்த வர்களும், பேர் புகழ் பிரஸ்தாபம் மிகுந்தவர்களும் தேடித் தேடி அலைந்தும் பெற முடியாத உண்மையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மன நிறைவையும் அவர் எளிய இதயங்களுக்கு அளிக்கின்றார்.

சிந்தனைக்கு...

தேவ அன்பின் அனலில் வாழப்பழகியவனை உலகத்தின் சோதனை நெருப்புகள் ஒன்றும் செய்வதில்லை.

அக்டோபர்

28

ஜீவ நீரோடை

எப்போதும் அவர் நினைவில்

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்... எபேசியர் 3:17

எபேசியர் 3:1-21

ஜெபம், வேத தியானம், ஆராதனை, உபவாசம், ஊழியம் போன்ற பல ஆவிக்குரிய செயல்கள் வெற்றியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிகவும் அவசிய மானவையே. ஆயினும், இவைகள் யாவும் நமக்கு மிகுதியாக இருந்தாலும் நம் முடைய இறைத்தொடர்பின் வாழ்க்கை அல்லது விசுவாச வாழ்க்கை உயிரோட்ட மாக இருக்க இவை மட்டும் போதாதது.

மிக முக்கியத் தேவை ஆவிக்குரிய விழிப்புணர்வு. நாம் காலையிலோ மாலையிலோ சில மணி நேரங்கள் ஜெபித்து, வேதம் படித்து நம்மை பலப்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும், பிற நேரங்களில் ஒரு ஆவிக்குரிய விழிப் புணர்வோடு நாம் வாழ்கின்றோமா என்பதே மிக முக்கியம். அதாவது கர்த்தர் நம்மோடிருப் பதை விசுவாசத்தினால் உணர்ந்தவர்களாகி, அதற்கேற்ற ஒரு சிந்தனையோடு நம்முடைய மனதை வைக்கின்றோமா என்பதே முக்கியம். ஏதோ சில வேளைகளில் வேதம் படித்து, ஜெபித்து, ஆராதித்து, தேவ ஐக்கியத்தை உணர்வதல்ல. எதைச் செய்தாலும் எங்கு போனாலும் கர்த்தர் நம்மோடிருப்பதாக நாம் விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசத்தோடு அவரோடு நாம் இருப்பதாக நமக்குள் நாம் உண்மையாக நினைக்க வேண்டும்.

இந்த நேரத்தில், இந்த இடத்தில், இந்தச் சூழ்நிலையில், கர்த்தர் என்னுடன் இருக்கின்றார். அவர் இங்கு நடக்கின்ற யாவற்றையும் கவனிக்கின்றார். இங்கு நான் எப்படிச் செயல்படுகிறேன். எப்படி நடந்து கொள்ளப் போகிறேன் என்பதைப் பார்க்க விரும்புகிறார். இவ்விதமாக நாம் நினைக்கவும் சிந்திக்கவும் நம் மனதை ஈடுபடுத்தும்போது நாம் மனுஷீகமாக நடக்காமல், தேவனுக்கேற்ற வித மாக நடந்து கொள்ளுகின்ற ஒரு உள்ளான தூண்டுதல் ஏற்படுகிறது. அவர் நம் மோடு இருப்பதை நம்முடைய இதயத் திரையில் சித்திரமாகக் கொண்டு வரும் போதுதான், அவர் நம்மை நடத்துவதையும், நமக்கு ஆலோசனை தருவதையும், நம்மைக் கட்டுப்படுத்துவதையும், தவறுகளைத் தவிர்க்க வழிகாட்டுவதையும், சரியானதைச் செய்ய ஏவுகிறதையும் நமக்குள் உணர முடியும்.

மற்றபடி காலையில் நாம் மணிக்கணக்கில் ஜெபித்து, வேதத்தைப் படித்து தேவ ஐக்கியத்தை உணர்ந்தாலும், பிற வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் நேரங் களிலும் மனம் தெய்வீக உணர்வும், தேவ ஐக்கிய சிந்தனையும் இல்லாமல் போகு மானால், ஆவியில் நாம் பலவான்களாகவும் சோர்வற்றவர்களாகவும் இருக்க முடியாது.

சிந்தனைக்கு...

தேவனை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பவன் எப்போதும் தன்னைத் தேவன் நினைக்கிறார் என்பதை உணருகின்றான்.

அக்டோபர் 29

ஜீவ நீரோடை

வேதமும் மனிதனும்

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற...
சங்கீதம் 119:1

சங்கீதம் 119:1-24

எல்லோருக்கும் எல்லாப் பொருட்களும் ஏற்றதாயிராது. ஒரு குடிசை ஒரு ஏழைக்கு விருப்பமானதாகயிருக்கலாம். ஆனால், ஒரு செல்வந்தனுக்கு பங்களா தான் பிடிக்கும். ஏழைகள் உண்ணுகின்ற உணவை வசதி மிக்கவர்கள் விரும்ப மாட்டார்கள். வசதியில் குறைந்தவர்கள் அணிகின்ற உடைகள் வசதிமிக்கவர் களுக்குப் பிரியமாயிராது. ஆம், எந்த ஒரு பொருளும் எல்லோருக்கும் ஏற்றதாயிராது.

ஆனால், தேவனுடைய வேதம் எல்லோருக்கும் ஏற்றது. அது எல்லோருக்கும் திருப்தி தரக்கூடியது. ஒரு ஏழையின் வீட்டில் கனமாக எண்ணப்படும் ஒரு வேதாகமம், அமெரிக்க அதிபர் வீட்டிலும் கனத்திற்குரியதாக உள்ளது. ஒரு ஏழைக்குப் பிரயோஜனமாயிருக்கின்ற வேதாகமம் ஒரு பெரும் பணக்காரருக்கும் பிரயோஜனமாயுள்ளது. ஐந்தாம் வகுப்பு வரை படித்த ஒருவருக்கு வழிகாட்டுகின்ற பைபிள், பல நாடுகள் போய் கற்றுத் தேறின ஒரு பெரிய கல்வியாளருக்கும் வழிகாட்டுகின்றது.

அனைத்து மனிதர்களுக்கும் அவசியமானதாகவும் ஏற்றதாகவும் இருப்பது தேவன் தந்த வேதாகமமே. ஏனென்றால், வேதாகமம் என்பது ஏழை பணக்காரன் என்ற பேதமில்லாமல் கற்றவன், கல்லாதவன் என்ற வேறுபாடின்றி இந்நாட்டவன், அந்நாட்டவன் என்ற வித்தியாசமின்றி, ஒரு சராசரி மனிதனுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டது. நீங்கள் எந்த நிலைமையில் இருக்கின்றீர்கள் என்பது முக்கிய மல்ல. நீங்கள் ஒரு மனிதராயின் இந்த வேதாகமம் உங்களுக்கு அவசியம். இந்த வேதாகமத்தின் தேவை இல்லாதவர் எவரும் இல்லை.

இந்த வேதாகமம் படிக்காதவர்களிடமும் பேசும். படிப்பு மிகுந்தவர்களிடமும் பேசும். வேதாகமத்தை யாரால் புரிந்து கொள்ள முடியும்? அங்கே கற்றவன் கல்லாதவன் என்ற கேள்வியே இல்லை. ஒரு மனிதனால் வேதாகமத்தைப் புரிந்து கொள்ள இயலும். ஆனால், எல்லாரும் மனிதர்கள் அல்ல. தேவனுடைய பார்வை யில் தேவ சாயலை உடையவர்கள்தான் மனிதர்கள் (ஆதி 1:27)தேவனைத் தங்களுக்குள் பெற்றுக்கொண்டவர்களும், தேவனுக்கேற்ற குணநிலையை உடையவர்களுமே மனிதர்கள். தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்து கொள்ள வும் புரிந்துகொண்டு அதனை வாழ்க்கைக்குப் பயன்படுத்தவும் ஒரு மனிதன் தேவனால் புதிய படைப்பாகப் படைக்கப்பட வேண்டும். அவ்விதம் புதிய சிருஷ்டிப்பாக மாறிய மனிதனுக்கு வேதம் தினமும் வழிகாட்டும்.

சிந்தனைக்கு...

வேதம் நமக்கு வெளிச்சம் மட்டும் தரவில்லை. பிறருக்கு வெளிச்சம் கொடுக்கும் விளக்காகவும் மாற்றுகின்றது.

அக்டோபர் 30 ஜீவ நீரோடை

எப்போது பலன் கிடைக்கும்?

கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன்...
மத்தேயு 13:20

மத்தேயு 13:1-23

பயிர் செழித்து வளர்ந்து நல்ல விளைச்சலைத்தர வேண்டுமானால், அங்கே நல்ல சத்தான விதைகளை விதைக்க வேண்டும். நன்றாக நீர் பாய்ச்ச வேண்டும், நல்ல உரங்களை இட வேண்டும், நல்ல பராமரிப்புக் கொடுக்க வேண்டும். ஆனால், இவை யாவற்றையும் செய்து நல்ல பலன் கிடைக்க வேண்டுமானால், முதலாவது அவைகளை ஒரு நல்ல நிலத்தின்மேல்தான் செய்ய வேண்டும். பண்படுத்தப்படாத நிலத்தில நல்ல விதைகளை விதைத்து என்ன பயன்? நீர் பாய்ச்சி என்ன பயன்? நல்ல உரமிட்டுத்தான் என்ன பயன்?

பலர் நல்ல தேவ செய்திகளைக் கேட்கின்றார்கள். ஆழமான ஆவிக்குரிய ரகசியங்களை அவர்கள் கேட்கிறார்கள். நல்ல வேத அறிவைப் பெறுகிறார்கள். ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை, உபவாசம் ஆகியவற்றில் குறை வைக்க வில்லை. ஆயினும், ஆவிக்குரிய கனிகளை அவர்களால் தர இயலவில்லை. நல்ல போதனைகளையும் நெறிகளையும் அவர்கள் அறிந்திருந்தாலும், அவைகள் அவர்களை நற்குணசாலிகளாக மாற்றவில்லை.

காரணம் என்ன? இவை யாவற்றையும் கல்லான தங்களின் இருதயத்தை வைத்துக் கொண்டே செய்கிறார்கள். மனந்திரும்புதலைக் காணாத அவர்களின் இருதயமாகிய நிலத்தில் நல்ல வசனங்கள் விதைக்கப்பட்டும், நல்ல சத்தியங் களாகிய நீர் தாராளமாகப் பாய்ச்சப்பட்டும் எந்தப் பலனையும் அதனால் ஏற்படுத்த முடியவில்லை. நம்முடைய ஜென்ம சுபாவ இருதயத்தில் நாம் எவ்வளவு நல்ல சத்தியங்களை விதைத்தாலும், ஆவிக்குரிய பலன்கள் தோன்றாது. மனந்திரும் புதலை உண்மையாகக் காணாத நிலையில் நாம் எவ்வளவு ஆழமான உபதேசங் களைக் கேட்டாலும், எத்தனை கருத்தரங்குகளில், கலந்து கொண்டாலும், எத்தனை இறையியல் பட்டங்களைப் பெற்றாலும், கிறிஸ்துவுக்ேற்ற உண்மையான பரிசுத்த வாழ்க்கையைக் காண முடியாது.

ஆம். கடினமான நிலத்தை உழுது பக்குவப்படுத்தாமல், நாம் கச்சிதமாக விதைத்து நீர்பாய்ச்சினாலும், பலன் காண முடியாது. பாவ இருதயமாகிய கல்லான இருதயம் மாற்றப்பட்டு, பரிசுத்தமான ஒரு புதிய இருதயத்தைப் பெறுவதுதான் இரட்சிப்பின் அனுபவம். அந்த அனுபவம் பெற்ற பிறகுதான் நாம் கேட்கும் நல்ல உபதேசங்களும், நாம் பெற்ற சத்திய வெளிப்பாடுகளும், நம்முடைய ஜெபம், வேத தியானம் போன்றவைகளும் நம்மை கனி கொடுக்கின்றவர்களாக மாற்றும்.

சிந்தனைக்கு...

கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்தால் அழகு தெரியும்,
வேத வெளிச்சத்தில் உன் அகத்தைப் பார்த்தால் தவறு புரியும்.

அக்டோபர்
31
ஜீவ நீரோடை

சுயத்தை நேசித்தால்

அவன் தன்னைத்தானே வெறுத்து....
மாற்கு 8:34

மாற்கு 8:27-38

நீங்கள் செல்லும் இடங்களில், மற்றவர்களைவிட உங்களைக் கொஞ்சம் உயர்வாக எண்ணி நடத்தாவிட்டால் மனக்கஷ்டம் அடைகிறீர்களா? யாராவது உங்களை முக்கியமாகக் கண்டு கொள்ளாதது போல் நடந்து கொண்டால் மன திற்குள் குமுறுகிறீர்களா? ஒரு சிலரை நீங்கள் ஒரு பொருட்டாக எண்ணாதது போல் நடந்து கொள்வதை, ஒரு பெருமையாக எண்ணுகிறீர்களா?

இவ்விதமாக நீங்கள் இருந்தால் உங்கள் சுயத்தை நீங்கள் அதிகமாக நேசிக்கிறீர்கள் என்று அர்த்தம். எல்லாவற்றையும்விட நான் என்ற உங்கள் நிலையைத்தான் பெரிதாக எண்ணுகிறீர்கள் என்று அர்த்தம். உங்களை நீங்களே மிக உயர்ந்த சிங்காசனத்தில் அமர்த்தி விட்டீர்கள் என்பதே அதன் பொருள், அதனால்தான் நீங்கள் எதிர்பார்க்கும் கௌரவம் கிடைக்காத போது கசப்படை கிறீர்கள்.அதனால்தான் சாதாரணமானவர்களை ஒரு பொருட்டாக எண்ணுவதை இழிவாக எண்ணுகிறீர்கள்.

சுயம் நம்மால் அதிகமாக நேசிக்கப்படுவதால்தான், யாரோ பேசிய சில வார்த்தைகள் நம்மை மிகுதியாகக் காயப்படுத்திவிட்டதாக எண்ணுகிறோம். சுயத் தின் மேல் அதிக நேசம் இருப்பதால்தான் எங்கு போனாலும் கௌரவமான ஒரு வரவேற்பு கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டு விடுகிறது. சுயத்தின் மேல் அன்பு அதிகமாகயிருப்பதால்தான் அலட்சியம் செய்தவர்களை அலட்சியம் செய்து விட வேண்டும் என்றும், மனதை காயப்படுத்தியவர்களை மிகுதியாகக் காயப்படுத்தி விட வேண்டும் என்றும், கௌரவமாக நடத்த தவறியவர்களை இழிவுபடுத்தியே ஆகவேண்டும் என்றும் மனம் அதிகமாக விரும்புகிறது. ஆனால், சுயத்தை சிங்காசனத்தில் அமர்த்தி, அதனை அதிகமாக நேசிப்பது என்றுமே சோர்வுகளையும், சோதனைகளையுமே கொண்டு வரும்.

எனவே, சுயத்தை சிலுவையிலறைய வேண்டிய தேவையை வேதம் வற்புறுத்துகிறது. நம்மை நாம் அதிகமாக நேசிக்கும் போது, தேவனுடைய பிரியங்களையும்,ஆவிக்குரிய சுபாவங்களையும் நாம் வெறுக்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். நாம் சுயத்தை வெறுத்து கிறிஸ்துவையும், அவருடைய கட்டளை களையும் நேசிக்க முன்னுரிமை தர வேண்டும். அப்போது தாழ்மை, சாந்தம் ஆகிய பண்புகள் உருவாகும். அந்தப் பண்புகள் வந்து விட்டால் அடிக்கடி பிறரது செய்கை யால் காயப்படும் நிலை நமக்கு வராது. தேவ கிருபையையும், தேவ ஐக்கியத்தையும் நாம் கரிசனையாகத் தேடும் போது, சுயத்தைக் கீழ்ப்ளபடுத்தும் ஆற்றல் வரும்.

சிந்தனைக்கு...

உயர்வு என்பது பிறரைத் தாழ்த்துவதால் அல்ல. பிறருக்கு முன்பாக நம்மை தாழ்த்திக் கொள்வதிலேயே வருகிறது.

நவம்பர்
1
ஜீவ நீரோடை

பழிக்குப் பழி

தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்...
ரோமர். 12:17

1 பேதுரு 2:11-25

நாம் சில உயர்வுகளை அடையும் போதும், குறிப்பிட்ட சில நிலைமைகளில் வரும்போதும், கடந்து போன காலங்களை நினைத்துப் பார்க்கிறோம். அங்கே நம்மை துன்புறுத்தியவர்கள், நம்மை அற்பமாக நினைத்தவர்கள், நம்முடைய பலவீனத்தைப் பயன்படுத்தி தீங்கு செய்தவர்கள் ஆகியோரைக் காண்கின்றோம். எனவே, ஏதாவது ஒரு வகையில் அவர்களுக்குப் பாடம் புகட்டும் எண்ணங்கள் வருகின்றன. இது பழிவாங்குதல், அல்லது வஞ்சந்தீர்த்தல் ஆகும்.

யானை, பாம்பு போன்றவை தங்களுக்குத் தீங்கு செய்தவர்களை மறவாமல், என்றாவது ஒருநாள் பழிவாங்கும் என்று பலர் சொல்வார்கள். ஆனால், பழிவாங்குதல் ஒரு அருவருப்பான பாவமாகும். அந்தப் பாவத்தை நாம் செய்யும் போது நமக்கும், துன்மார்க்கர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போகிறது. தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்து அவர்களை நாணமடையச் செய்வது தான் அவர்களுக்குச் சரியான பதிலுக்குப் பதில் செய்தலாகும் என்றார் திருவள்ளுவர். தீய குணங்களால் நமக்கு தீது செய்தவர்களுக்கு நம்முடைய நற்குணங்களால் நல்லதை செய்வதுதான் கிறிஸ்துவின் சிந்தையாகும்.

பிறர் செய்தது போல நாமும் திருப்பிச் செய்து பழிவாங்கலாம். அதே வேளையில் தீங்கு செய்தவர்களுக்கு, நன்மை செய்து நம்மை வேறுபடுத்திக் காட்டுதல் மேன்மையான இடங்களுக்கு நம்மை உயர்த்தும். யோசேப்பு தன் சகோதரர்களால் தாங்கொணா வேதனையடைந்தான். காலம் மாறியது. யோசேப்பு உயர்ந்த நிலைக்கு வந்தான். தன் சகோதரர்களை அவன் பழிவாங்கியிருக்க முடியும். ஆனால், அவனோ அவர்களுக்கு ஆதரவளித்து, ஆறுதல் செய்யும், இரட்சகனாக மாறினான்.

தேவன் நமக்குத் தந்த நல்ல வாய்ப்புகளை, உயர்வுகளை பிறரைப் பழிவாங்குவதற்கான உபகரணங்களாக உபயோகிக்காதிருப்போமாக. தேவன் அதை விரும்பவில்லை. நம்மை அற்பாக எண்ணியவர்களை நாமும் அற்பமாக எண்ணுதல், நம்மை மதியாதவர்களை நாமும் மதியாமல் இருத்தல், நம்மை புறக்கணித்தவர்களை நாமும் புறக்கணித்தல் போன்றவை தாழ்ந்த மனிதனின் இயல்புகளாகும். மதியாதவர்களை மதித்தும், புறக்கணித்தவர்களை அங்கீகரித்தும், நாம் வாழ்ந்தால் அதுவே நாம் பெற்ற உயர்வால் வந்த உயர்ந்த அணுகுமுறை.

சிந்தனைக்கு...

சரியான சுபாவங்களைக் குறித்து நீ கவலைப்படாவிட்டால்
சரியற்ற பாவங்களால் நீ கவலைப்பட நேரிடும்.

நவம்பர்
2
ஜீவ நீரோடை

கடினமாகிவிட்டால்

குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்... எரேமியா 18 : 4

எரேமியா 18:1-17

ஈரமான களிமண்ணினால் குயவன் ஒரு பாத்திரத்தை வனைகிறான். ஆனால், அதுவோ அவன் எதிர்பார்த்த நல்ல வடிவத்தில் இல்லை. இப்போது அந்தப் பாத்திரம் ஈரமாகவும், மிருதுவாகவும் இருக்கும் வரை அதனைக் கலைத்து விட்டு, மீண்டும் நல்ல ஒரு பாத்திரமாக திருப்பி வனைய முடியும். ஈரமாயிருந்த பாத்திரம் காய்ந்து போய் கடினமாகிவிட்டால், அதனை வேண்டாம் என்று வீசி எறிய முடியுமேயன்றி, திரும்பவும் வனைய முடியாது.

இதுபோலவே, இறைவாழ்க்கையில் தேவன் நமக்கு சில ஆவிக்குரிய ஈரமான உணர்வுகளையும், மென்மைத் தன்மைகளையும், ஆவியினால் தருகின்றார். அவைகளை நாம் இழந்து போகாதவரை நாம் தவறினாலும், பாவம் செய்தாலும் மீண்டும் நம்மைச் சரிசெய்ய தேவனால் இயலும். ஆனால், அந்த உணர்வுகளை அசட்டை செய்து தவறுகளில் தொடரவோ, தவறுகளைச் சரிசெய்யாமல் போகவோ செய்தால், ஒருநாள் இருதயம் கடினமடைந்து மன மாற்றத்திற்குத் தேவையான பக்குவத்தை இழந்துவிடும். அதன் விளைவு தேவனால் வேண்டாம் என்று வெளியே வீசி எறியப்படுதலே.

சிலர் எத்தனையோ உணர்வூட்டும் பிரசங்கங்களைக் கேட்ட பின்னரும், தங்களில் எந்த மாற்றத்தையும் காணாதிருக்கிறார்கள். அவர்கள் தேவனை அறியாதவர்களோ, அவிசுவாசிகளோ அல்ல. அவர்கள் மனந்திரும்பியவர்களாக தங்களை எண்ணிக்கொள்கின்றவர்களே. அவர்கள் தேவனால் ஊழியத்திற்காக அழைக்கப்பட்டதாக நம்புகிறவர்களே. பின்னர் ஏன் சத்தியம் அவர்களை மாற்றவில்லை. அவர்களின் மனம் கடினமாகி பாறை ஆகிவிட்டது. ஈரத்தன்மையை இழந்து போனார்கள். எனவே, கேட்கின்ற சத்தியங்கள் பாறைமேல் விழுந்த நீராகப் பயனின்றி ஓடிப்போய் விடுகிறது. உள்ளேபோய் கிரியை செய்யவில்லை.

ஆவிக்குரிய மனிதனாகிய தாவீது பாவம் செய்த போதிலும், ஆவிக்குரிய உணர்வுகளை அசட்டை செய்யவில்லை. தன் மனதைக் கடினப்படுத்தி சும்மாயிருக்கவில்லை. அவன் மனதாரத் தவறை உணர்ந்து, மீண்டும் தேவனால் கட்டப்படுவதற்காக மன்றாடிக் கெஞ்சினான். எனவே, மீண்டும் தேவனால் அவன் நிலை நிறுத்தப்பட்டான். ஒரு தவறைக் குறித்து மனசாட்சி நம்மை பாதித்துக் கொண்டிருக்கும் போதே, தவறை உணர்ந்து திருந்த முன்வரவேண்டும். காலம் கடந்து போனால் எல்லா உணர்வும் போய் மனக்கடினமே மிஞ்சும்.

சிந்தனைக்கு...

இன்று நீ விரட்ட மறுக்கும் தவறுகளை நாளை
நீ விரட்ட முயன்றாலும் விலக மறுக்கும்.

நவம்பர்

3

ஜீவ நீரோடை

உணர்ச்சி வசப்படுதலும் உற்று நோக்குதலும்

நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்...
ஏசாயா 6 : 5

ஏசாயா 6:1-13

மனிதன் உணர்ச்சிவசப்படும் இயற்கையை உடையவன். அவன் உணர்ச்சி வசப்பட்டு ஒரு தீமையையும் செய்ய முடியும். உணர்ச்சி வசப்பட்டு ஒரு நன்மை யையும் செய்ய முடியும். அவன் உணர்ச்சிவசப்பட்டு விட்டால் ஒருவரை வாய் நிறையப் புகழவும் முடியும். இல்லையேல் வாய்க்கு வந்தபடி இகழவும் முடியும். மனிதனை உணர்ச்சி வசப்படுத்துவது அல்ல. உற்று நோக்கிக் கவனிக்க வைத்தலே மிகவும் அவசியமானதாகும்.

இக்கால பெரும்பாலான கிறிஸ்தவப் பிரசங்கங்கள், கேட்பவர்களை உணர்ச்சி வசப்படுத்துகின்ற தன்மையுள்ளவையாக உள்ளன. ஆனால், அவை அவர்களை தங்களுக்குள் உற்றுப் பார்க்கத் தூண்டவில்லை. சிலர் பாவம், மனந்திரும்புதல், இரட்சிப்பு ஆகியவை தொடர்பான இயேசுவின் வார்த்தைகளைப் பிரசங்கித்து கேட்போர், தங்களின் பாவ நிலைமையை உணரத் தூண்டுவதில்லை. அதற்குப் பதிலாக, இயேசு சிலுவையில் பாடுபட்ட விதங்களை மிகவும் உணர்ச்சிகரமாக விளக்கி உணர்ச்சிவசப்படச் செய்வார்கள். எனவேதான், சிலுவையைக் குறித்த சத்திய வார்த்தைகள் பலரைத் தொடுவதில்லை. ஆனால், சிலுவையில் இயேசு பாடுபட்ட விதத்தைக் குறித்த உணர்ச்சிப் பூர்வ சித்தரிப்பு அவர்களைத் தொட்டு விடும். ஆனால், இவ்விதமாக உணர்வுத் தூண்டுதலால் ஏற்படுகின்ற மன மாற்றங்கள் வலுவானதாகத் தொடர்வதில்லை.

மனிதன் தனக்குள் பாவத்தினால் பழுதுபட்டு, எவ்வளவு பரிதாபமான தொரு நிலையில் இருக்கின்றான் என்பதைக் காணும்படி, வேத வசனங்கள் பிரசங்கிக்கப்பட வேண்டும். இயேசுவின் பாடுகளைக் குறித்த உணர்வுப்பூர்வ விளக்கங்கள், ஒருவருக்குள் இயேசுவைக் குறித்து பரிதாபப்படத் தூண்டும். ஆனால், அந்தப் பரிதாப உணர்வின் பின்பலத்தோடு உண்மையான மனந் திரும்புதலையோ, இரட்சிப்பையோ அடைய முடியாது.

ஏசாயாவைப் போல மனிதனுக்குள்ளிருக்கும் மோசமான இருதயம் வெளிப் படுத்திக் காண்பிக்கப்பட வேண்டும். தன்னுடைய அசுத்தமான உள்நிலையைக் காணத்தக்கதாக வார்த்தைகள் மூலமாக கண்கள் திறக்கப்பட வேண்டும். துக்க வெள்ளியன்று நடைபெறும் மும்மணி ஆராதனைகளும், சிலுவைப் பாதை நிகழ்ச்சிகளும், இயேசுவைக் குறித்த பரிதாப உணர்வுகளை உருவாக்கும். ஆனால், உணர்ச்சி வசப்படுதல் அல்ல. உற்றுநோக்கி உண்மை அறிதலே மிகவும் அவசியம்.

சிந்தனைக்கு...

செய்த தவறுக்காக இன்று வருந்தாதவன்,
நாளை செய்யாத தவறுகளுக்காகவும் வருந்த நேரிடும்.

நவம்பர்
4
ஜீவ நீரோடை

ஐக்கியமும் மாற்றங்களும்

இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன்... 1 கொரிந்தியர் 1 : 9

1 கொரிந்தியர் 1:1-15

ஒருவர் தன்னுடைய மனைவி அவளின் தோழி வீட்டிற்கு எத்தனை முறை சென்றாலும் சந்தோஷமாக ஒத்துக்கொள்வார். ஆனால், மனைவியின் தாயின் வீட்டிற்கோ பிற உறவினர் வீட்டிற்கோ அவள் போக விரும்பும்போது, அதனை அதிகமாக விரும்பமாட்டார். அதற்கொரு காரணம் இருந்தது. மனைவி யின் தோழி தன்னுடைய வீட்டை மிக அழகாகவும், சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைக்கும் பழக்கமுடையவள். தோழியின் வீட்டிற்குப் போய் வரும் போதெல்லாம் தன்னுடைய மனைவி வீட்டை மிக அழகாகவும், ஒழுங்காகவும் வைப்பதில் முன் னேறிக் கொண்டே வருவதை அவர் கவனித்தார்.

நல்லவர்களோடு நமக்குக் கிடைக்கும் ஐக்கியம் நாமும் நல்லவர்களாக மாறிட நம்மைத் தூண்டும். நற்குணங்களையுடையவர்களோடு நமது உறவு அதிகமாகும் போதெல்லாம், நம்மிடமும் நற்குணங்கள் அதிகமாகும். இயேசுவைப் போன்றவர்களோடு நெருங்கி வாழ்ந்தாலும், தங்களை யூதாசைப் போல மாற்றாமல் வைத்திருப்பவர்கள் உண்டு என்பது உண்மைதான். ஆபிரகாமைப் போன்ற உயர்ந்த மனிதர்களோடு உறவாடி வாழ்ந்தாலும், லோத்துவைப் போல தாழ்ந்த மனிதர்களாக தொடருகிறவர்கள் உண்டு என்பது பொய்யல்ல. இவை விதிவிலக்குகள்.

ஆனால், யாரோடு நம்முடைய ஐக்கியங்களும் நெருக்கங்களும் இருக் கிறதோ, அதற்கேற்ற பாதிப்புகள் நம்மிடம் ஏற்படுவது இயற்கை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏதோ ஒரு கோயிலுக்குள் எழுந்தருளி அங்கு வந்து தம்மை ஆரா திக்கும்படி நம்மை அழைக்கவில்லை. அவர் நம்மோடு தங்கி, நம்மோடு நடந்து, நம்மோடு நெருங்கி வாழ விரும்புகின்றவர். ஏனென்றால், அவர் தம்முடைய ஐக்கியத்தின் வாயிலாக நமக்குள் நல்ல பரிசுத்தமான தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றார்.

அவரை, கோயிலில் போய் ஆயிரம் முறை ஆயிரம் ஸதோத்திரங்களால் ஆராதித்தாலும் நாம் மாறமாட்டோம். அவர் நமக்குள் வரவேண்டும். நம்மோடு வாழ வேண்டும். அவர் நல்லவர் பரிசுத்தர் என்பதை நம்முடைய ஆத்துமா காண வேண்டும். அவருடைய கிருபையை, அன்பை, கரிசனையை, தயவை நம்முடைய ஆத்துமா அனுபவிக்க வேண்டும். அங்கே நாம் மாறுகின்றோம். அவரிடம் கண்ட உயர்ந்த தெய்வீக அம்சங்களை நம்மிடமும் காண வாஞ்சிப்பதால், நாமும் அவரைப் போல மாறிக்கொண்டிருப்போம்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக என்ன செய்யலாம் என்று யோசிக்கும் முன்பு, அவர் உனக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கவனி.

நவம்பர்
5
ஜீவ நீரோடை

தோற்றமும் செயலும்

இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்
2 தீமோத்தேயு 2:3

2 தீமோத்தேயு 2:1-16

ஒருவன் ராணுவ உடையை அணிந்து கொண்டு, இராணுவத் தளவாடங்களை தன்னோடு வைத்துக்கொண்டிருப்பதால், அவன் இராணுவ வீரன் என்று உறுதியாகிவிடாது. அந்த உடைகளும், தளவாடங்களும், துப்பாக்கியும் அவனுக்கு இராணுவ வீரன் போன்ற ஒரு தோற்றத்தைத் தர முடியும். ஆயினும், அவைகளே அவனை போர்வீரன் என்று நிரூபித்துவிடாது. அவன் யுத்தக்களத்தைச் சந்திக்க வேண்டும். போர் வரும்போது அவன் அதைச் சந்திக்கும் ஆயத்தமுடையவனாக இருக்க வேண்டும்.

இராணுவ வீரன் போன்ற கம்பீரத் தோற்றத்தைக் கொடுத்துவிட்டு, போர் வருகின்ற போது அவன் புறமுதுகிட்டு ஓடினால், அவனுடைய போர் வீரன் என்ற தோற்றம், பலருடைய நகைப்பிற்கும் பரிகாசத்திற்கும் உள்ளாகும். அநேகருடைய பக்தி நடவடிக்கைகளும், செயல்பாடுகளும், வாயின் வார்த்தை களும் அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பேரைப் பெற்றுத் தருகிறது. ஆனால், வாழ்க்கைப் பாதையிலே, தங்களின் கிறிஸ்தவ வலிமையைச் சோதிக்க வரும் சூழ்நிலைகளுக்கு முன்பாக, நிற்க முடியாத தோல்வியாளர்களாக மாறி விடுகின்றனர்.

ஆலயத்திற்குச் சென்று, ஆராதனை செய்து, காணிக்கை கொடுத்து, ஊழியங்களில் சம்பந்தப்பட்டு நாம் செயல்படுகின்றபோது நாம் நம்முடைய பார்வையிலும், பிறருடைய பார்வையினும் நல்ல கிறிஸ்தவர்கள் போலவே தோன்றுவோம். ஆனால், இவைகளே நாம் உண்மையிலே கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்பதின் அடையாளங்களாகி விடாது.

ஏனென்றால், நம்முடைய கிறிஸ்தவ உண்மை நிலை சில ஆன்மீகச் செயல்களில் அல்ல. பலவிதச் சூழ்நிலைகளின் நடுவில் நம்முடைய பிரதிச் செயல்கள் வழியாகவே நிரூபணமாகிறது. பொறுமை காக்க வேண்டிய இடத்தில் நாம் பொறுமை இழக்கும்போதும், தாழ்ந்து போக வேண்டிய இடத்தில், நம்முடைய சுய கௌரவத்திற்காகப் போராடும் போதும், விட்டுக்கொடுக்க வேண்டிய விஷயத்தில் நாம் இறங்கி வர மறுக்கும் போதும், சகிக்க வேண்டிய நேரத்தில் நாம் சண்டையிடும் போதும், நம்முடைய கிறிஸ்தவ பக்திச் செயல்கள் யாவும் வெறும் வெளித் தோற்றங்களே என்பது வெளியரங்கமாகும்.

ஆம், தேவ வல்லமையால் நாம் சுயத்தையும், பாவத்தையும் மேற்கொண்டு நற்குணங்களை வெளிப்படுத்துவதுதான், உண்மையிலேயே நாம் ஆவிக்குரியவர்களாகயிருக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

சிந்தனைக்கு...

புதிய கருத்தை மனிதன் காலம் கடந்தே ஏற்றுக்கொள்கிறான். அதற்குள் அவன் பழமையாகி விடுகிறான்.

நவம்பர்
6
ஜீவ நீரோடை

வருவதும் பின் தொடர்வதும்

அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல்... யோவான் 6 : 66

யோவான் 6:53 -71

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு அவரிடம் வந்தவர்கள் அநேகர். அவருடைய அற்புதச் செயல்களினால் கவரப்பட்டு அவரிடம் வந்தவர்கள் ஏராளம். ஆனாலும், அவரைப் பின்தொடர்ந்து செல்ல, தங்களின் மனதை ஆயத்தமாக்கிக் கொண்டவர்கள் வெகு சிலரே. அவரை நன்மை செய்கிற வராகவும், அற்புதங்கள் செய்கிறவராகவும் கண்ட போது அவரிடம் ஆயிரக்கணக்கானோர் வந்தனர். ஆனால், அவர் இந்த உலகத்திற்கு வந்த நோக்கத்தையும், ஜனங்களிடம் அவர் எதை எதிர்பார்க்கின்றார் என்பதையும் பேசின போது, அவரிடம் பிரியப்பட்டுத் தங்கினவர்கள் பன்னிரண்டு பேர் மட்டுமே. நன்மை செய்கிற இயேசு அவர்களுக்கு மிகவும் கவர்ச்சியாக இருந்தார். ஆனால், ஒரு குறிப் பிட்ட விதமான வாழ்க்கை முறையை வற்புறுத்துகிறவராக வெளிப்பட்டபோதோ, அவர்களால் அவரோடு தங்கியிருக்க முடியவில்லை.

ஆம், இயேசுவிடம் வருவது என்பது வேறு. அவரோடிருக்கவும், அவரைப் பின்பற்றிச் செல்லவும் மனதை ஆயத்தப்படுத்துவது என்பது வேறு. அவரால் வருகின்ற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும், அற்புதமான காரியங்களை யும் விரும்புகின்றவர்கள் அவரிடம் வர முடியும். ஆனால், அவருடைய பரிசுத்த நியாயங்களையும், நித்திய வாழ்வுதரும் வார்த்தைகளையும் விரும்பி ஏற்போர் மட்டுமே அவரைப் பின்பற்றிச் செல்ல முடியும். அவ்விதம் பின்பற்றிச் செல்லுகின்ற மனநிலையைப் பெற்றவர்கள் மட்டுமே, தொடர்ந்து அவரோடிருந்து அவருடைய ஆசீர்வாதங்களுக்குப் பங்காளிகளாக முடியும்.

அநேகர் தாங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதை மட்டுமே நினைவில் வைத்து தங்களைக் கிறிஸ்தவர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், இப்போது இயேசுவோடிருக்கின்றோமா? அவருடைய வழிகளில் நடந்து அவரைப் பின்பற்றுகின்றோமா? என்றெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

நாம் ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்களாகவும், அழைப்பை ஏற்று அவரிடம் நிலைத்திருக்கின்றவர்களாகவும், அனுதின வாழ்க்கையில் அவரு டைய பாதையில் நடக்கின்றவர்களாகவும் மாற வேண்டும். நன்மைகள் மட்டுமே நம்முடைய நோக்கமாயிருந்தால் அவரைப் பின்தொடர்வது கூடாத காரியம். நம்முடைய வாழ்க்கையை நெறிமுறைப்படுத்தி, உயர்ந்த தெய்வீக இலக்குகளுக்கு நேராக நடத்துகின்ற அவருடைய வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுத்தால் தான், அவரோடு நம்முடைய உறவு தொடரமுடியும்.

சிந்தனைக்கு...

கற்றுக் கொள்வதற்காக மட்டும் அல்ல.
கடைப்பிடிப்பதற்காகக் கற்பவனே சரியான மாணவன்.

நவம்பர்
7
ஜீவ நீரோடை

கணவனின் அந்தஸ்து

புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்...
எபேசியர் 5:23

எபேசியர் 5:22-33

கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் மாணவன் ஒருவனிடம் படிப்பு, பணம், தேர்வு, எதிர்காலம் என எதைக் குறித்துக் கேட்டாலும் "எங்க அம்மாவைக் கேட்கணும்" என்று சொல்வான். ஏதாவது ஒரு தவறான காரியம் என்றால் "எங்க அம்மா திட்டுவாங்க" என்பான். எதற்குமே அவன் அம்மாவைத்தான் நினைக்கிறான். ஏன் தந்தை திரையில் தோன்றவில்லை? அது அவனுடைய குடும்பச் சூழ்நிலை. அங்கே அப்பாவிற்கு எந்த அதிகாரமும் கிடையாது. குடும்பத்தின் ஆதிக்கம் அனைத்தும் அம்மா கையில்தான்.

வாழ்க்கைத் துணையாகிய மனைவியை வேலைக்காரியைவிட கேவலமாக நடத்துகின்ற கணவர்கள் இந்த சமுதாயத்தில் உண்டு என்பது உண்மை. அதே வேளையில், குடும்பத் தலைவனாகிய கணவனை குடும்ப வேலைக்காரனாக மாற்றியமைத்துக் கொள்ளும் மனைவிகளும் பலர் உள்ளனர். சம்பாதிக்க வேண்டியது மட்டுமே கணவனின் கடமை. மற்றபடி அனைத்துப் பகுதிகளிலும் மனைவியே எல்லாவற்றிற்கும் எல்லாம் என்ற நிலை நல்லதல்ல. தேவன் கணவனை தலை என்ற ஸ்தானத்தில் வைத்திருக்கும் போது, மனைவி கணவனை கால் என்ற நிலைமைக்குக் கொண்டு செல்வது தேவ விரோதமான செயல்.

குடும்பத்தில் அதிகாரமில்லாத கணவர்கள் சிலரையும், குடும்பத்தில் மரியாதையாக எண்ணப்படாத சில கணவர்களையும் நான் கவனித்திருக்கின்றேன். அவர்கள் பரிதாபப் பிறவிகளாக மாறியிருக்கின்றார்கள். அவர்கள் நல்ல கௌரவத்திற்குரிய நிலையில் பிறர் நடுவிலும் நிற்க இயலவில்லை. அவர்களின் திறமைகளும், முன்னேறும் தன்மைகளும் குடும்பச் சூழ்நிலைகளினால் இழக்கப்பட்டிருக்கின்றன.

பல கிறிஸ்தவக் குடும்பங்களிலும்கூட மனைவிகளின் ஆதிக்கம்தான் கொடி கட்டிப் பறக்கின்றன. கணவர்கள் சில விஷயங்களில் நல்ல திறமையிலும், ஞானமாகச் செயல்படுவதிலும் குறைவுபட்டவர்களாகவும் இருக்கலாம். ஆயினும், அவற்றைக் காரணம் காட்டி கணவனுக்குத் தேவன் கொடுத்த தலைமைத்துவ அந்தஸ்தை அலட்சியம் செய்யக் கூடாது. கணவர்களும் மனைவி சொல்மிக்க மந்திரம் இல்லை என்று எண்ணிச் செயல்படாமல், தேவன் கொடுத்த தலைமைத்துவ அந்தஸ்தை உணர்ந்து, அதற்கேற்றபடி தங்களைத் தகுதியானவர்களாக நிறுத்திக்கொள்ளக் கவனம் செலுத்த வேண்டும். இல்லையென்றால், அடுத்த சந்ததிக்கும் ஒரு தவறான முன்மாதிரியே கிடைக்கும்.

சிந்தனைக்கு...

இன்னொருவரை உயர்த்துவதால் உன் உயரம் குறைவதில்லை
இன்னொருவரை தாழ்த்துவதால் உன் உயரம் கூடுவதில்லை.

நவம்பர்
8
ஜீவ நீரோடை

யார் நல்லவன்?

உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து... தீத்து 2:7

தீத்து 2:1-15

சமூக சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் மிகவும் நல்லவர் என்று பலர் நடுவில் அறியப்பட்டுள்ளார். ஏனென்றால் ஆதரவற்றவர்களுக்கும், அநாதைகளுக்கும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அவர் செய்கின்ற உதவிகள், ஏராளம். சமூக சேவைக்காக தன்னுடைய சொத்துக்களையும் சில நேரம் விற்க நேரிடுவதுண்டு. ஆனால், அவருக்கு மதுப்பழக்கம் உண்டு. புகைப் பழக்கம் உண்டு. நைட் கிளப் போகும் பழக்கம் உண்டு. தகாத பெண் தொடர்புகளும் உண்டு. ஆனால், யாருக்கும் எந்தத் தீவினையும் செய்யாமால் நன்மையே செய்வதால், தங்கமான மனிதர் என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

நல்ல செயல்களைச் செய்தல் நல்லவர்களிடம் காணப்பட வேண்டிய முக்கியமானதோர் அடையாளம். அதே வேளையில், நல்ல செயல்களைச் செய்தல் ஒன்றே ஒருவர் நல்லவராயிருக்கின்றார் என்பதற்குப் போதுமான சான்றல்ல. ஒரு மனிதன் தனக்குத்தானே தீங்கு செய்துகொண்டு, உலகத்திற்கெல்லாம் நன்மை செய்ய முடியும். தவறான பழக்கங்களும், தகாத விதமான வாழ்க்கை முறைகளும், தவறான குணங்களும் ஒரு மனிதன் தன்னைத்தானே நாசமாக்கிக் கொண்டிருக்கின்றான் என்பதின் அடையாளங்களாகும். அப்படிப்பட்ட மனிதனை உலகம் பாராட்டினாலும், தேவன் அவனை இகழவே செய்வார்.

நாம் நல்லதைச் செய்துகொண்டே நல்லவர்களாகவும் வாழ வேண்டும். இயேசு நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார். அது மட்டுமல்லாமல், அவர் குணங்களாலும், சுபாவங்களாலும், மிக நல்லவர் என்று நிரூபிக்கப்பட்டார். மனித இனத்திற்கு நாம் செய்ய வேண்டிய மிகப் பெரிய நன்மை நம்மை நல்லதொரு வாழ்க்கைக்குச் சரியானதோர் மாதிரியாக நிறுத்துதலாகும். நம்மைப் பார்க்க நேரிடுகின்றவர்களும், உற்றுக் கவனிக்க நேர்கின்றவர்களும், ஒரு நல்ல மனிதனை நம்மிடம் பார்க்க வேண்டும்.

நோயாளிகளுக்கு நாம் உதவ வேண்டும். கல்வியறிவு பெற வாய்ப்பில்லாதவர்களுக்கு கல்வியறிவை நாம் கொடுக்க வேண்டும். ஆதரவற்றவர்களுக்கு நாம் உதவிக்கரம் நீட்ட வேண்டும். அதே வேளையில், இந்தச் சமுதாயம் நற்பண்பில்லாதவர்களாலும், நற்குணங்களற்றவர்களாலும் நிறைந்துள்ளது. அவர்களின் நடுவில் முன்மாதிரி வாழ்க்கையாளர்கள் ஏராளம் வேண்டும். ஒழுக்கமும், மனத்தூய்மையும் இழந்து போன இன்றைய சமுதாயத்தில், ஒரு உண்மையான நல்ல வாழ்க்கைக்கு அநேகர் மாதிரிகளாக எழும்ப வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்லவராயிராமலே நன்மை செய்ய முடியும். ஆனால் நன்மை செய்யாமல் நல்லவராயிருக்க முடியாது.

நவம்பர்
9
ஜீவ நீரோடை

அற்புதமா, வார்த்தையா?

தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்... மத்தேயு 4:4

மத்தேயு 4:1-11

எகிப்திலிருந்து வெளியேறி கானான் நாட்டை நோக்கிப் பயணம் செய்த இஸ்ரவேல் மக்களுக்கு, வானத்திலிருந்து அற்புதமான முறையில் மன்னா என்ற உணவு கிடைத்தது. அந்த அற்புதமான உணவை இஸ்ரவேலர்கள் பல ஆண்டுகள் உண்டு வந்தனர். ஆயினும், அந்த அற்புத உணவை உண்டவர்கள் கானானுக்குப் போய்ச் சேராமல், கானகத்திலேயே அழிந்து போனார்கள். ஏனென்றால், அனுதினமும் ஆண்டவரின் அற்புதங்களைக் கண்ட பின்னரும், அவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவில்லை. ஆம், அற்பு தங்கள் தேவன் ஆயத்தமாக்கி வைத்திருந்த ஆசீர்வாதத்திற்கு அவர்களைக் கொண்டு போகவில்லை.

எனவேதான், சாத்தான் வந்து கற்களை அப்பங்களாக மாற்றி அற்புதம் செய்யும்படி இயேசுவிடம் சொன்னபோது, அவர் அதைச் செய்யவில்லை. ஏனென்றால் அப்பங்கள் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து வருகிற வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதின் வாயிலாகவே அவன் வாழ்வு பெற முடியும். தேவனுடைய வார்த்தைகளுக்கு மட்டுமே மனிதனை வாழவைக்கும் வல்லமை உண்டு. இன்று நம்மில் அநேகர் அற்புதங்களுக்கே அதிக முக்கியத்துவம் தருகிறோம். அற்புதங்களையே ஆசீர்வாதங்கள் என்றும் எண்ணுகின்றோம். அற்புதங்கள் வாழ்க்கையில் நடந்தால், நம்முடைய வாழ்க்கை மிகுந்த தேவ பக்தியுடையதாக மாறிவிடும் என்றும் நினைக்கின்றோம்.

இயேசு நினைத்திருந்தால் பசி, பட்டினி மிகுதியாக இருந்த அந்தக் கால கட்டத்தில், கற்களை அப்பமாக்கி அநேகரைப் போஷித்து திருப்தியாக்கியிருக்க முடியும். ஆனால், அவர் அவ்விதம் செய்யவில்லை. தேவனுடைய வார்த்தைகள் மட்டுமே அவர்களை வாழ வைத்து ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். மனிதனுக்கு முக்கியத் தேவை அற்புதம் அல்ல, தேவனுடைய வார்த்தையே என்பதை வனாந்திரச் சோதனையில் அவர் வெளிப்படுத்தினார்.

அற்புதங்கள் அவர்களைப் புது சிருஷ்டிகளாக மாற்றவில்லை. ஏனென்றால் உயிர் தருகின்ற தேவனுடைய வார்த்தைகளை அவர்கள் கேட்டு விசுவாசித்து, கீழ்ப்படிந்து அதற்கேற்றபடி வாழ முன்வரவில்லை. நீங்களும், போய்விட மனதாயிருக்கின்றீர்களோ என்று இயேசு சீடர்களைக் கேட்டபோது, பேதுரு யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான். அவன் அவரைப் பிரிய மறுத்த காரணம் அவரிடம் அற்புதங்கள் உண்டு என்பதாகயிராமல், அவரிடம் வாழ்வுதரும் வார்த்தை உண்டு என்பதாயிருந்தது.

சிந்தனைக்கு...

இன்பங்களைத் தேடி மனிதன் செல்லும் பாதையில்தான், துன்பங்கள் அவனைத் தேடிவருகின்றன.

நவம்பர்
10
ஜீவ நீரோடை

தீர்மானம்

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்...
சங்கீதம் 51:10

சங்கீதம் 51 :1-19

பொதுவாக செய்த தவறை உணர்ந்து அதற்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக் கேட்கின்றவர்கள், இனி தவறு செய்யமாட்டோம் என்று உறுதிமொழி தருவதுண்டு. ஆனால், பத்சேபாள் விஷயத்தில் பாவம் செய்துவிட்டு, பின்னர் அதற்காக மனஸ்தாபப்பட்டு தேவனிடம் மன்னிப்பிற்காக கெஞ்சிய தாவீது இனி பாவம் செய்யமாட்டேன் என்று சொல்லவேயில்லை. தவறை உணர்ந்து தேவனிடம் இரக்கத்திற்காக கெஞ்சி அழுத தாவீது, 51-ம் சங்கீதத்தில் இனி அவ்விதம் செய்யமாட்டேன் என்று தீர்மானம் எதுவும் எடுக்காதது ஏன்?

இனி பாவம் செய்யமாட்டேன் என்று தீர்மானம் செய்து, அதனை வெற்றியாக நிறைவேற்றும் வலிமை தனக்கு இல்லை என்பதை அவன் உணர்ந்திருந்ததே அதன் காரணமாயிருக்கும். அவன் இயற்கையான தன்னுடைய பலவீன நிலையை நன்கு அறிந்து வைத்திருந்தான். பாவம் செய்யாமல் தன்னைக் காத்துக் கொள் கின்ற அளவிற்கு தனக்கு ஒரு பெரிய ஆற்றல் இருப்பதாக அவன் எண்ணவில்லை. எனவே, அவன் உணர்ச்சிவசப்பட்டு இனி இது போன்ற பாவத்திலே விழாமல் நிற்பேன் என்று உறுதிமொழி எடுப்பதற்குப் பதிலாக "தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்" என்றும் "நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" என்று வேண்டுதல் செய்தான்.

பாவம் செய்யும் இயற்கையை வலிமையாகக் கொண்ட இந்த பாவ சரீரத்தில் இருந்துகொண்டு, இனி பாவம் செய்யமாட்டேன் என்று முடிவு செய்து நிலைத் திருப்பது எளிதான விஷயமல்ல என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே, தனக்குப் பாவம் செய்யாதிருக்கத்தக்க வலிமையான ஒரு சுத்த இருதயம் அவசியம் என்பதை உணர்ந்து அவன் பிரார்த்தித்தான். பாவத்தில் விழாதிருக்கத் தக்க ஒரு வலிமையான ஆவியைத் தந்தாலன்றி, பாவ சோதனைகளை வெல்ல முடியாது என்பதை அனுபவ ரீதியாக அறிந்து அவன் மன்றாடினான்.

சில நேரங்களில் நாம் பல வலிமையான தீர்மானங்களை எடுக்கிறோம். இப்படிச் செய்வேன், அப்படிச் செய்யமாட்டேன் என்று உறுதிமொழி கொடுக்கிறோம். அவ்விதம் செய்யவோ செய்யாமலிருக்கவோ நம்மிடம் போது மான வலிமை இருக்கிறது போல எண்ணிவிடுகிறோம். எனவே, வித்தியாசமான சூழ்நிலைகள் வழியாகக் கடந்து செல்லும் போது, மீண்டும் மீண்டும் பாவங் களில் வீழ்ந்து விடுகிற நிலை ஏற்பட்டு விடுகிறது. சுயத்தைச் சார்ந்து எடுக்கும் தீர் மானங்கள் அல்ல. தேவ கிருபையைச் சார்ந்து நிற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து தேவனைப் பற்றிக்கொள்வதே பரிசுத்தத்தில் வெற்றி பெற உதவி செய்யும்.

சிந்தனைக்கு...

உன் பார்வைக்கு நீ எப்படி இருக்கிறாய் என்பதையல்ல. இறைவனின் பார்வையில் எப்படியிருப்பாய் என்பதை அறிவதே ஞானம்.

நவம்பர்

11

ஜீவ நீரோடை

குற்றமற்றவர் ஆனால்

தீமையைச் சகிக்கிறவனுக்கமாயிருக்கவேண்டும்...
2 தீமோத்தேயு 2 : 24

2 தீமோத்தேயு 2:15-24

எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் மிகவும் பக்தியினால் இயேசுவின் போதனைகளின்படி வாழ வேண்டும் என்ற கொள்கையுடையவர். அவரிடம் யாரும் எந்தக் குற்றத்தையும் காண இயலாது. மிகவும் நேர்மையானவர் என்று சொல்ல லாம். ஆனால், இவரிடம் ஒரு பெரிய பிரச்சினை உண்டு. குற்றமேதும் இல்லாத இவர் யாரிடம் எந்த ஒரு சிறு குற்றத்தைக் காண நேரிட்டாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார். ஒரு சிறு தவறையோ, குறைவையோ, யாரிடமாவது பார்த்தால் அவரை ஒரு பெரிய குற்றவாளியாக்கி குற்றவாளிக்கூண்டில் நிறுத்திவிடுவார்.

ஏனென்றால், இவர் பார்வைக்கு பரிசுத்தவான் போன்று தோன்றினாலும் உண்மையில் இவர் ஓர் பரிசேயர். இவர் தேவ நீதியை அறியாத ஓர் சுயநீதிக்காரர். இவர் தேவ உறவை தனக்குள் உணர்ந்து, தேவ அன்பை ருசித்து ஆவிக்குரிய பக்குவம் பெற்றவரல்ல. வேதக் கொள்கைகளின்படி வாழ வேண்டும் என்ற வைராக்கியத்தின் விளைவாக, சுயமுயற்சிகளால் தன்னைக் குற்றங்களுக்குத் தவிர்த்துக் கொண்டவர். ஆயினும், தேவ ஐக்கியத்தினால் உண்மையான ஆவிக் குரிய அனுபவம் பெற்றவரல்ல.

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது குற்றங்களை மட்டும் தவிர்த்து வாழும் ஒன்றல்ல. பிறருடைய குற்றங்களையும், குறைகளையும் சகிக்கவும், மன்னிக்கவும் ஆற்றல் கொண்ட வாழ்க்கையாக அது இருக்க வேண்டும். பரிசுத்தவான் குற்றங்களையும் குறைவுகளையும் கண்டுகொள்ளாமல் அவற்றைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அதே வேளையில், சகிப்புத்தன்மையும் மன்னிக்கும் மனப்பான்மையும் வேண்டும். எந்த ஒரு மனிதனும் பரிசுத்தத்திலும், குற்றமற்ற வாழ்க்கையிலும் முழுமையும் பரிபூரணமும் பெற்றவன் அல்ல.

மற்றவர்களிடம் சில தவறுகளும், குறைவுகளும், குற்றங்களும் காணப் படுவது இயற்கை. அவற்றை அன்பினால் கண்டிக்கலாம். ஆனால், பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாமல் அவர்களைப் பெரிய குற்றவாளிகளைப் போல எண்ணுவது, சுயநீதியின் விளைவாகும். உண்மையான தேவ உறவினால் தங்களை நல்லவர்களாக்கியவர்களிடம் அன்பு, தாழ்மை, பிறர் பலவீனம் உணர்தல், சகித்தல், தாங்குதல், மன்னித்தல், ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய உயர் குணங்கள் இருக்கும். அவர்கள் மற்றவர்களிடமுள்ள தவறானதைக் கவனித்து வருந்தினாலும், அவர்களிடம் உள்ள நல்லவற்றை அலட்சியம் செய்யமாட்டார்கள். அவர்களிடம் இயேசுவைப் போல பிறரின் குறைவுகளோடு ஏற்றுக்கொள்ளும் அன்புள்ளம் காணப்படும்.

சிந்தனைக்கு...

கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என்று உன்வாய் சொல்லட்டும்,
கிறிஸ்துவின் அன்பை உன் வாழ்க்கையில் பிறர் காணட்டும்.

விசுவாச அறிக்கையா? அனுபவமா?

தேவன் உங்கள் பிதாவாயிருந்தால்...
யோவான் 8:42

யோவான் 8:31-44

நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று சொல்லுகிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்றும், பரிசுத்த ஆவியினால் பலப்படுத்தப்பட்டவர்கள் என்றும் நம்புகின்றோம். நாம் பாவிகள் என்ற நிலையில் மரித்து, நீதிமான்களாக வாழ்கின்றவர்கள் என்று எண்ணிக்கொள்கின்றோம். தேவன் நம்மோடிருக்கின்றார் என்று நம்பிக்கையோடு பேசுகிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்கு இதுபோன்ற நம்பிக்கைகள் தேவையானதுதான். ஆனால், அநேகருடைய வாழ்க்கையில் இவைகளெல்லாம், வெறும் விசுவாச அறிக்கைகளாக இருக்கிறதேயன்றி, அவற்றை உண்மையென்று உறுதிப்படுத்தும் அனுபவங்கள் இல்லை. வேத ரீதியாகவும், விசுவாச ரீதியாகவும் இப்படித்தான் நம்ப வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களைக் குறித்து அவ்விதம் நம்புகின்றார்கள். ஆனால், அவர்களின் நம்பிக்கை வெறும் அறிக்கைகளாக இருக்கிறதேயன்றி, செயல்படும் உண்மைகளாக இல்லை.

ஆனால், வெறும் விசுவாச அறிக்கைகள் வீணானது. அவை அனுபவங்களாகப் பிரதிபலிக்க வேண்டும். நாம் யார் என்று உணர்ந்த எண்ணம் தேவையே. ஆனால், அந்த அளவிற்கு நம்மிடம் ஒரு பிரகாசம் பிறர் கண்களுக்குத் தெரிய வேண்டும். அன்றைய யூதர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியென்று பேசுவதில் பெருமைப்பட்டனர். தேவன் தங்களுக்கு பிதாவாயிருக்கிறார் என்ற விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. ஆனால், இயேசு அவர்களின் நம்பிக்கைக்கும், அறிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தார். அவர்களை அவர் பிசாசின் புத்திரர்களாகப் பார்த்தார். ஏனென்றால், தேவனைப் பிதா என்று கூறிய அவர்களிடம் எந்தத் தெய்வீக அம்சமும் இல்லை. ஆபிரகாமின் சந்ததி என்று நம்பிய அவர்களிடம், அபிரகாமிடமிருந்த எந்த நற்பண்புகளும் இருக்கவில்லை.

ஆம், நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று நம்பினால், இரட்சிப்பின் அனுபவம் நம்மிடம் வெளிப்படவேண்டும் தேவனுடைய பிள்ளைகள் என்று அறிக்கையிட்டால், தேவனுக்கேற்ற குணாதிசயங்கள் காணப்படவேண்டும். தேவன் நம்மோடிருக்கின்றார் என்று சொன்னால், அதனுடைய பிரதிபலிப்புகள் பிறருக்குத் தெரிய வேண்டும். நாம் பலவிதப் பாவங்களில் தொடர்ந்து கொண்டே பாவத்தை வென்றவர்களாக எண்ணினால் அது நகைப்பிற்குரியது.

சிந்தனைக்கு...

உண்மையை ஒளித்து வைக்க முடியாது. ஆனால்
உண்மையைக் கண்டு கொஞ்ச நாள் ஒளிந்திருக்க முடியும்.

நவம்பர்
13
ஜீவ நீரோடை

தோற்றங்கள்

நீ இவனுடைய முகத்தையும், சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்... 1 சாமுவேல் 16:7

1 சாமுவேல் 16:1-12

ஒரு முறை ஒரு ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரசங்கித்தேன். அந்தக் கூட்டம் முடிந்த பிறகு ஒரு குடும்பத்தார் என்னிடம் வந்து தங்களை அறிமுகம் செய்ததோடு, "உங்கள் ஊழியத்திற்கு காணிக்கை" என்று கூறி ஒரு கவரை என்னிடம் தந்தனர். அவர்கள் சற்று வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, ஒரு கணிசமான காணிக்கை அதில் வைத்திருப்பார்கள் என எண்ணினேன். அதே நேரத்தில் ஒரு மிக எளிய தோற்றமுடைய ஒரு சகோதரர் என் கையில் ஒரு அழுக்குத்தாளில் எதையோ பொதிந்து தந்தார். ஏதோ ஒரு பத்து ரூபாய் காணிக்கை வைத்திருப்பார் என்று எண்ணினேன். ஆனால் பின்னர் அவைகளைப் பிரித்து பார்த்தபோது, அந்த வசதியான குடும்பத்தார் தந்த கவரில் ஐம்பது ரூபாய் காணிக்கையும், அந்த எளிய தோற்றமுடைய மனிதர் தந்த அழுக்குத் தாளிற்குள் ஆயிரம் ரூபாய் காணிக்கையும் இருந்தது.

புறத்தோற்றங்கள் சில நேரங்களில் நம்மைத் தப்புக் கணக்குப் போட வைத்து விடுகிறது. ஞானிகள் போன்று தோன்றுகின்ற சிலர் முட்டாள்களாக இருப்பார்கள். பேதைகள் போலத் தோன்றுகிற சிலர் பெரிய அறிவாளிகளாக இருப்பார்கள். உயிரையே கொடுக்கத் தயார் என்று பேசுகின்ற சிலர் ஒரு ரூபாய் உதவி செய்யக் கூடத் தயங்குவார்கள். எச்சில் கையால் காகம் ஓட்டமாட்டார்கள் என்று எண்ணுகின்ற சிலர், வள்ளல்களைப் போல வாரி வழங்குவார்கள். சிலருடைய தோற்றமும், பேச்சும் மிக மிக நேர்மையானவர்கள் என்றும், கபடமறியாதவர்கள் என்றும் நம்மை முடிவு செய்யத் தூண்டும். அந்த அழகான தோற்றத்திற்குப் பின்னாலுள்ள அவர்களின் இருதயமோ, சகலவிதக் கேடுபாடுகளாலும் நிறைந்திருக்கும்.

அழகாக ஆராதனை நடத்திய ஒரு தேவ ஊழியரின் அருவருப்பான வாழ்க்கையைக் கேள்விப் பட்டபோது அதிர்ச்சியாயிருந்தது. உடுத்தும் உடை, காலில் அணியும் செருப்பு, கைக்குட்டை, கைப்பை ஆகிய அனைத்தும் ஒரு சகோதரிக்கு தூய வெண்மையாயிருந்தது. ஆனால், அவருடைய வாழ்க்கையோ பாவத்தால் முழுவதும் கறுப்பாயிருந்ததைக் கண்டு கவலைப்பட நேர்ந்தது.

ராஜாவைப் போல மிடுக்கான தோற்றத்துடனும் நின்ற எலியாபைப் பார்த்ததும், சாமுவேல் அவன்தான் தேவனால் தெரித்து கொள்ளப்பட்ட ராஜா என எண்ணினான். தேவனோ இல்லை என்றார். அந்தக் கம்பீரமான தோற்றக்காரனுக்கு கர்த்தருக்கேற்ற இருதயம் இல்லை. அந்த இருதயம் எங்கேயோ ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு அற்ப வாலிபனாகிய தாவீதுக்குள் இருந்தது.

சிந்தனைக்கு...

உண்மையற்றவன் உயர்ந்து நின்றாலும் தூசியாய் உதறிவிடு.
வாய்மையுள்ளவன் தாழ்ந்து போனாலும் தலைவணங்கி ஏற்றிடு.

அன்பைப் பெற்றிட

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால்...
யோவான் 14:15

யோவான் 14:12-31

நம்மால் நேசிக்கப்பட வேண்டிய ஒருவரின் மனதைப் பிரியப்படுத்தும் விதமாக நாம் எதையோ செய்யத் தவறுகின்றோம். இன்னொருவரை எதனால் பிரியப்படுத்தி அவரை அவருக்குள் திருப்தி காணச் செய்யலாம் என்று நாம் சிந்திக்கத் தயங்குகிறோம். அதுதான் அந்த நபருடைய அன்பை நாம் பெற இயலாமல் போவதற்கான முக்கியமானதோர் காரணம், ஒருவர் நம்மிடமிருந்து எதையோ ஒன்றை அவர் சந்தோஷப்படும் விதமாகப் பெற்றுக்கொண்டால்தான், நம்மை நேசிக்கும் தூண்டுதலும் ஆர்வமும் அவரிடம் உருவாகும். "என்னை நேசிக்கவில்லையே" என்ற மனக்குறையோடு கிலேசம் அடைகின்ற பலர், மற்றவர் தங்களை நேசிக்கும் விதமாகச் செயல்படுகிறோமா என்பதைச் சிந்திக்க மறுக்கின்றனர். இதுதான் பல குடும்பங்களில் ஏற்படும் குழப்பங்களுக்கு முக்கியக் காரணம்.

மனைவி கேட்காமலே அவள் விரும்பும் பல பொருட்களை கணவன் வாங்கிக் கொடுக்கலாம். ஆனாலும், மனைவி தான் எதனால் நேசிக்கப்படுவதை விரும்புகின்றாளோ, அதனைச் செய்யாவிட்டால் அன்பைப் பெறமுடியாது. கணவன் கேட்காமல் விதவிதமாக உணவு தயாரித்து மனைவி அவனை உற்சாகப்படுத்தலாம். ஆனாலும், கணவன் எதனை மனைவியிடம் முக்கியமாக அன்பின் அடையாளமாக எதிர்பார்க்கின்றானோ, அது கிடைக்காவிட்டால் அன்பைப் பெற முடியாது.

மற்றவர்கள் விரும்புகின்ற விதமாக நாம் செயல்பட இயலாது என்பது உண்மை. ஆனாலும், நியாயமான விஷயங்களில் நியாயமாகச் செயல்பட வேண்டிய அவசியம் உண்டு. இயேசு நம்மை நேசிக்கின்றார். அந்த நேசத்தை நாம் நமக்குள் உணர வேண்டுமானால், அவரை நாம் எதைச் செய்து பிரியப்படுத்த வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். இயேசுவின் வார்த்தைகளின்படி வாழ்வதுதான் இயேசுவைப் பிரியப்படுத்தும். அவர் பிரியப்படும்போது அந்தப் பிரியத்தின் விளைவாக அவருடைய அன்பு நம்மை திருப்திப்படுத்துவதை நாம் உணர முடியும்.

ஒருவேளை நாம் நன்றாக ஆராதிக்கலாம். நன்றாகப் பாடலாம். தாராளமாகக் காணிக்கை கொடுக்கலாம். நன்றாக ஊழியமும் செய்யலாம். யாவும் நல்லதே. ஆனால், அவரைப் பிரியப்படுத்த இயன்றது நம்முடைய வாழ்க்கையே. அவர் நம்மில் காண விரும்புவது அவருக்கேற்ற நற்சுபாவங்களாகிய கனிகளே. நாம் அவரைப் பிரியப்படுத்த பிரியப்படுத்த, அவருடைய அன்பை அவர் நமக்கு அதிகமாக வழங்குவதை, நாம் அனுபவமாகக் காண முடியும்.

சிந்தனைக்கு...

இறைவனின் அன்பை ருசிக்கும் இருதயத்தால்,
இன்னொருவரைக் குறித்த கசப்பைக் காக்க இயலாது.

நவம்பர்
15
ஜீவ நீரோடை

வேதம் அறிந்தாலும்

எப்போதும் கற்றாலும் ஒருபோதும் உணராதவர்களாய் ...
2 தீமோத்தேயு 3 : 7

2 தீமோத்தேயு 3:1-17

ஒரு மனிதன் கடுமையான ஒரு நோயினால் பாதிக்கப்பட்டு எழும்ப முடியாத நிலையில் இருக்கின்றான். அந்த மனிதனிடம் ஒருவர் வந்து நல்ல ஆரோக்கியமாக வாழ்வதற்கு எந்தெந்த உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும் என்றும், எந்தெந்த விதமான உணவுகளை உண்டால் உடல் நலம் சீரடையும் என்றும், விரிவாக விளக்கம் கொடுக்கிறார். இதனால் நோயுற்ற அந்த மனிதனுக்கு ஏதாவது நன்மை விளையுமா? முதலாவது அந்த மனிதனின் நோய் அகல்வதற்கு ஏதாவது சிகிட்சை செய்ய வேண்டும். சராசரி உடல் நலத்தைப் பெற்ற பின்புதான் உடற்பயிற்சிகளும், நல்ல உணவு வகைகளும் அவனுக்குப் பலன்தர முடியும்.

சிலருக்கு எவ்வளவுதான் வேதத்தைக் குறித்த அறிவை ஊட்டினாலும், மிகச் சிறந்த ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கொடுத்தாலும், தெய்வீக ரகசியங்களை வெளிப்படுத்திக் காண்பித்தாலும், அவர்களுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய விதமான எந்தக் குணாதிசயங்களையும் பார்க்க முடியாது. சிலர் சிறந்த இறையியல் கல்வி கற்றாலும், இறையியல் பட்டங்களைப் பெற்றாலும் அவர்களிடம் பரிசுத்தமான ஒரு வாழ்க்கையைப் பார்க்க முடியாது.

காரணம் என்ன? அடிப்படை பாவம் என்ற வியாதிலிருந்து ஒருவர் விடுதலையடையாதவரை, அவரால் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ முடியாது. பாவத்தால் முடமாகிக் கிடக்கின்றவர்களால் ஆவிக்குரிய ஆலோசனைகளின்படி உயர்தர வாழ்க்கையை வாழ முடியாது.

அநேகர் எப்படி வல்லமையாகச் ஜெபிப்பது? எப்படி வேதத்தை தியானிப்பது? எப்படி வெற்றியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வது? என்பது போன்ற ஆவிக்குரிய பயிற்சி முறைகளை அதிகமாகக் கேட்டு அவைகளை ஆவலுடன் செயல்படுத்த விரும்புகின்றார்கள். ஆனால், அவைகளில் வெற்றியாகத் தொடர அவர்களால் முடியவில்லை. ஏனென்றால், ஆர்வங்களும், தேவைகளை உணரும் மனநிலைகளும் இருந்தாலும், ஆவிக்குரிய நிலையில் இன்னும் அவர்கள் புது ஜீவன் பெறாததால், அவர்களால் கூடாமல் போகிறது.

ஆம், முதல் தேவை வேத பாடமும், இறையியல் கல்வியும், ஆழமான சத்தியங்களும் நிறைந்த பிரசங்கங்களும் அல்ல. ஒருவர் தான் பாவத்தால் பாதிக்கப்பட்டிருப்பதை உணருகின்ற உணர்வைப் பெற்று, அதிலிருந்து விடுதலையாகி வெளியே வர விரும்பும் மனநிலையைப் பெறவேண்டும். அதன் பின்னரே பிற காரியங்கள் யாவும்.

சிந்தனைக்கு...

எப்படி விதைப்பது என்பதை நன்கு அறிந்திருந்தாலும், எங்கே விதைப்பது என்பதை அறியாவிடில், அறுவடையைக் காணமுடியாது.

ஓடி விடாதீர்

அவனுடைய தகப்பன்... மனதுருகி ஓடி...
லூக்கா 15:20

லூக்கா 15:11-25

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் தம்மைப் பட்சிக்கும் அக்கினி போன்ற, பயங்கரமான தேவனாக இஸ்ரவேலர்களுக்குக் காண்பித்தார். அந்த வெளிப்பாட்டைப் பெற்ற இஸ்ரவேலர்கள் அவருக்கு முன்பாக நிற்க முடியாமல் ஓடினார்கள். ஆனால், நமக்கோ தம்மை அன்பு மிகுந்த தந்தையாகக் காண்பித்தார். அதுவே புதிய ஏற்பாட்டின் பிரதான செய்தி. தந்தை உறவு என்பது நம்மைக் கலங்கடிக்கிற ஒன்றல்ல. நம்மைப் பாசத்தால் அனைத்துக் கொள்கிற ஒன்றாகும்.

இதனை நாம் நிஜமாக உணர்ந்து விசுவாசிக்க வேண்டும். பலர் தேவனைப் பற்றி நினைக்கும்போது அவரைக் கண்டிப்பு மிகுந்த ஒரு முதலாளியைப் போன்ற தோற்றத்திலேயே உள்ளத்தில் காண்பார்கள். எனவே, சில தவறுகளைச் செய்யும் போதும், அல்லது சில தவறுகளை மறுபடியும் செய்ய நேரிடுகின்ற போதும், மன்னிப்பைப் பெற அவரை நெருங்குவதற்குப் பதிலாக, ஆவிக்குரிய வாழ்க்கையை விட்டே ஓடிவிடுகிறார்கள். ஏனென்றால் தந்தையாக அவரை நாம் நிஜ அனுபவத்தில் பார்த்தால் மட்டுமே அவரைச் சந்திக்கும் தைரியமும், மன்னிப்பைக் கேட்கும் ஊக்கமும் கிடைக்கும். தேவனைத் தந்தையாகப் பார்க்காத காரணத்தினால்தான், அனேகர் ஆவிக்குரிய வாழ்வில் பின்வாங்கிப் போகிறார்கள்.

தேவன் நம்மை ஒருமுறை மட்டுமல்ல. பலமுறை மன்னிக்கும் தயை மிகுந்தவர். ஆனால், தேவனோடு தந்தை மகன் என்ற உறவு நிலையில் நாம் பழகும்போது மட்டுமே அதனை உணர முடியும். கெட்ட குமாரன் அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து போன ஒரு பரிதாப நிலையிலும், அவனுக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட்டது அவனுடைய தந்தையைக் குறித்த சரியான ஒரு நல்ல அறிவுதான். தன் தந்தை தன்னுடைய தவறை மன்னித்து தன்னை ஏற்றுக் கொள்வார் என்ற ஒரு நம்பிக்கை இருந்ததால்தான், சீர்கெட்டுப் போன ஒரு நிலையிலும் தந்தையிடம் போகத் துணிந்தான். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஆம், தந்தையைக் குறித்த நல்ல ஒரு அறிவு அவனுக்கு மகிமையான ஒரு திருப்பத்தைக் கொடுத்தது.

தேவனை "அப்பா" என்று குறிப்பிடுவதை, ஒரு அலங்காரச் சொல்லாக எடுத்துக் கொள்ளாமல், அதனை அனுபவரீதியான உறவை வெளிப்படுத்தும் சொல்லாக எடுத்துக் கொண்டு, அதற்கேற்ப செயல்பட வேண்டும். அங்கே தவறுகளின் போது நாம் விலகி ஓடுவதற்குப் பதிலாக, அவருடைய அன்பை நம்பி அவரை நோக்கியே ஓடுவோம்.

சிந்தனைக்கு...

இன்ப வேளையில் இறைவனோடு நடந்து பழக்கப்பட்டவன், துன்ப வேளையைக் கடந்து செல்லப் பயப்படமாட்டான்.

நவம்பர்
17
ஜீவ நீரோடை

பாவ அறிக்கை

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்... மத்தேயு 3:8

மத்தேயு 3 :1-12

பரிசேய மார்க்கத்தார்களிடம் ஒரு முக்கியமான பாரம்பரியம் இருந்தது. அவர்கள் அவ்வப்போது தேவாலயத்தில் வந்து மிகுந்த மனஸ்தாப உணர் வோடு தங்கள் தவறுகளையும், குறைகளையும் அறிக்கையிட்டு தேவனிடம் மன்னிப்பு கேட்பார்களாம். சிலநேரம் அழுது புலம்பவும், செய்வார்களாம். ஆனாலும், அதே தவறுகளையும், பாவங்களையும் தொடர்ந்து செய்வார்களாம். தவறுகளை உணர்ந்து மனஸ்தாபப்படுவதை ஒரு பக்திக் கடமையாக எண்ணுவார்களே யன்றி, அவைகளை விட்டுவிடுவதற்கு பிரயாசப்படமாட்டார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நம்மிடமும் இதே வித பரிசேயத்தனம் சில விஷயங் களில் இல்லாமல் இல்லை, பாவங்களை அறிக்கையிடுவதாலேயே பரிசுத்தம் ஆகிவிட்டதாக எண்ணி விடுகிறோம். அதையே தேவ பக்தி என எண்ணுகிறோம். இது தவறான ஒரு போக்கு. நம்முடைய பாவ அறிக்கை ஒரு உண்மையான பரிசுத்த மாறுதலால் தொடரப்பட வேண்டும். இல்லையேல் அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

வாரந்தோறும் தேவ சமுகத்தில் வந்து "தப்பிப்போன ஆடுகளைப் போல உம்முடைய வழிகளைவிட்டு விலகிப் போனோம். எங்களுக்கு இளைப்பாறுதலே இல்லை" என்று கிளிப்பிள்ளை போல உண்மையான உணர்வின்றிச் சொல்வதால் என்ன பிரயோஜனம்? தப்பிப்போன ஆடுகள் என்பதை நாம் உணர்ந்தால் அதற்காக மனஸ்தாபப்பட்டு தேவ மந்தையில் சேர்ந்துவிட வேண்டும். ஒரு மனிதன் மருத்துவரிடம் வந்து அவ்வப்போது "நான் ஒரு நோயாளி, நான் ஒரு நோயாளி எனக்கு சுகமேயில்லை" என்று கூறியும், அந்த மருத்துவர் தரும் மருந்து எதையும் ஏற்காமலே போனால், அவன் என்றுமே நோயாளியாகவே இருப்பான். உண்மையை ஒத்துக்கொள்வதால் மட்டும் அவன் ஆரோக்கியமடைந்து விடான்.

பல சபைகளில் பாவ அறிக்கை ஜெபம், ஞாயிறு ஆராதனை வேளைகளில் தவறாமல் ஏறெடுக்கப்படுகிறது. ஆனால், பெரும்பாலானோர் அதனை விழிப் புணர்வில்லாமல், பாவத்தைப் பற்றியோ, பாவ மன்னிப்பைப் பற்றியோ எந்த விசேஷ சிந்தனையும் இல்லாமலே ஏறெடுக்கின்றனர். எனவேதான், யோவான் மனந்திரும்புங்கள் என்று மட்டும் பிரசங்கியாமல், மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் என்றும் பிரசங்கித்தான். ஆம், தவறுகளை உணர்வதும், அவைகளை விட்டு விலகிடப் பிரயாசப்படுதலும் ஆகிய இரண்டு அனுபவங்களும் இணைந்ததே உண்மையான பாவ அறிக்கையாகும்.

சிந்தனைக்கு...

தவறை உணர்வது நேர்மை. அதனைச் சரி செய்ய முன் வருவதுதான் விவேகம்.

நவம்பர்
18
ஜீவ நீரோடை

காரணங்கள் அல்ல

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்.
பிரசங்கி 11:4

பிரசங்கி 11:1-10

நான் பிறந்து வளர்ந்த சூழ்நிலை அப்படி. நான் படித்த ஸ்கூல் அவ்வளவு ஸ்டாண்டர்டு கிடையாது. என் குடும்ப நிலைமை அப்படியாயிருந்தது. இதெல்லாம் இப்படியே பழகிப் போயிட்டுது. என்னுடைய கேரக்டர் எப்படியோ இப்படி ஆயிட்டுது. எங்க ஆபிஸ்ல இதெல்லாம் சகஜம். எனக்கு அமைந்த மனைவி அப்படி. இவ்வித மாக தங்களிடமுள்ள குறைவுகளுக்கும், மாற்றமின்மைக்கும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, திருப்திபட்டுக் கொள்ளுகின்றவர்கள் பலர்.

நம்மிடம் இல்லாமல் போனவைகளுக்கு சில காரணங்கள் இருக்கலாம். நாம் இருக்க வேண்டிய விதமாக இல்லாமலிருப்பதற்கு சில பின்னணிகள் இருக்கலாம். நாம் சிறந்ததோர் வாழ்க்கை வாழத் தவறியதற்கு காரணமாக சில சூழ்நிலைகள் இருக்கலாம். நம்மிடமுள்ள சில தவறான குணங்களுக்கும், பழக்க வழக்கங் களுக்கும் குடும்பப் பின்னணியே ஒரு முக்கியமான காரணமாயிருக்கலாம். ஆனால், காரணங்களைக் கவனித்து நம்முடைய குறைவுகளையும், சிறப்பற்ற வாழ்க்கை முறைகளையும் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு விடக்கூடாது.

காரண காரியங்கள், சூழ்நிலைகள், பின்னணிகள் யாவற்றையும் கடந்து போகும் வாஞ்சை வேண்டும். நாம் எப்படியிருக்க வேண்டும் என்பதும், எப்படி வாழ வேண்டும் என்பதும்தான் நம்முடைய குறிக்கோள்களாக இருக்க வேண்டும். ஆற்றில் ஓடும் வெள்ளத்தின் வேகத்தைக் கவனித்தால் அதன் போக்கில் போவதற்கு காரணம் உள்ளது. ஆனால், வேகத்தின் இழுவைக்கே விட்டுக் கொடுக்காமல், எதிர் நீச்சல் போட விரும்பினால்தான் கரை சேர முடியும். சூழ்நிலை களையும், பின்னணிகளையும் காரணம் காட்டினால் "பாவம் அவன் என்ன செய்வான். அவ னுடைய சூழ்நிலைகள் அப்படி" என்று சிலர் பரிதாபப்பட முடியும். ஆனால், நமக்குத் தேவை அனுதாபமோ, பரிதாபமோ அல்ல. நமக்குப் பாராட்டு வரும்விதமாக நாம் செயல்பட வேண்டும்.

தேவ கிருபை, காரண காரியங்களைக் கடந்து நம்முடைய உயர்ந்த இலக்கு களை எட்டிட உதவி செய்யும். தேவ உறவு, எல்லாத் தோல்விகரமான பின்னணி களைக் கடந்து செயல்பட்டு உயர்நிலைகளை அடையும் ஆற்றலை நமக்குத் தரும். காலேபிற்கும், யோசுவாவுக்கும் அப்படிப்பட்டதோர் சிந்தையும் ஆவியும் இருந்தது. எனவே, பெரும்பான்மையினர் தங்களின் பலவீனங்களை கணக்கு போட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் தேவ பலத்தைக் கணக்கிட்டு வென்று காட்டும் வீரம் பெற்றனர்.

சிந்தனைக்கு...

உன்னுடைய முயற்சிகள் ஒரேயடியாக மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டாலும், ஒரு சில மாற்றங்களையாவது ஏற்படுத்தவே செய்யும்.

நவம்பர்
19
ஜீவ நீரோடை

உண்மையான மாற்றம் ?

புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்...
எபேசியர் 4:24

எபேசியர் 4:17-32

என்னுடைய ஊழியப் பாதையின் மத்தியில் நான் காண்கின்ற வேதனை யான ஒரு விஷயம் என்ன வென்றால், இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லுகின்ற அநேகர் அதனுடைய உண்மைப் பொருளை சரியாக அறியாமலே வாழ்வதுதான். அவர்களின் பழைய வாழ்க்கைக்கும், புதிய வாழ்க்கைக்கும் இடையே பெருத்த மாறுதல்கள் இருப்பது உண்மைதான். பல பாவமான செயல்கள் போயிருக்கின்றது. ஆகாத பழக்கங்கள் அநேகம் அகன்றிருக்கின்றது. இயேசுவின்மேல் அதிக மரியாதையும் அன்பும் ஏற்பட்டிருக்கின்றது. காணிக்கைகளைத் தாராளமாக வழங்கி அதனை ஆசீர்வாதம் என்று எண்ண முடிகின்றது. இயேசுவைக் குறித்து எல் லோரும் அறிய வேண்டும் என்ற ஆசை வந்திருக்கின்றது. ஆவிக்குரிய காரியங் களில் அதிக ஈடுபாடு ஏற்பட்டிருக்கின்றது.

ஆயினும் சுபாவரீதியான, குணரீதியான ஒரு அடிப்படை மாறுதல்தான் மனந்திரும்பிய வாழ்க்கையின் முக்கிய அடையாளம் என்றும், அதுதான் இயே சுவைக் கனப்படுத்துகின்ற உண்மையான வழி என்றும் அவர்கள் அறியவில்லை. அறிந்திருந்தால்கூட அதற்கேற்ப தேவ கிருபையை நாடி தங்களை அந்த அனு பவத்திற்குள் உட்படுத்தவில்லை. மேலே குறிப்பிட்ட விதமான பல மாறுதல்களை தங்களில் பார்ப்பதால் அவர்கள் அதிக திருப்தியடைந்து, ஆண்டவரின் பார்வையில் இன்னும் அரைகுறையாகவே நிற்கின்றார்கள். மாற்றங்கள் பல இருக்கலாம். ஆயினும் கபடமற்ற பேச்சு, பொறுமையில் உறுதி, கோபவசப்பட்டு நிலைதவறாமை, வெறுப்புணர்வை விட்டுவிடுதல், விட்டுக்கொடுக்கும் பண்பு, பதிலுக்குப் பதில் செய்யும் ஆசையின்மை, ஆத்திர உணர்வுகளுக்கு ஆட்படாமை, பொய்த்தோற்றம் கொடாமை போன்ற உயர்ந்த குணங்களால் ஒரு பெரிய மாறுதலைக் காணாவிட்டால், அங்கே மறுபிறப்பின் மகிமை இல்லை. அது மனந்திரும்பிய வாழ்க்கையும் அல்ல.

நாம் ஒரு ஆன்மிக பக்திக்காக அல்லது தேவனைப் பிரியப்படுத்தும் வாஞ்சை யில் சில ஆகாத பழக்க வழக்கங்களை விடவும், சில நல்ல ஒழுங்குகளை ஏற் படுத்திக்கொள்ளவும் முடியும். ஆனால், இவைகளே மனந்திரும்புதல் ஆகிவிடாது. முதலாவது, நாம் நமக்குள் எப்படியிருக்கிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். நம்மிடம் உள்ள தெய்வீக குணாதிசயங்கள் எவ்வளவு என்பதைச் சிந்திக்க வேண்டும். இவற்றை உணர்ந்து ஒரு அடிப்படை மாற்றத்திற்கான தேவ கிருபையை வாஞ்சித்துத் தேடும்போதுதான், தேவ ஆவியின் செயல்பாடுகளை நம்மிடம் காண முடியும். அப்போதுதான் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் நம்மிடம் தோன்றும்.

சிந்தனைக்கு...

இரட்சிக்கப்பட்டேன் என்று உன் வாய் அல்ல.
உன் வாழ்க்கையே சாட்சி சொல்லட்டும்.

நவம்பர்
20
ஜீவ நீரோடை

குணத்தை விரும்பினால்

குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்? ... நீதிமொழிகள் 31:10

நீதிமொழிகள் 31:10-31

இந்நாட்களில் வாழ்க்கைத் துணையைத் தேடுபவர்கள் அழகு, அந்தஸ்து, கல்விநிலை இவைகளையே முக்கிய எதிர்பார்ப்புகளாகக் கொள்கின்றார்கள். ஒரு குடும்ப வாழ்க்கைக்கு முக்கியத் தேவை நற்பண்புகளும், குணங்களும் என்பதை அநேகர் சிந்திப்பதில்லை. குடும்ப வாழ்க்கை என்பதும், திருமண உறவு என்பதும் பணம், பொருள், அந்தஸ்து, அழகு இவைகளைக் கொண்டே வாழ்ந்துவிடக் கூடியவை அல்ல. இதயங்கள்தான் அங்கே வாழ்க்கை நடத்துகின்றன. அந்த இதயங்கள் நற்சுபாவங்களும், பண்புகளும் இல்லாத நிலையில், முகத்தின் அழகைப் பார்த்தோ, செல்வ வலிமையைப் பார்த்தோ, கல்வித் தகுதியைப்பார்த்தோ, வாழ்க்கையைச் சமாதானமுடையதாகவும் மகிழ்ச்சியுடையதாகவும்மாற்றிவிட முடியாது. உடலெல்லாம் தங்கமாகச் ஜொலித்தும் ஒரு பெண் இதயத்தில் இரும்பாயிருந்தால் வாழ்க்கை சுகம் காணாது. பெட்டியில் லட்ச லட்சமாக வைத்திருந்தும், உள்ளத்தில் நற்குணமற்ற வறுமையில் ஒருவன் இருந்தால், வாழ்க்கை அமைதியைக் காணாது.

அரசுப் பணியில் உள்ள விசுவாசியான ஒரு இளைஞன் தான் இரட்சிக்கப்பட்டு, ஆவியில் நிரம்பிய ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்வேன் என்று உறுதியாகக் கூறிவந்தான். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த போதகர் ஒருவர், உனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டும் என்று கேட்டார். அவனோ இரட்சிப்பின் அனுபவத்தோடு, நல்ல படிப்பு, நல்ல வேலை, நல்ல வசதி, நல்ல அழகு, நல்ல குடும்பம், நல்ல குணங்கள் என்று பட்டியலை நீட்டிக் கொண்டே போனான். அதனைக் கேட்ட அந்தப் போதகர் இத்தனை அம்சங்களும் ஒரு பெண்ணிடம் இருந்தால், நிச்சயமாக அவள் உன்னைவிட தகுதி மிக்க வேறொருவனைத்தான் திருமணம் செய்வாள் என்று கூறினார். அந்த இளைஞனுக்கு அது ஓங்கி அடிப்பது போல இருந்தது.

சில வேளைகளில் நாம் நல்ல நோக்கங்களைக் கொண்டிருப்போம். ஆனால், அவற்றிற்காக வேறு எதையும் இழக்க விரும்புவதில்லை. சிலர் வாழ்க்கைத் துணைகளைத் தேடும்போது, நல்ல குணங்கள் என்ற நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். ஆனால், அதற்காக வேறு எதையும் விட்டுக் கொடுக்க விரும்ப மாட்டார்கள். உலகப்பிரகாரமான நிலையிலும் எல்லாம் குறைவின்றி வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். நல்ல குணங்களை, நாம் விரும்புவது உண்மையாயின் பணம், வசதி, படிப்பு என்ற நிலைகளில் நாம் இறங்கி வரவேண்டியது அவசியம். நாம் விரும்பும் எல்லா அம்சங்களோடு, நற்குணங்களையும் விரும்புவது ஒரு சுய நலமாகும்.

சிந்தனைக்கு...

பொருட்களின் தரத்தை வைத்து வியாபாரி அறியப்படுகிறான், செயல்களின் தரத்தை வைத்து கிறிஸ்தவன் அறியப்படுகிறான்.

நவம்பர்
21
ஜீவ நீரோடை

பிறரின் கருத்து

இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன் ?
மத்தேயு 11:16

மத்தேயு 11:1-19

ஒரு தேவனுடைய ஊழியர் தன்னுடைய ஊழியத்தின் துவக்க காலத்தில் மிகுந்த வறுமை நிலையில் வாழ்ந்தார். அந்த நாட்களில் அவர் யாருக்கும் விரும்பத்தக்க நிலையில் இல்லை. இவர் உண்மையான ஊழியர் என்றால் ஏன் இத்தனை வறுமை? என்று பலர் கேட்டனர். சில வருடங்களுக்குப் பின்பு அவர் கொஞ்சம் செழிப்பான நிலையில் வந்தார். கொஞ்சம் வசதியாக தோற்றம் அளித்ததும், இவர் உண்மையான ஊழியர் என்றால் ஏன் இந்த வசதியான வாழ்க்கை? என்று பலர் கேட்க ஆரம்பித்தனர்.

செவ்வையற்ற மனதை உடைய மக்களால் இந்த உலகம் நிறைந்திருக் கிறது. நாம் எந்த நிலையில் வாழ்ந்தாலும் அவர்களைத் திருப்திப்படுத்த முடியாது. தாழ்ந்து நின்றால் அற்பமாக எண்ணி அசட்டை செய்வார்கள். உயர்ந்து நின்றாலோ பொறாமையினால் வெந்து பொல்லாததைச் சிந்திப்பார்கள். மற்றவர்களின் மனநிலைக்கேற்ப நாம் ஒருபோதும் வளைந்து, நெளிந்து வாழ்ந்து காட்ட முடியாது. மற்றவர்கள் நம்மைக் குறித்து கொண்டுள்ள அபிப்பிராயங்களை அசட்டை செய்யக் கூடாது. அதே வேளையில், அவர்களின் நல்ல அபிப்பிராயத்தை எதிர்ப்பார்த்தே வாழவும் கூடாது. ஏனென்றால், ஒருவருக்கு நம்மேல் ஒரு நல்ல எண்ணம் இல்லையென்றால், நாம் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டாலும், அவர் களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற முடியாது.

சமுதாயத்தோடு கலவாமல் ஆழ்ந்த துறவற வாழ்க்கை வாழ்ந்த யோவானை பரிசேயர்கள் பிசாசு பிடித்தவன் என்றார்கள். சமுதாயத்தின் நடுவில் எல்லாரோடும் தொடர்பு கொண்டு வாழ்ந்த இயேசுவையோ பாவிகளின் தோழன் என்றனர். இரண்டிற்கும் ஒரே காரணம்தான் உண்டு. செவ்வையற்ற, அன்பற்ற, சாத்தானின் ஆளுகைக்குட்பட்ட மனநிலையே அது. ஆம், தேவ சமுகத்தில் நல்லது எது, தீயது எது என்று நிதானித்து அறிந்து, குற்றமற்ற மனசாட்சியுடன் நாம் வாழ வேண்டும். அங்கே பிறர் என்ன நினைக்கின்றார்கள் என்பதைபற்றி கவலைப் படத் தேவையில்லை,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசேயர்களையும், மதத்தலைவர் களையும் திருப்திப்படுத்தும் நோக்கோடு என்றுமே செயல்பட்டதில்லை. அவர் தம்மைக் குறித்த சரியான நிச்சயத்தையும், தேவனுக்கு முன்பாக தம்முடைய மாசற்ற செயல்களையும் குறித்து நல்ல தெளிவையும் உடையவராயிருந்தார். எனவே, பிறருடைய வார்த்தைகள் அவரை எந்த நிலையிலும் பாதிக்கவில்லை.

சிந்தனைக்கு...

உன்னை நீ தாழ்த்துவது தாழ்மையின் அடையாளம். பிறர் உன்னைத் தாழ்த்தும்போது தாங்கிக் கொள்வதே அதன் நிரூபணம்.

நவம்பர்
22
ஜீவ நீரோடை

மாற்றத்திற்கு மாதிரி

அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்...
யோவான். 5:35

யோவான் 5:30-47

உலகத்தை நாம் மாற்றிவிட முடியாது. மற்றவர்களை நாம் நினைத்தபடி மாற்றிவிட முடியாது. ஆனால், மாற்றம் என்பதில் நமக்கு அதிகமான தாகமும் கனவும் இருந்தால், அதனை நமக்குள் நாம் காண முற்படலாம். மற்றவர்கள் மாறவில்லையே என்றதோர் அதிருப்தியும், மாற்றமுடியவில்லையே என்றதோர் விரக்தியும், நம்மைத் தவறான ஒரு மனநிலைக்குள் கொண்டு போய்விடும். நாம் எல்லோரும் பிரகாசிக்க வேண்டும் என்று ஆசைப்படலாம். ஆனால், எல்லோரும் பிரகாசிக்க வேண்டும் என்ற கனவு உடனடியாக நிறைவேறாவிட்டாலும், நாம் நன்றாகப் பிரகாசிக்க வேண்டும் என்ற கனவை விட்டு விலகிவிடக்கூடாது.

நமக்குள் மாற்றம் காண்பது நம்மால் தேவ கிருபை சார்ந்து சாத்தியமாக்க முடிந்தவிஷயம். அந்த மாற்றம் மாற்றங்கள் தேவை என்பதற்கு நல்லதோர் முன் மாதிரியாக விளங்கும். மாறுங்கள், மாறுங்கள் என்ற நம்முடைய அறைகூவல்கள் செவிசாய்க்கப்படாத விஷயங்களாகப் போகலாம். ஆனால், நமக்குள் நாம் கண்ட மாற்றங்கள் நம்மை பிரகாசிக்கச் செய்யும்போது, அந்தப் பிரகாசம் மற்றவர்களிடம் மாற்றத்தின் மிக முக்கியத் தேவையை வற்புறுத்தும்.

இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களிடம் உலகத்தை நீங்கள் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுக்கவில்லை. ஆனால், நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்க வேண்டும் என்ற கட்டளையைக் கொடுத்தார். உங்கள் வெளிச்சம் பிறர் நடுவில் பிரகாசிக்க வேண்டும் என்றார். பிறர் மாற்றமில்லாத மனதோடு வாழ் வதைக் கண்டு சிலர் சோர்ந்து போய்விடுகின்றார்கள். இவர்கள் உணரவில்லையே. இவர்கள் திருந்தவில்லையே என்ற மனக்குமுறலின் விளைவாக, தங்களை மாற்றத்திற்கு மாதிரியாக நிறுத்துவதில் பின்வாங்கிப் போய்விடுகின்றனர். அத னுடைய விளைவாக நல்ல மாற்றங்களின் தேவையைக் குறித்து பேசுகின்றவர் களிடமும் மற்றவர்கள் நல்ல மாற்றங்களைக் காண இயலாமல் போகிறது.

மற்றவர்கள் தங்களின் பொல்லாத மனநிலைகளை விட்டு மாற்றம் காண வேண்டும் என்று நாம் ஆசைப்படலாம். ஆனால், எதிர்பார்த்த மாற்றங்களைக் காண இயலாவிட்டாலும், மாற்றங்களுக்கு ஒரு மாதிரியாக நிற்கும் மனநிலையை நாம் மாற்றிக்கொள்ளக் கூடாது. எரேமியா, எசேக்கியேல்போன்றோர் ஜனங்களிடம் மாற்றங்களின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார்கள். ஆனாலும், ஜனங்கள் மாறவில்லை. அதே வேளையில், அவர்கள் தங்களை இறுதி வரை மாற்றங் களின் அவசியத்தை உணரத் தூண்டும் நல்மாதிரிகளாக நிறுத்திக்கொள்வதில் உறுதியாயிருந்தனர்.

சிந்தனைக்கு...

இயேசு என்னும் ஒளியை தன் வாழ்வில் கண்டவன்,
பிறர் நடுவில் இருளாக இருக்க முடியாது.

நவம்பர்
23
ஜீவ நீரோடை

ஜெபம் எதற்காக?

என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே... சங்கீதம் 27:8

சங்கீதம் 27:1-14

சிலர் ஜெபம் என்பதை ஒரு கட்டாயமான மதக்கடமையாகவும், ஆன்மீகக் கட்டளையாகவும் எண்ணி அதற்காகவே ஜெபிக் கின்றனர். எனவே, அதனால் போதிய பலன் ஏற்படவில்லை. சிலர் அனுதினத் தேவைகளைதேவனிடத்திலிருந்து பெறுவதற்காக ஏற்பட்டதே ஜெபம் என்று, ஒரு குறைவான கண்ணோட்டத்தில் மட்டும் ஜெபத்தைப் புரிந்து கொண்டுள்ளனர். எனவே, அவர்களும் ஜெபத்தினால் முழுப் பயன் அடைவதில்லை.

சிலர் ஜெபத்திற்கு வாயின் வார்த்தைகள் மட்டும் போதும் என எண்ணி, பரிசுத்தமான ஒரு தேவனை அணுகுவதற்கு ஒரு பரிசுத்தமான இருதயம் தேவை என்பதை உணராமல் ஜெபிப்பதால், அவர்கள் ஆசீர்வாதங்களை அடையவில்லை. ஜெபம் என்பது தேவனைச் சந்திக்கின்ற இடம் எனச் சொல்லலாம். ஜெபத்தின் மூலம்தான் நம் இதயம் தேவனை உணர முடிகின்றது. தேவனுடைய அன்பை, ஐக்கியத்தை, ஆறுதலை, ஆதரவை, தொடுதலை, தூண்டுதலை நம்முடைய ஆத்துமா ஜெபத்தினால்தான் உணர முடியும்.

எனவே, ஜெபிக்கச் செல்லும் போது எதையோ பெறவேண்டும். ஏதோ சில மதச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனைக்குப் பதிலாக, தேவனை ஆத்துமாவில் உணர வேண்டும். அவருடைய அன்பை, ஐக்கியத்தை இருதயத்தில் அனுபவிக்க வேண்டும் என்ற சரியான எதிர்பார்ப்போடு செல்ல வேண்டும். ஆண்டவரின் உறவை உறுதிப்படுத்துவதற்கும், அதனை அனுபவப்பூர்வமாக ருசிப் பதற்கும் ஜெபத்தைத் தவிர மேலான வேறு எதாவது வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

சிலர் தினமும் வீடுகளில் ஜெபிக்கும் பழக்கம் உடையவர்களாயிருந்தாலும், சபை கூடுகை மற்றும் விசேஷ ஆராதனை வேளைகளில் மட்டுமே தேவப் பிரசன்னத்தை அல்லது தேவன் தங்களோடிருக்கும் உணர்வைப் பெறுகின்றார்கள். ஆனால், இது சரியான ஜெப அனுபவம் அல்ல.

தனிப்பட்ட ஜெபங்களில் தேவப் பிரசன்னத்தை, தேவ உறவை, தேவ அன்பை ஆத்துமாவில் உணரும் அனுபவமில்லாதவர்கள், பலர் கூடிவந்து ஆராதிக்கும் இடங்களில் உணர்வதாகக் கூறும் கூற்று, வேதப்பிரகாரமான உண்மையல்ல. கர்த்தர் உண்மையான இருதயத்தோடும், ஒரு பரிசுத்த வாழ்வின் பின்னணியோடும் ஜெபத்தில் தேடுகின்றவர்களுக்கு, தம்மைக் காண்பிக்கவும், வெளிப் படுத்தவும் செய்கின்றார் என்பது உண்மை,

சிந்தனைக்கு...

ஜெபம் ஒரு ஏணி, அதன் வழியாக தேவன் மனிதனை நோக்கி இறங்குகிறார். மனிதன் தேவனை நோக்கி ஏறுகிறான்.

நவம்பர்
24
ஜீவ நீரோடை

நோக்கம் என்ன?

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்... மத்தேயு 5:13

மத்தேயு 5:1-16

பெரும்பாலும் அநேகருடைய ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தெரிந்தோ தெரியாமலோ சுயநல பின்னணியைக் கொண்டதாகவே உள்ளது. தங்களின் வாழ்க்கை எப்படியாவது ஆசீர்வாதமாயிருக்க வேண்டும் அல்லது நன்றாயிருக்க வேண்டும் என்ற நோக்கமே அடித்தளத்தில் உள்ளது. ஜெபித்தாலும், ஆராதித்தாலும், காணிக்கை கொடுத்தாலும், பக்தி ஒழுங்குகளைப் பின்பற்றினாலும், ஊழியம் செய்தாலும் நோக்கம் தேவ நன்மை பெறுவதாகவே உள்ளது.

இவ்வித நோக்கம் சார்ந்த ஆவிக்குரிய செயல்பாடுகளை தவறு என்று கூறுவது நியாயமல்ல. நாம் நன்றாயிருப்பதை ஆசையாக வைத்து தேவனுக்கு முன்பாக நன்றாக வாழ்வது நல்ல விஷயம்தானே. ஆனால், ஆவிக்குரிய வாழ்க்கை போதிய உற்சாகமானதாகவும், துடிப்பானதாகவும், அதிக நிறைவு தருகின்றதாகவும் இல்லாமலிருப்பது இவ்வித நோக்கத்தை மட்டும் சார்ந்து வாழ்வதாலேயாகும். நாம் இந்தப் பூமியில் மற்றவர்களுக்கு ஆவிக்கேற்ற பயனுள்ளவர்களாக விளங்கு வதற்காக, தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்ற வெளிப்பாடு நமக்கு வேண்டும். இயேசு கிறிஸ்துவும், அவருக்குப் பின்வந்த அப்போஸ்தலர்களும் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாக, மற்றவர்களுக்கு நன்மையுண்டாகும் காரியங்களையே செய்தார்கள்.

அதற்காக, மக்கள் சேவையே மகேசன் சேவை என்று எண்ணி, வெறும் சமூக சேவை செய்தால், அது தேவனைப் பிரியப்படுத்திவிடாது. நாம் செய்கின்ற செயல் அல்ல. முதலாவது நாம் வாழ்கின்ற விதம் பிறருக்கு ஒரு நல்ல பயனை ஏற்படுத்த வேண்டும். அதன்பிறகே செயல்கள். ஒரு நல்ல வாழ்க்கைமுறை என்பது அநேகருக்கு நண்மையுண்டாக்கும் ஒன்றாகும். எப்படி வாழ வேண்டும் என்பதற்கு நாம் ஒரு முன்மாதிரியாயிருந்தால், அதுதான் பிறருக்கு மிக முக்கிய மாகத் தேவைப்படும் சேவை.

கிறிஸ்தவர்கள் என்றால் தேவ ஆவியைப் பெற்றவர்களை மட்டுமே அது உண்மையாகக் குறிக்கும். தேவ ஆவியைப் பெற்றவர்கள் தேவ நோக்கம் நிறை வேற அனுப்பப்பட்டவர்கள் என்று அர்த்தம். அப்படியானால், தேவ ஆவியைப் பெற்ற நிச்சயத்தோடு, கிறிஸ்தவர்கள் அநேகருக்குப் பிரயோஜனம் உண்டாகும் விதமாக வாழ்வதை தரிசணமாகக் கொண்டு வாழ வேண்டும். வாழும் விதத்தாலும், நற்குணங்களாலும், நற்செயல்களாலும் நாம் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என் பதை உறுதிப்படுத்த வேண்டும். அப்போது அந்த வாழ்க்கை துடிப்புள்ளதாயிருக்கும்.

சிந்தனைக்கு...

பிறர் சொன்னதற்காக உண்மையை மறுக்காதே!
பிறருக்காக உண்மையை மறைக்கவும் செய்யாதே!

வேத அறிவின் விளைவு

என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்...
யோவான் 15:7

யோவான் 15:1-16

கம்பராமாயணம், மகாபாரதம் புராணங்கள், திருக்குறள் போன்றவற்றை நன்கு கற்று, வேறுபட்ட கோணங்களில் மிக அருமையான விளக்கங்கள் கொடுப்பவர்கள் உண்டு. இவர்களுடைய சொற்பொழிவுகள் எங்கு நடந்தாலும் தவறாமல் கலந்து கொள்ளுகின்றவர்கள் பலர் உண்டு. திரும்பத் திரும்ப வேறு, வேறு கோணங்களில் ஆழமான விளக்கங்களைக் கேட்கின்ற அவர்கள் நாளடைவில் சிறந்த கருத்துக் கருவூலங்களாக மாறி விடுவார்கள். அவர்கள் வாய்திறக்கும் போதெல்லாம் சுவையான கருத்துகள் வெளிவரும். ஆனாலும், அந்தக் கருத்துகளுக்கேற்ற பக்குவமான அல்லது பண்புமிகுந்த வாழ்க்கையை அவர்களிடம் பார்க்க முடியாது.

ஆவிக்குரியவர்கள் என்ற பெயரினை உடையவர்கள் மத்தியிலும் இது போன்ற இயல்புடையோர் ஏராளம் உண்டு. அனேகம் பிரசங்கங்கள் கேட்டல், ஏராளமான வேதவிளக்க நூல்களைப் படித்தல் ஆகியவற்றால் அவர்கள் சிறந்த வேத அறிவினைப் பெற்றிருப்பார்கள். அந்த நிலையில் அவர்கள் தங்களை முழுமையான, முதிர்ச்சி பெற்ற ஆவிக்குரியவர்களாக எண்ணிக்கொள்வார்கள். அவர்களின் வாயின் வார்த்தைகளில் பக்தி மணம் கமழும். ஆனால், வாழ்க்கையின் பாதைகளிலோ பாவ நாற்றம் பலமாக வீசும்.

தாங்கள் அறிந்துள்ள அதிக வேத அறிவு தங்கள் வாழ்க்கை முறைகளில் எங்கேனும் பிரதிபலிக்கின்றதா என்பதை அவர்கள் கவனிப்பதில்லை. ஆனால், கிறிஸ்தவம் அது அல்ல. வேதத்தை விளங்கிக்கொள்ளுந்தோறும் அதன் பிரதிபலிப்புகளை வாழ்க்கையில் காண விரும்பும் தாகம் வேண்டும். அப்படிப்பட்டவர்களிடம் மட்டுமே ஆவியானவர் செயல்பட்டு வாழ்க்கையைத் தெய்வீகமான முறையில் மறுரூபப்படுத்திக் கொண்டிருப்பார். வேத அறிவு என்பதை நம்முடைய அறிவு நிலையைப் பெருக்குவதற்காக மட்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

கிறிஸ்தவ இறையியல் கல்வி மிகுதியாகக் கற்றிருந்த ஒருவர், கிறிஸ்துவின் போதனைகளில் உள்ள தன்நிகரில்லாத உயர்ந்த நெறிகளை, வெளிப்படுத்தி பல புத்தகங்களை எழுதியிருந்தார். அவருடைய புத்தகங்கள் யாரையும் கிறிஸ்தவத்தின்பால் ஒரு ஈர்ப்புக் கொள்ளச் செய்யும். ஆனால், அந்த எழுத்தாளர் தனிப்பட்ட வாழ்க்கையிலே அவற்றில் ஒரு சிலவற்றைக்கூட கொண்டிருக்கவில்லை. கிறிஸ்துவின் உயர்ந்த நெறிகள் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் அல்ல. அவைகள் ஏற்கப்படவும், வாழப்படவுமே தரப்பட்டுள்ளன. வெறும் அறிவு வீணானது. அனுபவம் ஏற்படுத்தாத அறிவு வெறும்ஏட்டுச் சுரக்காயே.

சிந்தனைக்கு...

வேதாகமத்தில் என்ன இருக்கிறது என்பதை ஆராய்கிறவன் கல்விமான், வேதாகம வெளிச்சத்தில் தன்னை ஆராய்கிறவன் நீதிமான்.

நவம்பர்
26
ஜீவ நீரோடை

விலகுவது மட்டுமல்ல

தீமையை விட்டு விலகி நன்மை செய்...
சங்கீதம் 37:27

சங்கீதம் 37:23-40

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் தங்கியிருந்த வீட்டிற்கு அருகில் காலியாயிருந்த நிலத்தில் ஏராளம் குப்பைகள் குவிந்து கிடந்தன. ஒரு நாள் வீட்டு முதலாளி ஆட்களை அழைத்து வந்து, எல்லாக் குப்பைகளையும் அகற்றிச் சுத்தம் செய்தார். யாரும் அங்கே குப்பை கொட்டக்கூடாது என்று கட்டளையிட்டார். பின்னர் அங்கே குப்பை எதுவும் இல்லை. ஆனால், அதன்பின் பெய்த மழையின் காரணமாக ஏராளமான காட்டுச் செடிகளும், ஆகாத கொடிகளும் அங்கே முளைத்து வளர்ந்து அந்த இடம் காடாகக் காட்சியளித்தது.

குப்பைகளை அகற்றிய பகுதியை உரிய முறையில் உபயோகிக்காமல் விட்டு விட்டதால், பின்னர் அது காடாக மாறிவிட்டது. ஆவிக்குரிய வாழ்க்கையும் அப்படியே. சில ஆகாத குணங்களை விடுவது மட்டுமல்ல. உடனேயே நல்ல குணங்களால் அந்த இடத்தை நிரப்பவும் வேண்டும். தீய செயல்களை விடுவதல்ல பரிசுத்தம். நன்மையான செயல்களை அதற்குப் பதிலாகச் செய்யவும் வேண்டும்.

சிலர் ஒரு காலத்தில் தாங்கள் செய்து வந்த தவறான செயல்களையும், மோசமான பழக்கவழக்கங்களையும் விட்டு விலகி வந்து விடுவார்கள். ஆனால், அதற்குப் பதிலாக புதிய குணாதிசயங்களைப் பெறவும், சிறந்த பழக்கங்களால் அந்த இடத்தை நிரப்பவும் கவனம் செலுத்தமாட்டார்கள். எனவே, நாளடைவில் அவர்களின் பழைய தவறுகளும், பாவமான செயல்களும் புதிய வடிவங்களில் அவர்களுக்குள் புகுந்துவிடும். பழைய பாவம் புதிய நிறத்துடன் வந்து அவர்களை ஆட்கொண்டு விடும்.

தவறுகளை விட்டு விடுதல் என்பது வேறு. பரிசுத்த நிலை என்பது வேறு. அழகான ஒரு சித்திரத்தை வரைவதற்காக, ஒரு சுவர் சுத்தம் செய்யப்படுவதைப் போல, உயர்ந்த குணநிலைகளையும், தெய்வீக இயல்புகளையும் பெறுவதற்காகத்தான் தவறான பாவங்களை விடுகிறோம். ஆனால், அதுவே முடிவு அல்ல. பழைய பாவம் இருந்த இடத்தில் புதிய ஆவிக்குரிய குணாதிசயங்கள் வந்து நிரம்பப் பிரயாசப்படவேண்டும். விலகிவந்து விட்ட பாவச் சூழ்நிலைகளுக்கு நேராக மனம் மறுபடியும் செல்லாதிருக்க வேண்டுமானால், மனதைப் போதுமான அளவிற்கு ஆவிக்குரிய சம்பந்தமான காரியங்களோடு ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். தேவனோடு சம்பந்தப்பட்ட விஷயங்களைக் குறித்த சிந்தனைகளோடும், செயல்களோடும் மனதை அதிகமாக இணைத்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் மனம் பரிசுத்தமான காரியங்களோடு ஐக்கியமாயிருக்கத் தக்கதாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சிந்தனைக்கு...

பரிசுத்தமானவைகளை உன் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தால்,
பாவமானவைகளில் உன் கால்கள் சிக்குவதில்லை.

நவம்பர்
27
ஜீவ நீரோடை

காணிக்கையும் ஆசீர்வாதமும்

அவர் இனிக் காணிக்கையை மதியார்...
மல்கியா-2:13

மல்கியா 2:11-17

நம்முடைய இதயம் சரியாக இராதபோது காணிக்கைகள் ஒருபோதும் தேவனுக்குப் பிரியமாயிராது. இந்த உண்மை ஆதியாகமம் நான்காம் அத்தியாயத்திலேயே நமக்குச் சொல்லப்பட்டுவிட்டது. காயீன் - ஆபேல் காணிக்கை கொடுத்தபோது, காயீனின் காணிக்கை தேவனால் நிராகரிக்கப்பட்டது. கோபம், பொறாமை, எரிச்சல், அன்பின்மை, போன்ற சுபாவ நிலைகளோடு கர்த்தருக்குக் காணிக்கை தந்தால், அவர் அதை ஏற்கமாட்டார் என்பது அங்கே தெளிவாகச் சொல்லப்பட்டுவிட்டது.

ஆனால், இந்நாட்களில் யார், எவர் என்று தேவன் பாராமல் காணிக்கையை மட்டுமே பார்த்து உடனேயே பலன் அளித்து விடுகிறார் என்றே அநேகர் எண்ணுகின்றனர். அது தவறு. பல வியாபாரப் பிரமுகர்கள் காணிக்கை கொடுத்தலே தங்கள் வியாபாரத்தை செழிக்கச் செய்துவிடும் என் எண்ணுகின்றனர். ஊழியர்களும், ஊழிய ஸ்தாபனங்களும் கர்த்தருக்குக் கொடுத்துப் பாருங்கள். பன்மடங்காய் திருப்பித் தருவதை உடனே பாருங்கள் என்று சவால் விடுகின்றனர். இன்று காணிக்கை கொடுக்கத் தூண்டும் பிரசங்கங்களும், சாட்சிகளும் ஏராளம், ஏராளம். ஆனால் யாரிடமிருந்து வரும் காணிக்கையை தேவன் அங்கீகரித்து ஏற்றுக்கொள்வார் என்பதை விளக்கும் உபதேசங்கள் இல்லை.

தேவனுக்குப் பிரியமாக வாழ்கின்றவர்களின் காணிக்கை மட்டுமே கர்த்தருக்குப் பிரியமானது. தேவனுக்கு முன்பாக உண்மையும், உத்தமுமாக வாழ்கின்றவர்களின் காணிக்கை மட்டுமே தேவனுக்கு உகந்தது. காணிக்கை கொடுத்ததால் மிகுதியாக ஆசீர்வதிக்கப்பட்டதாக அநேகர் கூறும் சாட்சிகளை தினமும் ஏராளம் கேட்கின்றோம். இதனால் நாமும் கொடுத்துப் பார்ப்போமே என்ற எண்ணம் அநேகருக்கு வருவதுண்டு. சிலர் காணிக்கை கொடுப்பதின் உண்மையான நோக்கம் ஊழிய பாரமோ, தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நற்சிந்தையோ அல்ல. தங்கள் பிரயாசங்களுக்கு நல்ல பலன் கிடைப்பதற்காகவும், தங்களுக்கு எந்த நஷ்டங்களும் வராமலிருக்கவுமே அப்படிச் செய்கின்றனர். ஆனால், இது ஒருவிதமான வியாபார சிந்தைதானேயன்றி, விசுவாச சிந்தை அல்ல.

நாம் கொடுக்கும் காணிக்கை சுயலாப நோக்கு சார்ந்ததாக இராமல் மனப்பூர்வமாகவும், தேவன்மேல் கொண்ட அன்பின் விளைவாகவும் இருக்க வேண்டும். ஆண்டவர் தமக்கு எவ்வளவு காணிக்கை தரப்படுகிறது என்பதை அல்ல. காணிக்கை தருகிறவர் எப்படி என்பதையே கவனிக்கின்றார்.

சிந்தனைக்கு...

காயீனின் காணிக்கை கர்த்தருக்கு உகந்ததல்ல.
தர்ம சிந்தையற்றவனின் தசமபாகமும் அப்படியே.

நவம்பர்
28
ஜீவ நீரோடை

குணநிலை சோதனை

இஸ்ரவேலரை அவர்களாலே சோதிப்பதற்காக...
நியாயாதிபதிகள் 3:4

நியாயாதிபதிகள் 3:1-10

ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவ குடும்பத்தினர் தங்கள் அண்டை வீட்டில் நல்ல பண்பும் அன்பும் உள்ள ஒரு குடும்பத்தினர் வந்து குடியேற வேண்டும் என ஆசைப்பட்டனர். அதற்காக மிகுதியாகச் ஜெபிக்கவும் செய்தனர். ஆனால், அந்த வீட்டில் குடியிருக்க வந்த குடும்பத்தினரோ எளிதாகக் கோபமடைகிறவர்களாகவும், பொறாமை உணர்வுமிகுந்தவர்களாகவும்,காரணமில்லாமல் பிறருக்குக் கஷ்டம் கொடுக்கும் சிந்தையுடையவர்களாகவும் இருந்தனர். தாங்கள் எதிர்பார்த்ததற்கு எதிராக சண்டைக் கோழிகளான ஒரு குடும்பத்தார் குடியிருக்க வந்ததில் அவர்களுக்கு மிகுந்த வருத்தம் உண்டு.

அவர்களோடு பிரச்சினையோ, சண்டையோ, மனக்கசப்போ ஏற்படாமலிருக்க அவர்கள் மிகுந்த பிரயாசம் எடுக்க வேண்டியதாயிருந்தது. ஆயினும் தங்கள் கிறிஸ்தவ சாட்சி கெட்டுப் போய்விடக் கூடாது என்ற ஆர்வத்தில் அவர்கள் ஒவ்வொரு நாளும் மிகுந்த பொறுமையோடும், தாழ்மையோடும், சாந்தத்தோடும் நடந்து கொண்டனர். காலப்போக்கில் இது அவர்களுக்கு மனதிருப்தி தரக்கூடிய நல்ல அனுபவமாக மாறிவிட்டது. ஒரு எதிர்மாறான குணம் படைத்த அண்டை வீட்டாரை தேவன் அனுமதித்ததின் விளைவாக, தங்களில் ஆவிக்குரிய பண்பு நிலைகள் நாளுக்குநாள் வளர்ந்ததை அவர்களால் உணர முடிந்தது.

நாம் பார்க்கின்ற, பேசுகின்ற, பழகுகின்ற, சம்பந்தப்படுகின்ற அனைவரும் நற்பண்பாளர்களாக இருந்தால் அது நல்லதுதான். ஆனால் நற்பண்புகள் இல்லாதோரிடமும் நாம் பழக வேண்டிய, சம்பந்தப்பட வேண்டிய கட்டாயங்கள் ஏற்படும்போதுதான், நம்முடைய நற்பண்புகளை செயல்படுத்தவும், வெளிப் படுத்தவும் நல்ல வாய்ப்புகள் ஏற்படுகின்றன. எல்லோரும் நல்லவர்களாயிருந்தால், நம்முடைய பண்புகளுக்கு அதிக வேலையும், சவாலும் இல்லாமல் போய்விடும். இதன் விளைவாக நம்முடைய நற்குணநிலை பலவீனப்படவும் வாய்ப்பு உண்டு.

சில நேரம் நாம் தாழ்மை, சாந்தம், மனப்பக்குவம், பொறுமை ஆகிய குணநிலைகளில் நாம் மிகவும் குன்றியிருப்போம். ஆனால், அதை நாம் உணர்வதில்லை. எனவே, சில நேரங்களில் நம்மை நாம் அறிவதற்கும், சீர் செய்வதற்கும், வலிமை அடைவதற்கும் ஏதுவாகக் குணநிலையில் மோசமானவர்களை நம் பாதையில் தேவன் வரவிடுவார். அது நமக்கு நல்லதே. சோதனைகளை ஜெயிக்கப் பழகவும், நற்குணங்களுக்காக ஒரு ஆவிக்குரிய போராட்டத்தைப் போராடவும் அவை வரவிடப்பட்டவை.

சிந்தனைக்கு...

பிறரிடம் இல்லாத நற்குணங்கள், உன்னிடம் இருக்க வேண்டிய நற்குணங்களை நினைப்பூட்டட்டும்.

நவம்பர்
29
ஜீவ நீரோடை

நல்ல செயலும், குணமும்

தங்களை நீதிமான்களென்று நம்பி...
லூக்கா. 18:9

லூக்கா 18 :9-14

நம்மிடம் பல நல்ல விஷயங்கள் இருக்கலாம். நம்மிடம் பக்திமிக்க பல நல்ல செயல்கள் இருக்கலாம். ஆனாலும், அவைகள் நாம் மிகவும் நல்லவர்களாயிருக்கிறோம் என்பதற்கான இறுதியான அடையாளங்கள் என எண்ணிவிடக் கூடாது. நம்மிடம் உள்ள பல நல்ல செயல்களை நாமும் பிறரும் பார்த்து மெச்சுகின்ற அதே வேளையில், நம்முடைய உள்ளான நிலையில் நாம் தேவனுக்கேற்ற நல்லவர்கள் அல்லாதவர்களாக இருக்க முடியும்

லூக் - 18:10ல் வரும் பரிசேயன் - ஆயரக்காரன் உவமையைப் பாருங்கள். அந்தப் பரிசேயனிடம் பக்திமிக்க பல மெச்சத்தகுந்த விஷயங்கள் இருந்தன. ஆயினும், அவன் உள்ளான நிலையில் தேவனுடைய பார்வையில் நல்லவனாயிருக்கவில்லை. அவனுக்குள் தாழ்மைக்குப் பதில் மேட்டிமை இருந்தது. தன்னை அதிகமாக மதிப்பிட்டு, பிறரை மட்டமாக எண்ணும் மனோபாவமிருந்தது. பிறரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமை பாராட்டும் இழிகுணம் இருந்தது. தேவனுக்கு முன்பாகத் தன்னுடைய பரிசுத்த நிலை போதுமானதா என்பதைக் கண்டறிய முடியாத குருட்டுத்தன்மை இருந்தது. எனவேதான், தேவனால் அவன் நீதிமான் என்ற அங்கீகரிப்பைப் பெற முடியவில்லை.

நம்முடைய சில நல்ல செயல்கள் நம்மைக் குறித்து அதிக மதிப்பீட்டைக் கொடுத்துவிட முடியும். அவை நம்முடைய உள்ளான சுபாவ, இயல்பு நிலைகளில் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கிறோம் என்பதை அறியவிடாமல் செய்துவிட முடியும். பல பக்திமான்களிடம் உள்ள பிரச்சினை இதுதான். அவர்கள் தங்களிடமுள்ள நல்ல அம்சங்களை மட்டுமே பார்க்கவும், அதைப் பிறருக்குக் காண்பிக்கவும் அதிகக் கவனமாயிருப்பதால், தங்களின் குறைவுபட்ட பகுதிகளைக் கண்டுகொள்ளாமல் போய்விடுகிறார்கள். சில விஷயங்களில் நாம் மேம்பட்டிருப்பது மட்டுமல்ல. இன்னும் சீர் அடையாமல் இருக்கும் பிற பகுதிகைளைக் குறித்தும் கவலைப்படுகிறோமா என்பதே முக்கியம்.

மனித புகழ்ச்சிகள் நம் கண்ணை மறைத்து விடாமல், உண்மையில் புகழத்தக்க அளவிற்கு நாம் சிறந்தவர்களா, என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய உள்நிலையைச் சோதித்தறியும் தேவனுக்கு முன்பாக நாம் எப்படியிருக்கிறோம் என்பதே முக்கியம். சில நல்ல செயல்களைக் கவனித்து நமக்கு ஏற்படும் பெருமிதமும், பிறருடைய புகழ்ச்சியால் வருகின்ற அதிக மதிப்பீடும் நம்மைக் குருடாக்கி, நாம் இன்னும் அடைய வேண்டியவைகள் எவ்வளவு உள்ளது என்பதை அறியாதிருக்கச் செய்துவிடக்கூடாது.

சிந்தனைக்கு...

நாம் என்ன செய்கிறோம் என்பதை உலகம் பார்க்கிறது.
நாம் எப்படி இருக்கிறோம் என்பதை இறைவன் பார்க்கிறார்.

நவம்பர்
30
ஜீவ நீரோடை

நல்ல இருதயம் வேண்டும்

அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து...
எசேக்கியேல் 11:19

எசேக்கியேல் 11:14-25

நம்மைக் குறிப்பிட்ட விதமாகச் செயல்படத் தூண்டுவதும், குறிப்பிட்ட விதமாக நடந்து கொள்ள வைப்பதும் நம்முடைய இருதயமே. குறிப்பிட்ட விதமாகச் சிந்திக்கவும், யோசிக்கவும், உணரவும், விருப்பங்கொள்ளவும் நம்மை ஏவுவது இருதயமே. நம்முடைய எல்லா நடவடிக்கைகளையும் குறிப்பிட்ட விதமாக இருக்கச் செய்வது இருதயம் என்னப்படும் உள்ளான ஓர் இயக்கமே. எனவே, நம்முடைய இருதயம் எப்படிப்பட்ட தன்மையோடு இருக்கின்றதோ, அதற்கேற்பவே அதனுடைய இயக்கங்களும் இருக்கும். நம்முடைய இருதயம் சரியான விதமாகச் செயல்படுவதற்கு ஏற்றபடியாக இல்லாவிட்டால், நாம் எவ்வளவுதான் கற்றாலும், அறிந்தாலும், நாம் பண்பட்டவர்களாகச் செயல்பட முடியாது.

எந்த ஒரு மனிதனாயினும் சரி, அந்த மனிதனுக்குள் இருக்கும் இயற்கையான இருதயம் கேடானதும், சரியாகச் செயல்பட இயலாததுமே. எனவேதான், மனிதனிடம் இயற்கையாகவே தவறான செயல்களும், மோசமான குணங்களும், கேடான சிந்தனைகளும், பொல்லாத ஆசைகளும் தோன்றுகின்றன.

அவன் அறிவாளியாக மாறலாம். ஆன்மீகவாதியாக மாறலாம். அறநெறிகள் கற்றுணர்ந்த ஞானி ஆகலாம். ஆயினும், அவற்றால் இருதயத்தின் தன்மையில் பெரிய மாற்றங்கள் இராது. எனவேதான், சிலர் எவ்வளவுதான் போதனை கேட்டாலும், வாழும் விதமோ விரும்பத்தகாததாக உள்ளது. சிலர் எவ்வளவுதான் பிறருக்குப் போதிக்கும் திறன் கொண்டிருந்தாலும், தங்களிலோ எந்த நல்ல மாற்றத்தையும் காண்பதில்லை. உள்ளான இருதயம் சரிசெய்யப்படாத வரையி லும், வாழ்க்கை முறைகளில் பிரகாசமான மாற்றங்களைக் காண்பது கடினம்.

கிறிஸ்தவம் மனிதனுக்குத் தருகின்ற மிகப்பெரிய கொடை என்னவென்றால், அவன் தேவனால் நல்லதோர் இருதயத்தைப் பெறுகின்ற வாய்ப்பே ஆகும். தேவனிடத்திலிருந்து பெற்று அனுபவிக்கப் பல நன்மைகள் இருக்கலாம். ஆயினும், அவர் நமக்கு மிக முக்கியமாக முதலாவது தர விரும்புவது, ஒரு நல்ல இருதயமே. ஆண்டவராகிய இயேசுவால் நாம் பெறுகின்ற இந்தப் புதியதோர் இருதயம்தான், நம்முடைய வாழ்க்கையை மாற்றுகின்றது. அதனுடைய விளைவே நற்சுபாவங்கள். அதனுடைய விளைவே அமைதியும், ஆனந்தமும், பரிசுத்தமும் நிறைந்த ஓர் மேன்மையான வாழ்க்கை.

சிந்தனைக்கு...

உன் வேத அறிவை உலகம் பாராட்டும். வேதத்திற்கேற்ற வாழ்க்கையைத்தான் இறைவன் பாராட்டுகிறார்.

டிசம்பர்
1
ஜீவ நீரோடை

தேவையும் ஆசையும்

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து...
எபிரெயர் 13:5

எபிரெயர் 13:5-25

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வயிறு நிரம்ப சாப்பிட வேண்டியதில்லை. வயிற்றின் அளவிற்கு அல்ல. உடலின் தேவையின் அளவிற்குச் சாப்பிட்டால் போதும். ஆனால், அநேகர் தேவையின் அடிப்படையில் அல்ல. தங்களுக்குள் இருக்கின்ற ஆசைகளின் அடிப்படையிலேயே சாப்பிடுகின்றார்கள். எனவே, ஆரோக்கியக் குறைவுகளுக்கும், உடல் அசௌகரியங்களுக்கும் சாப்பாட்டு ஆசையே காரணமாகி விடுகிறது.

பணம் மனிதனுடைய தேவைகளைச் சந்திப்பதற்காகவே. பணம் ஒரு அளவிற்குத்தான் மனிதனுக்கு அவசியம். அளவுக்கதிகமாகச் சேர்க்க முடிந்த பணத்தால், அளவுக்கதிகமான சுகமும், சௌக்கியமும் கிடைக்கும் என்பது உண்மையல்ல. ஆனால் அநேகர், தங்களுடைய தேவைகளின் அடிப்படையில் அல்ல, தங்களுக்குள் இருக்கின்ற ஆசைகளின் அடிப்படையிலேயே பணம் சம்பாதிப்பதில் இடைவிடாமல் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். சிலர் சம்பாதிக்கும் பணத்தின் சிறுபகுதிகூட அவர்களுக்குத் தேவையாயிருக்கவில்லை. ஆனால், ஆசையோ கடைசி மூச்சிருக்கும் வரை இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றது. அநேகர் இரவும் பகலும் ஓய்வின்றி உழைத்துப் பணம் தேடுவது செலவிடுவதற்காக அல்ல. சேர்த்து வைக்கும் ஒரு ஆசையின் விளைவாகவே அவ்விதம் செயல்படுகின்றனர்.

சமீபத்தில் குறிப்பிட்ட ஒரு திருச்சபையில் நடந்த மூன்று நாட்கள் கூட்டங்களில், அந்தச் சபையின் செயலர் ஒரு நாள்கூட வரவில்லை. ஏனென்றால், அவர் பணம் சம்பாதிக்கும் அதிகமான அலுவல்களில் ஈடுபட்டு வேறெதற்கும் அவருக்கு நேரம் கிடைப்பதில்லை. கணிசமான நேரங்கள் நாம் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். அதே வேளையில் நம்முடைய நேரங்கள் யாவும் அதிலேயே கரைந்து போகிறதென்றால், அது ஓர் ஆரோக்கியமற்ற வாழ்க்கை. நேரங்கள் முழுவதும் பணம் சம்பாதிப்பதற்காக அல்ல.

வாழ்க்கையில் இன்னும் எவ்வளவோ பகுதிகள் இருக்கின்றன. தேவ உறவை சம்பாதிக்க வேண்டும், அன்பை சம்பாதிக்க வேண்டும், நற்பெயரை சம்பாதிக்க வேண்டும், நல்ல குணங்களை சம்பாதிக்க வேண்டும், நல்ல சிந்தனைகளை சம்பாதிக்க வேண்டும், நல்ல ஓய்வு நேரங்களை சம்பாதிக்க வேண்டும், இவற்றிற்கு நேரங்கள் வேண்டும். நேரங்கள் யாவும் பணத் தேடலிலேயே கரைந்து போய் விட்டால், மனித வாழ்வு என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

சிந்தனைக்கு...

பணத்தைக் கொண்டு பல பொருட்களை வாங்கலாம், ஆயினும், உனக்குத் தேவையான எல்லாவற்றையும் அதனால் வாங்க முடியாது.

டிசம்பர்
2
ஜீவ நீரோடை

பலப்படுத்தும் துன்பங்கள்

தாவீது தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்... 1 சாமுவேல். 30:6

1 சாமுவேல் 30:1-6

ஒரு குறிப்பிட்ட விசுவாசக் குடும்பத்தார் தொடர்ந்து சில சோதனையும், வேதனையுமான நிகழ்வுகளைச் சந்திக்க நேர்ந்ததைக் கவனித்த தேவ ஊழியர் ஒருவர், தொடர்ந்த சோதனைகள் அவர்களை, விசுவாசத்தை விட்டு விலகச் செய்துவிடுமோ என அச்சப்பட்டார். ஒரு நாள் அவர்களை அவர் சந்தித்தபோது, "ஐயா இந்தக் கஷ்டங்கள் யாவும் கிறிஸ்துவிடம் அதிகமாக எங்களை நெருங்கச் செய்திருக்கிறதேயன்றி, விலகிப்போகச் செய்யவில்லை" என்று அவர்கள் சாட்சி கூறக் கேட்டதும், அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

சில மரங்கள் காற்றினால் அதிகமாக அசைக்கப்பட, அசைக்கப்பட, அந்த மரங்களின் வேர்கள் அதிக வலிமையோடு பூமிக்குள் ஆழமாக ஊடுருவிச் செல்லுமாம். பேரசைவுகள் அந்த மரங்களைப் பலவீனப்படுத்தாமல், மேலும் மேலும் பலப்படுத்துகின்றது என்பதே உண்மை.கர்த்தருக்குப் பயந்து அவருடைய பாதையில் உத்தமமாக நடக்கின்றவர்களின் நிலைமையும் அதுவே. துன்பங் களையும், பாடுகளையும் மீண்டும், மீண்டும் அனுபவிக்க நேரிடும் போது, அவர்களின் அஸ்திபாரம் அதிக வலிமையாகின்றதேயன்றி, வலிமை குன்றிப் போகவில்லை. ஒவ்வொரு போராட்டமும், ஒவ்வொரு துன்பமும் அவர்களின் வேர் கிறிஸ்துவுக்குள் ஆழமாக ஊடுருவி, பலப்பட வழிவகுக்கின்றதேயன்றி, பல வீனப்படுத்தவில்லை.

தாவீது துன்பங்களைத் தொடர்ந்து சந்திக்க நேர்ந்தவன். அவைகள் அவனைப் பலவீனப்படுத்தி விடுகிறதைப் போல வேகமாக வந்த போதிலும், ஒவ் வொரு துன்பமும் தேவனோடு அவனை அதிகமாகப் பிணைக்கவும், இணைக்கவுமே செய்தது. ஒரு கால கட்டத்தில் அவனுக்குத் துணையாக நின்ற அனைவரும் அவனை விட்டு விலகிப் போகும் சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தாவீது ஆடிப் போய் விழுந்திருக்க வேண்டும். ஆனால், நடந்ததோ வித்தியாசமாயிருந்தது.

அந்தத் துயரச் சூழ்நிலை தாவீதை இன்னும் ஒருபடி ஆழமாக கர்த்தருக்குள் திடப்படச் செய்தது. ஆம், உண்மையான கர்த்தருடைய பிள்ளைகள் சந்திக்க நேரிடுகின்ற தொடர் துன்பங்கள் பிறருடைய பார்வையில் அவர்களைப் பலவீனப் படுத்தி விடுகிறவை போலத் தோன்றினாலும், தேவனுடைய பார்வையில் அவை அவர்களுக்கு மேலும் வலிமைசேர்க்கின்றவையே. ஏனென்றால், ஒவ்வொரு துன்பமும், நெருக்கமும் தேவனை விசுவாசிக்கின்றவர்களை கர்த்தருக்குள் மேலும் மேலும் உறுதிப்படவும், பலப்படவுமே வழிவகுக்கும்.

சிந்தனைக்கு...

ஒருவன் எத்தனை முறை விழுந்தான் என்பதை அல்ல
அவன் எத்தனை முறை எழுந்தான் என்பதைப் பார்.

டிசம்பர்
3
ஜீவ நீரோடை

ஏன் உணர்வில்லை?

உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்... சங்கீதம் 95:8

சங்கீதம் 95:1-11

சற்று ஜாடைமாடையாக ஏதாவது ஒன்றைச் செய்தால்கூட, சிலர் உடனேயே அதைப் புரிந்து கொள்வார்கள். மிக மிக மறைமுகமாக ஒன்றைச் சொன்னால் கூட, சிலர் அது தன்னைக் குறிவைத்துச் சொன்னதுதான் என்று எளிதாக அறிந்து கொள்கின்றார்கள். சிலர் சின்னச் சின்ன வார்த்தைகளைக்கூட அதிக நுண்ணுணர்வுத் தன்மையோடு சிந்தித்து தங்களுக்குள் காயப்பட்டதாகவும், தாங்கள் பாதிக்கப்பட்டதாகவும் உணர்கின்றார்கள்.

ஆனால் சிலர், தங்களின் பாவமான நிலைமையை அறிந்து கொள்ளவும், தங்களிடத்தில் தேவனுக்குப் பிரியமில்லாத ஓர் வாழ்க்கை முறையே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும், தேவ வார்த்தைகளின் மூலமாக எவ்வளவோ வாய்ப்புப் பெற்றாலும் சற்றும் உணர்வதில்லை. சிலர் நான் பிரசங்கித்து முடித்ததும் ஓடி வந்து இது ரொம்ப நல்ல செய்தி, இன்றைய நாட்களுக்கு இது மிகவும் அவசியமான செய்தி என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால், அது தங்களுக்குத் தேவையானது என்பதை உணருவதில்லை. ஒரு முறை ஒரு தேவ செய்தியாளர் பிரசங்கித்து முடித்தார். அதனைக் கேட்ட ஒருவர் ஓடி வந்தார். இது மிக மிக ஸ்டிராங்கான சூப்பர் ஹிட் செய்தி என்றார். அது சரி இது உங்களுக்கு என்ன செய்தது? என்று கேட்ட போது, அது எனக்கு ஒன்றும் செய்யவில்லை என்று மிகச் சாதாரணமாகப் பதில் சொன்னார்.

யாராவது ஒருவிதமாகப் பார்த்து விட்டால்கூட, அதனால் தங்களுக்குள் பெரிய தாக்குதலை உணரும் பலர்கூட, தேவனுடைய வார்த்தைகள் கற்பாறைகளை உடைக்கும் சம்மட்டி போல வரும்போதும், எதையும் உணராமல் இருப்பார்கள். தேவன் எத்தனையோ நேரங்களில், எத்தனையோ விதங்களில் நீ ஒரு பாவி... நீ இன்னும் மனந்திரும்பவில்லை... நீ எனக்கு முன்பாகச் சரியாக இல்லை.. நீ இன்னும் ஏன் மனந்திரும்பத் தாமதிக்கின்றாய். நீ இன்னும் தேவன் இல்லாத இருளில் தான் வாழ்கின்றாய் என்றெல்லாம் திரும்பத் திரும்பச் சொன்னாலும், எதையும் அவ்விதம் உணர்வதில்லை.

காரணம் என்ன? கடினப்பட்ட இருதயமா? உணர்வுகளை இழந்த நிலையையா? கன நித்திரையின் ஆவியா? தேவ சமுகத்தில் ஆவிக்குரிய உணர்வுகளைத் தாரும் என்று ஜெபிக்கலாமே... உண்மைகள் உரிய விதமாகச் சொல்லப்படும் போது அதனை சரி என்று ஒத்துக் கொள்வதோடு, நம்மை அதனுடைய அடிப்படையில் சரி செய்யக் கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

மனிதனுக்கு இன்னொருவரால் வரும் தீங்குகளைவிட தன்னால் தனக்கு நேரிடும் தீங்குகள்தான் அதிகம்.

டிசம்பர்
4
ஜீவ நீரோடை

தவறான மனநிலை

சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால்...
யோவான். 8:44

யோவான். 8:34-50

சிலர் நம்மை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? சிலரால் நம்மை ஒருபோதும் ஏன் நேசிக்க இயலவில்லை? சிலரால் ஏன் ஒருபோதும் நாம் செய்யும் நல்ல விஷயங்களை நல்லதாக ஒத்துக்கொண்டு பாராட்ட இயலவில்லை? நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டதாலா? நம்முடைய செயல்பாடுகளைக் குறித்த தப்பித மான அபிப்பிராயமா? இல்லை, இல்லை, இல்லவே இல்லை. அவர்கள் நம்மைத் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு நம்முடைய செயல்கள் தப்பித மாகத் தோன்றவும் இல்லை. பின்னர் ஏன் அவர்கள் நம்மையும் நம்முடைய செயல் பாடுகளையும் ஏற்காமல் இருக்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? பதில் சொல்கிறேன்.

அவர்கள் தவறாக இருக்கிறார்கள். அவர்கள் தப்பிதமாகச் சிந்திக்கிறார்கள். அவர்களுக்கு உண்மை தெரியாத பிரச்சினை அல்ல. அவர்கள் உண்மையில் லாதவர்கள். அதுவே பிரச்சினை. அவர்களுக்கு நம்முடைய நற்காரியங்கள் உண்மையில் தவறாகத் தோன்றவில்லை. அவர்களுக்கு நல்லதை விரும்புகின்ற, ஏற்கின்ற, மதிக்கின்ற, பாராட்டுகின்ற ஒரு உண்மையான மனநிலையோ, மனோபாவமோ இல்லை. எனவே நம்மையும், நம்முடைய நற்காரியங்களையும் அசட்டை செய்கின்றார்கள்.

இவர்களிடம் போய் எவ்வளவுதான் நம்முடைய உண்மையையும், நேர்மை யையும் நிரூபித்துக் காட்டினாலும் பயனில்லை. அவர்கள் அவைகளை அறியாததி னால் அல்ல. அவைகளை விரும்பாததினாலேயே நம்மை வித்தியாசமான கண்களோடும், வித்தியாசமான உணர்வுகளோடும் பார்க்கின்றார்கள். அன்றைய மதத்தலைவர்கள் இயேசுவை ஏற்கவில்லை. அவருடைய நற்செயல்களை அங்கீ கரிக்கவும் இல்லை. சத்தியம் விளங்காததால் அல்ல. சத்தியத்தை அவர்கள் விரும் பாததே காரணம். மறுக்க முடியாத அளவிற்கு இயேசு அற்புதமான காரியங்களைச் செய்திருந்தும், அவர்கள் அவரை அசட்டை செய்யக் குறியாயிருந்தார்களேயன்றி, அங்கீகரிக்க மனதைச் சாய்க்கவில்லை. ஏனென்றால், அவர்களிடம் சத்தியம் இல்லை. சத்தியத்தை ஏற்க அவர்களால் இயலவில்லை.

தவறாகப் புரிந்து கொண்டவர்களும், தப்பித அபிப்பிராயங் கொண்டவர் களும், ஒரு நாள் தங்கள் தவறைப் புரிந்து கொள்வார்கள். ஆனால், தவறான மனநிலையோடு இருக்கிறவர்கள் எப்போதும் சரியானதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, அவர்களுக்கு நம்மை நிரூபிப்பதற்கு எடுக்கும் சிரமங்கள் தேவையற்றவையே.

சிந்தனைக்கு...

இறைவனின் கண்களுக்கு முன்பாக சரியாகத் தோன்ற விரும்புகிறவன், மனிதர்களின் கண்கள் தன்னைத் தவறாகப் பார்க்கிறதே என்று கவலைப்படமாட்டான்.

டிசம்பர்
5
ஜீவ நீரோடை

அவரோடு நிற்போம்

நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்...
2 நாளாகமம் 15:2

2 நாளாகமம் 15:1-19

என்னுடைய முக்கியமான கரிசனை, தேவன் என் பக்கம் நிற்கிறாரா என்பது அல்ல. நான் தேவனுடைய பக்கத்திலே நிற்கின்றேனா என்பதே என்னுடைய மிக முக்கிய கரிசனை. ஏனென்றால், தேவன் எப்போதுமே சரியான பக்கத்தில் நிற்கின்றார். இது தேவ பக்தியுடைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் சொன்ன வார்த்தைகள்.

தேவன் என் பக்கத்தில் நிற்கின்றாரா என்ற விழிப்புணர்வு சிந்தனை அவசியமே. ஆனால், சில வேளைகளில் நாம் நிற்கும் இடம் தேவன் நம்மோடு நமக்கு ஆதரவாக நிற்க இயலாத இடமாக இருந்து விடுகிறது. சில நேரங்களில் நம்முடைய தேவ பக்தி நம்முடைய பக்கத்தில் தேவன் நிற்கிறாரா என்று ஆழமாகக் கேட்க வைக்கின்றது. ஆனால் நாம் நிற்கும் இடம் தேவன் நிற்கத்தக்க இடமா என்று யோசிப்பதில்லை. நமக்கென்று சிலவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றோம். அங்கே தேவன் நம்மோடு நமக்காக நிற்க வேண்டும் என்று அவரைத் தேடுகின்றோம். ஆனால், தேவன் எங்கே நிற்க நம்மை அழைக்கின்றாரோ அங்கே நிற்பதற்கு ஆயத்த மானால்தான். அவர் நமக்காக நம்மோடு நிற்பதைக் காண முடியும்.

லோத்து தேவ பக்தனாயிருந்தும், தான் தெரிந்து கொண்ட இடம் தேவன் தன்னோடு நிற்கத்தக்க சரியான இடமா என்று யோசிக்கவில்லை. தேவன் நிற்க விரும்பாத சோதோமில் சென்று நின்ற அவன், தேவ பக்தனாயிருந்தும் தேவ உறவை அங்கு காண இயலவில்லை.

முதலாவது, நாம் தேவன் நியமித்த சரியான வாழ்க்கை ஒழுங்கு முறையில் நிற்கின்றோமா என்று பார்க்க வேண்டும். எலியா தேவன் நியமித்த பகுதியில் நிற்க உறுதியாயிருந்தான். எனவே, எலியா நிற்க நேர்ந்த எல்லா எதிர்மாறான வாழ்க்கைச் சூழ்நிலையிலும், தேவன் அவனுக்கு ஆதரவாக வந்து நின்றார்.

பிரதான ஆசாரியனாகிய ஏலியின் காலத்தில் இஸ்ரவேலர்கள் பெலிஸ் தியரை எதிர்த்து நிற்க நேர்ந்தது. அந்த யுத்த சூழ்நிலையில் தேவனைத் தங்களுக்கு ஆதரவாக வந்து நிற்க அவர்கள் அழைத்தனர். அதற்கு அடையாளமாக உடன் படிக்கைப் பெட்டியை யுத்த களத்திற்குக் கொண்டு வந்தனர். ஆனால், அவர்களோடு தேவன் நிற்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய சரியான வழிகளில் நிற்கவில்லை.

சிந்தனைக்கு...

தேவ சத்தத்தை இதயத்தில் கேட்டுப் பழகாதவர்களால், அவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளுதல் இயலாது.

டிசம்பர்
6
ஜீவ நீரோடை

சிறிய கல்

ஆவியினாலே ஜெபம் பண்ணி...
எபேசியர் 6:18

எபேசியர் 6:1-18

மாபெரும் பலவானாகிய ராட்சத கோலியாத்தைக் கண்டு ராஜாவே அஞ்சி நின்ற வேளையில், சாதாரண இளைஞனான தாவீது சாதாரணமான கவண் கல்லை வீசி அவனை வீழ்த்தினான். வாளாலும், ஈட்டியாலும் சாதிக்க இயலாததை, சிறு கல்லைக் கொண்டு தாவீது சாதித்தான் என்பது உண்மை. அதே வேளையில், அந்த சிறுகல்லைச் சரியாகக் குறி தவறாமல் உபயோகித்து எதிராளியை வீழ்த்து கின்ற ஒரு அற்புதமான திறமையை தாவீது வளர்த்து வைத்திருந்தான். ஏதோ ஒரு கல்லை எடுத்து வீசின உடனே கோலியாத் விழுந்துவிட்டான் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. ஒரு சிறு கல் ஆயினும், தாவீது அதனைத் திறமையாக உபயோகிக்கும் பயிற்சியைக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையிலே வருகின்ற பல பிரச்சினைகளைச் சரியான கோணத்திலே சந்திப்பதற்கு, கர்த்தர் நமக்கு காண்பிக்கும் ஒரு சிறு கல் ஜெபமே. இந்தச் சிறிய கூழாங்கல்லைக் கொண்டு, தீர்வு காண முடியாமல் தொடரும் பல பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியும். ஆனால், இந்த ஜெபமாகிய சிறு கூழாங்கல்லை சரியாகக் கையாளுகின்ற ஒரு ஆவிக்குரிய பயிற்சி நமக்கு அவசியம்.

சிலரிடத்தில் ஜெபமாகிய கூழாங்கற்கள் ஏராளம் உள்ளது. ஆனால், அதனை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்று தெரியாமல் வீசிக்கொண்டிருப் பதால், அவைகளால் சோதனைகளாகிய கோலியாத்துகள் வீழ்வதற்குப் பதி லாக, இன்னும் அவர்களை நெருங்கிவரும் நிலை உள்ளது. ஜெபம் என்பது தேவ னோடு பேசுகின்ற ஒரு அனுபவமாகவும், தேவன் நாம் பேசுவதைக் கேட்கிறார் என்பதை நம்ப முடிகின்ற ஒரு அனுபவமாகவும், தேவ ஐக்கியத்தை ஜெப வேளை களில் சரியாக உணர்ந்து உற்சாகப்பட முடிந்த அனுபவமாகவும் மாறவேண்டும். ஜெபங்கள் தேவனோடு நமக்கிருக்கும் உண்மையான தொடர்பையும், உறவையும் பிரதிபலிக்கின்ற கருவிகளாக மாறும்போது, அவைகள் எந்தக் கோலியாத்துக் களையும் விழவைத்துவிடும் என்பது உண்மை.

முதலாவது, ஜெபத்தை உபயோகிக்கிற நமக்குச் சரியான ஒரு மனந் திரும்புதலின் அனுபவம் வேண்டும். **இரண்டாவது,** தேவ ஐக்கியத்தை உணர முடிகின்ற அளவிற்கு ஒரு ஸ்திரமான, விழிப்புணர்வுமிக்க பரிசுத்த வாழ்க்கை வேண்டும். **மூன்றாவதாக,** ஜெப விஷயத்தில் விடாப்பிடித் தன்மையும் வேண்டும். இவ்விதமாக நாம் நம்மைப் பயிற்றுவித்துக் கொண்டால் பிரச்சினைகளாகிய கோலி யாத்துக்களை ஜெபத்தால் சரியாகக் குறி தவறாமல் தாக்கித் தள்ளிவிட முடியும்.

சிந்தனைக்கு...

இறை நம்பிக்கை என்பது இறைவனின் பாதையில் நடப்பதால் இதயத்தில் உருவாகும் இறையாற்றலே.

டிசம்பர்
7
ஜீவ நீரோடை

உயர்ந்து நிற்போம்

கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை...
2 கொரிந்தியர் 4:9

2 நாளாகமம். 20:1-17

ஜப்பான் நாடு இன்று உலக நாடுகளின் நடுவில் எந்த முன்னேற்றமுமின்றி, பொருளாதார வளங்குன்றிய ஒரு நாடாக இருப்பதாகக் கற்பனை செய்வோம். அப்படியிருந்திருந்தால் அதற்கு நியாயமான பல காரணங்களைக் காட்ட முடியும். உலகத்திலேயே முதன் முறையாக அணுகுண்டு தாக்குதலினால் எழும்ப முடியாத அளவிற்கு விழ வைக்கப்பட்ட நாடு. அடிக்கடி நிலநடுக்கங்களினால் பாதிக்கப்படும் நாடு. அமெரிக்காவைப் போலவோ, ஆஸ்திரேலியாவைப் போலவோ அது இயற்கை வளங்கள் மிகுந்த நாடல்ல. நிலப்பரப்பில் ரஷியா, இந்தியா போல பெரிய நாடல்ல. ஆனால், ஜப்பான் என்ற குட்டிநாடு இன்று உலக அளவில் எத்தனை பாதகமான சூழ்நிலைகளின் நடுவிலும், தலை நிமிர்ந்து நிற்கிறது.

காரணம் என்ன? தாங்கள் எந்த நிலைமையிலிருக்கின்றோம் என்பதையே பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தாங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதிலேயே அவர்களின் கவனம் இருந்தது. எல்லா எதிர் சூழ்நிலைகளையும் கடந்து நாம் எழுந்து நிமிர்ந்து நின்று காட்ட வேண்டும் என்ற தரிசனம்தான், உலக நாடுகளின் நடுவில் ஜப்பானை அண்ணாந்து பார்க்க வைத்தது.

எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் என்றான் அப்போஸ்தலனாகிய பவுல் (பிலி-4:11). அப்போஸ்தலனாகிய பவுலை எந்தச் சாதனையும் படைக்காமல், யோபுவைப் போல துக்கத்தோடு புலம்புகின்ற ஒருவனாக வேதத்தில் பார்த்திருந்தால், அது நமக்கு ஆச்சரியம் தராது. ஏனென்றால் பவுலின் வாழ்க்கையில் அவன் சந்தித்த உபத்திரவங்கள் அவ்வளவு மிகுதியானவை. ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் எதிர்மாறான நிலைமைகளைச் சார்ந்து சிந்திக்காமல், தேவனை அறிந்த தான் எப்படி இருக்க வேண்டும் என்ற தரிசனத்திலேயே குறியாயிருந்தான்.

உண்மையில், ஒழுக்கத்தில், சிறந்த பண்புகளில், மகிழ்ச்சியான மன நிலையில், உத்தமமான ஒரு ஜீவியத்தில் உயர்ந்து நின்று காட்ட வேண்டும் என்ற கொள்கை, பவுலை சிகரங்களுக்குச் கொண்டு சென்றது. உலகத்தில் தனக்கு எவை எவை எதிராக இருக்கின்றன என்பதையல்ல. கிறிஸ்துவுக்குள் தனக்கு எவை எவை ஆதரவாகவும், ஆற்றல் தருகிறவைகளுமாக உள்ளன என்பதையே அவன் பார்த்தான். எனவே, பவுல் மகிழ்ச்சிமிக்க மனிதனாகவும், மதிக்கத்தக்க சாட்சி மிக்க மனிதனாகவும் உயர்ந்து நின்று காண்பித்தான். ஆம், சூழ்நிலையைச் சார்ந்து அல்ல. தேவனைச் சார்ந்து யோசிப்போம்.

சிந்தனைக்கு...

தரைமட்டும் உன்னைத் தாழ்த்திக்கொள்ள முடிந்தால்
வானளாவ உன்னை உயர்த்த தேவனால் முடியும்.

டிசம்பர்
8
ஜீவ
நீரோடை

மூடி மறைத்தல்

பழைய மனுஷனையும் அவன் செய்கை களையும் களைந்து போட்டு... கொலோசெயர் 3:9

கொலோசெயர் 3:1-17

அநேகர் தங்களுடைய இயற்கையான குணங்களும், தன்மைகளும், செயல்களும் நல்லதோ, கெட்டதோ அவைகளை மறைக்காமல், இருக்கின்றபடியே வாழ்கின்றார்கள். எனவே, அவர்களை அடையாளம் கண்டுகொள்வது எளிதா யிருக்கின்றது. ஏனென்றால், அவர்கள் வெளியரங்கமாயிருக்கின்றார்கள். அதே வேளையில், அநேகர் தங்களுடைய தவறான குணங்கள், இயல்புகள். ஆகாத செயல்கள் ஆகியவை வெளியரங்கமாக யாருக்கும் தெரிந்து விடாதபடி, தங்களைப் பக்தியான வாழ்க்கை என்ற போர்வையால் மறைத்துக் கொள்கின்றார்கள்.

ஏராளமான கிறிஸ்தவ பக்தியாளர்கள், தாங்கள் பரிசுத்தமாக வாழ்கின்றவர்கள் என்று தெரிய வேண்டுமென்ற ஆசையினால் தங்களிடம் உள்ள அன்பின் குறைவு, தாழ்மையின்மை, சாந்தமின்மை, பணஆசை, பெருமை, உண்மையின்மை, கபடு போன்ற தாழ்வான குணங்களை பிறர் அறிந்துவிடாமல் மறைத்துவிடப் பெரிதும் முயற்சிக்கின்றார்கள். ஆனால், அவர்களால் சில வேளைகளில் அவைகளை மறைத்து நல்லவர்களாகத் தோன்ற முடிகிறதேயன்றி, அவைகளை வெளியேத் தெரியாமல் வாழ்வதில் வெற்றியடைய முடியவில்லை. ஆனால், அதற்குள் அவர் களின் நிலைவரமற்ற நிலையினால் அநேகர் இடறி விழுகின்றனர்.

பரிசுத்த வாழ்க்கை என்பது ஆகாத குணங்களை அழிப்பதும் அகற்றுவதும் தானேயன்றி, அவைகளை இல்லாதது போல காட்டி மூடி மறைப்பதல்ல. சிலர் ஒரு குறிப்பிட்ட காலம் மிக நல்ல கிறிஸ்தவர்கள் போலத் தோன்றுவார்கள். ஆனால், வெறொரு கால கட்டத்தில் மிக மோசமாக வாழ்வார்கள். சிலர் சில குறிப்பிட்ட இடங்களில் அல்லது சூழ்நிலைகளில் தவறேதும் இல்லாத தூயர்களாகத் தென் படுவார்கள். ஆனால், வேறொரு சூழ்நிலையில் முற்றிலும் முரண்பாடாக விளங்கு வார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களின் உண்மைநிலையை அதிக நேரம் மூடி மறைத்து வைக்க இயலவில்லை.

பலர், மனந்திரும்புதல் என்ற அனுபவத்தைச் சரியாக வந்தடையாமல், ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை விரும்புவார்கள். எனவே, அவர்களின் உள்நிலை தேவ ஆவியினால் மாற்றம் பெறாத நிலையில், புதிதாகப் பல ஆவிக்குரிய நற் குணங்களையும், நற்செயல்களையும் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால், பழைய பாவ உள்நிலை அப்படியே இருப்பதால், அந்த பாவ வலிமை புதிதாக ஏற் படுத்திக்கொள்ளும் ஆவிக்குரிய நற்குணங்களையெல்லாம் அவ்வப்போது மேற்கொண்டு விடுகிறது.

சிந்தனைக்கு...

நல்லவன் என்ற பெயரை எளிதாகப் பெறலாம்,
நேர்மையானவன் என்ற நிலையில் நிலைப்பதுதான் கடினம்.

டிசம்பர்
9
ஜீவ நீரோடை

தேவ மகிமையைத் தேடாமல்

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை...
லூக்கா 11:3

லூக்கா 11:1-13

தினமும் நாம் தேவனுடைய மகிமையையும், அவருடைய அரசாட்சியையும், அவருடைய சித்தத்தையும் நம்முடைய வாழ்க்கையில் தேடும்போது, அந்தந்த நாளுக்குத் தேவையான ஆகாரமாகிய அனுதினத் தேவைகளையும், கேட்டுப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறோம். இதுதான் பரமண்டல ஜெபம் நமக்குக் கற்றுத்தரும் முக்கியமான பாடம். ஆனால், வாழ்வில் தேவன் கனமடைய வேண்டும். அவருடைய ஆளுகை நம்முடைய வாழ்க்கை முறையில் விளங்க வேண்டும். அவருடைய சித்தம் நம்வாழ்க்கையில் செயல்படவேண்டும். இவைதான், நாம் தினமும் முக்கியமாகத் தேட வேண்டிய விஷயங்கள். இந்த ஆவிக்குரிய உணர்வு அநேகரிடம் இல்லை. எனவே, அனுதின தேவைகளைக் குறிக்கும் அன்றன்றுள்ள அப்பத்தைக் குறித்த வேண்டுதல் கேட்கப்படாமல் போகிறது.

என் மகிமையைத் தேட வேண்டிய உணர்வைப் பெறாத உனக்கு... என் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளாத உனக்கு... என் சித்தத்தைச் செய்யும் சிரத்தையில்லாத உனக்கு... நான் ஏன் அப்பம் தந்து ஆதரிக்க வேண்டும்? என்று தேவன் கேட்டு விடுவாரோ என்ற அச்ச உணர்வு நமக்கிருந்தால் அது நமக்கு நல்லது. மனதைத் தொடுகிற வரிகளை அடிக்கோடிடும் பழக்கமுடைய ஒருவருடைய வேதாகமத்தில், அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்குத் தாரும் என்ற வரி மட்டும் அடிக்கோடிடப்பட்டிருந்தது. பரமண்டல ஜெபத்தின் வேறெந்த வரியும் அடிக்கோடிடப்பட வேண்டிய தகுதியைப் பெற்றிருப்பதை அவர் காணவில்லை.

நாம் ஜெபிக்க ஆரம்பித்தால் தேவைகளைத்தான் பட்டியலிடுகிறோம். நாம் உபவாசிக்கச் சென்றால் தேவைகளுக்காகவே உபவாசிக்கிறோம். நாம் விசுவாசிக்க விரும்பினால், நாம் எதிர்பார்க்கும் நன்மைகள் கிடைப்பது தொடர்பாகவே விசுவாசிக்கின்றோம். நாம் சோர்ந்து போய்ப் புலம்ப ஆரம்பித்தால், நாம் கேட்டபடி நன்மைகளை தேவன் தராமல் போனதற்காகவே சோர்ந்து போய்ப் புலம்புகிறோம். ஏனென்றால் "அன்றன்றுள்ள ஆகாரம்" என்பது மட்டுமே நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அடிக்கோடிடப்பட்டு முக்கியத்துவம் பெறும் விஷயமாயிருக்கின்றது.

நம்முடைய வாழ்க்கையில் தேவன் மகிமைப்பட வேண்டியதும், அவருடைய ஆளுகை செயல்பட வேண்டியதும், அவருடைய சித்தம் நிறைவேற வேண்டியதும் தான் முதன்மையான தேவைகள் என உணரும் வெளிப்பாடு வேண்டும். அந்த வெளிப்பாடு இல்லாத வரைக்கும், நம்முடைய ஜெபங்களும், உபவாசங்களும், தேவ நன்மைகளை நமக்குக் கொண்டுவரச் சக்தியற்றவையே.

சிந்தனைக்கு...

நல்ல கருத்துக்களைக் கேட்டு கைத்தட்டிக் கொண்டிராதே,
அவைகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்.

டிசம்பர்

10

ஜீவ நீரோடை

அன்பும், மரியாதையும்

சிறு பிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள்... யோபு 19:18

யோபு 19:1-29

யோபு, செல்வ வளங்களோடு சீரும் சிறப்புமாக இருந்தபோது, அவனை நேசித்தோர் ஏராளம். அவனை மதிக்கவும், மரியாதை செய்து போற்றவும் அநகேர் இருந்தனர். அவன் எங்கு போனாலும் அவனுக்குக் கனத்தையும், மகிமையையும் கொடுக்க ஆட்கள் முந்திக் கொண்டனர். ஆனால், யோபுவின் வாழ்க்கையை உபத்திரவம் பற்றிக்கொண்ட போது, சொந்த மனைவியின் அன்பு கூட கிடைக்காமல் அவன் அங்கலாய்த்தான். சாதாரணமானவர்கள் கூட அவனை மதிக்காமல், பரிகாசம் செய்து வெறுக்கும் நிலை ஏற்பட்டது. ஆம், மனித அன்பும், மரியாதையும், உபசரிப்பும், மாயையானவை என்றும், ஒரு நல்ல சூழ்நிலை ஒருவரோடு இருக்கும் வரைதான் அவை செயல்படும் என்றும் அவன் புரிந்து கொண்டிருப்பான்.

நாம் நன்றாகயிருக்கும் போது பிறர் காட்டும் அன்பையும், தருகின்ற மரியாதையையும் உண்மையாகவே நமக்கு கிடைப்பவை என்றே நாம் நம்பி விடுகிறோம். ஆனால், சில கஷ்டமான சூழ்நிலைகள் வரும்போதுதான், மனித அன்பு சில சூழ்நிலைகளைச் சார்ந்தவை என்பதை உணர முடிகின்றது. இந்த விஷயத்தில் சில கஷ்டங்களின் பாதை, நமக்கு சில முக்கியமான பாடங்களை கற்றுத் தருகின்றது.

மனித அன்பின் பலவீனநிலை, உலகம் தரும் மரியாதையின் பின்னால் உள்ள நிபந்தனைகள், மனிதன் நம்மையல்ல, நம்மை சூழ்ந்துள்ள ஒரு நல்ல நிலமையைத்தான் மதிக்கின்றான், என்பது போன்ற உண்மைகள் உபத்திரவங்களின் வெளிச்சத்தில் வெளிப்படுகின்றன. இதன் மூலம் மனிதர்களின் அன்பின் மாயத்தைப் புரியாமலும், மனிதர்கள் தரும் மரியாதை உணர்வின் நிரந்தரமற்ற நிலைமையினை உணராமலும், மயங்கிப் போகின்ற நிலையிலிருந்து விடுபட்டு, சரியான புரிந்துகொள்ளுதலோடு வாழ வழி ஏற்படுகிறது.

மனிதன் இயற்கையாகவே அன்பைத் தேடி இன்னொரு மனிதனிடம்தான் செல்வான். ஆனால், மனிதன் உண்மையான அன்போடும், ஸ்திர நிலையோடும் தொடர்ந்து காணப்படுவது கடினமான விஷயமே. நாம் எதிர்பார்க்கின்ற விதமாக பிறர் நம்மை நேசியாமல் போனது அவர்களின் இயலாமையினாலேயே. அவர்களின் நேசிக்கும் சக்தி குறைவானதும், மாறுந்தன்மை உடையதும் ஆகும். அன்பில் நிறைவானவரும், நிலையானவரும் தேவன் மட்டுமே. அவர் மாறாத மனநிலை உடையவர். எனவே நாம் அன்பிற்காகவும், ஆதரவிற்காகவும் எப்போதும் அவரையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

நெருங்கி நிற்கும் துன்பங்கள் மனிதரைத் தூரமாக்கலாம். ஆனால், தூரத்தில் நிற்கும் தேவனிடம் நாம் நெருங்கிச் செல்லத் துணை புரியும்.

டிசம்பர்
11
ஜீவ நீரோடை

ஸ்தோத்திரம்

என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால்... சங்கீதம் 116:7

சங்கீதம் 116:1-19

ஒரு பக்தனின் நன்றி அறிக்கை: சில நேரங்களில் எனக்கு ஏற்பட்ட எதிர் மாறான சூழ்நிலைகளை மாற்றும் என்று உம்மை நோக்கிக் கெஞ்சினதுண்டு. ஆனாலும் சூழ்நிலைகள் மாறாமலே இருந்தன. ஆனால், அந்த சூழ்நிலைகளால் நிலைகுலையாமல் அவற்றைச் சந்திக்கும் மனப்பக்குவத்தையும், ஆற்றலையும் தந்தீரே. அதற்காக உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்.

என்னை வெறுப்பவர்களும், விரோதிப்பவர்களும் எனக்குத் தீங்காக யோசித்து, தீவினையோடு செயல்பட்டபோது, அவர்களை நீர் தடை செய்வீர் என நான் எதிர் பார்த்ததுண்டு. ஆனால் நீரோ, அவர்களின் அநீதிகளையும், அக்கிரம சிந்தை சார்ந்த செயல்களைப் பொறுத்துக் கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் எனக்கு விசேஷ கிருபை தந்தீர். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

வீடு, நிலம், ஆஸ்தி, அந்தஸ்து என அநேக நன்மைகளை நீர் பலருக்கு அளித்திருப்பதை நான் அறிவேன். ஆனால், நீர் அவைகளை எனக்குத் தர வில்லை. ஆனாலும், அவைகள் எனக்கு இல்லையே என்ற குறையுணர்வு ஒரு போதும் எனக்குள் எழாதபடி, ஒரு நல்ல இருதயத்தைத் தந்தீரே, அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

எனக்குப் பக்கபலமாக இருந்த சிலர், என்னைப் பாதி வழியில் தனியாக விட்டுச் சென்ற வேளையில், நான் மிகுதியாய் கலங்கினேன். ஆனாலும், அவர்கள் பிரிந்த வேளை என்னோடு நீர் அதிகமாக இணைந்து, மீதி வழியெல்லாம் கூட வந்தீரே, அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

எனக்கு மன வருத்தத்தைத் தந்த சிலர் மாற வேண்டும், மாற வேண்டும் என நான் ஜெபித்தேன். ஆனால், நீரோ அவர்களை மாற்றாமல் என்னை மாற்றி, எல்லா வருத்தங்களையும் சகிக்கும் ஆற்றல் அளித்தீர். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

சிலர் வெறுத்தபோதுதான் உம் அன்பு எனக்கு இனித்தது. சிலர் கைவிட்ட போதுதான், நீர் ஒருவரே கைவிடாதவர் என்பதை உணர முடிந்தது. தோல்விகள் வந்தபோது, உமக்குள் எனக்கு ஓர் வெற்றி இருப்பதைக் கண்டேன். கசப்புகள் வந்த போது, உமக்குள் எனக்கு ஒரு இனிமை இருப்பதை அறிந்தேன்.

அலைகள் எழும்பியபோதும், காற்றுகள் பேரோசை ஏற்படுத்தியபோதும் நான் கலங்கியது உண்மை. ஆனால் ,என்னோடு நீர் இருக்கையில் எத்தனையாய் எனக்கு நீர் அமைதி தருகிறீர் என்பதை அங்கேதான் உணர்ந்தேன்.

சிந்தனைக்கு...

தேவனின் தொடுதலை உணர நீ காட்டும் ஆர்வம்தான்,
உன்னைத் தொட முடியாமல் சாத்தானை ஓட வைக்கும்.

டிசம்பர்
12
ஜீவ நீரோடை

எல்லாம் பாவமே

களவுகளும், பொருளாசைகளும்...
மாற்கு 7:22

மாற்கு 7:1-23

ஒருவன் ஒரு சிறு தொகையைத் திருடிவிட்டால், இன்னொருவனை அவனைக் கட்டி வைத்து அடிக்கவோ, ஆறுமாதம் சிறையில் தள்ளவோ மக்கள் ஆவலாயிருக்கின்றார்கள். அவனைக் காலமெல்லாம் அருவருப்பாகவே பார்ப்பார்கள். ஆனால் நாட்டை ஆளுகின்ற பல அரசியல்வாதிகள் பலகோடிகளை மக்களிடமிருந்து கொள்ளையடிக்கிறார்கள். அவர்கள் மேல் எத்தனைதான் ஊழல் வழக்குகள் இருந்தாலும், மக்கள் அவர்களை அருவருப்பாகப் பார்க்காமல் V.I.P. என்ற உணர்வுடனே பார்க்கவும் கௌரவிக்கவும் செய்கின்றார்கள்.

தவறுகளுக்குப் பல வடிவங்கள் உண்டு. சில அருவருப்பானவை. சில கவர்ச்சியானவை. ஆனாலும், எல்லாம் பாவமான இதயம் என்ற ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. இவற்றில் சிலவற்றைச் சாதாரணமாகவும், சிலவற்றைச் சீரியஸாகவும் எடுத்துக்கொள்வது நம்மை நாமே ஏமாற்றும் செயலாகும்.

கிறிஸ்தவர் எனப்படும் ஒருவரை சிகரெட் பிடிக்கிறவராகவோ, சினிமா பார்க்கிறவராகவோ, மது அருந்துகிறவராகவோ பார்க்க நேர்ந்தால் அதிர்ச்சியடைந்து "சே... இவரும் ஒரு கிறிஸ்தவரா" என்று அருவருக்கின்றோம். ஆனால்,ஒரு கிறிஸ்தவரை அல்லது ஊழியரைப் பண ஆசை பிடித்தவராகவும், ஆடம்பரவாதியாகவும், உள்ளொன்றும் புறம்பொன்றுமாகப் பேசுகின்றவராகவும் பார்த்தால், அதனைச் சாதாரணமாக எடுத்துக்கொள்கின்றோம். சிகரெட் பிடிக்கிற, மது அருந்துகிற மனிதனைவிட, பண ஆசையினால் வேடமிடுகிறவனும், பொருளாசை மிகுந்தவனும், கபடாகப் பேசுகிறவனும், அன்பற்றவனும் எந்த விதத்திலும் மேன்மையானவன் அல்ல.

சிலர் பாலியல் தொடர்பான பாவங்களுக்கு விலகி வாழ்வதால், தங்களை மிகப்பெரிய பரிசுத்தவான்களாக எண்ணி விடுவதுண்டு. ஆனால் பொருளாசை, பண ஆசை, பேர், புகழ் பிரஸ்தாப ஆசை போன்றவை தங்களை எவ்வளவு ஆட்கொண்டாலும் அவைகளைப் பாவமாக எண்ணுவதில்லை. வேதம் மிக அருவருப்பானதாக எண்ணி மிகப்பெரிய பாவங்களாக பணஆசையையும், பொருளாசையையும், புகழாசையையும் காட்டுகிறது. பணம், பொருள், புகழ் சார்ந்த ஆசைகள் ஒருவரை அதிகமாகப் பாதித்திருந்தால், அவர் தேவனுடைய பார்வையில் மிக மிக அருவருப்பாகத் தோன்றுகிறார் என்பது உண்மை. பாவம் சில தவறான பழக்கங்களாக வெளிவரலாம். சில தவறான குணாதிசயங்களாகவும் வெளிவரலாம். எல்லாவற்றையும் சமமாக எண்ணி வெறுக்கும் இதயம் நமக்குத் தேவை.

சிந்தனைக்கு...

இச்சைகள் அற்ப நேர இனிமையைக் கொடுத்து,
மனிதனை நெடுங்காலக் கசப்பிற்கு கடனாளியாக்குகிறது.

டிசம்பர்
13
ஜீவ நீரோடை

பிறர் பார்க்கணும்

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல்...
மத்தேயு 5:15

மத்தேயு 5:14-28

சில தரமான பொருட்களைத் தயாரிக்கும் கம்பெனிகள் உலகமெங்கும் பிரசித்தி பெற்று மிகுதியாக வளர்ந்திருக்கின்றன. அவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு எங்கும் அதிகமான கிராக்கி உள்ளது. கெண்டகி பிரைடு சிக்கன் (KFC) என்ற அமெரிக்க ஸ்தாபனம் இன்று உலகமெங்கிலும் அறியப்படாத பகுதிகள் இல்லை. ஆனால், இவர்களைவிட மிகத் தரமாகச் சிக்கன் அயிட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் உண்டு. ஆனால், அந்தக் கம்பெனிகளை வெகுசிலரே அறிவார்கள். உலகமெங்கிலும் எவருக்கும் தெரியாமலிருக்க முடியாது பெப்சி கோலாவும், கோகோ கோலாவும். ஆனால், அதைவிடத் தரமான சிறந்த பானங்கள் தமிழ் நாட்டிலேயே உண்டு. ஆனால், அவை தமிழ்நாட்டிலேகூட எல்லாருக்கும் தெரியாது. ஏனென்றால், தரமானவைகளாயிருந்தும் அவற்றை வெகு ஜனங்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதில், சில கம்பெனிகள் மட்டுமே ஜெயித்திருக்கின்றன.

விளக்கைக் கொளுத்தி விளக்குத்தண்டின் மேல் வைத்தால்தான், அங்கே வெளிச்சத்தைக் காணமுடியும் என்பதை இயேசு விளக்கினார். ஒரு விஷயம் நல்லதாயிருந்தால் மட்டும் போதாது. அந்த நல்ல விஷயம் நான்கு பேருக்குத் தெரிந்து பயன்பெறும் விதமாக, அவை பலர் நடுவில் கொண்டு செல்லப்பட வேண்டும். தானியேலின் நல்ல விதமான வாழ்க்கை அவனுக்கு மட்டுமே தெரிகின்ற அளவில் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடங்கவில்லை. அதனை ஒரு நாடே அறியும்படி, அது பலர் நடுவில் கொண்டு செல்லப்பட்டது.

சிலர் நல்லவர்கள்தான். நற்சுபாவமுடையவர்கள்தான். தூய்மையான இருதயமுடையவர்கள்தான். ஆனால், அவர்களின் நல்ல வாழ்க்கையினால் யாரும் பயனடைவதில்லை. அவர்களுடைய நல்ல குணாதிசயங்கள் யாருக்கும் முன்மாதிரியாவதில்லை. ஏனென்றால், அவர்கள் தங்களின் பரிசுத்தத்தைத் தற்காத்துக் கொண்டு தனியாக இருந்து விடுகின்றார்கள். மக்கள் கூட்டங்களுக்குள் அவர்கள் செல்வதில்லை. நான்கு பேருக்குத் தங்களின் நல்ல குணங்கள் அறியப்படும் விதமாக, யாரோடும் அவர்கள் ஐக்கியம் கொள்வதில்லை.

உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மலையின் மேலிருக்கின்ற பட்டணம் போலிருக்க வேண்டுமேயன்றி, காட்டுக்குள் தவம் புரியும் யோகியைப் போலிருக்கக்கூடாது. வெளியரங்கமாக வாழ்ந்து காட்டவே நாம் அழைக்கப்படுகின்றோம்.

சிந்தனைக்கு...

இயேசுவின் கருத்துக்களைக் கடைப்பிடிப்பதல்ல,
இயேசுவின் கரங்களைப் பிடித்து நடப்பதே கிறிஸ்தவம்.

டிசம்பர்
14
ஜீவ நீரோடை

பணம் பாவமா?

கர்த்தர் அவருக்கு வெள்ளியையும் பொன்னையும் கொடுத்திருக்கிறார்... ஆதியாகமம் 24:35

ஆதியாகமம் 24:31-41

நாம் பணம் வைத்திருகின்றோமா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், பணத்தைக் குறித்த நம்முடைய மனோபாவம் என்ன என்பதே முக்கியம். சிலர் மிகுதியான பணத்தை வைத்திருக்கக்கூடும். ஆனால், அந்தப் பணத்தைக் குறித்த அவர்களின் எண்ணமும், மதிப்பீடும், மனோபாவமும், குற்ற மற்ற முறையிலும், மாசு ஏற்படுத்தாத விதமாகவும் இருக்க முடியும். மிகுதியான நகைகளைத் தங்களுக்குச் சொந்தமாக வைத்திருக்கின்ற சிலர், மிகவும் சாதாரண மான ஒரு நகையை அணிந்து எளிமையாகவும், தாழ்மையாகவும் தோன்று வதைப் பார்த்திருக்கின்றேன். அதே வேளையில் ஒரு சிறு தங்க நகைகூட இல்லாத போதும், தங்க முலாம் பூசப்பட்ட பல நகைகளை வாங்கி அணிந்து, தங்களை ஆடம்பரமாகத் தோன்ற வைக்கின்றவர்களையும் பார்த்திருக்கின்றேன்.

எனவே, எந்த ஒன்றிலும் நம்முடைய மனோபாவம் மிக முக்கியமானது. தேவன் நாம் பணத்தை வைத்திருப்பதற்கும், அதனைச் சற்று அதிகமாகச் சம் பாதிப்பதற்கும் எதிரி அல்ல. ஆனால், அவைகளைக் குறித்த நம்முடைய மனநிலை எப்படியிருக்கிறது என்பதையே பார்க்கின்றார்.

பணத்தின் அளவல்ல, தேவனோடு நாம் கொண்டிருக்கின்ற உறவின் அளவும், அவருக்குப் பிரியமாக நாம் வாழ்கின்ற அளவும்தான் நம்முடைய வாழ்க்கைக்கு உண்மையான பாதுகாப்புணர்வையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டு வருகிறது. இந்த வெளிப்பாடு நமக்கு இருந்தால், பணம் ஒரு கேடான விஷயம் அல்ல. ஆபிரகாமிடம் ஏராளம் செல்வம் இருந்தது. அவன் வெள்ளியும், பொன்னும் மிகுதியாய் உள்ள சீமானாயிருந்தான். ஆனால், அவனுடைய பார்வை அவைகளின்மேல் இராமல், தேவன்மேல் இருந்தது. அவன் மிகப்பெரிய மாளிகை கட்டி சுகபோகமாய் வாழ்ந்திருக்க முடியும். ஆனால், அவன் தன் பிள்ளைகளோடு கூடாரங்களில் குடியிருந்து, தேவனால் கட்டி எழுப்பப்பட்ட வீட்டிற்காகக் காத்திருந்தான்.

ஆனால், யூதாஸைப் பாருங்கள். அவனிடம் பணமோ, செல்வமோ இருக்க வில்லை. ஆனால், பண ஆசை அவனுக்குள் சத்தியத்தை மறுதலித்துப் போகும் அளவிற்கு, மிகுதியாயிருந்தது. தன்னை அழைத்தவரைக் காட்டிக் கொடுக்கும் அளவிற்கு பண ஆசையின் வேகம் அவனுக்குள் செயல்பட்டது. ஆம், பணத்தைச் சம்பாதிப்பதும், சேர்ப்பதும் தவறல்ல. ஆனால், அவைகளைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறதோ, அவைகள் நம்முடைய மனதில் இருக்க வேண்டும். பணம் எப்பொழுதுமே நம்மை அடிமையாக்கும் தன்மை கொண்டது. அதற்குப் பலி யாகாமல் இருக்கப் போதிய கவனம் வேண்டும்.

சிந்தனைக்கு...

பண ஆசை காட்டாற்று வெள்ளம் போன்றது. அதில் விழுந்தவர்களை அதன் போக்கில்தான் அது கொண்டு போகும்.

டிசம்பர் 15
ஜீவ நீரோடை

நாமே செய்யலாம்

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ... மத்தேயு 7:12

மத்தேயு 7:1-14

வீடு சுத்தமாயிருக்க வேண்டும். எல்லாப் பொருட்களும் அதனதனுடைய இடங்களில் ஒழுங்காக வைக்கப்பட வேண்டும். வீட்டைச் சுத்தமாக மட்டுமல்ல நல்ல அழகாகவும் வைக்க வேண்டும். இவை ஒரு வாலிபனின் மனரீதியான விருப்பம். ஆனால், அவன் திருமணம் செய்த பெண்ணோ, இதுபோன்ற விஷயங்களில் அதிகக் கரிசனையானவள் அல்ல. எந்தப் பொருளையும் எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம் என்பது அவளுடைய பழக்கம். தன் மனைவி வீட்டை நன்றாக வைக்கவில்லையே என்ற குற்றச்சாட்டைச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போனான். எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஒருநாள் அவனுக்கு ஒரு சிந்தனை வந்தது. மனைவி வீட்டைச் சுத்தமாக வைக்கவில்லையே என்ற எரிச்சலோடு வாழ்வதற்குப் பதிலாக, நான் இனி என் வீட்டை சுத்தமாக வைப்பேன் என்ற தீர்மானத்தோடு செயல்பட ஆரம்பித்தான். அதனுடைய விளைவாக தினசரி சண்டை முடிவுக்கு வந்தது. அமைதியுடன் வாழ வழி ஏற்பட்டது.

சில நேரங்களில் நம்முடைய எதிர்பார்ப்புகள் நியாயமானவையும், சரியானவையுமே. ஆனால், அவற்றால் பிரச்சினைகள்தான் பெருகுகின்றன. சில நல்ல விஷயங்களை மற்றவர்களிடத்திலிருந்து எதிர்பார்ப்பதற்குப் பதில், நாமே அவற்றைச் செய்திட முன்வந்தால் பிரச்சினைகள் பல தவிர்க்கப்படுகின்றன. தரையில் சிந்தியிருந்த தண்ணீரைத் துடைக்காத மனைவியை 5 முறை கணவன் திட்டித்தீர்க்க நேர்ந்தது. ஏனென்றால், ஏற்கெனவே 4 முறை சுட்டிக் காட்டியும் அவள் அதைச் செய்யவில்லை. ஆனால், தரையில் சிந்திக் கிடந்த தண்ணீரை சுட்டிக் காட்டுவதே தன் கடமை என்று எண்ணிய அவன், அதைச் சரி செய்யும் பொறுப்பு தனக்கும் உண்டு என்று எண்ணியிருந்தால், 5 முறை திட்டித் தீர்த்து குடும்ப உறவை கசப்பாக்கத் தேவை ஏற்பட்டிருக்காது.

மற்றவர்கள் எதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோமோ, அதனை நாம் முதலாவது செய்ய வேண்டும் என்பதே இயேசுவின் போதனை. ஒரு நல்ல விஷயத்தை இன்னொருவர் வழியாகவே காண வேண்டும் என்று நினைப்பது அல்ல. அதனை நாமே ஏன் செய்யக்கூடாது என்று எண்ணவேண்டும்.

வாஷ்பேசின் அழுக்கேறிக் கிடந்ததைக் கண்ட உறவினர் ஏன் இப்படி? என்று கேட்டார். நல்ல மனைவிகள் இல்லாத வீட்டில் வாஷ்பேசின் இப்படித்தான் இருக்கும் என்றார் வீட்டு சொந்தக்காரர். உடனேயே அந்த உறவினர் நல்ல கணவர்கள் உள்ள வீட்டில் இதை தவிர்க்க இயலுமே என்றார். சில நேரங்களில் சில விஷயங்கள் நலமாக இராமல் போவதற்கு யாரோ ஒருவர் மட்டுமல்ல காரணம். நாம் அதனைச் செய்யாமல் பிறர் வழியாகத் தேடியதால்தான் இப்படி நேரிடுகிறது.

சிந்தனைக்கு...

பொய்யை விட்டுப் பிரிந்து வர விரும்பாதவன், உண்மையை உரிய முறையில் புரிந்து கொள்ளமாட்டான்.

டிசம்பர்
16
ஜீவ நீரோடை

இதோ உங்களோடிருக்கிறார்

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை... யோசுவா 1:5

யோசுவா 1:1-9

நீங்கள் ஒரு உண்மையான மனந்திரும்புதலைக் கண்டவர்களா? நீங்கள் ஆண்டவராகிய இயேசுவினால் வரும் இரட்சிப்பினை அனுபவப்பூர்வமாகப் பெற்றுக் கொண்டவர்களா? நீங்கள் தேவனுடைய உறவையும், ஐக்கியத்தையும் தினமும் தேடி அதைக் குறித்த நிச்சயத்தைப் பெறும் அனுபவம் உடையவர்களா? நீங்கள் கர்த்தருடைய வழியில் நடந்து கர்த்தரைக் கனப்படுத்தும் செயல்பூர்வமான சிந்தையை உடையவர்களா? உங்களால் "ஆம்" என்று உறுதியாகச் சொல்ல முடிகிறதா? சொல்ல முடிந்தால் நீங்கள் பாக்கியவான்கள். இப்போது நிம்மதியாகக் காலை நீட்டி உட்காருங்கள். பயம், பீதி, சந்தேகம், அங்கலாய்ப்பு அனைத்திற்கும் விடை கொடுத்துவிட்டு, ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுங்கள். இனியும் நீங்கள் கவலையோடிருக்கத் தேவையில்லை. இப்போது உங்களுக்குள் ஒரு சமாதானத்தை எதிர்பார்த்து நன்றாக உணருங்கள்.

ஏனென்றால், நீங்கள் தேவனுடைய பார்வையில் இருக்கிறீர்கள். நீங்கள் தேவ சித்தத்தின் மையத்தில் இருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கை அவருடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டே இருக்கிறது. நீங்கள் ஒரு தனித் தீவில் அல்ல, தேவ ஐக்கியத்தில் இருக்கிறீர்கள். உங்களுக்கு எதிராக யாரும் எதையும் செய்துவிட முடியாது. எந்தப் பில்லி சூனியமும், எந்த மந்திரமும், எந்த சாபமும், எந்தப் பொறாமையும் கர்த்தருடைய கண்காணிப்பைக் கடந்து வந்து, உங்களுக்கு எதையும் செய்ய முடியாது. யாராவது உங்களுக்குத் தீமை செய்துவிட்டது போலத் தோன்றினாலும், அது தீமையின் தோற்றத்தில் வந்த நன்மை என்பதை விரைவில் உணர்வீர்கள்.

ஒருவேளை ஆகாரைப் போல ஒரு வனாந்திரம் போன்ற ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ, என நினைக்கிறீர்களோ? அப்படி வந்தாலும் அந்த வனாந்திரத்தின் நடுவில் உங்களுக்காக கர்த்தர் ஒரு அதிசயமான ஆசீர்வாத நீரூற்றை ஆயத்தமாக்கி வைத்திருப்பார். ஒரு வேளை இஸ்ரவேல் மக்கள் காண நேர்ந்த மாரா போன்ற ஒரு கசப்பு நேரிட்டால் என்ன செய்வது என்று சிந்திக்கின்றீர்களோ? அப்படி ஒரு சூழ்நிலை வந்தால், அந்தக் கசப்பை மதுரமாக மாற்றுவதற்கான ஒரு அற்புத மரத்தை தேவன் நிச்சயம் பார்த்து வைத்திருப்பார்.

நாளைய தினம் எப்படியிருக்கும் என்ற ஜோசியம் தேவனுடைய பிள்ளைகளுக்குத் தேவையில்லை. அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகப் பிரசன்னத்தில் நீங்கள் இருந்திட மட்டும் விழிப்பாயிருங்கள். கர்த்தர் உங்களோடிருப்பதில் உறுதியாயிருங்கள்.

சிந்தனைக்கு...

இறைவனைக் குறித்த நினைவுகள் உள்ளத்தில் இருந்தால், உலகத்தைக் குறித்த கவலைகள் உன்னை வருத்துவதில்லை.

டிசம்பர்
17
ஜீவ நீரோடை

தாழ்மையா? பெருமையா?

மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக... பிலிப்பியர் 2:3

பிலிப்பியர் 2:1-16

ஒரு சபைப் பாஸ்டர், தன்னுடைய சபையில் தாழ்மையாக நடந்து கொள்ளும் சிலரைக் கௌரப்படுத்தி சில பரிசுகளைக் கொடுக்க முன் வந்தாராம். தாழ்மைக்காக மூன்றாவது பரிசு பெறுகின்ற நபரின் பெயர் அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த நபர் பாஸ்டரிடம் வந்து, பாஸ்டர் இந்த சபையில் அனைவரையும் விட நான்தான் மிக மிகத் தாழ்மையானவன். எனக்கு முதல் பரிசு தராமல் மூன்றாம் பரிசு தருவது நியாயம் அல்ல என்று சண்டை போட்டாராம். பெருமைக்கு பல வடிவங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் மிகுந்த தாழ்மையாக இருப்பதாக தனக்குள் எண்ணிக் கொள்ளுதல். அநேகர் தாழ்மையாகத் தோன்றுவதும், தாழ்மையாக நடந்துகொள்வதும் உண்மைதான். ஆனால், அந்த தாழ்மையே பெருமையின் இன்னொரு வேடமாக மாறிவிடுகிறது. ஏனென்றால், அந்த தாழ்மையை பலர் மெச்ச வேண்டும். அதன் அடிப்படையில் தங்களை மேன்மையாக எண்ண வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஒரு சகோதரி நகை அணிகின்ற விசுவாசிகளைக் கண்டால், அவர்களைத் தாழ்மையில்லாத பெருமைக்காரர்கள் என்று நினைக்கவும், பேசவும் செய்வார். தான் நகை அணியாமலிருப்பதை ஒரு பெரிய தாழ்மையாகவும், வசனத்திற்குக் கீழ்ப்படியும் அனுபவமாகவும் எண்ணிக் கொள்வார். ஆனால், அவர் வாழ்வது ஒரு பெரிய பங்களாவில். அவர் செல்வது விலையுயர்ந்த ஆடம்பரமான காரில். அவர் அணியும் உடைகள் விலையுயர்ந்த பட்டுகள். அவர்கள் வீட்டில் உணவு வகைகள் நட்சத்திர ஓட்டல் ரகமாக இருக்கும்.

தாழ்மை என்பது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் பிரதிபலிக்க வேண்டும். ஏதோ ஒரு சில செயல்களில் மட்டும் தாழ்மையைக் காண்பிப்பது, ஒரு வித்தியாசமான பெருமை தேடலின் இன்னொரு வடிவமே. தாழ்மை என்பது முதலாவது சிந்தையில் உருவாக வேண்டும். சிந்தையில் ஏற்படுகிற தாழ்மைதான் உண்மையான ஆவிக்குரிய தாழ்மை ஆகும். அந்தத் தாழ்மையின் பிரதிபலிப்புகளை வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் காண முடியும். பேச்சில், செயலில், குணத்தில், தோற்றத்தில், மனநிலையில் அந்த தாழ்மையை அடையாளங்கண்டு கொள்ள முடியும்.

தாழ்மை யாருடைய பாராட்டுதலையும், எதிர்பார்த்திருக்காது. தாழ்மை தன்னை அநேகர் பார்த்து மேன்மையாகக் கருதவேண்டும் என்று எதிர்பாராது. தாழ்மையுடையவர்கள் தங்களைப் போன்ற தாழ்மையில் மற்றவர்கள் இல்லை என்பதற்காக அவர்களை மட்டமாக நினைக்கவோ, பேசவோ மாட்டார்கள்.

சிந்தனைக்கு...

தாழ்மையுள்ளவன் தலைகுனியத் தயாராயிருக்கிறான். ஆனாலும், தேவன் அவனை தலைநிமிர்ந்து நிற்க வைக்கிறார்.

டிசம்பர் 18

ஜீவ நீரோடை

திரும்பும் வழி தெரியாவிடில்

வழி தப்பிப் போனேன், உமது அடியேனைத் தேடுவீராக... சங்கீதம் 119:176

சங்கீதம் 119:169-176

சில நேரங்களில் சரீரத்தில் நாம் சில வேதனைகளையும், பலவீனங்களையும் உணருகின்றோம். எனவே, சரீரத்தில் ஏதோ பிரச்சினை ஆரம்பமாயிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்கின்றோம். ஆயினும், அவைகளைத் தெளிவாய் அறிந்து கொள்ளவும், அவைகளிலிருந்து விடுதலையாகவும் ஒரு மருத்துவரை நாடி நம்முடைய நிலமையைக் கூற வேண்டிய அவசியம் உள்ளது.

அதுபோலவே, சில வேளைகளில் நாம் சில மனவிசனங்களையும், குழப்பமான மனநிலைகளையும், வருத்தத்திற்குரிய சூழ்நிலைகளையும் காண்கின்றோம். தேவ சமுகமும், சமாதானமும் விலகிப் போனது போல உணருகின்றோம். ஆயினும், எவைகள் இவ்விதச் சூழ்நிலைகளுக்கு நேராக நம்மை கொண்டு வந்துவிட்டன என்றும், எவைகள் தேவ சமுகத்தின் சமாதானங்களுக்கும், சந்தோஷங்களுக்கும் நம்மை தூரமாகத் தள்ளிக் கொண்டு சென்றன என்றும், எவைகளைச் செய்து இந்த குழப்பமான சூழ்நிலையிலிருந்து, தெளிவான அமைதிக்கு நேராகச் செல்ல முடியும் என்றும் நமக்கு தெரிவதில்லை. எனவே மனப்போராட்டங்களும், சோர்வான மனநிலைகளுமே நம்மை அலசடிப்படுத்திக் கொண்டிருக்கும்.

இந்த வேளையில் சங்கீதம் 119-ன் கடைசி வசனத்தை சிந்திப்பது நல்லது. காணாமல் போன ஆட்டைப்போல வழி தப்பிப் போனேன். உமது அடியேனைத் தேடுவீராக. கர்த்தருடைய சமுகத்தைவிட்டும், சந்தோஷத்தை விட்டும் காணாமல் போய்விட்டதை உணர முடிகிறது. ஆனால், எத்தகைய சூழ்நிலைக்குள் வந்து சேர்ந்திருக்கிறோம் என்றும், எப்படி மறுபடியும் கர்த்தருடைய கிருபையின் சமுகத்தின் ஆதரவிற்கு நேராக வந்து சேருவது என்றும் தெரியவில்லை. குழப்பமான சூழ்நிலையை உணர்ந்த சங்கீதக்காரன், தேவனே திரும்பி உம்மிடம் வந்து சேர நான் என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. எனவே என்னை நீரே தேடிக் கண்டுபிடித்து உம் சமுகத்தில் கொண்டு சேர்ப்பீராக என்று வேண்டுகின்றான்.

மேய்ப்பனை விட்டு பாதை தவறிச் சென்ற ஆடு, தான் தப்பி வந்ததை உணர முடியுமேயன்றி, மீண்டும் மேய்ப்பனண்டை போய்ச் சேரும் வழி அதற்குத் தெரியாது. எனவே தன்னைத் தேடி அழைத்துச் செல்லும்படி அது சத்தமிட ஆரம்பிக்கும். அந்த சத்தம் மேய்ப்பனை ஆட்டைத் தேடிச் சென்று மீட்கத் தூண்டும். நாமும் அந்த ஆட்டினைப் போல தேவனை நோக்கிக் கூப்பிடுவோமாக. தேவனை விட்டு விலகிப் போவதைவிட, அவ்விதம் விலகியதை உணராமலும், உணர்ந்து தேவ ஐக்கியத்தைத் தேடாமல் போவதுமே மிகுந்த வருத்தத்திற்குரியது. அது ஆதாம் எங்கே இருக்கிறான் என்பதை தேவன் அறிந்து கொள்வதற்காக அல்ல. ஆதாமும் ஏவாளும் தேவ சமுகத்திற்கு விலகிப் போய்விட்டதை அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகவே, தேவன் அவ்விதம் கூப்பிட்டார்.

சிந்தனைக்கு...

நீ சொன்னவைகளை உலகம் விரைவில் மறந்துவிடும்.
உன்னிடம் பார்த்ததையோ என்றும் நினைவில் வைக்கும்.

டிசம்பர்
19
ஜீவ நீரோடை

ஆசீர்வாதம் எது?

அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்...
சங்கீதம் 4:7

பிரசங்கி 2:1-17

தேவன் நம்மை ஆசீர்வதிப்பது எப்படி? அவர் எங்கே நம்மை ஆசீர் வதிக்கின்றார்? என்ற உண்மைகள் ஆவிக்குரியவர்களாக தங்களை எண்ணு கின்ற அநேகருக்குத் தெரியவில்லை. அந்த உண்மை தேவ ஊழியத்தில் பல ஆண்டுகளாக இருக்கும் அநேகருக்குக்கூடத் தெரியாமலிருப்பது விந்தை. பணம், பொருள், சரீர சுகம், நல்ல வீடு, நல்ல கார், நல்ல அந்தஸ்து, நல்ல சௌகரியம் இந்தவிதமான ஒரு சூழ்நிலையில் நம்மை வைப்பதுதான் தேவ ஆசீர்வாதம் என்றே பலர் நம்பு கின்றார்கள். இவ்விதமாகவும் தேவன் ஆசீர்வதிப்பது உண்மை தான். ஆனால், ஆவிக்குரிய பிரதான ஆசீர்வாதம் என்பது, ஒருவருடைய இருதயம் என்னும் களத்தில், தேவன் செய்கின்ற கிரியையின் விளைவாக இருக்கின்றது.

தேவன் தம்முடைய ஐக்கியத்தை ஒரு இருதயத்தில் வெளிப்படுத்தும் போது, அந்த இருதயம் உலகம் தர முடியாத ஒரு விசேஷ நம்பிக்கை, சந்தோஷம், சமா தானம், நிறைவு, திருப்தி, பரவசம் ஆகியவற்றை அனுபவிக்கின்றது. இந்த அனுபவம் இந்த உலகின் அநேகம் சந்தோஷங்களை மிகவும் அற்பமாக எண்ண வைக்கின்றது.

இவ்விதமான ஒரு ஆசீர்வாத அனுபவம், அநேகருடைய கண்களுக்கு மறைவாகவே உள்ளது. ஏனென்றால், அவர்கள் தேவ ஆசீர்வாதங்களை உலக ஆசீர்வாதங்களிலேயே காண விரும்புகின்றார்கள். அவர்கள் ஆவிக்குரியவர் கள் என்ற நிலையில் தங்களைப் பார்த்த போதிலும், மாம்சீகக் கண்களுக்கேற் றவைகளையும், மாம்சீக உணர்வுகளுக்கேற்றவைகளையுமே ஆசீர்வாதங்கள் என்று எண்ணுகின்றனர். ஒரு மனிதனின் இருதயத்தில் தேவன் உணரவும், ருசிக்கவும் செய்கின்ற ஆவிக்குரிய ரீதியான ஆசீர்வாதங்களை அடையாளங் கண்டுகொண்டால், அவன் தனக்கு உலகப்பிரகாரமாக பணத்தைத் தர வில்லையே, பொருளைத் தரவில்லையே என்ற வருத்தத்தில் இருக்கமாட்டான்.

மிகுந்த பணத்தையும், நல்ல சௌகரியங்களையும் தேவன் தந்தால் அதனால் நாம் எவ்வளவு சந்தோஷத்தை உணர முடியுமோ, அதே சந்தோஷத் தையும், திருப்தியையும் எதையும் தராமலே தேவன் நமக்குள் உணரச் செய்ய முடியும். இது இருதயத்தில் சுத்தமாயிருக்கும் அனுபவத்தால் வருகிறது. அது இருதயத்தில் தேவனைக் காணும் அனுபவத்தால் வருகிறது. அது தேவ ஐக்கியத்தை இருதயத்தில் தேடும் அனுபவத்தால் வருகிறது. இதனை நாம் அனுதினம் தேடிப் பெறுவதே உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை.

சிந்தனைக்கு...

சமாதானத்தை இறைவன் இலவசமாகத் தருகிறார். ஏனென்றால், அதற்கு விலை கொடுக்கும் தகுதி யாருக்கும் இல்லை.

டிசம்பர்
20
ஜீவ நீரோடை

விசுவாசத்தின் அடையாளம்

விசுவாசத்தினாலே நீதியை நடப்பித்தார்கள்...
எபிரெயர் 11:33

எபிரெயர் 11:24-40

ஒரு மனிதன் தேவன்மேல் வைத்திருக்கின்ற விசுவாசத்தின் வலிமையையும், ஆழத்தையும் எதனைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும்? மலைகளைப் பெயர்ப்பது போன்ற பெரிய விஷயங்களை கர்த்தருடைய நாமத்தில் சாதிப்பேன் என்ற விசுவாச வார்த்தையிலா? இயேசுவுக்காக உயிரையும் கொடுப்பதற்குத் தயார் என்ற வைராக்கியமான பேச்சிலா?

இல்லை. ஒரு மனிதன் தேவன்மேல் வைத்திருக்கிற விசுவாசம் எந்த அளவிற்கு உண்மையானதும், வலிமையானதும் என்பதை விசுவாசமான பேச்சிலும், சவாலிலும் அல்ல. அவன் எந்த அளவிற்கு கர்த்தருடைய வார்த்தைகளின்படியான வாழ்க்கைக்காக, எந்த சோதனையான சூழ்நிலைகளையும் ஏற்றுக் கொள்ளமுன் வருகின்றானோ, அதில்தான் அவனுடைய விசுவாச வலிமையைப் பார்க்க முடியும். சுருங்கக் கூறின் எத்தகைய சூழ்நிலைகளின் நடுவிலும், தேவனுடைய நியாயங்களின்படி வாழவேண்டும் என்ற கொள்கைக்கு, எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிறானோ. அந்த செயலில்தான் விசுவாசத்தைப் பார்க்கவேண்டும்.

அன்னிய நாட்டில் சிறையிருப்பில் இருந்தபோதும், தேவனுடைய நாமத்தை வணங்குகிற நாங்கள், அக்கினிச் சூளையில் விழ நேர்ந்தாலும்கூட, விக்கிரகத்தை வணங்கமாட்டோம் என்று உறுதியாக நின்றார்களே அங்கேதான் சாத்ராக், மோஷக், ஆபேத்நேகோ ஆகியோரின் விசுவாசம் விளங்கியது. சிங்கக்கெபியில் விழ நேர்ந்தாலும் ஜெபிப்பதை மட்டும்விட மாட்டேன் என்று விடாப்பிடியாக நின்ற அனுபவத்தில்தான், தானியேலின் விசுவாசம் விளங்கியது. உண்மையினிமித்தம் ஏற்கெனவே பல துயர் அடைந்திருந்தும், கடைசிவரை பாவத்திற்கு உடன்படாமல் நின்ற உறுதியில்தான், யோசேப்பின் விசுவாசம் பளிச்சிட்டது.

ஆபிரகாம் தன்னுடைய விசுவாசத்தின் உச்சநிலையை ஏதோ ஒரு பெரிய நன்மையைப் பெறுவது தொடர்பாக வெளிப்படுத்தவில்லை. தன்னுடைய ஒரே மகனைப் பலியிடத் தேவன் சொன்னபோது, அதைக் குறித்து எதிர்க்கேள்வி எதுவுமின்றி அவன் நிறைவேற்றக் கடந்து சென்றான். ஒரு பெரிய இழப்பிற்கு தன்னை ஆயத்தம் செய்து கொண்டதின் வாயிலாக, தேவன்மேல் தனக்குள்ள விசுவாசத்தின் வலிமை எவ்வளவு என்பதை அவன் வெளிப்படுத்தினான். ஆம், கர்த்தர் பெரிய காரியங்கள் செய்வார் என்ற வீரதீரமான பேச்சில் அல்ல. கர்த்தருடைய வழிகளில் நடந்து, அவருடைய ஆலோசனைகளுக்கு உட்பட்டு தேவனைக் கனப்படுத்திட கவனமாயிருக்கிற ஒரு அனுபவத்தில்தான், விசுவாசத்தின் வல்லமை விளங்கும்.

சிந்தனைக்கு...

இறைவனின் எதிர்பார்ப்புகளுக்கு நீ ஏற்றவனாயிரு. அதுவே இறைவனிடம் நீ எதிர்பார்ப்பவைகளைப் பெறுவதற்கான வழி.

டிசம்பர்
21
ஜீவ நீரோடை

பிறருக்கு உதவி

இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ... மத்தேயு 25:45

மத்தேயு 25:31-46

ஒரு முறை திருமண வைபவம் நடந்த மண்டபத்தில் சாதாரண தோற்ற முடைய ஒருவர் வந்தார். அவரை யாரும் கண்டுகொள்ளவில்லை. யாரும் எந்த விசேஷ உபசாரமும் செய்யவில்லை. விரும்பப்படாத விருந்தாளியைப் போல அவர் ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தார். சற்று நேரத்தில் அவர் மாப்பிள்ளையை வாழ்த்த வந்த முக்கியமான ஒரு வெளியூர் அரசியல் பிரமுகர் என்பது தெரிய வந்தது. உடனேயே அவரை விசேஷமாக மேடைக்கு அழைத்துச் சென்று, பொன்னாடை போர்த்தி விசேஷ மரியாதை கொடுத்து கௌரவித்தனர்.

இன்று நம்முடைய வீட்டு வாசலில் ஒருவர் சட்டை அணியாதவராக, பசியுள்ளவராக, நிற்பதை நாம் காண நேர்ந்து, அவர் இயேசு அல்லது இயேசுவால் அனுப்பப்பட்டவர் என்று அறிந்து கொள்ள வாய்ப்பிருந்தால், நாம் எப்படிச் செயல்படுவோம்? அவருக்கு நாம் ராஜ மரியாதை செய்ய ஆயத்தமாகி விடுவோம்.

ஏனென்றால், அவர் யார் என்று நமக்குத் தெரிந்து விட்டது. அவருக்கு எவ்வளவு கனம் செய்தாலும் அது நமக்கு மிகுந்த பலனைத்தரும் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்க முடியாத யாரோ ஒருவர் அவ்வித நிலையிலிருந்தால், நாம் என்ன செய்வோம் என்பதே முக்கியம். தேவன் பிரதிபலன் எதிர்பாராமல், பிறருக்கு நாம் நன்மை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். உணவில்லாத, உடையில்லாத, நோயுற்ற, கைவிடப்பட்ட, வறுமையால் பாதிக்கப்பட்ட, ஒருவரைக் காண நேரிடுகின்றபோது நம்முடைய உள்ளம் அவருக்காகப் பரிதாபப்படுகிறதா? வாழ்க்கைத் துன்பங்களால் காயப்படுத்தப்பட்டு குற்றுயிராகிக் கிடக்கும் ஒருவரைக் காண நேரிடும்போது, நல்ல சமாரியனைப்போல நம்மால் மனதுருகி எதையாவது செய்ய முடிகிறதா? இங்கெல்லாம் இயேசுவை நாம் காண இயலாது. நாம் அந்தச் சூழ்நிலைகளில் எப்படிப்பட்ட, ஒரு மனநிலையோடு நடந்து கொள்கின்றோம் என்பதை இயேசு கவனிக்கின்றார்.

சிலர் தங்களுக்கு கஷ்டம், பிரச்சினை, ஆபத்து என்று வரும் போது, ஜெபம், உபவாசம், பொருத்தனை என்று தேவ உதவி பெற தீவிரமாயிருப்பார்கள். ஆனால், எதிர்பார்த்த பலன் கிடையாதபோது தேவன்மேல் வருத்தமடைவார்கள். ஆனால், தாங்கள் உதவி செய்யத்தக்க சூழ்நிலைகளில் இருந்தபோது, யாருக்கு என்ன நேரிட்டால் எனக்கென்ன என்பது போல இருந்ததை நினைக்கமாட்டார்கள். ஆம். நாம் மனிதர்களுக்கு உதவும் போதுதான், தேவனும் நமக்கு உதவ வேண்டும் என்று உரிமையோடு எதிர்பார்க்க முடியும்.

சிந்தனைக்கு...

எல்லாவற்றையும் தனக்காகவே வைத்துக் கொள்கிறவனுக்காக தேவன் எதையுமே வைத்திருக்கவில்லை.

டிசம்பர்
22
ஜீவ நீரோடை

வாக்குத்தத்தங்கள்

அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால்... உபாகமம் 28:1

உபாகமம் 28:1-15

தேவன் நமக்கு எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்று நாம் எதிர் பார்ப்பது போல, நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று தேவனும் எதிர்பார்க்கின்றார். அவர் நமக்கு அன்பராக, அற்புதராக, ஜெபத்தைக் கேட்கிறவராக, விசுவாசத்தைக் கனப்படுத்துகிறவராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமே. ஆனால் நாம் எதிர்பார்க்கின்ற விதமாக அவர் நமக்கு இருக்க வேண்டுமானால், நாம் அவருக்கு முன்பாக, ஒருவருவரையொருவர் நேசிக்கின்ற வர்களாக, உண்மையுள்ளவர்களாக, கீழ்ப்படிதலுள்ளவர்களாக, தாழ்மை யுள்ளவர்களாக, சாந்தமானவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

சில குடும்பங்களிலே கணவன்மார்கள் தங்கள் மனைவிகள் தாங்கள் விரும்புகின்ற விதமாக எல்லா நிலைகளிலும் இருக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பார்கள். அதுபோல மனைவிகளும் எதிர்பார்ப்பார்கள். ஆனால், மற்ற வருக்கு தாங்கள் எப்படியிருக்க வேண்டும் என்று சிந்திப்பதில்லை. இதுவே குடும்பங்களின் குழப்பங்களுக்கு காரணமாயிருக்கிறது. இது போலவே நாமும் தேவனுடைய பிரியங்களுக்கேற்றபடி இருப்பதைக் குறித்து கவலைப்படாமல் வாழ்ந்தால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் அப்படியே இருக்கும்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடமிருந்து பெற்றிருந்த அசீர்வாத வாக் குறுதிகள் கொஞ்சமல்ல. ஆனால், அவர்கள் அவைகளை உரிமை கொண்டாடிக் கேட்டபோது, தேவன் அவர்களின் விசுவாசத்தையும், உரிமை உணர்வையும் கனப்படுத்தவில்லை. ஏனென்றால், வாக்குறுதிகள் தந்த தேவன் அவர்கள் எப்படி வாழ்ந்தால் அவை நிறைவேறும் என்றும் சொல்லியிருந்தார். அவர்கள் அவற்றை மறந்தபோது, அவர்களின் வேண்டுதல்களை தேவன் மறுத்தார்.

சிலர் நன்றாய் ஜெபித்தும், தீவிரமாய் உபவாசித்தும், மலையளவாய் விசுவாசித்தும் எதிர்பார்த்த பலன்களைப் பெறாமல், சோர்ந்து போவதுண்டு. காரணம் என்ன? தாங்கள் எப்படியிருந்துகொண்டு ஜெபிக்க வேண்டும், விசு வாசிக்க வேண்டும் என்ற தேவ நீதிகளை மறந்து போனார்கள். தேவனுடைய ஆசீர்வதிக்கும் குணாதிசயத்தையும், அன்பின் தன்மையையும் மட்டும் பார்த்து நாம் செயல்படக்கூடாது. அவருடைய பரிசுத்தம், நீதி ஆகியவற்றையும் கவனிக்க வேண்டும். வாழ்க்கை முறைகள் தேவனுக்கு முன்பாகச் செவ்வையாக இருந் தால்தான், தேவனுடைய வாக்குறுதிகள் நிறைவேற வாய்ப்பு ஏற்படும்.

சிந்தனைக்கு...

இன்றைய தேவை வழிகாட்டிகளல்ல.
வாழ்ந்து அதனைப் பிறருக்குக் காட்டுகிறவர்களே தேவை.

டிசம்பர்

23

ஜீவ நீரோடை

முதலில் எது?

என்னைப் பின்பற்றக்கடவன்...
யோவான் 12:26

யோவான் 12:20-36

கிறிஸ்தவம் யாரையும் சாதுக்களாக மாறவேண்டும் என்று சொல்லவில்லை. அது யாரையும் சன்னியாசிகளாக வேண்டும் என்று கட்டளையிடவில்லை. அது யாரையும் துறவிகளாக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவில்லை. அது காவி கட்டவேண்டும் என்றோ, ஜிப்பா அணிய வேண்டும் என்றோ நமக்கு விசேஷ குறிப்புகளைத் தரவில்லை. ஆனால், கிறிஸ்தவம் நம்மை கிறிஸ்துவோடு ஐக்கியம் கொண்டு கிறிஸ்துவின் பாதையில் நடக்க அழைக்கின்றது.

சிலர், கிறிஸ்துவுக்காக பெரிய தியாகங்களைச் செய்ய ஆயத்தமாயிருக்கின்றார்கள். சிலர், கிறிஸ்துவின் பணிக்காக பெருந்தொகையைக் காணிக்கையாகக் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்கள். சிலர், கிறிஸ்துவுக்காக ஒரு பெரிய கட்டிடத்தையோ, ஆலயத்தையோ கட்டிக் கொடுக்கத் தாராளமாயிருக்கின்றார்கள். சிலர், கிறிஸ்துவுக்காக பெரிய சமூகத் தொண்டுகள் செய்யத் தங்களை அர்ப்பணிக்க விரும்புகிறார்கள்.

ஆனால், இவர்களில் அநேகர் இவைகள் எல்லாவற்றையும்விட, முதலில் இயேசுவைப் பின்பற்றி வாழ்வதற்கே தாங்கள் ஆயத்தமாக வேண்டும் என்பதை அறியாதிருக்கின்றார்கள். நம்முடைய பிரதான அழைப்பு இயேசுவைப் பின்பற்றி வாழ்தலே, நாம் கிறிஸ்தவத் தியாகிகளாகவோ, தர்மகர்த்தாக்களாகவோ, தர்மவான்களாகவோ, கொடையாளர்களாகவோ நம்மை அடையாளப்படுத்தும் முன்பு, நாம் கிறிஸ்துவின் சீடர்களாக நம்மை அடையாளப்படுத்துவதையே ஆண்டவர் விரும்புகின்றார்.

நம்முடைய குணங்களால், பண்புகளால், வழிகளால், நோக்கங்களால், செயல்பாடுகளால், கிறிஸ்துவின் சாயலையும், மகிமையையும் பிரதிபலிக்காத பட்சத்தில், நம்முடைய பக்தி வைராக்கியங்களும், தியாகங்களும், கொடைகளும், ஆன்மீகத் தோற்றங்களும் தேவனுக்கு எந்த மகிமையையும் கொடுக்காது.

ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால், என்னைப் பின்பற்றக்கடவன் என்பதே இயேசு நமக்குக் கூறவிரும்பும் முக்கிய காரியம். ஏனென்றால், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வாஞ்சிக்கும் ஒரு மனிதன்தான் மனுக்குலத்திற்கு பெரிய சேவையைச் செய்கிறான். அதுவே தேவனை மகிமைப்படுத்துகிறது. பணம் இருந்தால் கொடை கொடுக்கலாம். வைராக்கியம் இருந்தால் தியாகம் செய்யலாம். அர்ப்பணம் இருந்தால்தான் இயேசுவைப் பின்பற்ற முடியும்.

சிந்தனைக்கு...

இயேசுவுக்காக இழந்தது எவ்வளவு என்பதை வைத்து,
அவரிடமிருந்து அடைந்தது எவ்வளவு என்பதை அறியலாம்.

டிசம்பர்
24
ஜீவ நீரோடை

கனமும் கனவீனமும்

நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்
1 சாமுவேல் 2:29

1 சாமுவேல் 2:22-36

ஆசாரியனாகிய ஏலியின் வரலாற்றை வேதாகமத்தில் பார்க்கும் போது, அங்கே அவன் தேவனுக்கு எதிராகச் செயல்பட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆனாலும், தேவன் அவன்மேல் மிகவும் கோபமடைந்தார். ஏனென்றால், அவன் தேவ கட்டளைகளை மீறாதிருந்த போதிலும், தேவ கட்டளைகளை மீறி துன் மார்க்கமாக வாழும் தன்னுடைய மகன்களைக் கடுமையாகத் தண்டிக்க முன் வரவில்லை. தேவ நியாயங்களை உரிய முறையில் முக்கியப்படுத்தாமல், பிள்ளைப் பாசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அவனை, தேவன் வெறுத்தார். பிள்ளைகள் விஷயத்தில் ஏலியின் அணுகு முறை தேவனுடைய பார்வையில் தம்மைக் கன வீனப்படுத்தும் செயலாக விளங்கியது.

நாம் நம்முடைய வாயினாலும், வார்த்தைகளினாலும், சில பக்தியான செயல் களினாலும், மனதின் எண்ணங்களினாலும் தேவனுக்கு அதிகமான கனத்தையும், மரியாதையையும் கொடுக்கின்றவர்களாக இருக்கலாம். ஆனால், தேவனுடைய நியாயங்களும், விருப்பங்களும், நம்முடைய வாழ்க்கைச் செயல்முறைகளில் எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, மதிக்கப்படுகிறது என்பதே முக்கியம். தேவன், நாம் அவருக்காகக் காண்பிக்கும் மிகுந்த பக்தி வைராக்கியத்தைவிட, அவருடைய வார்த்தைகளின்படி வாழ்வதையே அதிகக் கனமாக எண்ணுகின்றார். நாம் அவருக்காகச் செய்கின்ற பலவிதமான செயல்களைவிட, நாம் அவருக்கேற்ற விதமான சுபாவ நிலைகளோடும், குணநிலைகளோடும் வாழ்வதையே அவர் அதிக மேன்மையாகப் பார்க்கின்றார்.

பலவேளைகளில் நாம் பிறரோடுள்ள தொடர்பு நிலைகளில் நம்முடைய மன நிலை, உணர்வுகள், வைராக்கிய சிந்தைகள், சுய கௌரவம் ஆகியவற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து விடுகின்றோம். எனவே, அன்பிற்குப் பதிலாக வெறுப் பையும், தாழ்மைக்குப் பதிலாக பெருமையையும், விட்டுக் கொடுத்தலுக்குப் பதிலாக வைராக்கியத்தையும் விடாப்பிடியாக இருத்தலையும், மன்னிப்பிற்குப் பதிலாக கசப்புணர்வுகளையும், சாந்தத்திற்குப் பதிலாக சண்டையிடுதலையுமே பிறர் விஷயத்தில் காண்பிக்க முந்துகிறோம்.

இங்கே, தேவனை நாம் மனதால் மதிக்கிறவர்களாயிருந்த போதிலும் அவ ருடைய தெய்வீக நியாயங்களைவிட, நம்முடைய சுய உணர்வுகளையே பெரிதாக எண்ணி, தேவனைக் கனவீனப்படுத்தும் பாவத்திற்குள் நம்மையறியாமலே நாம் போய் விழுந்து விடுகிறோம்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக சிலர் முன்னால் கோழையாய் நில்.
நாளை பலர் முன்னால் தேவன் உன்னை வீரனாக நிறுத்துவார்.

டிசம்பர்
25
ஜீவ நீரோடை

கொண்டாட்டம்

மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை. லூக்கா 2:10

லூக்கா 2:1-20

கிறிஸ்துமஸ் பண்டிகை என்பது கிறிஸ்தவர்கள் மட்டும் அல்ல. கிறிஸ்தவர்கள் அல்லாத பலரும் கொண்டாடுகின்றனர். கிளப்புகளில் கொண்டாடப் படுகின்றன. பப்புகளில் கொண்டாடப்படுகின்றன. தொழில் நிறுவனங்களில் கொண்டாடப்படுகின்றன. பொழுதுபோக்கு நிலையங்களில் கொண்டாடப் படுகின்றன. இந்தக் கொண்டாட்டங்களெல்லாம் இயேசுவின்மேல் கொண்ட பக்தியால் அல்ல. கிறிஸ்தவ மார்க்கத்தின்மேல் கொண்ட அன்பாலும் அல்ல. ஒரு சில தினங்கள் ஒரு மகிழ்ச்சியான கொண்டாட்ட மனநிலையில் இருப்பதற்கே.

பிறந்த நாள், திருமண நாள், ஆண்டு விழா மற்றும் மத நம்பிக்கை சார்ந்த பண்டிகைகள் என எந்த ஒன்றையும், மனிதன் பயன்படுத்திக் கொண்டாட்ட சூழ்நிலையை ஏற்படுத்த விரும்புகிறான். ஏனென்றால் ஏதோ ஒன்றைக் காரணமாக வைத்துத் தனக்கு ஒரு சந்தோஷ மனநிலையை ஏற்படுத்த ஆவலாயிருக்கிறான். அது அவன் இயற்கையாக போதுமான சந்தோஷத்தில் இல்லை என்பதற்கான அடையாளமும் கூட. ஆனால், இது போன்ற பண்டிகைகளை குறிப்பிட்ட சில தினங்களில் மட்டுமே கொண்டாட முடியும்.

ஆனால், கிறிஸ்து பிறந்த அன்று தூதர்கள் மனிதர்களுக்குக் கொடுத்த ஒரு அறிவிப்பு என்ன? சகல ஜனத்திற்கும் சந்தோஷம் உண்டாக்கும் நற்செய்தியை அறிவித்தார்கள். அது கர்த்தராகிய இயேசு இரட்சகராக மனுக்குலத்திற்குத் தரப் படும் செய்தி நமக்கு தரப்பட்டது. ஒரு சில தினங்கள் கொண்டாட்டமான ஒரு சூழலில் இருப்பதற்கான ஒரு பண்டிகை அல்ல. நமக்கு எல்லா காலமும் சந்தோஷத்தைத் தருவதற்கு ஏற்றபடியாகக் கர்த்தராகிய இயேசு என்னும் இரடசகர் நமக்குள் ஒரு மாபெரும் செயலைச் செய்வதற்கான வாய்ப்பே அது. இயேசுவின் பிறப்பை நினைவு கூரும் ஒரு பண்டிகை நமக்கு மகிழ்ச்சியாக இருக்குமானால், அந்த இயேசு நமக்குள் வந்து நம்மோடு வாழ்வது எவ்வளவு சந்தோமானது.

இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுகின்றீர்களே. அவர் பிறந்ததால் உங்களுக்கு என்ன நன்மை என்று கேட்டால் என்ன பதில் சொல்வோம்? ஒரு பண்டிகைக் கொண்டாட்டம் என்று சொல்வோமா? நம்மை அடிமைப்படுத்தும் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதால் வரும் சந்தோஷம், எல்லாக் காலமும் செயல்படும். நம்மை தவறாக வழிநடத்தும் பாவ சுபாவங்களை விட்டு விடுதலை பெற்றால் எல்லாக் காலமும் சந்தோஷம் செயல்படும். அந்த சந்தோஷத்தைத் தரும் இயேசுவை இரட்சகராகப் பெற்று வாழ்வதே அர்த்தமுள்ள கொண்டாட்டம்.

சிந்தனைக்கு...

கிறிஸ்து பிறந்ததால் எனக்கு என்ன நன்மை கிடைத்தது, என்பதை உறுதிப்படுத்தாமலே பண்டிகை கொண்டாடுதல் அர்த்தமற்றது.

டிசம்பர்
26
ஜீவ நீரோடை

முதலாவது யார்?

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ... மத்தேயு 7:12

மத்தேயு 7:1-14

மனிதன் பொதுவாக தான் நேசிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் அளவிற்கு, மற்றவர்களை நேசிக்க முன்வருவதில்லை. தான் மதிக்கப்பட வேண்டும் என்ற உணர்வை அதிகமாகப் பற்றிக் கொண்டிருக்கும் அளவிற்கு, மற்றவர்களை மதிக்க வேண்டிய தேவையை உணருவதில்லை. தன்னை நம்ப வேண்டும் என்று விரும்பும் அளவிற்கு, பிறரை நம்பவேண்டிய தேவையை அறிவதில்லை. தான் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று சிந்திக்கின்ற அளவிற்கு, பிறரைப் புரிந்து கொள்ள முன்வருவதில்லை.

என்னை நேசித்தால்தானே, நான் நேசிக்க முடியும். என்னை ஏற்றுக் கொண்டால்தானே, நான் மற்றவரை ஏற்றுக்கொள்ள முடியும். என்னிடம் வந்தால்தானே நான் அவரிடம் போகமுடியும். எனக்குச் செய்தால்தானே, நான் மற்றவர்களுக்குச் செய்ய முடியும். இவ்விதமாக மற்றவர்கள் தனக்கு முதலாவது செய்தால்தான், தான் பதிலுக்குச் செய்ய முடியும் என்ற மனநிலையை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள் பலர்.

ஒவ்வொருவரும் மற்றவரின் முதலாவது செயல்பாட்டிற்காகக் காத்திருந்தால், ஒருபோதும் முதலாவது நடைபெற வேண்டிய நல்ல செயல் நடைபெறாது. நீ பணம் கொடுத்தால்தான் பொருளைத் தருவேன் என்று வியாபாரியும், நீ பொருளைத் தந்தால்தான் பணத்தைக் கொடுப்பேன் என்று வாடிக்கையாளரும் கௌரவ யுத்தம் நடத்தினால், எந்த நல்லதும் நடக்காது. ஒருமுறை குடும்பக் கூடுகை ஒன்றில் கணவன் மனைவி இருவரில் யார் முதலாவது தாழ்ந்து போக வேண்டும் என்று என்னிடம் கேட்டார் ஒருவர். யார் கர்த்தரை அதிமாகப் பிரியப்படுத்த விரும்புகின்றார்களோ, அவர்கள்தான் முதலாவது தாழ்ந்து போக வேண்டும் என்று பதில் கொடுத்தேன்.

மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அதனை அவர்களுக்கு முதலாவது செய்ய வேண்டும் என்றார் இயேசு. இந்த மாபெரும் நற்போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், எத்தனையோ குடும்பங்களில் சமாதானம் மிகுதியாக நிலவியிருக்கும். எத்தனையோ சபைகள் உடைந்து போகாமலிருந்திருக்கும். ஆம், மற்றவர்கள் செய்வதற்குப் பதிலாகச் செய்கின்ற இரண்டாம் இடத்தையே தெரிந்து கொள்ளாமல், முதலாவது நான் செயல்படுவேன், நற்செயலை முதலாவது நான்தான் செய்வேன். நற்குணத்தை நான்தான் முதலாவது வெளிப்படுத்துவேன் என்ற நிலைப்பாட்டோடு செயல்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

அன்பு எனக்கு என்ன கிடைக்கும் என்று கேளாது.
என்னால் பிறருக்கு ஏதாவது கிடைக்குமா என்றே கேட்கும்.

டிசம்பர்
27
ஜீவ நீரோடை

பக்தி அடிமைத்தனம்

அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது... ஏசாயா 29:13

ஏசாயா 29:1-16

ஒருவர், வாரம் தவறாமல் ஒரு கிறிஸ்தவ சபைக்குச் செல்வார். என்னால் எதை வேண்டுமானாலும் செய்யாமலிருக்க முடியும். ஆனால், கோயிலுக்குப் போகாமல் இருக்கவே முடியாது என்பார். வியாதிப்பட்ட வேளையில் கூட ஆஸ் பத்திரிக்குச் செல்லாமல் இவர் கோயிலுக்குதான் (சபைக்கு) செல்வார். ஆனால், இவரிடம் பக்தி சம்பந்தமான எந்த ஒரு நல்ல விளைவையும் காண முடியாது.

இது ஒரு விதமான அடிமைத்தனம். குறிப்பிட்ட ஒரு செயலினால் தனக்கு எந்த ஒரு நன்மையும் இல்லாதிருக்கும்போது, அதனை விட்டுவிட முடியவில்லை யென்றால் அது ஒரு விதமான அடிமைத்தனமே. சில குடிகாரர்கள் குடிப்பதினால் எந்த ஒரு சந்தோஷத்தையோ, விசேஷ குதூகலத்தையோ பெறுவதில்லை. இதனால் என்ன கிடைக்கிறது என்று கேட்டால் அதனால் எதுவும் கிடைக்கவில்லை என் பார்கள். பின்னர் ஏன் இப்படிக் குடிக்க வேண்டும்? என்று கேட்டால் குடிக்காமல் இருக்க முடியவில்லை என்று கூறுவார்கள்.

இதுபோலவே பலருடைய பக்தி வாழ்க்கையும், கோயில், ஆராதனை, ஜெபம், வேத வாசிப்பு என இவர்களிடம் சில நல்ல பழக்கங்கள் உண்டு. ஆனால், அவற்றால் எந்தப் பயனும் இல்லை. ஆனால், அவற்றை இவர்களால் விடவும் முடியாது. ஏனென் றால், ஒருவிதமான பழக்கம் சார்ந்த அடிமைத்தனத்தில் சிக்கிக் கொண்டார்கள். நான் சிலரைக் கவனித்திருக்கின்றேன். அவர்கள் தேவ வழியில் நடக்காததைப் பற்றியோ, கர்த்தருடைய விருப்பங்களின்படி வாழாததைப் பற்றியோ, தேவன் வெறுக்கும் பாவ சுபாவங்களோடு வாழ்வது பற்றியோ, பண ஆசை, பொருளாசையில் சிக்கியிருப்பதைப் பற்றியோ என்றுமே கவலைப்பட்டதில்லை. ஆனால், ஒரு ஞாயிறு ஆராதனைக்குப் போகாவிட்டாலோ, ஒருநாள் ஜெபிக்காவிட்டாலோ, ஒருநாள் வேதம் வாசிக்காவிட்டாலோ, ஒரு முறை திருவிருந்தைத் தவறவிட்டாலோ மிகவும் கவலைப்படுவார்கள். ஏனென்றால், அர்த்தமற்ற ஒரு பக்தி அடிமைத்தனத்தில் சிக்கி வெளியே வர முடியாத அடிமைகளாகிவிட்டனர்.

பக்தி என்றால் உண்மையில் என்னவென்று அறியாமலும், பக்தியினால் ஒரு பலனைப் பெறாமலும், பக்தி சம்பந்தமான விஷயங்களில் வைராக்கியமா யிருந்தால்,அது ஒரு அடிமைத்தனம். இதிலிருந்து வெளியே வரவேண்டும். ஆண்டவரே எனக்குப் பலன்தராத பக்தி அடிமைத்தனத்திலிருந்து என்னை விடு வித்து, பலன் உண்டாக்குகின்ற ஒரு சரியான பக்தி அனுபவத்தில் என்னை நிலை நிறுத்தும் என்று நாம் விண்ணப்பிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

பக்தியில்லாத துன்மார்க்கனைவிட, பண்புகள் இல்லாத சன்மார்க்கன் அதிகக் கேடானவன்.

டிசம்பர்
28
ஜீவ நீரோடை

இழந்தது யாருடையது

கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்...
யோபு 1:21

யோபு 1:1-22

யோபுவின் சரித்திரத்தில் அதனுடைய முதல் அத்தியாயத்தைப் பார்க்கும் போது, அவன் தொடர்ச்சியாக பல இழப்புகளை ஒரே நேரத்தில் சந்திக்க நேரிடுகிறது. ஏறக்குறைய எல்லா ஆதாரங்களையும், சௌகரிய சூழ்நிலைகளையும் அவன் இழந்துபோகிறான். இனி வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் எதுவும் தனக்கு இல்லை என்று எண்ணத்தக்க சூழ்நிலையிலும்கூட, அவன் கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்று கூறி தன்னைச் சமாதானம் செய்து கொண்டான்.

இந்த உலகில் நம்மிடம் இருப்பவை யாவும் நமக்குச் சொந்தமானவை என்ற ஒரு எண்ணம்தான், பெரும்பாலும் அவைகளை இழக்க நேரிடும் போது, நமக்கு அளவுக்கு அதிகமான மன வேதனையைக் கொடுக்கிறது. எதை நீ கொண்டு வந்தாய், அதனை இழப்பதற்கு என்ற ஒரு வாசகத்தை நான் படித்திருக்கிறேன். ஆம், இந்த உலகில் நம்மிடம் உள்ள பொருட்கள் செல்வங்கள், உறவுகள், சௌகரி யங்கள் எதுவுமே நமக்குச் சொாந்தமானவை அல்ல என்ற உணர்வோடு நாம் வாழ்ந்தோமானால், இழப்புகளின் வேதனையை நாம் ஓரளவாவது குறைத்துக் கொள்ள முடியும்.

நாம் நமக்குச் சொந்தமான ஒரு உலகத்தில் அல்ல. தேவனுக்குச் சொந்த மான உலகத்தில் வாழ்கின்றோம். இங்கே நாம் பெறுவதும், அடைவதும் யாவுமே நமக்கு இரவலாக வழங்கப்பட்டவையே. ஆஸ்திகளின் நிறைவுகளாயினும், பலவித சந்தோஷங்களாயினும், தாய், தந்தை, பிள்ளைகள், கணவன் மனைவி, நண்பர்கள் உறவுகளாயினும், யாவுமே நமக்கு நிரந்தரமாகச் சொந்தமானவை யல்ல. யாவும் சில காலம் நாம் அனுபவிப்பதற்காக இரவல் முறையில் தரப் பட்டவையே. ஒவ்வொரு கால கட்டங்களில் அவைகள் நம்மை விட்டு எடுக்கப்பட்டு விடுவது இந்த உலகின் இயல்பான நிகழ்வுகளே. நமக்கு நிரந்தர சொந்தமென்று உரிமை கொண்டாட ஏதாவது உண்டா? என்றும் இழக்காமல் அனுபவிக்க ஏதாவது உண்டா? உண்டு. அதுதான் தேவ உறவு. இது ஒன்றே நிரந்தரமானது. இந்த ஒன்றை மட்டுமே இழக்காமல் தக்கவைக்க முடியும். இந்த தேவ உறவு மட்டுமே பிற இழப்புகள் யாவற்றையும் தாங்குகின்ற ஆற்றலை நமக்குத் தரும்.

நாம் இழக்க நேர்ந்தவைகள் தேவனால் தரப்பட்டவைதான் என்ற உணர்வு நம்மிடம் செயல்பட்டால், இனியும் எதையாவது அவர் தந்து இழப்பை ஈடு செய்ய முடியும் என்ற நம்பிக்கை தானாக வந்து விடும். ஒருவேளை இழந்ததைப் போன்ற ஒன்றை திரும்பவும் தரமுடியாவிடினும், அதற்குப் பதிலாக வேறு எதையாவது தந்து இழப்பின் துக்கத்தைச் சரி செய்ய முடியும்.

சிந்தனைக்கு...

எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்க விரும்பினால்,
உன் வாழ்க்கையே கேள்விக் குறியாகிவிடும்.

டிசம்பர்
29
ஜீவ நீரோடை

பரலோக நிச்சயம்

நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து... 2 பேதுரு 1:13

2 பேதுரு 1:1-21

அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஒன்றில் போய் நல்ல ஒரு வேலையில் சேர்ந்து. அங்கே தங்கிடுவதற்கான வாய்ப்பு கிட்டினால் நம்மில் அநேகர் அதனை மிகவும் விரும்பி ஏற்றுக் கொள்வது நிச்சயம். எப்போது இந்த இந்தியாவை விட்டு விலகி நல்ல சூழ்நிலைகள் உள்ள அந்த நாடுகளில் போய் தங்கி சுகமாய் வாழலாம் என தாகத்தோடு இருப்போம். அங்கே ஒரு பெரிய எதிர்பார்ப்பு இருக்கும். அதே வேளையில் இந்தியாவில் ஓரளவு நல்ல சௌகரியத் தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒருவருக்கு, பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ள ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றிற்குப் போகும் அழைப்புக் கிட்டினால், அதை விரும்பி ஏற்க வாய்ப்பில்லை.

அநேகர் தேவனுடைய இராஜ்யத்தில் சேரவேண்டும் என்றும், பரலோகத்தில் வாழவேண்டும் என்றும் ஆசைப்பட்டாலும், இந்த உலகத்தை விட்டுப் பிரியும் ஒரு நிலையை அவர்கள் விரும்புவதில்லை. ஒருவேளை இன்று காபிரியேல் தூதன் நம்மிடம் வந்து, நீங்கள் மரித்துவிட ஆயத்தமாயிருந்தால் இப்போதே உங்களுக்கு பரலோகம் கிடைத்துவிடும் என்று சொன்னால், நம்மில் எத்தனைபேர் அதற்கு உடன்பட்டு மரிக்க முன்வருவோம் என்பதை தேவனே அறிவார்.

பரலோகம் மிக விசேஷமானது என அறிந்திருக்கின்ற நாம், அதில் பிர வேசிக்கும் வாய்ப்பிற்கு வழியாக மரணம் வரும் என்றால் ஏன் பயப்படுகிறோம்? ஒன்று இந்த உலகம் இன்னும் நமக்கு அதிக வாஞ்சைக்குரியதாகவும், கவர்ச்சி யாகவும் உள்ளது. இரண்டாவது, பரலோகத்தைக் குறித்த ஒரு தரிசனமோ, நிச்ச யமோ நமக்கில்லை. அமெரிக்காவை அல்லது இங்கிலாந்தைக் குறித்து நமக் கிருக்கும் நிச்சயமான தனிப்பட்ட அறிவு, பரலோகம் என்ற விஷயத்தில் இல்லை. எனவே, அது நிஜ வாழ்வில் நம்மை உண்மையாகக் கவர்ச்சிக்கவில்லை.

பவுலும், பேதுரும் மரிக்கப் போவதை முன்னறிந்தவர்கள். ஆனால், அவர் களை அது துக்கப்படுத்தவில்லை. அவர்கள் ஏதோ இன்னொரு நாட்டிற்குப் போவ தற்கான அழைப்பு போல அதனை எண்ணி, தொடர்ந்து தங்கள் வேலைகளை தெளிவோடும், சந்தோஷத்தோடும் செய்துகொண்டிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் பரலோக வாழ்வின் மகிமையைக் குறித்த நிச்சயத்தையும், தரிசனத் தையும் தங்களுக்குள் பெற்றுக்கொண்டவர்கள். எனவே, மரணத்தின் முன் னறிவிப்பு அவர்களை வருத்தப் படுத்தாமல் பரவசப்படுத்தியது.

சிந்தனைக்கு...

இம்மையில் எப்படி வாழ்கிறாய் என்பது, மறுமையில் நீ எங்கே வாழப்போகிறாய் என்பதை முடிவு செய்கிறது.

டிசம்பர்

30

ஜீவ நீரோடை

அவர்கள் மாறாவிட்டால்

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்...
மத்தேயு 5:5

மத்தேயு 5:1-16

அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்த அதிகாரி ஒருவர், தனக்கு முன்பாக இருக்கும் மேசை தனக்கு மிகவும் நெருக்கமாகத் தொட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தார். அலுவலகப் பணியாளர் ஒருவரை அழைத்து, இந்த மேசையைக் கொஞ்சம் பின்னால் இழு, ரொம்ப நெருக்கிக் கொண்டிருக்கிறது என்றார். அதற்கு அந்தப் பணியாள், இதற்குமேல் மேசையைப் பின்னால் இழுத்துப் போட இடம் இல்லையே என்றான். இது எனக்கு மிகவும் சிரமமாயிருக்கிறதே என்ன செய்வது என்று கேட்டார் அந்த அதிகாரி. "ஐயா ஒன்றுமில்லை. உங்கள் இருக்கைக்கு பின்னால் நிறைய இடம் இருக்கிறது கொஞ்சம் இருக்கையை பின்னால் நகர்த்தினால் சரியாய் போகும்" என்றான். அதற்கு அந்த அதிகாரி "சே....... சே....... இது வரை இதை நான் சிந்திக்காமல் இருந்துவிட்டேனே" என்றார்.

சிலருடைய கடினமான மனநிலைகளும், தவறான சுபாவநிலைகளும், மோசமான செயல்பாடுகளும் நமக்குப் பிரச்சினையாயிருப்பதை உணர்ந்து மனவிசனமடைகிறோம். ஆனால், மற்றவர்களிடம் மாற்றமோ நடைபெறாமல் போகிறது. எவ்வளவோ ஜெபித்தாலும் அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள முன்வருவதில்லை.

ஆனால், பிரச்சினைகளை ஏற்படுத்தும் மற்றவர்களின் மாற்றங்கள் மட்டுமல்ல. பிரச்சினைகளை உணருகின்ற நம்மிடம், மாற்றங்கள் ஏற்படுவதாலும் நல்ல விளைவுகள் ஏற்படும். வெறுக்கின்றவர்களும், விரோதிக்கின்றவர்களும், பொறாமைக்காரர்களும், மேட்டிமையான மனநிலைக்காரர்களும், கோபக்காரர்களும், மற்றவர்கள் காயப்படும் விதமாக நடந்து கொள்ளுகின்றவர்களும் தங்களை மாற்றிக் கொள்ளவிரும்பாமலும், மாற்றிக்கொள்ள இயலாமலும் இருக்கக்கூடும்.

ஆம். இந்த மேசை பின்னால் போகக் கூடாமல் போகலாம். ஆனால், நம்முடைய இருக்கையை சற்று பின்னால் இழுப்பதாலும் நல்லதைக் காண முடியும். அவர்கள் மாறவில்லையா, நாம் நம்மை மாற்றிக் கொள்வோம். நம்மிடம் பொறுமை, தாழ்மை, அன்பு, சகிப்புணர்வு ஆகியவை இன்னும் சற்று அதிகமானால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். சவுல் இறுதிவரை மாறவில்லை. ஆனால், தாவீது தன்னை மாற்றிக் கொண்டேயிருந்தான். என்னை விசனப்படுத்தும் கணவனுடைய மன நிலையை மாற்ற எவ்வளவோ ஜெபித்தேன். கணவரிடம் எந்த மாற்றமும் இல்லையே பாஸ்டர் என்றாளாம் ஓர் பெண். பரவாயில்லை. "என் கணவனால் வரும் விசனங்களைத் தாங்கவும், பொறுக்கவும் ஏற்ற விதமாக என்னை மாற்றும் ஆண்டவரே, என்று ஜெபி எல்லாம் சரியாகிவிடும்" என்றாராம் பாஸ்டர்.

சிந்தனைக்கு...

**பிறர் செய்த தீமைகளை மறக்க மனதில்லாதவன்,
பிறருக்கு நல்லது செய்யும் மனநிலையை இழக்கிறான்.**

டிசம்பர் 31

ஜீவ நீரோடை

வருடத்தின் கடைசிநாள்

உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்.
ஆகாய் 1:5

ஆகாய் 1:1-15

சிலர், ஆண்டு முடியும் போது, கடைசி ஒன்றிரண்டு தினங்களில் அதிகமாக ஜெபிப்பார்கள். வரப்போகிற ஆண்டில் தேவன் ஆசீர்வாதமான பெரிய காரியங் களைச் செய்வதற்காக மன்றாடி ஜெபிப்பார்கள். சிலர் புதிய ஆண்டைச் சந்திப்பதற்கு ஆயத்தப் படுவதற்காக ஜெபிப்பார்கள். பெரும்பாலும், அடுத்த ஆண்டு ஆசீர்வாதமா யிருக்க வேண்டும் என்பதே, ஜெபங்கள் மற்றும் ஆயத்தமாகுதலின் நோக்கங் களாக உள்ளன.

வியாபார நிறுவனங்கள் ஒரு கணக்கு ஆண்டை முடிக்கும் போது, அடுத்த ஆண்டு எப்படி வியாபாரம் செய்ய வேண்டும் என்பதை மட்டும் யோசிக்கமாட்டார்கள். கடந்து சென்ற ஆண்டில் நாம் எப்படி வியாபரம் செய்தோம்? எதை எதை சரியாகச் செய்யாமல் போனோம்? எதை எதை வேறு விதமாகச் செய்திருக்க வேண்டும் என்றெல்லாம் சிந்திப்பார்கள். அது போலவே, ஒரு ஆண்டை நாம் முடிக்கும் போது, இந்த ஆண்டு தேவனுக்கு முன்பாக நம்முடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடந்து சென்ற ஆண்டு, எவ்வளவு சோதனையான ஆண்டு, எவ்வளவு வருத்தமான ஆண்டு, எவ்வளவு தோல்விகள் நிறைந்த ஆண்டு என்பவைகளை மட்டும் பார்க்கக்கூடாது. கடந்த ஆண்டு நம்முடைய வாழ்க்கை தேவனுக்குப் பிரிய மாயிருந்திருக்குமா? கடந்த ஆண்டில் நாம் நமக்காகவே வாழ்ந்தோமோ அல்லது தேவனுக்காக வாழ்தோமா? கடந்த ஆண்டு, நாம் தேவ ஐக்கியத்தோடு வாழ்வதற்கு முதலிடம் கொடுத்தோமா அல்ல உலகப்பிரகாரமான பல காரியங்களோடு ஐக்கிய மாயிருந்தோமா? கடந்த ஆண்டு தேவ ஆசீர்வாதங்களைத் தேடித் தேடி அலைந்தோமா அல்லது தேவனுக்கு மகிமையைத் தேடித் தேடி வாழ்ந்தோமா? கடந்த ஆண்டு நமக்கு என்ன கிடைக்கிறது என்பதையே பார்த்துக் கொண்டு வாழ்ந்தோமா அல்லது என்னால் தேவனுடைய சித்தம் நிறைவேற என்ன நடக்கிறது என்பதை பார்த்துக் கொண்டே நடந்தோமா என்பவற்றை அதிகமாகச் சிந்திக்க வேண்டும்.

கர்த்தருக்கு முன்பாக நாம் நன்றாக வாழ்ந்தோம் என்றால், கர்த்தருக்கு நன்றி சொல்லி, இன்னும் சிறப்பாய் வரப்போகிற நாட்களில் வாழ நம்மை அர்ப் பணிப்போம். கடந்த ஆண்டு இன்னும் நன்றாக வாழ்ந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தால், வரப்போகிற புதிய ஆண்டில் அதுவே நமது இலக்காகட்டும். ஆண்டின் இறுதியில், வரப்போகிற ஆண்டு எப்படியிருக்கப் போகிறதோ என்ற பதட்டத்தைத் தவிர்த்துப் புதிய நம்பிக்கையோடு தொடர்வோம்.

சிந்தனைக்கு...

அக்கினியில் நடந்தோம், ஆறுகளைக் கடந்தோம்,
ஆனால், எவற்றையெல்லாம் அடைந்தோம் என்பதே முக்கியம்.

நினைவில் நின்றவை

ஆசிரியரின்

பிற நூல்கள்

1. சந்தோஷத்தின் வழிகள்
2. இறை ஆசியுடன் இனிய குடும்பம்
3. வெளிச்சத்தில் வெளிப்படும் உண்மைகள்
4. வழிகாட்டும் சிந்தனைகள்
5. சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
6. நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
7. பரிசுத்த வாழ்வின் பாதையில்
8. நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
9. துதி மலர்கள் ஆயிரம்
10. தேவன் அங்கீகரிக்கும் ஜெபம்
11. ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்
12. விசுவாசத்தின் பிரதிபலிப்புகள்
13. சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
14. துக்கம் சந்தோஷமாக மாறும்
15. ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?
16. கிறிஸ்தவம் பேச்சில் அல்ல... செயலில்
17. வல்லமையாக ஜெபிப்பது எப்படி?
18. சிந்தையை சீராக்கும் சிந்தனைகள்
19. யார் என்னை தேற்ற முடியும்?
20. மனந்திரும்பியது உண்மையா?
21. சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்
22. உண்மையான ஆராதனை
23. கலங்காதே மனமே கலங்காதே
24. சத்திய சிந்தனை முத்துக்கள்
25. ஆசீர்வாதத்தின் அடித்தளங்கள்
26. தேவனுடைய மனிதர்கள் எங்கே? எங்கே?
27. வாலிப வயதுகளில் நீ
28. துன்பங்கள் ஏன்? ஏன்?
29. கண்ணீரின் காலங்களில்
30. விசுவாசமா? வியாபாரமா?
31. சிந்திக்க தூண்டும் சிந்தனைகள்
32. ஆராதனை என்றால் என்ன?
33. காதல் சரியா? தவறா?
34. சோர்ந்து போகாதே மனமே
35. தேவ உறவினால் வாழும் வாழ்க்கை
36. அக்கினி வார்த்தைகள்
37. மனநிலைகள் மாறணுமே
38. கிறிஸ்தவன் இங்கே, கிறிஸ்தவம் எங்கே?
39. சிந்தனைத் தோட்டத்தில் சிறுமலர்கள்
40. அர்த்தமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை
41. உண்மையைச் சொல்கிறேன்
இது கிறிஸ்தவம் அல்ல
42. எப்படி வாழணும் கிறிஸ்தவ வாழ்க்கை?
43. வாலிபத்தை பாதுகாப்பது எப்படி?
44. நீங்களும் உங்கள் பிள்ளைகளும்
45. வித்தியாசமான விக்கிரகங்கள்
46. தேவனுக்காக வாழ்வது என்றால்
47. ஆவிக்குரிய வாழ்க்கை எதற்காக?
48. இறை உறவினால் வாழும் குடும்பம்
49. தேவனால் ஆசீர்வதிக்கப்பட வழிகள்
50. நான் ஏன் வாழ வேண்டும்?
51. இது சத்தியமா, சிந்தியுங்கள்!
52. கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன?
53. சத்தியத்தின் வெளிச்சத்தில்
54. திருச்சபை என்பது எதற்காக?
55. மனம் திரும்புதலும் மறுபடி பிறத்தலும்
56. பரிசுத்தமாக வாழச் செய்வது எது?
57. பரிசுத்த ஆவியின் அபிஷேகம்
எப்போது? எப்படி?
58. கேட்டாலும் கேளாவிட்டாலும்
59. வலிமையான நம்பிக்கைகள்
60. உண்மைக் கிறிஸ்தவ அடையாளங்கள்

IN ENGLISH

1. True Worship
2. Godliness for youth, why?
3. In the Times of Distress
4. Powerful Prayer Life, How?
5. Delightful family with Divine Blessings

தினமும் உம் கிருபையால்

A DAILY DEVOTIONAL FOR YOUR SPIRITUAL GROWTH

எவ்வளவுதான் அறிவும் ஞானமும் திறமையும் செல்வமும் மிகுதியாக இருந்தாலும், அவற்றைக் கொண்டு நம்முடைய வாழ்க்கை சூழல்கள் எல்லாவற்றையும் எதிர்கொள்ள இயலாது. வாழ்க்கை என்னும் நெடும்பயணத்தில் நாம் கடந்து செல்ல நேரிடும் சூழ்நிலைகள், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமானவை. அவற்றில் சில நம்முடைய சுய ஆற்றல்களைக் கொண்டு சந்திக்க இயலாதவை. அந்த வாழ்க்கைச் சூழல்களில் நம்மை சோர்ந்து போகவிடாமல் முன்னோக்கிக் கொண்டு செல்ல நமக்கு தேவையானது தேவ கிருபையே. அந்த தேவ கிருபையைப் பெற்று செயல்பட நமக்குத் தெளிவான வழிகாட்டுதல்களை தருவதே இந்த தியான நூல். நம்முடைய சுய ஆற்றல்களால் இயலாமல் போகும் விஷயங்களை, இயன்றவை ஆக்கித் தரும் கிருபை நிறைந்த வார்த்தைகளின் குவியலே இந்தப் புத்தகம். இந்த தியானநூல் ஒரு சம்பிரதாய ஆன்மிக வாசிப்பிற்காக அல்ல. இது ஒரு நல்ல மேய்ப்பனாக உங்களை வழிநடத்தும் தியானநூல்.

CLS BOOK SHOP
BK00007159
ws
22
MRP : ₹ 170.00
CLS BOOK SHOP

DAILY DEVOTIONAL
ஜீவ நீரோடை



சாம்சன் பால்

சுமார் 25 ஆண்டுகளாக வருடந் தோறும் தினசரி தியான நூல்களை எழுதி வெளியிடும் சகோ. சாம்சன்பால் அனுதின வாழ்க்கைச் சூழ்நிலைகளில் எந்த ஒருவருக்கும் பயன்படும் விதமான சிந்தனைகளைப் பகிர்ந்து வருகிறார். இறையியல் கல்வி எதையும் முறைப்படி கற்றிராத இவர், தேவனுடைய சமுகத்தில் கற்றவை களையே தொடர்ந்து பல்லாயிரங் களுக்கு கொடுத்து வருகின்றார். எந்த ஒரு குறிப்பிட்ட சபைப்பிரிவு உபதேசத்தின் பின்னணியிலிருந்தும் எழுதாமல் வேத சத்தியத்தை அடிப்படையாக வைத்து எழுதுகின்றார். எனவே, எல்லா சபை பிரிவினருக்கும் இவருடைய தினசரி தியானங்கள் சிறப்பாக பயன்படுகின்றன. இறைஉறவு சார்ந்த ஒரு ஆவிக்குரிய அனுபவத்திற்கு ஜனங்களை நடத்துவதற்கு அதிகப் பிரயாசம் எடுக்கும் இவர் இதுவரை 60-க்கும் அதிகமான பிற தலைப்புகளில் ஆவிக்குரிய புத்தகங்களை எழுதியுள்ளார். டி.வி., டியூப் போன்ற பல்வேறு சமூக ஊடகங்கள் வழியாகத் தினமும் பேசுகின்ற இவர் அநேகருக்கு இந்த மணி வேளைக்கு மிகவும் தேவையான தேவ வார்த்தைகளை பகிர்ந்து வருகிறார்.